ஸ்ரீராமாயணம்.
பாலகாண்டம்.

தமிழ் வசனம்

இஃது

ஸ்ரீ வால்மீகி ராமாயணத்திற்கிணங்க

ஸ்ரீ அ. வீ. நரஸிம்மாசாரியரால்

இயற்றப் பெற்று

வாழ்குடை - வேங்கடராம சாஸ்திரியவர்களால்

பரிசோதித்து

சென்னை
ஆர். வேங்கடேஸ்வர் கம்பெனியாரால்
ஆநந்த அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1917

பொருளடக்கம்.

18-1

படங்களின் விவரம்.



ஸீதை லக்ஷ்மணன் பரதன் சத்ருக்னன் ஹநுமான்
முதலியவர்களோடுகூடிய ஸ்ரீராமபிரான்.

ஸ்ரீராமாயணம்.

பாலகாண்டம்.

* முதல் ஸர்க்கம்.



ன்னொருகாலத்தில், † தவத்திலும் வேதமோதுவதிலும் ஒழிவற்ற விருப்பமுள்ளவரும், சாஸ்த்ரங்களை அறிந்தவர்களிற் சிறந்தவரும், ஸரஸ்வதீ புத்ரர்களாகிய மரீசியாதிகளைக் காட்டிலும் மேன்மை பெற்றவரும், முனிவர்

---

* இந்த ஸர்க்கத்தை ஸங்க்ஷேப ராமாயணமென்றும் பால ராமாயணமென்றும் சொல்லுவார்கள். ஸங்க்ஷேபம்-சுருக்கம்.

† 'ஆசார்யாத்த்யைவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபத்' என்றும் 'ஆசார்யவான் புருஷோ வேத' என்றும் ஸத்குருபதேசத்தைப் புகழ்ந்திருப்பதனால், நாரதனுக்குள்ள ஆசார்ய லக்ஷண பூர்த்தி இவ்வாக்யத்தில் சொல்லப்படுகிறது. 'அபிஜந வித்யாஸமுபேதம் ஸமாஹிதம் ஸம்ஸ்கர்த்தார மீப்ஸேத்' என்று ஆசார்ய லக்ஷணம் ஆபஸ்தம்பத்திற் சொல்லப்பட்டது. இதில், அபிஜநமென்பது - நற்குலப் பிறப்பு; வித்யை-கல்வி; ஸமாஹிதமென்கிற ஸமாதானமாவது—மனத்தையடக்கி நல்விஷயத்திற் செலுத்துகை; இங்கு மனத்தை நிர்மலமாகச் செய்யும் சாந்த்ராயணம் முதலான வ்ரதங்களைத் தவமென்கிறது. 'தபோ வித்யா ச விப்ரஸ்ய நிஃச்ரேயஸ காரவுபௌ। தபஸா கல்மஷம் ஹந்தி வித்யயா ஜ்ஞாநமஶ்நுதே' என்று தவமும் வித்யையும் ப்ராஹ்

களில் தலைவருமான நாரதரைத் தவத்தில் சிறந்த

மனனுக்கு மோக்ஷத்தைத் தருவதில் உயர்ந்தவை. ஏனென்றால், தவஞ்செய்வதால் பாவத்தைப்போக்கி வித்யையினால் வேதமோதி ஞானம் பெறலாகுமென்று மனுவால் இரண்டும் புகழப்பட்டுள்ளன. இதனால், மனஸ் ஸமாதானம் உண்டாகும். சாஸ்த்ரங்களை அறிந்தவர்களிற் சிறந்தவனும் என்பதனால் கல்வி சொல்லப்பட்டது. இது 'வாக்விதாம்வரம்' என்கிற பதத்தின் பொருள். 'வாக்' என்பது ஸரஸ்வதி. 'கீர்வாக் வாணீ ஸரஸ்வதீ'என்று நாமலிங்காநுசாஸனத்திற் சொல்லப்பட்டது. தயா விதீயந்தே லபீயந்தே இதிவாக்விதஃ அவளால் அடையப்பட்டவர்கள். அதாவது ஸரஸ்வதியின் பிள்ளைகளாகிய மரீசி முதலானவர்கள். அவர்களில் இவன் பகவத் பக்தனானகையால் மேன்மை பெற்றவன். இதனால், நற்குலத்திற் பிறந்தமை தோன்றும். இவ்வாறு ஆசார்ய லக்ஷணங்கள் மூன்றும்சொல்லப்பட்டன. 'நராணாம் ஸம்பந்தி நாரம், நாரம் த்யதி வண்டயதி ஸ்வோபதேசைரிதி நாரதஃ;நாரமென்றால் மனிதர்களின் அஜ்ஞாநம்; அதைத் தன்னுபதேசங்களாற் போக்குவதைப்பற்றி நாரதனென்று இவனுக்குப் பெயர். அல்லது நரதி ஸத்கதிம் ப்ராபயதீதி நரஃ தத் விஷயம் ஜ்ஞாநம்நாரம்; தத்ததாதீதி நாரதஃ நற்கதியைக் கொடுப்பதனால் பரமாத்மாவை நரனென்று சொல்லுகிறது. 'நயதீதி நரஃ ப்ரோக்த: பரமாத்மா ஸநாதநஃ' என்று பாரதத்திற் சொல்லப்பட்டது. அவனையறிகை நாரம்; அதைத் தருகின்றவனாகையால் நாரதனென்றுமாம். தவத்தில் சிறந்த என்பதனால் வால்மீகிக்குள்ள சிஷ்யலக்ஷண பூர்த்தி வெளிப்படுகிறது. இங்குத் தவமென்று 'தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ; ஸதபோதப்யத। ஸதபஸ் தப்த்வா। ஆநந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத்' என்றும் சொல்லப்பட்ட ப்ரஹ்மஜ்ஞான ஸாதனமான தபஸ்ஸைச் சொல்லுகிறது. அன்றித் தவம் என்பது வேதத்தையும் வேதாங்கமான வ்யாகரணத்தின் அறிவையும் சொல்லும். இதனால் ஸாங்கமாய் வேதங்களை ஓதிக் கேவலமான கர்மத்தினால் வரும் பயன் அற்பமாய் நிலையில்லாதிருக்குமென்பதை உணர்ந்தவனென்பது சொல்லப்பட்டது. சிலர் தவம் என்று நிர்வேதத்தையும் சொல்வார்கள். இதனால் ஸம்ஸாரத்தில் அருசி பிறந்து மோக்ஷத்தில் ருசிபிறந்தவனென்றுதெரிகிறது. அன்றியே 'தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸா மதிரிக்த மாஹுஃ'

வால்மீகி முனிவர் வணக்கத்துடன் நமஸ்கரித்து இவ்வாறு வினவினர்.

என்று தவமென்பது தவங்களிலுயர்ந்த ந்யாஸத்தைச் சொல்லும்' ந்யாஸமாவது - 'தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா' என்று நமஸ்கார பூர்வகமாகச் சொல்லப்பட்ட ஆசார்ய சரணகதி. வல்மீகஸ்யாபத்யம் வால்மீகி; வல்மீகமென்பது புற்று. அதிற் பிறந்த வனுகையால் வால்மீகி என்னப்பட்டது. இப்படியானல், 'ருக்ஷோ ஹபூத் ஹார்கவ ஸ்தஸ்மாத் வால்மீகிர் யோபிதீயதே' என்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும் 'ஹார்கவேணேதி ஸம்ஸ்க்ருதௌ' 'ஹார்கவேண தபஸ்விநா' என்று உத்தரகாண்டத்திலும் இவனை ப்ருகு புத்ரனுகச் சொல்லப்பட்டுள்ளபடியினுல் இவனுக்கு ருக்ஷன் என்ற பெயர் எப்படியாகும். அன்றியும் 'சக்ரே ப்ராசேதஸஃ புத்ர ஸ்தம் விரஹ்மாப்யநந்வயந்த' என்றும் 'வேதஃ ப்ராசேதஸா தாஸீத் ஸாக்ஷாத் ராமாயணுத்மநா' என்றும் இவனை வருணன் பிள்ளையாகச் சொல்லுவதும் எப்படியாகும் என்றுல்—இவன் கடினமாய்த் தவஞ்செய்கையில் புற்று மூடிப்போக, வருணன் ஓயாமல் மழைபெய்து அப்புற்றைக் கரைத்து அவனை வெளிப்படுத்தினபடியினுல் ப்ருகுவின் பிள்ளையாகிய இவனுக்குப் புற்றிற் பிறந்ததும் வருண புத்ரனுவதும் கூடும். இங்ஙனமன்றி ப்ருகுவம்சத்தில் ப்ரசேதஸ்ஸென்று ஒருவன் இருந்தான். அவனுடைய பிள்ளைக்கு ருக்ஷன் என்று பெயர். இப்படியில்லாவிட்டால், சக்ரே ப்ரசேதஸஃ புத்ரஃ' ப்ராசேதஸ்ஸின் பிள்ளையென்பது பொருந்தமாட்டாது. இங்கு வால்மீகியென்பது தன்னுடம்பைப் பேணுமல் கடினமாய்த் தவஞ்செய்து மனம் முதலான இந்த்ரியங்களை அடக்கியிருக்குந் தன்மையாகிய ஞானத்திற்கு அங்கமான சம்மதம் முதலியவற்றை உடையவனென்பதைக் காட்டுவதற்காக. இந்த இரண்டு பதங்களாலும் 'பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் விராஹ்மணே நிர்வேத மாயாத் நாஸ்த்ய க்ருதஃ க்ருதேந' என்கிறபடி கர்மத்தால் வருகின்றவை அற்பமும் நசிவரமும் ஆனவை என்று நன்ருய் ஆராய்ந்து அவைகளில் மனவெறுப்புற்று அந்தமில் பேரின்பமான மோக்ஷத்தில் ருசி பிறந்து சமம் தமம் முதலான ஆத்ம குணங்களை யுடையவனுய் ஆசார்யனைச் சரணகதி செய்கின்றவன் என்று சிஷ்ய லக்ஷண பூர்த்தி சொல்லப்பட்டது.

"ஐயா முனிவரே [1]இக்காலத்தில் மண்ணுலகத்தில் சகல நற்குணங்களும் பொருந்தி யிருப்பவன் எவன்? தாழ்ந்தவர்களின் தாழ்ச்சியை நினையாமல் அவர்களுடன் கலந்து நேசிக்கின்ற ஸ்வபாவமுடையவன் எவன்? [2]விகாரத்தை விளைப்பதற்குக் காரணங்கள் இருந்தாலும் விகாரமில்லாமல் இருக்கின்ற மனத்தை யுடையவன் எவன்?[3] தனக்கு ஒரு துன்பமும் நேராமல் பிறரை வெல்லும் திறமை யுடையவன் எவன்? [4]தர்மா தர்மங்களை நன்றாய் அறிந்தவன் எவன்? [5]பிறர் செய்த உபகாரம் அணுவாயிருந்தாலும் அதைப் பெரிதாக நினைப்பவன் எவன்? ஒருவன் எவ்வளவு அபகாரம் செய்தபோதிலும் அதைக் கவனம் வைக்காமல் மறந்து விடுபவன் எவன்? சங்கட காலத்திலும் பொய் சொல்லாதவன் எவன்? ஒன்றைச் செய்ய நினைத்தால் அது பலிக்குமளவும் நிறைவேற்றும்படியான மனவுறுதியை உடையவன் எவன்?

---

1. இக்காலத்தில் என்பதனால் இந்தக் குணங்கள் நிறைந்து காலாந்தரத்தி லிருந்த நரஸிம்ஹாவதாரம் முதலானவற்றையும், இவ்வுலகத்தில் என்பதனால் தேசாந்தரமான பரமபதத்திலிருக்கும் ஸ்ரீமஹா விஷ்ணுவையும் நீக்குகின்றது.

2. இவ்வர்த்தம் 'ஸத்ஸ்வபி விகார ஹேதுஷு அவிக்ருதத்வம் வீர்யம்' என்கிற வ்யாக்யானத்தை உட்கொண்டது.

3. இது 'யேந ஸ்வய மக்ஷதஸ்ஸந் பராஞ்ஜயதி தத் வீர்யம்' என்கிற வ்யாக்யானத்தை உட்கொண்டது.

4. தர்மா தர்மங்களை அறிகையாவது—தர்மங்களைத் தவறாமற் செய்யவேண்டு மென்றும், அதர்மங்களைச் செய்யாமல் தவிர வேண்டு மென்றும் அறிகை.

5. 'கயஞ்சி து உபகாரேண க்ருதே நைகேந துஷ்யதி। நஸ்மரத்யபகாராணாம் ஶதமப் யாத்மவத் தயா' என்று இது மேலே ஸ்பஷ்டமாகச் சொல்லப்படும்.

தன் குலாசாரத்தை எப்பொழுதும் விடாமலிருப்பவன் எவன்? சகல ப்ராணிகளுக்கும் நன்மை செய்பவன் எவன்? எல்லாச் சாஸ்த்ரங்களையும் உணர்ந்தவன் எவன்? சாஸ்த்ரங்களின் பொருள்களைப் பிறருக்கு நன்ருக உரைக்க வல்லவன் எவன்? எவ்வகைக் கார்யங்களையும் குறைவில்லாமல் நிறைவேற்றும் திறமையுள்ளவன் எவன்? யாவராலும் ப்ரியமாய்ப் பார்க்கத் தக்கவன் எவன்? பிறரால் அழிக்க முடியாத தைர்யமுடையவன் எவன்? கோபத்தை வென்று அதை ஸ்வாதீனம் செய்து கொண்டவன் எவன்? [1]ஆயிரம் சந்த்ர ஸூர்யர்கள் உதித்ததுபோல அளவற்ற ஒளியுடையவன் எவன்? நற்குணங்களிலும் குற்றத்தைக் காணுகின்ற பொருமையற்றவன் எவன்? யுத்தத்தில் தேவர்களும் பயப்படும்படியாகக் கோபம் கொள்கின்றவன் எவன்? [2] இத்தக்குணங்களையுடைய மஹாபுருஷனைத்

---

1. 'திவி ஸூர்ய ஸஹஸ்ரஸ்ய பவேத் யுகபதுத்திதா। யதி பாஸ்ஸத்ருஶீ ஸா ஸ்யாத் பாஸஸ்தஸ்ய மஹாத்மந:' என்கிற வசனத்தை உட்கொண்டு இந்த அர்த்தம் சொல்லப்பட்டது. அநுகூலர்களுக்கு ஸுகமாகவும் ப்ரதிகூலர்களுக்குத் துக்கமாகவும் இருக்கிறபடியால் சந்த்ர ஸூர்யர்கள் இருவரும் உபமானமாகச் சொல்லப்பட்டார்கள்.

2. வால்மீகி ராமசரித்ரத்தை நன்ருய் அறிந்தவர். 'இதி ஸீதாச இராமஶ்ச லக்ஷ்மணஶ்ச க்ருதாஞ்ஜலி:। அபிகம்யாஶ்ரமம் ஸர்வே வால்மீகி மபிவாதயந்' என்று ஸீதை இராமன் லக்ஷ்மணன் இம்மூவரும் வணக்கத்துடன் கையைக் கூப்பிக்கொண்டு வால்மீகியின் ஆஶ்ரமத்துக்குச் சென்று அவரை வணங்கினுர்கள் என்று அயோத்யா காண்டத்தில் சொல்லப்போகிருர். பின்னும் அவர் 'ராமோ ராமோ ராம இதி ப்ராஜாநா மபவந் கதா:। ராமபூதஞ் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி' என்று ஸாமான்ய ஜனங்களும் அறிந்த ராம வைபவத்தை ராம ராஜ்யத்தின் மத்யத்தில் வாஸஞ் செய்யும் மஹர்

தங்களிடத்தில் கேட்பதற்கு நான் அதிக ஆசைப் படுகி றேன். தேவரீர் க்ஞானிகளில் உயர்ந்தவர். இப்படிப் பட்ட மஹாபுருஷனைத் தங்களையல்லாமல் அறிந்து சொல்கின்றவர் இல்லை. ஆகையால், அவனை அடி யேனுக்குத் தெரியச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டார்.

மூவுலகத்திலும் உள்ள எல்லா வ்ருத்தாந்தங்களை யும் நன்றாய் அறிந்த நாரத முனிவர் அதைக் கேட்டு ஆநந்தமடைந்து, ''முனிவரே! உம்மால் வினவப்பட்ட குணங்கள் உத்தம மானவை. அப்படிப்பட்ட புருஷன் கிடைப்பது அருமை. ஆனாலும், அவனை நான் கூடின மட்டில் ஆராய்ந்தறிந்து சொல்கிறேன்.

''[1]இக்ஷ்வாகு வம்சத்தில் ராமன் என்று ஒருவன்

ஷியாகிய வால்மீகி அறியாதிருக்க முடியாது. இதை ஸத்யலோகத்தி லிருந்து வந்த தேவர்ஷியாகிய நாரதரைக் கேட்க வேண்டியதில்லை. அவரும் ஆராய்ந்தறிந்து சொல்கிறேன் கேளும் என்று சொல்ல வேண்டாம்; என்றால்-வால்மீகியும் ராமனைக் குறித்து வினவின வர் அன்று; வேதாந்தங்களில் பரதத்வம் பல விடங்களில் பல வித மாய்ச் சொல்லப்பட்டுள்ளது. ஆகையால், அந்தப் பரதத்வம் விஷ்ணு வோ அல்லது ருத்ராதிகளில் ஒருவனோ என்பதைத் தெரிந்து சொல் வதற்கு வினவினான் என்பது பொருள். இக்கருத்தறிந்த நாரதரும் 'ராமனாய் அவதரித்த ஸ்ரீமகா விஷ்ணுவே வேதாந்தங்களில் ஓதப் படும் பரதத்வம். அவனே யாவர்க்கும் மேலானவன். ப்ரஹ்மா முத லானவர்கள் அனைவரும் அவனுடைய ஆணைக் குட்பட்டவர்கள். வேத ங்கள் பலவிதமாய்ச் சொல்லுவதும் அவனைத் தான் என்று வேதங்க ளிற் சொல்கின்ற எல்லாக் குணங்களையும் இராமனிடத்திற் காட்டி உத்தரமருளிச் செய்கிறார்.

1. இங்கிருந்து பாலகாண்டம் ஆரம்பம்.

ஜனகாதி மஹாகுலங்கள் இருக்க இக்ஷ்வாகு வம்சத்தில் அவ தரித்ததற்குக் காரணம் என்னவென்றால், இக்ஷ்வாகுவென்பவன் மனு

இருக்கிறான். அவனைச் சகல ஜனங்களும் நன்றாய்க் [1]கேட்டறிவார்கள். [2]அவனுடைய ஸ்வபாவம் என்றும் மாறுபாடின்றி யிருக்கும். அவனுடைய சக்தி இவ்வளவென்

மஹாராஜாவின் மூத்த குமாரன். அவன்தான் முன்பு வெகுகாலம் விஷ்ணுவை ஆராதித்து அவருடைய மூர்த்தி விசேஷமாகிய ரங்கநாதனைப் பெற்றான். இக்ஷ்வாகுவி னிடத்தில் உள்ள பக்ஷத்தினால்தான் அவன் வம்சத்தில் பகவான் அவதரித்தது. ஒரு குலத்தில் வைஷ்ணவனாயிருப்பவன் பிறந்தால் அவ்வம்சத்தில் பிறந்தவர் அனைவரும் கடைத்தேறுகிறார்கள். அப்படியிருக்க யாதொரு வம்சத்தில் பிறந்த அரசர்கள் மூர்த்தி விசேஷமாய் எப்பொழுதும் காவேரியினிடையிற் பள்ளிகொண்டிருக்கிற ரங்கநாதனைத் தங்கள் க்ருஹத்தில் ஆராதித்துக்கொண்டு வைஷ்ணவோத்தமர்களா யிருந்தார்களோ அந்த வம்சத்தில் அம்மஹா புருஷனே வந்து அவதரித்தான். ஆகையினால், அந்த வம்சத்தின் பெருமை சொல்லத் தரமன்று என்கிற அதிசயம் தோற்றுவதற்காக இக்ஷ்வாகு வம்சத்தில் என்னப்பட்டது.

ரமயதி ஸர்வாந் குணைரிதி ராமः தன் குணங்களால் யாவரையும் ஸந்தோஷிக்கச் செய்வதனால் ராமன் என்றும் ரமந்தே அஸ்மிந் ஸர்வே குணைரிதி ராமः யாவரும் அவன் குணங்களைக் கண்டு சந்தோஷிக்கிறார்களாகையால் ராமன் என்றும் சொல்லலாம்.

1. கேட்டறிவார்கள் என்பது தாடகையைக் கொன்றது, ஸுபாஹு மாரீசர்களை வென்றது, விஶ்வாமித்ரர் யாகத்தைக் காத்தது அஹல்யை சாபத்தை விடுவித்தது, சிவன் வில்லை முரித்தது, பரசுராமனை நிக்ரஹம் செய்தது, மராமரங்கள் ஏழையும் பிளந்தது, வாலியை முடித்தது, கடலில் அணை கட்டினது, இராவணனுடைய மூலபலத்தை அழித்தது முதலான சரித்ரங்களைக் கேட்டு அவனே ஸ்ரீமந்நாராயணன் என்று அனைவரும் நன்றாய் அறிவார்கள் என்று வெளிப்படுத்துகின்றது.

2. இங்கு 'நாஸ்ய ஜராயை தஜ்ஜீர்யதி நவயே நாஸ்ய ஹந்யதே' 'அபஹத பாப்மா விஜரோ விம்ருத்யுர் 'விஶோகோ விஜிகத்ஸோ பிபாஸः' முதலான ஶ்ருதிகள் ப்ரமாணம்.

றுவது, இப்படிப்பட்ட தென்றுவது, எண்ணமுடியாமல் விசித்ரமா யிருக்கும்.

"[1]அவன் க்ஞான ஸ்வரூபனாகையால் ஸ்வயம்ப்ரகாசன்; [2]நிலையாய் நிற்கின்ற ஆநந்தத்தை அநுபவிக்கின்ற உலகம் எல்லாவற்றையும் தன் வசமாக்குகின்ற தன்மையுடையவன்; [3] சிறந்த புத்தி யுள்ளவன்; [4]அழியாத நீதியமைந்தவன்; [5]வேதங்களை ப்ராஹ்மாவுக்கு முதலில் வெளியிட்டவன்; [6]அவன் ஐச்வர்யம் அளவற்றதாயிருக்கும்;

---

1. இங்கு 'விஜ்ஞாநவநஏவ' என்கிற ஶ்ருதி ப்ரமாணம்.

2. இங்கு 'ஆநந்தோப்ரஹ்ம' என்பதும்.
ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந: என்பதும் ப்ரமாணம்.

3. புத்திக்குச் சிறப்பாவது—'ஶுஶ்ரூஷா ஶ்ரவணஞ் சைவ க்ரஹணம் தாரணம் ததா। ஊஹாபோஹோர்த்த விஜ்ஞாநம் தத்வஜ்ஞாநஞ்ச தீகுணா:' என்றுசொல்லப்பட்ட குணங்கள்நிறைந்தமை.

4. இங்கு 'யாதா யாதாபூர்வ மகல்பயத்' என்றும் 'ஏஷஸேதுர்விதரண ஏஷாம் லோகாநா மஸம்பேதாய' என்றும் உள்ள ஶ்ருதிகள் ப்ரமாணம்

5. 'யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோவைவேதாம்ச ப்ரஹிணோதிதஸ்மை' என்பது ஶ்ருதி.

6. நித்யவிபூதியும் லீலாவிபூதியுமாகிற உபய விபூதிகளுக்கும் ஈஶ்வரனென்று கருத்து; 'பாதோஸ்ய விஶ்வாபூதாநி' என்று லீலா விபூதியை ஒரு பங்காகச் சொல்லி 'த்ரிபாத்ஸ்யாம்ருதம் திவி' என்று நித்ய விபூதியை லீலாவிபூதியைக் காட்டிலும் மும்மடங்கு அதிகமாக ஶ்ருதி சொல்லிற்று. இனி லீலாவிபூதியாவது ஒரு ப்ரஹ்மாண்டம் பல வகையாகப் பிரிந்து அளவிட வொண்ணுதிருக்கும். அவ்விதமான ப்ரஹ்மாண்டங்கள் 'அண்டாநாந்து ஸஹஸ்ராணி நியுதாந்யயுதாநிச' என்று கணக்கற்றிருக்கும். ஆதலால் லீலாவிபூதியைவிட மும்மடங்கு அதிகமான நித்தியவிபூதியின் பெருமை அசாத்தியமானது. ஆகையால், அவன் ஐஶ்வர்யம் அளவற்றதா யிருக்கும் என்று சொல்லப்பட்டது. 'ஸர்வமிதமபியாத்த:' என்கிற ஶ்ருதி இதற்கு ப்ரமாணம்.

அவன் சத்ருக்களை வெல்லும் ஸ்வபாவமுடையவன்; [1] அவனுடைய [2] தோள்கள் உயர்ந்து பருத்திருக்கும்; [3] புஜங்கள் திரண்டு நீண்டிருக்கும்; [4] கழுத்து வலம்புரி சங்கைப்போல மூன்று ரேகைகளால் அலங்கரிக்கப்பட்டு அழகுள்ளதா யிருக்கும்; [5] கன்னங்கள் திட்டமாகச் சதை பிடித்திருக்கும்; [6] மார்பு பரந்து உயர்ந்து

---

1. இது முதலாக 'ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே ஹிரண்ய ச்மச்ருர் ஹிரண்யகேச ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண ஸ்தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவ மக்ஷிணீ தஸ்யோதிதி நாம ஸ ஏஷ ஸர்வேப்ய: பாப்மப்ய உதித உதேதி ஹவை ஸர்வேப்ய: பாப்மப்யோ ய ஏவம் வேத' என்று அந்தராதித்ய வித்யையிற் சொல்லப்பட்ட ஸர்வாங்க ஸுந்தரமான திருமேனியைச் சொல்லுகிறது.

2. தோள் உயர்ந்திருப்பது மஹாபுருஷ லக்ஷணம் 'கக்ஷ: குக்ஷிச்ச வக்ஷச்ச க்ராண ஸ்கந்தௌ லலாடிகா। ஸர்வபூதேஷு நிர்திஷ்டா உந்நதாஸ்து ஸுகப்ரதா:' என்று ஸாமுத்ரிகத்திற் சொல்லப்பட்டது.

3. இதுவும் 'ஆஜாநு லம்பிநௌ பாஹூ வ்ருத்தபீநௌ மஹீச்வர:' என்கிறபடி மஹாபுருஷலக்ஷணம். இப்படியே மற்றவற்றையும் கண்டுகொள்க.

4. அங்கு 'கம்புக்ரீவஸ்து ந்ருபதிர் லம்பகர்ணோதி ஸூக்ஷண:' என்பது ஸாமுத்ரிகம். 'ரேகா த்ரயாந்விதா க்ரீவா கம்புக்ரீவேதி கத்யதே' என்று நிகண்டுவிற் சொல்வதனால் மூன்று ரேகையுள்ள கழுத்தைக் கம்புக்ரீவம் என்று சொல்வார்கள் 'கம்பு' என்றால் சங்கு. சங்கு போன்ற கழுத்தென்று பொருள். சங்குக்கு அடியில் மூன்று ரேகைகளைக் காணலாம். அதை யுடையவன் கம்பு க்ரீவன்.

5. அங்கு 'மாம்ஸலௌ து ஹநூயஸ்ய அவக்ரௌ த்வீஷ துந்நதௌ। ஸநரோ ம்ருஷ்ட மச்நாதி யாவதாயுஸ் ஸுகாந்வித" என்பது லக்ஷணம்.

6. அங்கு 'ஸ்திரம் விசாலம் கடிநம் உந்நதம் மாம்ஸலம் ஸமம்। வக்ஷோ யஸ்ய மஹீபால ஸ்ததஸ்ஸமோவாஹவேந்நர:' என்பது லக்ஷணம்.

பருத்துக் கடினமாயிருக்கும்; சரீரம் மிகவும் மேலான வில்லையும் தாங்கத் தக்கதா யிருக்கும்; [1] கழுத்தெலும்பு சதைபிடித்து வெளியில் தோன்றாதிருக்கும்; [2] அவனைப் பார்த்த மாத்திரத்தில் பகைவர்கள் பயந்து ஓடுவார்கள்; [3] அவன் ஸ்வபாவத்தினாலேயே பாபங்களை வென்றவன்; [4] அவனுடைய தலை வட்டமாய்க் குடைபோலக் கவிந்திருக்கும்; [5] நெற்றி அஷ்டமீ சந்திரன்போலச் காந்தி கொண்டு விளங்கும். [6] அவன் நடை யானையோடும் ஸிம்ஹத்தோடும் ஒத்திருக்கும்;

---

1. மேலுள்ள 'பீநவக்ஷா:' என்கிற பதத்தின் பொருள் இங்குக் கூறப்பட்டது.

2. இங்கு 'விஷமைர் ஜத்ருபிர் நிஸ்ஸ்வா அதிஸூக்ஷ்மைஶ்ச மாநவா:। உந்நதைர் போகிநோ நிம்நைர் நிஸ்ஸ்வா: பீநைர் நராதிபா:' என்பது லக்ஷணம்.

3. முன்னும் பின்னும் திருமேனியைச் சொல்லிவர இடையில் இது சேருமோ வென்றால், இதுவும் திருமேனியின் பெருமையைத் தோற்றுவிப்பதனால் சேரும். இது எப்படி யென்றால், இவன் இங்குப் பிறந்திருப்பது உலகத்தில் ஜீவராசிகள் தம் தம் பாபத்திற்கு அநுகுணமாகச் சரீரத்தைப் பெறுவதுபோலன்று. அதற்கு அநுகூலமான பாபம் அவனுக்கில்லை. ஆகையால் 'இச்சாக்ருஹீதாபிமதோரு தேஹ:' என்கிறபடி இவனுடைய திருமேனி தன்னிச்சையால் தன் மனத்துக்கு உகப்பாய்க் கம்பீரமாய்க் கொள்ளப்பட்டது. இனி அந்த ஸ்லோகத்துக்குத் தன்னை யாஶ்ரயித்தவர்களின் இச்சாநுஸாரமாக அவர்கள் திருவுள்ளத்துக்கு உகப்பாய்த் திருவுருவங் கொள்கின்றவன் என்றும் பொருள் சொல்வார்கள்.

4. இங்கு 'ஸமவ்ருத்த ஶிராஶ்சைவ ச்சத்ராகார ஶிரா ஸ்ததா। ஏகச்சத்ராம் மஹீம் புங்க்தே தீர்கமாயுஶ்ச ஜீவதி' என்பது லக்ஷணம்

5. இங்கு 'அர்த்தசந்த்ர நிபம் துங்கம் லலாடம் யஸ்ய ஸ ப்ரபு:' என்பது லக்ஷணம்.

6. இங்கு 'ஸிம்ஹர்ஷப கஜவ்யாக்ர கதயோ மநுஜா முநே। ஸர்வத்ர ஸுகமேயந்தே ஸர்வத்ர ஜயிநஸ்ஸதா' என்பது லக்ஷணம்.

[1] அவனுடைய தேகம் அதிக உயரமும் அதிக குட்டையும் இல்லாமல் லக்ஷணம் நிறைந்து ஸமமாயிருக்கும்; [2] அவயவங்கள் ஒன்றோடொன்று ஸமமாய்ப் பிரிந்திருக்கும்; [3] அவன் காண்போர் கண்களைக் கவரும்படியான நீலமேகம்போல நிகுநிகென்று விளங்குகின்ற தேககாந்தி யுடையவன்; [4] அவனுடைய கண்கள் தாமரை யிதழ்போல நீண்டு விசாலமாகிச் செவ்வரி யோடியிருக்கும்; அவன் அவயவங்கள் அழகு பொருந்தியிருக்கும்; ஸாமுத்ரிக சாஸ்திரத்தில் சொன்ன சுப லக்ஷணங்கள் முழுமையும் அவனுக்கே சொந்தமாயிருக்கின்றன; [5]அவன் தர்ம ஸூக்ஷ்மங்களை யெல்லாம் அறிந்தவன்; [6]சொன்னசொல் தவறாதவன்; ஸகலப்ராணி

1. இங்கு 'ஷண்ணவத் யங்குலோத்ஸேயஸ் ஸார்வபௌமோ ஹவேந் நரப:' என்பது லக்ஷணம்.

2. இங்கு 'ஹ்ருவௌ நாஸா புடௌ நேத்ரே கர்ணவோஷ்டௌ சசூசுகே। கூர்ப்பரௌ மணிபந்தௌச ஜாநுநீ வ்ருஷணே கடீ கரௌபாதௌ ஸ்பிசௌயஸ்ய ஸமௌஜ்ஞேயஸ் ஸபூபதி:' என்பது லக்ஷணம்.

3. இங்கு 'சக்ஷுஸ்நேஹேந ஸௌஹாக்யம் தந்தஸ்நேஹேந போஜநம் । த்வசஸ் ஸ்நேஹேந ஶய்யாச பாதஸ்நேஹேந வாஹநம்' என்பது லக்ஷணம் ஸ்நேஹமாவது-நிகுநிகுப்பு.

4. இங்கு 'ரக்தாந்தைः பத்மபத்ராபைர் லோசநைஸ்ஸுபவ மோஹிநः' என்பது லக்ஷணம்.

5. ஆஶ்ரிதர் அநுபவிக்கும் திருமேனியைச் சொல்லி, இனிமேல் ஆஶ்ரிதலக்ஷணத்துக்கு உறுப்பான குணங்களைச் சொல்லுகின்றார். தர்மத்தின் ஸூக்ஷ்மமாவது-குற்றம் பாராமல் சரணம் புகுந்தவனை ரக்ஷிக்கவேண்டுமென்பது. அக்குணம் 'மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந। தோஷோயத்யபி தஸ்யஸ்யாத் ஸதாமேதத கர்ஹிதம்' என்று வெளியிடப்பட்டது.

6. 'அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம்வா ஸீதே ஸலக்ஷ்மணாம் । நது ப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விஶேஷத:' என்று இது முதலான விடங்களில் இந்தக் குணத்தைக் காணலாம்.

களுக்கும் ஹிதஞ்செய்வதில் ஊக்கமுடையவன்; [1]நற்குணங்களுக்கு நிதியென்று யாவராலும் புகழப்பட்டவன்; [2]எல்லாவற்றையும் அறிகின்ற திறமுடையவன்; பரிசுத்தமானவன்; தன்னை அடுத்தவர்களுக்கு ஸ்வாதீனமாயிருப்பவன்; [3]ப்ரஹ்மதேவனுக்குச் சமானமானவன்; தனக்குப் பத்நியான ஸ்ரீமஹாலக்ஷ்மியோடு இணைபிரியாமல் இருப்பவன்; அளவற்ற பராக்ரமம் உள்ளவன்; உலகத்தைப் போஷிக்க வல்லவன்;

---

1. 'தஸ்ய நாம மஹத் யஶ:' என்பது ஶ்ருதி

2. 'யஸ்ஸர்வஜ்ஞ ஸ்ஸர்வவித்' என்பது ஶ்ருதி. இது 'ஜ்ஞாநஸம்பந்ந:' என்கிற பதத்தின் பொருள். இதற்குத் "தன் ஸ்வரூபத்தை உணர்ந்தவன்' என்று பொருள்கூறி, 'ஆத்மாநம் மாநுஷம் மந்யே' என்று அத்தனையும் தானாய் ஏறிட்டுக்கொண்டது. அதற்கு 'மயா த்வம ஸமநுஜ்ஞாதோ கச்சலோகா நநுத்தமாந்' என்று ஜடாயுவைக் குறித்து 'நீமேலான லோகங்களையடைவாய், அவ்வாறு நான் உனக்கு அநுமதி கொடுக்கிறேன்' என்று சொன்னமை சேரும். ப்ரஹ்மோபதேசமில்லாமல் அவ்வுலகங்களுக்குப் போகை யரிது. ப்ரஹ்மஜ்ஞானமில்லாதவன் ப்ரஹ்மோபதேசம் பண்ணமுடியாது. ஆகையால் அவ்வாறு பொருள்கொள்ளவேண்டும்" என்பார் சிலர். ஜடாயுவுக்கு மோக்ஷங்கொடுத்தமை 'ஸத்யேநலோகாஞ்ஜயதி' என்று ராமன் ஸத்யத்தால் உலகமெல்லாம் வென்றவனானையால் அமையும். ஆதலால் இவ்வாறு பொருள்கூறவேண்டிய நிர்ப்பந்தம் இல்லை.

3. 'மத்யே விரிஞ்சி கிரிஶம் ப்ரதமாவதார:' என்ற ப்ரஹ்மருத்ரர்களுக்கு நடுவில் லோகத்தை ரக்ஷிக்கும் பொருட்டு விஷ்ணுவாய் அவதரித்தாற்போலவே இங்கு ப்ரஹ்மாவைப்போல அவதரித்தான் என்கின்றது. பரமபுருஷனை ப்ரஹ்மனென்று சொல்லி ஸாக்ஷாத் பரமபுருஷனோடு ஒத்தவன் என்றுஞ்சொல்லலாம். ஆனால், ராமனே பரப்ரஹ்மமாயிருக்க அஸ்ஸந்தேஹம் சேருமென்றால், மனுஷ்ய தர்மங்களான சோக மோஹாதிகளைத் தானே ஏறிட்டுக்கொண்டமை பற்றிப் பேதம் கற்பித்துப் போலியாகச் சொல்லவேண்டும். பரசுராம

"தனது அன்பர்களின் விரோதிகளைக் கொல்கின்றவன்; [1]ஸர்வ ப்ராணிகளுக்கும் இரக்ஷகனுயிருப்பவன்; [2]தர்மத்தை நன்ருய் நிலைநிறுத்துகின்றவன்; [3]தன்னுடைய ஸ்வதர்மத்தில் சந்தோஷமாய் நடப்பவன்; அடைந்தவர்களை ஆதரிப்பவன்; வேதங்களையும் வேதாங்கங்களையும் நன்ருய்க் கற்றறிந்தவன்; தநுர் வித்யையில் மிகவும் தேர்ந்தவன்; சாஸ்த்ரங்களின் மர்மங்களை உள்ளபடி யறிந்து மறப்பில்லாமல் மேன்மேலும் பரவுகின்ற புத்தியின் தெளிவை யுடையவன்; உலகத்துக்கு ப்ரியமாயிருப்பவன்; உலகத்தை ப்ரியமாய்ப் பார்ப்பவன்;

னுடைய லோகங்களைத் தடுக்கை, ஜடாயுவுக்கு மோக்ஷங்கொடுக்கை, தன்னுடன் அயோத்யையிலுள்ள புல் எறும்புமுதலான சராசரங்களையெல்லாம் வைகுந்த மேறச்செய்கை முதலான அற்புத சரித்ரங்களால் ஒத்திருப்பதைக் காண்க.

1 இது இவ்வவதாரத்துக்குரிய குணங்களைச் சொல்லுகிறது. உலகத்தில் ப்ரபுவாயிருப்பவன் தன் ஜனங்களைமாத்திரம் காப்பாற்றுவதுண்டு. இவன் ஸர்வேஸ்வரனுகையால் யாவரையும் காப்பவன் என்பது பொருள்.

2 தர்மத்தைத் தான் அநுஷ்டித்தும் பிறரை அநுஷ்டிக்கச்செய்தும் நிலைநிறுத்துகின்றவன் என்று பொருள். இதனுல் சாஸ்த்ரத்தை மறுத்து நடப்பவர்களையும் வைத்தியன் வியாதியைப் போக்கி ஸுகப்படுத்துவதுபோலத் தக்க தண்டனைகளால் பாவங்களைப்போக்கிப் பரிசுத்த ராக்குகின்றவன் என்று தெளிவாகின்றது.

3. தன்னுடைய தர்மமாவது தன்னை அடைந்தவர்களைத் தான் விடாமல் ரக்ஷிப்பது; க்ஷத்ரிய ஜாதியிற் பிறந்திருக்கும் தன்னுடைய க்ஷத்ர தர்மத்தைச் சொல்லுவது; க்ஷத்ரியர்களுக்குச் சொன்ன தர்மங்களைக் குறைவற நடத்துகின்றது முதலாயின. உலகில் யாவரும் பிறர்க்குச் சொல்லுவதில் வல்லவராவார்கள். தாங்கள்செய்யும்போது அவ்வல்லமையைக் காண்பது அரிது. ஆகையினுல் யாவருந் தன்னைப் பார்த்துத் திருந்தும்படி நடக்கின்றவன் என்க. 'பரோபதேஶ ஸமயே

எல்லாவற்றையும் ஸாதிக்க வல்லவன்; கம்பீர ஸ்வபாவ முள்ளவன்; [1]நன்றாய்ப் பேசவல்லவன், [2]ஸமுத்ரத்தை நதிகள் சூழ்வதுபோல ஸத்புருஷர்கள் அவனை எப்பொழுதும் சூழ்ந்துகொண் டிருப்பார்கள்; பெரியோர்கள் அணுகத்தக்க பெருமை பொருந்தினவன்; எல்லாருக்கும் ஸமனாயிருப்பவன்; தன்னைப் பார்க்கின்றவர்களுக்கு மேன்மேலும் ப்ரீதியை விளைக்கும்படியான காட்சியை யுடையவன்;

ஜநாஸ்ஸர்வேபி பண்டிதா:। ஸ்வாநுஷ்டாநஸ்ய ஸமயே முநயோபிந பண்டிதா:' என்பது ப்ரமாணம். தன்னுடைய தர்மமாவது யாவரிலும் மேலாயிருக்கை. அதைச் சிவதநுர்ப் பங்கஞ்செய்வது பரசுராமனை ஜயிப்பது முதலான வ்யாபாரங்களால் தெரிந்துகொள்ளலாம்.

1 அஸ்த்ரவித்யை கற்கும்பொழுது ராமன் இடையில் ஸ்ரமம் தீருகைக்காக மரத்தின் நிழலில் ஒதுங்கும் பொழுதுகூடத் தர்மஸந்தேஹங்கேட்கப் பெரியோர்கள் வந்து சூழ, 'ஜ்ஞாந வ்ருத்தையர் வயோவ்ருத்தையைஸ்ச ஸீலவ்ருத்தையைஸ்ச ஸஜ்ஜநை:। கதயந் நாஸ்தவை நித்ய மஸ்த்ரயோக்ய யாந்த்ரேஷ்வபி' என்கிறபடி அவர்களுடன் கலந்திருக்கின்றவன். அஸ்த்ர வித்யாப்யாஸத்திலேயே அப்படியானால் ஹோமம் தேவபூஜை ஸபை முதலான காலங்களில் சொல்லவேண்டியதில்லை யல்லவா? அதனால் ஈச்வரனைப் பற்றுகைக்குக் காலதேச நியமமில்லையென்பது தேற்றம்.

2 நதிகள் ஸமுத்ரத்தைச் சூழ்வதுபோல என்கையால் நதிகள் ஸமுத்ரத்தில் கலப்பதனால் மஹாநதிகளென்று மேன்மை பெறும். அப்படியே ராமனைப்பற்றி அவர்களும் பெருமை பெறுகின்றார்கள். நதிகள் வந்து வீழ்ந்தபின்பும் ஸமுத்ரம் தனியாய் விளங்கி நிற்பது போல ஸஜ்ஜனகோஷ்டியில் நக்ஷத்ரங்களில் சந்த்ரன்போல ராமன் தனியே விளங்கிநிற்பான். பதினாயிரம் நதிகள் வந்து வீழ்ந்தபோதும் ஸமுத்ரம் கலங்காதிருப்பதுபோல, ராமனும் ஜாபாலி முதலானவர்கள் எவ்வளவு கலக்கப்பார்த்தாலும் கலக்கமுடியாதவனாயிருந்தான். ராஜகுமாரர்கள் விநோதார்த்தமாக ஸ்ருங்கார ஹாஸ்ய ரஸிகர்களுடன் சூழ்ந்திருப்பார்கள். இவன் அப்படியன்றி ஸத்புருஷர்களால் சூழப்பட்டவன் என்பது கூறப்படுகின்றது.

"முனிவரே! [1] அவன் குணங்கள் என்னால் எடுத் துரைக்கமுடியா; அவன் ஸகலமான மங்கள குணங் களுக்கும் இருப்பிடம்; அவன் [2] கோஸலராஜன் திருமக ளான கௌஸல்யாதேவியின் வயிற்றில் பிறந்து அவளுக்கு மஹாநந்தத்தை விளைப்பவன்; [3] அவன் ஸமுத்ரத்தைப் போல அதிக கம்பீரமானவன்; ஹிமாசலம்போலச் சலி யாமல் இருப்பவன்; வீரத்தன்மையில் விஷ்ணு போன்ற வன்; சந்த்ரன்போலப் பார்க்க ப்ரியமா யிருப்பவன்; கோ பத்தில் காலாக்நியை ஒத்தவன்; பொறுமையில் பூமியைப் போன்றவன்; ஸத்யத்தில் தர்மதேவதையை நிகர்த்த வன்."

---

1. 'இஷூக்ஷயாந் நிவர்த்தந்தே நாந்தரிக்ஷ க்ஷிதிக்ஷயாத்। மதிக்ஷ யாந் நிவர்த்தந்தே நமோவிந்த ஹுணக்ஷயாத்' என்பது ப்ரமாணம்.

2. தசரத சக்ரவர்த்தியின் பிள்ளை யென்று சொல்லாமல் கௌ ஸல்யையை ஏன் சொல்லவேண்டும் என்றால், தசரத சக்ரவர்த்தி பட் டாபிஷேகம் செய்யத்தொடங்கி இடையில் விக்னம் வந்து மரித்துப் போய்விட்டான். புத்ரனால் வந்த ஸுகத்தை அவன் பூர்ணமாக அநு பவிக்கவில்லை. கௌஸல்யையே முழுவதும் அநுபவித்தவள். ஆகை யால் தான் இங்ஙனம் சொல்லப்பட்டது. இப்படியே 'கௌஸல்யா லோகபர்த்தாரம் ஸுஷுவேயம் மநஸ்விநீ' என்கிற விடத்திலும் கண்டுகொள்க. பட்டமஹிஷியின் பிள்ளையாகையினால் ராஜ்யாபிஷே கத்துக்குத் தக்கவன் இவனே யென்று தோற்றுகைக்காக வென்றும் பொருள் சொல்லலாம்.

3. இனி இவன் நிகரில்லாதவன் என்றும், இவனுக்கு மேற்பட்ட வஸ்து இல்லை என்றும் சொல்வதற்காக உலகத்தில் உயர்ந்தவஸ்துக் களைப் பொறுக்கி ஒவ்வொரு குணத்துக்கு ஒவ்வொன்றைப் போலி யாகச் சொல்லுகிறது. இதுவும் 'ஸூர்யன் பாணம்போல் போகி றான்' என்பதுபோல வஸ்துவின் ஸ்வரூபத்தை யறிவிக்கைக்காகச் சொன்னதேயன்றி முற்றுவமை யன்று.

* இப்படிப் பட்ட நற்குணங்களும், உண்மையான வீரத்தன்மையும், நீதி சாஸ்த்ரங்களில் விசேஷமாய்ச் சொல்லப்பட்ட ஸந்தி விக்ரஹம் முதலான ராஜதந்த்ரங்களும் பொருந்தி, ப்ரஜைகளுக்கு நன்மைசெய்யும் தன்மையுள்ளவனும், தனக்கு மிகவும் ப்ரியனும், மூத்த குமாரனுமாகிய ராமனைத் [1] தசரத சக்ரவர்த்தி மந்திரி முதலானவர்களுக்கு ப்ரியத்தைச் செய்யவேண்டித் தனக்குள்ள ப்ரீதியினால் இளவரசனுக்க விரும்பினான்.

அவனுடைய இராஜ்யா பிஷேகத்திற்காகச் சேர்க்கப்பட்டுள்ள மங்கள வஸ்துக்களைப் [2]பார்த்துத் தசரத சக்ரவர்த்தியின் பார்யையும் கேகயராஜாவின் புத்திரியுமான கைகேயி யென்பவள் முன்பு சம்பராஸுர யுத்தத்தில் பர்த்தாவினிடத்தில் இரண்டு வரங்களைப் பெற்றிருந்

* இங்கிருந்து அயோத்தியாகாண்டம் ஆரம்பம்.

இவ்வாறு வேதாந்தங்களிற் சொன்ன கல்யாண குணங்களெல்லாம் நிறைந்த பரதத்தவம் ராமனேயென்று நிரூபிக்கைக்காக இக்குணங்களையெல்லாம் அவனிடத்திற்சொல்லி இப்படிச்சொன்ன குணங்களையும் மற்றும் சொல்லாதவற்றையும் ராமனிடத்தில் அவனுடைய சரித்ர மூலமாக வெளியிடும்பொருட்டு இச்சரித்ரத்தை அயோத்யா காண்டம் முதலாகச் சொல்லத் தொடங்குகிறார்.

1. தசரத சக்ரவர்த்தி ஒஶஸு஻ தி஖ஷ ரயோ யஸ்ய ஸஃ ஒஶரயஃ பத்துத் திசைகளிலும் தடையின்றித் தேரில் திரிபவனனதுபற்றி இம் மன்னவனுக்குத் தசரதன் என்று பெயர். 'தான் நிர்வஹிக்கமுடியாமற் பயந்து பிள்ளைக்கு ராஜ்யம் கொடுத்தவனல்லன்' என்பது பொருள். சக்ரவர்த்தி பூமண்டலத்துக் கதிபதி.

தகப்பன் நிர்வஹித்துக் கொண்டிருக்கும் பொழுது ஸகலத்தையும் நிர்வஹிக்கும்படி அபிஷேகஞ் செய்யப்பட்ட புத்திரன் இளவரசன்.

2. பார்த்து - மந்தரையின் வாயால் கேட்டுத் தான் பார்த்தது போல எல்லாவற்றையும் அறிந்து.

அரசன், ஶம்பராஸுர விஜயத்தில் கைகேயி தனக்கு ஸாரத்

தாளாகையால், அவற்றில் ஒன்றுக்கு ராமன் காட்டுக்குப் போகவேண்டியதென்றும், மற்றொன்றுக்குத் தன் புத்திரன் பரதனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்யவேண்டியதென்றும், அரசனைக்கேட்டுக்கொண்டாள். தசரத [1]சக்ரவர்த்தி மந்திரி முதலானவர்களோடு கலந்துஆலோசித்து ராமனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்யவேண்டுமென்று நிச்சயித்திருந்தும் கைகேயிக்குத் தான் கொடுத்த வரத்தை நினைத்து ஸத்தியம் தவறாமையென்னும் தர்மமாகிற கயிற்றால் கட்டுண்டு செயலற்றுத் தனக்கு மிகவும் ப்ரியனாகிய ராமனைக் காட்டுக்கு அனுப்பினான்.

ராஜ்யத்தைக் காக்கவல்ல வீரத்தன்மை பொருந்திய ராமனும் பிதாவின் நியமனப்படி தாயாராகிய கைகேயியின் இஷ்டத்தை நிறைவேற்றும் பொருட்டு அவர் கைகேயிக்குக் கொடுத்த வரத்தை அநுசரித்துக்காட்டுக்குச் சென்றான். லக்ஷ்மணனும் அவனைப் பின்பற்றி

யஞ் செய்ததற்காகச் சந்தோஷித்து அவளுக்குப் பரிசாக இரண்டு வரங்களைக் கொடுத்தானென்கிற கதை இங்குக் கவனிக்கத் தக்கது.

1. 'ராமோ விக்ரஹவாந் தர்ம:' என்று ஸாக்ஷாத் பரம தர்மமாகச் சொல்லப்பட்ட ராமனைவிட்டுப் பின்பு நேரிட்ட ஸ்த்ரீ விஷயமான க்ஷுத்ர தர்மத்தை அவலம்பித்தானென்பது கருத்து. இதனால், 'ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் வா ஸ்தோபம் ஹேலநமேவவா | வைகுண்ட நாமக்ரஹண மசேஷாகவிநாசநம்' என்றும், 'ஆக்ருஶ்ய புத்ர மகவாந் யதஜாமிலோபி நாராயணேதி ம்ரியமாண உபைதி முக்திம்' என்றும், 'காமாத் கோபாத் பயாத் கம்ஸ:' என்றும் இவ்வாறாக எவ்விதத்திலாயினும் பகவந்நாமோச்சாரணஞ் செய்தவர்களுக்கு மோக்ஷம் கிடைத்ததாகச் சொல்லியிருக்க, எக்காலத்திலும், ராமனையே நினைத்துக்கொண்டிருந்த தசரத மன்னவன் ஸித்தோபாயமாகிய பகவானை விட்டு ஆபாஸ தர்மத்தைப் பற்றினபடியால் அவனுக்கு மோக்ஷ ப்ரஸக்தி யில்லையென்பது கருத்து.

னுன்; [1]லக்ஷ்மணன் மகத ராஜன் புத்ரியாகிய ஸுமித்ரா தேவிக்கு மஹாநந்தத்தைக் கொடுக்கும் பிள்ளை. ராமனுக்குப் பின் பிறந்தவன். அவனுக்கு மிகவும் ப்ரிய மானவன். அவன் ராமனுடைய குணங்களில் ஈடுபட்டு அவனுக்கு வணக்கத்துடன் ஸகலவிதமான பணிவிடைகளையும் செய்கின்றவன். [2] அவனைப்பிரிந்து அரை க்ஷணமும் தரிக்கமுடியாத நேசமுடையவன்.

ஸீதை யென்பவள் ராமனுக்கு ப்ரியமான பார்யை. அவள் ஜனக மகாராஜாவின் வம்சத்தில் பிறந்தவள். ராமனுக்கு எப்பொழுதும் ப்ராணன் போன்றவள். அவனுக்கு நன்மையைச் செய்யும் தன்மையுடையவள். அமிர்தம் கடைந்தபோது அஸுரர்களை மோஹிப்பிக்கும்பொருட்டு வந்த மோஹினிபோலவும் வடிவம் கொண்டு வந்த விஷ்ணுவின் ஆச்சரிய சக்திபோலவும் விளங்கி நிற்பவள். ஸாமுத்திரிகத்தில் சொன்ன சுபலக்ஷணங்கள் அமைந்தவள். ராமன் தான் புருஷோத்தமனுய் இருப்பதுபோலவே இவளும் பெண்களுக்கெல்லாம் தலைவியாயிருப்பவள். அவளும் [3]ரோஹிணி சந்திரனைப் பின் தொடர்வதுபோல

---

1. ஸுமித்திரைக்கு ஆநந்தத்தை விளைவிப்பவன் என்று சொல்லுவானேன்? இப்பொழுது அவன் துயரத்தை யன்றோ விளக்கவேண்டும்? என்ருல், இப்பொழுது தான் லக்ஷ்மணன் அவளுக்கு மஹாநந்தத்தைக் கொடுத்தான். 'ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய' என்றும், ராமம் தசரதம் வித்தி மாம் வித்தி ஜநகாத்மஜாம்। அயோத்யாம் அடவீம் வித்தி கச்ச தாத! யதாஸுகம்' என்றும் அவதாரத்தின் கருத்தறிந்த ஸுமித்ராதேவியின் சொற்களால் இது வெளியாகும்.

2. இக்குணம் 'ந ச ஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ। முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யா விவோத்த்ருதௌ;' என்று மேலே சொல்லப்போகின்றது.

3. ரோஹிணி யென்பவள் சந்திரனுக்கு அஸாதாரணமான பத்தினி; அவள் பெண்களனைவரிலும் மேலானவள். அவள் சந்திரனை

ராமனைப் பின்பற்றிச் சென்றாள். [1]அந்நகரத்தில் வஸிக்கும் ஜனங்கள் யாவரும் ராமன் குணங்களுக்குத் தோற்றவர்களாகையால், அவனைப் பிரிந்திருக்க முடியாமல் வெகுதூரம் பின் சென்றார்கள். தசரத சக்ரவர்த்தியும் தனக்கு அன்பனாகிய இராமனை விடமாட்டாமல் கொஞ்ச தூரம் பின் தொடர்ந்தான்.

[2]தர்மத்தைச் செய்யும் ஸ்வபாவனாகிய ராமன் பின் தொடர்ந்த ஜனங்களைத் திருப்பிவிட்டு [3]ஶ்ருங்கிபேர மென்னும் பட்டணத்துக்கு அருகாமையில் கங்கைக் கரையில் உள்ள [4]வேடர்களுக்குத் தலைவனான குஹன்

விட்டு ஒரு முகூர்த்தகாலமும் பிரிந்திருக்கமாட்டாள். இது 'வரிஷ்ரா ஸர்வநாரீணா மேஷாச திவி தேவதா। ரோஹிணீந விநா சந்த்ரம் முஹூர்த்தமபி த்ருஶ்யதே' என்பதால் வெளியாகும்.

1. இதனால் நகரத்து ஜனங்களுக்கு ராமனிடத்திலுள்ள பரம பக்தி சொல்லப்பட்டது. பரம பக்தியாவது—தாம் கலந்த விஷயத்தைப் பிரிந்திருக்கப் பொறாமை. 'புநர்விஶ்லேஷ பீருத்வம் பரமாஹக்தி ருச்யதே' என்று சொல்லப்பட்டது. இவர்களுக்கு இவ்வளவு உண்டாவதற்குக் காரணம் அந்தத் தேசத்தில் வஸிப்பதேயன்றி வேறில்லை. இதனால், பகவத் தேச வாஸத்தின் மகிமை சொல்லப்பட்டது.

2. இங்குத் தர்மமாவது—ஆஶ்ரிதர்கள் பக்கல் வாத்ஸல்யமும் ஸௌசீல்யமும். வாத்ஸல்யமாவது—வத்ஸத்தின் பக்கல் தேநுவிருக்கும் இருப்பு. வத்ஸம்—கன்று. தேநு-பசு. ஸௌசீல்யமாவது ஆஶ்ரிதரோடு புரையறக் கலந்திருக்கை.

3. ஶ்ருங்கிபேர மென்னும் பட்டணத்துக்கு ஶ்ருங்கிணோ ம்ருகா:, தேஷாம் பேராணி க்ருத்ரிம ஶரீராணி யஸ்மிந் தத் ஶ்ருங்கிபேரம் ஶ்ருங்கிகளென்றால் மான்கள். பேரமென்றால் பொய்யுருவங்கள். மான்களைப் பிடிப்பதற்காக மான்களைப் போலவே தோற்றும்படியாகச் செய்யப்பட்ட பொய்ம்மானுருவங்கள் அங்கிருக்கிறபடியினால் அந்தப் பட்டணத்துக்கு ஶ்ருங்கிபேரம் என்று பெயர்.

4. வேடர்கள் என்பவர் மிருகங்களைக் கொன்று ஜீவிப்பவர்கள். அவர்களுக்குத் தலைவனென்று ஜாதியின் இழிவு சொல்லப்பட்டது.

என்பவனைக் கண்டு ப்ரீதிபண்ணிக் [1]கலந்து தன்னுடன் வந்த ஸாரதியான ஸுமந்திரனைப் பட்டணத்திற்கு அனுப்பி விட்டான். பின்பு லக்ஷ்மணனோடும் ஸீதையோடும் கூடின ராமன் [2]குஹனுடைய ஸஹாயத்தினால் கங்கையைத் தாண்டிக் கால் நடையாகவே நடந்து சென்று பரத்வாஜ மஹர்ஷியைக் கண்டு ஸேவித்து அவருடைய

குஹனென்று நாமத்தினால், (கூஹதி கோபயதி வஞ்சயதி பரஸ்வமிதி குஹ: இகுபத லக்ஷண: க.) என்று வ்யுத்பத்தியைக் கொண்டு பரத்ரவ்யத்தை வஞ்சித்துக் கொள்பவன் என்று தொழிலிலும் இழிவு சொல்லப்பட்டது. ஆயினும், தன்னிடத்தில் அநுகூலனாயிருப்பதுபற்றி அவனிடத்தில் அங்ஙனம் ப்ரீதி பண்ணினானென்பது கருத்து. அதனால் ஸௌசீல்யஞ் சொல்லப்பட்டது.

1. கலந்து தன்னுடன் வந்த ஸாரதியான என்பது அப்பொழுதீன்ற கன்றின் மீதுண்டான ப்ரீதி விசேஷத்தினால் முன்னணைக் கன்றைக் கொம்பிற்கொள்ளும் பசுவைப்போலக் குஹனுடன் கலந்த ராமன் வம்ஶ பரம்பரையாக வெகு காலம் ஸாரதியாகித் தன்னை அனுஸரித்து வந்த ஸுமந்த்ரனைப் போகவிட்டானென்று கருத்து. இதனால் வாத்ஸல்யம் தோற்றும்.

2. இங்கு.

'தேவநேந வநம் கத்வா நதீஸ்தீர்த்வா பஹூதகா:।
சித்ரகூட மநுப்ராப்ய பரத்வாஜஸ்ய ஶாஸநாத்॥
ரம்யமாவஸதம் க்ருத்வா ரமமாணா வநே த்ரய:।
தேவ கந்தர்வ ஸங்காஶாஸ் தத்ர தே ந்யவஸந் ஸுகம்॥'

என்பது மூலம். இதற்குத் தனி ஶ்லோகி—'தே அவநேந வநம் கத்வா' என்று பதம். அம்மூவரும் ஒருவரை யொருவர் பாதுகாத்துக் கொண்டு காட்டுக்குச்சென்று; 'அக்ரதோ கச்ச ஸௌமித்ரே ஸீதா த்வா மநுகச்சது। ப்ருஷ்டதோஹம் கமிஷ்யாமி த்வாஞ்ச ஸீதாஞ்ச பாலயந்॥ அந்யோந்யஸ்யேஹ நோ ரக்ஷா கர்த்தவ்யா புருஷர்ஷப' என்று இவ்வண்ணம் மேலே சொல்லப்படுகின்றது. அன்றி அவநேந வநம் கத்வா - பித்ரு வசன பரிபாலனத்திற்காகக்

நியமனப்படி சித்ரகூட பர்வதத்தைச் சேர்ந்து அங்கு அழகான ஒரு பர்ணசாலையைக் கட்டிக்கொண்டு தேவ கந்தர்வர்கள்போல மனோஹரமான அம்மலைச் சாரல்

காட்டுக்குச் சென்று; அல்லது அவநே-லோகரக்ஷணத்திற்காக; ராவணன் முதலிய துஷ்டர்களைக் கொன்று அவ்வழியாலே லோகங்களுக்கு நன்மை செய்யும் பொருட்டு அவர்கள் காட்டுக்குச் சென்றார்கள். அன்றி 'தேவ்ரு ஷேவநே' என்கிற தாதுவின்மேல் தேவநம் என்று ஒரே பதமாயிருக்கிறது. தேவநே-விளையாட்டாகவே; ஆயாஸமொன்று மின்றியென்பது பொருள்; அல்லது தேவநம்-வேட்டை; ஆங்காங்கு வேட்டையாடிக்கொண்டு அதில் மனஞ்செலுத்தி வருத்தமின்றிக் காடுகாடாகத் திரிந்தன ரென்பது கருத்து; அல்லது - தேவநம்-பாதசஞ்சாரம். ஸாரதியை அனுப்பின பின்பு தேரினின்று மிழிந்து கால்நடையாகவே காடுகளெங்கும் திரிந்தார்களென்பது இங்ஙனங் கருதியே மூலத்தில் 'கால்நடையாகவே நடந்துசென்று' என்று சொல்லப்பட்டது. அல்லது 'அவநே ஸஹ வநம் மத்வா-அவநமாவது காடில்லாத ப்ரதேசம். நடுவேநடுவே வெறும் புறமான வழியாகச்சென்று காட்டுக்குப்போய் என்று பொருள். அன்றி'வநே ஸஹிதம் வநம் மத்வா-ஜலத்தோடுகூடி ஸுபிக்ஷமாகிய காட்வழியாகச் சென்று மரு காந்தாரங்களிற் சென்று வருத்தப்படாமலென்பது கருத்து. வநம்-ஜலம்; 'பய: கீலால மம்ருதம் ஜீவநம் புவநம் வநம்' என்று ஜலத்தின் பெயர்களில் வனமப்தம் படிக்கப்பட்டது வஹூதகா: - பரவின ஜலத்தையுடைய; அல்லது-ஆழ்ந்த ஜலத்தையுடைய ஓடங்கொண்டு தாண்டத் தக்கவையென்பது கருத்து. நதீ: கங்கை யமுனை மந்தாகினி ஆகிய நதிகளை; மந்தாகினியாவது-சித்திரகூடத்தினருகிற் பெருகின்ற ஒரு நதி. ஸௌகரியத்துக்காக ஒரே தடவையிற் சொன்னார். 'பரத்வாஜஸ்ய மாஸநாத் சித்ரகூடமநுப்ராப்ய' ப்ரஜைகளைப் பரிக்கும் தன்மையனா யிருப்பதுபற்றி இம்முனிக்குப் பரத்வாஜனென்று பெயர். இங்ஙனம் ருக்வேதத்தில் ஆரணத்தில் 'ஏஷவை விபீ பரத்வாஜ: ப்ரஜாவை வாஜஸ் தா ஏஷ பிபர்த்தி, யத் பிபர்த்தி தஸ்மாத் பரத்வாஜ இத்யாசக்ஷதே' என்று சொல்லப்பட்டது. அன்றி வாஜம் என்றால் ரேதஸ்ஸு; அதை விடாமல் தரித்திருப்பவனாகையால் பரத்வாஜன். 'பரத்வாஜோஹ த்ரிபிராயுர்பி:

களில் லீலாரஸம் அநுபவித்துக்கொண்டு ஸுகமாக வஸித்திருந்தான்.

ராமன் இப்படியிருக்கையில் தசரத சக்ரவர்த்தி புத்ர சோகத்தால் வருத்தமுற்று 'ராம ராம' என்று அலறிக்கொண்டே ஸ்வர்க்க மடைந்தான். இவ்வாறு

ஸிரஹ்மசர்ய முவாஸ' என்று வெகுகாலம் ப்ரஹ்மசர்யத்தி லிருந்தானென்று ஸ்ருதியிற் சொல்லப்பட்டது. ஆரஜீவாஜஸ்ய ஶாஸநாத் 'சித்திரகூடத்தில் நீங்கள் இருக்கவேண்டும்; அதற்கு இது வழி என்ற நியமனத்தினால்; இது ராஜகுமாரர்களாகிய தமக்குத் தகுந்திருக்கிற 'சித்ரகூடமநு ப்ராப்ய—சித்ரகூடத்திற் சென்று; அல்லது சித்ரகூடமநுப்ராப்ய' சித்திரகூடத்தின் பின்பாகத்திற்சென்று; அற்புதமான சிகரங்களை யுடையதாகையால் அப்பர்வதத்திற்குச் சித்திரகூடமென்று பெயர். ரமமாணா:—ஸீதைக்கும் ராமனுக்கும் பூப்பறிப்பது ஜலக்ரீடை செய்வது முதலியவற்றால் சந்தோஷம் உண்டாயிற்று. லக்ஷ்மணனுக்கு அவ்விருவருக்கும் செய்கின்ற பணிவிடையால் ஸந்தோஷம் உண்டாயிற்று. த்ரயோ ரமமாணா: என்பதனால் மூவர்க்கும் ஸந்தோஷத்தை விளைவிக்குங் காரணம் பேதித்திருப்பினும் ஸந்தோஷத்தில் பேதமில்லையென்று தோன்றுகின்றது. ரமமாணா: என்ற நிகழ்காலத்தினால் இடைவிடாத ஆநந்தமென்பது தோன்றும். தேவகந்தர்வஸங்காஶா: -- தேவகந்தவர்கள் மநுஷ்யகந்தர்வர்களைக் காட்டிலும் அதிகமான ஆநந்தத்தை யுடையவர்கள். அல்லது தேவீச தேவஶ்ச தேவௌ லக்ஷ்மீ நாராயணௌ — தேவியென்பது ஸ்ரீமஹாலக்ஷ்மி. தேவன் ஸ்ரீமந்நாராயணன். இவ்விருவரும் தேவர்கள். ஹாவு யாரய நிதி கந்தர்வ' ஏதத் ஸாம காயந்நாஸ்தே' என்று சொல்லப்பட்ட ஸாமகானஞ்செய்து கொண்டிருக்கிற முக்தன் கந்தர்வன். தேவௌச கந்தர்வஶ்ச தேவகந்தர்வா: அம்மூவரும் தேவகந்தர்வர்கள். அவர்களைப்போல என்று பொருள். பரமபதத்தில் ஸ்ரீமந்நாராயணனும் அவனுடைய மஹிஷியான பெரிய பிராட்டியாரும் அவ்விருவருடைய சேர்த்தியை யநுபவிக்கிற முக்தனும் ஆகிய அம்மூவரும் ஆநந்தித்திருப்பதுபோல இம்மூவரும் ஆநந்தித்திருந்தார்களென்று கருத்து. தே ஸுகவம் யவஸந்—அவர்களாகவே ஸுகமாக வஸித்திருந்தார்கள். அதாவது அயோத்திமாநகரில்

அரசன் காலம் சென்ற பின்பு வஸிஷ்டர் முதலிய அந்த ணர்கள் பரதனை ராஜ்யாபிஷேகம் செய்து கொள்ளும் படி நியமித்தார்கள். அவன் தான் பிறருடைய ஸஹாய மின்றித் தனியாகவே ராஜ்யம் செய்ய வல்லவனுயிருந் தும் அதை அங்கீகரிக்கவில்லை. ஐம்புலன்கள் என்னும் சத்துருக்களை வென்ற அப்பரதன் ஸ்ரீராமனுடைய திரு வடிகளைப் பணிந்து அவன் அனுக்கிரகம் பெறவேண்டும் என்று அவனைத் தேடிப் புறப்பட்டு வந்தான்.

யாவரும் கொண்டாடும்படி விளங்குகின்ற பரதன் சித்திரகூடத்தைச் சேர்ந்து இயற்கையாகவே தெளிந்த மனமுடையவனும், ஸத்யத்தில் நிலை நின்றவனும், தனக்குத் தமையனுமாகிய ராமனைக் கண்டு தண்ட னிட்டு "ஸ்வாமீ! தேவரீர் மூத்த குமாரராகையால் ராஜ்யாபிஷேகஞ் செய்துகொண்டு ராஜாவாகவேண் டும். தமையன் இருக்கும்பொழுது தம்பி ராஜ்யத்துக்கு

வஸிப்பதுபோலவே அக்கானகத்திலும் ஸுகமாக வஸித்திருந்தார் கள். அல்லது, தே—எப்பொழுதும் வனத்தில் வஸிப்பவர்களாகவே; அதாவது-நகரத்திற் பிறந்து வளர்ந்தவர்களாயினும் காட்டிலேயே வெகுகாலம் வஸித்துப் பழக்கப்பட்டவர்கள்போல வஸித்திருந்தார் கள். வனவாஸத்திற் சிறிதாயினும் முகத்தில் வாட்டம் முதலியவை உண்டாகவில்லையென்பதுகருத்து. இங்குத் தேவகந்தர்வர்கள்போல என்ற உவமையினுல் எவன் தன் ஸ்வரூபத்தை உள்ளபடி யறிந்து பகவானிடத்தில் மிகுந்த ப்ரீதியுடனிருக்கிறுனே, அவனைப் பகவான் பிராட்டியுடன் வந்து திவ்ய விமானத்தில் ஏறவைத்துக் கொண்டு ஆதிவாஹிகர்களைக் கொண்டு ஸத்காரஞ் செய்வித்து விரஜையைத் தாண்டித் திவ்யலோகஞ்சென்று அங்கு மாமணிமண்டபத்தில் திவ்ய ஸிம்ஹாஸனத்தில் எழுந்தருளியிருந்து பிராட்டியுடன் அமந்தாநந் தம்பெற்று அவனுல் ஸர்வ தேச ஸர்வ கால ஸர்வா வஸ்த்தைகளிலும் ஸகலவித கைங்கர்யங்களுஞ் செய்யப்பெற்று அவனுக்குத் தன்னே டொத்த ஆநந்தத்தைக் கொடுத்து அவனுடன் காலதத்துவமுள்ள வரையிலும் கலந்திருக்கிருன் என்னும் அர்த்தம் தோற்றுகின்றது.

யோக்கியனாக மாட்டான். ஆகையால் என்னுடைய விண்ணப்பத்தை நிறைவேற்ற வேண்டும்'' என்று வணக்கத்துடன் பிரார்த்தித்தான்.

அதைக்கேட்ட ராமன் தன் குணங்களால் யாவரையும் களிக்கச் செய்பவனா யிருந்தும், தன்னைப்பற்றினாருடைய கருத்தை யெல்லாம் நிறைவேற்றும் தன்மையுள்ளவனா யிருந்தும், ஒருவன் தன்னை அடைந்து ஒன்று கேட்டால், முகமலர்ச்சி யுடையவனாயிருந்தும், தகப்பன் ஆஜ்ஞைக்குட்பட்டு ராஜ்யத்தை அங்கீகரிக்கவில்லை. ராமன் பரதனுக்குத் தமையனாதலால், அவன் இஷ்டத்தைச் செய்ய வேண்டியதாயிருந்தாலும் அதைச் செய்யாமல் தனக்குப் பிரதிநிதியாக விருந்து ராஜ்ய பரிபாலனம் செய்யத் தன் பாதுகைகளைக் கொடுத்துத் தன்னைப் பிரியமாட்டாமல் மறுக்கின்ற அந்தப் பரதனைப் பட்டணத்துக்குப் போகத் திருப்பி யனுப்பினான். பரதன் தன்னுடைய மனோரதம் நிறைவேறப்பெறாமல் ஸ்ரீராமனது பாதுகைகளை ஸேவித்துக்கொண்டும் ராமன் திரும்பி வருவதை எதிர்பார்த்துக்கொண்டும் ராமனில்லாமல் அயோத்தியில் வஸிப்பது ஸஹிக்க முடியாத துக்கமாயிருந்ததனால் அதற்கு ஸமீபமான நந்திக்கிராமத்தில் ராஜ்யம் செய்துகொண்டிருந்தான்.

* பரதன் போனபின்பு இராமன் தகப்பனாகிய சக்ரவர்த்தியின் வாக்கியத்தை நிறைவேற்றுவதால் மிகவும் ஒளிபெற்றுப் [1] பிரதிஜ்ஞைதவறாமல் ஐம்புலன்களையும்

*இங்கிருந்து ஆரண்யகாண்டம் ஆரம்பம்.

1. பரதன் வந்து, விடேனென்று நிர்ப்பந்தித்தபோதிலும். நெறிதவறாம லிருந்ததைப்பற்றி பிரதிஜ்ஞை தவறாமல் என்று சொல்லப்பட்டது. தாயும் தம்பியும் நாட்டாருடன் கூட்டம் கூடி வந்து வேண்டிக்கொண்ட பொழுதிலும் ராஜ்யத்தில் ஆசையின்றி யிருந்தமை பற்றி ஐம்புலன்களையும் வென்று' என்று சொல்லப்பட்டது.

வென்று விளங்கினான். அவன் 'நாம் இங்கிருந்தோமானால் நகரத்திலுள்ள ஜனங்கள் அடிக்கடி வரக்கூடும்' என்று ஆலோசித்தும், தண்டகாரண்யத்திலுள்ள முனிவர்கள் அபிப்பிராயத்தை அநுஸரித்தும் சித்ரகூடத்தை விட்டு, [1] ஊக்கத்துடன் தண்டகாரண்யத்தில் பிரவேசித்து அதன் காட்சியால் கண்கள் மலரப் பெற்றவனானான்.

அங்குத் தனக்கு விரோதம் செய்துகொண்டு வந்த விராதன் என்னும் ராக்ஷஸனைக் கொன்று சரபங்க மஹர்ஷியைக் கண்டு தண்டனிட்டு அவரிடம் அநுமதி பெற்று, ஸுதீக்ஷ்ணனையும் அகஸ்தியரையும் அவர் தம்பியாகிய ஸுதர்சன முனிவரையும் சென்று பணிந்தான். அகஸ்தியர் 'தனக்கு இந்திரன் கொடுத்த வில்லையும் கத்தியையும் அழிவில்லாத பாணங்களையுடைய அம்பறாத் தூணிகளையும் வாங்கிக்கொள்' என்று ராமனுக்குக் கொடுத்தான். ராமன் தன் வீரியத்துக்குத் தகுந்த ஆயுதங்கள் அகப்பட்டனவென்று ஸந்தோஷித்து அவைகளைக் கைக்கொண்டான்.

பின்பு ராமன் சரபங்கருடைய ஆஶ்ரமத்தில் வாஸம் செய்து கொண்டிருக்கும்பொழுது தண்டகவனத்தில் உள்ள ரிஷிகள் அனைவரும் தங்களுக்கு விரோதிகளான அஸுரர்களையும் ராக்ஷஸர்களையும் அழிக்கவேண்டும் என்று நினைத்தவர்களாகி ராமனை அடைந்தார்கள். ராமனும் ராக்ஷஸர்கள் குடிபுகுந்

---

1. 'ஊக்கத்துடன்' பிதாவின் வசனத்தைப் பரிபாலனஞ் செய்வதில் மிக்க ஊக்கங்கொண்டு. அல்லது விரோதிகள் நிறைந்திருக்கும் தேசமாகையால் இங்ஙனஞ் சொல்லுகிறது. தண்டகாரண்யம் – தண்டகனென்னும் அரசனது தேசமாகிய தண்டகம், சுக்ர சாபத்தினால் காடாய்விட்டதுபற்றித் தண்டகாரண்யமென்று பெயர் பெற்றது.

திருந்த அந்தத் தண்டகாரண்யத்தில் மஹர்ஷிகள் கேட்டுக் கொண்டபடி ராக்ஷஸர்களை வதம் பண்ணுவதற்கு அங்கீகரித்து அவர்களைக் கொல்வதாக அக்னிபோல ஜ்வலிக்கின்ற அந்த முனிவர்களுக்கு முன்பு பிரதிஜ்ஞையும் செய்தான்.

பிற்பாடு ராமன் தண்டகாரண்யத்தில் வசித்து வருகையில், நினைத்தபடிக்கு வடிவங்கொள்ள வல்லவளும் ஜனஸ்தானத்தில் நித்யவாஸம் செய்பவளுமான சூர்ப்பணகை என்னும் ராக்ஷஸி தனக்கு விரோதம் செய்ய வந்ததனால் அவளைக் காதையும் மூக்கையும் அறுத்துக் குரூபியாக்கினான். பின்பு சூர்ப்பணகையின் சொல்லைக் கேட்டுப் போர் செய்ய வந்த ராக்ஷஸர்களையும் அவர்களுக்குத் தலைவர்களான கரன் த்ரிசிரஸ்ஸு தூஷணன் என்றவர்களையும் அவர்களைப் பின்தொடர்ந்தவர்களையும் யுத்தம் செய்து கொன்று விட்டான்.

லங்கைப் பட்டணத்துக்கு அரசனான ராவணன் தன்னுடைய பந்துக்களான கரன் தூஷணன் முதலான ராக்ஷஸர்கள் மாண்டுபோனதைக்கேட்டுக் கோபாவேசங்கொண்டு ஸீதையை அபஹரிப்பதற்கு மாரீசன் என்னும் ராக்ஷஸனை ஸஹாயமாக வேண்டினான். மாரீசன் "ராவணா! ராமன் அளவற்ற பலமுடையவன்; அவனோடு விரோதித்துக் கொள்ளாதே. அது உனக்கு நன்மையன்று" என்று அவனை வெகுதூரம் மறுத்தான். ம்ருத்யுவால் ஏவப்பட்டவனான ராவணன் அவ்வார்த்தையை அங்கீகரிக்காமல் அவனை அழைத்துக்கொண்டு கரதூஷணாதிகளை வென்று ஜயத்தினால் விளங்கி நிற்கின்ற ஸ்ரீராமனுடைய ஆஶ்ரமத்துக்குச் சென்றான். அங்கு மாயாவியாகிய மாரீசனை ஏவ, மாரீசன் கண்டவர் ஆசை கொள்ளும்படியான ஒரு பொன்மான் வடிவம் கொண்டு

ராஜ புத்திரர்களான ராம லக்ஷ்மணர்களை வெகு தூரம் பிரிந்து போகச் செய்தான். அப்பொழுது ராவணன் ராமனை விட்டு இணைபிரியாதிருந்த ஸீதையை அபஹரித்துக் கொண்டு செல்கையில் இடையில் தடுப்பதற்கு வந்த ஜடாயுவென்னும் கழுகரசனைக் குற்றுயிராகக்கொன்று ஸீதையைத் தூக்கிக்கொண்டு லங்கைப் பட்டணம் சென்றான்.

அங்கே ராமன் மாரீசனைக் கொன்று ஆஸ்ரமத்துக்கு வந்து ஸீதையைக் காணாமல் தேடிக்கொண்டு போனான். அங்கு ராவணனால் அடியுண்டு குற்றுயிராயிருந்த ஜடாயுவைக் கண்டு ஸீதையை ராவணன் அபஹரித்துக் கொண்டு சென்றதைச் சொல்லக் கேட்டான். ஜடாயு இறந்ததும் ஸீதை அபஹரிக்கப்பட்டது மாகிய இரண்டு வருத்தங்களால் மிகவும் பரிதபித்து இந்திரியங்கள் எல்லாம் கலங்கும்படி அழுதான். பின்பு வருத்தத்துடன் ஜடாயுவுக்கு ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் செய்து அவ்வனத்தில் ஸீதையைத் தேடிக்கொண்டு போகையில் விகாரமான வடிவத்தோடு பார்க்கப் பயங்கரனா யிருந்த கபந்தன் என்னும் ராக்ஷஸனைக் கண்டான். புஜபலம் பொருந்திய ராமன் அந்தக் கபந்தனைக் கொன்று அவன் வேண்டிக்கொண்டபடி அக்கி ஸம்ஸ்காரஞ் செய்ய அவனும் ஸ்வர்க்கத்துக்குச் சென்றான். அவன் ராமனைப்பார்த்துக் [1] குரு சுஶ்ரூஷை முதலிய தர்மங்

1. 'குருசுஶ்ரூஷை முதலிய தர்மங்களைச்செய்யுந் தன்மைபொருந்தி' ஆசார்யாபிமானமாகிற சரம பர்வ நிஷ்டையில் ஊக்கமுற்றவளாய் என்பது கருத்து. அதிதிபூஜை முதலியவற்றில் மிகவும் தேர்ச்சியடைந்து, தேர்ச்சியடைதலாவது—தர்மஸூக்ஷ்ம அறிந்திருக்கை. அவள் ராமன் வரப்போகிறான் என்றுதெரிந்து அவனுக்காக நல்ல பழங்களைத் தான் புசித்துப் பரீக்ஷித்துப்பார்த்து வைத்திருந்தாளென்பது ப்ரஸித்தம்.

களைச் செய்து அதிதிபூஜை முதலியவற்றில் தேர்ச்சியடைந்து [1]துறவறத்தி லிருக்கின்ற வேடஜாதியிற் பிறந்த ஒரு பெண்பிள்ளையின் ஆஸ்ரமத்துக்குச் செல்' என்று சொல்லிப்போனான். ராமனும் அவன் சொன்னபடி சபரியிடம் சென்றான். சபரியும் தசரத சக்ரவர்த்தியின் குமாரனாகிய ராமனை மிகவும் ஆதரத்தோடு நன்றாய்ப் பூஜித்தாள்.

* பின்பு ராமன் தாமரை முதலியவைகளால் நிறைந்து அழகான பம்பை என்னும் தாமரையோடையின் கரையிற்சென்று ஸீதாதேவியை நினைந்து துயரத்தினால் பரிதபித்திருக்கையில் ஹநுமான் என்ற வானரன் அவ்விடம் வந்து ஸந்திக்க அவனுடன் கலந்து அவன் சொற்படி ஸுக்ரீவனைக் கிட்டினான். ராமன் வல்லவனாயிருந்தும் லோகரீதியை அநுஸரித்து ஸஹாயத்தை விரும்பி ஸுக்ரீவனுக்கு நடந்தவை எல்லாவற்றையும் அவற்றில் விசேஷமாக ஸீதையின் வ்ருத்தாந்தத்தையும் தெரியச் சொன்னான். ஸுக்ரீவன் தன்னோடொத்த துயரம் உள்ளவனாகிப் பலசாலியா யிருப்பவன் ஒருவன் தனக்கு ஸஹாயம் நேரிட்டதைப்பற்றி மிகவும் ஆநந்தித்து அக்நி சாக்ஷிகமாக அவனை ஸ்நேகம் செய்துகொண்டான்.

பின்பு வானரர்க் கரசனாகிய ஸுக்ரீவன் ராமனுக்குத் தன் துயரங்களை நினைத்துக் கண்ணுங் கண்ணீருமாகித் துக்கித்துக்கொண்டு வாலிக்கும் தனக்கும் நடந்த விரோதத்தைச் சொன்னான். ராமன் அதைக் கேட்டு வாலியைக் கொல்வதாகப் பிரதிஜ்ஞை பண்ணினான். சுக்ரீவன் வாலியின் பலத்தை ராமனுக்கு சொன்னான். இன்னும் அவன் வாலியின் பலத்தை ராமனுக்கு நன்றாகத் தெரியச் செய்யும் பொருட்டும் ராமன் பலத்தைத்

1. துறவறம்—ஸந்யாஸாஸ்ரமம்.

* இதுமுதல் கிஷ்கிந்தாகாண்டம் ஆரம்பம்.

தான் அறிந்துகொள்ளும் பொருட்டும் பெரிய மலைபோல உயர்ந்து கட்டுத் தளராமல் சரீர வடிவமாய்க்கிடக்கின்ற துந்துபி யென்னும் அஸுரனுடைய எலும்புக் குவியலைக் காட்டி 'இது வாலி காலால் தள்ளப்பட்டது' என்று கூறினன்.

நீண்ட புஜங்களை யுடையவனும் மிக்க பலசாலியு மாகிய ராமன் இஃது எவ்வளவென்று சிரித்துத் தன் காற் கட்டைவிரலால் பத்துயோஜனை தூரத்திற்குக் குறைவில்லாமல் சென்று விழும்படி அதை உயரத் தூக்கி யெறிந்தான். அதனாலும் ஸுக்ரீவனுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. ராமன் தன்னிடத்தில் அவனுக்கு அதிக விஸ்வாஸத்தை விளைவிக்கும் பொருட்டு ஓரம்பைத் தொடுத்து அங்கு இணைந்து ஓங்கிப் பருத்து வலிமை பெற்றிருந்த ஏழு மராமரங்களையும் பிளந்தான். ஸுக்ரீவன் மானிடரால் செய்யக்கூடாத ராமனுடைய அந்தச் செயல்களைக் கண்டு 'இவன் வாலியை வெல்ல வல்லவன்' என்று நம்பிக்கை அடைந்து கூடிய சீக்கிரத்தில் ராஜ்யத்தைப் பெறலாம் என்று நிச்சயித்துக் களிப்புற்று ராமனுடன் கூடப் புறப்பட்டுப் பர்வதங்களின் மத்தியத்தில் குகைபோல விளங்குகின்ற கிஷ்கிந்தா பட்டணம் சென்றான்.

பின்பு ஸந்தோஷத்தினால் வானரர்களில் தலைவனாகிய ஸுக்ரீவன் வெகு உத்ஸாஹத்துடன் ஸிம்ஹம்போலக் கர்ஜித்தான். வானரர்க்கு அரசனாகியவாலி முன்போலல்லாமல் கம்பீரமாய் விளங்குகின்ற அந்தப் பெருங் கர்ஜனையைக் கேட்டு அவனுடன் போர்செய்வதற்குப் புறப்பட்டு 'இன்று செல்லவேண்டாம்' என்று மறுத்த தாரைக்கும் சமாதானம் சொல்லித் தன் சகோதரனான ஸுக்ரீவனை எதிர்த்துப் போர் புரிந்தான். அப்பொ

மூது ரகு குலத்தில் பிறந்து தர்ம ஸூக்ஷ்மங்களை அறிந்த ராமன் ஸுக்ரீவனோடு சண்டைசெய்துகொண்டிருந்த வாலியின்மீது தான் ஒரு பாணத்தை எய்து அவனை முடித்து விட்டான். ஸ்நேக வாத்ஸல்யனான ராமன் ஸுக்ரீவன் வேண்டிக்கொண்டபடி யுத்தத்தில் வாலியை முடித்துக் கிஷ்கிந்தா ராஜ்யத்துக்கு ராஜாவாக அவனுக்கு அபிஷேகமும் செய்வித்தான். பிற்பாடு வானரராஜ்யம் பெற்ற ஸுக்ரீவன் வானரர்கள் அனைவரையும் வரவழைத்து ஜனகராஜன் பெண்ணாகிய ஸீதையைத் தேடும்பொருட்டு 'மைதிலியைக் கண்டு வாருங்கள்' என்று கட்டளையிட்டு நான்கு திசைகளிலும் அனுப்பினான்.

* ஸீதையைத் தேடப்போனவர்களில் பலசாலியாகிய ஹநுமான் ஸம்பாதியென்னும் கழுகின் மொழியினால் ஸீதை லங்கையில் இருப்பதாகத் தெரிந்து நூறுயோஜனை விஸ்தீர்ணமுள்ள லவண ஸமுத்ரத்தைத் தாண்டி, ராவணனால் ஆளப்பட்ட லங்கைப் பட்டணத்துக்குச் சென்றான். அங்கு அசோகவனத்தில் ராமனை இடைவிடாமல் நெஞ்சிற்கொண்டிருக்கும் ஸீதாதேவியைக் கண்டு ராமன் அடையாளமாய்க் கொடுத்த கணையாழியைக் கொடுத்தான். பின்பு ராமன் ஸுக்ரீவனோடு கலந்து நேசித்தது முதலாகிய எல்லா வ்ருத்தாந்தங்களையும் தெரியச்சொல்லி, நாயகனாகிய ராமன் சீக்கிரத்தில் இங்கு வரப்போகிறான் என்று ஸமாதானம் பண்ணிவிட்டு, அவ்வுத்யானத்தின் வெளிப்புறத்து வாசற்படியின் கோபுரத்தை இடித்துத் தள்ளினான்.

அதை யறிந்து ராவணனால் ஏவப்பட்ட ஐந்து ஸேநாதிபதிகளையும் ஏழுமந்த்ரி குமாரர்களையும் கொன்று

* இது முதல் சுந்தரகாண்டம் ஆரம்பம்.

ராவணன் புதல்வனும் மஹா வீரனுமாகிய அக்ஷன் என்பவனையும் ஸம்ஹாரம் செய்து, பின்பு இந்த்ரஜித்தி னுடைய ப்ரஹ்மாஸ்திரத்தினுற் கட்டுண்டான். ஆயினும், உடனே விடுப்படும்படி ப்ரஹ்மாவினிடத்தில் வரம்பெற்றவ னுயிருந்தும் தன்னைக்கயிற்றால் கட்டிக்கொண்டு போகும் ராக்ஷஸர்களைச் சிதறும்படி செய்யவல்ல தன் பெரிய பராக்ரமத்தை யெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்து ஸீதை இருக்கும் இடம் தவிர லங்கைப் பட்டணம் முழு மையும் தீமூட்டி விட்டு, ராமனுக்குச் சீதையைக் கண் டது முதலாகிய ப்ரியமான சங்கதிகளைச் சொல்லும் பொ ருட்டுத் திரும்பினன். அளவற்ற புத்தி பலமுடைய ஹனு மான் ஸீதையைப் பிரிந்தும் மனந் தளராதிருக்கின்ற ராமனைக் கிட்டி வலஞ்செய்து தண்டனிட்டுக் ‘கண் டேன் ஸீதையை’ என்று உள்ளபடி விண்ணப்பஞ் செய்தான்.

* ராமன் ஹநுமானுடைய சொல்லைக்கேட்ட பின்பு ஸுக்ரீவன் முதலான வானரப்படைகளுடன் மிகவும் அக ன்று ஆழ்ந்த தென் ஸமுத்ரத்தின் கரைக்குச் சென்றான். அது வழிவிடாமையினால்சூரியன்போன்ற பாணங்களினால் அந்தச் சமுத்ரத்தை அடிகாணக் கலக்கினன். அப்புறம் நதிகளுக்குத் தலைவனாகிய ஸமுத்ர ராஜன அதிகமாய்ப் பயந்து ஓடோடியும் வந்து தன்மேல் ஸேதுவைக் கட்டி அவ்வழியாகப் போகலாம் என்று சொன்னன். பின்பு ராமன் நளனைக்கொண்டு ஸமுத்திரத்தில் அணைகட்டி அவ்வழியாக லங்கைப் பட்டணத்தைச்சேர்ந்து யுத்தத் தில் ராவணனைக் கொன்றான். மானுபரணனாகிய ராமன் ‘நம் வீரத்தன்மையைக் காப்பாற்றுவதற்காகச் சத்து ருவை வென்றேமே யன்றி அயலான் வீட்டில் இருந்த

* இது முதல் யுத்தகாண்டம் ஆரம்பம்.

வளை நாம் எப்படி அங்கீகரிப்பது என்று மிகவும் வெட்க முற்றுத் தேவதைகளும் வானரர்களும் நிறைந்த ஸபையில் ஸீதையைப் பார்த்துக் கொடுமை வார்த்தைகளைச் சொல்லப் பதிவிரதையாகிய ஸீதாதேவியும் அவ்வார்த்தையைப் பொறுமல் அக்னியிற் பிரவேசித்தாள். அக்னி பகவான் அவளைக் கையிலேந்திக் கொண்டு இராமனைப் பார்த்து 'இவள் மாசற்றவள்; இவளை அங்கீகரிக்கவேண்டும்'' என்று சொல்ல அவ்வாக்கியத்தினுல் ஸீதையைத் தோஷமற்றவள் என்று அறிந்து அவளை அங்கீகரித்துக் களிப்புற்று விளங்கினுன். அது கண்டு தேவதைகள் அனைவரும் ராமனைப் பூஜித்தார்கள்.

கம்பீர ஸ்வபாவத்தையுடைய ராமன் செய்த ராவண வதமாகிற பெருஞ் செயலைக் கண்டு தேவர்களும் ரிஷிகளும் [1] ஜங்கமஸ்தாவரங்கள் அடங்கிய மூவுலகத்தில் உள்ளவர்களும் சந்தோஷமடைந்தார்கள். அப்பொழுது ராமன் விபீஷணனை லங்கையில் ராக்ஷஸர்களுக்கு அரசனுக அபிஷேகஞ்செய்வித்துத் தான் நினைத்த காரியம் நிறைவேறினது பற்றி மனக்கவலை தீர்ந்து, ஆநந்த மடைந்தான். பின்பு தேவர்கள் வரம் கொடுக்கப் பெற்று மரணமடைந்த எல்லா வானரர்களையும் எழுப்பிக் கொண்டு அன்பர்கள் புடைசூழப் புஷ்பக விமானம் ஏறி அயோத்யைக்குப் புறப்பட்டுப் போனுன்.

---

1. ஜங்கமங்களாகிய மனிதர் பசு பக்ஷி முதலானவைகளின் களிப்பு தெரியக்கூடும். ஸ்தாவரங்களாகிய மரம் முதலியவைகளின் களிப்பை அந்த க்ஷணத்தில் காரணமின்றித் தளிர் விடுவது, புஷ்பிப்பது, முதலியவைகளால் அறியலாம். ஸ்தாவரங்களுக்கு ஞானமில்லாமையால் அவைகளுக்கு ஸந்தோஷமில்லை யென்று சொல்லலாகாது. 'அந்தஸ்ஸஂஜ்ஞா பவந்த்யேதே' என்று அவைகளுக்கும் ஞானமுண்டென்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற் சொல்லப்பட்டுள்ளது.

இவ்வாறு ஸத்யத்தை நிறைவேற்றுவதில் மனவுறுதியுடைய ராமன் பாத்வாஜாஶ்ரமத்துக்குச் சென்று, தான் வருவதைப் பரதனிடஞ் சொல்லும்படி ஹநுமானை அனுப்பினான். பிற்பாடு ராமன் ஸுக்ரீவன் முதலானவர்களோடு மீளவும் புஷ்பக விமானமேறி முன்பு நடந்த கதைகளைச் சொல்லிக்கொண்ட வண்ணமே நந்திக்கிராமத்தை அடைந்தான். தகப்பனாருடைய வாக்கியத்தை நிறைவேற்றிப் பரதனுடைய வ்யஸனத்தையும் தீர்த்து நந்திக்கிராமத்தினின்றும் அயோத்யைக்கு வந்து சகோதரர்களுடன் ஜடையைக் களைந்துவிட்டு நன்றாக அலங்கரித்துக்கொண்டு திவ்ய ஸிம்ஹாஸனத்தில் ஸீதையோடு பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு ராஜ்யத்தை அடைந்து நீதியாய்ப் பரிபாலித்து வந்தான்.

ராமன் ராஜ்யபரிபாலனம் செய்யும்பொழுது ஸகல ஜனங்களும் இஷ்டங்களைப் பெற்றுச் சந்தோஷ மடைந்தார்கள். அவர்கள் முன்பு ராமனைப் பிரிந்து இளைத்திருந்தமை தீர்ந்து அவனுடைய ஸேவையைப் பெற்றுத் தேகம் பருத்துக் களிப்புற்று விளங்கினார்கள். பின்னும் உலகத்திலுள்ள ஜனங்கள் தாங்கள் செய்யும் செயல்களை யெல்லாம் ராமபக்தியை முன்னிட்டுச் செய்துகொண்டு ராமனுடைய நன்மையின்பொருட்டுத் தேவதா நமஸ்காரம் முதலானவைகளைக் குறைவில்லாமல் நடத்திவந்தார்கள். மனவருத்தம் இல்லாமலும் சரீரசம்பந்தமான வியாதிகள் இல்லாமலும் க்ஷாமம் முதலான பயங்கள் இல்லாமலும் சுகமாக வாழ்ந்து வந்தார்

1. 'ப்ராப்தராஜ்யஸ்ய ராமஸ்ய வால்மீகிர்ப₄க₃வாந்ருஷி:। சகார சரிதங்க்ருத்ஸ்நம் விசித்ரபத₃மாத்மவாந்' என்று ராவணனைக்கொன்று ராமன் ராஜ்யமாளுங் காலத்திலேயே வால்மீகி முனிவர் ராமாயணத்தைச் செய்ததாகத் தெரிவதனால் ராஜ்யத்திலிருக்கும் ப்ரஜைகளின் க்ஷேமங்களை நேரில் கண்டது போலச் சொல்லியிருக்கிறார்.

கள். ராமன் ராஜ்ய பரிபாலனத்தில் ப்ரஜைகள் யாவரும் தீர்க்காயுஸ்ஸோடு கூடிய புத்திரர்களை அடைந்தார்கள். [2]பெண்கள் சுமங்கலிகளாகவேயிருந்து தங்கள் கணவன்மார்களைப் பின்பற்றினார்கள். அக்னி பயம் என்பது கொஞ்சமும் உண்டாகாமல், இருந்தது. ப்ராணிகளில் ஒன்றாவது துர்மரணமாகச் சாவதில்லை. [3] ஜலத்தினாலும் காற்றினாலும் ஜ்வரத்தினாலும் பசியினாலும் திருடர்களாலும் உண்டாகின்ற பயம் ஸ்வல்பமாகவாவது நேரிட்டது கிடையாது. நாடுநகரங்களில் எப்பொழுதும் தனதான்யங்கள் நிறைந்திருந்தது. கிருத யுகத்தைப்போலவே ஜனங்கள் அனைவரும் அதிகமாய்க் களித்திருந்தார்கள்.

---

2. ஸ்த்ரீகள் கணவனோடு ஸஹமரணஞ் செய்வார்களென்றும், அப்படிச் செய்யாமல் பிழைத்திருந்தாலும் பர்த்தாவின் அம்சமாகிய பிள்ளை உண்டாயிருப்பதனால் விதவைகள் அன்றென்றும் இதனால் கௌஸல்யை முதலானவர்களுக்கு ராமன் முதலான பிள்ளைகளிருப்பதனாலும் வயஸ்ஸு சென்றவர்களாகையாலும் விதவைகள் அன்றென்பதும் கருத்து. இவ்வர்த்தமானது 'கௌஸல்யாதயஸ்து புத்ரவத்தயா லுஜ்யதயாவா நவியவா இதிஹாவ.' என்று கோவிந்தராஜீய வியாக்யானத்திற் சொல்லப்பட்டுள்ளது. அன்றி விவியா யவா யாஸாம் தா வியவாம் வ்யபிசாரிண்யஃ என்கிற வ்யுத்பத்தியைக் கொண்டு விதவைகளென்றால் வியபிசார முடையவர்கள். அவர்கள் அப்படியாகாமல் இருப்பவர்களென்பது பொருள். வியபிசாரமில்லாவிடினும் சிலர் கணவனிடத்தில் ப்ரீதியில்லாமல் இருப்பதுண்டு; கணவன் மார்களைப் பின் பற்றுவார்கள் என்பதனால் அன்போடு விளங்கினார்கள் என்பது பெறப்படுகின்றது.

3. அக்நி ஜலம் காற்று இவைகளாலுண்டாகும் பயம் ஆதிதைவிகம்; அதாவது தைவத்தால் வருவது. ஜ்வரம் முதலியவைகளால் வரும் பயம் ஆத்யாத்மிகம்; அதாவது சரீரத்தால் வருவது. திருடர் முதலானவர்களால் வரும் பயம் ஆதிபௌதிகம். அதாவது ஜந்துக்களால் வருவது. இதைத் தாபத்ரயம் என்பார்கள். இந்த மூன்றும் ராம இராஜ்யத்தில் இல்லாமலிருந்ததென்பது பொருள்.

பெருங் கீர்த்திபெற்ற ராமன் அநேகம் அஸ்வமேத யாகங்களையும் கணக்கில்லாத ஸுவர்ணகமென்னும் யாகங்களையும் செய்து அந்தணர்களுக்குக் கோடிகோடி யாகக் கோதானங்களையும் தனங்களையும் அளவில்லாமல் கொடுத்து வைகுந்தம் அடையப் போகிறான். இவ்வுல கத்தில் ராமன் ராஜ வம்சங்களை நூறுபங்கு அதிக மாக நிலைநிறுத்தப்போகிறான். இப்படி உலகத்தில் தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ணிப் பதினோராயிரம் வருஷம் ப்ரஜை களின் மனம் கோணாமல் ராஜ்ய பரிபாலனம் செய்து ப்ரம்ஹலோகத்தை அடையப்போகிறான். ஸ்ரீராமனுடைய இந்தச் சரித்திரமானது வேதங்களோடு ஒத்துத் தன்னை ஆதரிப்பவர்களைப் பாவனம் செய்து அவர்கள் பாவங்க ளைப் போக்கி அதிகமான நன்மைகளை உண்டுபண்ணும். ராம சரித்திரத்தைப் படிக்கிறவன், பஞ்சமகா பாபங்க ளில் நின்றும் விடுபடுவான். வாழ்நாட்களை வளரச்செய் கின்ற பாலராமாயணம் என்னும் இந்த இதிஹாஸத் தைப் படிப்பவன் பிள்ளைகளோடும் பெயரன்மார்களோ டும் மற்றும் தன்னைச் சேர்ந்தவர்களோடும் கூடியிருந்து சரீரம் விட்டபின்பு ஸ்வர்க்கம் சென்று அங்குள்ளவர்க ளால் பூஜிக்கப்படுவான். ப்ராம்ஹணன் இந்த இதிகாசத் தைப் படித்தால் வேதம் வேதாங்கம் முதலிய கல்விகளிற் சிறப்படைவான். க்ஷத்திரியன் படித்தால் சக்ரவர்த்தியா வான். வைஸ்யன் படித்தால் வியாபார லாபத்தைப் பெறு வான். சூத்திரன் படித்தால் தன் இனத்தில் மேன்மை பெற்று விளங்குவான்.

முதல் ஸர்க்கம் முற்றிற்று.

இரண்டாவது ஸர்க்கம்

பிரமன் வால்மீகிக்கு அநுக்கிரகித்தது.

[1] தர்மத்தில் மனஞ்சென்ற வால்மீகி முனிவர் நாரதருடைய மொழியைக் கேட்டு வாக்கியங்களின் உட்கருத்தை அறிய வல்லவராகையால் சிஷ்யர்களுடன் கூடி நாரதரைப் பலவாறு புகழ்ந்தார். தேவரிஷியாகிய அந்த நாரதர் வால்மீகியினுல் தக்கபடி பூஜிக்கப்பட்டுப் 'போய் வருகிறேன்' என்று விடை பெற்றுக்கொண்டு ஆகாயத்திற் சென்ருர். பின்பு வால்மீகி முனிவர் மத்யான்னத்திற் செய்யவேண்டிய ஸ்நானத்தின் பொருட்டுக் கங்கைக்கு அருகிலுள்ள தமஸாநதியின் கரைக்குச் சென்ருர். அங்குச் சேறில்லாமல் தெளிந்திருக்கின்ற ஒரு நீர்த்துறையைக் கண்டு பக்கத்தில் நிற்கும் பரத்வாஜனென்னும் சிஷ்யனைப் பார்த்து ஓ பரத்வாஜனே! இந்தத் துறையில் ஸத்துக்களின் மனம்போல ஜலம் தெளிந்து சேறில்லாமல் நிறைந்து அழகாயிருக்கின்றது. கமண்டலத்தைக் கீழே வைத்து மரவுரியைக் கொடு! கங்

1. தயாநிதியாகிய வால்மீகி இஷ்டம்ஹி விதுஷாம் லோகே ஸமாஸவ்யா ஸயாரணம்' என்று ஒரு விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லுவதும், பின்பு அதைப் பரக்கச் சொல்லுவதும் கற்றவர்களுக்கு விருப்பம் என்றபடி கீழே சுருக்கமாய்ச் சொன்ன ராமசரித்திரத்தைப் பரக்கச் சொல்லவேண்டுமென்று கருதிப் பார்க்கின்றவர்களுக்குப் புத்தி செல்லும்பொருட்டு வக்தாவின் வைலக்ஷண்யத்தையும் விஷயத்தின் வைலக்ஷண்யத்தையும் எடுத்துக் காட்ட உத்தேசித்து இந்த ஸர்க்கத்தினுல் வக்தாவின் வைலக்ஷண்யத்தைச் சொல்கிருர். வக்தாவின் வைலக்ஷண்யமாவது - ஆப்தனுயிருப்பது; பொருள்களை உள்ளபடி யறிந்து தான் அறிந்தபடி சொல்லுவது; ப்ரஹ்மாவின் வரப்பிரஸாதத்தினுல்வந்தமேன்மை முதலாயின.

கைக்கு மேலாகிய இந்தத்தமஸைத் துறையில் நான் ஸ்நானம் செய்யப் போகிறேன்' என்று சொன்னார். குருபக்தியில் மிகுந்த பரத்வாஜன் வால்மீகியின் மரவுரியைக் கொடுத்தான். அவர் அதை வாங்கிக்கொண்டு, ஐம்புலன்களையும் வென்றவராயிருந்தும் பரந்திருக்கிற அந்நதியின் கரையிலுள்ள சோலையை[1]விதிவசத்தினால் நாற்புறமும் பார்த்துக்கொண்டு உலாவினார். சாபாநுக்கிரகம் செய்யும் சாமர்த்தியம் பொருந்திய அம்முனிவர் அவ்வனத்தில் அந்தத் துறையின் அருகில் ஆணும் பெண்ணுமாகிய இரண்டு க்ரௌஞ்சப் பறவைகள் ஒன்றோடொன்று பிரியாமல் ஸுகித்துக் கலகலவென்று அழகாகச் சப்தித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அப்பொழுது அங்கே ஒரு வேடன் வந்தான். அவன் மிருகங்களையும் பக்ஷிகளையும் கொன்று பிழைக்கும் தன்மையை உடையவனாகையால் அவற்றின்மீது இயற்கையாகவே வைரங்கொண்ட மனமுள்ளவனாயிருந்தான். அவன் அந்தப் பக்ஷிகள் இரண்டும் சுகித்துக்கொண்டிருப்பதைக் கண்டு கொஞ்சமும் இரக்கமில்லாமல் வால்மீகிமுனிவர் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அவற்றில் ஆண்பக்ஷியை அடித்தான். உடனே அந்தப்பறவை பூமியில் விழுந்து உடம்பில் உதி

---

1. ஐம்புலன்களையும் வென்றவனாகையால் இவன் அவ்வனத்தின் அழகைப் பார்க்கப்போனான் என்பது பொருந்தமாட்டாது. அதனால் தான் தெய்வத்தினால் ஏவுண்டு சென்றானென்கிறது. இங்கு ஸ்நாநஞ் செய்யத்தக்க துறையைத் தேடும்பொருட்டுத் திரிந்தானென்று சொல்கிறார்கள். 'அகர்தமமிதம் தீர்த்தம் பரத்வாஜ நிசாமய। ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸன்மனுஷ்யமனோ யதா' என்றும் 'இதமேவாவகாஹிஷ்யே தமஸாதீர்த்த முத்தமம்' என்றும் சொல்வதனால் அந்தப் பொருள் பொருந்தமாட்டாது. தீர்த்தம் என்பதற்கு நதியின் ஜலஸமுதாயத்தைச் சொல்லுவோமென்றால் 'அகர்தமமிதம் தீர்த்தம்' என்றிருப்பதனால் மாறுபடுகின்றது.

ரம் பெருகப் புரண்டு வருத்தப்பட்டது. அதைக் கண்ட பெண் பறவையானது சிவந்த சிகையோடும் உயர்ந்த இறகுகளோடும் அழகிய நிறத்தோடும் கூடித் தன்னைத் தழுவியிருந்த சேவலுக்கு நேரிட்ட துக்கத்தைக் கண்டு அதனை பிரிவை ஆற்ற மாட்டாமல் கேட்பவர் மனம் கரையும்படி கூவி யழுதது. அத்தனரும் தர்ம சிந்தையுள்ளவரும் கருணை மிகுந்தவருமான வால்மீகி முனிவருக்கு அதைப் பார்த்ததும் இரக்க முண்டாயிற்று. அவர் சேவலின் பிரிவால் மனவருத்தங்கொண்டு கூக்குரலிடுகின்ற பெண் பறவையைக் கண்டு மனமிரங்கி யிருந்தபடியினால் ஒன்றை ஒன்று தழுவியிருக்கும் சமயத்தில் அடிப்பது தர்மம் அல்லவென்று சிந்தித்து.—

'பாக்கியமற்ற வேடனே! காமவேட்கையினால் மெய்ம் மறந்திருந்த க்ரௌஞ்சப் பறவைகளில் சேவலைக்கொன்று விட்டதனால் அநேகம் வருஷங்கள் வரையில் வாழ்வற்றிருப்பாயாக'

என்று சொன்னார்.

நான் முகனருளால் வால்மீகியின் வாக்கில் முதலிலுண்டான

1 'மாநிஷாத ப்ரதிஷ்டாம் த்வ மகமஶ் ஶாஶ்வதீஸ் ஸமா:।
யத்க்ரௌஞ்ச மிதுநாதேக மவதீ: காம மோஹிதம்'

இந்த ஶ்லோகம் வேடனைச் சபித்தது மாத்திரத்திலே முடியத்தக்கதன்று. இதனால் ஸ்ரீராமாவதாரஞ்செய்த பகவானுக்குப் பல்லாண்டு பாடுகிறானென்று கூறுவார்கள். எப்படியென்றால் நிஷீதந்தி அஸ்மிந்நிதி நிஷாத:; நிஷாதஶப்தம் இருப்பிடத்தையும், மாஶப்தம் லக்ஷ்மியையும் சொல்லுமாகையால் 'மாயா: நிஷாத: மாநிஷாத:' என்கிற விதத்தினால் ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு இருப்பிடமானவனே! யத் எதனால், க்ரௌஞ்சமிதுநாத், ராக்ஷஸஜாதியான ராவணன் மண்டோதரியென்னும் இவ்விரட்டையிலிருந்து, காமமோஹிதம், காமவிகாரங்கொண்ட ஏகம், ஒன்றாகிய ராவணனை, அவதீ:, கொன்றாய்; அதனால் த்வம், நீ ஶாஶ்வதீ: ஸமா:, பல்லாண்டுகள், ப்ரதிஷ்டாமகம:, நிலைபெற்றிருப்



38. வால்மீகி க்ரௌஞ்சப் பறவையை அடித்த
வேடனைச் சபித்தல்.

பாயாக என்று பொருள் படுகின்றது. இப்படி இந்த ஶ்லோகத்தினால் இஷ்டதேவதைக்கு மங்களம் சொல்லப்பட்டது. மேலும், இதில் ராமாயணத்தின் கதைமுழுவதும் இருக்கின்றது. அதுவருமாறு:—மாநிஷாத லக்ஷ்மிக்கிருப்பிடமானவனே என்பதனால் ராமன் ஸீதையை மணம்புரிந்த பாலகாண்டத்தின் கதையும், த்வம் ப்ரதிஷ்டாம் அகம: என்றும் நீ நிலைபெற்றிருப்பாய் என்பதனால் ராமன் பிதாவின் வாக்யத்தைப் பரிபாலிப்பதற்கு வனம்சென்று நிலைபெற்றமையைச் சொல்லுகிற அயோத்யாகாண்டத்தின் கதையும், க்ரௌஞ்சமிதுனாதேகம் அவதீ: 'க்ருஞ்ச ரதிகௌடில்யால்பீ பாவயோ:' என்கிற தாதுவில் உண்டான க்ரௌஞ்ச ஶப்தம் கோணலாய் நடக்கும் குரங்குகளைச் சொல்லுமாகையால் தாரை வாலியென்கிற விரட்டையிலொன்றாகிய ஸுக்ரீவபத்னியின் மீது காமங்கொண்ட வாலியைக் கொன்றாய் என்று கிஷ்கிந்தா காண்டத்தின் கதையும், க்ரௌஞ்சமிதுனா தேகவதீ: காமமோஹிதம்; க்ரௌஞ்ச ஶப்தம் அல்பீபாவத்தையும் சொல்லுமாகையால் ஒருவருக்கொருவர் பிரிந்திருப்பதனால் மிகவும் இளைத்து உருமாய்ந்திருந்த ஸீதை ராமனென்கிற இரட்டையிலொன்றாகிய ராமனிடத்தில் மனஞ்சென்று மெய்ம்மறந்திருக்கும் ஸீதையை வதத்துக்கொப்பான ஹிம்ஸையைச் செய்தாயென்று ஸீதையின் துக்கத்தைச் சொல்லுகிற ஸுந்தரகாண்டத்தின் கதையும் சொல்லப்பட்டது. இனி வேறு சிலர் (நிதராம் ஸாதயதி பீடயதி இதி நிஷாத:) நிஷாத ஶப்தம் மூன்று லோகங்களையும் மிதமின்றி நடுங்கச்செய்யும் ராவணனைச் சொல்லுகிறது; ஓ ராவணனே! (க்ரௌஞ்சமிதுனாத்) ராஜ்யத்தை விட்டு வனவாஸஞ் செய்வதால் மிகவும் இளைத்து அல்பமென்னும்படியான ஸீதை ராமனென்கிற இரட்டையிலிருந்து, காமமோஹிதம் ஏகம் ராமனிடத்தில் மனஞ்சென்று மெய்ம்மறந்திருந்த ஒன்றாகிய ஸீதையை, (பதஅவதீ: தத்) கொன்றாயென்னும்படி அநேக விதமான பீடைகளைச் செய்தாயாதலால், (த்வம் ஶாஶ்வதீ: ஸமா: ப்ரதிஷ்டாம் மா அகம:) நீ கங்கையிற் பிள்ளையும் பெயரனுமாகக் களித்து வாழும்படி நான்முகக்கடவுள் கொடுத்த நிலையை இனி அடையமாட்டாய் என்று சொல்கிறார்கள். இதில் ராவணனை முன்னிலைப்படுத்திச் சொல்வது பொருந்தமாட்டாது ராவணனைக் கொன்று ராமன் அயோத்திக்குச் சென்று ராஜ்யத்தைப் பரிபாலனம் செய்யும் காலத்தில் நாரதனைக்

கேட்டதாகத் தானே வால்மீகி சொல்கிறபடியினல் அதற்குப் பின் பிறந்த இந்த ஶ்லோகத்துக்கு ராவணனை முன்னிலையாக்கி எதிர்காலமாகச் சொல்கிற இந்தப்பொருள் பொருந்தாது. வால்மீகிக்கு இவ்வாறு கருத்திருக்குமானல் நான் இப்பறவையைப் பார்த்துச் சோகித்துச்சொன்ன இது என்னுப் முடிந்தது' என்று தன்னில் தானே சிந்தித்திருக்கமாட்டார். ஆனல், வாக்யமோ வ்ருத்தமோவென்று சிந்தித்தானென்று சொல்லவும் முடியாது. ஏனென்றல் 'தஷப்யேஷ ஶ்லோகோ உஷிதஃ மருதஃ பரிவேஷ்டாரோ மருத்தஸ்யாஸவஸ்க்ருஹே'என்று இவ்விதமாக வேதங்கள் இருப்பதனல் இங்ஙனம் சந்தேகிப்பது ரிஷிகளுக்கு அடுத்ததன்று. இவர் ஶ்லோகத்தையே அறியாரானல் நாரதர் மொழிந்த ஶ்லோகங்களைக் கேட்டபோது சந்தேகமுண்டாயிருக்கவேண்டும். நாரதர் சொன்னது வாக்யமேயொழிய ஶ்லோகங்கள் அல்லவென்பது ஊஹமேயல்லாமல் ப்ரமாணமாய்ச் சொல்வதற்கில்லை..மேலும் ப்ரஹ்மா வந்து உபதேசித்தபின்பு தான் வால்மீகிக்கு இந்தக் காவ்யம் செய்யவேண்டுமென்கிற எண்ணம் பிறந்ததே யொழிய அதற்கு முன்பு கிடையாது. ஆகையினல் இந்த ஶ்லோகத்தில் காவ்யத்திற் சொல்லப்படும் பொருள்களையெல்லாம் உரைக்கவேண்டும் என்பது வேண்டியதில்லை. ஆகையினல் இதற்குண்மையான கருத்து இதுவே யாகவேண்டும். என்னவென்றல், வால்மீகி நாரதரிடம் ராமகுணங்களைக் கேட்டபின்பு அக்குணங்களை அவர் பிரபந்தமாகச் செய்ய உத்தேசிக்கப் பகவானன ராமன் இதை அறிந்து தன் சரித்ரம் கருணாரஸமயமாயிருப்பதனல் அதை மிகவும் காருண்யமுள்ள மனமுடையவனே செய்யவேண்டுமென்று நினைத்து வால்மீகியின் கருணையைத் தெரிந்துகொள்வதற்காகவும், தனக்கு முன்பு ப்ருகு மஹர்ஷினல் வந்த சாபத்தை வால்மீகியால் இரட்டித்துக்கொள்வதற்காகவும் தானே வேடனகி வந்து அம்முனிவர் பார்த்துக்கொண்டிருக்கையில் க்ரௌஞ்சப் பறவையின் வடிவங்கொண்ட ராக்ஷஸனை யடித்தான். அப்பொழுது வால்மீகி புத்தி பூர்வகமாகவும் அந்தர்யாமியான பகவானுடைய ஏவுதல் மூலமாகவும் வேடன்மிகவும் அதர்மம் செய்தான் என்று கோபம்கொண்டு அப்படிச் சபித்தார். ஆகையினல் ஶ்லோகத்தின் பொருள் 'வேடனே! காமவேட்கைகொண்ட க்ரௌஞ்சப் பறவையின் இரட்டையிலிருந்து ஒன்றைக் கொன்றுயாகையால், நீ பிழைத்திருக்கும் நாளில் அநேகமாண்டுகள் மனைவி

யுடன் சேர்ந்து சுகித்திருக்கும் இருப்பை அடையமாட்டாய்' என்பது தான். க்ரௌஞ்சப் பறவை ராக்ஷஸனாவது எப்படியென்றால், பிரமனிடத்தில் ராமவிருத்தாந்தங்களெல்லாம் அறியும்படி வரம்பெற்றபின்பு செய்த 'தஸ்மாத்து மிதுநாதேகம்' என்கிற ஸ்லோகத்தில் 'வைரநிலய:' என்கிற பதத்தால் ராக்ஷஸனென்பது நிச்சயம். பகவானுக்கு ராக்ஷஸர்களின் பேரில் விரோதம் உண்டென்பது பிரஸித்தம். ஸாதாரணமான வேடனுக்கு ஜந்துக்களின் மீது வைரம் கிடையாது. ஆனால்,ஆகாரத்தின் பொருட்டுப் பக்ஷிகளையும் மிருகங்களையும் கொல்வது இயற்கை. ஆகையினால் கேவலம் க்ரௌஞ்சத்தின்பேரில் கேவலம் வேடனாயிருப்பவனுக்கு'வைரநிலய:' என்று சொல்வது ஒவ்வாது. க்ரௌஞ்சப் பறவையை ராக்ஷஸனாகவும் வேடனை ராமனாகவுங் கொள்வது அமையும். இவ்விஷயத்தையே பாத்ம புராணத்தில் சிவனுக்கும் பார்வதிக்கும் உண்டான ஸம்வாதத்தில் 'ஆஹூய லக்ஷ்மணம் ப்ராஹ ராமோ ராஜீவலோசந:। ஸ்ருணுமே வசநம் ஸௌம்ய ஸீதாஸந்த்யாக காரணம்। வால்மீகிநாபி ஸப்தோஸ்மி கிலலக்ஷ்மண। தஸ்மாதேநாம் த்யஜாம்யத்ய ஜநோ நைவாத்ர காரணம்' என்று சீதையை விட்டதற்கு ப்ருகுவும் வால்மீகியும் சபித்ததே காரணம்; ஜநாபவாதம் காரணமன்றென்று சொல்லப்பட்டுள்ளது. இப்படியே ஸ்காந்த புராணத்திலும் பாதாளகண்டத்தில் 'ஸாபோக்த்யா ஹ்ருதி ஸந்தப்தம் ப்ராசேதஸ மகல்மஷம்। ப்ரோவாச வசநம் ப்ரஹ்மா தத்ராகத்ய ஸுஸத்க்ருத:। நநிஷாதஸ்ஸவை ராமோ ம்ருகயாஞ் சர்த்து மாகத:। தஸ்ய ஸம்வர்ணநேநைவ ஸுஸ்லோகஸ்த்வம் பவிஷ்யஸி। இத்யுக்த்வா தம்ஜகாமாஸு ப்ரஹ்மலோகம் ஸநாதநம்। ததஸ்ஸம்வர்ணயாமாஸ ராகவம் க்ரந்தகோடிபி:' என்று வேடனைச் சபித்ததனால் சபித்துக்கொண்டிருக்கும் வால்மீகிக்கு ப்ரஹ்மா வந்து அவ்வேடன் ராமனே யென்று தெரிவித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் இந்தப் பொருள் தான் சரிபானதென்று கண்டு கொள்க. சிலர் ப்ரபந்தத்தின் ஆரம்பத்தில் சபித்தான் என்பது கூடாதென்று ஹிதமுரைத்ததாக வேறொருபொருள் கூறுவர்கள். அதுவருமாறு:—வேடனே! நீ அநேகமாண்டுகள் நிலைபெற்று நின்றாய்; அதாவது உனக்கு மிகவும் வயதாயிற்று. ஆனாலும் காமமோஹம் கொண்ட க்ரௌஞ்சப் பறவையின் இரட்டையில் ஒன்றாகிய சேவலை யடித்தாயென்பது இனிமேல் வேண்டாம். இவ்விதமான வ்யாபாரம் செய்யாதிருப்பாயாக."

பிற்பாடு அந்த மகாமுனிவர் 'பறவைக்காக வருந்தி நான் சொன்ன சொல் என்னவாகமுடிந்தது' என்று ஆச்சரியத்தினால் எண்ணமிடத்தொடங்கினார். அவர் தன் பக்கத்தில்இருந்த சிஷ்யனைப்பார்த்துப் பரத்வாஜனே! நான் பக்ஷியைக் கண்டு வருந்திச் சொன்னது நாலடியுள்ளதும் ஒவ்வோரடிகளுக்கும் இருக்கவேண்டிய எழுத்துக்கள்சரியாக அமையப்பெற்றதும் வீணையில்அமைத்துஇசையுடன் பாடக்கூடியதுமான ஒரு[1] ஸ்லோகமாகவேண்டும்'' என்று சொன்னார். பரத்வாஜன் "ஆம், இது மிகவும் நன்றாக அமைந்திருக்கிறது'' என்று ஸந்தோஷத்துடன் சொல்லி ராமாயணத்தின் பொருள் நிறைந்த அந்த ஸ்லோகத்தை மனனம் செய்யத் தொடங்கினான். பின்பு முனிவர் தன் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு அந்த வாக்கியத்தை நினைந்த வண்ணமே ஆஸ்ரமம் போய்ச் சேர்ந்தார். பரத்வாஜனும் அந்த ஸ்லோகத்தை மறவாமல் ஜல கலசத்தை எடுத்துக்கொண்டு முனிவரைப் பின்பற்றினான். தர்மங்களையறிந்த வால்மீகி முனிவர் தன் ஆஸ்ரமத்தில் தேவ பூஜாதிகளை முடித்துக்கொண்டு புண்யகதைகளைப் பாராயணம் பண்ணத் தொடங்கினார். அப்பொழுது கூடப் பறவையைப் பற்றிச் சொன்ன வாக்கியமானது அவர் மனத்தைவிட்டு அகலவில்லை.

அந்த சமயத்தில் நான்கு வேதங்களையும் ஒரேகாலத்தில் ஓதும்படியான நான்கு முகங்களைப் பெற்றவரும் உல

---

1. இங்கு 'ஶ்லோகோ பவது நாந்யதா' என்பது மூலம். இதில் ஶ்லோக ஶப்தம் 'பத்யே யஶஸி ச ஶ்லோகஃ' என்கிற நிகண்டுவின் படி கீர்த்தியைச் சொல்லுவதாகக்கொண்டு சோகித்துச் சபித்தது அநுசிதமே யாயினும் எனக்கிது கீர்த்தியை விளைவிப்பதாக வேண்டுமேயன்றி அகீர்த்தியைத் தருவதாகக் கூடாதென்று பொருள் என்பது சிலர் அபிப்ராயம்.

கங்களைப் படைப்பதற்குப் பிரபுவாகியவரும் மகிமை பொருந்தியவருமான ப்ரஹ்ம தேவனுனவர் நாரதர் தன்னிடம்வந்து புகழ்ந்து சொல்லிய அந்த வால்மீகியைப் பார்ப்பதற்கு அங்கு வந்து சேர்ந்தார். முனிவர் ஆசனத்தை விட்டு எழுந்து நின்று ஆச்சரியத்துடன் கையைக் கூப்பிக்கொண்டு [1]சாஸ்திரங்களிற் சொல்லிய விதிப்படி அவரை நமஸ்கரித்து உயர்ந்த ஆஸனத்தில் உட்காரவைத்து, க்ஷேமம் விசாரித்துப் பூஜை செய்தார். பிரமதேவர் மஹர்ஷியாகிய வால்மீகி முனிவரையும் உட்காரும்படி கட்டளையிட்டார். முனிவர் தமஸா நதிக்கரையில் க்ரௌஞ்சப்பறவையின் நிமித்தம் தான்சொன்ன வைராக்கியத்தை மனத்தில் நினைத்து அதை உலகங்களுக்குப் பிதாமகனுகிய பிரமதேவன் எதிரில் சொன்னுர். அதற்கு நான் முகக்கடவுள் சிரித்துக்கொண்டு வால்மீகியை நோக்கி, "முனிவரே நீர் சொன்னது ஶ்லோகம்தான். அதில் சந்தேகமில்லை. ராமாயணத்தைப் பூலோகத்தில் வெளியிடவேண்டுமென்று நான் ஸங்கற்பித்ததுபற்றி அந்த ஶ்லோகரூபமான சரஸ்வதி உன்னிடமிருந்து வெளியாயிற்று. நீர் ஸ்ரீராம சரித்திரம் எல்லாவற்றையும் இத்தன்மையான ஶ்லோகங்கள் நிரம்பிய ப்ரபந்தமாகச் செய்யவேண்டும். [2]ஒப்பில்லாத குணம் நிறைந்து சிறந்த மதியுடையவனுப் தீரத்தன்மை பொருந்தித் தருமத்தில்

---

1. நமஸ்காரஞ் செய்வதில் விதியாவது 'மநோவாக்காயை யஹிமாநேந ஸஹஸ்ய யாத்லே! கூர்மவச்சதுர꞉ பாதாஞ் ஶிரஸ்தத்ரைவ பஞ்சமம்! ப்ரதக்ஷிண ஸமேதேந ஹ்யேவ ரூபேண ஸர்வதா! அஷ்டாங்கேந நமஸ்க்ருத்வா ஹ்யபவிஶ்யா ஶீரதோர்சரோ꞉' என்று சொல்லப்பட்டுள்ளது.

2. இங்குச் சொல்லுகிற குணங்களால் கதாநாயகன் மிகவும் மேன்மை பெற்றவனென்பது தோன்றும். நாயகன் குணங்களால் கதைக்குப் பெருமை உண்டாகின்றது. செய்யுள் நடை கம்பீரமின்றி

கிலேத்த ஸ்ரீராமனுடைய சரித்திரத்தை நீர் நாரதரிடம் கேட்டபடி சுருக்கமாய்ச் சொல்லும். சிறந்தமதியுள்ள ராமனுடையவும் லக்ஷ்மணனுடையவும் ராக்ஷஸர்களுடையவும் ஸீதாதேவியுடையவும் பரதன் முதலானவர்களுடையவுமாகிய ரஹஸ்யமும் பிரகாசமுமான எல்லா விருத்தாந்தங்களும் உமக்குத் தெரியவரும். நீர் செய்யப்போகிற காவ்யத்தில் உம்முடைய வாக்கு ஒன்றுவது பொய்க்கமாட்டாது. அற்பமானபதம்கூடப் பிரயோஜனமுள்ளதாயிருக்கும். ஆகையால் பாபங்களை போக்கிப் பாவனமாக்கவல்லதும் கேட்பதற்கு இனியதுமாகிய ஸ்ரீராம சரித்திரத்தை நீர் ஒரு பிரபந்தமாகச் செய்யும். பூமியில் மலைகளும் நதிகளும் இருக்கும் வரையில் ராமாயண கதை உலகத்தில் பரவியிருக்கும். உம் ராமாயணம் உலகத்தில் இருக்கும் வரையில் நீர் இந்தச் சரீரம் விட்ட பின்பு உலோகங்களுக்கெல்லாம் தலைமையான என்னுடைய லோகத்தில் வந்து வஸிக்கப்போகிறீர்' என்று சொல்லி மறைந்தார்.

பின்பு வால்மீகியின் சிஷ்யர்கள் அனைவரும் அந்த ஶ்லோகத்தைத் திரும்பவும் பாடினார்கள். அவர்கள் ஆ! ஆ! என்ன [1]அற்புதமான ஶ்லோகம் அமைந்திருக்கின்ற

யிருப்பினும் குணம் பொருந்திய நாயகனைப்பற்றி யிருக்குமானல் கற்றவர்களும் செவிகொடுத்து ஆநந்திப்பார்கள். 'கவேரல்பாபி வாசீ வ்ருத்திர்விதீ வத்கர்ணவதம்ஸதி। நாயகோ யதி வர்ண்யேத லோகோத்தர ஃணோத்தரஃ' என்று இங்ஙனம் போஜராஜன் புகழ்ந்திருக்கிறான். நாயகனுவது-ப்ரபந்தத்தில் முக்யமாகச் சொல்லப்படுகின்றவன். அவன் குணங்களாவன 'மஹாகுலீநதௌஜ்ஜ வல்யம் மஹாஹாநீய முதாரதா। தேஜஸ்விதா விதக்ீயத்வம் யார்மிகத்வாதயோபிச' என்று உரைக்கப்பட்டவை.

1. இங்கு 'ஶ்லோஶ் ஶ்லோகத்வமாகதஃ' என்பது மூலம். 'ஶ்லோக்ரு ஸங்காதே' என்கிற தாதுவின் பேரில் (ஶ்லோக்யதே இதி

தென்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு ஆச்சரியப்பட்டுக் களித்தார்கள். பிற்பாடு வால்மீகிமுனிவர் பரம புருஷனை த்யானம் செய்து கொண்டு ராமாயணமென்கிற மகா காவ்யத்தை முழுவதும் செய்யவேண்டும் என்று எண்ணங் கொண்டார். அவர் கம்பீரமாகி ரஸம் பொழிகின்ற பதங்களும் எழுத்துக்கள் வித்தியாசப்படாமல் ஒன்றேடொன்று சரியாய் அமைந்திருக்கின்ற அடிகளும் கேட்பதற்கு இனிமையாய் உயர்ந்த பொருள் கொண்டு விளங்குகின்ற ஸ்லோகங்களும் பொருந்திப் பெருங் கீர்த்தி பெற்ற ராம சரித்ரத்தைச் சொல்வதாகிய ராமாயணமென்னும் காவ்யத்தைப் பிசகில்லாமல் முழுவதும் சரியாய்ச் செய்து முடித்தார். இந்த மகா காவ்யமானது லக்ஷண சாஸ்திரத்துக்குக் கொஞ்சமும் வித்தியாசம் இல்லாமல், தெளிவான வாக்கியங்கள் நிறைந்து எல்லா அழகும் கொண்டு விளங்குகின்றது. வால்மீகி முனிவர் இந்த மகா காவ்யத்தைச் செய்து பரத்வாஜன் முதலான தன் சிஷ்யர்களுக்கு முதலில் படித்துக் காட்டினர்.

ஸ்லோகஃ என்று வரும். 'ஶோகஃ ஸ்லோகத்வமாகதஃ' என்றும் பாடமுண்டு. முந்தின பாடத்தில் ச்லோகத்தின் லக்ஷணம் அமைந்திருப்பதால் ஸ்லோகமென்னப்பட்டது. சிஷ்யர்களால் அடிக்கடி கொண்டாடப்பட்டமையால் மீளவும் ஸ்லோகமென்று பெயர் பெற்றது. ஆகவே ஸ்லோகசப்தம் பதங்களைச் சேர்த்துச் சொல்வதும் புகழ்வதுமாகிய இரண்டு பொருளையும் சொல்லும். ஆனல் 'ஸ்லோகரு ஸங்காதே' என்று பதங்களைச் சேர்த்தலை மாத்திரம் பொருளாகச் சொல்லிற்றேயென்றால் 'யாதூநாமநேக கார்யத்வம்' என்று தாதுக்களில் ஒன்றுக்கே அநேகம் பொருள் உண்டென்கிற ந்யாயத்தைக் கொண்டு இங்ஙனம் சொல்லவேண்டும். அனதுபற்றி 'பஜ்யே யஶஸிச ஸ்லோகஃ' என்று அமரஸிம்ஹன் ஸ்லோகசப்தம் கீர்த்தியையுஞ்சொல்லுமென்று சொன்னன். கீர்த்தியென்பது குணங்களைப்பற்றி வந்த புகழ். மற்றொரு பாடத்தில் 'ப்ராஹ—ஸ்சஹ ரு ஶவிஸ்மிதாஃ என்று கீழோடு சேர்க்கவேண்டும். இதற்கு மஹர்ஷி சோகித்த பின்பு சொன்ன கதையால் அந்தச் சோகம் உள்ளே யடங்காமல் ஸ்லோகமாக வெளிவந்ததென்று சிஷ்யர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். என்பது பொருள்.

மூன்றுவது ஸர்க்கம்.

ஸ்ரீராமாயண விஷய ஸங்க்ரஹம்.

[1] தர்மத்தில் மனஞ்சென்ற வால்மீகி முனிவர் தர்மம் நிறைந்த ராமசரித்ரம் முழுவதையும் நாரதரிடம் கேட்டு அவற்றை நன்றாக அறியும்பொருட்டு ஆலோசனை செய்தார். அவர் ஆசமனம் செய்து கிழக்கு நுனியாகப் பரப்பின தர்ப்பத்தில் உட்கார்ந்து தன் குருவாகிய நாரதருக்கு நமஸ்காரஞ் செய்து நான்முகன் கொடுத்த வரத்தினுல் ராமன் முதலானவர்களுடைய விருத்தாந்தங்களை ஆராயத் தொடங்கினுர். அவர் முதலில் லக்ஷ்மணன், ஸீதை, தசரத சக்ரவர்த்தி, அவன் பத்னிகளான கௌஸல்யை, ஸுமித்ரை, கைகேயி, பட்டணத்தில் உள்ள ஜனங்கள் முதலானவர்களுடைய விருத்தாந்தங்களை யெல்லாம் உள்ளபடி நன்றாய்க் கண்டறிந்து கொண்டார்.

ராகவன் முதலானவர்கள் சிரித்தவை சொன்னவை நடந்தவை முதலான எல்லாச் செயல்களையும் வரத்தின் மகிமையினுல் உள்ளபடி அறிந்தார்.

தர்மத்திற் சென்ற மனத்தையுடைய அவ்வால்மீகி முனிவர் ராமன் முதலானவர்களுடைய நடந்த சரித்ரங்களையும் நடக்கின்ற சரித்ரங்களையும் நடக்க விருக்கின்ற சரித்ரங்களையும் கனவிற் காண்பது போலல்லாமல்

---

1. கீழ் ஸர்க்கத்தில வக்தாவின் வைலக்ஷண்யஞ் சொல்லப்பட்டது. இதில் விஷயத்தின் வைலக்ஷண்யம் சொல்லப்படுகின்றது. விஷய விலக்ஷணமாவது - நல்லறிவுடன் கேட்டு மறவாமலிருப்பதும் உயர்ந்தகுணமுடைய நாயகனைப் பற்றியிருப்பதுமாகும். இதில் முதலில் கேட்டமையும் மறப்பின்மையும் சொல்லப்படுகின்றது.

கையில் விளங்குகின்ற நெல்லிக் கனிபோல நன்றாய்க் கண்டறிந்து காவ்யத்தைச் செய்யத் தொடங்கினார்.

இந்த இராமயணமென்னும் மகாகாவியமானது காமம் அர்த்தம் என்கிற இரண்டு புருஷார்த்தங்களை அப்ரதானமாய்க் கொடுத்துத் தர்மம் மோக்ஷம் என்கிற இரண்டு புருஷார்த்தங்களையும் ப்ரதானமாய்க் கொடுக்கக்கூடியது. இது ரத்னங்கள் நிறைந்த கடல் போன்றது. சப்தங்களின் அழகால் எல்லாருடைய செவிக்கும் இனிமையைக் கொடுப்பது. பொருளின் இனிமையால் அனைவருடைய மனத்தையும் கவரவல்லது. வால்மீகி நாரதரிடத்தில் தான் கேட்டபடி ரகுவம்சத்தில் பிறந்த ஸ்ரீராமன் சரித்திரத்தை முதலில்சுருக்கமாய்ச் செய்தார்.

பின்பு தசரத சக்ரவர்த்தி பதினாயிரம் வருஷங்கள் பிள்ளைப்பேறில்லாமல் தவஞ்செய்ய, அந்தத் தவத்துக்குப் பிரதிபலனாக ஸ்ரீமகாவிஷ்ணு தானாய் வந்து அவதரித்த ஸ்ரீராமனுடைய அவதார வைபவமும், தாடகை முதலானவர்களைக்கொன்ற அவன் வீரத்தன்மையும், அவன் பால்ய விளையாடல்களும், அவன் பொறுமையும், அவன் ஒப்புயர்வற்ற அழகும், அவன் ஸத்யம் தவறாமையும், ராமனும் லக்ஷ்மணனும் விஸ்வாமித்ர முனிவருடன் செல்லும்பொழுது நடந்த பல அற்புதமான சரித்திரங்களும், அவன் தாடகை முதலியவர்களைக் கொன்ற வீரத்தன்மையும், அவன் சிவன் வில்லை முரித்த பராக்ரமமும், ஸீதை ஊர்மிளை முதலானவர்களுடைய விவாகமும், ராமனுக்கும் பரசுராமனுக்கும் நடந்த விவாதமும், ராமனுடைய குணங்களும், அவன் பட்டாபிஷேகத் தொடக்கமும், கைகேயின் கொடுமையும், அதனால் இராமனுடைய பட்டாபிஷேகம் தடைபட்டமையும், ராமனைக் காட்டுக்குப் போக்கினமையும், தசரத சக்ரவர்த்தியின் சோக

மும், அவன் பரலோகஞ்சென்றமையும், ஜனங்களின் வருத்தமும், ராமன் குஹனோடு கலந்து ஸ்நேகித்தமையும், ஸுமந்த்ரன் என்னும் ஸாரதி பட்டணத்துக்குத் திரும்பி வந்தமையும், அவர்கள் கங்கையைத் தாண்டினமையும், பரத்வாஜ மஹர்ஷியைக் கண்டமையும், சித்ரகூடத்தில் இருந்தமையும், பின்பு பரதன் வந்தமையும், அவன் பிரார்த்தித்தமையும், தசரதசக்ரவர்த்திக்கு ராமன் தர்ப்பணம் செய்தமையும், பாதுகா பட்டாபிஷேகமும், பரதன் நந்தி க்ராமத்தில் குடிபுகுந்தமையும், இராமன் தண்டகாரண்யம் சென்றமையும், விராதனைக் கொன்றமையும், சரபங்கமஹர்ஷியின் தரிசனமும், ஸுதீக்ஷ்ணனைச்சந்தித்தமையும், அநஸூயை ஸீதைக்குச் சந்தனம்கொடுத்தமையும், [1]அகஸ்திய முனிவரைக் கண்டமையும், ஜடாயுவைச் சேர்ந்தமையும், பஞ்சவடிக்குப் போனமையும், சூர்ப்பணகையின் வரவும் அவளை அங்கப்பழுது செய்தமையும், கரன் தூஷணன் த்ரிசிரன் என்ற அரக்கர்களின் வதமும், ராவணன் ஸீதையை அபகரிக்க வந்தமையும், மாரீசனைக் கொன்றமையும், ஸீதையின் அபஹரணமும், ராமன் ஸீதையைக் காணுமற் புலம்பினமையும், ராவணன் ஜடாயுவைக் கொன்றமையும் கபந்தனைக் கண்டமையும், சபரியைக் கண்ணுற்றமையும், பம்பைக் கரையில் அநுமானைக் கண்டு சுக்ரீவனை ஸ்நேகம் செய்தமையும், அவனுக்கு நம்பிக்கையை உண்டாக்கினமையும், ஸுக்ரீவன் வாலிக்கும் தனக்கும் உண்டான வைரத்தை ராமனிடத்தில் சொன்

---

1. இந்த ஸர்க்கத்தில் ராமாயணத்தின்விஷயங்களைச் சொல்வதில் தாத்பர்யமே யன்றிக் கதையின் க்ரமத்தில் தாத்பர்யமில்லை. ஆனதுபற்றியே அகஸ்த்யனைக் கண்டதும் என்று மேலே சொல்லி, அநஸூயை ஸீதைக்குச் சந்தனம் கொடுத்ததும் என்று முன்னமே சொல்லப்பட்டுள்ளது.

னமையும்,வாலி சுக்ரீவர்களின் யுத்தமும்,ராமன் வாலியை வதஞ் செய்தமையும், ஸுக்ரீவனுக்குக் கிஷ்கிந்தா ராஜ்யாபிஷேகமும், தாரையின் புலம்பலும், மழை காலத்தில் இரவும் பகலும் ராமன் ருஸ்யமுகத்தில் ஸீதையைப் பிரிந்து வஸித்தமையும்,ராமன் ஸுக்ரீவனைக் கோபித்தமையும்,வானரப்படை திரண்டு வந்தமையும், சுக்ரீவன் வானரர்களுக்குப்பூமியின் நிலைமையைத்தெரிவித்தமையும்,ராமன் ஹநுமானிடம் மோதிரங்கொடுத்து அனுப்பினமையும்,ஜாம்பவான் ஸ்வயம்பிரபையின் குகையைக்கண்டமையும்,வானரர்கள் ஸீதையைக் காணாமல் ப்ராயோபவேசஞ் செய்யத் தொடங்கினமையும், அவர்கள் ஸம்பாதியைக் கண்டமையும், ஹநுமான் கடலைத் தாண்டுவதற்கு மலய பருவதத்தில் ஏறினமையும், கடலைக்கடந்தமையும், ஸமுத்ர ராஜன் வார்த்தையினால்மேலேயெழுந்துவந்த மைநாக பர்வதத்தைக் கண்டமையும், ஸிம்ஹிகையைக் கொன்றமையும், லங்கையிலுள்ள [1] மலயமென்கிற மலையைக் கண்டமையும், அநுமான் இரவில் லங்கையில் நுழைந்தமையும், பின்பு அவன் அங்குத் தனியே யிருந்து சிந்தித்தமையும்,ராவணனைக் கண்டமையும், புஷ்பகவிமானத்தைப் பார்த்தமையும், பானசாலைக்குச் சென்றமையும், அந்தப்புரத்தைப் பார்த்தமையும், அசோகவனத்திற் சென்றமையும், ஸீதையைக் கண்டமையும், ராமன் அடையாளமான கணையாழியைக் கொடுத்தமையும், ராவணனைக் கண்டமையும், ராக்ஷஸப்பெண்கள் ஸீதையைப் பயப்படுத்தினமையும், த்ரிஜடை யென்பவள் ஸ்வப்னங் கண்டமையும், ஹநுமானுக்குச் ஸீதைசூடாமணி கொடுத்தமையும்,

1. இம்மலயம் லங்கைக்கு ஆதாரமான மலையினோர்பாகம். கடலைக் கடக்கும்பொழுது ஹநுமான் ஏறிய மலயம் வேறு. 'மலய:பர்வதாந்தரே' பர்வதாம்ஸே' என்று நிகண்டுவிற் சொல்லப்பட்டது.

அசோகவனத்திலுள்ள வ்ருக்ஷங்களை ஹநுமான் முரித்தமையும், ராக்ஷஸிகள் பயந்தோடினமையும், ஹநுமான் ராவணனனுப்பின படர்களைக் கொன்றமையும், இந்த்ரஜித்தால் ஹநுமான் கட்டப்பட்டமையும், ஹநுமான் லங்கையைக் கொளுத்தி ராக்ஷஸிகளை யழச்செய்தமையும், திரும்பவும் சமுத்திரத்தைத் தாண்டினமையும் மதுவனத்தை அழித்தமையும், ராமனுக்குத் தேறுதல் சொல்லிச் சூடாமணியைக் கொடுத்தமையும், இராமன் சமுத்திரராஜனோடு ஸந்தித்தமையும், விபீஷணனுக்கு அபயங் கொடுத்தமையும், நளனைகொண்டு கடலில் அணைகட்டினமையும. சமுத்திரத்தைக் கடந்து இராத்திரியில் லங்கைப்பட்டணத்தை முற்றுகையிட்டமையும், விபீஷணன் இந்த்ரஜித்து முதானவர்களைக் கொல்ல உபாயஞ் சொன்னமையும் கும்பகர்ணனைக் கொன்றமையும் மேகநாதனை முடித்தமையும், ராவணனை வதஞ் செய்தமையும், ஸீதையைப் பெற்றமையும், விபீஷணனுக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்தமையும் புஷ்பக விமானத்தில் ஏறி அனைவரும் அயோத்திக்குச் சென்றமையும், பரதனைக் கலந்தமையும், ராமன் பட்டாபிஷேகமும், ராமன் ப்ரஜைகளைச் சந்தோஷிக்கச் செய்தமையும் ஆகிய எல்லாச்சரித்திரங்களையும் இந்த மகா காவியத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறார். அந்த முனிவர் ராமனது எதிர்கால சரித்ரமான [1] சிறியபாகத்தையும் உத்தர காண்டத்தில் சொல்லி முடித்தார்.

மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

---

1. சிறிய பாகம என்ற படியினால் ஸீதையைக் காட்டில் விடுவதற்கு முந்திபகாலம் அதிகமென்றும பிந்தியகாலம சிறியதென்றும் தோன்றுவதைக் காணலாம். அதை உத்தரகாண்டத்தில் கண்டுகொள்க.

குசலவர்கள் ராமாயணத்தைக் கானஞ் செய்தது.

[1] நான்முகனிடம் வரம் பெற்றவரான வால்மீகி முனிவர் ராமன் ராஜாவாகி உலகத்தை ஆண்டு வருங்காலத்தில் அவனுடைய சரித்ரம் முழுவதும் அற்புதமான பதங்களும் அலங்காரங்களும் ரஸங்களும் நிறைந்த ஒரு ப்ரபந்தமாகச் செய்தார். அவர்தான் ராமாயணத்தை இருபத்து நான்காயிரம் ஶ்லோகங்களும் ஐந்நூறு ஸர்க்கங்களும் ஆறு காண்டங்களுமாகச் செய்து ஏழாவதாகிய உத்தர காண்டத்தையும் கடைசியில் சொல்லி முடித்தார். உத்தர காண்டம் என்பது ராம பட்டாபிஷேகத்துக்குப் பிற்பாடு நடந்த சரித்திரம். இங்ஙனம் ராமாயணத்தை எல்லா அழகும் விளங்கச் செய்து முடித்த வால்மீகி முனிவர் அதை முடியப்பாட வல்லவர் யார்?' என்று சிந்தித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது முனிவேஷங் கொண்ட குசலவர்கள் என்ற அரச குமாரர்கள் அவர் திருவடிகளைப் பணிந்து "மகாமுனிவரே! தாங்கள் அருளிச் செய்திருக்கின்ற ராமாயணத்தை நாங்கள் இருவரும் கற்பதற்கு ஆசைப்படுகிறோம்; அநுக்கிரகம் பண்ணவேண்டும்;" என்று பிரார்த்தித்தார்கள்.

அவ்விருவரும் குரு சுஶ்ரூஷையை நன்றாய்த் தெரிந்தவர்கள், விடாமுயற்சியுள்ளவர்கள் கல்வியில் கீர்த்தி பெற்றவர்கள். இருவரும் சகோதரர்கள். இனிமையான சாரீர சம்பத்தைப் பொருந்தியவர்கள். ஆஶ்ரம வாசம்

---

1. கீழ் ஸர்க்கத்தில் விஷயத்தின் வைலக்ஷண்யஞ் சொல்லப் பட்டது. இங்கு ப்ரபந்தத்தின் வைலக்ஷண்யஞ் சொல்லப்படுகிறது. ப்ரபந்த வைலக்ஷண்யமாவது-மிகவும் ஆப்தனாற்செய்யப் பட்டமையும், புண்ய புருஷனைப்பற்றி யுள்ளமையும் பெரியோர்கள் ஆதரித்திருக்கின்றமையும், ப்ரபந்தாயகனாற் புகழப்பட்டிருக்கின்றமையும் முதலியன.

செய்பவர்கள். வேதங்களைக் கரை கண்டவர்கள். சிக்ஷை முதலான ஆறு அங்கங்களையும் நன்றாய்த்தெரிந்தவர்கள். [1]அப்படிப்பட்ட அந்தச் சிறுவர்கள் வால்மீகி முனிவர் ப்ரீதிக்குப் பாத்ரமானார்கள். பின்பு ஸாந்தபனம் பராகம் சாந்த்ராயணம் முதலான வ்ரதங்களைச் செய்து மாசற்று விளங்குகின்ற மதியையுடைய வால்மீகி முனிவர் ராம சரித்திரத்தைச் சொல்வதனால் ராமாயணம் என்றும் ராவண ஸம்ஹாரத்தை விஷயமாய்க் கொண்டதனால் ராவணவதமென்றும் பெயர்கொண்ட சீதையின் சிறப்புள்ள சரித்திரத்தையே பெரும்பாலும் தெரிவிப்பதாகிய தான் செய்த மகா காவ்யத்தை அரசகுமாரர்களான

---

1. இதனால் ராமன் அபிஷேகங்கொண்டு ராஜ்ய பரிபாலனஞ் செய்துகொண்டிருக்கையில் நிறைவேறின இந்தக் காவ்யத்தை உபதேசம் பெறத்தக்க சிஷ்யர்கள் இலாமையினால் முனிவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில் பின்பு சில நாள் கழித்துக் குசலவர்கள் பிறந்ததாகத் தோன்றுகின்றது. இதையறிந்து தான் ராமன் வால்மீகியினாச்ரமத்தில் ஸீதையை விட்டதாகவும் தெரிய வருகிறது.

2. இதில் முக்யமாய் ஸீதையின் வ்ருத்தாந்தமே சொல்லப்படும். ராமசரிதம் முக்யமன்று. இதற்கு ஒரு பழமொழியுமுண்டு அதாவது 'ப்ராதர்த்யூதப்ரஸங்கேந மத்யாஹ்நே ஸ்த்ரீப்ரஸங்கத꞉। ராத்ரௌ சோரப்ரஸங்கேந காலோ கச்சதி தீமதாம்' என்பது. இங்கு ஸ்த்ரீ ப்ரஸங்கமாவது ராமாயண பாராயணம். ஸீதையின் சரித்ரத்தைக் கூறுவதைப்பற்றி இங்ஙனம் சொல்லுகின்றது. இல்லாவிட்டால் தன் புகழ்ச்சியில் மனஞ் செல்லாதிருக்குந் தன்மையனும் தீரோதாத்தனுமாகிய ராமன் இதைக் குசலவர்கள் பாடச் சபையிலிருந்து கேட்டான் என்பது பொருந்தமாட்டாது. சீதையின் வ்ருத்தாந்தத்தைச் சொல்வது என்பது தான் பொருத்தமுள்ளதாகும். நாயகியைப் பிரிந்திருப்பவன் அவளது கதையைக் கேட்டுப் பொழுதுபோக்குவது வெளிப்படை. ஆகையினால் ராமன் ராவணனைக்கொன்றானென்று மேல்வாரியாய்க் காட்டிச் சீதையின் சரித்ரத்தையே முழுவதும் உட்கருத்தாக வைத்து வால்மீகி ப்ரபந்தத்தைச் செய்தார் என்பது தான் பொருள்.

அந்தக் குசலவர்களுக்கு உபதேசம்பண்ணினர். அவர்கள் அதை நன்ருய்த் தெரிந்துகொண்டு [1] மூன்று அளவுகளும் [2] ஏழு ஸ்வரங்களும் பொருந்திய சங்கீதத்தோடு வீணையில் அமைத்து ஸ்ருங்காரம் கருணம் ஹாஸ்யம் வீரம் பயாநகம் [3] ரௌத்ரம் குர்ச்சம் சாந்தம் அத்புதம் என்ற ஒன்பது ரஸங்களும் அவ்வவ்விடங்களில் வெளிப்படும் வண்ணம் அழகாய்ப் பாடத் தொடங்கினர்கள்.

அவர்கள் சங்கீத சாஸ்திரத்தின் நுட்பங்களை அறிந்தவர்கள்; வீணை முதலான வாத்யங்களில் தேர்ந்தவர்கள்; கடினமாகவும் மெதுவாகவும் நடுத்தரமாகவும் உச்சரிக்கவேண்டிய இடங்களை நன்ருய்த் தெரிந்தவர்கள். இருவரும் சகோதரர்களானபடியினல் வித்தியாசம் அறியமுடியாத குரலை யுடையவர்கள்; அழகுள்ள சாரீரம் அமையப்பெற்று மானிடவேஷம் பூண்ட கந்தர்வர்களைப்போல விளங்குகின்றவர்கள். தாங்கள் பாடுகின்ற பாட்டுக்கிணங்க அபிநயிக்கும்படியான நாடக லக்ஷணத்தை நன்ருக அறிந்தவர்கள்; அவர்கள் இன்பமாய்ப் பேசவல்லவர்கள்; ராமன் வடிவத்தினின்றும் கடைந்தெடுக்கப்பட்ட ப்ரதிபிம்பம் போன்றவர்கள்; கம்பீரமான தோற்றமுள்ளவர்கள்; அவர்கள் அந்தக் காவ்

1. இங்கு மூன்று அளவுகளாவன—பாட்டின் ஒலியை எடுத்துக் காட்டுகிற, த்ர்யஸ்ரம் என்றும் சதுரஸ்ரம் என்றும் மிஸ்ரம் என்றும் பேர்பெற்ற அளவைகள். அல்லது த்ருதம் மத்யம் விலம்பிதம் என்றும் கொள்ளலாம்.

2. ஏழுஸ்வரங்களாவன—ஷட்ஜம் மத்யம் காந்தாரம் நிஷாதம் ருஷபம் தைவதம் பஞ்சமம் என்பன.

3. இதில் ராவணவதம் முக்யமாகையினல் வீரரஸம் முக்யமென்று சிலர் கூறுவர். சீதையின் சரித்ரம் முக்யமாகையாலும் ராவணனைக் கொன்றது சீதையைப் பெறுவதன் பொருட்டாகையாலும் ஸ்ருங்காரரஸம் முக்யமென்று சிலர் சொல்லுவார்கள்.

யத்தை அடி முதல் முடிவு வரையில் ஒரு அக்ஷரமும் பிச கில்லாமல் முனிவர் உபதேசித்தபடி ரிஷிகளும் அந்தணர் களும் நிறைந்த ஸபைகள்தோறுஞ்சென்றுபாடிக்கொண் டிருந்தார்கள். ஒருசமயத்தில் ராமன்அயோத்திக்கு அரு காமையிலுள்ள ஸரயூநதிக் கரையில் அஸ்வமேத யாகம் செய்துகொண்டிருந்தான். அப்பொழுது முனிவர்வேஷம் கொண்டகுசலவர்கள் அந்தயாகசாலையை அடைந்துஹோ மம் முடிந்து உட்கார்ந்திருக்கின்ற மஹர்ஷிகளின் எதி ரில் தாங்கள் கற்றிருந்த ராமாயணத்தைப் பாடினார்கள்.

அதைக்கேட்ட முனிவர்கள் அதிக ஆச்சரிய மடைந்து 'மிகவும் நன்று யிருக்கின்றது; மிகவும் நன்று யிருக்கின்றது' என்று அவ்விருவரையும் புகழ்ந்து கொ ண்டாடினார்கள். அந்த முனிவர்கள் பொறுமையில்லாத வர்கள். தருமத்தில் விருப்பமுள்ளவர்கள். ஒருவனிடத் தில் உள்ள உண்மையான குணத்தைப் புகழ்கின்றவர் கள். அவர்கள் குசலவர்கள் பாடினதைக்கேட்டுக் களிப் புற்றுப் 'பாட்டின் இனிமை அற்புதமா யிருக்கின்றது. ஸ்லோகங்களின் இனிமை அதைக்காட்டிலும் அற்புதமா யிருக்கின்றது. இது வெகு நாளைக்கு முன்பு நடந்தவற் றை யெல்லாம் இப்பொழுது எதிரில் நடப்பனபோல விளக்கிக் காட்டுகின்றது' என்று கொண்டாடினார்கள்.

அவர்களிற் சிலர் கவியின் கருத்து யாவர்க்கும்வெளி யாகும்படி நன்றாய்ப் பாடினார்கள் என்று சொன்னார்கள். சிலர் கொஞ்சமும் தாளம் பிசகாமல் ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களை அறிந்து இராகங்களை ஆலாபித்துக் கேட்ப தற்கு இனிமையா யிருக்கும்படி பாடினார்கள் என்று கூறி னார்கள். இன்னுஞ் சிலர் இவர்கள் சாரீர சம்பத்தை நன் றாய்ப் பொருந்தி யிருக்கிறார்கள் என்று புகழ்ந்தார்கள். வேறு சிலர் வீணையின் ஸ்வரத்துக்கும் குரலுக்கும்

கொஞ்சமும் வித்தியாசம் தெரியவில்லை என்று கூறினர்கள். பின்னுஞ் சிலர்தொண்டைவீங்குதல் வயிறுபருத்தல் தலையாடல் முகங் கோணல் முதலான குற்றங்கள் கலக்காமல் சுத்தமாய்ப் பாடினர்கள் என்று புகழ்ந்தார்கள்.

அவர்கள் பாட்டைக் கேட்டுக் களிப்படைந்த ஒரு முனிவர் எழுந்திருந்து ஒரு கலசத்தை அவர்களுக்கு வெகுமதியாகக் கொடுத்தார். ஸங்கீதத்தில் கீர்த்தி பெற்ற மற்றொரு முனிவர் மனக்களிப்புற்று மாவுரியை ஈந்தார். வேறொரு முனிவர் மான்றோலையும், ஒருவர் மௌஞ்சியையும், ஒருவர் கமண்டலுவையும், ஒருவர் யஜ்ஞோபவீதத்தையும், ஒருவர் ஆஸனத்தையும், ஒருவர் ஜபமாலையையும் கொடுத்தார்கள். சில மஹர்ஷிகள் மனக்களிப்புற்று நீங்கள் வெகுகாலம் வாழ்ந்திருக்கக்கடவது என்று ஆசீர்வாதஞ் செய்தார்கள்.

அங்கிருந்த ஜனங்கள் அனைவரும் 'வால்மீகிமுனிவரால் செய்யப்பட்டு இதிஹாஸம் என்றபெயரை யடைந்து கவிகளுக்கெல்லாம் மூலாதாரமா யிருக்கின்ற இந்தக்காவ்யமானது மிகவும் நன்றாய் முடிந்திருக்கின்றது. சங்கீதமறிந்த சிறுவர்களே! ஸ்ருதிகள் அமைந்து செவிக்கு இனிமையாயிருக்கின்ற இந்தக் காவ்யத்தை நீங்கள் நன்றாய்ப் பாடினீர்கள்; நீங்கள் வெகுகாலம் வரையில் உலகத்தில் வாழ்ந்திருங்கள்' என்று யாகசாலையிலும் தெருக்களிலும் ராஜமார்க்கங்களிலும் புகழ்ந்து சொன்னர்கள்.

இங்ஙனம் பலராலும் புகழப்பட்டு விளங்குகின்ற அந்தக் குசலவர்களை ஒருசமயத்தில் பரதன் ராமனுக்குக் காண்பித்தான். கருணைக்குறைவிடமாகிய ராமன் ஒரே வயதும் ஒரே வடிவமுங்கொண்டு கல்வியின் சிறப்பினுல் அனைவராலும் அதிகமாய்ப் புகழப்படுகின்ற அந்தக் குசலவர்களைத் தன் அரண்மனைக்கு வரவழைத்து மரி

யாதை செய்தான். அஸ்வமேத யாகத்தின் பொருட்டுத் தீக்ஷைகொண்டிருக்கின்ற ராமன் ஒருநாள் புரஜனங்களும் மந்த்ரிகளும் சகோதரர்களும் தன்னைச் சூழ்ந்திருக்க இரத்தின ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்து "அன்புள்ள சகோதரர்களே! அறிவில் மிகுந்த மந்த்ரிமார்களே! கந்தர்வர்கள் போல விளங்கும் இந்தச் சிறுவர்கள் பாடுகின்ற இதிகாசத்தைக் கேளுங்கள்! அற்புதமான பொருள்களும் ஆழ்ந்த கருத்துக்களும் நிறைந்திருக்கின்றன" என்று சொல்லி அந்தச் சிறுவர்களைப் பாடுவதற்குக் கட்டளை யிட்டான்.

உடனே குசலவர்கள் வீணையை ஸ்ருதி கூட்டி இராகங்களைக் கம்பீரமாக ஆலாபனம் பண்ணிப் பொருள் விளங்கும்படி ராமாயணத்தைச் செவிக்கு இனிமையாய்ப் பாடினார்கள். அந்தப் பாட்டானது எல்லாருடைய உடலையும் மயிர்க் கூச்செறியச் செய்து விட்டது. அனைவருடைய மனங்களும் ஆநந்தத்தில் அமிழ்ந்தின. அப்பொழுது ராமன் சபையிலுள்ளவர்களைப் பார்த்து "இந்தச் சிறுவர்களிடத்தில் ராஜலக்ஷணங்கள் விளங்குகின்றன. இந்தக் காவ்யம் ஸீதையின் சரித்ரத்தை நன்றாய்த் தெரிவிக்கின்றது. வால்மீகி முனிவரால் செய்யப்பட்டது. உயர்ந்த பொருள்களையும் கம்பீரமான நோக்கத்தையும் கொண்டு விளங்குகின்றது" என்று சொன்னான். குசலவர்கள் மார்க்கம் என்ற ராகத்தை ஆலாபித்து ராமாயணத்தைப் பாடினார்கள். ராமன் ஸீதையின் கதையாகையினால் [1]மெள்ள மெள்ள நகர்ந்து சபை நடுவில் வந்து அன்புடன் கேட்கத் தொடங்கினான். நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

---

1. மெள்ளமெள்ள என்பதனால் ஸிம்ஹாஸனத்தினின்று எழுந்திராமலே நகர்ந்துவந்தானென்பது கருத்து. எழுந்திருப்பானால்



56. ஸ்ரீராமனது ஸபையில் குசலவர்கள் ராமாயண
கானஞ்செய்தல்.

அயோத்யையின் வர்ணனை.

இந்தச் சரித்திரம் ஒப்புயர்வற்றது. இது உலகத்தை ஒரு குடையில் ஆண்டு வந்த மநுப்பிரஜாபதி முதலாகிய சக்ரவர்த்திகளின் வம்ச ஸம்பந்தமான சரித்திரம்.

அங்குள்ள அனைவரும் எழுந்திருப்பார்கள். அப்பொழுது ரஸ பங்கம் வரும். அதுபற்றி யாவருமறியாமல் மெள்ளமெள்ள நகர்ந்து வந்தானென்று சொல்லப்பட்டது. அல்லது 'ஏகஸ்வாது ந பூஞ்ஜீத' என்று மதுரமான வஸ்துவை ஒருவனுகப் புசிக்கலாகாது என்பதனுல் பலஜனங்கள் நிறைந்த ஸபையில் இருந்தானுயினும் ஸிம்ஹாஸனத்தில் தனியே வீற்றிருந்தானுகையால் தன்னைத் தனியனுக நினைத்துத் தானும் ஸபையின் நடுவில் ஜனங்களோடு கலந்து அம்மதுரமான கதையைக்கேட்டு அநுபவிக்க விரும்பினுன் என்றும்கொள்ளலாம்.

1. இந்த ஸர்க்கத்தில் தான் ராமாயண கதைக் காரம்பம். இதற்குக்கீழுள்ள ஸர்க்கங்கள் உபோத்காதமென்று சொல்லப்படுகின்றன; உபோத்காதமாவது - ப்ரபந்தத்தைப் பெரியோர்கள் அங்கீகரிக்கும் பொருட்டு, அதில் சொல்லப்படும் விஷயத்தையும் அதற்கு ப்ரயோஜனத்தையும், அதற்கு அதிகாரிகள் இன்னுரென்பதையுஞ் சொல்லுகை. ராமாயணஞ் செய்தபின்பு நடந்த கதையைக் குறிக்கும் இந்த ஸர்க்கங்கள் ராமாயணத்துக்கு முன்னேயிருப்பது எப்படியென்றுல், இது மேலே நடக்கப்போகிற வ்ருத்தாந்தமாயினும் த்ரிகாலத்தையும் அறிந்த வால்மீகி மஹர்ஷி முன்பாகவே இதைச்செய்து ப்ரபந்தத்திற்சேர்த்து வைத்தாரென்பது கருத்து. ஆயினும் ஆத்மப்ரசம்ஸையில் வந்து முடிகிற இம்மூன்று ஸர்க்கங்களையும் எப்படிரிஷியானவர் தானே செய்யக்கூடுமென்றுல்—பார்க்கிறவர்களுக்கு இப்ப்ரபந்தத்தில் மனஞ்செல்லும் பொருட்டு ஒருவருக்குந்தெரியாத இந்த வ்ருத்தாந்தத்தை முதலிற் சொல்லவேண்டியது ஆவஸ்யகமாகையால் இது கூடும். அல்லது—இம்மூன்று ஸர்க்கங்களையும் இந்த வால்மீகி மஹர்ஷியின் சிஷ்யர்களில் ஒருவன் ராமாயணம் முடிந்தவுடன் இதின் வைபவத்தைத் தெரியச்செய்யும்பொருட்டுப் பண்ணிச்சேர்த்தானென்றுங் கொள்ளலாம். ஆனுல், இம்மூன்று ஸர்க்கங்களும் ராமாயணத்துக்கு முதலாயிருக்குமாயின் இதைக் குசலவர்கள் ராமனிடஞ்சென்று

இன்னும் இது கடலைத் தோண்டிச் சாகரம் என்று தன் பெயரை இட்ட சூரர்களான இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த ஸ்ரீராமனுடைய குணங்களையும் செயல்களையும் எடுத்துச் சொல்லுகின்றது. நான் முகக்கடவுளின் அநுக்கிரகத்தினால் வெளியானது. தருமம் அர்த்தம் காமம் என்ற மூன்றையும் தரவல்லது. இதிகாசரத்தினம் என்று புகழப்பட்டது. இதை நான் ஒரு நிமித்தமாகக் கொண்டு வெளியிடப் போகிறேனே யன்றி வேறன்று. ஆதலால் இப்படிப்பட்ட மகிமை பொருந்திய ராமாவதார சரித்திரத்தைக் குறைவில்லாமல் முழுவதும் கேளுங்கள்.

ஸரயூநதியின் இருகரையிலும் பரந்து தன் தான்யங்கள் நிறைந்து அளவற்ற ஜனங்கள் அமைந்து எப்பொழுதும் களிப்புற்று விளங்குகின்ற விசாலமான கோஸலம் என்று ஒரு தேசம் உண்டு. அதில் அயோத்யை என்பது பிரதானமான பட்டணம். அது முன்பு மனிதர்களுக்கு அரசனாயிருந்த மநுப்ராஜாபதி என்பவருடைய மனத்தினால் படைக்கப்பட்டது. அந்த நகரம் பன்னிரண்டு யோஜனை நீண்டு மூன்று யோஜனை பரந்து ஒளி பொருந்தி விளங்கும். அதில் பலவிடங்களுக்கும் போகின்ற பெரிய வழிகளில் நிழல் பரந்த மரங்கள் இரண்டு பக்கத்திலும் அமைந்து வளர்ந்து ஆயாசத்தை நீக்கும். பெரிய வீதி

முதலிற்பாடத் தொடங்கும்பொழுதே அவர்களை ராமன் தன் புத்ரர்களென்று அறிந்திருக்கக்கூடும். அறிந்தானாயின் அப்பொழுதே ஸீதையை யழைத்துக்கொண்டு வரவேண்டிவரும். ஆகையால் இது சேராதென்றால்—அஃதில்லை. ஸீதையின் குமாரர்களென்று இங்குச் சொல்லாமையால் தன் புத்ரர்களென்று எங்ஙனே நிச்சயிக்கக்கூடும். ராமஸாத்ருஶ்யஞ் சொன்னாலும் அது மற்றை ராஜ புத்ரர்களுக்குமிருக்கக்கூடு மாகையால் இங்ஙனம் நிச்சயிக்கப்போகாது. ஆகையால் இம்மூன்று ஸர்க்கங்களும் ராமாயணத்துக்கு முதலென்பதில் யாதொரு குற்றமுமில்லை.

கள் யாவும் மூலை முடுக்குகள் இல்லாமல் விசாலமாக நீண்டு தினந்தோறும் தண்ணீர் தெளித்தும் மலர் தூவப்பெற்றும் விளங்கும். அந்த உயர்ந்த தேசத்தைப் பாதுகாத்து வருகின்ற தசரத சக்ரவர்த்தியென்பவர் தேவேந்திரன் ஸ்வர்க்கத்தில் வஸிப்பதுபோல அயோத்யா பட்டணத்தில் வாஸஞ் செய்து கொண்டிருந்தார்.

அந்நகரத்தின் கோட்டை வாயில்களில் உயரமும் அழகும் வலிமையும் உள்ள கதவுகள் அமைந்திருக்கும். கடைவீதிகள் இடையில் பரந்து பண்டங்கள் நிறைந்து நன்றாய் அமைந்திருக்கும். உலகத்தில் உள்ள சகல யந்த்ரங்களையும் ஸமஸ்தமான ஆயுதங்களையும் அங்குக் காணலாம். ஒவ்வொரு தொழிலிலும் கைதேர்ந்த பலவிதமான சிற்பிகளும் அந்தப்பட்டணத்தில் வசித்து வந்தார்கள். அரசர்களை ஸ்துதிசெய்கின்ற வந்தி ஜனங்களும் அவர்களை விடியற்காலத்தில் எழுப்புகிற மாகத ஜனங்களும் அங்கு நிறைந்திருப்பார்கள். தன தான்யங்களால் நிரம்பி விளங்குகின்ற அந்தப் பட்டணத்தின் அழகு எல்லாவற்றையும் விட அதிகமாய்ச் சிறந்து விளங்கிற்று.

அங்குள்ள ஒவ்வொரு பொருளும் ஒப்பில்லாமல் ஒளிபெற்றிருந்தது. மேல்மெத்தைகளும் அதில் தூக்கிய த்வஜங்களும் ஆகாயத்தை அளாவியிருந்தன. மதிற்சுவர்களில் பீரங்கிகள் கணக்கில்லாமல் நிரம்பியிருந்தன. பெண்களுக்கு நாட்டியங் கற்பிக்கின்ற நட்டுவர்கள் பட்டணம் முழுவதும் சூழ்ந்திருந்தார்கள். மா பலா முதலான மரங்களும் பூங்கொடிகளும் நிறைந்து விளங்குகின்ற தோட்டங்கள் இடைக்கிடைகாணப் பட்டுக் குளிர்ச்சியை உண்டு பண்ணின. உயர்ந்த மதிற் சுவர்களும் அகன்று ஆழ்ந்த அகழிகளும் அமைந்திருப்பதனால் அந்நகரம் பகைவர்கள் அணுகவொண்ணாதபடி அழகாய் அமைந்திருந்

தது. மேலான குதிரைகளும் உயர்ந்த யானைகளும், கொழுத்த எருதுகளும் நீண்ட ஒட்டகங்களும் பெரிய கோவேறு கழுதைகளும் அங்கு நிறைந்திருந்தன.

கப்பங் கட்டவந்த தேசத்தரசர்களும், வர்த்தகஞ் செய்ய வந்த வெளித்தேசத்து வர்த்தகர்களும் அங்கு ஒழிவில்லாமல் எப்பொழுதும்நிறைந்து விளங்குவார்கள். பலவித ரத்னங்களால் இழைக்கப்பட்ட அரசர் மாளிகைகளாலும் விநோதத்தின்பொருட்டு உண்டுபண்ணின அத்தன்மையான செய்குன்றுகளாலும் ஆகாயத்தை அளாவின மாளிகைகளின் மேற் கட்டடங்களாலும் நிறைந்து விளங்குகின்ற அந்தப் பட்டணம் தேவேந்திரனது அமராவதி போலப் பிரகாசித்தது. அது ராஜக்ருஹங்கள் நிறைந்து விசித்திரமாகிச் சொற்கட்டான் பலகைபோலக் காணப்பட்டது. அந்நகரத்தில் பல விதமான உயர்ந்த ரத்னங்களும் நிறைந்திருந்தன.

அழகில்மிகுந்து விளங்குகின்ற பலதேசத்துப் பெண்களும் அங்கு வாசஞ்செய்து வந்தார்கள். அந்தப் பட்டணத்தில் பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் வைஶ்யர்களும் சூத்திரர்களும் வஸிக்கின்ற வீடுகள்பலவும் நெருங்கி இடைவெளியில்லாமல் ஒழுங்காயிருக்கும். மேடுபள்ளமில்லாமல் சமமான பூமியில் அந்தப்பட்டணம் அமைந்திருந்தது. கடைவீதிகளில் சம்பாசெந்நெல் முதலான மேலான அரிசிகள் ராசி ராசியாய்க் குவிக்கப்பட்டிருந்தன. அங்குள்ள ஜலம் கரும்பு ரஸம்போல மதுரமாயிருக்கும். அந்தப் பட்டணம் பேரி மத்தளம் வீணை முதலான வாத்தியங்கள் எப்பொழுதும் முழங்கப்பெற்று மகோற்சவமாயிருக்கும். இன்னும் அது பூமியில் தனக்கு நிகரில்லாமல் ஸித்தர்கள் தவஞ் செய்து பெற்று ஆகாயத்திற் பறக்

கின்ற விமானங்கள்போல நான்கு பக்கங்களிலும் வீடு கள் நிறைந்து அழகாய்க் காணப்பட்டது.

சாஸ்திரங்களிற் சிறந்த வித்வான்களும் அஸ்த்ர வித் தையில் தேர்ச்சி யடைந்த மஹா ரதிகர்களும் அங்குத் திரள்திரளாயிருந்தார்கள். அந்தவீரர்கள் அதிக ஸாமர் த்யம் உள்ளவர்களாயினும், ஸஹாயமில்லாமல் தனியா யிருப்பவர்களையும்,பெரியோர்களான தாய் தந்தைகளையும் சந்ததியாகிய பிள்ளை முதலானவர்களையில்லாமல் தனியா யிருப்பவர்களையும், எதிரில் நில்லாமல் ஓடிப்போகின்றவர் களையும் எதிர்த்து யுத்தஞ் செய்யமாட்டார்கள். அவர் கள் வனங்களில் கொழுத்துத் திரிகின்ற ஸிம்ஹங்களை யும், புலிகளையும், பன்றிகளையும் கூர்மையான ஆயுதங்க ளால் அடித்து வேட்டையாடுவார்கள்.

அவர்களை யல்லாமல் ஔபாஸனஞ் செய்பவர்களும், நற்குணங்கள் அமைந்தவர்களும்,வேத வேதாங்கங்களின் உண்மைப் பொருளை அறிந்தவர்களும், யாசகர்களுக்கு ஆயிரமாயிரமாய்க் கொடுப்பவர்களும், ஸத்யத்தில் நிலை நின்றவர்களும், வஸிஷ்டர் முதலான மஹர்ஷிகளோடு ஒத்தவர்களும்அதிகமான மகிமைகொண்டவர்களுமாகிய ப்ராஹ்மணோத்தமர்கள் அந்தப் பட்டணத்தில் நிறைந்து விளங்கினார்கள். இப்படிப்பட்ட உயர்ந்த லக்ஷணங்கள் அமைந்து விளங்குகின்ற அந்த அயோத்திமா நகரத் தைத் தசரத சக்ரவர்த்தி யென்பவன் பரிபாலித்து வந்தான். ஐந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதனையும் அவன் ப்ராஜைகளையும் வர்ணித்தல்.

அவன் வைவஸ்வத மநுவைப்போல அதிக பராக் கிரமத்தோடு உலகத்தைப் பரிபாலித்து வந்தான். அவன் வேதத்தையும் அதன்பொருளையும் நன்றாய் அறிந்தவன்.

கல்வியைத் தெளிவாய்க் கற்றவன். கொடை மிகுதியினால் வீரர்களையும் வித்வான்களையும் அருகில் வைத்துக் கொண்டு பொழுதுபோகுந் தன்மையையுடையவன். பின் வருகின்றவற்றை முன்னிட்டுக் கண்டறியுந் திறமுடையவன். பகைவர்கள் அஞ்சும்படியான பராக்ரமமுள்ளவன். நாட்டில் உள்ள அனைவரும் அவனுக்கு ப்ரியராயிருந்தார்கள். அவன் இக்ஷ்வாகுவம்சத்திற்பிறந்த அரசர்களில் அதிரதன் என்றுபெயர்பூண்டவன். சாஸ்த்ரங்களிற் சொல்லிய பல யாகங்களையுஞ் செய்தவன். தர்மஞ் செய்வதில் மேன்மேலும் ஆசையுள்ளவன்.

யாவரையுந் தன் வசப்படுத்திக் கொள்கின்ற சாமர்த்தியங் கொண்டவன். தான் ராஜ ரிஷியாயிருந்தாலும் மஹர்ஷியைப் போன்றவன். மூவுலகங்களிலும் புகழ்ப்பெற்றவன். சதுரங்க பலங்களை யுடையவன்; பகைவர்களைப் பயந்தோடச்செய்பவன். நற்குணங்களையுடைய பல நண்பர்களை யுடையவன். துர்விஷயங்களில் மனத்தைச் செல்ல விடாமல் ஜிதேந்த்ரியனா யிருப்பவன். பொன், மணி, முத்து, ஆடை ஆபரணம் முதலியவைகளில் மஹேந்த்ரனோடொத்தவன். நிதிகளில் குபேரனைப் போன்றவன். இங்ஙனம் ஒப்பில்லாத குணங்களையுடைய தசரத சக்ரவர்த்தியினால் பரிபாலிக்கப்பட்டு மேன்மைபெற்ற அயோத்திமா நகர் இந்திரன் ஆண்டு வரும் அமராவதிபோலவிளங்கிற்று

அவன் ஆண்டு வருங்காலத்தில், அனைவரும் துக்கமில்லாமல் சந்தோஷத்தோடு தரும காரியங்களைச் செய்தும், பெரியோர்களிடத்தில் உண்மை ஞானத்தைக் கேட்டு மனத்தேர்ச்சி யடைந்தும் தங்கள் தங்கள் பொருள்களில் திருப்தியடைந்தும் உலோப குணமில்லாமல் உயர்ந்த தானங்களைச் செய்தும்

உண்மையை உரைத்தும் விளங்கினார்கள். அந்நகரத்தில் கல்வி யில்லாதவனையும் தன தான்யங்கள் இல்லாதவனையும் பசுக்களை யில்லாதவனையும் குதிரை முதலான வாகனங்கள் இல்லாதவனையும் புருஷார்த்தங்களை அடையாதவனையும் காணமுடியாது. கேவலம் காம மயக்கங் கொண்டவனும், தாய் தந்தை அண்ணன் தம்பி மனைவி பிள்ளை முதலியவர்களைப் போஷியாதவனும் கொடுந்தொழில்செய்கின்றவனும் அந்தநகரத்தில்இல்லை. தெய்வம் இல்லையென்று நாஸ்திகவாதஞ் செய்கின்றவர்களை அங்குக் காணமுடியாது. ஸ்த்ரீ புருஷர்கள் நல்வியற்கையோடும் நல்லொழுக்கத்தோடும் நிறைந்து மஹர்ஷிகள்போல மாசடையாத மனமுள்ளவர்களாகித் தருமஞ் செய்வதில் விருப்பங் கொண்டவர்களா யிருப்பார்கள்.

அங்குக் காதில் குண்டலமும் தலையில் கிரீடமும் கழுத்தில் பூமாலையும் தோளில் வளையும் மார்பில் ஹாரமும் உடம்பில் ஆபரணமும் இல்லாமலிருப்பவர்கள் ஒருவரும் இல்லை. அற்ப போகமுள்ளவனையும் எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்யாதவனையும் சந்தனம் பூசாதவனையும் குங்குமம் கஸ்தூரி முதலான வாஸனைகளை அணியாதவனையும் அங்குக் காணமுடியாது. பட்டினி கிடப்பவனும் அன்னதானஞ் செய்யாதவனும், மனத்தை வெல்லாதவனும் அங்குக் காணமாட்டார்கள். அக்நிஹோத்ரஞ் செய்யாதவன், யாகஞ் செய்யாதவன் மந்தமதி தரித்திரன் திருட்டுத்தனமுள்ளவன் வர்ணஸங்கரஞ் செய்பவன் ஆகிய இவர்களில் ஒருவனும் அந்தப்பட்டணத்தில் இல்லை.

அந்தணர்கள் சாஸ்த்ரங்களிற் சொல்லிய தங்கள் ஸ்வகர்மங்களில் நிலைநின்று இந்த்ரிய ஜயம்பெற்றுப் பலவிதமான தானஞ்செய்துகொண்டு ஜபதபங்களில் தவி

ராமலும் தானம் வாங்குவதில் மனஞ் செல்லாமலும் திருப்தியுடன் வாழ்ந்து வந்தார்கள். பொய்யனும் சாஸ்த்ரங் கேளாதவனும், பொருமையுள்ளவனும, இஹபரங்களைச்சாதிக்கச் சக்தியற்றவனும், கல்வியில் தேர்ச்சியில்லாதவனும் அங்கு காணப்படமாட்டான். அங்குள்ள அந்தணர்கள் வ்யாகரணம் முதலான வேதாங்கங்கள் ஆறையும் அறிந்து சாந்த்ராயணம் முதலிய வ்ரதங்களைச் செய்து பொன் முதலியவற்றைக் கணக்கின்றித் தானங் கொடுத்து இந்திரிய நிக்கிரகஞ் செய்து தேஜஸ்ஸினல் ஜ்வலித்துக் கொண்டிருப்பார்கள். அங்குள்ளவர்கள் நோய் என்பதை ஒரு நாளும் அறியமாட்டார்கள்.

காந்தியில்லாமலும் அழகில்லாமலும் ராஜபக்தியில்லாமலும் இருக்கின்ற புருஷனையாவது ஸ்திரீயையாவது அங்குக் காணமுடியாது. ப்ராஹ்மணர் முதலான நான்கு வர்ணத்திலுள்ளவர்களும் தேவதைகளையும் அதிதிகளையும் பூசித்துப் பிறர் செய்த உபகாரத்தை மறக்காமல் ஸமயம் நேர்ந்த விடத்தில் அவர்களுக்குப் பிரதி யுபகாரஞ் செய்து தான சீலர்களும் சூரர்களுமாகிப் பராக்ரமம் பொருந்தி யிருப்பார்கள். அவர்கள் தர்மத்தையும் ஸத்யத்தையும் மறவாமல் ஆயுள் வளரப் பெற்றுப் பெண்டிர்களோடும் பிள்ளைகளோடும் பெயரன்மார்களோடுங் கூடிச் சந்தோஷமாயிருப்பார்கள்.

க்ஷத்ரியர்கள் ப்ராஹ்மணர்களுக்கு அடங்கி அவர்கள் ஆணைப்படி சரியாய் நடந்து வந்தார்கள். வைச்யர்கள் க்ஷத்ரியர்களை அநுஸரித்திருந்தார்கள். சூத்ரர்கள் தர்மந் தவருமல் மற்றைய மூன்று வர்ணத்தவர்களுக்கும் ஸேவை செய்துகொண்டு வந்தார்கள். முன்பு மநுப்ரஜாபதியானவர் உலகத்தைப் பரிபாலித்து வந்ததுபோல இக்ஷ்வாகு வம்சத்திற்குத் தலைவனுகிய அந்தத் தசாத

சக்ரவர்த்தியினுல் ஆளப்பட்ட அந்நகரம் ஸகல ஸௌபாக்யங்களும் நிறைந்து விளங்கி வந்தது. அஸ்த்ரவித்யை அறிந்தும் நல்லொழுக்கம் நிரம்பியும் நெருப்புப்போல நெருங்க முடியாத படைவீரர்களால் நிரம்பியும் உள்ள அந்நகரம் சிங்கங்கள் சூழ்ந்த குகைபோல விளங்கிற்று.

காம்போஜ தேசத்திலும் பாஹ்லீக தேசத்திலும் பிறந்து உச்சைஶ்ரவம் என்கிற இந்திரன் குதிரையோடொத்த உயர்ந்த குதிரைகள் அந்த நகரத்தில் கணக்கில்லாமலிருக்கும். விந்த்யமலையிற் பிறந்தவைகளும், ஹிமாசலத்தில் உண்டானவைகளும் ஐராவதம் மஹாபத்மம் அஞ்ஜனம் வாமனம் என்கிற திக்கஜங்களின் குலத்திற் பிறந்தவைகளும் பலம் பொருந்தியவைகளும் மதம் நிரம்பியவைகளும் பர்வதத்தைப் போன்ற பெரிய சரீரத்தை யுடையவைகளுமான யானைகள் அந்நகரத்தில் கோடிக்கணக்காயிருந்தன. [1]பத்ரம் மந்த்ரம் ம்ருகம் என்கிற மூன்று ஜாதியிற் பிறந்தவைகளும், பத்ர மந்த்ர ம்ருகம், பத்ர மந்த்ரம், பத்ர ம்ருகம், ம்ருக மந்த்ரம் என்கிற ஸங்கீர்ண ஜாதியிற் பிறந்தவைகளு

1. பத்ரம் மந்த்ரம் ம்ருகம் என்று யானை ஜாதிகள் 'மூன்று' '஭த்ரோ மந்த்ரோ ம்ருக³ஶ்சேதி விஜ்ஞேயாஸ்த்ரிவிதா க³ஜா:' என்று ஹலாயுத நிகண்டுவிற் சொல்லப்பட்டது. அப்படியே பத்ர மந்த்ரம் பத்ரமிருகம் ம்ருகமந்த்ரம் என்று இரண்டு ஸ்வபாவமும் பொருந்திய ஸங்கர ஜாதிகள்மூன்று. பத்ரமந்த்ரம்ருகம்என்றுமூன்றுஸ்வபாவமும் பொருந்திய ஸங்கரஜாதி யொன்று. இவைகளின் லக்ஷணங்களை 'அங்க³ ப்ரத்யங்க³ ஭த்ரத்வம் ஸம்ஹிதம் ஭த்ரலக்ஷணம்। ப்ருது² த்வம் ஶிலயதா ஸ்தௌல்யம் ஸம்ஹிதம் மந்த்ரலக்ஷணம்॥ தநுப்ரத்யங்க³ தீர்வஶ்ச ப்ராயோ ம்ருக³ க³ஜோ மத:। ஭த்ரமந்த்ரோ ஭த்ரம்ருகோ ஭த்ரமந்த்ர ம்ருகோऽபிச॥ ம்ருக³மந்த்ராவயோऽப்யேவ மிதி ஸங்கரஜாதய:' என்று வருகின்ற வைஜயந்தி நிகண்டுவினுலறிக.

மான யானைகள் பெரிய மலைகள் நடப்பனபோல அங்கு எப்பொழுதும் உலாவிக்கொண்டிருக்கும்.

இப்படிச் சதுரங்க பலமுள்ள அந்த நகரம் உள்ளிலும் வெளியிலும் சத்ருக்கள் நுழைய முடியாதபடி அயோத்யை என்னும் பொருள் பொருந்திய பெயருடன் விளங்கி வந்தது. தசாத மஹாராஜன் தனது மிகுந்த பராக்ரமத்தினால் பகைவர்களைப் பறக்கச் செய்து அந்நகரத்தைச் சந்திரன் நக்ஷத்ர மண்டலத்தைப் பரிபாலிப்பது போலப் பரிபாலித்துக்கொண்டு வந்தான்.

ஆருவது ஸர்க்கம் முற்றிற்று.

மந்த்ரி புரோஹிதாதி வர்ணனை.

இக்ஷ்வாகு வம்சத்தில் உதித்தவனும் மிகுந்த மதியுள்ளவனுமான அம்மஹாராஜனுக்கு எட்டு மந்திரிகள் இருந்தார்கள். அவர்கள் ராஜ கார்யங்களை ஆலோசிப்பதில் மிகுந்த வல்லமையுள்ளவர்கள்; முகமலர்ச்சி முதலான குறிப்புக்களினால் பிறருடைய உட்கருத்தை நன்றாய் அறியுந் திறமுடையவர்கள்; தங்களுக்கு ப்ரியனும் காதனுமான அரசனுக்கு எப்பொழுதும் ஹிதங்களைச் செய்துகொண்டு மந்திரிகளுக்கு வேண்டிய குணங்கள் நிரம்பிப் பேரறிவு உள்ளவர்களாயிருந்தார்கள். த்ருஷ்டி ஜயந்தன் ஜயன் ஸித்தார்த்தன் அர்த்தஸாதகன் அசோகன் மந்த்ரபாலன் ஸுமந்த்ரன் என்று அவர்களுக்குப்பெயர். அவர்கள் தூயமனத்தோடு ராஜகார்யங்களை விருப்பத்துடன் நிறைவேற்றிக் கொண்டு வந்தார்கள். அவ்வரசனுக்கு வஸிஷ்டன் வாமதேவன் என்ற இரண்டு மஹர்ஷிகள் புரோஹிதர்களில் தலைமைப்பட்ட

வர்கள். இன்னும் ஜாபாலிமுதலிய [1]சில ரிஷிகள் மந்த்ரிகளாகவும் புரோஹிதர்களாகவு மிருந்து வந்தார்கள்.

இவர்கள் அனைவரும் கல்விகளைக் கற்று வணக்கம் நிரம்பித் தகாச் செய்கைகளில் வெட்கங் கொண்டவர்கள். எல்லாவற்றிலும் வல்லமையுள்ளவர்கள்; ஐம்புலன்களையும் வென்று அவைகளைத் தங்கள் இஷ்டப்படி செலுத்துந் திறமுடையவர்கள்; செல்வம் நிறைந்தவர்கள்; மிகுந்த மதியுடையவர்கள்; அரச நீதிகளை நன்றாய்க் கற்றறிந்தவர்கள்; யாவராலும் அசைக்கமுடியாத பராக்கிரமம் பெற்றவர்கள்; ராஜகாரியங்களை ஆலோசிக்குந் திறமையில் புகழ்பெற்றவர்கள்; எப்பொழுதுஞ் சோர்வின்றி ஊக்கத்துடன் இருப்பவர்கள்; சொன்னவற்றைத் தவறுமற் செய்யுந் தன்மையுள்ளவர்கள்.

யாவரையும் வசப்படுத்தும்படியான தேஜஸ்ஸையும் பொறுமையையும் படைத்தவர்கள். எப்பொழுதும் புன்னகை நிரம்பி அழகாய்ப் பேசுகின்றவர்கள். கோபத்தைப்பற்றியும் காமத்தைப்பற்றியும் பொருளைப்பற்றியும் பொய்ம்மொழி பேசாதவார்கள். தங்கள் தேசத்திலும் அயல் தேசத்திலும் நடந்தவைகளையும் நடக்கின்றவைகளையும் நடக்கப் போகின்றவைகளையும் சாரர்கள் மூலமாக நன்றாய் அறிந்து கொள்கின்றவர்கள். வ்யவஹாரங்களில் வல்லவர்கள்; ஸ்நேஹத்தில் நிலைநின்றவர்கள்; அபராதஞ்செய்தவன் புத்திரனாயிருந்தாலும் சமயம் நேர்ந்தபொழுது தண்டனை செய்யத் தவறாதவர்கள்.

பொக்கிஷங்களில் திரவியத்தை நிறைப்பதிலும் திரவியத்தினால் சதுரங்க பலங்களை வ்ருத்தி செய்வதி

---

1. 'ஸுயஜ்ஞோஉப்யய ஜாவாலிஃ காஸ்ய யபோ உப்யயகௌதமஃ। மார்கண்டேயஸ்து தீர்வாயுஸ்தயா காத்யாயநோமுநிஃ॥ ஏதைர்ப்ரஹ்மர்ஷிபிர்நித்யம்ருத்விஜஸ்தஸ்யபௌர்வகாஃ' என்பது மூலம்.

னும் முயற்சியுள்ளவர்கள். பகைவனாயிருந்தாலும் குற்றமில்லாதவனை வருத்தப்படுத்தாதவர்கள். பகைவர்களையொழிக்க வல்லவர்கள்; ஒழியாத உத்ஸாஹமுள்ளவர்கள்; தருமந்தவறாமல் நடக்கின்றவர்கள்: நல்லொழுக்கமுள்ள ஸாதுஜனங்களைப் பொறுமையுடன்பாதுகாப்பவர்கள்; அந்தணர்களையும் அரசர்களையும் அபராதமின்றி வருந்தச் செய்யாதவர்கள்.

ஒருவன் செய்த குற்றத்தின் குறைவுகளை நன்றாக ஆராய்ந்து தேசத்தையும் காலத்தையும் வயதையும் அநுஸரித்துத் தக்கபடி மெதுவாகவும் கடினமாகவுந் தண்டித்து நல்லவழியில் நிலைக்கச் செய்கின்றவர்கள். நல்ல அபிப்பிராயத்தில் மாறுகொள்ளாதவர்கள். அவர்களுடைய ஆளுகையில் பட்டணத்திலும்,தேசத்திலும் பொய்யுரைப்பவனும் துஷ்டனும் பரதாரங்களில் விருப்பங்கொள்பவனும் காணப்பட்டதில்லை. அனைவரும் உயர்ந்தவொழுக்கமுள்ளவர்களாகவே விளங்கி வந்தார்கள்.

இந்தக் காரணங்களினால்,கோஸலதேசம் யாதொரு வருத்தமுமின்றி நிர்மலமா யிருந்தது. அந்த மந்த்ரிகள் தினமும் வெளுத்த வஸ்த்ரங்களை யுடுத்தித் தங்களை நன்றாக அலங்கரித்துக்கொண்டு நல்லியற்கையுடன் இருந்தார்கள். தங்கள் மன்னவனுக்கு நன்மை செய்யும்பொருட்டு எப்பொழுதும் நீதிநெறி யென்னுங் கண்களினால் விழித்துக் கொண்டிருந்தார்கள்; இன்னம் குணகுணங்களைக் கண்டறியும் வல்லமை பெற்றிருந்தார்கள். குருவினிடத்திலும் மன்னவனிடத்திலும் பெருமை பெற்றிருந்தார்கள். பெரியோர்களிடத்தில் தோஷத்தைப் பாராட்டாமல் குணத்தையே கண்டு வந்தார்கள். அவர்கள் எல்லாவற்றையும் நிச்சயிக்கவல்ல புத்தி விசேஷத்தினால் தங்கள் தேசத்திலல்லாமல் விதேசங்களிலும் மேன்மை பெற்று

விளங்கி வந்தார்கள். ஸந்தி விக்ரஹம் முதலான ராஜோபாய தத்வங்கள் அனைத்தையும் தெரிந்திருந்தார்கள். அவர்கள் இயற்கையாகவே நிறைந்த செல்வமுள்ளவர்கள். ராஜகாரியங்களை ஆலோசித்து ரஹஸ்யமாய் வைத்திருந்து அவசியமானவற்றை மறைத்து நடத்தும்படியான புத்தியுள்ளவர்கள். ஸூக்ஷ்ம விஷயங்களை விசாரித்தறிவதில் சந்தோஷமுள்ளவர்கள். நீதி தவறாமல் ப்ரஜைகளைப் பாதுகாக்கின்ற முறைகளையெல்லாம் நன்றாய்க் கற்றவர்கள்.

இப்படிப்பட்ட குணங்களையுடைய மந்த்ரிகளோடு கூடி ராஜாவாகிய தசரதன் வருத்தமொன்றுமில்லாமல் சாரர்களால் ஸகல வ்ருத்தாந்தங்களையுந் தெரிந்துகொண்டு ப்ரஜைகளைக் களிப்பித்து அவர்களுடைய அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டங்களைச் செய்து பரிபாலித்துக் கொண்டு வந்தான். அவன் தன் குணங்களால் மூவுலகத்திலும் புகழ்பெற்றுத் தானசீலனாகிச் சத்தியம் தவறாமல் தரணி முழுவதும் ஆண்டுகொண்டு அந்நகரத்தில் வஸித்து வந்தான். அவன் தனக்கு மேலாகியும் ஒப்பாகியுமுள்ள பகைவன் ஒருவனையுங் காணவில்லை. எல்லாவரசர்களும் அவன் காற்கடையில் வணங்கி நின்றார்கள். பகைவர்கள் அவன் பராக்ரமத்தைக் கண்டு பயந்து உயிரிழந்துபோனார்கள். அவ்வரசன் ஸ்வர்க்கலோகத்தைத் தேவேந்திரன் ஆளுவதுபோல உலகம் முழுவதும் ஆண்டு வந்தான். இன்னும் அவன் தேஜோமயமான கிரணங்களோடு காணப்படுகின்ற ஸூர்யன் போல மந்திரிகளோடு ஒளிபெற்று விளங்கினான்.

எழாவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதன் புத்ரகாமேஷ்டி செய்ய முயன்றது.

இங்ஙனம் மஹிமை பொருந்திய அம்மன்னவன் தனக்குப் புத்திரன் உண்டாவதற்குத் தவஞ் செய்துகொண்டிருந்தாலும் அவனுக்கு வம்சத்தை வ்ருத்தி செய்கின்ற புத்திரன் உண்டாகவில்லை. ஒரு சமயம் அவனுக்குப் பிள்ளை பிறக்கும்பொருட்டு அஸ்வமேதயாகம் செய்ய வேண்டுமென்று ஒரு எண்ணம் உண்டாயிற்று. அவன் புத்திசாலிகளான தன் மந்த்ரிகள் அனைவருடனும் கலந்து ஆலோசித்து 'யாகஞ் செய்யவேண்டும்' என்று நன்றாக மனத்தில் நிச்சயித்துக்கொண்டு மந்த்ரிகளில் தலைவனாகிய ஸுமந்த்ரனைப் பார்த்து 'எனது குருக்களையும் புரோஹிதர்களையும் அழைத்துக்கொண்டு வா!' என்று மொழிந்தான்.

பிற்பாடு ஸுமந்த்ரன் உடனே வேகமாகச் சென்று வேதத்தின் கரையையறிந்த ஸுயஜ்வர், வாமதேவர், ஜாபாலி, காஸ்யபர், புரோஹிதராகிய வஸிஷ்டர் முதலான அனைவரையும் அரசன் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வந்தான். தசரத மஹாராஜன் அவர்களைப் பூசித்துப் "பூஜ்யர்களே! புத்திரனில்லாமல் புலம்புகின்ற எனக்கு இவ்வுலகத்தில் யாதொரு ஸுகமும் இல்லை; அதைப்பற்றி அஸ்வமேத யாகஞ் செய்யவேண்டுமென்று நினைக்கிறேன். நான் விரும்புகின்ற இந்த யாகத்தை எப்படிச் செய்யலாம்? இவ்விஷயத்தில் எனக்கு ஒரு உபாயஞ் சொல்லவேண்டும்" என்று கேட்டான். வஸிஷ்டர் முதலான அந்தணர்கள் 'நல்லது நல்லது' என்று ஸந்தோஷித்துத் தசரதனைப் பார்த்து மிகுந்த மனக்களிப்புடன் "அரசனே! யாகத்துக்கு வேண்டிய ஸம்பாரங்களைச் சேர்ப்பாயாக. பூமியைச் சுற்றும் பொருட்டு யாகக் குதிரையை விடுவாயாக. புத்

திர பாக்கியத்தின் நிமித்தம் உனக்கு இந்தத் தர்மபுத்தி உண்டானபடியினால் நீ வேண்டின புதல்வர்களைப் பெறுவாய்" என்று மொழிந்தார்கள்.

அரசனும் அந்தணர் மொழிகளைக் கேட்டு மகிழ்ச்சிகொண்டு மந்த்ரிகளைப் பார்த்து "யாகத்துக்கு வேண்டிய ஸகல ஸம்பாரங்களையும் சேருங்கள். காக்கத் தக்கவர்களைக் காவல் வைத்து அத்வர்யு முதலிய உபாத்தியாயர்களுடன் பூமியை வலஞ்செய்து வருவதற்கு அச்வத்தை விடுங்கள். ஸரயூநதிக்கு வடகரையில் யாகசாலையை ஏற்படுத்துங்கள். கிரமந் தவறாமல் சாஸ்த்ரப்படி சாந்திகளைச் செய்யுங்கள். எல்லாவற்றிலும் மேலான இந்த யாகத்தில் வருத்தத்தை விளைவிப்பதான அபசாரம் எதுவும் நேரிடாதிருக்க வேண்டும். யாகத்தின் ஸ்வரூபத்தை உணர்ந்த ப்ரஹ்ம ராக்ஷஸர்கள் இதில் கெடுதி செய்யும் சமயத்தைத் தேடிக்கொண் டிருப்பார்கள். ஏதேனுங் கெடுதி நேரிட்டு அவர்கள் புகுந்து யாகத்தை அழிப்பார்களானால், உடனே யஜமானன் நசித்துப்போவான். ஆகையால், யாகத்தை நடத்துவதில் வல்லமையுள்ள நீங்கள் இந்த யாகம் சாஸ்த்ரந் தவறாமல் முடியும்படி முயற்சி செய்யவேண்டும்" என்றான்.

மந்த்ரிகள் மஹாராஜன் மொழிந்த சொல்லைக்கேட்டுத் 'தாங்கள் கட்டளையிட்டபடி செய்கிறோம்' என்று சொல்லிச் சந்தோஷித்தார்கள். அரசனுக்கு ஆசீர்வாதம் முதலியவைகளால் மங்களாபி விருத்தியைச் செய்யுந்தர்ம ஸ்வபாவர்களாகிய அந்தணர்கள் யாவரும் 'அப்படியே செய்கிறோம்' என்று சொல்லி அநுமதி பெற்றுக்கொண்டு அவரவர்கள் வந்தவழியே திரும்பிச் சென்றார்கள். பிற்பாடு அரசன் மந்த்ரிகளைப் பார்த்துப் 'புரோஹிதர்கள் சொல்லியபடி வேண்டிய ஸம்பாரங்களைச்

சேர்த்து யாகத்தைச் சாஸ்த்ரங் தவருமல் நடத்தவேண்டும். நீங்கள் அதை நடத்துவதற்கு வல்லமையுள்ளவர்கள்.' என்று அவர்களை அனுப்பிட்டு அரண்மனைக்குப் போனான்.

அவன் அங்குக் கௌஸல்யை முதலான பத்னிகளைப் பார்த்து 'நான் புத்திரன் நிமித்தம் யாகஞ்செய்யப் போகிறேன். நீங்கள் தீக்ஷை கொள்ளவேண்டும்'' என்று கூறினான். அரசன் ஸந்தோஷத்துடன் உரைத்த அவ்வார்த்தையைக் கேட்டு இயற்கையாகவே ஒளிபெற்ற முகத்தையுடைய அந்த மாதர்கள் வஸந்த காலத்தில் மலர்ந்த தாமரை மலர்போல மிகவும் பிரகாசமாக விளங்கினார்கள்.

எட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ருஷ்யஶ்ருங்கர் சரித்திரம்.

அரசன் புதல்வனுக்காக அஶ்வமேதஞ் செய்ய வேண்டுமென் றுரைத்த வார்த்தையைக்கேட்டுஸாரதியாகிய ஸுமந்த்ரன் ஏகாந்தத்தில் அரசனுக்கு இவ்வாறு மொழிந்தான். "மஹாராஜாவே! அஶ்வமேதஞ் செய்வதைப் பற்றி வஸிஷ்டர் முதலாகிய ருத்விக்குகள் தங்களுக்கு உபதேசித்திருக்கிறார்கள். நான் இதை இதிஹாஸமாக முன்னமே கேட்டிருக்கிறேன். மகிமைகள் அமைந்த ஸனத்குமாரர் தங்களுக்குப் பிள்ளை பிறக்கும் விதத்தைக் குறித்து ரிஷிகளின் முன்னிலையில் முன்னமே சொல்லியிருக்கிறார். அதைச் சொல்கிறேன் கேளுங்கள்.

"காஶ்யபனுக்கு விபண்டகன் என்றுபெயர் பெற்ற ஒரு புத்திரன் இருக்கிறான். அவனுக்கு ருஶ்யஶ்ருங்கன்

என்று எங்கும் ப்ரஸித்தி பெற்ற ஒரு புதல்வன் உண்டாகப் போகிறான். அவன் காட்டிலேயே வளர்ந்து பிதாவுக்குப் பணிவிடை செய்துகொண்டு முனியாக அக்கானகத்திலேயே திரிந்துகொண்டிருப்பான். அவன் வனத்தைத் தவிர மற்றக் கிராமங்களையாவது கிராமத்திலுள்ளவர்களையாவது அறியவேமாட்டான்; பெருந்தன்மையுடைய அம்முனிவன் ப்ரஹ்மசர்யத்துக்குப் பங்கம் வந்து முடிவில் இல்லறத்துக்கு வருவான்.[1] ஆகையால் அவனுடைய ப்ரஹ்மசர்யம் இரண்டு வகைப்பட்டிருக்கும்.

"அவன் அக்நிஹோத்ரஞ் செய்துகொண்டு கீர்த்தி பெற்ற தன் பிதாவின் சுஶ்ரூஷையில் ஊக்கத்துடனிருப்பான். அப்பொழுது பராக்ரமம் பொருந்திய ரோமபாதன் என்பவன் அங்கதேசத்துக்கு அரசனாகிப் புகழ் பெற்று விளங்கிவரப்போகிறான். அவன் நீதி தவறுதலால் ராஜ்யத்தில் ஸகல பூதங்களுக்கும் பயங்கரமாகிய மழையின்மையா லுண்டாகும் பஞ்சம் நேரிடும். அதனால், மன்னவன் வருத்தங்கொண்டு ப்ராஹ்மணர்களை வரவழைத்துப் "பூஜ்யர்களே! நீங்கள் தர்மந்தெரிந்தவர்கள். உலகத்திலுள்ள பழைய வழக்கங்களையெல்லாம் நன்றாயுணர்ந்தவர்கள். உங்களை வேண்டிக் கொள்கிறேன். மழையின்மையாலுண்டான இந்த க்ஷாமத்தைச் சாந்தி செய்வதற்கு அநுஷ்டிக்கவேண்டிய நியமங்களை எனக்குத் தெரிவிக்கவேண்டும்" என்று கேட்கப்போகிறான்.

---

1. அதாவது - மான்தோலை உடுத்துக்கொண்டு பலாசதண்டம் தரித்து மதூகரஞ்செய்து குருவின் நியமனப்படியிருந்து வேதமோதுவதும், இல்லறம் புகுந்தபின்னும் ருதுகாலங்களில் மனைவியிடம் சேர்ந்து மற்றைக் காலங்களில் சேராதிருப்பதுமாகிய இரண்டுவகைப்பட்ட ப்ரஹ்மசர்யமும் அவனிடம் விளங்கி வருமென்பது பொருள்.

"வேதங்களின் கரையைக் கண்டவர்களான அவ்வந்தணர்கள் மன்னவனைப் பார்த்து 'ராஜனே! விபண்டக முனிவர் புத்திரராகிய ருஶ்யஶ்ருங்கரை இங்கு வரச் செய்யுங்கள். அவருக்குத் தங்கள் கன்னிகையான சாந்தையை விசாரமில்லாமல் விதிப்படி விவாகஞ்செய்து கொடுங்கள். அப்பொழுது மழை யுண்டாகி க்ஷாமம் நீங்கும்.' என்று மொழியப்போகிறார்கள். அரசனும் அவர்கள் மொழியைக்கேட்டு ப்ரஹ்மசர்யம் தவறாதிருக்கின்ற அம்முனிவரை வரவழைக்கும் வழியைச் சிந்தித்து மந்திரிகளுடன் கலந்து புரோஹிதர்களையும் மந்திரிகளையும் ஸத்கரித்து ருஶ்யஶ்ருங்கரை யழைத்துக் கொண்டு வரும்படி அனுப்பப்போகிறான்.

"அவர்கள் மன்னவன் வார்த்தையைக்கேட்டு மனத்தில் வருத்தமுற்றுத் தலைவணங்கி 'ராஜனே! விபண்டக ரிஷிக்கு நாங்கள் பயப்படுகிறோம். ஆகையால் நாங்கள் போகமுடியாது. நாங்கள் பெண்களைக்கொண்டு அவ்வந்தணரை வரவழைக்கிறோம். இதனால், அவர் ப்ரஹ்மசர்யத்துக்குத் தோஷமுண்டாகாது. விபண்டகரைப் பற்றியும் கவலை கொள்ளவேண்டாம். மழையின்மையாலுண்டான பஞ்சமும் பயமும் நீங்கிப்போகும்' என்று சொல்லப் போகிறார்கள்.

"அப்படியே அங்கராஜனும் தாஸிகளைக்கொண்டு ரிஷி குமாரராகிய அந்த ருஶ்யஶ்ருங்கரை வரவழைக்க, உடனே மேகமும் மழையைப் பொழியும், பின்பு அவன் தன் புத்திரியான சாந்தையை அம்முனிவர்க்கு விவாகஞ் செய்து கொடுப்பான். அந்த ருஶ்யஶ்ருங்க முனிவர் வந்து தங்களுக்குப் புத்திரர்களை உண்டுபண்ணப் போகிறார்.' இந்தச் சரித்ரத்தை எனக்குச் சனத்குமாரர் சொன்னார்" என்று மந்திரியாகிய ஸுமந்திரன் சொன்

ஞன். தசரதன் மிகவும் ஆநந்தத்தோடு "மந்திரீ! அந்த அரசன் ருஶ்யஶ்ருங்கரை அழைத்து வந்த விதத்தை ஸவிஸ்தாரமாகச் சொல்லும்; நான் அதைக் கேட்க விரும்புகிறேன்" என்று சொன்னான்.

ஒன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

தாஸிகள் ருஶ்யஶ்ருங்கரை அழைத்து வந்தது.

ஸுமந்திரன் "சக்ரவர்த்தியே! புரோஹிதர்கள் ரோமபாதரைப் பார்த்து "ராஜனே! நாங்கள் ருஶ்யஶ்ருங்கரை அழைத்துக் கொண்டுவருவதற்கு ஒருஉபாயத்தை ஆலோசித்திருக்கிறோம். ருஶ்யஶ்ருங்கர் எப்பொழுதும் காட்டில் திரிந்துகொண்டிருப்பவர். தவஞ்செய்வதும், வேதமோதுவதும் தான் அவருக்குத் தொழில். புராணங்களையும் இதிஹாஸங்களையுங் கூட அவர் கேட்டதுகிடையாது. அவர் விஷயஸுகங்களில் ஒன்றையும் உணரமாட்டார். ரூபம் ரஸம் முதலிய இந்த்ரியங்கள் எப்படிப்பட்ட மனிதர்களின் மனத்தையும் கலங்கச்செய்து இழுக்கும். எவராலும் அவற்றைக் கடக்கமுடியாது. அவ்வுபாயத்தினால் நாங்கள் அவரை வசப்படுத்திப் பட்டணத்துக்கு அழைத்துக்கொண்டு வரப்போகிறோம். அதாவது, நல்லஅழகு பொருந்தியவர்களும் நன்றாய் அலங்கரித்துக்கொண்டவர்களும் காண்பவர் மனத்தைக் கவர்கின்றவர்களுமான பெண்களை அவரிடம் அனுப்பப்போகிறோம். அவர்கள் அங்கேசென்று தங்கள் உபாயங்களால் அவரை மயக்கி நம்பட்டணக்கு அழைத்துக்கொண்டு வருவார்கள்" என்று சொன்னார்கள்.

அரசன் சந்தோஷித்து 'அப்படியே செய்யுங்கள்.' என்று அநுமதி கொடுத்தான். பின்பு புரோஹிதர்களும் மந்திரிகளும் தாஸிகளைப் பார்த்து ருஶ்யஶ்ருங்கரை வசப்படுத்தி அழைத்துக்கொண்டு வரும்படி அனுப்பினார்கள். தாஸிகளில் தலைமைப்பட்டவர்களும் அழகில் மிகுந்தவர்களும் ஆடைகளினாலும் ஆபரணங்களினாலும் தங்களை நன்றாய் அலங்கரித்துக் கொண்டவர்களுமான அந்தப்பெண்கள் அவர்கள் கட்டளைப்படி ருஶ்யஶ்ருங்கர் இருக்கின்ற மஹா வனத்துக்குள் நுழைந்தார்கள்.

அவர் ரிஷிகுமாரராகிக் கானகத்தில் திரிந்து கொண்டிருப்பவ ராகையால் நகரத்தாருடைய நாகரிகத்தைக் கொஞ்சமும் அறியமாட்டார். ஐம்புலன்களையும் வென்றவராகையால் எளிதில் வசப்படத் தக்கவரன்று; தவத்தில் நிலைத்திருப்பவராகையால், அடிக்கடி போய்ப் பார்ப்பதற்குச் சமயமும் நேரிடாது. அப்படிப்பட்டவரைத் தகுந்தபடிகண்டு காரிய சாதகஞ் செய்து கொள்ளும் விதத்தைப்பற்றி அவர்கள் பலவிதமாக ஆலோசனை செய்தார்கள். பிற்பாடு அந்தத் தாஸிகள் அவர் ஆஶ்ரமத்தின் சமீபத்தில் தங்களுக்கு இருக்கை செய்துகொண்டு அவரைக் கண்டு சம்பாஷிக்குஞ் சமயத்தை எதிர் பார்த்திருந்தார்கள்.

சிலநாள் கழிந்தபின்பு ஒரு சமயம் விபண்டகமுனிவர் குமாரராகிய ருஶ்யஶ்ருங்கர் தெய்வாதீனமாக அவர்களைக் காணலாயிற்று. அற்புதமான அழகோடுகூடிய அந்த மதிமுக மடந்தையர்கள் இனிய குரலுடன் கானஞ் செய்து கொண்டு ரிஷிகுமாரரருகில் வந்து, 'அந்தணஶ்ரேஷ்டரே! தாங்கள் யார்? ஜன சஞ்சாரமற்றுப் பயங்கரமாகிய இந்தக் கானகத்தில் தனித்திருப்பதற்குக் காரணமென்ன? அதை நாங்கள் அறிய விரும்புகிறோம்'

என்று கேட்டார்கள். கண்கள் கூசும்படியான காந்தியோடுகூடிய அந்தப் பெண்கள் போன்றவர்களை அவர் கானகத்தில் ஒருநாளுங் காணாததனால் அவருக்கு அவர்கள் மீது ஒரு விதமான ஆசை யுண்டாயிற்று. அவர் 'விபண்டகமுனிவர் என் தகப்பனார். நான் அவருடைய ஔரஸ புத்திரன். எனக்கு ருஶ்யஶ்ருங்கனென்றுபெயர். நான் இந்தக் காட்டில் தவஞ்செய்து வருகிறேன். இங்குள்ளவர்களை நான் நன்றாக அறிந்திருக்கிறேன். அழகிய காட்சியுடையவர்களே! எங்கள் ஆஶ்ரமம் இதற்குச் சமீபத்தில் தானிருக்கின்றது. நான் உங்களுக்கு அதிதிபூஜை செய்வதற்கு எண்ணியிருக்கிறேன். நீங்கள் அங்கு வந்து என் அதிதி ஸத்காரத்தை அங்கீகரிக்கவேண்டும்' என்று கூறினார்.

பின்பு அந்தப் பெண்கள் ருஶ்யஶ்ருங்கர் ஆஶ்ரமத்துக்கு வந்தார்கள். முனிவர் அவர்களுக்கு அர்க்யங்களையும் பாத்யங்களையும் காய்களையும் கிழங்குகளையுங் கொடுத்து உபசாரணை செய்தார். அவர்கள் அந்தப் பூஜையை அங்கீகரித்து அவருடன் நிதானமாய்க் கலந்து பேசவேண்டுமென்று விருப்பமிருந்தபோதிலும் விபண்டகரை நினைத்துப் பயந்து 'ப்ராம்ஹண ஶ்ரேஷ்டரே! நாங்கள் கொடுக்கும் இந்தப் பழங்கள் மேலானவை, இவைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். தங்களுக்குச் சுபமுண்டாகும்' என்று சொல்லி அவரை ஆலிங்கனஞ் செய்துகொண்டு அதிக ஸந்தோஷத்துடன் ருசிபொருந்திய மோதகங்களையும் பலவகையான பக்ஷணங்களையும் அவருக்குக் கொடுத்தார்கள்.

மஹாதேஜஸ்வியான அந்த வைதிகர் எப்பொழுதும் காட்டிலேயே வஸித்திருப்பவராகையால் தான் ஒருநாளுஞ் சாப்பிட்டறியாத அந்தத் தின்பண்டங்

களை வாங்கி சாப்பிட்டு அவற்றைக் காட்டில் வாஸஞ் செய்பவர்கள் சாப்பிட்டறியாத உயர்ந்த பழங்கள் என்று நினைத்தார். பின்பு அந்தப் பெண்கள் 'நாங்கள் போய் வருகிறோம்' என்றுசொல்லி விடைபெற்றுச் சென்றார்கள். ஆனால், ருஶ்யஶ்ருங்கர் மாத்திரம் அவர்கள் செலவில் மனங் களிக்கவில்லை. அன்று முழுவதும் அவர் மனம் ஒன்றிலும் நிலைகொள்ளாமல் அலைந்து கொண்டிருந்தது. மற்றை நாள் அவர் தன் பிதாவுக்குச் செய்யவேண்டிய கடைமைகளை நிறைவேற்றிவிட்டு அந்தப் பெண்களிருக்கும் இடத்துக்குத் தானே வலுவில் செல்லத் தொடங்கினர்.

அவர் ப்ரஹ்மசர்யம் தவறாதவரா யிருந்தாலும் அவர்கள் மாயையில் அகப்பட்டு அதிகமாய்க் கலக்கமடைந்தார். அந்தப் பெண்கள் அவர் வரவில் களிப்படைந்து எதிர்கொண்டு சென்று 'நல்லியற்கையுள்ளவரே! தங்கள் வரவு நல்வரவாகுக. தாங்கள் எங்கள் ஆஶ்ரமத்துக்கு வந்து எங்களைக் கவுரப்படுத்த வேண்டும்.' என்று சொன்னார்கள். முனி குமாரர் அவர்கள் சொல்லிய அந்த அழகான வார்த்தையைக் கேட்டுச் சந்தோஷித்து 'அப்படியே வருகிறேன்' என்று சொன்னார். சாகசத்தில் மிகுந்தவர்களான அந்தப் பெண்கள் தங்கள் இனிய வசனங்களாலும் உரியவுபசாரணைகளாலும் அவரைக்களிப்பித்து அழைத்துக்கொண்டு கங்கையாற்றைக் கடந்து தங்களுக்குச் சொந்தமான அங்க தேசம வந்து சேர்ந்தார்கள்,

அவர் மகிமை பொருந்தியவராகையால், அங்க தேசத்தின் எல்லையில் அடிவைத்தமாத்திரத்தில் உலகம் யாவும் ஆநந்திக்கும்படி மேகங்கள் ஆகாயத்தில் நிரம்பி மழை பொழிந்தன. ரோமபாத மஹாரா

ஜன் மழையுடன் கூடத் தன் தேசத்துக்கு வந்து கொண்டிருக்கின்ற அந்த முனிகுமாரரை எதிர்கொண்டு சென்று வணக்கத்துடன் ஸாஷ்டாங்கமாக அவர் பாதத்தில் விழுந்து நமஸ்காரஞ் செய்து அர்க்யத்தைக் கொடுத்து அவர் அநுக்கிரகத்துக்குப் பாத்திரனாயினான்.

பின்பு அறிவில் மிகுந்த அந்தரோமபாத மஹீபாலன் அவரைத் தன் அந்தப்புரத்துக்கு அழைத்துக் கொண்டு சென்று தன் பெண்ணாகிய சாந்தாதேவியை அவருக்கு விதிப்படி விவாஹஞ் செய்து கொடுத்தான். அவ்வந்தணர் தன் பத்னியாகிய சாந்தையுடன் கூடி மிகுந்த சந்தோஷத்தோடு ரோமபாத மாகாராஜாவின் அந்தப்புரத்தில் அவரால் பூஜிக்கப்பட்டு இப்பொழுதும் இருந்து வருகிறார்—பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதன் ருஷ்யஶ்ருங்கரை அழைத்துக் கொண்டு வந்தது.

“மஹாராஜாவே! தேவர்களில் உயர்ந்தவராகிய அந்த ஸனத்குமார முனிவர் இன்னமும் தங்கள் நன்மையைப்பற்றிச் சொல்லிய சிலவற்றைக் கேளுங்கள். “இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்து ஸத்யத்தில் நிலை நின்றவனாகிய தசரதனென்ற மன்னவன் உரோமபாதனைக் கண்டு ‘தர்மந் தெரிந்தவனே! நான் ஸந்தானமின்றி யிருக்கிறேன். என் வம்சத்துக்குச் சந்தான முண்டாகும்படி சாந்தையின் கணவராகிய ருஶ்யஶ்ருங்க முனிவரை அனுப்பி என் யாகத்தை நன்றாக நிறைவேற்றி எனக்குப் புத்திரர்களை யுண்டுபண்ணித்தரவேண்டும்’ என்று கேட்கப் போகிறான். ரோமபாதனும் ருஶ்யஶ்ருங்கரைத் தசரதனுடன் அனுப்பப்போகிறான். தசரத மன்னவன். அவ்வந்தணனை

யழைத்துக்கொண்டு வந்து அவனால் தான் விரும்பின புத்ரகாமேஷ்டியை நிறைவேற்றப் போகிறான். அதனால், மிகுந்த பராக்ரமம் பொருந்தியவர்களும் வம்சத்தை நிலை நிறுத்த வல்லவர்களும் உலகமெங்கும் கியாதி பெற்றவர்களுமான நான்கு புத்திரர்களை அவன் பெறப்போகிறான்'' என்று முன்பு கிருதயுகத்தில் சொல்லியிருக்கிறார். ராஜஸ்ரேஷ்டரே! தாங்கள் இப்பொழுதே புறப்பட்டு அங்க தேசத்துக்குச் சென்று மகிமை பொருந்திய ருஷ்யஸ்ருங்க முனிவரை யழைத்துக் கொண்டு வரவேண்டும்'' என்று சொன்னான்.

தசரதன் 'வஸிஷ்டர் எனக்குப் புரோஹிதர்; அவரை விட்டு ருஷ்யஸ்ருங்கரைப் புரோஹிதராக விரும்புவது நேரன்று. ஸனத்குமாரர் சொல்லிய சங்கதிகளை அவருக்குத் தெரிவித்து அநுமதி பெற்றுக்கொண்டு செய்வதுதான் நன்மையானது' என்று சுமந்திரனுக்குச் சொல்லிவிட்டு வசிஷ்டரைப் பணிந்து தான் கேள்வியுற்றவைகளைச் சொல்லி ருஷ்யஸ்ருங்கரை அழைத்து வருவதற்கு அநுமதி பெற்றுக்கொண்டான். பின்பு ஒரு நல்ல முகூர்த்தத்தில் அந்தப்புர ஸ்த்ரீகளும் மந்த்ரிகளும் பரிவாரங்களும் தன்னைப் புடைசூழ்ந்துவரப் புறப்பட்டு ரோமபாத மகாராஜாவினுடைய நகரத்துக்குச் சென்றான்.

ரோமபாதன் தனக்குத் தசரதன் நண்பனாகையால் அவன் வரவில் மகிழ்ச்சி யடைந்து அதிகமான மரியாதைசெய்து மிகுந்த மதியுள்ள ரிஷிகுமாரராகிய ருஷ்யஸ்ருங்கரைப் பார்த்து 'ஐயா! இந்தத் தசரதமன்னவன் எனக்கு நண்பன். இதனோடு தங்கள் பத்னியாகிய சாந்தைக்கு இவன் ஜனகபிதா' என்று அறிமுகஞ் செய்வித்தான். ருஷ்யஸ்ருங்கரும் தசரதனுக்கு ஆசீர்வாதஞ் செய்து அவனோடு ஸ்நேகங் கொண்டாடினார். இங்ஙனம்

தசரத மஹாராஜன் ரோமபாதன் பட்டணத்தில் ஏழெட்டு தினங்கள் வரையில் விருந்து முதலியவற்றை யருந்திக் களித்திருந்தான். பிற்பாடு அவன் ரோமபாதனைப் பார்த்து, 'ராஜோத்தமா! உன் பெண்ணாகிய சாந்தை தன் பர்த்தாவுடன் கூடி என் பட்டணத்துக்கு வரவேண்டும். அவர்களால் நடக்கவேண்டிய பெரிய காரியமொன்று நேரிட்டிருக்கின்றது' என்று சொல்ல, அவனும் அப்படியே ஆகட்டுமென்று தசரதன் அபிப்பிராயத்தை முனிவருக்குத் தெரிவித்து 'அயோத்திக்குச் சென்று வரவேண்டும்' என்று தானும் வணக்கமாய்க் கேட்டுக் கொண்டான். ரிஷிஸ்ரேஷ்டரும் 'அப்படியே செய்கிறேன்' என்று ரோமபாத மன்னவனுக்குச் சொல்லி அவனிடம் அநுமதி பெற்றுக்கொண்டு தன்மனைவியுடன் அயோத்திக்குப் புறப்பட்டார்.

பின்பு ரகுகுல திலகனாகிய தசரதன், ரோமபாதனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுத் தன் பட்டணத்தை அலங்காரம் பண்ணும்படி சில தூதுவர்களை முன்னிட்டனுப்பினான். அவர்கள் யாவரும் அயோத்திக்கு வேகமாய்ச் சென்று அவன் கட்டளையைத் தெரியப் படுத்தினார்கள். நகரம் முழுவதும் நறுமணங்கொண்ட தூபங்களினாலும் த்வஜங்களினாலும் தோரணங்களினாலும் பச்சைப் பந்தல்களினாலும் நன்றாக அலங்கரிக்கப்பட்டு விளங்கின. பின்பு மன்னவன் ருஷ்யஸ்ருங்கரை முன்னிட்டுக்கொண்டு சங்கம் துந்துபி முதலான வாத்ய கோஷங்கள் விளங்கப் பட்டணத்தில் பிரவேசித்தான்.

இங்ஙனம் பராக்ரமம் முதலியவற்றில் இந்திரனைப் போன்ற அம்மன்னவன் அவ்வந்தணர்சிகாமணியை அழைத்து வருவதைக்கண்டு நகரத்தில் உள்ள யாவரும் அதிக

மகிழ்ச்சி யடைந்தார்கள். அரசன் அவரை அந்தப்புரத்துக்கு அழைத்துக் கொண்டு சென்று விதிப்படி பூஜை செய்து அப்பொழுதே தன் காரியமெல்லாம் நிறைவேறி விட்டதாக நினைத்துச் சந்தோஷங் கொண்டான். அந்தப்புர ஸ்த்ரீகள் கட்டழகியான சாந்தையைக் கண்டு ஆனந்த மடைந்தார்கள். சாந்தையும் ருஶ்யஶ்ருங்கரும் அரசனாலும் அந்தப்புர ஸ்திரீகளாலும் அதிகமாய் மரியாதை செய்யப்பெற்றுச் சிலகாலம் அங்கு ஸுகமாக வஸித்திருந்தார்கள்.

பதினோராவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதன் யாகஞ்செய்ய ஆரம்பித்தல்.

இவ்விதம் சில நாள் சென்றன. பின்பு உலகத்தைக் களிப்பிக்கின்ற வஸந்தருது ஆரம்பமாயிற்று. தசரதன் முன்பு செய்ய உத்தேசித்திருந்த யாகத்தை நடத்த வேண்டுமென்று அப்பொழுது எண்ணங் கொண்டான். அவன் தேவனைப்போல ஒளிபொருந்தி விளங்குகின்ற அந்தணர் தலைவராகிய ருஶ்யஶ்ருங்கருக்குத் தண்டன் சமர்ப்பித்துத் 'தன் வம்சம் விருத்தியாகும்படியான ஸந்தானம் உண்டாகும் பொருட்டு யாகஞ் செய்விக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டான். அவர் 'அரசனே! யாகத்திற்கு வேண்டிய ஸம்பாரங்களைச் சித்தப்படுத்தும். பூமியைப் ப்ரதக்ஷிணம்பண்ணுவதற்குக் குதிரையைஉடனே விடும்.' என்று சொன்னார். அரசன் மந்திரியைப் பார்த்து 'ஸுமந்திரனே! வேதங்களைக் கற்றறிந்த ஸுயக்ஞர், வாமதேவர், ஜாபாலி, காஶ்யபர், புரோஹிதராகிய வஸிஷ்டர் முதலான ருத்விக்குகள் யாவரையும் வேகமாய்

அழைத்துக்கொண்டுவா' என்று கட்டளையிட்டான். ஸுமந்திரனும் அப்பொழுதே விரைந்து சென்று வேதங்களின் கரையையறிந்த அந்த அந்தணர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு அயோத்திக்கு வந்துசேர்ந்தான்.

தர்மாத்மாவாகிய தசரதன் அவர்களைப் பூசித்துப் "பூஜ்யர்களே! நான் புத்திரனில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறேன். எனக்குச் சுகம் உண்டாகவில்லை. அதுபற்றி அஸ்வமேதயாகஞ் செய்யவேண்டுமென்று எனக்கு எண்ண முண்டாயிருக்கின்றது. ஆதலால் சாஸ்த்ரங்களிற் சொன்ன க்ரமந்தவறாமல் யாகஞ்செய்ய விரும்புகின்றேன். ரிஷிகுமாரராகிய இந்த ருஸ்யஸ்ருங்கர் தன் அளவற்ற தபோமகிமையினால் எனக்கு யாகஞ் செய்விக்க வந்திருக்கிறார். தாங்கள் அனைவரும் கூடவிருந்து அதை விக்னமில்லாமல் நிறைவேற்றி வைக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். பின்பு வஸிஷ்டர் முதலான அந்தணர்கள் அம்மொழியைக் கேட்டு 'நல்லது அப்படியே செய்விக்கிறோம்' என்று புகழ்ந்து கொண்டாடினார்கள்.

அப்பொழுது ருஸ்யஸ்ருங்கர் 'மகாராஜாவே! யாகத்துக்கு வேண்டிய ஸம்பாரங்களைச் சித்தப்படுத்துங்கள். பூப்பிரதக்ஷிணம் பண்ணுவதற்குக் குதிரையை விடுங்கள். அளவற்ற பராக்ரமத்தையுடைய நான்கு புத்திரர்கள் தங்களுக்கு உண்டாகப் போகிறார்கள்' என்று சொன்னார். பின்பு தசரதமன்னவன் களிப்படைந்து மந்திரிகளை நோக்கிப் "பெரியோர்கள் வசனத்தின்படி யாகத்துக்கு வேண்டிய வஸ்துக்களைச் சேகரம்செய்யுங்கள். சூரர்களைக் காவல்வைத்துப் புரோஹிதர்களையும் பின்னொடராச்செய்து குதிரையை விடுங்கள். ஸரயூ நதியின்

வடகரையில் யாகசாலையை ஏற்படுத்துங்கள். விதிப்படி சாந்திகர்மங்கள் பலவும் நடக்கேறட்டும். அநர்த்தத்தை விளைவிக்கின்ற குறைபாடுகள் இந்த யாகத்தில் அதிகமாக நேரிடும். இதைச்செய்தால் என்ன குறைவு நேரிடுமோ என்று பயமடைந்துதான் ஸாமான்யமான அரசர்கள் இதைச் செய்யவிரும்புகின்றதில்லை. ப்ரஹ்ம ராக்ஷஸர்கள் இதைக்கெடுப்பதில் எப்பொழுதும் முயற்சியுள்ளவர்களாயிருப்பார்கள். உங்கள் புத்திபலத்தினால் அவர்கள் முயற்சி பயன்படா தொழியட்டும். அவர்கள் தங்கள் சாமர்த்தியத்தினால் ஒரு சமயம் யாகத்தைக்கெடுத்து விடுவார்களானால் யஜமானன் நசித்துப்போய் விடுவான். ஆகையால் இந்த யாகம் விதிப்படி சரியாய் நிறைவேறும்படி யுக்தியிலும் புத்தியிலும் தேர்ந்தவர்களான நீங்கள் ப்ரயத்னஞ்செய்யுங்கள்" என்று கூறினான். அந்த மந்திரிகள் 'அப்படியே செய்கிறோம்' என்று சொல்லி யாகத்திற்குவேண்டிய சடங்குகளை யெல்லாம் க்ரமப்படி நிறைவேற்றினார்கள். பின்பு அந்தணர்கள் தர்மங்களை யறிந்த தசாதனைப் புகழ்ந்து, அவனிடம் அநுமதி பெற்றுக்கொண்டு வனத்துக்குச் சென்றார்கள்.

பன்னிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

யஜ்ஞ ஸம்பாரங்களைச் சித்தப்படுத்துதல்.

இங்ஙனம் அந்த வஸந்தருதுவில் சாந்திஹோமங்களைச்செய்து ருத்விக்குகளை வரித்தபின்பு வல்லவர்களான நாலு ராஜகுமாரர்களுடனும் அத்வர்யு முதலிய ருத்விக்குகளுடனும் யாகத்தின் அஸ்வம் பூமியை வலஞ் செய்யச்சென்றது. பின்பு ஒரு வருஷம் நிறைந்துமீளவும் வஸந்தருது ஆரம்பமாயிற்று. தசாத மஹாராஜன்

தனக்கு ஸந்தானத்தின்பொருட்டு ஆரம்பித்த அஸ்வமே தத்தை நடத்துவதற்காகத் தன்னால் அத்வர்யுவாக வரிக் கப்பட்ட வஸிஷ்ட முனிவரிடஞ் சென்று கையைக்கூப் பிக்கொண்டு "பூஜ்யரே! நான் ஆரம்பித்த அஸ்வமேத யாகத்தை விதிப்படி நிறைவேற்றவேண்டும். அதற்கு ஒரு விதமான தடையும் நேரிடாதபடி செய்யவேண்டும். தாங்கள் எனக்குக் குரு. என்னிடத்தில் அந்தரங்கவிஸ் வாசமுள்ளவர். வாமதேவர் முதலானவர்களுக்கும் மே லாக விளங்குகின்றவர். ஆகையால் தாங்கள் முன்னின்று யாகத்தை நடத்துவிக்கவேண்டும்" என்று சொன்னான்.

அந்தணர்களிற் சிறந்த வஸிஷ்டமுனிவர் "அரசனே! நீ வேண்டிக்கொண்டபடி எல்லாவற்றையும் தப்பாமற் செய்விக்கிறேன்" என்று சொல்லி, அவனோடு அயோத் திக்கு வந்துசேர்ந்தார். பிற்பாடு அந்த முனிவர் மந்திரி களையும் அந்தணர்களையும் வீடு முதலானவற்றை நிரு மிக்கவல்ல சிற்பிகளையும், யாகபாத்ரங்களைச் செய்ய வல்ல தச்சர்களையும், பல கலைகளிலும் தேர்ந்து யாக விதிகளை அறிந்தவர்களுமான பெரியோர்களையும், சித் திரக் காரர்களையும் நாடகாசிரியர்களையும், கலைஞானி களையும் தன் முன்பு வரவழைத்தார்.

பின்பு அவர்களை நோக்கிக் "காரியஸ்தர்களே! நீங்கள் யாவரும் அரசன் கட்டளைப்படி யாகத்திற் காக விருப்பத்துடன் முயலவேண்டும். புதிதான கட் டடங்களைக் கட்டுவதற்குவேண்டிய செங்கற்களைச் சேக ரஞ்செய்யுங்கள். யாகம் காணவருகின்ற அரசர்கள் வஸிக் கும்படியான அகன்றும் நீண்டும் உயர்ந்தும் உள்ள ராஜ கிருகங்களை உண்டு பண்ணுங்கள். ப்ராஹ்மணர்களுக்குத் தகுதியான கிருகங்களைக்கட்டி அதில் பக்ஷ்யங்களுக்கும்

அன்ன பானங்களுக்கும் வேண்டிய வஸ்துக்களைக் குறைவில்லாமல் அமைத்து வையுங்கள். நகர ஜனங்களுக்கு விசாலமான விடுதிகளை ஏற்பாடுசெய்து அவர்களை உபசரிப்பதற்குவேண்டிய சகல பதார்த்தங்களையும் நிறைத்து வையுங்கள். ஜாதி வித்தியாசம் பாராமல் அனைவருக்கும் தகுந்தபடி ஸத்காரஞ்செய்து சந்தோஷிக்கச் செய்யுங்கள். ஸ்நேஹத்தினாலாவது கோபத்தினாலாவது பரிஹாஸத்தினாலாவது ஒருவரையும் அவமதிக்கலாகாது.

''யாககாரியத்தில் மனம் செலுத்தி ஊன்றியிருப்பவர்களையும், அவர்களைப் போன்ற சிற்பிகளையும் க்ரமந் தவறாமல் பூஜிக்கவேண்டும். அவர்களைப் போஜனத்தினாலும் தனத்தினாலும் திருப்தி யடைவிக்கவேண்டும். யாகங் காண வந்தவர்களுக்கு மனம் அலுப்புத் தட்டாதிருக்கும்படி பரதம் சங்கீதம் நாடகம் ஹாஸ்யம் பிரஸங்கம் முதலான காலக்ஷேபங்களைக் குறைவில்லாமல் வேளைக்கு வேளை மாற்றி மாற்றி நடக்கச் செய்யுங்கள். யாகாவஸானத்தில் அவரவர்கள் யோக்கியத்தைக்குத் தகுந்தபடி மரியாதை செய்வதற்கு வேண்டிய வஸ்துக்களைச் சித்தம்செய்யுங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான தொழிலை ஏற்பாடு செய்துகொண்டு அதில் கொஞ்சமும் குறைவு நேரிடாதபடி நன்றாய்க் கவனித்துக்கொண்டு வாருங்கள். உங்கள் முயற்சியினால் தான மகாராஜாவுக்கு நல்ல புகழ் கிடைக்கவேண்டியது'' என்று திட்டஞ் செய்தார்.

ஸுமந்திரன் முதலானவர்கள் அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு யாகத்துக்கு வேண்டிய எல்லாவற்றையும் குறைவில்லாமல் சேகரஞ் செய்து உக்கிராணங்களில் நிரப்பி ஒவ்வொன்றுக்கும் தகுந்த காரியஸ்தர்களை நிய

மித்து வசிஷ்டரைப் பணிந்து "மகாமுனிவரே! தங்கள் கட்டளையின் வண்ணம் எல்லாம் சித்தமாயிருக்கின்றன. மேல் செய்ய வேண்டியவற்றிற்குக் கட்டளையை எதிர் பார்க்கிறோம்' என்று கூறினார்கள்.

பின்பு வஸிஷ்டர் ஸுமந்திரனை ஏகாந்தத்தில் கண்டு "மந்திரி ஸ்ரேஷ்டனே! உலகத்திலுள்ள எல்லா அரசர் களும் யாகத்துக்கு வந்துசேரும்படி முதலில் ஸ்ரீமுகம் அனுப்பு. பிராமணர், க்ஷத்ரியர், வைஸ்யர், சூத்ரர் ஆகிய நாலு வர்ணத்தில் உள்ளவர்களுக்கும் சங்கதி தெரியப் பண்ணு. பராக்ரமம் நிரம்பிய சூரனும் நூல்களையறிந்த பண்டிதனும் வேதங்களையறிந்த ஞானியாய் ஒழுக்கத்தில் சிறந்த அரசனும் விளங்குகின்ற மிதிலா நகரத்துக்குத் தலைவனாகிய ஜனகமஹாராஜனை நீயே நேரில் சென்று ஸத்காரஞ்செய்து அழைத்துக்கொண்டு வா! அவன் நமது அரசனுக்கு நீண்ட காலமாய்ச் சம்பந்தமுள்ளவன். இன்னும் காசிராஜன் நம்மிடம் நேசங்கொண்டிருப்ப வன். அரசனுக்கு நெருங்கிய நண்பன். ஆகையால் அவ னையும் நேரில்போய் அழைத்துக் கொண்டுவா! அப்படி யே தர்மங்களை யறிந்தவர்களிற் சிறந்தவனும் நம் அரச னுக்கு மாமனுமாகிய கேகயராஜனையும் நீயேசென்று அவன் புத்திரர்களுடன் கூட அழைத்துக்கொண்டு வரு வாயாக. மிகுந்த பாக்கியசாலியும் மன்னவனுக்கு நண் பனுமாகிப் புகழ்பெற்று விளங்குகின்ற அங்கதேசத் துக்கு அரசனாகிய ரோமபாதனையும் ஸத்காரஞ்செய்து அழைத்துக்கொண்டு வா!

"அன்றியும் வங்கம் கலிங்கம்முதலான கீழ் நாட் டரசர்களுக்கும், ஸிந்து ஸௌவீரம்முதலான மேனாட் டரசர்களுக்கும் சேரம் சோளம் பாண்டியம் மு

லான தென்னுட்டரசர்களுக்கும், குருபாஞ்சாலம் முத லான வடநாட்டரசர்களுக்கும் தூதர்களை அனுப்பி வரப்பண்ணு. இன்னும் நண்பர்களையும் விதேசமன் னவர்களையும் பந்துமித்ர புத்ர வர்க்கங்களுடனும் ஸகல பரிவாரங்களுடனும் தவருமல் வந்து சேரச்செய். அவர் களையெல்லாம் க்ரமம் தவருமல் எதிர்கொண்டு சென்று அழைத்து வருவதற்குத் தகுந்த மனிதர்களை நியமனஞ் செய்! அவர்களுக்குப் பரிகாசம்,வெறுப்பு,கோபம், கடுஞ் சொல் முதலியவைகளோடு ஒன்றுங் கொடுக்கலாகாது. அப்படிக்கொடுத்தலினுல் பாபத்துக்குப் பாத்திரமாவ தோடு யஜமானனுக்கும் அழியாத அபகீர்த்தியைச் சொந்தமாக்கும். இவற்றையெல்லாம் நன்ருய்க் கவனி த்து நடந்துவரச் செய்" என்று கட்டளையிட்டார். ஸுமந் திரன் அவர் நியமனத்தின் வண்ணம் அரசர்களை யழைத் துக்கொண்டு வருவதற்குத் தகுதியான புருஷர்களை அங்கங்கு அனுப்பிவிட்டு அவரால் விசேஷித்துச் சொல் லப்பட்டவர்களைத் தானே நேரில் சென்று அழைத்து வருவதற்காகப் புறப்பட்டுப் போனுன்.

தசரத மகாராஜாவின் யாகாரம்பத்தை விதேசத் தரசர்கள் கேட்டுச் சந்தோஷித்து ரத்னம் முத்து பவ ளம் ஆடை ஆபரணம் முதலான உயர்ந்த வஸ்துக்களை எடுத்துக்கொண்டு சைன்யங்கள் புடைசூழ அயோத் யைக்கு வந்து சேர்ந்தார்கள். பின்பு வசிஷ்டரும் ருஸ்ய ஸ்ருங்கரும் அவர்களைக் கண்டு களித்துத் தசரதனைப் பார்த்து 'உத்தம புருஷனே! உன் கட்டளைப்படி அரசர் கள் யாவரும் வந்து சேர்ந்திருக்கிருர்கள். நான் மரி யாதை செய்து அவர்களைத் தகுந்தபடி விடுதிகளில் இறக்கியிருக்கிறேன். யாகத்திற்கு வேண்டிய சகல பதார்த்தங்களும் மிகுந்த ஊக்கத்துடன் சித்தஞ் செய்

யப்பட்டிருக்கின்றன: யாகசாலை ஸமஸ்த ஸம்பாரங்க ளும் நிறைந்துவிளங்குகின்றது. ஆகையால் சாஸ்திரப்படி சரியாய் அமைக்கப்பட்ட அந்த யாகசாலையில் நீ யாகஞ் செய்வதற்குப் புறப்படு" என்று சொன்னார்கள். மன்னவ னும் சுபதினத்தில் சுபமுகூர்த்தத்தில் மங்கள வாத்தி யங்கள் முழங்க யாகசாலைக்குச் சென்றான். பின்பு வஸி ஷ்டர் முதலிய ப்ராஹ்மணோத்தமர்கள் ருஶ்யஶ்ருங்கரை முன்னிட்டுக்கொண்டு யாகசாலையை அடைந்து கிரமப் படி யாக காரியங்களைச் செய்யத் தொடங்கினார்கள்.

பதின்மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

அஶ்வமேதயாகம்.

அப்பொழுது பூமியை வலம் செய்யச் சென்றிருந்தக் குதிரையும் ஒருவருஷம் நிரம்பி விட்டதனால் திரும்பி வந்து சேர்ந்தது. ஸரயூநதியின் வடகரையில் தசரத மகாராஜாவின் அஶ்வமேத யாகமானது ஆரம்பமா யிற்று. ப்ராஹ்மணர்கள் ருஶ்யஶ்ருங்கரை முன்னிட்டுக் கொண்டு மஹாத்மாவான அம்மஹீபாலன் செய்யும் அஶ்வமேதமென்கிற மஹாயாகத்தில் தாங்கள் தாங்கள் செய்யவேண்டிய கருமங்களை ஆசரிக்கத் தொடங்கினார் கள். வேதத்தின் பொருளை உணர்ந்து யாகஞ் செய்விக்க வல்லவர்களாகிய அவ்வந்தணர்கள் அனைவரும் வேதத்தி லும் மீமாம்ஸையிலும் கல்பஸூத்ரங்களிலும் சொல்லிய படி யாககாரியங்களைக் கொஞ்சமும் விடாமல் நடத்தி வந்தார்கள்.


மேலும் அவ்வந்தணர் [1] ப்ரவர்க்யமென்றும் உப

---

1. ப்ரவர்க்யம் - தேவாவை ஸத்ரமாஸத என்பது முதலாகப் ப்ர வர்க்ய ப்ராஹ்மணத்திற் சொல்லப்பட்ட கர்மவிசேஷம். உபஸதம் இஷ்டி விசேஷம்.

ஸதமென்றும் சொல்லப்படுகிற கருமங்களைச் சாஸ்த்ரம் தவருமல் செய்துவிட்டு, மற்றும் நடத்த வேண்டிய நடவடிக்கைகளையும்வழுவாமல் நடத்திவந்தார்கள். அவர்கள் மிகுந்தகளிப்புடன் அந்தந்த கருமங்களுக்குரியதேவதைகளை நன்ருகப் பூஜை செய்து காலையிற் செய்யவேண்டிய ஹோமம் முதலியவைகளையும் விதிப்படி நடத்திஞர்கள். அதில் இந்த்ரனுக்குக் கொடுக்க வேண்டிய ஹவிர்ப்பாகமும் க்ரமம் தவருமல் கொடுக்கப்பட்டது. பாபம் அனைத்தையும்போக்கவல்லதான ஸோமலதையை எல்லா அந்தணர்களும் புகழ்ந்து கொண்டார்கள். பகற் பொழுதிலும் மாலைப்பொழுதிலும் செய்து முடிக்க வேண்டிய ஹோமங்களும் க்ரமப்படி நிறைவேறின. அந்த யாகத்தில் ஒன்றுக்குப்பதில் வேருென்ருகச் செய்யப்பட்டதாவது, செய்யாமல் விட்டுப்போனதாவது ஒன்றும் நேரிடவில்லை. மந்த்ரத்திஞலாவது தந்த்ரத்திஞலாவது ஒரு குறையும் நேரிடவில்லை. அவர்கள் எல்லாவற்றையும் நிர்விக்னமாகச் செய்ததனுல் ஒவ்வொன்றும் நன்ருய் விளங்கிற்று. அந்த மஹாயாகம் நடக்கும்பொழுது வேலை செய்து அலுத்தவனும் பசியால் வருந்தினவனுமாக ஒருவனும் இருக்கவில்லை. கல்வியில்லாமலும் நூறு சிஷ்யர்கள் பின்ருெடராமலுமிருக்கின்ற அந்தணன் ஒருவனும் அங்குக் காணப்படவில்லை.

அந்த யாகத்தில் நாள் தோறும் முனிவர்களும் அந்தணர்களும் அரசர்களும் சூத்ரர்களும் ஸந்யாஸிகளும் நோயாளிகளும் பெண்களும் சிறியவர்களும் இடைவிடாமல் பக்ஷ்ய போஜ்யங்களோடு கூடிய அன்னத்தைப் புஜித்துக்கொண்டிருந்தார்கள். அங்குப் பரிமாறப்பட்ட அன்னபானங்களின் சுவை அமிர்தத்தைக் காட்டிலும் அதிகமாயிருந்தது. அவர்கள்



10. தசரதன் அஸ்வமேதமும் புத்ரகாமேஷ்டியுஞ்
செய்தல்.

எவ்வளவு புசித்தாலும் பரிமாறுகின்றவர்களுக்குத் திருப்தி பிறக்காமல் "இன்னும் கொஞ்சம் உண்ணுங்கள். இது அதிக ருசியுள்ளது. இது திட்டமான சூடாயிருக்கிறது" என்று விடாமல் போட்டுக்கொண்டேயிருந்தார்கள். அவ்விடத்தில் 'உண்ணுங்கள் உண்ணுங்கள்' என்னும் கூச்சலும் அதற்கு எதிராகப் 'போதும் போதும்' என்னும் கூச்சலுமே அதிகமாய்ப் பரவியொலித்தது.

பிரதிதினமும் பாகசாஸ்திரப்படி சித்தஞ் செய்யப்பட்ட அன்னராசிகள்மலைமலையாகத்தென்பட்டன. மஹாத்மாவாகிய அம்மன்னவனால் செய்யப்படுகின்ற அந்த மகா யாகத்தில் பல தேசங்களிலிருந்தும் வந்த புருஷர்களும் ஸ்த்ரீகளும் கூட்டங் கூட்டமாக அன்னபானங்களால் மிகவும் திருப்தியடைந்திருந்தார்கள். ப்ராஹ்மணர்கள் யாவரும் உபசாரங்களால் களித்து 'இந்த அன்னம் அறுசுவையும் அமைந்து அன்பும் உபசாரமும் பொருந்தியிருக்கின்றது. நாங்கள் அதிகமாய்த் திருப்தியுண்டாக்கப் பட்டோம். மகாராஜாவே! தங்களுக்கு மங்களம் உண்டாகட்டும்' என்று பலவகையாகப் புகழ்ந்துகொண்டாடினார்கள். உதார சீலனான தசரத மஹாராஜன் அவற்றைக்கேட்டுச் சந்தோஷங் கொண்டான். சிறந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிந்த புருஷர்களிற் பலர் ப்ராஹ்மணர்களுக்குப் பரிமாறினார்கள். சிலர் அழகான ரத்னகுண்டலங்களை யணிந்துகொண்டு பக்ஷயங்களையும் பதார்த்தங்களையும் கொண்டுவந்து கொடுத்து அந்தப் புருஷர்களுக்குச் சஹாயமாயிருந்தார்கள்.

ஹோமம் முடிந்த பிற்பாடு இடை வேளைகளில் கல்விகளைக் கற்று நன்றாய்ப்பேசவல்ல ருத்விக்குகள் பலரும் ஒருவரை யொருவர் ஜயிக்கவேண்டும் என்று பலவிதமான ஹேது வாதங்களைச் செய்துகொண்

டிருந்தார்கள். மேலும் அவர்கள் பெரியோர்களால் ஏவப்பட்டு நாள்தோறும் செய்யவேண்டிய கருமங்களைச் சாஸ்திரப்படி சரியாய் நடத்திக்கொண்டும் வந்தார்கள். யாகத்திற்கு வந்த அந்தணர்களில் சிக்ஷை, வியாகரணம், சந்தஸ்ஸு, நிருத்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்ற ஆறு அங்கங்களை உணராதவனும் ப்ரஹ்மசர்யம் முதலான வ்ரதாநுஷ்டானங்களைச் செய்யாதவனும் பெரியோர்கள் முகமாகப் பல சாஸ்திரங்களைக் கேட்டறியாதவனும், ஒருவனுவது தென்படவில்லை.

யாக ஸபைக்கு வந்திருந்த ப்ராஹ்மணர்களில் சாஸ்த்ர வாதஞ்செய்ய வல்லமை யில்லாதவர்கள் கிடையார். அந்த யாகத்தில் வில்வமரத்தினுற் செய்யப்பட்ட யூபஸ்தம்பங்கள் ஆறும், கருங்காலி மரத்தினுற் செய்யப்பட்ட யூபஸ்தம்பங்கள் ஆறும், பலாசமரத்தினுற் செய்யப்பட்ட யூபஸ்தம்பங்கள் ஆறும், தேவதாருமரத்தினுற் செய்யப்பட்ட யூபஸ்தம்பங்கள் இரண்டும், நறுவிலி மரத்தினுற் செய்யப்பட்ட யூபஸ்தம்பம் ஒன்றும் ஆக இருபத்தொரு யூபஸ்தம்பங்கள் நாட்டப்பட்டன. அவைகளை நடும்பொழுது ஒவ்வொன்றுக்கும் நடுவில் ஒரு மார்பளவு இடம் வெளியாயிருந்தது. அவை யனைத்தும் சாஸ்த்ரங்களை யுணர்ந்து யாகஞ்செய்விக்க வல்லஅறிஞர்களால் ஏற்படுத்தப்பட்டன. அந்த யாகசாலை தங்கப்பட்டங்களால் சிங்காரிக்கப்பட்டிருந்தது. யூபஸ்தம்பம் ஒவ்வொன்றும் இருபத்தொருபிடி அளவைக் கொண்டிருந்தது. ஒவ்வொன்றும் உயர்ந்த வஸ்த்ரத்தினுல் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவைகள் எட்டுப் பட்டைகள் தீர்க்கப்பெற்றுக் கணு முதலான குற்றங்கள் இராமல் உறுதியுள்ளவைகளாய்த் தைலம் பூசப்பட்டுப் பளபளவென்று ப்ரகாசித்தன. அவைகள் புஷ்பங்களாலும் மணம் பொருந்திய

சந்தனங்களாலும் அலங்காரஞ் செய்யப்பட்டு ஆகாயத்தில் ஸப்தரிஷிகள் நக்ஷத்திர வடிவமாக ஒளி பொருந்தி விளங்குவதுபோல விளங்கிக்கொண்டிருந்தன.

யாககாரியங்களில் வல்லவர்களான வேதியர்கள் நூல் தவருமல் தகுந்த அளவுடன் செய்யப்பட்டதும் நன்றாய் வெந்ததுமானசெங்கற்களைக்கொண்டுயாகவேதிகையைக் கட்டிவைத்திருந்தார்கள். அந்தஅக்னிவேதிகையானது இறக்கைகளையும் வாற்புறத்தையும் விரித்துக் கீழே பார்த்துக்கொண்டு கிழக்கு முகமாயிருக்கின்ற கருடனைப் போன்ற திவ்ய உருவம் பெற்றுப் பொன்னுல் அமைக்கப்பட்ட இறகுகளைப் பொருந்தி ஸாமான்ய யாகங்களிற் சொல்லிய ஆறு ப்ரஸ்தாரங்களுக்கு மேல் மூன்று பங்கு அதிகமாய், அதாவது பதினெட்டு ப்ரஸ்தாரங்களுடன் விளங்கிற்று. சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்ட வண்ணம் பசுக்களும் ஸர்ப்பங்களும், பக்ஷிகளும் தேவதைகளை உத்தேசித்து விதிப்படி அதற்குத் தகுதியான யூபஸ்தமபங்களில் கட்டப்பட்டிருந்தன. பசுக்களை வதிக்க வேண்டிய ஸமயம் வருகையில் ஆமை முதலான [1] ஜந்துக்களையும் மற்றும் பசுக்களையும் ருத்விக்குகள் யூபஸ்தம்பத்தில் கொண்டுவந்து கட்டினர்கள். அந்த ஸ்தம்பங்களில் மொத்தம் முந்நூறு பசுக்களும் குதிரை ஒன்றும் கட்டப்பட்டிருந்தன.

அப்பொழுது பட்ட மஹிஷியான கௌஸல்யா தேவி மற்ற ராஜ பத்னிகளுடன் அவ்விடத்துக்கு

1. இங்குக் கட்டமுடியாத பாம்பு முதலியவற்றைக் கட்டுகையாவது கூண்டிலடைத்து வைத்தல் 'இந்த்ராய ராஜ்ஞே ஸூகரோ வருணாய ராஜ்ஞே க்ருஷ்ண:' இதுமுதலிய அநுவாகங்களில் அந்தந்தப் பசுக்களும் அந்தந்தத் தேவதைகளும் படிக்கப்பட்டிருக்கின்றன.

வந்து அந்த குதிரையை வலமும் இடமுமாக ப்ர தக்ஷிணஞ் செய்து மிகுந்த ஸந்தோஷத்துடன் ஸ்வர்ணமயமான மூன்று * கத்திகளால் அதன் அங் கங்களில் வெட்டுத் தெரியும்படி கீறினுள். அப்படிச் செய்த பின்பு தர்மஸித்தியையும் சந்தானத்தையும் விரும்பின கௌஸல்யாதேவி அந்தச் சவத்தைத் தீண்ட வேண்டுமேயென்ற வெறுப்பில்லாமல் அந்தக் குதிரை யோடுகூட ஒரு இரவு முழுவதும் வஸித்திருந்தாள். அப்பொழுது தசரதமஹா ராஜன் [1] மஹிஷி,பரிவ்ருத்தி,

---

* இங்குப் பொன்னுற்செய்த ஊசியென்றும் பொருள் கொள்க.

இங்கு:—

'கௌஸல்யா தம் ஹயம் தத்ர பரிசர்ய ஸமந்தத:।

க்ருபாணைர்விஸஸாரைநம் த்ரிபி: பரமயா முதா॥'

என்பது மூலம். இதில் 'க்ருபாணை:' என்று சொல்லப்பட்டது. க்ரு பாணமென்ருல் கத்தி. ஆகையால் மூன்று கத்திகளால் என்று சொல்லப்பட்டது. ஆயினும் இங்குக் கத்தியென்பதை ஸ்வர்ணமய மான ஊசியெனக் கொள்ளவேண்டும். இல்லாதபக்ஷத்தில் 'ஸௌ வர்ணீபிஸ் ஸூசிபி: பத்நயோ உ ஶ்வஸ்யா ஸிபயாந் கல்பயந்தி'என் கிற ஸூத்ரத்துக்கு விரோதமாகும்.

1 பட்டாபிஷேகம்பெற்றவள்மஹிஷி; அரசன் சிலநாள் அன்பு கொண்டிருந்து பின்பு உபேக்ஷிக்கப் பட்டவள்பரிவ்ருத்தி; ராஜவேஶி யை வாவாதை; ராஜாவுக்குப் பாத்ரங்கொடுப்பவள்பாலாகலி; இப்படி யல்லாமல் அரசனுக்கு க்ஷத்ரியஜாதி மனைவியை மஹிஷி என்றும். வைஶ்யஜாதி மனைவியை வாவாதைஎன்றும், சூத்ரஜாதிமனைவியைப் பரிவ்ருத்தி என்றும் சிலர் கொள்வார்கள். இந்நால்வரில்—மஹிஷி யை ப்ரஹ்மாவுக்கும், பரிவ்ருத்தியை உத்காதாவுக்கும், வாவாதை யை ஹோதாவுக்கும்,பாலாகலியை அத்வர்யுவுக்கும் அரசன் தக்ஷிணை யாகக்கொடுக்கவேண்டும். பின்பு அந்த ருத்விக்குகள் அவர்களுக்குப் பதிலாகத் தனத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களைக் கொடுத்துவிடு வார்கள்.

வாவாதை, பாலாகலி என்னும் தனது நான்கு பத்னிகளை யும் ப்ரஹ்மா, உத்காதா, ஹோதா, அத்வர்யு என்ற நான்கு ருத்விக்குகளுக்கும் முறையே தக்ஷிணையாகக் கொடுத்தான்; அவர்களும் அந்த உயர்ந்த ராஜஸ்த்ரீ களைக் கைப்பற்றினார்கள்.

பின்பு இந்த்ரியங்களை வென்று யாக ப்ரயோகங் களில் தேர்ச்சிபெற்ற அத்வர்யுவானவன் அக்குதிரை யின் குடலையெடுத்து விதிப்படி அக்னியில் பக்குவஞ் செய்தான். தசரத மன்னவன் அந்தக் குடலை அக்னியில் ஹோமஞ் செய்யும்போது விதிப்படியிருந்து தன் பாபங்கள் போகும் வண்ணம் அந்த ஹோம கந் தத்தை முகர்ந்தான். ருத்விக்குகளாக வரிக்கப்பட்ட பதி னாறு ப்ராஹ்மணர்களும் அந்த அஶ்வத்தின் எல்லா அங் கங்களையும் எடுத்து மந்த்ரங்களைச் சொல்லிக்கொண்டு விதிப்படி அக்னியில் ஹோமஞ்செய்தார்கள். மற்றைப் பசுக்களின் ஹவிஸ்ஸை இலவிக்கிளைகளால் செய்யப்பட்ட பாயில் இட்டுச் சுத்தஞ்செய்தார்கள். அஶ்வத்தின் ஹவி ஸ்ஸை மாத்திரம் நீர்வஞ்சிக் கொடியால் செய்யப்பட்ட பாயில் இட்டுச் சுத்தஞ் செய்தார்கள். அஶ்வமேதம் செய்யவேண்டிய நாட்கள் அநேகமாயினும் கல்பஸூத் ரங்களிலும் அதற்கு மூலமான வேத ப்ராஹ்மண பாகங் களிலும் மூன்று தினங்கள் தான் கணக்கிடப்பட்டிருக் கின்றன. அதில் முதல் நாள் சதுஷ்டோம் என்றும், இரண்டாவது நாள் உக்த்யம் என்றும், மூன்றாவது நாள் அதிராத்ரம் என்றும் பெயர் பெறும். அந்தப் பெயர்களுக் குச் சம்பந்தமான க்ரியைகளை நடத்துவதால் அந்த அந்த தினங்களுக்கு அவ்வவற்றின் பெயரால் வ்யவஹாரம் நட ந்து வருகின்றது. அவற்றை யல்லாமல் இதர சாஸ்த்ரங்க ளில் இந்த அஶ்வமேதத்துக்கு மற்றுஞ் சில உபயாகங்க

ளைச் செய்யவேண்டும் என்று சொல்வதனுல் யாகநிர்வாக கர்கள் அவைகளையுங் குறைவறச்செய்து முடித்தார்கள். அவை ஜ்யோதிஷ்டோமம் ஒன்று. ஆயுர்யாகம் ஒன்று. அதிராத்ரம் இரண்டு. அபிஜித்து ஒன்று. விஸ்வஜித்து ஒன்று. அப்தோர்யாமம் ஒன்று. ஆக ஏழு யாகங்கள். அவஸ்யமான அந்த மூன்று தினங்கள் ஒழிய மற்றை நாட்களில் உபயாகங்கள் ஏழையும் அவ்வரசன் செய்து முடித்தான்.

இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த அந்தத் தசரத மஹாராஜன் தன் குலத்தின் புகழ் மேன்மேலும்வளர்ந்து வரும்படி ஹோதாவுக்குக் கிழக்குத் திசையையும், அத்வர்யுவுக்கு மேற்குத் திசையையும், ப்ரஹ்மாவுக்குத் தெற்குத் திசையையும், உத்காதாவுக்கு வடக்குத் திசையையுமாக க்ரமப்படி தக்ஷிணை கொடுத்தான். இது அவன் புதிதாய்க் கற்பித்துச் செய்ததன்று. தானே தோன்றிய நான் முகக்கடவுள் செய்த அஸ்வமேத யாகத்தில் முன்பு இங்ஙனம் தக்ஷிணை எற்படுத்தப் பட்டுள்ளது. ஆகையால் மஹாபுருஷனுகிய தசரத மன்னவன் க்ரமப்படி யாகத்தை நிறைவேற்றி அது பூர்த்தியாகும் பொருட்டுப் பூமி யனைத்தையும் ருத்விக்குகளுக்குத் தானஞ் செய்தான். அந்த அந்தணர்கள் புகழ்கொண்டு, விளங்குகின்ற அந்த மன்னவனை நோக்கி, 'மஹாராஜாவே! இந்தப் பூமண்டலமனைத்தையும் தாங்கள் ஒருவரே ஆளத்தக்கவர். எங்கள் போன்றவர்களுக்கு இதில் கொஞ்சமும் பிரயோஜனங் கிடைபாது. ஏனென்றால், பரிபாலிக்கச் சக்தியில்லாதவர்களும், இராஜ தந்திரம் அறியாதவர்களும் பராக்ரம மில்லாதவர்களும் எப்பொழுதும் வேதமோதுவதையே பெருந் தொழிலாய்க் கொண்டிருக்கின்றவர்களுமாகிய எங்களுக்குப் பூமி பலனைக் கொடுக்கமாட்

டாது. தங்களுக்கு இது ஸஹஜமான தொழில். தாங்கள் இந்தப் பூமண்டலத்துக்குப் பதிலாக இதன் விலையை எங்களுக்கு கொடுத்து விடுங்கள். விலைமதிக்க முடியாத பூமண்டலத்துக்கு எங்ஙனம் விலைகொடுப்ப தென்று சிந்திக்கவேண்டாம். மேலான ரத்நங்களையும் உயர்ந்த பொன்னையும் நல்ல பசுக்களையும் எங்களுக்குக் கொடுத்து விடுங்கள். நாங்கள் திருப்தியடைகிறோம்' என்று சொன்னார்கள்.

இங்ஙனம் வேதங்களின் கரை யறிந்தவர்களான அந்த அந்தணர்கள் வசனத்தை கேட்ட மன்னவன் அவர்களுக்குப் பத்துலக்ஷம் பசுக்களையும் பத்து கோடி பொன்னையும் நூறுகோடி வெள்ளியையும் தானஞ் செய்தான். பின்பு எல்லா ருத்விக்குகளும் ஒன்று சேர்ந்து தங்களுக்கு மொத்தமாக வந்த அந்தத் திரவியங்களைத் தங்களுக்குப் பங்கிட்டுத்தரும்பொருட்டு ருஶ்யஶ்ருங்க முனிவரிடத்திலும் வஸிஷ்ட முனிவரிடத்திலும் கொண்டுவந்து கொடுத்தார்கள். தருமந்தெரிந்த அவ்விருவரும் அவர்களுக்குச் சரியாய்ப் பங்கிட்டுக் கொடுக்கப் பெற்றுக்கொண்டு மனக்களிப்புற்று மன்னவனை நோக்கி 'எங்களுக்கு மிகுந்த ஸந்தோஷமாய் விட்டது. தாங்கள் நல்ல புத்திர சந்தானத்தை அடையவேண்டும்' என்று அநுக்ரகம் செய்தார்கள். அப்பொழுதுமன்னவன் யாகத்தைப் பார்க்க வந்த அந்தணர் அனைவருக்கும் பொன்னைக் கணக்கில்லாமல் கொடுத்தான். அப்பொழுது பேதையாகிய ஒரு அந்தணன் தனக்கு உயர்ந்த கைவளை வேண்டும் என்று யோசிக்க, உடனே தசரதன் தன் விலையுயர்ந்த கைவளைகளைக் கழற்றிக்கொடுத்தான். ப்ராஹ்மணர்கள் யாவரும் அரசன் கொடுத்த தக்ஷிணைகளால் அதிகமாக மனங் களித்தார்கள்.

அந்தணர் விஷயத்தில் அளவற்ற அன்புகொண்ட அம்மஹீபாலனும் ஸந்தோஷத்தினால் கண்கள் பரந்து ஆநந்த நீர் சொரிய அவர்களுக்கு நமஸ்காரஞ் செய்தான். அந்தணர் அனைவரும் அரசனுக்கு விதிப்படி ஆசீர்வாதஞ் செய்தார்கள். இங்ஙனம் பாபங்களைப் போக்க வல்லதும் விண்ணுலகத்தை அளிக்க வல்லதும் மற்ற அரசர்களால் செய்ய முடியாததும் யாகங்களிற் சிறந்ததுமான அஸ்வமேதம் என்னும் அந்த மஹாயாகத்தைக் குறைவறச் செய்து முடித்தமையால் அந்த மன்னவன் அதிக ஸந்தோஷத்தை யடைந்தான். அவன் பிற்பாடு ருஷ்யஸ்ருங்கரைப் பார்த்து 'நல்லொழுக்க முள்ளவரே! என் வம்சம் விருத்தியாகும்படியான காரியத்தை இனித் தாங்கள் செய்யவேண்டும்' என்று வேண்டிக் கொண்டான். அவர் 'ராஜாவே! குலத்தை விருத்திசெய்ய வல்ல நான்கு புத்திரர்கள் தங்களுக்கு உண்டாகப் போகிறார்கள்' என்று சொன்னார். அவர் சொல்லிய அந்த இனியவசனங்களைக் கேட்டுத் தசரதமன்னவன் அந்த முனிவரை மீளவும் நமஸ்கரித்துச் சந்தோஷ மடைந்தான்.

பதினான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

{ தேவதைகள் ஸ்ரீமகா விஷ்ணுவினிடத்தில் ராவணன் துஷ்டத்தனத்தையும் கொடுமையையும் வெளியிடல். }

அதர்வவேதங்களை நன்றாய் அறிந்தவராகிய ருஷ்யஸ்ருங்கமுனிவர் அரசனுக்கு நான்கு புத்திரர்கள் தோன்றுவார்கள் என்று வாக்களித்த பின்பு 'இவனுக்குப் பிள்ளை பிறக்கும்பொருட்டுச் செய்யவேண்டிய கருமம் யாது' என்று சற்றுநேரம் தியானிக்கத் தொடங்கினார்.

பின்பு அவர் அரசனை நோக்கி "நான் தங்களுக்குப் பிள்ளை யுண்டாகும் பொருட்டுச் சாஸ்த்ரங்களில் ஏற்பட்டதும் பிள்ளையைப் பிறப்பிக்க வல்லதும் அதர்வ வேதத்தில் உள்ள மந்த்ரங்களைக் கொண்டதுமான ஒரு உயர்ந்த யாகத்தை விதிப்படி செய்யப்போகிறேன்" என்று சொல்லி அப்படியே பிள்ளையைத் தரவல்லதான அந்த மகாயாகத்தை ஆரம்பித்து மந்த்ரங்களிற் சொல்லியபடி அக்நியில் சரியாய் ஹோமஞ் செய்தார். அப்பொழுது தேவதைகளும் கந்தர்வர்களும் ஸித்தர்களும் நான்முகக்கடவுளும் மற்றும் மஹர்ஷிகளும் ஒன்றுகூடி அந்த யாகத்தில் தங்கள் தங்களுக்குச் சொந்தமான ஹவிர்ப்பாகங்களைப் பெற்றுச் செல்வதற்கு வந்தார்கள்.

அவர்கள் யாவரும் அந்த யாகசபையில் பிறர் காணாதபடி அந்த ரங்கத்தில் இருந்து உலகத்தைப் படைக்கின்ற ப்ரஹ்மதேவனைப் பார்த்துப் "பகவானே! தங்களிடம் வரம்பெற்று யாவராலும் தடுக்கமுடியாத பராக்ரமத்தை அடைந்திருக்கின்ற ராவணன் என்னும் ராக்ஷஸன் எங்கள் அனைவரையும் தொந்தரவு செய்து வருகிறான். நாங்கள் அவனை அடக்குவதற்கு வல்லமையற்றிருக்கிறோம். தாங்கள் முன்பு அவனிடத்தில் ப்ரீதி கொண்டு எங்களால் எவ்விதத்திலும் சாவுண்டாகாமற்படிக்கு வரங்கொடுத்திருக்கிறீர்கள். தங்கள் வரத்தைப் பாராட்டிக்கொண்டு நாங்களும் அவன் செய்யும் கொடுஞ்செயல்களையெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கிறோம். அவன் தன் கொடுஞ்செயலினால் மூன்று லோகங்களையும் நடுங்கச் செய்கிறான். உயர்ந்தவர்களான திக்பாலர்களைப் பகைக்கிறான். தேவர்களுக்கு அரசனாகிய மஹேந்திரனையே பட்டணத்தினின்றும் தொலைத்து விடுவதற்கு எண்ணங்கொண்டு

முயன்று வருகிறான். அவன் மதிமயங்கிக் கருவித்து எதிரிடக்கூடாத ரிஷிகளையும் யக்ஷர்களையும் கந்தர்வர்களையும் ராகு முதலிய அஸுரர்களையும் அந்தணர்களையும் அலக்ஷ்யஞ்செய்து அவர்களை அதிகமாய் வருத்தி வருகிறான்.

"அவன் க்ரீடாபர்வதம் முதலிய இடங்களில் திரிந்துகொண்டிருக்கும்பொழுது சூரியன் சுடும்படி காயமாட்டான். அவன் பூந்தோட்டங்களில் விளையாடிக் கொண்டிருக்கையில் காற்றும் வேகமாக வீசுகின்றதில்லை. எப்பொழுதும் அலைகளையுடைய ஸமுத்ரமும் அவனைக்கண்டால் அசையாமலிருக்கின்றது. கர்ப்பம் கலங்கும்படி மிகவும் பயங்கரமாய்த் தோன்றும் அந்த ராக்ஷஸனிடத்தில் எங்களுக்குப் பயம் அதிகமாயிருக்கின்றது. ஆகையால் அவனைக் கொல்லவேண்டிய உபாயத்தை ஆலோசிக்கவேண்டும்'' என்று கூறினார்கள்.

நான் முகக்கடவுள் சற்று ஆலோசித்துத் "தேவர்களே! துராத்மாவாகிய அந்த ராவணனைக் கொல்வதற்கு எனக்கு ஒரு உபாயம் தோன்றுகின்றது. அவன் கந்தர்வர்களாலும் யக்ஷர்களாலும் தேவர்களாலும் அஸுரர்களாலும் எனக்கு வதம் நேரிடக்கூடாதென்று வரம் கேட்டுக்கொண்டான். நானும் அப்படியே ஆகட்டும் என்று சொல்லியிருக்கிறேன். அவன் வரம் விரும்பும்பொழுது மானிடர்களைக் கேட்டால் தனக்கு அகௌரவமுண்டாகும் என்று அவர்களைப்பற்றி என்னிடம் கேட்கவில்லை. ஆகையால் மானிடர்களைக் கொண்டே அவனைக் கொல்லவேண்டும். அவனுக்கு வேறு ம்ருத்யு கிடையாது'' என்று சொன்னார்.

தேவதைகளும் மஹர்ஷிகளும் அதைக்கேட்டுச் சந்தோஷமடைந்தார்கள். இங்ஙன மிருக்கும்பொழுது எப்

பொருள்களிலும் உள்ளும்புறமும் நெருங்கி வியாபித்திருக்கும் தன்மையனும் ஸர்வேஸ்வரனுமாகிய ஸ்ரீமஹாவிஷ்ணு தாம் சிலரை ரக்ஷிக்கும்படியான காலம் வாய்த்ததென்ற சந்தோஷத்தினல் கருமேகத் திருமேனியில் மிக்க ஒளிபெற்று ஆஸ்ரிதர்களைக் ஆதரிக்கும் கருவிகளாகிய சங்கு சக்கரம் கதை கட்கம் கோதண்டம் என்ற பஞ்சாயுதங்களையும் ஏந்திக்கொண்டு பீதாம்பரம் விளங்க எழுந்தருளி நான்முகக் கடவுளின் அருகே வந்து நின்றூர். தேவர்கள் அனைவரும் அவரைப் பணிந்து "கடவுளே! தாங்கள் உலகங்களுக்கு நன்மை செய்யும் பொருட்டுத் தானகவே ஸித்தமாயிருக்குந் தன்மையுள்ளவர். அப்படிப்பட்ட தங்களை நாங்கள் லோக ரக்ஷணத்தின் பொருட்டுத் தூண்டவேண்டியது ஒன்றும் இல்லையானலும், அவ்விஷயத்தில் வீணகவே தங்களை ஏவக் கவலைப்படுகிறோம்.

"ஸகல தர்மங்களையும் அறிந்து தான் சீலனகி மஹர்ஷியைப்போல விளங்குகின்றவனும் அயோத்திக்கு அதிகாரியானவனும் அதோ யாகஞ் செய்துகொண்டிருப்பவனுமான தசரத மஹாராஜாவுக்கு ஞானம் செல்வம் புகழ் என்பவைகளே வடிவங்கொண்டு வந்தாற்போல விளங்குகின்ற மூன்று மனைவிகளிடத்திலும் தாங்கள் தங்களை [1] நான்குவகையாய்ப் பிரித்துக்கொண்டு நான்கு புத்திரர்களாய்ப் பிறக்கவேண்டும். ஏனென்றல் அவ்வரசன் மனைவிகளிடத்தில் தாங்கள் மனிதனய்ப் பிறந்து வீர்யபலங்களால் மேன்மேலும் வளர்ந்து உலகங்களுக்

---

1 நான்கு வகையாகப் பிரித்துக்கொண்டு நான்கு பிள்ளைகளாய்ப்பிறப்பதற்குக் காரணம் ராவணனையும், இந்த்ராஜித்தையும் லவணஸுரனையும், கந்தர்வர்களையும் வரிசையாகக் கொல்லுவதற்கு என்பது கோவிந்தராஜீயம்.

கெல்லாம் பகைவனுகி எங்களாலும் வெல்ல முடியாத ராவணனை யுத்தத்தில் முடிக்கவேண்டும். மூர்க்கனுகிய அந்த ராவணன் என்னும் அரக்கன் வீர்யத்தின் மிகுதியினுல் அடக்கமுடியாதவனுகிக் கர்வங்கொண்டு தேவர்களையும் கந்தர்வர்களையும் ஸித்தர்களையும் மஹர்ஷிகளையும் பீடித்துக் கொண்டிருக்கிறுன். அவன் பின்னும் நந்தனவனத்தில் விளையாடிக்கொண்டிருக்கின்ற கந்தர்வர்களையும் அப்ஸர ஸ்த்ரீகளையும் மனவிரக்கமில்லாமல் மிகவும் கொடுந்தன்மையோடு வதை செய்கிறுன். ஆகையால் தாங்கள் அவனை அவசியம் கொல்லவேண்டும். அவனை வதம் செய்யும்பொருட்டு யக்ஷர்களும் கந்தர்வர்களும் ஸித்தர்களும் முனிவர்களும் தேவர்களுமாகிய நாங்கள் அனைவரும் தங்களைச் சரணமடைகிறோம்.

“பரமசிவன் பிரமன் முதலானவர்கள் இருக்கையில் என்னை ஏன் சரணமடைய வேண்டும் என்று கேட்க வேண்டாம். தேவனே தாங்கள் தான் எங்கள் அனைவர்க்கும் மேலான பிரபு. தாங்கள் எப்படிப்பட்ட சத்ருவும் பயந்தோடும்படியான பராக்ரமத்தைக் கொண்டு விளங்குகிறீர்கள். தங்களையன்றி எங்களுக்கு வேறுகதி கிடையாது. தேவ தேவரே! அந்த ராவணன் பிறந்தது முதலாகக் கர்வங்கொண்டவன். அனைவரும் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நடுங்கும்படியான பராக்ரமமுடையவன். பிரமதேவனுடைய வரத்தினுல் அதிக கர்வங்கொண்டு தேவேந்திரனேடு பகைத்து ஜீவகோடிகள் ஐயோ ஐயோவென்று கதறியழும்படி வருந்தச் செய்கிறுன். காட்டில் உள்ள காய் கிழங்குகளை அருந்தித் தவஞ்செய்து பொழுது போக்குகின்ற தாபஸர்களை வருத்தி வருகிறுன். அவன் கொடுமையை எங்களால் அளவிட்டுச் சொல்ல முடியாது. தேவ தேவனே! மிகு

ந்த கொடுமை கொண்டு உலகங்களைத் துன்பப்படுத்து கின்ற ராவணனென்ற அரக்கனை அவன் படைகளோடும் சுற்றத்தாரோடும் தாங்கள்யமன் வீட்டுக்கு அதிதியாகச் செய்யவேண்டும்.'' என்று வேண்டிக்கொண்டார்கள்.

தேவதைகளிற் சிறந்து அவர்களுக்குப் பிரபுவாகி உலகம் யாவும் அடிவணங்க நிற்கின்ற ஸ்ரீ மஹாவிஷ்ணு வானவர் தன்னைச் சரணமடைந்த நான்முகன் முத லிய தேவர்களை நோக்கி "நீங்கள் பயப்படவேண்டாம். உங்களுக்கு நன்மையுண்டாகும். கெடு நினைவுகொண்டு தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் பயத்தை விளைவிக்கின்ற வனும் கொடியவனுமாகிய ராவணனையும் அவன் பிள்ளை களையும் பெயரன்மார்களையும் நண்பர்களையும் மந்த்ரிகளை யும் ஜ்ஞாதிகளையும் மற்றுமுள்ள பந்துக்களையும் யுத்தத் தில் முடித்துத் தர்மத்தை நிலை நிறுத்தும் பொருட்டுப் பூமியைப் பரிபாலனஞ் செய்துகொண்டு பதினோராயிரம் வருஷங்கள் மனிதனாக இருக்கப்போகிறேன்'' என்று திருவாய் மலர்ந்தனர்.

ஆக்குவது அழிப்பது முதலான திருவிளையாடல் களைச் செய்துகொண்டு ஸகலாத்மசேஷியாய் விளங்கு கின்ற ஸ்ரீமந்நாராயணனுக்கு இஃது எம்மாத்திரம்! செவ்வரி பரந்து நீண்ட தாமரை யிதழ்போன்ற பெரிய கண்களையுடைய அந்தப் பரம்பொருள் தேவதைகளுக்கு இங்ஙனம் வரங் கொடுத்து அவர்கள் வேண்டிக்கொண் டபடி மநுஷ்ய லோகத்தில் தான் வந்து பிறப்பதற்கு அயோத்தியை இடமாகத்தெரிந்து தசரதமஹாராஜனைத் தகப்பனாக விரும்பினான். பின்பு முப்பத்து முக்கோடி தேவதைகளும் அப்ஸரஸ்த்ரீகளும் மதுசூதனனாகிய அந்த மஹாபுருஷனை வேதாந்த விஷயமான துதிகளால் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸ்ரீ மஹாவிஷ்ணு மனிதனுய் பிறக்க எண்ணங் கொள்ளுதல்.

உலகங்களுக்கெல்லாம் ஆதாரமாய் எல்லா உலகத்திலும் பரந்து நிற்பவனுய் ப்ரளயகாலத்தில் மஹாஜலத்தில் பள்ளிக்கொண்டவனுய் யாவர்க்கும் மேலானவனுய்ப் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் தொழில்களை விளையாட்டாய்ச் செய்து முடிக்கின்றவனுய் ஸ்ரீமந்நாராயணன் என்ற பெயரை யுடையவனுய் விளங்குகின்ற அம் மஹாபுருஷன் தான் எல்லாமறிந்தவனுயினும், தேவர்களைப் பெருமை படுத்தும்பொருட்டுத் "தேவர்களே! ரிஷிகளுக்குப் பகைவனுகிய ராவணனென்கிற அரக்கனை எவ்வுபாயத்தைக்கொண்டு முடிக்கலாம் என்பதை எனக்குத் தெளியச் சொல்லுங்கள்" என்று கேட்டார்.

அதற்குத் தேவர்கள் "இலக்ஷ்மிநாயகா! மானிட வடிவங்கொண்டு ராவணனை யுத்தத்தில் கொல்லவேண்டும். ஏனென்ருல், அவன் முன்புவெகுகாலம் ப்ரஹ்மாவைக்குறித்துக்கொடுமையான தவஞ்செய்தான். நான்முகக்கடவுள் அவன் தவத்துக்குச் சந்தோஷித்து 'மனிதர்களைத் தவிர மற்ற ப்ராணிகளால் உனக்குப் பயம் உண்டாகாமல்இருக்கட்டும்' என்று அவனுக்கு வரம் கொடுத்திருக்கிறுர். அப்பொழுது ராவணன் மனிதர்களைக் கொஞ்சமும் பொருள் செய்யவில்லை. அவன் மிகுந்த கர்வத்துடன் மூவுலகங்களையும் பீடித்து முறைகடந்தவனுய்ப் பலத்காரஞ்செய்து மாதர்களையும்இழுத்துக்கொண்டுபோகிறுன். அவனுக்கு மனிதர் மூலமாகவே மரணம் உண்டாகவேண்டும்" என்று சொன்னுர்கள். எல்லா உயிர்களுக்கும் அந்தராத்மாவாகிய ஸ்ரீமஹாவிஷ்ணு தான் மானிடரூபமாக அவதரிப்பதற்கு நிச்சயஞ் செய்துகொண்டுநான் முகனை



105. ப்ராஜாபத்யபுருஷன் தசரதனுக்குப்
பாயஸம் கொடுத்தல்

நோக்கி "நல்லது அப்படியே முடியும். நான் போய் வருகின்றேன்" என்று மறைந்து விட்டார்.

பிற்பாடு யாகஞ்செய்துகொண்டிருக்கின்ற தசரதனது அஸ்வமேதயாகம்என்ற அக்னிகுண்டத்திலிருந்துபெரும் பூதம் ஒன்று வெளியேகிளம்பிற்று. அது காண்பவர் கண்கள் மினுமினுக்கும்படியான மிகுந்த ஒளிபொருந்தி விளங்கிற்று அது மிகுந்த வல்லமையும் சிறந்த வலிவும் பெற்றுக் கறுப்புஞ் சிவப்புங்கலந்த வஸ்திரந்தரித்துச் சிவந்த முகத்துடன் காணப்பட்டது. இன்னும் அது துந்துபி வாத்தியம் போன்றவொலியை ஒலித்துக்கொண்டு உடம்பிலும் தலையிலும் மீசையிலும் சிலுசிலென்று நெருங்கி விளங்குகின்ற சிங்கத்தின் மயிர் போன்றமயிர்கள் அமைந்து, சுபலக்ஷணங்கள் அனைத்தும் பொருந்தி, உயர்ந்த ஆபரணங்களால் அலங்காரம் செய்துகொண்டு பர்வத சிகரம் போல உயர்ந்து, மதித்த புலியைப்போன்ற பராக்ரமமடைந்து ஸூர்யனை ஒத்த உருவங்கொண்டு கொழுந்து விட்டெரியும் அக்னிஜ்வாலையை ஒத்து அதிக அற்புதமாய் விளங்கிற்று.

அது வெள்ளியினால் மூடியிடப்பெற்றுத் திவ்யமான பாயஸம் நிரம்பிப் பரிசுத்தமான பொன்னால் அமைந்து மாயையோ என்னும்படி அற்புதமாய் விளங்குகின்ற ஒருபாத்ரத்தை ஒரு அன்புள்ள பத்நியைப் போல இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு தசரதனைப் பார்த்து 'அரசனே! இங்கு வந்திருக்கும் என்னை ப்ராஜாபதியினிடமிருந்து வந்த புருஷனாகத் தெரிந்துகொள்' என்று சொல்லிற்று. மன்னவன் கையைக் கூப்பிக்கொண்டு 'பகவானே தங்கள் வரவு எனக்கு நல்வரவாகட்டும். நான் தங்களுக்குச் செய்யவேண்டியதை அருளிச்செய்யுங்கள்' என்றான். அந்தப்ராஜாபத்ய

புருஷன் 'இராஜாவே நீ அஸ்வமேதத்தினுலும் புத்ர காமேஷ்டியாலும் தேவர்களை ஆராதித்தாயாகையால் உனக்கு இந்தப் பாயஸம் அனுப்பப்பட்டது. இது தேவ தேவனுகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவால் நிருமிக்கப்பட்டது. ஸந்தானத்தை உண்ணுபண்ணுகின்ற சக்தியை உடையது. விரும்பியவற்றைத் தரவல்லது. ஆரோக்யத்தை விருத்தி செய்வது. ஆகையால் இதைப்பெற்றுக்கொண்டு உன் பத்நிகளுக்குக் கொடு! நீ அவர்களிடத்தில் விரும்பிய புதல்வர்களை பெறுவாய்'' என்று சொல்லிற்று.

தசரதன் சந்தோஷித்துத் தேவான்ன ஸம்பூர்ணமான அந்த ஸுவர்ணபாத்ரத்தைப் பெற்றுக் கொண்டு அந்தப் பூதத்தை வலம் வந்து வணங்கி அதிக ஏழையானவன் பெரும்பொருளைப் பெற்றுக் களிப்பதுபோல அளவற்ற ஆனந்தத்தை அடைந்தான். பின்பு உடனே அற்புதாகாரமான ஒளியைக்கொண்ட அந்தப்பூதம் தான் வெளிப்பட்ட அக்னியிற்றுனே மறைந்து போய்விட்டது. இங்ஙனம் புத்திரர்களை உண்டு பண்ணவல்ல பாயஸம் பெற்றதைக்கேட்ட தசாத மகாராஜாவின் அந்தப்புரம் சந்தோஷத்தின் மிகுதியினுல் சரத்காலத்தில் உதித்து மாசற்று விளங்குகின்ற சந்திர கிரணங்களால் சூழ்ந்த ஆகாயம் போல மிகவும் அழகாய் விளங்கிற்று.

உடனே அரசன் அரண்மனையிற் சென்று கௌஸல்யை நோக்கிப் 'புதல்வனை உண்டு பண்ணவல்லதாகிய இந்தப் பாயஸத்தைப் பெற்றுக்கொள்' என்று சொல்லி அவளுக்குப் பாதிபாகத்தைக் கொடுத்தான். பாயஸத்தின் நான்கில் ஒரு பாகத்தை ஸுமித்திரைக்குக் கொடுத்தான். மற்றொரு பாதியைக் கைகேயிக்குத் தந்தான். அம்மன்னவன் அம்ருதம்

போன்ற அப்பாயஸத்தில் ஒட்டிக்கொண்டிருந்தவற்றை ஒன்ருய்த் திரட்டி மறுபடியும் ஸுமித்திரைக்குக் கொடுத்தான். இங்ஙனம் தசரதன் பாயஸத்தை வேறு வேருகப் பங்கிட்டுக் கொடுக்க, அவன் மனைவிகள் மூவரும் அதைச் சந்தோஷமாய்ப் பெற்றுக்கொண்டு வேறு வேருகப் புசித்து மிகுந்த ஒளியுடன் விளங்கினர்கள். சில காலம் சென்றபின்பு அந்தப் பட்டமகிஷிகள் மூவரும் அக்னியையும் ஸூர்யனையும் போன்றப்ராகாசம் பொருந்திய கர்ப்பங்களைத் தரித்தார்கள். தசரதன் தன் பத்னிகள் கர்ப்பம் நிறைந்து விளங்குவதைக் கண்டு மனக்கவலை தீர்ந்து தேவேந்திரனும் ஸித்தர்களும் மஹர்ஷிகளும் பூஜிக்கும்படி ஸவர்க்கத்தில் நின்ற ஸ்ரீமஹாவிஷ்ணு போல மகிழ்ச்சிகொண்டு விளங்கினன்.

பதினருவது ஸர்க்கம் முற்றிற்று.

தேவர்கள் வானரங்களாய் பிறப்பது.

ஸ்ரீமஹாவிஷ்ணு கம்பீரஸ்வபாவனுகிய தசரத மஹாராஜாவுக்குப் பிள்ளையாய் அவதரிக்க உத்தேசித்திருக்கும்பொழுது பின் வருவனவற்றையெல்லாம் முன்னிட்டு அறிந்தவராகிய ப்ரஹ்மதேவன் தேவதைகளை நோக்கி 'இந்திராதிகளே! ஸ்ரீமஹாவிஷ்ணு நம்மவர்களுக்கு நன்மை செய்யும்பொருட்டு மானிடனுய் அவதாரம் செய்து லோககண்டகனுன ராவணனைத் தொலைக்கப் போகிருர். நாம் அவருக்கு ஸஹாயம் செய்வதற்குத் தக்க பலமுள்ளவர்களாய் ராக்ஷஸர்களோடு சண்டை செய்வதற்குத் தகுந்தபடி காமரூபங்கொள்ள வல்லவர்களாக உலகத்தில் அவதரிக்கவேண்டும். அவர்கள் மாயை

களை அறிந்தவர்களும், சூரர்களும், வாயுவோடொத்த வேகமுடையவர்களும், நீதி யுணர்ந்தவர்களும், மிகுந்த மதி யுடையவர்களும், ஸ்ரீமகா விஷ்ணு போன்ற பராக்ரம முடையவர்களும், பிறரால் வெல்ல முடியாதவர்களும், நான்கு உபாயங்களையும் உணர்ந்தவர்களும், ரூபத்தில் ஸிம்ஹம்போன்றவர்களும் அஸ்திர சக்திகள் அமைந்தவர்களுமாகி யிருக்கவேண்டும்.

நீங்கள் [1] அழகான அப்ஸர ஸ்த்ரீகளிடத்திலும், கந்தர்வ யக்ஷ பன்னக ருக்ஷ வித்யாதர கின்னர ஸ்த்ரீகளிடத்திலும், வானர ஸ்த்ரீகளிடத்திலும், வானர ரூபங்கொண்டு உங்களோடொத்த பராக்ரமமுள்ள புதல்வர்களை உண்டு பண்ணுங்கள். நான் என் அம்சத்தினல் கரடிகளுக்குத் தலைவனுகிய ஜாம்பவான் என்பவனை ஸ்ருஷ்டித்திருக்கிறேன். நான் கொட்டாவி விடுகையில் அவன் என் வாயிலிருந்து பிறந்திருக்கிறுன். ஆதலால் உங்கள் காரியங்களைத் துரிதமாய்ச் செய்து முடியுங்கள்" என்று கட்டளையிட்டார். தேவதைகள் அவர் கட்டளைப்படி வானரரூபங் கொண்ட புதல்வர்களை உண்டு பண்ணினுர்கள். ஆழ்ந்தமனமுள்ள ரிஷிகளும், ஸித்தர்களும், வித்யாதரர்களும், உரகர்களும், சாரணர்களும், மிகுந்த வீரர்களாகிய வானரகுமாரர்களைப் பெற்றுர்கள்.

---

1. தேவதைகளுக்குப் பார்வதியின் சாபத்தினுல் தங்கள் மனைவிகளிடத்தில் புத்ரர்களை உண்டுபண்ண முடியாது. ஆகையால் அப்ஸரஸுக்கள் முதலியவர்களை இங்கு க்ஷேத்ரமாகச்சொல்லப்பட்டது. ராவணன் திக்விஜயகாலத்தில் கைலாஸஞ்சென்று நந்தியைக்கண்டு உரங்கென்று பரிஹாஸஞ்செய்ய, 'என்னைப் போன்ற பலிஷ்டர்களான குரங்குகள் கையினுலேயே நீ நாசமடைவாய்' என்று அவர் சாபங்கொடுத்ததனுல் பிரமதேவர் புத்ரர்களை வானரவடிவமாகவுண்டு பண்ணும்படி கட்டளையிட்டாரென்பது குறிப்பு.

இந்திரன் மஹேந்த்ர பர்வதம்போல எதற்கும் சலிக்காமல் தைரியம் சிறைந்து விளங்குகின்ற வானர சக்ரவர்த்தியாகிய வாலி யென்பவனை உண்டாக்கினன். ஸூர்யன் பகைவர்களை நீறு செய்யவல்ல பராக்ரமம் சிரம்பிய ஸுக்ரீவன் என்பவனைப் பிறப்பித்தான். பிருஹஸ்பதி வானரர்களிற்சிறந்த அறிவுள்ளவனை தாரன் என்பவனைப் படைத்தார். குபேரன் ஸகல ஐஸ்வர்யங்களும் பொருந்தின கந்தமாதனன் என்னும் வானரனை உண்டுபண்ணினன். நீலன் என்பவன் அக்னி பகவானுக்குப் புத்ரனகப் பிறந்து பராக்ரமத்தினலும் புகழினலும் வானரர்கள் அனைவரிலும் மேலாயிருந்தான். அழகில் புகழ்படைத்த அஸ்வினிதேவர்கள் மைந்தன் என்றும் த்விவிதன் என்றும் இரண்டு வீரர்களைப் படைத்தார்கள்.

வருணன் ஸுஷேணன் என்பவனை உண்டாக்கினன். பர்ஜன்யனுக்கு மிகுந்த பலமுடைய சரபன் என்பவன் பிறந்தான். ஸ்ரீமானகிய ஹநுமான் என்பவன் வாயுவுக்குப் புதல்வனய்ப் பிறந்தான். அவனுடைய தேகம் வஜ்ரம் போன்றது. அவன் வேகத்தில் கருடனை எதிர்க்க வல்லவன். வானரர்களில் அவன் மிகுந்த புத்தியும் பலமும் உடையவன். இந்த வானரத் தலைவர்களை யல்லாமல் அளவிடவொண்ணுத பலமுள்ளவர்களும், வீரர்களும், விக்ரமமே உருவங்கொண்டது போன்றவர்களும் நினைத்தபடி வடிவங்கொள்ள வல்லவர்களும் ராவணனைக் கொல்லுவதில் விருப்பமுள்ளவர்களுமான பல வானரர்கள் ஆயிரக்கணக்காக மற்றத் தேவர்கள் அம்சங்களினற் படைக்கப்பட்டார்கள். மேரு மந்தரம் என்ற மலைகள் போல அசைக்கமுடியாத மிகுந்த பலமுடையவர்களும், பெரிய தேகம் பொருந்தியவர்களுமாகிய

கரடிகளும் குரங்குகளும் முசுக்களும் தேவர்களின் மனத்தினால்பிறந்துவளர்ந்தார்கள. அந்தஅந்ததேவதைகளுக்குள்ள ரூபங்களும் வேஷங்களும் பராக்ரமங்களும் அவர்கள் புத்ரர்களுக்கும் குறைவில்லாமல் உண்டாயிருந்தன. ஆனல், அவர்களுக்கு முகம்மாத்திரம் வானரம் முதலான மிருகங்களைப்போல இருக்குமே யல்லாமல் அங்கங்கள் யாவும் அப்படி யிருக்கமாட்டா. அவைகள் மனிதர்களுக்கு உள்ளனபோலவே அதிக பலமுள்ளவைகளாய் விளங்கின. பராக்ரமத்தில் புகழ்பெற்ற அவர்களிற் சிலர் முசுக்களிடத்திற் பிறந்தார்கள். சிலர் கரடிகளிடத்திற் பிறந்தார்கள். பின்னுஞ்சிலர் கின்னரஸ்த்ரீகளிடத்தில் உதித்தார்கள்.

இங்ஙனம் மிகுந்த புகழ்கொண்ட தேவதைகளும் கருடன் முதலியவர்களும் யக்ஷர்களும் திக்கஜங்களும் கிம்புருஷர்களும் ஸித்தர்களும் வித்யாதரர்களும் வாஸுகி முதலிய நாகங்களும் மற்றுமுள்ளவர்களும் அப்ஸர ஸ்த்ரீகளிடத்திலும் வித்யாதர ஸ்த்ரீகளிடத்திலும் நாககன்னிகைகளிடத்திலும் கந்தர்வப் பெண்களிடத்திலும் ஸ்ரீமகா விஷ்ணு அவதாரஞ் செய்யுங் காலத்தில் ஆங்காங்கு வனங்களிற் பிறந்து ஸஞ்சரித்துக்கொண்டு வந்தார்கள். இவர்கள் அனைவரும் நினைத்தபடி வடிவங்கொள்ள வல்லமையுள்ளவர்கள். எல்லா விடங்களிலும் தடையின்றித் திரியும் தன்மையுள்ளவர்கள். புலிகளோடும் சிங்கங்களோடும் ஒத்திருப்பவர்கள், கற்களையும் மரங்களையும நகங்களையும் கோரைப்பற்களையும் ஆயுதமாகக்கொண்டுபோர்செய்ய வல்லவர்கள். தேவாம்சத்திற் பிறந்தவர்களாகையால்அவர்கள் அஸ்த்ரப்ரயோகம் உபஸம்ஹாரம் முதலிய உபாயங்களை யெல்லாம் இயற்கையிலேயே தெரிந்திருந்தார்கள்.

பெரிய மலைகளையும் கைகளால் அசக்கிவிடுவார்கள். உயர்ந்த மரங்களையும் பிடுங்கி யெறிவார்கள். நதிகள் வந்து விழுகின்ற ஆழ்ந்த ஸமுத்ரத்தையும் தங்கள் வேகத்தால் கலக்கி விடுவார்கள். இந்தப் பூமியைத் தங்கள் பாதங்களால் பிளந்து விடுவார்கள். பெருங் கடலையும் வாய்க்காலைப் போலக் கடப்பார்கள். ஆகாயத்திலும் சென்று வருவார்கள். மேகங்களையும் தாவிப் பிடிப்பார்கள். மதம் பிடித்துக் காட்டில் திரிகின்ற மஹா கஜங்களையும் அடக்கிப் பிடிப்பார்கள். தங்கள் கர்ஜனையால் ஆகாயத்தில் பறக்கின்ற பறவைகளையும் கீழே விழச்செய்வார்கள். இங்ஙனம் காமரூபிகளும் மஹாதீரர்களுமாகிய வலிமை பெற்ற வானரஸேனாதிபதிகள் நூறு லக்ஷம் பெயர் பிறந்தார்கள். அதில் ஸுக்ரீவனைத்தொடங்கி ஸுஷேணன் ஈறாகவுள்ளவர் யாவரும் தங்களைப்போன்ற பல பாராக்ரமம் நிரம்பிய அநேகம் வானரர்களை யுண்டுபண்ணினார்கள்.

அவர்களிற் சிலர் ருக்ஷவந்தமென்னும் மலையின் தாழ்வரைகளில் வஸித்தார்கள். மற்றுஞ்சிலர் பலவிதமானமலைகளையும் கானகங்களையும் குறித்துச் சென்றார்கள். அவர்கள் யாவரும் இந்திரபுத்ரனான வாலியும்ஸூர்யபுத்ரனான ஸுக்ரீவனுமாகிய ப்ராதாக்கள் இருவரையும் அரசனாகவும், இளவரசனாகவும், நளன் நீலன் ஹநுமான் முதலானவர்களை மந்திரிகளாகவும் ஏற்படுத்திக்கொண்டு அவர்களுக்கு அடங்கி வந்தார்கள். அவ்வீரர்கள் கருடனையொத்த வலிமைபெற்றுப் போர் செய்வதில் வல்லமையமைந்து வீர்யங்கொண்டு சிங்கங்களையும் புலிகளையும் மலைப்பாம்புகளையும் பிடித்து நசுக்கிக்கொண்டு திரிந்தார்கள்.

மஹாபுஜனும் மிகுந்த பராக்ரம முடையவனுமாகிய வாலி தன் புஜபலத்தினுல் கரடிகளும் முசுக்களும் குரங்குகளுமாகிய அவ்வீரர்கள் அனைவரையும் பரிபாலித்துக் கொண்டு வந்தான். அவர்கள் அனைவரும் பலவிதமான உருவங்களும் வேறு வேருன அடையாளங்களும் உள்ளவர்களாய் இப்பூமியிலுள்ள மலைகளிலும் கானகங்களிலும் ஸமுத்ரங்களிலுள்ள தீவுகளிலும் பரந்து நிறைந்திருந்தார்கள். மிகவும் பருத்துப் பயங்கரமாயிருக்கின்ற அந்தவானர வீரர்கள் கூட்டங் கூட்டமாய் மேகங்கள் உலாவுகின்றன போலவும், வடிவங்கொண்டு நடக்கும் பரவத சிகரங்கள் போலவும் காணப்பட்டார்கள். அப்படிப்பட்ட மஹாபலவான்களாகிய வானரர்கள் யாவரும் ராமனுக்கு ஸஹாயஞ் செய்வதற்காக இந்த பூமி முழுவதும் பரந்து வஸித்திருந்தார்கள்.

பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமாவதாரம்.

ஸ்ரீராமாதிகளின் பிறப்பும் வித்யாப்யாஸமும், விஶ்வாமித்திரர் வரவும்.

இங்ஙனம் மஹாத்வாமாகிய தசரத மஹாராஜாவினுடைய அஶ்வமேதயாகம் புத்ரகாமேஷ்டியுடன் கூட நன்ருக நிறைவேறிற்று. தேவர்கள் தங்கள் தங்களுடைய ஹவிர்ப்பாகங்களைப் பெற்றுக்கொண்டு சந்தோஷமாய்த் திரும்பிச் சென்றூர்கள். அரசனும் தீக்ஷையைப்பற்றிய நியமங்களை முடித்துவிட்டுத் தன் பத்நிகளுடன் கூடி வேலைக்காரர்களும் படைவீரர்களும் வாஹனங்களும் புடைசூழப் பட்டணத்துக்குப்புறப்படத் தொடங்கினுன். யாகத்திற்கு வந்த மன்னவர் அனைவரும் தசரத மன்னவனுல் தக்கபடி பூஜிக்கப்பெற்று ஸந்தோஷ சித்தராகி

முனிவர்களில் தலைவராகிய வஸிஷ்டரையும் ருஶ்யஶ்ருங்கரையும் நமஸ்கரித்துத் தங்கள் தங்கள் சொந்த நாட்டை நாடிச் சென்றார்கள். அயோத்யாநகரத்திலிருந்து தங்கள் பட்டணத்துக்குச் செல்கின்ற செல்வம் நிறைந்த அந்த மன்னவர்களின் ஸைன்யங்கள் தசரதனால் கொடுக்கப்பட்ட உயர்ந்த ஆடையாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுச் சுப்ரங்களாக விளங்கின.

மன்னவர்கள் யாவரும் விடை பெற்றுக்கொண்டு போனபிற்பாடு ஸ்ரீமானாகிய தசரதனும் சிறந்த அந்தணர்களை முன்னிட்டுக் கொண்டு நகரத்தில் பிரவேசித்தான். பின்பு அவ்வரசனால் நன்கு பூசிக்கப்பட்ட ருஶ்யஶ்ருங்கமுனிவர் சாந்தா தேவியுடன் ரோமபாத மஹாராஜனும் அவன் பரிவாரங்களும் பின் தொடரப் பிரயாணமானார். இங்ஙனம் தசரத மன்னவன் யாகத்துக்கு வந்த அனைவரையும் அனுப்பிவிட்டுத் தன் கருத்து ஈடேறப் பெற்றவனாகிப் பிள்ளைகள் பிறப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அஶ்வமேதயாகம் முடிந்து ஒரு வருஷம் சென்றது. பின்பு கௌஸல்யாதேவி பாயஸம் புசித்தது முதலாகப் பன்னிரண்டாவது மாதமாகிய சித்திரை மாதம் நவமி திதியில், புனர்வஸு நக்ஷத்ரத்தில், ஸூர்யன் அங்காரகன் சனி பிருகஸ்பதி சுக்ரன் ஆகிய ஐந்து பெயர்களும் தங்கள் தங்களுடைய உச்சஸ்தானங்களாகிய மேஷ மகர துலா கர்க்கடக மீனராசிகளிலிருக்கையில், அதில் பிருகஸ்பதி சந்திரனோடு கலந்திருக்கையில், கர்க்கடக லக்னத்தில் ஸகல ஜகந்நாயகனாய், உலகங்கள் அனைத்தும் வணங்கத் தக்கவனாய், ஸமஸ்த சுபலக்ஷணங்களும் பொருந்தியவனாய், மஹா பாக்ய

8

சாலியாய், விஷ்ணுவின் அர்த்தாம்சமாய், இக்ஷ்வாகு வம்சத்துக்கு மேன்மேலும் பெருமையை உண்டாக்குகின்றவனாய் விளங்குகின்ற ஸ்ரீராமன் என்னும் புத்திரனைப் பெற்றாள். அந்தக் கௌஸல்யாதேவி ஒளி பொருந்திய கையில் வஜ்ரரேகையைக் கொண்ட அப் புதல்வனைப் பெற்று வஜ்ராயுதத்தையுடைய தேவேந்திரனைப்பெற்ற அதிதி தேவியைப்போல விளங்கினாள்.

பின்பு பராக்ரமமுடையவனாய் ஸகல ஸத்குணங்களும் நிறைந்து ஸ்ரீமகாவிஷ்ணுவின் நான்கிலொன்றில் பாதி பாகமாகிய பரதன் என்னும் புதல்வனைக் கைகேயி பெற்றனள். பின்பு ஸுமித்ராதேவி வீரர்களும் ஸகல அஸ்த்ரங்களையும் அறிந்தவர்களும் விஷ்ணுவின் நான்கிலொரு பாகமும் எட்டிலொரு பாகமுமாகிய லக்ஷ்மணன் சத்ருக்னன் என்ற இரண்டு புதல்வர்களைப் பெற்றாள். தெளிந்த மதியுடைய பரதன் புஷ்யநக்ஷத்ரத்தில் மீனலக்னத்தில் பிறந்தான். ஸுமித்ரையின் புத்ரர்களாகிய லக்ஷ்மணனும் சத்ருக்னனும் ஆஶ்லேஷ நக்ஷத்ரத்தில் மத்யான்னத்தில் கடக லக்கினத்தில் உதித்தார்கள்.

இப்படி அம்மஹாராஜாவுக்கு அநுரூபர்களாய் நற்குணங்கள் அனைத்தும் நிறைந்து காந்தியில் பூரட்டாதி நக்ஷத்திரங்கள் நான்கையும் போல விளங்குகின்றவர்களாய்க்கம்பீரஸ்வபாவமுடையவர்களுமாகிய நான்கு புதல்வர்கள் பிறந்தார்கள். அச்சமயத்தில் கந்தர்வர்கள் ஆகாசத்தில் மிக மதுரமாய்ப் பாடினார்கள். அப்ஸரஸ்த்ரீகள் கூட்டங்கூடி ஆடினார்கள். தேவர்கள் துந்துபிவாத்யங்களைக் கணகணவென்று முழக்கினார்கள். பின்னும் அவர்கள் ஆகாயத்தினின்று பூமழை பெய்தார்கள். அயோத்தியிலுள்ள ஜனங்கள் யாவரும் விரைந்து ஸந்தோஷத்தோடு மஹோத்ஸவம் கொண்டாடினார்கள். ஓரிடத்தில்

நடர்களும் நர்த்தகர்களும் ரஸங்களும்பாவங்களும் விளங்கும்படி அழகாய் அபிநயிக்க, மற்றோரிடத்தில் பாடகர்கள் பாட, வேறொரு இடத்தில் வாத்யம் வாசிப்பவர்கள் பல விதமான வாத்யங்களை முழங்கச் செய்ய, மற்றுமோரிடத்தில் ஸூதர்களும் வந்திகளும் மாகதர்களும் கட்டியங்களைப் படிக்க, ராஜமார்க்கங்களால் நான்கு பக்கத்திலும் ஜனங்கள் நெருங்கிவர அந்தப் பட்டணம் வெகு அழகாய் விளங்கிற்று. அரசன் புராணம் படிக்கிற ஸூதர்களுக்கும், வம்சாவளி சொல்லும் மாகதர்களுக்கும், துதி செய்யும் வந்திகளுக்கும், தக்கபடி பரிசுகளைக் கொடுத்தான்.

அந்தணர்களுக்குப் பசுக்களையும் பணங்களையும் ஆயிரமாயிரமாய்த் தந்தான். [1] லக்ஷ்மணன் பிறந்து பதினொரு நாள்களும் ராமன் பிறந்து பன்னிரண்டு நாள்களும் சென்ற பின்பு பதின்மூன்றாவது நாள் அம்மன்னவன் புதல்வர்களுக்கு நாமகரணஞ் செய்யத் தொடங்கினான். அவன் மிகுந்த ஸந்தோஷங் கொண்ட வஸிஷ்ட முனிவரைக் கொண்டு மஹாத்மாவாகிய மூத்த குமார

1. இங்கு மூலத்தில் 'அதீத்யைகாதஶாஹந்து' என்று சொல்லுகையால், பன்னிரண்டாவது தினத்தில் நாமகரணம் நடந்ததென்று தோன்றுகின்றது. க்ஷத்ரியர்களுக்குப் பன்னிரண்டாவது நாள்வரையில் ஸூதகம் உண்டென்று ஶ்ருதியும் பதின்மூன்றாவது நாள் நாமகரணம் என்று ஸ்ம்ருதியுஞ் சொல்லுகையினால், பதினோராநாள் கடந்தபின்பு பன்னிரண்டாவது நாளில் நாமகரணஞ்செய்வது விரோதமாகும். ஆகையால், இங்கு 'ஏகாதஶாஹம்' பதினோராவது நாள் என்றால் லக்ஷ்மணன் பிறந்தது முதற்கொண்டு பதினோராவது தினமாகக் கணக்கிட்டுக் கொள்ளவேண்டும். அப்படியாயின், ராமன்முதனாள் பிறவனகையால் அவன் பிறந்ததினம் முதற்கொண்டு பன்னிரண்டாவது தினமாகும். அது கடந்தபின்பு பதின்மூன்றாவது தினத்தில் நாமகரணம் நடப்பது உபபன்னமாகும்.

னுக்கு ராமன் என்றும், கைகேயியின் புதல்வனுக்குப் பரதன் என்றும், ஸுமித்ராதேவியின் புதல்வர்களில் மூத்தவனுக்குலக்ஷ்மணன் என்றும், இளையவனுக்குச் சத்ருக்னன் என்றும் நாமங்களையிட்டான். இப்படிப்பேரிட்ட அம்மன்னவன் நாடுநகரங்களில் உள்ள அந்தணர் அனைவரையும் போஜனம் செய்வித்து அவர்களுக்குக் கணக்கில்லாத ரத்னங்களையுங் கொடுத்துப் புதல்வர்களுக்கு ஜாதகர்மம் முதலிய கருமங்களனைத்தையு அடைவே செய்வித்தான். அந்தக் குமாரர்களில் மூத்தவனாகிய ராமன் த்வஜம் போலத் தனது வம்சத்தை விளங்கச்செய்து தகப்பனுருக்கு அதிக ஆநந்தத்தை விளைவித்துக்கொண்டு ப்ரஹ்மதேவன்போல ஸகல ப்ராணிகளுக்கும் ப்ரியனாயிருந்தான். பின்பு அந்தக் குமாரர்கள் அனைவரும் வேதங்களைக் கற்றுத், தநுர்வேதத்திலும் வல்லமை பெற்றுச் சூரத்தன்மை பொருந்தி, உலகங்களுக்கு நன்மையைச் செய்வதில் விருப்பங்கொணடிருந்தார்கள். அவர்கள் வேதத்தின் பொருளனைத்தையும் அறிந்தமையால் ஞானம் அமைந்து, ஞானத்தினால் பிறக்கின்ற நற்குணங்களுக்கு உறைவிடமாகி யிருந்தார்கள்.

அவர்களில் ராமன் மிகுந்த ஒளியுடன் என்றும் நழுவாத பராக்ரமத்தைக் கொண்டு நிர்மலனான பூர்ண சந்திரன்போல உலகங்களுக்கெல்லாம் ஆனந்தத்தை விளைவித்துக் கொண்டு மிகவும் ப்ரியனா யிருந்தான். மேலும் அவன் யானை யேற்றத்திலும் குதிரை யேற்றத்திலும் யுத்தங்களில் தக்கபடி தேரை நடத்துவதிலும் இவனைப்போல் ஒருவனுமில்லை யென்று யாவரும் புகழும்படி வல்லமை யமைந்து வில்வித்தையில் மிகவும் தேர்ச்சி பெற்று விளங்கினான். லக்ஷ்மணன் ராமனுக்கு ப்ரியமாகிய பணிவிடையை மேன்

மேலும் செய்துகொண்டிருந்தான். அவன் தனக்கு மூத்தவனுய், எல்லா உலகங்களுக்கும் ஆனந்தத்தை விளைப்பவனுமாகிய ஸ்ரீராமனிடத்தில் பாலியம் முதலாக எக்காலத்திலும் மாறுபடாத விசுவாசம் கொண்டிருந்தான். மேலும் அவன் தன் சரீர ஶ்ரமத்தைக் கொஞ்சமும் பார்க்காமல் தன்மனம் வாக்கு காயம்என்ற மூன்றினலும் ராமனுக்கு இஷ்டங்களைச் செய்துகொண்டு ராமனுக்கு மற்றெரு ப்ராணனே என்னும்படி அனைவராலும் புகழப்பட்டு விளங்கினன்.

புருஷோத்தமனுகிய அந்த ஸ்ரீராமனுக்கு லக்ஷ்மணனையன்றி இரவில் நித்திரையும் உண்டாகமாட்டாது. கௌஸல்யாதேவி உயர்ந்த ஆஹாரங்களைக் கொண்டு கொடுத்தாலும் அதை ஸ்ரீராகவன் லக்ஷ்மணனேடல்லாமல் தனித்துப் புஜிக்கமாட்டான். எப்பொழுதாயினும் ராமன் குதிரையின் மீதேறி வேட்டையாடப்போனல், லக்ஷ்மணன் வில்லைத் தரித்து இமை கண்ணைக் காப்பதுபோல அவனைப் பின்னே பாதுகாத்துச் செல்லுவான். இப்படியே லக்ஷ்மணனுக்குப் பின் பிறந்த சத்ருக்னனும் அவனைப்போலவே அந்தக் குணங்களெல்லாம் அமைந்து பரதனைப் பின்பற்றியிருந்தான். ஆனதுபற்றிப் பரதனுக்குச் சத்ருக்னன் ப்ராணனைக் காட்டிலும் மிகவும் ப்ரியனுய் விளங்கினன். சத்ருக்னனிடத்தில் பரதனும் அப்படியே அளவற்ற ப்ரீதியைக்கொண்டிருந்தான்.

இங்ஙனம் மஹாபாக்யசாலிகளாய்த் தனக்கு மிகவும் அன்பர்களாகிய நான்கு புதல்வர்களைப்பெற்ற தசரத சக்ரவர்த்தி நான்கு திக்பாலர்களைக்கொண்டு பிரபுவாகிய ப்ரஹ்மதேவன் ஆனந்தப் படுவதுபோல அதிக ஆனந்தத்தை அடைந்தான். தசரதன் அவர்களைப் பெற்ற

தனுல் உண்டாகிய ஸந்தோஷத்தைக் காட்டிலும், அவர்கள் கல்விப்பருவத்தில் சாஸ்திரங்களை அறிந்தவர்களாய் ஸகல குணங்களும் நிறைந்தவர்களாய் தகாச் செய்கையில் நாணங்கொண்டவர்களாய், சிறந்த ஞானமுடையவர்களாய்,லௌகிக காரியங்களில் நிறைந்த புத்தியுள்ளவர்களாய், வருமவற்றை அறிந்து நடக்குந் திறமுடையவர்களாய், மகிமை யமைந்தவர்களாய், புகழ் நிறைந்தவர்களாய் விளங்குவதைக் கண்டு ப்ரஹ்மலோகாதிபத்யம் கிடைத்து விட்டதுபோல அளவற்ற ஸந்தோஷமடைந்தான்.

புருஷஸிம்ஹங்களான ராமன் முதலானவர்கள் தசரத சக்ரவர்த்தி ஸந்தோஷிப்பதைக் கண்டு கர்வங்கொள்ளாமல் வேதங்களின் பொருள்களைத் தெளிய உரைக்கவல்ல ஸ்ம்ருதி இதிஹாஸம் புராணம் நியாயம் முதலியவற்றைக் கற்றுப் பிதாவினது சுச்ரூஷையில் ஜாகரூகர்களாய்த் தநுர்வேதத்தில் விருப்பங்கொண்டு விளங்கினுர்கள். இங்ஙனம் வளர்பிறை யென்னும்படி சிறுவர்கள் நன்ருய் வளர்ந்து வருவதைக்கண்டு தசரத மகாராஜன் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய சடங்குகளை யெல்லாம் நன்ருய் அறிந்தவனுகையால் அவர்களுக்கு விவாஹத்துக்குத் தக்க வயது வரக்கண்டு அவர்களுடைய விவாஹத்தைப்பற்றிப் புரோஹிதர்களுடனும் பந்துக்களுடனும் கூடி ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது ஒருநாள் சிறந்த மகிமைபொருந்திய விஸ்வாமித்ர முனிவர் அவ்வரசனைக் காணக் கருதி அவ்விடம் வந்து, வாயிற் காவலர்களை நோக்கிப் "புருஷர்களே! குசிக வம்சத்திற்பிறந்த விஸ்வாமித்ரன் வந்திருக்கிருன் என்று உங்கள் அரசருக்குச் சொல்லி வாருங்கள்' என்று அநுப்பினுர். அவர்கள் அவ்வாக்யத்தைக் கேட்டு

மனத்தில் பயமும் பரபரப்பும் கொண்டவர்களாய், அரசன் அரண்மனைக்கு வேகமாய்ச் சென்று இக்ஷ்வாகு குலதில கனாகிய மஹாராஜாவுக்கு விஸ்வாமித்ரர் வரவைத் தெரிவித்தார்கள். அதைக்கேட்டு மன்னவன் ஸந்தோஷங் கொண்டு, தன் புரோஹிதரோடு கூடி தேவேந்திரன் ப்ரஹ்மதேவனை எதிர்கொண்டு செல்வதுபோல விஸ்வாமித்ரரை எதிர்கொண்டு சென்றான்.

அவன் மிகுந்த ஒளிபொருந்தியவரும் விரதங்கள் அனைத்தையும் குறைவின்றிச் செய்பவரும் தவமுடையவருமாகிய அவ்விஸ்வாமித்ர முனிவரைக் கண்டு சந்தோஷத்தினால் முகமலர்ச்சியடைந்து அவருக்குத் தன் புரோஹிதராகிய வஸிஷ்ட முனிவரால் அர்க்கியம் கொடுப்பித்தான். விஸ்வாமித்ர முனிவர் மன்னவனால் சாஸ்திரங்களிற் சொல்லிய விதிப்படி கொடுக்கப்பட்ட அர்க்கியத்தைப்பெற்று அவ்வரசனை க்ஷேமம் விசாரித்தார். விஸ்வாமித்ரர் தர்மங்களையெல்லாம் நன்கறிந்து நடக்கின்றவராகையால் ராஜாவினது நாடு நகரம் பந்து நண்பர் பொக்கிஷம் முதலிய அனைத்தையும் பற்றி அம்மன்னவனைப் பார்த்து "அரசனே! க்ஷேமமா? நீ விரும்பினவெல்லாம் நிறைவேறி மேன்மேலும் பெருகிவருகின்றனவா? நீ தார்மிகனாயிருப்பதுபற்றி உன் பட்டணமும் பொக்கிஷங்களும் மற்றுமுள்ள தேசங்களும் குறைவின்றி யிருக்கின்றனவா? பந்துக்களும் மித்ரர்களும் க்ஷேமமாயிருக்கிறார்களா? அயல் தேசத்தரசர் யாவரும் உனக்கு வணங்கி நடக்கின்றார்களா! பகைவர் அனைவரையும் வென்று விட்டாயா? யாகம் முதலிய தேவ காரியங்களும், அதிதி ஸத்காரம் முதலிய மானுஷ காரியங்களும் சரியாய் நடந்து வருகின்றனவா?" என்றுகேட்டார்.

பின்பு முனிவர் வஸிஷ்டரையும் மற்றும் அங்கிருந்த வாமதேவர் முதலிய மஹா பாக்யசாலிகளாகிய ரிஷிகளையும் நியாயப்படி க்ஷேமம் விசாரித்தார். அவர்கள் யாவரும் மனக்களிப்புற்று அந்த ராஜஸபையில் தங்கள் தங்களுக்குத் தகுதியான விடங்களில் உட்கார்ந்தார்கள். பின்பு உதார சீலனாகிய அம்மஹீபாலன் மனக்களிப்புடன் அந்த முனிவரைப் பூஜித்து உடம்பெங்கும் மயிர்க்குச் செறியத் தன் கரத்தைக் குவித்துக் கொண்டு முனிவரே! புதல்வர்களின் விவாஹத்தைக் குறித்து ஆலோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் தாங்கள் தற்செயலாய் வந்து சேர்ந்தீர்கள். தங்கள் வரவு இறக்குந் தருணத்தி லிருக்கின்றவனுக்கு அமிருதம் கிடைத்தது போலவும், நிர்ஜலமான பூமியில் மழை பொழிந்தது போலவும், பிள்ளை யில்லாதவனுக்குத் தக்க மனைவிகளிடத்தில் பிள்ளை பிறந்ததுபோலவும், தொலைந்து போன பெரும் பொருள் மீளவும் அகப்பட்டது போலவும, பெரிய உத்ஸவத்திலுண்டாகும் ஸந்தோஷம் போலவும் இருக்கின்றது. தங்கள் வரவு நல்வரவாகட்டும்.

"ப்ராஹ்மணோத்தமரே! தாங்கள் வந்த காரணம் என்ன? தங்கள் வரவினால் சந்தோஷம் கொண்டிருக்கின்ற நான் இப்பொழுது தங்களுக்குச் செய்யவேண்டியதென்ன? என் தானத்துக்கு தாங்கள் தகுந்த பாத்ரமாயிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட தாங்கள் என்பாக்கிய மகிமையினால் இங்கு வந்துசேர்ந்தீர்கள் எனக்கு மிகவும் ஆனந்தமாயிருக்கின்றது. என் ஜன்மம் இப்பொழுது தான் பயன் பெற்றது. என் ஜீவனம் இப்பொழுது தான் ஸுஜீவனமாயிற்று. தாங்கள் முதலில் ராஜரிஷியாயிருந்து பின்பு தவஞ் செய்து மஹா தேஜஸ்ஸுடன் ப்ரகாசித்து ப்ரஹ்மரிஷியென்னும் பெயர் பெற்றி

ருக்கிறீர்கள். தாங்கள் ராஜ ரிஷியாயிருந்தது பற்றியும் ப்ரஹ்மரிஷியானது பற்றியும் தங்களிடத்தில் குடிகொண் டுள்ள குணவிசேஷங்களைப் பற்றியும் எனக்கு மிகவும் பூஜிக்கத்தக்கவர்களாய்விட்டீர்கள். தாங்கள் இப்படிவரு வது மிகவும் ஆச்சர்யம். தங்கள் வருகை என்னைப்பாவன மாக்குவதற் கன்றி வேறு ஒன்றிருக்கும் அன்று. தாங் கள் வந்து எனக்குத் தரிசனங் கொடுத்தபடியினுல் நான் இருக்கிற இந்த விடம் புண்ய க்ஷேத்ரமாயிற்று. தாங்கள் நாடி வந்த பயனை நிறைவேற்ற விரும்புகிறேன்.

"தாங்கள் உத்தேசித்து வந்த காரியத்தை நான் செய்வேனே மாட்டேனே என்று ஸந்தேகம் கொள்ள வேண்டாம். தங்கள் எனக்குத் தெய்வம் போன்றவர். தாங்கள் எதை விரும்பினுனும் அதைச் சந்தோஷமாய்ச் செய்வதற்குக் காத்துக்கொண் டிருக்கிறேன். தங்கள் வரவு எனக்குப் பெரிய நன்மையை உண்டு பண்ணப்போ கின்றது. தாங்கள் வந்ததனுல் எல்லாவற்றிலும் சிறந்த தர்மங்கள்யாவும் எனக்குண்டாய் விட்டன" என்று சொ ல்லி நிறுத்தினுன். இங்ஙனம் பொருள் நிறைந்ததும் மனத்துக்கு ஆநந்தமானதும் செவிக்கு இனிமையானது மாகிய விநயத்துடன் கூடிய அம்மன்னவன் வாக்கியங் களைக்கேட்டுச், சிறந்த குணங்கள் அமைந்து புகழ்பெற்ற விஶ்வாமித்ர மஹர்ஷி ஆநந்தமடைந்தார்.

பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

விஶ்வாமித்ரர் ராமனை அனுப்பும்படி தசரதனைக் கேட்பது.

இங்ஙனம் அற்புதமாகவும் விஸ்தாரமாகவும் மன் னவன் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு மகா தேஜஸ்வியாகிய விஶ்வாமித்ரர் "தசரதமகாராஜனே!

இவ்வுலகத்தில் பெரிய வம்சத்திற் பிறந்து வஸிஷ்ட ரைப் போன்றவர்களுடைய உபதேசம் பெற்று அவ ருடன்கூடியிருக்கும்படியான உன்னைப் போன்றவனுக்கு மாத்திரம் இந்த உயர்ந்த குணங்கள் தகுமேயன்றி மற் றொருவனுக்கும் தகாது. நான் உனக்குச் சொல்லவேண் டும் என்று மனத்தில் நினைத்துவந்த காரியம் ஒன்றுண்டு. நீ அதைச் செய்வதாக ஒத்துக்கொள்ளவேண்டும். உயர் குலத்தில் உதித்த நீ சொன்னசொல் தவறலாகாது. நான் இப்பொழுது ஒரு பயனை உத்தேசித்து அதன் பொருட்டு யாகஞ் செய்யத் தொடங்கித் தீக்ஷையில் இருக்கிறேன். அதற்குக் காம ரூபிகளாகிய ராக்ஷஸர் இருவர் எப்பொ ழுதும் விக்நஞ்செய்து கொண்டிருக்கிறார்கள். என் விர தம் வெகுதூரம் நடந்து இப்பொழுது முடியுந் தருணத் தில் இருக்கிறது.

"அதைக் கெடுப்பதன் பொருட்டு மிகுந்த வீரியம் பெற்றுக் கொடுஞ் செயல்களில் நன்றாய்த் தேறிய ஸுபாஹு மாரீசர்கள் என்கிற ராக்ஷஸர்கள் இரு வரும் மாம்ஸங்கள் நிரம்பிய ரக்த வெள்ளத்தைக் கொண்டு என் பரிசுத்தமான யாகவேதிகைக்கு நாற்புறத் திலும் பொழிந்து வருகிறார்கள். பெரும்பாலும் நடந் தேறிவந்த என் யாக வ்ரத ஸங்கல்பமானது அவர்களால் விக்னமடைந்து விட்டதனால் வருத்தங்கொண்டு உத்ஸா ஹங் குலைந்து வந்து விட்டேன். அரசனே! அவர்கள் எனக்கு அதிகமான குற்றங்களைச் செய்தும் எனக்குச் சாபங்கொடுக்க மனம் வரவில்லை. ஏனென்றால், யாகஞ் செய்து கொண்டிருக்கும் தருணத்தில் கோபங் கொள் ளலாகாது. ஆகையினாற்றான் நான் அவர்களைச் சபியா மல் விட்டிருக்கிறேன்.

"புலிபோலும் பராக்ரமம் பொருந்திய மஹாராஜ னே! உன் மூத்த குமாரனாகிய ராமன் சிறு குடுமி தரித்துச் சிறு பிள்ளையாயிருந்தாலும் உண்மையான பராக்ரமங்கொண்டு சூரனாயிருப்பதுபற்றி என் யாகத்தை நிறைவேற்றுவதன்பொருட்டு அவனை எனக்கு அவஶ்ய மாய்க் கொடுக்கவேண்டும். ராமன் சிறு பிள்ளையாகை யால் ராக்ஷஸர்களை எப்படி வெல்ல முடியும் என்று நினைக் காதே. நான் ராமனைக் காப்பாற்றிக்கொள்கிறேன். அவன் தனது சிறந்த பராக்ரமத்தினால் அவர்களையே யன்றி யாகத்துக்கு விக்னஞ்செய்யும் அரக்கர்கள் அனை வரையும் வேரோடு நாசஞ்செய்யவல்லவன். மேலும் நான் அவனுக்கு மூவுலகங்களிலும் கியாதியுண்டாகும் படியான பலவகை நன்மைகளையுஞ் செய்வேன். இதில் ஸந்தேகமில்லை. மாரீச ஸுபாஹுக்கள் ராமன் முன் னின்று போர் செய்வதற்குச் சிறிதும் வல்லவர்களல்லர். ராமனை யொழிய வேறு எவனாயிருந்தாலும் அவர்களை வெல்ல முடியாது.

"மன்னவர் மணியே! அவ்விருவரும் வீரியத் தின் மிகுதியினால் கொழுத்திருப்பவர்களே யானாலும் பாவஞ் செய்வதைத் தொழிலாய்க் கொண்டிருப்பத னால் காலனென்னுங் கயிற்றினால் கட்டுண்டிருக்கிறார்கள். ஆகையால் மஹாத்மாவாகிய ராமனுக்கு அவர்கள் ஒரு லக்ஷ்யமன்று. அரசனே! நீ ராமனிடத்தில் பிள்ளையென் னும் ப்ரீதியைப் பாராட்டாதே. நான் சொல்லுகின்ற இச்சொல்லை நம்பு. நான் உனக்கு உறுதியாய்ச் சொல்லு கிறேன். ராமனால் அவ்வரக்கர்கள் இருவரும் ஒழிந்தார் களென்றே நினைத்துக்கொள். எப்படியென்றால் [1] ராமனை

1. இங்கு:—
'அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்ய பராக்ரமம்|
வஸிஷ்டோऽபி மஹாதேஜா யேசேமே தபஸி ஸ்திதா:||'

மஹாத்மாவென்றும் உண்மையான பராக்ரமம் உள்ளவனென்றும் நான் அறிவேன். நானே யன்று; மஹாநு

இதற்கு விசேஷார்த்தம். (அஹம்) நான், அதாவது பல பெரியோர்களை உபாஸித்து, யோகமஹிமையால் தத்வங்களை உள்ளபடியறிந்து, ஜடா வல்கலங்களைத் தரித்துத் தவஞ்செய்து ஸாத்விகனாகி, மோக்ஷ காமேஷ்டி செய்து, தர்ம மோக்ஷங்களை மாத்ரம் கைக்கொண்ட ப்ரஹ்மரிஷியாகிய நான்-என்க. ப்ரஸித்தமான வற்றைக் காட்டுகிற, 'அஹம்' என்கிற ஸர்வநாம சப்தத்தால் இவ்வர்த்தங்களெல்லாந் தோற்றுகின்றன. இப்படிப்பட்ட நான் ராமனை அறிவேனேயன்றிக் கேவலமான கர்மங்களைச் செய்து ராக த்வேஷங்களில் ஆழ்ந்து, ஸம்ஸாரத்தில் மூழ்கி ராஜஸ ப்ராக்ருதியாகிப், புத்ரகாமேஷ்டி செய்து, தர்ம காமங்களை மாத்திரம் கைக்கொண்டு கேவலம் க்ஷத்ரியனாகிய நீ அறியமாட்டாய் என்க. ராமனை எப்படிப்பட்டவனாக அறிவாயென்றால்-(மஹாத்மாநம்) 'வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்' என்று ஸ்ருதி சொல்லுகிறபடியினால் அளவிடவொண்ணாத மகிமையுடையவனாக; அல்லது 'தேஜஸாஂஹி நவயஸ்ஸமீக்ஷ்யதே' என்கிறபடி பால்யத்திலும் அபாரமான வைபவத்தை யுடையவனாக; அன்றி ஆத்மாவென்று தேகத்தைச் சொல்லுமாகையால் (மஹாத்மாநம்) 'நதஸ்ய ப்ராக்ருதாமூர்த்திঃ' என்கிற ஸ்ருதியின்படி அப்ராம்ருதமான திவ்ய மங்கள விக்ரஹத்தையுடையவனாக; அன்றி 'ஐஹயஂ ஸர்வஹ்ருதேஜீயோ ஷதாம்யேதஜீவ்ரதம்மம' என்று சொல்லப்பட்ட மஹா ஸ்வபாவனாக -என்க. இன்னும் 'ஸத்யபராகரமம்' ஒரே விதமான பராக்ரமத்தை யுடையவனாக; அன்றி ஸத்யத்தால் பிறரை ஆக்ரமித்தவனாக, அதாவது-ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் தனக்கு ப்ரதிகூலர்களாயிருந்தபோதிலும் அவர்களை நல்லவர்களாக்குவதற்குத் தான் பலதடவை திருப்புவதற்குப் பாடுபட்டும் ப்ரதிகூலர்களாகவேயிருப்பார்களானால் அப்படிப்பட்டவர்களைக் கொல்பவனாக என்க; அன்றி 'ஸாவஸாப்தঃ பரந்தபঃ' என்கிறபடி பராக்மத்தைக் காட்டாமலிருக்கிற சித்ராதி ஸமயத்திலும் அக்காலத்திலுள்ள ஔஜ்வல்யாதிசமயத்தினால சத்ருக்களுக்குப் பயங்கரனாயிருப்பவனாக அறிவேன், கார்யவசத்தினால் நான் ஒருவன் யாத்துரமே இப்படிச் சொல்கிறேனென்று நினைக்கவேண்டாம். வஸிஷ்டரும் அவனை உள்ளபடி அறிவார் (வஸிஷ்டோஉபி) உனக்கு மிகவும் ஆப்தரும் குலாசார்யரும்,

பாவராகிய இந்த வஸிஷ்டரும் அறிவார். தவத்தில் நிலைநின்ற மற்றுமுள்ள இம்மஹர்ஷிகளும் அறிவார்கள். மஹாராஜனே! ஆயிரஞ் சொல்லியென்ன? இப்பூமியில் மேன்மேலும் தர்மத்தின் விருத்தியும் சிறந்த கீர்த்தியும் நிலைநிற்கவேண்டுமென்று விரும்புவாயானால் ராமனை எனக்குக் கொடு! வஸிஷ்டர் முதலிய உன் மந்த்ரிகள் அனைவரும் அநுமதி கொடுப்பார்களானால், பின்பு ராமனை அனுப்பு. தாமரையிதழ் போன்ற கண்களையுடையவனாய் யாவர்க்கும் அன்பனாகிய ராமனை வெகுநாள் அனுப்பி விட்டு எப்படியிருப்போம் என்று நினைக்கவேண்டாம். பத்து ராத்ரி வரையிலும் ராமனை எனக்குக்கொடு! அது வரையிலும் எவ்விதமான சிந்தையும் இல்லாமல் அவனை என்னுடன் அனுப்பு!

(அபி) சப்தத்தால் எனக்கு விரோதியுமாகிய வஸிஷ்டரும் என்க. வஸிஷ்டர் எப்படிப்பட்டவரென்றால், (மஹாதேஜா:) ப்ரஹ்ம குமாரரும் யோகத்தால் ஸித்தமான ஜ்ஞானத்தை யுடையவருமென்க. அன்றி எவருடைய வாயினாற் சொல்லப்பட்டு நான் ப்ரஹ்ம ரிஷியென்று பட்டம்பெற்றேனோ, அப்படிப்பட்ட ப்ரபாவமுடையவர் என்க. வஸிஷ்டரும் உன்னுடையவ ராகையால் நம்மிருவர்க்கும் வந்த விவாதத்தில் அவர் உன்மீது பக்ஷபாதம் கொள்ளக்கூடும். ஆகையால் அவர் அப்படியிருக்கட்டும். ராஜத்வார ஸம்பந்தம் இல்லாமையினால் பக்ஷபாதம் இல்லாமல் இருக்கிற மற்றவர்களும் அறிவார்களென்கிறார். (யேசேமே) 'தஸ்யதீரா: பரிஜாநந்தி யோநிம்' என்கிறபடி அவதார ரஹஸ்யத்தை அறிந்தவர்களாகிய வாமதேவாதிகளென்க. இவர்களும் உன்னுடைய ப்ரியத்தை அநுஸரிப்பவர்களாகையால், கேவலமான பாமைகாந்திகள் அவனை உள்ளபடி அறிவார்களென்கிறார். (தபஸிஸ்திதா:) காயிக வ்யாபாரங்களை விட்டு எப்பொழுதும் தவத்திலேயே நிலைபெற்றிருப்பவர்கள் என்க. இவர்கள் அனைவரையுங்கேட்டு, அனைவரும் அநுமதி கொடுத்தபின்பு ராமனை எனக்குத் தருவாயாக என்று கருத்து.

''ரகுகுலதிலகனே! என யாககாலம் மீறிப்போகாதபடி முன்னதாகவே ராமனை யனுப்பு. உனக்கு க்ஷேமம் உண்டாகும். மனத்தில் கொஞ்சமும் சோகிக்கவேண்டாம்'' என்று மஹா தேஜஸ்வியான அவ்விஸ்வாமித்ர முனிவர் கூறினர். தர்மார்த்தங்கள் நிறைந்த அம்மொழிகளைத் தசரத மஹாராஜன் கேட்டு 'நாம் ராமனை விட்டு எப்படிப் பிரிவோம்' என்று மிகவும் வருந்திப் பயந்து முகம் வாடி நின்றான். இவ்வாறு மார்பையும் மனத்தையும் பிளக்கும்படி மிகவும் கடூரமான அம்முனிவர் மொழியைக் கேட்டு அம்மன்னவன் அதிக மனவருத்தங் கொண்டு ஸிம்ஹாஸனத்திலிருந்த வண்ணமே நடு நடுங்கி மூர்ச்சித்து விட்டான்.

பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதன் ராமனை அனுப்புவதற்கு வருந்துதல்.

தசரதன் விஸ்வாமித்ரர் மொழிந்ததைக் கேட்டு அந்நனம் மூர்ச்சை யடைந்து பின்பு தெளிந்து ''முனிபுங்கவரே! தாமரை யிதழ்போல விளங்குகின்ற அழகான கண்களையுடைய ராமன் பிறந்து இன்னம் [1]பதினாறு வர்ஷமும் நிரம்பவில்லை. அவனுக்கு இப்பொழுது பன்னி-

1. பதினாறு வயதுள்ள க்ஷத்ரிய குமாரனே யுத்தஞ்செய்யத் தக்கவனென்று சாஸ்த்ரம் சொல்லுகின்றது. ராமன் 'ஊநஷோடஶவர்ஷ:' என்று பதினாறு வயதுக்கும் குறைந்த வயதுள்ளவனென்பதனால் யுத்தஞ்செய்யத் தக்கவன் அல்லவென்பது கருத்து. மாரீசன் ராவணனுக்குச் சொல்லும்பொழுது 'பாலோ த்வாதஶவர்ஷோயம க்ருதாஸ்த்ரஶ்ச ராகவ:' என்று ராமன் விச்வாமித்ரனுடன் வந்தபொழுது அவனுக்குப் பன்னிரண்டு வயதென்று சொல்லியிருக்கிறான். ஆகையால் 'ஊநஷோடஶவர்ஷ:' என்பதற்கு நான்கு வயது குறையப் பதினாறு வயதென்பதுபொருள். அதாவது-பன்னிரண்டுவயது.

ரண்டாவது பிராயம் நடந்துவருகின்றது. இங்ஙனம் மிகவும் இளைஞனாகிய அவனுக்கு அரக்கர்களை எதிர்த்துப்

இங்கு மூலவாக்யமானது.

'ஊந ஷோடஶ வர்ஷோமே ராமோ ராஜீவ லோசநஃ।

நயுத்³த⁴ யோக்³யதா மஸ்ய பஶ்யாமி ஸஹராக்ஷஸைஃ॥' என்பது

இதற்கு விசேஷார்த்தமாவது விஶ்வாமித்ர முனிவர் 'யஜ்ஞ விக்நகராம்ஹந்யாம்' என்று 'யாகத்துக்கு விக்னஞ்செய்பவனைக் கொல்வேன்' என்கிற ராமனுடைய ஸங்கல்பத்தை அறிந்தவராகையினால் தன்னுடைய யஜ்ஞ விக்னத்தை அவரைக்கொண்டு போக்கிக்கொள்வோம் என்று நினைத்து ராமனை அனுப்பவேண்டும் என்று தசரத சக்ரவர்த்தியை இரந்தார். அரசன் ராமனிடத்தில் உள்ள வாத்ஸல்யத்தினால் மிகவும் கலக்க மடைந்து 'அஹம்வேத்³மி மஹாத்மாநம்' என்று முனிவர் சொல்லிய வசனம் மனத்திற்படாமல் ராமனுக்குப் பருவத்தினால் உள்ள இளமையைப் பார்த்து மன்றாடுகிறான். (ஊநஷோடஶவர்ஷஃ) இன்னும் பதினாறு பிராயம் நிரம்பிற்றில்லை, 'க்ஷீரகண்டஶ்சராமஹதீ³ரஃ' என்கிறபடி பால் மாறாத இளம் பருவத்திலேயும் யுத்தஞ் செய்யமுடியுமா? என்கிறான். இனித் தேஜஸாம்ஹி நவயஸ்ஸமீக்ஷ்யதே' என்று தேஜஸ்ஸுள்ள பதார்த்தங்களுக்கு வயது பார்ப்பது கிடையாது. சிறு நெருப்பாயிருந்தாலும் சுடும். ராமன் இப்பொழுது எடுத்துள்ள மனுஷ்யாவதாரத்துக்கிணங்கத் தன் வைபவத்தை மறைத்துக் கொண்டிருந்தாலும் நான் ஸ்நேஹத்துடன் மங்களாசாஸனம் பண்ணிக் காட்டிக்கொடுத்தால் தன் இயற்கையான ப்ரபாவத்தினால் சத்ருவைச் சம்ஹாரம் பண்ணுவதற்குச் சக்தனாவான் என்று சொல்ல, அரசன் (மோராமஃ) கையுங் கோடரியுமாக இருபத்தொரு தலை முறை வரையில் க்ஷத்ரியர்களைச் சிரச்சேதம் பண்ணிக்கொண்டு திரிந்த முரட்டுப் பரசுராமனைக என்னுடைய ராமனை நினைக்கவேண்டாம் என்க. அன்றிப் பெரிய பசியுடன் உண்ணப் புகுந்தவனைக் கையைப் பிடிப்பவர்களைப் போல 'ஷஷ்டிவர்ஷஸஹஸ்ராணி ஜாதஸ்ய' ... 'ஜநோத்பாதி³தஶ்சாயம்' என்று அறுபதினாயிரம் வருஷங் கழித்து ஒரு பிள்ளைபெற்று அவன் முகத்தைப் பார்த்துக் களித்திருக்கின்ற என்னிடத்திலிருந்தும் இவனைப் பிரித்துக்கொண்டு போவது தர்மமோ என்க. (ராமஃ) குட்டி அனுபவிக்க வேண்டிய கருமுகை மாலையைக்

போர்செய்யுந் தன்மை எப்படியுண்டாகும்? என் மடியை விட்டுப்பிரியாதிருக்கின்ற இவன் என்னை விட்டுத் தனித்திருக்க வல்லவனல்லன். இப்பொழுது அவனுக்கு விளை

கசக்கி வெயிலில் வைப்பாரைப்போல் 'ஏத ஷேவாமரூதம் ஊரூஷ்ட்வா தருப்யந்தி' என்றும், நந்ஊாமிபஸ்யந்நபி ஊர்ஸநேந' என்றும் கண்ணுக்கினிதாகக்கண்டு கொண்டிருக்கின்ற இந்த வஸ்துவை யுத்தத்துக்கு ஸஹாயமா விரும்புகின்றது கூடாதென்க. இப்படி வயதினல் யுத்தத்துக்கு யோக்யனல்லன் என்று சொல்லி ராக்ஷஸர்களோடு பொருவதற்கு யோக்யனே யல்லன் என்கிருன். (ராஜீவ லோசநஃ)தாமரைப்பூப் போன்ற கண்களை யுடையவன். தாமரைப்பூ ராத்ரியில் குவிந்து விடுவதுபோலப் பால்யமாகையினுல் ஸூர்யாஸ்தமயமாய் விட்டால் அவன் கண்களும் உறக்கத்துக்கு இலக்காயிருக்குமென்க. ராக்ஷஸர்கள் ராத்ரியில் வலிமை பெற்றுச் சஞ்சரிப்பவர்கள். அவர்களோடு இப்படிக் கண்ணுறக்கங் கொள்ளும் தன்மையுள்ள இவன் பொருவது எங்ஙனம் என்பது கருத்து (நயுத்தயோக்யதா மஸ்ய, பஸ்யாமி) விளையாடுவதற்குத் தக்கவனே யன்றிப் போர்புரிவதற்குத் தக்கவனன்று. (ஸஹ ராக்ஷஸைஃ) மநுஷ்யர்களோடு பொருவதற்கே யோக்யதையில்லாமலிருக்க ராக்ஷஸர்களோடு முடியாதென்பது சொல்லவேண்டுமோ! மேலும் ராக்ஷஸன் ஒருவனல்லன் என்க. இங்குப் பிதாவாகிய தசரதன் 'ஊநஷோடஸ வர்ஷஃ' என்று பதினறு வயது நிரம்பவில்லை யென்கிருன். இக்குறைவு ஒரு மாஸம் அல்லது மூன்று மாஸம் அல்லது ஆறு மாஸங்கள் ஆகவேண்டும். ஒரு வருஷம் இரண்டு வருஷம் என்று சொல்லலாகாது. அப்படியானல், பதினைங்கு பதினைந்தென்றே சொல்லவமையும். அந்தப் பதம் நாலாறுமாஸக் குறைவைக் காட்டுமே யொழிய வருஷக் குறைவைக் காட்டமாட்டாது. மேலும் அந்த வருஷத்திலேயே ஸீதா விவாஹம் நடந்ததாகத் தெரிகின்றது. மணம் புரிந்த பின்பு பன்னிரண்டு வருஷங்கள் ஸீதை அயோத்யையில் வஸித்திருந்தாள் என்று 'ஸமாத்வாதஸ தத்ராஹம் ராகவஸ்ய நிவேஸநே, ஹுஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ' என்று பின்பு சொல்கின்ற அவள் வசனத்தில் தோன்றும். ஆகவே காட்டுக்குப் போகும்பொழுது ராமனுக்கு இருபத்தெட்டு வயதாயிருக்கவேண்டும். இது 'மமபர்த்தா மஹாதேஜா வய

யாட்டுப்பருவம். யுத்தஞ் செய்யும் பருவத்தை அவன் இன்னும் அடையவில்லை. மனிதர்களோடுகூடப் போ

ஸா பஞ்சவிம்ஶக:| அஷ்டாதஶஹி வர்ஷாணி மமஜந்மநி கண்யதே' என்று தன் பர்த்தாவுக்கு இருபத்தைந்து வயதென்றும் தனக்குப் பதினெட்டு வயதென்றுஞ் சொல்லுகின்ற சீதையின் வாக்யத்துக்குப் பொருத்தமாகமாட்டாது. கௌஸல்யாதேவியும் காட்டுக்குப் போகுந் தருணத்தில் ராமனைப் பார்த்து 'தஶ ஸப்தச வர்ஷாணி ஜாதஸ்ய தவபுத்ரக| ஆஸிதாநி ப்ரகாங்க்ஷந்த்யா மயா து:கபரிக்ஷயம்' என்று ராமன் பிறந்து பதினேழு வருஷங்கள் ஆயின வென்று மொழிந்திருக்கிறாள். ஆகையினால் இருபத்தெட்டென்பதற்கும் இருபத்தைந்தென்பதற்கும் பதினேழென்பதற்கும் எப்படிப் பொருத்தமுண்டாகும் என்ற வினவுக்குச் சிலர் இங்ஙனஞ் பரிஹாரஞ் சொல்லுவார்கள். அதாவது:—கௌஸல்யையின் வாக்யத்தில். 'ஜாதஸ்ய:' என்று இரண்டாவது ஜன்மத்தைச் சொல்லுகிறது. க்ஷத்ரியனுக்கும் ப்ராஹ்மணனைப்போல் இரண்டு ஜன்மங்கள் உண்டு. இரண்டாவது ஜன்மமாவது உபநயனம். ஏகாதஶேஷு ராஜந்யம்' என்று க்ஷத்ரியனுக்கு உபநயனம் பதினோராவது வயதிற் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே இரண்டாவது ஜன்மமான உபநயனத்தைப் பிடித்துக் கீழ்ப்பத்தைக் கழித்து உபநயன மானபின்பு காட்டுக்குப்போகும் பொழுது பதினேழு வயதென்று கொள்ளவேண்டும் என்க. ஆனால் இது புத்திரனைக் காட்டுக்கனுப்புகின்ற துக்கத்தினால் மனக் கலக்கமடைந்த ஸ்த்ரீயின் வார்த்தையாகையினால் பிறந்தது தொடங்கிச் சொல்லவேண்டுமேயன்றிச் சோகதசையில் உள்ள ஒரு ஸ்திரீ இத்தனை அறிவோடு தர்மசாஸ்த்ரத்தை மனத்திற்கொண்டு இரண்டாவது ஜன்மத்தைக் கருதிச் சொன்னாள் என்பது அழகன்று; மேலும் 'ஊநஷோடஶவர்ஷ:' என்று சக்ரவர்த்தி சொல்லிய வாக்யத்தின்படி உபநயனம் தொடங்கி விஸ்வாமித்ரனுடன் போகும்பொழுது ஆறவருஷங்களென்றும் 'ஸமா த்வாதஶ' என்ற சீதையின் வாக்யப்படி விவாஹத்திற்குப் பின்பு பன்னிரண்டு வருஷங்கள் என்றும் தோன்றுகையினால் காட்டுக்குப் போகும்பொழுது பதினெட்டு வருஷங்கள் ஆகின்றது. அதைப் பதினேழு வருஷங்கள் என்பதும் பொருந்தமாட்டாது. இப்படி ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுமானால் வாஸ்தவமான பொ

ராடமுடியாத இவன் கொடியராகிய ராக்ஷஸர்களோடு எங்ஙனம் போராட வல்லவனுவான் ? ஆகிலும நான் சொன்ன சொல்லுக்கு வேருகச்செய்யமாட்டேன். என் கட்

ருள் தான் என்னவென்ருல், வயஸாபஞ்சவிம்ஶக: என்று ஸந்யாஸி வேஷம் பூண்ட ராவணனைப் பார்த்துச் சீதை சொல்லுகின்ற இருபத்தைந்து வருஷத்தையே ப்ரமாணமாய் கொள்ளவேண்டும். இனி 'ஊந ஷோ஡ஶவர்ஷ:' 'என்கிற தசரத வாக்யத்தையும் 'ஷஶஸப்தச' என்கிற கௌஸல்யையின் வாக்யத்தையும் இதற்கிணங்கச் சேர்த்து யோசிக்கவேண்டும். எப்படி யென்ருல் 'ஊநஷோ஡ஶ வர்ஷ:' என்கிற விடத்தில் ஸாமாந்யமாகக் குறைவைச் சொல்லுகின்றதே யொழிய மாஸக் குறைவைச் சொல்லுகிறதென்று சொல்லக்கூடாது. வாலோஜீவாஷ்ஶ வர்ஷோயம்' என்று சக்ரவர்த்தி பன்னிரண்டு வயதென்று சொல்வதனுல் இந்தக் குறைவை நான்கு வருஷங்களாகக் கொள்ள வேண்டும். ஆகவே பன்னிரண்டு பிராயமாய் அப்பொழுது விவாஹமாய், 'ஸமாஜீவாஷ்ஶ என்று பின்புபன்னிரண்டு வருஷங்கள் கடந்து காட்டுக்குப் போகும்பொழுது இருபத்து நாலாகிறது. சீதை ராவணனைப் பார்த்துச் சொல்லுகின்றபோது 'வயஸாபஞ்சவிம்ஶக:' என்று சொல்லிய இருபத்தைந்துவயதென்பதுபொருந்துகின்றது கௌஸல்யையின் வாக்யத்திலும் (ஷஶ) என்று பத்தும் (ஸப்த) என்று ஏழும் (ச) என்று இன்னும் ஒரு ஏழாய் ஈரேழு பதினன்காய்ப் பத்தும் பதினன்கும் இருபத்து நான்கும் கழிந்து இருபத்தைந்தாவது ஆகின்றதென்று பொருள் கொள்ளவேண்டும். ஆகையினுல் விரோதித்தாற்போலத் தோற்றின மூன்றும் கீழ்ச்சொன்ன ப்ரமாண யுக்திகளால் விரோதமின்றிப் பொருந்தும். ஆனுல் நிரம்பவும் ஏற்றக் குறைவாக ஊந ஷோ஡ஶ வர்ஷ:' என்று பதினுறுக்குக் குறைவென்று சொல்லுவானேன் ? 'வாலோஜீவாஷ்ஶ வர்ஷ:' என்று தானே பன்னிரண்டு வயதென்று சொல்வதனுல் நான்கு வருஷங்கள் குறைய நெடுமேடும் நெடும்பள்ளமுமாகச் சொல்லலாகுமோ என்ருல் அது 'நயுத்ய யோக்யதா மஸ்ய பஶ்யாமி' என்று யுத்தத்துக்கு யோக்யனல்லன் என்பதற்காகச் சொன்னது. வால ஆஷோ஡ஶாஜ் வர்ஷாத் பௌமண்஡ஶ் சேதி கீர்த்யதே' என்ற மநுவசனத்தின்படி பதினுறு பிராயம் நிரம்பின பின்புதான் வ்யவஹாரத்துக்கு யோக்யனுவதும்,தானுக

டளையில் அடங்கி என்னால் பாதுகாக்கப்பட்டு வருகின்ற படைகள் அக்ஷௌஹிணிக் கணக்கில் இருக்கின்றன; அவைகளைக் கூட்டிக்கொண்டு வந்து நான் அவ்வரக்கர்களோடு யுத்தஞ் செய்கிறேன். எனது படைவீரர்கள் அஸ்த்ர வித்யைகளில் தேர்ச்சியடைந்து சூரர்கள் என்று எங்கும் கியாதி பெற்றவர்கள். அவர்கள் தங்கள் யாகத்துக்கு விக்னஞ் செய்கின்ற இரண்டு அரக்கர்களை மாத்திரம் அல்லாமல் இன்னமும் அவர்களுக்குத் துணையாக வருகின்ற கணக்கில்லாத அரக்கர்களையும் போர் புரிந்து கொல்வதற்கு ஸித்தமாயிருப்பார்கள்; ஆகையால் ராமனை அழைத்துக்கொண்டு போகவேண்டாம். நானே வில்லுங் கையுமாக நின்று அந்தப் படைகளை அழைத்துக்கொண்டு வந்து அவர்களுக்கு முன்னேயிருந்து என் சரீரத்தில் ப்ராணன் உள்ள வரையிலும் அவ்வரக்கர்களோடு போராடுவதற்குச் சித்தமாயிருக்கிறேன்.

''முனிபுங்கவரே! நான் அங்கு வந்து தங்கள் யாகத்துக்கு விக்னம் வாராதபடி தங்கள் விரதாநுஷ்டானத்தை நன்றாய்ப் பாதுகாத்து முடித்து வைக்கிறேன். ராமனை யழைத்துப் போகவேண்டாம். மேலும் அவன் பால்யன். தநுர்வித்யையில் தேறினவனன்று. பின்னும் அவன் சத்ருக்களது பலாபலங்களையும் அறியமாட்டான். அஸ்த்ரபலத்தையும் நன்றாய் அடையவில்லை. ராக்ஷஸர்கள் வஞ்சனையில் மிகுந்தவர்கள். பகலும் இரவும் இளக்காமலிருந்து யுத்தஞ்செய்ய வல்லமை பெற்றவர்கள். அப்

கவேறொரு ஊருக்குப் போவதும் தனித்து யுத்தஞ்செய்ய யோக்யனாவதும் கூடும். ஆகையினால் அந்த யோக்யத்தை இவனுக்கு இன்னும் இல்லை என்பதற்காகப் பதினாறு பிராயம் ஆகவில்லை என்கிறான். ஆகையால், இது உபபந்நம்.

படிப்பட்டவர்களோடு போர் புரிவதற்கு ராமன் தகா னென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. பூஜ்யரே! நான் ராமனை விட்டு ஒரு முகூர்த்த காலமும் பிழைத் திருக்கமாட்டேன். இதைப்பற்றித் தாங்கள் ராமனை அழைத்துக்கொண்டு போகவேண்டாம்.

"விரதங்களை யெல்லாம் நன்ருக அநுஷ்டித்த அந் தணர் சிகாமணியே! ஒருகால் ரகுகுலத்துக்கு விளக் குப்போல விளங்குகின்ற ராமனையே அழைத்துக் கொண்டு போகவேண்டுமென்று தங்களுக்கு எண்ணம் இருக்குமானுல் சதுரங்க ஸேனைகளுடன் கூடிய என்னை யும் அவனுடன் அழைத்துக்கொண்டு செல்லுங்கள். நான் அறுபதினுயிரம் வருஷங்கள் சென்றபின்பு எவ் வளவோ விரதங்களை அநுஷ்டித்து மிகவும் கஷ்டப் பட்டு ராமனை அருமையாகப் பெற்றேன். அதை நினைத் தாவது தாங்கள் ராமனை அழைத்துக்கொண்டு போகவேண்டாம். மேலும் புத்திரர் நால்வரிலும் நான் ராமனிடத்தில் அளவற்ற அன்பு வைத்திருக்கிறேன். அவன் எனக்கு மூத்த குமாரன்; மிகவும் தர்மசீலன். அப்படிப்பட்ட ராமனை அழைத்துக்கொண்டு போவது தங்களுக்குத் தர்க்கதன்று.

"முனிவரே! தங்கள் யாகத்திற்கு விக்னத்தை உண்டு பண்ணுகின்ற அரக்கர்கள் யார்? அவர்க்ள் யாருடைய பிள்ளைகள்? அவர்கள் வல்லமை எப்படிப் பட்டது? அவர்கள் உருவம் எப்படி யிருக்கும்? அவர்களைப் பாதுகாப்பவன் எவன்? கபடயுத்தஞ் செய்ய வல்லமை பெற்ற அவர்கள்மீது ராமனுவது, என் படைக ளாவது, அல்லது நானுவது எவ்வித ஏற்பாட்டுடன் எதிர்த்துப் போர் செய்யவேண்டும்? ராக்ஷஸர்கள் வீர் யங்கொண்டு கர்வித்திருப்பவர்களாகையால் துஷ்ட

ஸ்வபாவமுடைய அவர்கள் யுத்தத்தில் நான் ஒருவனாகவே போர்செய்யத் தகுமா? இவற்றையெல்லாம் தாங்கள் எனக்குச் சொல்லவேண்டும்' என்று கூறினான்.

விஶ்வாமித்ரர் 'அரசனே! புலஸ்திய மஹர்ஷியின் வம்சத்திற்பிறந்த ராவணன் என்ற ராக்ஷஸன் ஒருவன் இருக்கிறான். அவன் பிரமனிடம் வரம்பெற்று மிகுந்த பலமும் சிறந்த வீர்யமும் அமைந்து அநேக ராக்ஷஸர்களால் சூழப்பட்டவனாகி மூவுலகங்களையும் நடுங்கச் செய்து வருகிறான். அவன் குபேரனுக்குப் பின் பிறந்தவன்; விஶ்ரவஸ் என்கிற முனிவர் புத்திரன். ராக்ஷஸர்களுக்கு அதிபதி; மஹாபராக்ரமசாலி. அவனைத் தாங்களும் கேள்வியுற்றிருக்கலாம். அவன் தானே நேராக வந்து யாகத்திற்கு விக்னஞ்செய்ய முடியாத சமயங்களில் மிகவும் கொழுத்திக்கிற மாரீச ஸுபாஹுக்களென்னும் ராக்ஷஸர்கள் இருவரையும் தூண்டிவிடுகிறான். அவர்கள் வந்து என் யாகத்தைக் கெடுக்கிறார்கள்" என்று மொழிந்தார்.

அதைக்கேட்ட மன்னவன் 'முனிவரே! கொடுந்தன்மையனாகிய ராவணனோடு யுத்தத்தில் முன்னின்று போர்புரிய நான் வல்லவனல்லன். தாங்கள் தர்மங்களை அறிந்திருக்கிறீர்கள். அதனோடு எனக்குக் குருவும் தெய்வமுமானவர். தங்கள் ஆணைப்படி காரியஞ்செய்யப் பாக்கியமற்றிருக்கின்ற என்மீது கிருபை செய்தருளவேண்டும். தேவர்கள் தானவர்கள் கந்தர்வர்கள் யக்ஷர்கள் பதகர்கள் பன்னகர்கள் என்னும் இவர்களே ராவணனோடு முன்னின்று போர்புரிவதற்கு வல்லமையில்லாதிருக்கிறார்கள் என்றால், மானிடர்கள் எவ்வளவு? அவன் மிகுந்த பலசாலிகளான மஹா வீரர்களையும் யுத்தத்தில் வல்லமை யற்றவர்களாகச் செய்யுந் திறமை

யுடையவன். ஆகையால், நான் தனியாகவாவது, படைகளுடன் சூழ்ந்தாவது, அல்லது புத்ரர்களுடன் சேர்ந்தாவது அவனுக்கு எதிர் நின்று போர்புரியும் வல்லமையற்றவன். மாரீசன் முதலான அவனது ஸைன்யங்களோடு என்னால் சண்டைசெய்ய முடியாது.

"அந்தணர்களிற் சிறந்தவரே! யுத்ததந்திரங்கள் ஒன்றும் அறியாமல் பாலனாய்ப் புத்தென்கிற நகரத்தினின்றும் என்னைக் காப்பவனுமாகிய ராமன் தேவர்களை நிகர்த்தவனாயிருந்தாலும் நான் அவனைத் தங்களுடன் அனுப்புவதற்குப் பிரியப்படவில்லை. தங்கள் யாகத்தைக் கெடுக்கவந்த ஸுந்தோபஸுந்தர்களின் புத்ரர்களான மாரீச ஸுபாஹுக்கள் யுத்தத்தில் யமனுக்குச் சமானமானவர்கள். ஆகையால் அவர்களோடு யுத்தஞ் செய்து தங்கள் யாகத்தைக் காப்பதற்குக் குழந்தையாகிய ராமனால் ஒரு பொழுதும் முடியாது. மாரீச ஸுபாஹுக்கள் யுத்தத்தில் நன்றாய்ப் பயின்றவர்கள். நானும் என் நண்பர்களும் ஒன்றாய்க் கூட்டங்கூடி எதிர்த்தாலும் அவ்விருவரில் ஒருவனையாவது ஜயிக்க முடியாது" என்று சொன்னான். இங்ஙனம் அம்மன்னவன் முன்பின் ஒட்டாமல் அஸங்கதமாய்ச் சொன்ன சொற்களைக்கேட்டு விஶ்வாமித்ர முனிவர் நெய்யைச் சேர்த்து நன்றாய் ஹோமஞ் செய்யப்பட்டுக் கொழுந்துவிட்டெரிகின்றயாகாக்னிபோலக் கோபாவேசங் கொண்டார்.

இருபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

வஸிஷ்டர் தசரதனுக்கு விஶ்வாமித்ரர் மகிமையை அறிவிப்பது.

இப்படி அம்மன்னவன் தன் புத்திரனிடத்திலுள்ள அன்பினல் எழுத்துக்கள் தெரியாமல் வாய் குழறிக் கொண்டு சொன்ன சொற்களைக் கேட்ட விஶ்வாமித்ரர் கோபாவேசங் கொண்டு அவ்வரசனை நோக்கி "அரசனே! நான் விரும்பின காரியத்தைச் செய்வதாக நீ முன்பு உறுதிமொழி செய்து அதை நிறைவேற்ருமல் இப்பொழுது விட்டுவிட நினைக்கின்றனை. தர்மத்திற் சிறந்த ரகு வம்சத்தில் இப்படிச் சொன்னசொல் தவறுவது யுக்தமாகமாட்டாது. மன்னவனே! ஒருகால் சொன்னசொல் தவறுவது உனக்குள் அழகென்று தோன்றுமானுல் சொல்லிவிடு. நான் வந்தவழியே திரும்பிப்போகிறேன். ஸத்யஸ்வரூபமாகிய காகுஸ்த வம்சத்திற் பிறந்த நீ உன்னை விரும்பி வந்தவர்களுக்கெல்லாம் இப்படியே முதலில் ப்ரதிஜ்ஞை செய்து பின்பு பொய் பேசிக்கொண்டு பந்துக்களோடுகூட ஸுகமாக வாழ்ந்திரு!" என்று படபடத்துக்கூறினர்.

அப்பொழுது பூமி முழுவதும் கிடுகிடுவென்று நடுங்கிற்று. முனிவர் என்ன செய்வாரோவென்று தேவர்களும் பயமடைந்தார்கள். பின்பு விரதாநுஷ்டானங்களைச் செய்து கீர்த்திபெற்ற வஸிஷ்ட மஹர்ஷி உலகங்கள் பயந்து நடுங்குவதைக் கண்டு, அரசனைநோக்கி "மஹாராஜனே! நீ சொன்ன சொல் தவருத இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்தவன். உருவமெடுத்து வந்த தர்மதேவதையோ என்னும்படி தர்மத்தையே தொழிலாய்க் கொண்டவன். தைரியம் நிறைந்தவன். விரதங்களைத் தவருமல் அநுஷ்டிப்பதில் ஊக்கமுள்ளவன். ஐஶ்வர்யங்கள் அமைந்திருப்பவன். இப்படிப்பட்ட நீ

தர்மந் தவறுவது யுக்தமன்று. ராகவனே! நீ தர்மாத்மா வென்று மூவுலகங்களிலும் மிகவும் கியாதிபெற்றவன். நீ இப்பொழுது சொன்னசொல் தவறி நடக்கவேண்டாம். அதை நீ அனுஷ்டிப்பாயாக. நீ அதர்மத்தைச் செய்ய உடன்படாதே. இப்படிச் செய்கிறேன் என்று முதலில் ஒத்துக்கொண்டு, பின்பு அங்ஙனஞ் செய்யாதவன் தான் முன் செய்த அஸ்வமேதம் முதலான பலவகை யாகங்களையும், குளம் கிணறு வெட்டுவித்தது ஸத்ரம் சாவடி கட்டுவித்தது முதலான தர்மங்களையும் பயனற்றவைகளாகச் செய்துகொள்கிறான்.

ஆகையால் விசுவாமித்ரர் விரும்பினபடி ராமனை அவருக்குக்கொடு! ராமன் அஸ்த்ரங்களைக் கற்றிருந்தாலென்ன? அன்றிக் கல்லாதிருந்தாலென்ன? குசிகன் புதல்வராகிய இவ்விஸ்வாமித்ரர் அவனைப் பாதுகாத்துக் கொண்டிருக்கையில், அக்னியால் சூழ்ந்து காக்கப்பட்ட அமிருதத்தைப்போல அரக்கர்கள் அவனை வெல்ல வல்லவர் ஆகமாட்டார்கள். விஸ்வாமித்ர முனிவர் தர்மமே ஒரு வடிவங்கொண்டாற் போன்றவர். வீரியம் படைத்தவர்களுக்குள் இவர் மிகச்சிறந்தவர். தன் புத்தியின் மகிமையினால் உலகத்தில் உள்ள அனைவரையும் மீறி யிருப்பவர். இவர் தவங்களுக்கு இருப்பிடம். இவரைப்போலத் தவஞ்செய்தவர் ஒருவரும் இல்லை. ஜங்கம ஸ்தாவரங்கள் அடங்கிய இந்த மூவுலகத்திலும் உள்ள பலவகைப்பட்ட அஸ்த்ரங்களையும் இவர் அறிந்திருக்கிறார். இவர் அறிந்த அஸ்த்ரங்களை இது வரையில் எவரும் தெரிந்துகொண் டிருக்கவில்லை. இனிமேலும் எவரும் அறியப்போவதில்லை. முடிவாய்ச் சொல்லுமிடத்தில் தேவர்களும் ரிஷிகளும் அஸுரர்களும் ராக்ஷஸர்களும் கந்தர்வர்களும் யக்ஷர்க

ளும் கின்னரர்களும் உரகர்களும் மற்றுமுள்ள அனை வரும் எவ்வளவு மகிமை பொருந்தியிருப்பவர்களாயிருந் தாலும் இவைகளை யறியமாட்டார்கள்.

''அஸ்த்ரங்கள் யாவும் பரம தார்மிகராகிய பிரு சாஸ்வருடைய புத்ரர்கள். முன்பு இக்கௌசிகர் ராஜ்யமாளுங் காலத்தில் அவருக்கு பிருசாஸ்வர் அவ் வஸ்த்ரங்களைக் கொடுத்தார். பிருசாஸ்வருக்குத் தக்ஷ ப்ரஜாபதியின் பெண்கள் இருவரிடத்திலும் அவ் வஸ்த்ர ரூபங்களான பிள்ளைகள் பிறந்தார்கள்; அவர் கள் காமரூபிகள். மிகுந்த வீர்யமுடையவர்கள். சிறந்த ஒளிபொருந்தியவர்கள். தம்மைப் பற்றினவர்களுக்கு வெற்றியைத் தரவல்லவர்கள். தக்ஷப்ரஜாபதிக்கு ஜயை யென்றும், ஸுப்ரபையென்றும் அழகான இடையுடைய இரண்டு பெண்கள் இருந்தார்கள். அவ்விருவரும் மிக வும் ப்ரகாசமுள்ள அஸ்த்ரங்களையும் சஸ்த்ரங்களையும் தங்கள் வயிற்றில் புத்திரர்களாய்ப் பெற்றார்கள். அவர் களில் முதற்பெண்ணாகிய ஜயையென்பவள் அஸுரஸைன் யங்களை வதிக்கும்பொருட்டு அளவிடமுடியாத மகிமை யுடையவர்களாகி நினைத்தபடிக்கு வடிவங்கொள்ள வல் லவர்களும் கண்ணுக்குப் புலப்படாதவர்களுமாகிய ஐம் பது புதல்வர்களைப் பெற்றாள். ஸுப்ரபை என்பவள் எதிரிகளால் வருந்தியும் வெல்லமுடியாத வல்லமை யுடை யவர்களாய், எங்குஞ் சென்று வெற்றி பெறும் தன்மையர் களாய், அளவற்ற பலம் அமைந்தவர்களாய் விளங்கும் ஸம்ஹாரங்களென்று பெயர்பெற்ற ஐம்பது புதல்வர்க ளைப் படைத்தாள். அவ்வஸ்த்ரங்களை யெல்லாம் இவ் விஸ்வாமித்ர முனிவர் பரிபூர்ணமாகக் குறைவின்றி அறிந்திருக்கிறார்.

''ஸகல அஸ்த்ரங்களையும் அறிந்து தர்மங்களை யுணர்ந்த இம்முனிவர் கீழ்ச்சொன்னவைகளை யல்லாமல் எவராலும் இது வரையில் கேட்டிருக்க முடியாத மற்றும் புதியவைகளான பல அஸ்த்ரங்களையும் அளவின்றி உண்டு பண்ண வல்லமை பெற்றிருக்கிறார். மஹாதேஜஸ்வியாய் அளவற்ற கீர்த்தியமைந்திருக்கிற இவ்விஸ்வாமித்ர முனி வரது பெருமை அளவற்றது. மன்னவனே! ராமனை யனுப்ப நீ கொஞ்சமும் ஸந்தேகப்படவேண்டாம். அரக்கர் அனைவரையும் குசிக புத்ரராகிய இவ்விஸ்வாமித்ரர் ஒருவரே முடிக்க வல்லர். ஆயினும் உன் புதல்வனுக்கு நன்மை யுண்டாக்கும்பொருட்டு உன்னிடம் வந்து இப்படிக் கேட்டுக்கொள்ளுகின்றனர்'' என்று கூறினார். அரசன் வஸிஷ்டமுனிவர் சொற்களைக்கேட்டு மனக்கலக்கம் தீர்ந்து தெளிந்து ஸந்தோஷத்தினால் முகமலர்ச்சி யடைந்து ராமனை அனுப்புவதற்காக அங்கீகாரஞ் செய்து கொண்டான்.

இருபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

விஸ்வாமித்ரர் ராம லக்ஷ்மணர்களை அழைத்துக்கொண்டு போவது.

வஸிஷ்ட முனிவர் வசனத்தைக் கேட்ட தசரதன் ஸந்தோஷத்தினால் முகமலர்ச்சி பெற்றுத் தன் புதல்வனாகிய ராமனை லக்ஷ்மணனோடு வரவழைத்தான். பின்பு தாயாகிய கௌஸல்யையும் தந்தையாகிய தசரத மன்னவனும் ராமனுக்கு மங்களாசாரங்களை நடத்தினார்கள். புரோஹிதரான வஸிஷ்ட முனிவரும் மங்களமான மந்த்ரங்களால் அவனை மந்த்ரித்தனர். பிறகு தசரத வேந்தன் ராமனை உச்சி முகந்து உள்ளங்குளிரச் சந்தோஷத்துடன் விஸ்வாமித்ரரிடத்தில் ஒப்புவித்தான்.

பின்பு தாமரையிதழ்போன்ற கண்களையுடைய ராமன் விஸ்வாமித்ரரைப் பின்றொடர்ந்தபொழுது காற்று தூகளின்றி மெதுவாக வீசிற்று. ராமன் புறப்படும்பொழுது தேவர்கள் துந்துபி வாத்ய கோஷத்துடன் புஷ்ப வர்ஷங்களை அளவின்றிப் பொழிந்தார்கள். அயோத்திமா நகரிலும் அப்பொழுது சங்க வாத்தியங்களும் துந்துபி வாத்தியங்களும் முழங்கின. விஸ்வாமித்ரர் முன்னே நடந்தார். அவர் பின்னால் ராமன் வில்லுங் கையுமாகத் தொடர்ந்தான். லக்ஷ்மணன் காகபக்ஷங்கள் அசைய வில்லைக் கையிற்கொண்டு ராமனைப் பின் பற்றினன். அவ்விருவரும் வேறு வேறான அம்பறாத் தூணிகளைத் தோளில் தரித்திருந்ததனால் மூன்று தலைகளுள்ள இரண்டு ஸர்ப்பங்கள்போல விளங்கினார்கள். வில்லைக் கையிலூன்றியவர்களாய்ப் பத்துத் திசைகளையும் பளபளவென்று ஒளிபெறச் செய்பவர்களாய், அழகு பராக்ரமம் முதலிய அளவற்ற வைபவங்கள் விளங்கப் பெற்றவர்களாய் அஸ்வினீ தேவர்கள் ப்ரஹ்மதேவனைப் பின்தொடர்வதுபோல மஹாத்மாவாகிய விஸ்வாமித்ரரைப் பின்பற்றினார்கள்.

இங்ஙனம் வில்லைக்கையிலூன்றித் திவ்யமான ஆபரணங்கள் பூண்டு உடும்புத்தோலைக்கைகளிலும் விரல்களிலும் கவசமாகக் கொண்டு உயர்ந்த கத்திகளைப் பிடித்து அளவற்ற ஒளி பரந்து அழகான மேனியுடன் விளங்குகின்றவர்களாய், உடன் பிறந்தவர்களாய், இளைஞர்களுமாகிய ராம லக்ஷ்மணர்கள் இருவரும் விஸ்வாமித்ர முனிவரைப் பின் சென்று சிந்திக்கவும் முடியாத மகிமை கொண்ட ருத்ரனைப் பின்பற்றின அக்னிகுமாரர்களான[1] ஸ்கந்த விசாகர்களைப்போல மிகுந்த ப்ரகாசத்துடன்

1. 'ததோ உஷவஸீ சதுர்மூர்த்திঃ க்ஷணேநஹ மவாந் ப்ரபுঃ, ஸ்கந்தாவிஸாவெஸீ ஸாகஸீச நைமமேஷஸீச ப்ருஷ்0த்ঃ' என்று

விளங்கினர்கள். பின்பு அம்மூவரும் ஒன்றரை யோஜனை தூரம் நடந்து ஸரயூ நதியின் தென்கரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அப்பொழுது விஸ்வாமித்ரர், ராமனை நோக்கிக் 'குழந்தாய்! ராமா! ஜலத்தை எடுத்து ஆசமனஞ் செய்; காலம் கடக்கலாகாது. மந்த்ரங்களிற் சிறந்த பலை என்றும் அதிபலை என்றும் பெயர்பெற்ற இரண்டு வித்யைகளையும் பெற்றுக்கொள். அதைத் தெரிந்து கொண்டவர்களுக்கு ஸ்ரமமாவது வியாதியாவது நேரிடாது. என்றும் உருவம் மாறாதிருக்கும். தூங்கிக் கொண்டிருந்தாலும் அல்லது அயர்ந்து மறந்திருந்தாலும் ராக்ஷஸர்கள் அவர்களை எதிர்க்கமுடியாது. அவ்விரண்டு வித்யைகளையும் நீ ஜபித்துக் கொண்டிருப்பாயானல் பாஹு பலத்திலும் குணத்திலும் வீர்யத்திலும் உனக்கொருவனும் இப்பூமியில் ஒப்பானவன் இருக்கமாட்டான்.

"பாபமற்றவனே! இன்னும் ஸௌந்தர்யத்திலும், ஸாமர்த்தியத்திலும், நுட்பமான பொருள்களைக் கண்டறிவதிலும், கார்யாகார்யங்களை நிச்சயிப்பதிலும், ப்ரஸ்னம் பண்ணுவதிலும், ப்ரத்யுத்தரஞ் சொல்லுவதிலும், உனக்குச் சரியாயிருப்பவன் உலகத்தில் ஒருவனும் இருக்கமாட்டான். பல சொல்லிப் பயன் என்ன? இவ்விரண்டு வித்யைகளையும் நீ கற்றுக்கொண்டு விட்டால், உனக் கொப்பானவன் இப்பொழுதுமில்லை. இனி உண்டாகப் போவதுமில்லை. ஏனென்றால், பலையென்றும் அதிபலையென்றும் சொல்லப்படுகின்ற இவ்விரண்டு வித்யைகளும் எல்லா அறிவுக்கும் தாயாயிருப்பவை. இவ்

ஸ்ரீமகாபாரதத்தில் குமான் நான்கு ரூபங்களைத் தரித்ததாகச்சொல்லப்படுகிறது. அவர்களில் ஸ்கந்த விசாகர்களிருவரை உபமானமாகக் கொண்டு இங்குச் சொல்லப்பட்டது.

விரண்டையும் ஜபித்துக்கொண்டு வழியில் நடந்தாயா னல் உனக்குப் பசிதாகம் உண்டாகமாட்டா.

"உனக்கு இப்பூமியில் ஒப்பில்லாத புகழ் விளங் கும். ஏனென்றல், இவை ப்ரஹ்மதேவனல் படைக்கப்பட் டவை. சிறந்த மகிமை பொருந்தியவை. நீ பெருமைபெற்ற காகுத்ஸ்த வம்சத்திற் பிறந்தவன். தர்மங்களை நன்கறி ந்து நடக்குந் தன்மையுடையவன். இப்படிப்பட்ட வித் யைகளை யடைவதற்கு நீ தகுந்த பாத்ரமாயிருக்கிருய். உன்னைப் போன்றவன் கிடைப்பதரிது. முன் சொன்ன ஸௌபாக்யம் முதலிய பலவித குணங்களும் உன்னிடத் தில் அளவற்றவைகளாயிருகின்றன. இந்த மந்திரங்கள் தவஞ்செய்து ஸம்பாதிக்கப்பட்டவை யாதலால் இவை உனக்கு வெகுபலங்களைக் கொடுக்கும். நீயும் இனி இவ்வுல கத்தில் இவற்றைப் பலருக்கும் உபதேசித்துப் பரவச் செய்வாய்'' என்று மொழிந்தார்.

பின்பு ராமன் ஆசமனஞ் செய்து பரிசுத்தனுகிப் பரமாத்ம த்யானஞ் செய்து விளங்குகின்ற விஶ்வா மித்ர மஹர்ஷியினிடமிருந்து அவ்வித்யைக ளிரண் டையும் ஸந்தோஷத்தோடு பெற்றுக் கொண்டான். அவன் அதை அடைந்த பிற்பாடு சரத் காலத்தில் ஆயிரங்கிரணங்களும் அடைவின்றி விளங்குகின்ற மகிமை யமைந்த ஸூர்யனைப்போல மஹா பராக்ரமசாலி யாய் ப்ரகாசித்தான். பின்பு அவன் குருவுக்குச் செய்ய வேண்டிய காலைப் பிடிப்பது முதலிய உபசாரங்களனைத் தையும் விஶ்வாமித்ர முனிவருக்கு நன்ருய் நடத்தி லக்ஷ் மணனேடு கூட அவ்விரவு முழுவதும் ஸரயூநதியின்கரை யில் முனிவர் பக்கத்தில் மிக்க ஸுகத்துடன் வஸித்தி ருந்தான். தசரத மஹாராஜன் புதல்வர்களாகியராமலக்ஷ் மணர்கள் தங்கள் உயர்ந்த நிலைமைக்குக் கொஞ்சமும்

தகுதியில்லாத புற்படுக்கையில் ஒன்ருய்ப் படுத்துக் குசிக புத்ரராகிய விஸ்வாமித்ரர் சொல்லிய சொற்களைக் கேட்டுக் களித்து ஸுகமாயிருந்தார்கள். அவ்வளவில் பொழுது விடிந்தது.

இருபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

விஸ்வாமித்ரர் அங்கதேச வ்ருத்தாந்தத்தைச் சொல்லுதல்.

பொழுது விடியும்போது விஸ்வாமித்ர முனிவர் இலைகள் நிரம்பின படுக்கையில் சயனித்துக்கொண்டிருக்கின்ற காகுஸ்தர்களாகிய ராம லக்ஷ்மணர்கள் இருவரை

---

1. முன் ஸர்க்கத்தில் புற்படுக்கையில் என்று சொல்லி, இங்கு இலைகள் நிரம்பின என்று சொல்வது ஒன்றுக்கொன்று விரோதிக்கின்றபடியினுல் புற்களும் தளிர்களும் கலந்து போடப்பட்ட படுக்கை யென்று கொள்ளவேண்டும்.

1. இவ்வாக்யத்துக்கு மூலம்:—

'கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வாஸந்த்யா ப்ரவர்த்ததே,
உத்திஷ்ட நரஶார்தூல கர்தவ்யம் தைவ மாஹ்நிகம்'

இதற்குள்ள அர்த்த விசேஷமாவது:—விஸ்வாமித்ரர் ராமலக்ஷ்மணர்கள் இருவரையும் எழுப்பச் சென்று 'ஸமயாவோயிதஃ ஸ்ரீமாந் ஸுவஸுப்தஃ பரந்தபஃ' என்கிறபடி ராமன் கண் வளரும்போ துண்டான அழகைக் கண்டு அதில் மனம் ஆழ்ந்து வந்தகாரியத்தை மறந்து இவனைப் பெற்ற வயிற்றையுடைய கௌஸல்யாதேவி என்ன நோன்பு நோற்றனளோ வென்று ஆச்சரியப்படுகிருர். (ராம) ஸர்வோத்தமமான ஸௌந்தர்யத்தினுல்யாவரையும்களிக்கச்செய்பவனே! (கௌஸல்யா) உன்னைப்பெற்ற கௌஸல்யாதேவி, (ஸுப்ரஜாஃ) உன்னைப் போன்ற செல்வப் பிள்ளையைப் பெற்ருளாகையால் நல்ல புதல்வனையுடையவள். இனி (கௌஸல்யாஸுப்ரஜாஃ) இவனைப் பெற்ற கௌஸல்யை நல்ல புதல்வனைப் பெற்றனள் என்று விஸ்வாமித்ரர் ஆச்சர்யப்பட்டுத் தனக்குத் தானே சொல்லிக்கொள்வது

யும் நோக்கிக் "கௌஸல்யையின் ஸத்புத்ரனே ! ராமா ! பொழுது விடிந்து ஸந்த்யாகாலமாய் விட்டது. புரு ஷோத்தமனே ! எழுந்திரு ! பகலிற் செய்யவேண்டிய

மாகலாம். அன்றி விஶ்வாமித்ரர் ராமனை ஸம்போதிப்பதுமா கலாம். (கௌஸல்யா ஸுப்ரஜா:) கௌஸல்யாதேவியின் நற்பிள் ளையான ராமனே! என்று ராம சப்தத்துக்கு விசேஷணம் பரசு ராமன் அன்றென்று தெரிவிக்கைக்காக. கௌஸல்யை தசரதன் ஆகிய இவ்விருவர்க்கும் ராமன் தவப் பயனாக அவதரித்தவனாகையால் தசரதனும் நற்பிள்ளையைப் பெற்றவனாயிருக்க (கௌஸல்யா ஸுப்ர ஜா:) என்று கொஸல்யையைமாத்திரம் நற்பிள்ளையைப் பெற்றவளெ ன்று சொல்வதென்ன என்றால், 'மாதாபுத்ரஸ்ய பூயாம்ஸி கர்மா ண்யாஹரதே' என்று புத்ரன் விஷயமான கார்யங்கள் மாதாவுக்கே அதிகமென்று சொல்லுகையாலும், 'மாத்ருதேவோ பவ' என்று ஶ்ருதி முதலில், மாதாவைச் சொல்லுகையாலும், 'பிதுஶ்ஶதகுணம் மா தா' என்று ஶ்ருதி சொல்லுகையாலும், அறுபதினாயிர மாண்டு மலடு நின்று அருமையாகப் பெற்ற பிள்ளையைத் தசரத சக்ரவர்த்தி தன் னுடன் அனுப்புவதற்கு ஸம்சயித்திருக்கக் கௌஸல்யை தான் தாயா யிருந்தும் தனக்குள்ள ப்ரீதியினால் நிஷேதிப்பதல்லாமல் தன் பின் னே அனுப்பினாளென்கிற உபகார ஸ்ம்ருதியாலும் கௌஸல்யை யுடைய நல்ல குமாரனே யென்கிறார். (ஸுப்ரஜா) மாத்ருபித்ரு வாக்ய பரிபாலனம் பண்ணுகையும் அவர்களுக்கு ப்ரிய ஹிதங்களைச் செய்கையும் நல்ல புதல்வனுக்கு லக்ஷணமென்று லோகத்தார் அறி யும்படி தன்னுடைய பிள்ளைத் தனத்தை அநுஷ்டித்துக் காட்டுகை யாலும் 'கௌஸல்யா ஶுஶுபே தேந' என்றும் 'தாயைக் குடல் விளக்கஞ் செய்த தாமோதரன்' என்றும் புகழும்படியான பிள்ளைத் தனத்தாலே பெற்ற தாயாரை விளங்கப் பண்ணுகையாலும் நல்ல குமாரனே என்கிறார். இப்படியே முனிவர் ராமனுடைய மற்றைக் கல்யாண குணங்களில் ஆழ்ந்திருக்கை தவிர்ந்து எழுப்புகிறார். (ராம) இதனால், கண்வளர்ந்தருளுங் காலத்தில் அழகு தோற்றுகின் றது. (பூர்வாஸந்த்யா ப்ரவர்த்ததே) விடியற்கால ஸந்தியானது ஸூர்யனைப் பெறுவதுபோல ராம திவாகரனென்று சொல்லும்படி யான உன்னைக் கௌஸல்யை பெற்றனளென்பது கருத்து. அல்லது

தேவதாராதனம் முதலிய நடவடிக்கைகளை நடத்த வேண்டும்" என்று சொன்னார்.

அம்முனிவர் சொன்ன மிகவும் கம்பீரமான வார்த்தையைக் கேட்ட ராஜகுமாரர்கள் இருவரும் எழுந்திருந்து நீராட்டம் முடித்து அர்க்யங் கொடுத்துவிட்டு மந்த்ரங்களிற் சிறந்த காயத்ரி யென்னும் மந்த்ரத்தை ஜபஞ்செய்தார்கள். இங்ஙனம் மஹாவீரர்களாகிய அவ்விருவரும் தினக்கடமைகளைச் செய்து முடித்துத் தவம் பொருந்திய விஶ்வாமித்ர முனிவரைத் தண்டனிட்டு

தாய்க்குப் போல பூர்வஸந்திக்கு உபசாரஞ் செய்வாயென்க. அன்றி விடியற்கால ஸந்தி நடக்கின்றது. ஸூர்யனுக்கு எப்படி விரோதிகளாகிய அஸுரர்களை நிரவிக்கும் ஸமயமோ, அப்படியே உனக்கும் விரோதிகளைத் தொலைக்கவேண்டிய ஸமயமாக நேரிட்டதென்க. அன்றி அந்தகாரம்போய் ஸூர்யோதய ஸமயம் வந்தாற்போல எனக்கு அஜ்ஞாநாந்தகாரங் கடந்து பகவானாகிய உனது ஸாக்ஷாத்காரம் உண்டாயிற்றென்க. இன்று எனக்கு நற்போதாய் விடிந்ததென்பது கருத்து. (உத்திஷ்ட) எழுந்தருளவேண்டும். நீ கண்வளர்ந்தருளும் பொழுது அவ்வழகைக் கண்டேன். இனி எழுந்தருளும் அழகைக் காணவேண்டும் என்க. (நரஶார்தூல) நீ புருஷஶ்ரேஷ்டனாகையால், 'யத்யதாசரதி ஶ்ரேஷ்டஸ்தத்த தேவேதரோஜநः' என்கிறபடி பெரியோர் அநுஷ்டிப்பதை இதர ஜனங்களும் அநுஷ்டிப்பார்கள். இதரர்களைத் திருத்தும்பொருட்டு நீ ஸந்த்யோபாஸனஞ் செய்தருளவேண்டும் என்க. ஆஶ்ரிதர்களின் விரோதிகளை அழித்தலை ஸ்வபாவமாகவுடைய புருஷஶ்ரேஷ்டனாகிய உனக்குக் கண்வளர்ந்தருளத் தகாது என்க. எழுந்திருக்கைக்கு ப்ரயோஜனமென்னவென்றால், 'கர்த்தவ்யந்தைவ மாஹ்நிகம்' ஈஶ்வரன் விதித்த கடமைகளைச் செய்யவேண்டும். அன்றி தெய்வசப்தம் முன்னிலையைச் சொல்லுகின்றதாய்க் கொண்டு நீ ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் விதித்தருளிய உனதாஜ்ஞாரூபமாகிய நித்யகர்மங்களை நான் அநுஷ்டிக்க வேண்டும். அதை நீ திருவுள்ளம் பற்றுகைக்காக எழுந்தருளுவாய் என்க.

மனக்களிப்புடன் அவர் புறப்படுவதை எதிர்ப்பார்த்திருந்தார்கள். பின்பு முனிவர் அங்கிருந்தும் புறப்பட்டு மிகக் வீரியம் பொருந்திய அவ்விருவரோடும் புண்யமயமான ஸரயூநதி வந்து சேருமிடத்தில் அழகான கங்காநதியைக் கண்டார்.

அந்த இராமன், அநேக மாயிரம் வருஷங்களாகப் பெருந் தவஞ் செய்துகொண்டிருக்கின்ற மிகுந்த மகிமையுள்ள ரிஷிகளின் ஆஶ்ரமம் நெருங்கியிருந்த ஒரு இடத்தைக்கண்டு ஸந்தோஷத்துடன்மஹாத்மாவாகிய விஶ்வாமித்ரரைப் பார்த்துப் 'பகவானே! அழகான இவ்வாஶ்ரமம் யாருடையது?. இதில் வாஸஞ்செய்யும் புருஷன் யார்?. எங்களுக்கு இது மிகவும் குதூஹலத்தை விளைக்கின்றமையால் இதைச் சொல்லவேண்டும்' என்று கேட்டார்கள். முனிவர்[1] சிரித்து "ராமா! இதன் சரித்ரத்தைச்சொல்கிறேன்; கற்றவர்களால் காமன் என்று சொல்லப்படுகின்ற மன்மதன் முன்பு கண்ணுக்குப் புலப்படும்படியான உருவத்துடன் இருந்தான். அவன் மஹாத்மாவாகிய சிவன் பார்வதியை மணம் புரியச்செய்யவேண்டுமென்று தேவதைகள் கேட்டுக்கொண்டதனால் அவர்களிடத்தில் அநுமதி பெற்றுக்கொண்டு இவ்வாஶ்ரமத்தில் மிக்க நியமத்துடன் நின்று தவஞ்செய்து வந்த சிவபெருமானுக்குக் காமத்தை விளைவிக்கும் பொருட்டுப் புஷ்ப பாணங்களை எவினான். உடனே அவரால் நெற்றிக்கண்ணைத் திறந்து நோக்கப் பட்டதனாலும் 'ஹூம்' என்று கோபிக்கப் பட்டதனாலும் அவன் பஸ்மமாய் விட்டான்.

---

1 வினவுதலின் அழகைக்கண்டு சிரித்தானென்று கண்டுகொள்வது. அல்லது மனுஷ்யத் தன்மையை நடித்து ஒன்றும் அறியாதவன்போல வினவினதைக் கண்டு சிரித்தானென்றுணர்க.

ரகு நந்தனு! இங்ஙனம் சிவபெருமானது நெற்றிக் கண்ணினுல் கொளுத்தப்பட்ட மன்மதனுடைய சரீரத்தி லிருந்த அவயவங்கள் யாவும் சிதறிப்போயின. மஹாத் மாவாகிய சிவபிரானுடைய கோபத்தினுல் மன்மதனு டைய சரீரம் பாழாய் விட்டது. ராகவனே! அது முதலாக மன்மதன் அங்கமற்றவனுனதுபற்றி அநங்க னென்று பெயர்பெற்றுன். மன்மதன் தன் அங்கத் தைவிட்ட இடத்துக்கு அன்று முதல் அங்கதேசம் என்று வழங்கிவருகின்றது. புண்யமான இவ்வாஸ் ரமம் அச்சிவ பெருமானுடையது. இங்கிருக்கும் முனி வர்கள் அந்தக் காலம் தொடங்கி வம்ச பரம்பரையாக அச்சிவபெருமானுடைய சிஷ்யர்களாயிருக்கிறுர்கள். ஆகையால், இவர்கள் எப்பொழுதும் தர்மத்தில் மனஞ் சென்று பாவம் இல்லாமல் விளங்குகின்றவர்கள். அழ குள்ளவனே! நாம் இன்றிரவு அங்கதேசத்தில் இப்புண்ய நதிகளினிடையில் வஸித்திருந்து நாளையதினம் கங்கை யைத் தாண்டுவோம். இனி நாம் ஸ்நானம் செய்து ஜபதபங்களை நடத்திப் பரிசுத்தர்களாகிப் புண்யமான ரிஷிகளின் ஆஸ்ரமத்துக்குப் போவோம்" என்று சொன்னுர்.

அப்பொழுது அங்குள்ள ரிஷிகள் யாவரும் தங்கள் தபோ மகிமையினுல் அவர்களையும் அவர்கள் வரும் கார ணத்தையும் அறிந்துகொண்டு சரீரமெங்கும் மயிர்க்குச் செறிய மிகுந்த ஸந்தோஷத்தோடு விஸ்வாமித்ரருக்கு அர்க்ய பாத்யங்களும் ஆசமனீயமும் கொடுத்துக் காய் கிழங்கு முதலியவைகளால் அதிதி ஸத்காரஞ் செய்து ராமலக்ஷமணர்களுக்கும் பின்பு விதிப்படி அதிதி பூஜை யை நடத்தினுர்கள். விஸ்வாமித்ரர் அப்பொழுது அவர் களுடைய க்ஷேமங்களை விசாரித்தார். அம்முனிவர்கள்

தங்கள் ஸத்காரத்தைப் பெற்றுத் தங்கள் ஆஶ்ரமத்துக்கு அதிதிகளாகவந்த ராம லக்ஷ்மண விஶ்வாமித்ரர் என்ற மூவருக்கும் பலவிதமான கதைகளைச்சொல்லி மனங் களிக்கச் செய்துகொண்டிருந்தார்கள். பின்பு ஸூர்யன் அஸ்தமிக்க, விஶ்வாமித்ரர் முதலான மஹர்ஷிகள் ராமலக்ஷ்மணர்களோடு ஸந்த்யாவந்தனஞ் செய்து காயத்ரியை ஜபஞ்செய்தார்கள். விரதாநுஷ்டானங்கள் அமைந்து அங்கு வாஸஞ்செய்கின்ற தாபஸர்கள் தங்களை அழைத்துக் கொண்டுபோக, அம்மூவரும் சிவன் காமனைக் கொளுத்தினபடியால் காமாஶ்ரமமென்று பெயர்கொண்ட அவ்வாஶ்ரமத்திற் சென்று ஸுகமாக வஸித்திருந்தார்கள். அந்த இரவு தர்மாத்மாவாகிய விஶ்வாமித்ர முனிவர் அவ்வாஶ்ரமத்தின் மகிமைமையைக் குறித்த மதுரமான கதைகளைச்சொல்லி ராஜகுமாரர்களைச் சந்தோஷப்படுத்திக் கொண்டிருந்தார். இருபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

விஶ்வாமித்ரர் ஸரயூநதி மலத கரூச தேசங்கள் ஆகிய இவற்றின் வரலாற்றைக் கூறுவது.

பின்பு பொழுது விடிந்து ஸூர்யோதயமாகும் பொழுது பகைவரை யடக்குந்தன்மையுள்ளவர்களாகிய ராம லக்ஷ்மணர்கள் அக்காலத்திற் செய்யவேண்டிய வைதிககருமங்களைச் செய்து முடித்து, விஶ்வாமித்ர முனிவரை முன்னிட்டுக்கொண்டு கங்காநதியின் கரைக்கு வந்து சேர்ந்தார்கள். பின்பு அவ்வாஶ்ரமத்திலுள்ள முனிவர்கள் அழகிய ஒரு ஓடத்தை அவர்களுக்கு அருகில் கொண்டு வந்து நிறுத்தி விஶ்வாமித்ரரை நோக்கி “ முனிவரே! ராஜ புத்ரர்களை யழைத்துக்கொண்டு இவ்

வோடத்தில் ஏறி ஆற்றைக் கடந்து செல்லுங்கள்" என்றார்கள். விஸ்வாமித்ரர் அந்த ரிஷிகளைப் பூஜித்து ராஜபுத்ரர்களோடு கடலை நோக்கிச் செல்கின்ற அந்தக் கங்காநதியைக் கடப்பதற்கு ஓடத்தில் ஏறிப்போகையில் அலைகள் வேகத்துடன் ஒன்றோடொன்று அடித்துக் கொள்வதனால் மேன்மேலும் அதிகப்படுகின்ற ஓரொலியை ராமலக்ஷ்மணர் செவியுற்றார்கள்.

அப்பொழுது ராமன் விஸ்வாமித்ரரைப் பார்த்து "முனிவரே! ஆற்றின்நடுவில் கிளம்புகின்ற இந்தப் பெரிய கோஷம் எதனால் உண்டாகின்றது?" என்று கேட்கத், தர்மாத்மாவாகிய விஸ்வாமித்ரர் குதூஹலத்துடன் அவ்வொலியின் காரணத்தை நிச்சயித்துக் கொண்டு 'புருஷோத்தமனாகிய ராமனே! கைலாஸ பர்வதத்தில் ப்ரஹ்மதேவன் தன் மனத்தினால் ஒரு ஸரஸ்ஸை நிருமித்தான். அதற்கு மானஸம் என்று பெயர். அந்த ஸரஸ்ஸினின்றும் பெருகி வருகின்ற ஸரயூநதி அயோத்யா பட்டணத்தைச்[1] சுற்றிச் செல்கின்றது. பிரமன் தன் மனத்தினால் நிருமிக்கப்பட்டு மானஸம் என்ற பெயரோடு கைலாஸ ஸரஸ்ஸினின்றும் பெருகி வருகின்றபடியினால் புண்யமான அந்த நதிக்கு ஸரயூவென்று பெயர் விளங்குகின்றது. அந்த ஸரயூநதி

1. இந்த ஸரயூநதி ப்ரஹ்மாவினாற் படைக்கப்பட்ட மானஸ ஸரஸ்ஸினின்றும் பெருகி அயோத்யாநகரத்துக்கு மேற்குத் திசையில் ஆரம்பித்து அப்பட்டணத்திற்கு வடக்குத் திசையின் வழியாக அந்நகரத்துக்குக் கிழக்கே வந்து அங்கதேசத்தில் பெருகிப்போகின்ற கங்காநதியோடு கலக்கின்றது. அவ்விரண்டு நதிகளும் கலக்குமிடத்தில் சிவபெருமானுடைய ஆஸ்ரமம் இருக்கின்றது. ஆகையால் ஸரயூநதியுடன் கலந்த கங்காநதியைத் தாண்டும்பொழுது ஸரயூநதி மேட்டிலிருந்து பள்ளத்தில் விழுந்து வருகையினால் அந்த ப்ரவாஹத்தில் த்வனி உண்டாகின்றதென்றுணர்க.

மிக்க வேகத்துடன் இந்தக் கங்கா ப்ரவாஹத்தில் வந்து விழுவதுபற்றி இந்தப் பெரிய கோஷம் உண்டாகின்றது. ஆகையால் இந்நதிகளுக்கு நமஸ்காரஞ்செய்'' என்று சொன்னார்.

தர்மங்களை அன்புடன் அநுஷ்டிக்குந் தன்மையுள்ளவர்களும் பராக்ரம சாலிகளுமாகிய அவ்விருவரும் அப்படியே அந்நதிகளுக்கு நமஸ்காரஞ் செய்து கங்காநதியின் தென்கரையை அடைந்து வேகமாக நடந்தார்கள். இக்ஷ்வாகு வம்சத்துக்கு அலங்காரமான தசரத மஹாராஜாவின் புத்ரனாகிய ராமன் அங்கு ஜன ஸஞ்சாரமில்லாமல் பயங்கரமாயிருந்த ஒரு கானகத்தைக் கண்டு "முனிவர்களுக்கரசரே! இந்தக் கானகம் வருந்தியும் உள்ளே புகமுடியாதபடி யிருக்கின்றது. இதில் சுவர்க்கோழியென்று சொல்லப்படுகின்ற சிள்வண்டுகள் கூட்டங் கூட்டமாய் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. பின்னும் இதில் பயங்கரமான கொடிய மிருகங்கள் எங்கும் திரிந்து கொண்டிருக்கின்றன. கள்ளிக் காக்கைகளும் பலவகைப் பறவைகளும் எங்கும் நிறைந்து பயங்கரமாகக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றன. சிங்கங்களும், புலிகளும், பன்றிகளும், யானைகளும் இங்கு நிறைந்திருக்கின்றன. வெள்வேல மரங்களும், ஆச்சா மரங்களும், மருத மரங்களும், வில்வ மரங்களும், திந்துக மரங்களும், பாதிரி மரங்களும், இலந்தை மரங்களும், இதில் எங்கும் சூழ்ந்து வளர்ந்திருக்கின்றன. புதிதாய்க் காண்கின்றவர்களுக்குப் பயத்தை விளைவிக்கின்றதாகிய இந்தக் கானகத்தின் பெயர் யாது?'' என்று வினவினான்.

அப்பொழுது மகிமையமைந்த விஶ்வாமித்ரர் ராமனை நோக்கிக் "காகுஸ்தனே! பயங்கரமான இந்தக் காட்டின் சரித்ரத்தைக் கேள்! முன்பு இது தேவர்களால்

நிருமிக்கப்பட்டுத் தேவலோகத்தோடொத்து மலத மென்றும் கரூசமென்றும் பெயர்கொண்ட இரண்டு தேசங்களாயிருந்தது. முன்பு இந்திரன் விருத்ராஸுரனை வதம்பண்ணியதனால் ஸஹஸ்ராக்ஷனான அவ்விந்த்ரனை ப்ரஹ்மஹத்யை சூழ்ந்துகொண்டது. அதனால் அவனுக்கு அசுசியும் பசியும் அதிகமாய் உண்டாயின. அப்பொழுது தேவதைகளும் தபோதனர்களாகிய ரிஷிகளும் அவ்விந்த்ரனுக்குக் கங்கை முதலிய புண்யதீர்த்தங்களால் அபிஷேகஞ் செய்வித்தும் மந்த்ர பூரிதமான கலச தீர்த்தங்களால் ஸ்நானம் பண்ணுவித்தும் அவ்வசுசியையும் பசியையும் போக்குவித்தார்கள். இந்த்ரன் சரீரத்தினின்றுங் கழிந்த மலமென்றும் கரூசமென்றும் சொல்லப்பட்ட பாவத்தையும் பசியையும் அவர்கள் இத்தேசத்தில் ஒழியும்படி செய்து பின்பு ஸந்தோஷமடைந்தார்கள். இந்திரனும் தன்னைப் பீடித்த மல கரூசங்களை விட்டுத் தான் பரிசுத்தனானதற்கு மிகவும் ஆநந்தித்து 'என் சரீர மலங்களையும் கரூசங்களையும் வாங்கிக்கொண்டைமயால் இத்தேசங்கள் தனதான்யம் நிறைந்து மலதமென்றும், கரூசமென்றும், உலகத்தில் கியாதியடையட்டும்' என்று சிறந்த வரம் கொடுத்தான். அதற்குத் தேவர்கள் 'நல்லது நல்லது' என்று சந்தோஷித்து இந்திரனைப் புகழ்ந்துகொண்டார்கள். இங்ஙனம் தேவேந்திரனது வரமகிமையினால் இம்மலத கரூச தேசங்கள் வெகு காலமாகத் தனதான்யங்கள் நிறைந்து களிப்புற்றிருந்தன. நெடுங்காலத்துக்குப் பிற்பாடு தாடகை என்று பெயர்கொண்ட ஒரு யக்ஷ கன்னிகை உண்டானாள். அவள் பிறந்ததுமுதல் ஆயிரம் யானைப் பலமுடையளாகி நினைத்தபடி வடிவங்கொள்ள வல்லவளாயிருந்தாள். அவளால் உனக்கு யாதொருபயமும் உண்டாகாமலிருக்க

வேண்டும். அவளை மதிமானாகிய ஸுந்தனென்பவன் மணம்புரிந்து கொண்டான். அவளுக்குப் பராக்ரமத்தில் இந்திரனைப் போன்ற மாரீசனென்னும் ராக்ஷஸன் ஒருவன் பிறந்தான். அவன் திரண்டுருண்டு நீண்ட புஜதண்டமும் யாவரும் எதிரிட வொண்ணாத சிறந்தவீர்யமும் அமைந்து பரந்த முகத்தோடும் பருத்த சரீரத்தோடுங் கூடிப் பயங்கரமான உருவத்துடன் எப்பொழுதும் ப்ரஜைகளுக்குப் பயத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறான்.

ரகுகுல திலகனே! கெட்ட நடத்தையுள்ள அந்தத் தாடகை இம்மலத கரூச தேசங்களை எப்பொழுதும் பாழாக்கிக்கொண்டு வருகிறாள். அவள் ஒன்றரை யோஜனை தூரத்தில் வழியைத் தடுத்துக்கொண்டு வாஸஞ் செய்கின்றனள். அத்தாடகை வஸிக்கும் வனத்தின் வழியாகவே நாம் போகவேண்டும். நீ உன் புஜபலத்தைக் கொண்டு கொடுந்தொழிலுடையவளான தாடகையை என்சொற்படி சம்ஹாரம் பண்ணவேண்டும். அப்படிச் செய்ததால்தான் இந்தத் தேசங்கள் யாதொரு உபத்திரவமும் இல்லாமல் ஸுகமாயிருக்கும். இத்தேசம் உயர்ந்த புண்ய க்ஷேத்ராமா யிருந்தும் யாவராலும் வெல்லமுடியாத வல்லமைகொண்டு விளங்குகின்ற பயங்கரியான அந்தத் தாடகை யென்னும் யக்ஷஸ்திரீயினால் பீடிக்கப்பட்டிருப்பதனால் ஒருவரும் நாடமுடியாம லிருக்கின்றது. இதுதான் இவ்வனத்தின் வரலாறு. எனக்கு தெரிந்தவற்றை உனக்கு விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறேன்" என்று மொழிந்தார். இருபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

தாடகையின் விருத்தாந்தம்.

அளவற்ற மகிமையையுடைய விஸ்வாமித்ரர் அழகாய் உரைத்தமொழியைக் கேட்ட புருஷோத்தமனுகிய ராமன் 'பூஜ்யரே! நான் யக்ஷர்கள் பலத்தில் மிகவும் குறைந்தவர்களென்று கேட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட வகுப்பில் உதித்த ஒரு ஸ்திரீ ஆயிரம் யானைப் பலம் உடைத்தா யிருப்பது எப்படி? அதை எனக்கு விளங்கச் சொல்லவேண்டும்" என்று கேட்டான். அதற்கு விஸ்வாமித்திரர் ராமா! தாடகை சிறந்த பலத்தை உடைத்தாயிருப் பதற்குக் காரணம் சொல்கிறேன் கேள். அவள் இயற்கையில் பலமில்லாத பெண்பிள்ளையாய்ப் பிறந்திருந்தாலும் வரத்தினுல் உயர்ந்த பலத்தைப் பெற்றிருக்கிறுள்.

முன்பு மிகுந்த பராக்ரமங்கொண்ட ஸுகேதுவென்னும் பெயர்பெற்ற யக்ஷன் ஒருவன் இருந்தான். அவன் நல்லொழுக்கம் உள்ளவனுயிருந்தும் ஸந்தானமில்லாததனுல் புதல்வனையடையப் பெருந்தவஞ் செய்தான். அப்பொழுது பிதாமஹன் அந்த யக்ஷன் தவத்தில் ப்ரீதியடைந்து ஆயிரம் யானைப்பலம் கொண்டவளான ஒரு பெண் உனக்குண்டாவாள்' என்று வரம் கொடுத்து மறைந்தார்: அவள் தான் இந்தத் தாடகை. இங்ஙனம் அவள் பிறந்து, நாளொரு மேனியும், பொழுதொரு வர்ணமுமாக வளர்ந்து பருவம் நிரம்பி யிருக்கையில், அவள் தந்தையாகிய ஸுகேது ஜர்ஜரனென்பவனுடைய புத்திரனுன ஸுந்தன் என்பவனுக்கு அவளைக் கொடுத்துக் கல்யாணஞ் செய்வித்தான். சில வருஷம் சென்ற பிறகு அந்த யக்ஷன் மனைவியாகிய தாடகை யாவராலும் எதிரிட வொண்ணுத மாரீசன் என்னும் பெயர்பெற்ற

புதல்வனைப் பெற்றாள். அம்மாரீசன் நாளடைவில் சாபத்தினால் ராக்ஷஸனாய் விட்டான். அதன் விவரமாவது:—

ஸுந்தன் அகஸ்திய முனிவரால் இறந்துபோன பிற்பாடு தாடகை தன் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு பரபரப்புடன் கர்ஜித்துக்கொண்டு அம்முனிவரைப் பக்ஷிக்கும்பொருட்டு ஓடிவந்தாள். அகஸ்திய முனிவர் அதைக் கண்டு சினந்து மாரீசனை 'நீ ராக்ஷஸனாகக் கடவாய்' என்று சபித்தார். அவர் அதனுடன் துன்பம் தீராமல் தாடகையையும் 'நீ இவ்வுருவம் மாறி விகாரமான உருவங்கொண்டு பார்க்க வழங்காதபடி மனிதரைப் பிடுங்கித் தின்கின்ற ராக்ஷஸியாகக் கடவாய்' என்று சபித்துவிட்டார். அங்ஙனம் அவரால் சாபமிடப்பெற்ற தாடகை கோபாவேசங் கொண்டு, அப்பொழுது அகஸ்தியமுனிவர் ஸஞ்சரித்துக் கொண்டிருந்த இவ்வழகான தேசத்தைப் பீடித்துப் பாழடையச் செய்தனள். ரகுகுலாலங்காரனே! எல்லாவுலகங்களும் வருந்தும்படி யக்ஷஸ்திரீயாகிய தாடகை மிகவும் கோரமான வடிவங்கொண்டு பொல்லாத பராக்ரமத்துடன் கொடிய நடவடிக்கை மேவிட்டு இங்குத் திரிந்து வருகின்றபடியினால் பசுக்களுக்கும் ப்ராஹ்மணர்களுக்கும் நன்மையுண்டாகும் பொருட்டு நீ அவளை வதஞ்செய்யவேண்டும். சாபம் பெற்ற அத்தாடகையை உன்னை யொழிய மூவுலகங்களிலும் வேறொருவனால் வெல்லமுடியாது. ரகுகுலத்திற் பிறந்த நீ யொருவன்தான் அவளை வெல்லவல்லவன். புருஷஸ்ரேஷ்டனே! ஸ்த்ரீவதஞ் செய்யவேண்டுமே யென்று அருவருப்புக் கொள்ளாதே. நீ ராஜகுமாரன். ராஜபுத்ரனாயிருப்பவன் நான்குஜாதிகளுக்கும் நன்மையை விளைவிக்கவல்ல காரியங்களைச்செய்யவேண்டும். ப்ரஜைகளின் நன்மைக்குரிய காரியமானது கொடியதாயிருந்தாலும் அல்

லது நல்லதாயிருந்தாலும், பாவத்தை விளைப்பதாயிருந்தாலும், அபவாதத்தைக் கொடுப்பதாயிருந்தாலும் உலகத்தைக் காக்க வல்லவனாகிய ஸத்புருஷன் அதைக் கட்டாயமாய்ச் செய்யவேண்டும்.

காகுஸ்தனே! அரசர்களுக்கு இது எப்பொழுதும் தவறாமற் செய்யவேண்டிய தர்மம். தாடகை அதர்மம் செய்கின்றவளாகையால் அவளை நீ முடிக்கவேண்டும். அவளிடத்தில் தர்ம மென்பது சிறிதுங் கிடையாது. ஆகையால், அவளை நீ கொல்லத்தகும். ஸ்த்ரீகளாயிருந்தாலும் கொடிய நடவடிக்கையுள்ளவர்களை வதஞ் செய்வது பெரியோர்கள் வழக்கமாயிருக்கின்றது. முன்பு இந்தப் பூமியைப் பாழடையச் செய்வதற்கு எண்ணங்கொண்ட விரோசனன் பெண்ணாகிய மந்தரை யென்பவளை இந்திரன் கொன்றிருக்கிறான். இன்னமும் சுக்ரனுக்குத் தாயாகிய பிருகு மஹர்ஷியின் மனைவி உலகத்தில் இந்திரனையில்லாமல் தொலைக்கவேண்டும் என்று நினைவுகொண்டு யாதொரு தடையுமின்றிக் கடுமையான விரதம் செய்யத் தொடங்கினாள். அவளை ஸ்ரீமகாவிஷ்ணு அறிந்து வதித்திருக்கிறார். ராஜகுமாரனே! இவர்களையன்றி இன்னும் பல மஹாத்மாக்களாகிய ஸத்புருஷர்களும் அதர்மத்தில் மனஞ்சென்ற ஸ்த்ரீகளை முடித்திருக்கிறார்கள்" என்று சொன்னார். இருபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

தாடகையின் வதம்.

இப்படி விஸ்வாமித்ரர் பெரும்பொருளடங்கிய தாய்த் தைரியத்துடன் உரைத்த மொழியைக் கேட்டுத் தசரதமஹாராஜன் குமாரனாகிய ராகவன் பெரியோர்கள்

சொற்படி நடக்கவேண்டுமென்கிற விரதாநுஷ்டானத்தைக் கொண்டும் 'விஸ்வாமித்ர முனிவர் சொற்படி நடக்கக் கடவாயென்று தன் தந்தை சொல்லியனுப்பின கட்டளையைக்கொண்டும் மகிமை பொருந்திய விஸ்வாமித்ரர் மொழிவது அதர்மமமாயிருக்கமாட்டாது என்ற நம்பிக்கையைக்கொண்டும் நிச்சயித்தவனாகி அம்மஹர்ஷியை நோக்கிக் கையைக் கூப்பிக்கொண்டு 'முனிகுலதிலகரே! அயோத்தியில் குருக்களின் நடுவில் மஹாத்மாவும் எனக்குத் தந்தையுமாகிய தசரதமஹாராஜர் "குழந்தாய்! நீ விஸ்வாமித்ரர் சொற்படி நடக்கவேண்டும்" என்று எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். நான் அம்மொழியைக் கடக்க முடியாது. அதனுடன் வேதங்களை ஓதி அறிவிற் சிறந்து மிகவும் தபஸ்வியான தாங்களும் நீ தாடகையை வதஞ் செய்' என்று கட்டளையிடுகிறீர்கள். நான் அவ்விரண்டையும் முன்னிட்டுக்கொண்டு உலகத்துக்கு நன்மையை விளைப்பதாகிய இந்தத் தாடகாவதத்தைச் செய்கிறேன். இதில் சந்தேகமில்லை. இன்னும் பசுக்களுக்கும் ப்ராஹ்மணர்களுக்கும் நன்மையுண்டாகும் பொருட்டும், தேசத்தின் ஸுகத்தின் பொருட்டும் அளவிடமுடியாத மகிமையுடைய தங்கள் சொற்படிச் செய்து முடிப்பதற்குச் சித்தமாயிருக்கிறேன்' என்று சொன்னான்.

சத்ருக்களைத் தபிக்கச் செய்ய வல்லவனாகிய ஸ்ரீராகவன் இவ்வாறு மொழிந்து தன் வில்லின் நடுவை உறுதியாய்ப் பிடித்துத் திசைகள் செவிடுபடும்படி நாணை ஏற்றி வலிவுடன் ஷ்டங்காரஞ் செய்தான். அவ்வொலியைக் கேட்டுத் தாடகையின் வனத்தில் வஸிப்பவர்கள் பயந்து நடுங்கினார்கள். இயற்கையிலேயே கடுஞ் சினங் கொண்ட தாடகை அதைக்கேட்டு அளவற்ற கோபங் கொண்டு ஒன்றுஞ் செய்யத்தோற்றாமல் தட்டித்

தடுமாறி அந்த த்வனியைப்பற்றி ஊக்கத்துடன் ஆலோசித்துக்கொண்டு கோபம் மேலிட்டு அவ்வொலி உணடான திசையைநோக்கி வேகத்துடன்வந்தாள். விகாரங் கொண்ட உருவத்தோடு அளவுக்கு மிஞ்சிப் பருத்து வளர்ந்திருக்கின்ற அந்தத் தாடகை யென்னும் ராக்ஷஸி கடுங்கோபத்துடன் எதிர்த்து ஓடி வருவதைக்கண்டு, ராமன் தம்பியை நோக்கி, 'லக்ஷ்மணு! பார்ப்பவர்களுக்குப் பயத்தை விளைவிக்கின்ற இவள்வடிவத்தைப் பார்! இவளை ஸாதாரணமாகப் 'பயப்படுகின்றவர், காண்பர்களானல் அவர்கள் ஹ்ருதயம் அப்பொழுதே பிளந்து போய்விடும். இவள் யாவராலும் வெல்ல முடியாதவள். மாயாபல முள்ளவள். நான் இவளை இப்பொழுது காதையும், மூக்கையும் அறுத்துத் துறத்திவிடுகிறேன். அதனுல், குருக்களின் கட்டளையும் நடத்தப் பட்டதாகின்றது. ஸ்த்ரீயானதுபற்றி இவளைக் கொல்ல என் மனம் துணியவில்லை. இவள் கை கால்களை முரித்து வலிவை அடக்கி வனத்தில் ஸஞ்சரிப்பதை ஒழித்து விடலாமென்று எனக்குத் தோற்றுகின்றது'' என்ருன்.

இப்படி ராமன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே தாடகை மிகுந்த கோபங்கொண்டு கைகள் இரண்டையும் உயரவெடுத்துக் கர்ஜ்ஜனை செய்து லக்ஷ்மணனை விட்டு ராமனை எதிர்த்தோடி வந்தாள். அதைக் கண்ட ப்ரஹ்மர்ஷியாகிய விஸ்வாமித்ரர் தான் ராமனுக்குள்ள அமானுஷ சக்தியை அறிந்தவராயிருந்தாலும் அவ்வரக்கியின் கொடுந்தன்மையைக் கண்டு மனக் கலக்கமுற்று, அவளை 'ஹூம் என்று அதட்டிவிட்டு 'ராமலக்ஷ்மணர்களுக்கு க்ஷேமமும் ஜயமும் உண்டாகவேண்டும்' என்று அநுக்கிரம் செய்தார். உடனே தாடகை புழுதியை வாரி அதிகோரமாக இறைத்தும் திசைகளொன்

றும் தெரியாமல் அனைவரும் மனம் மயங்கும்படி பேரி ருளை விளைத்தும், ஒரு முகூர்த்தகாலம் அந்த ராம லக்ஷ் மணர்கள் இருவரையும் மனமயங்கச்செய்தும், மாயை யைக் கொண்டு கண்ணுக்குப் புலப்படாதபடி மறைந்து நின்றும், ரகுகுல குமாரர்களாகிய அவ்விருவர்மீதும் கற் களை அளவில்லாதபடி மழை பெய்வதுபோலப் பொழிந் தும் ஹிம்ஸையை விளைவித்தாள்.

பின்பு ராமன் சினங்கொண்டு தன் கூரிய பாணங்க ளால் தாடகையின் கற்களைத் தடுத்துப் பொடியாக்கிக் காற்றில் தூற்றி ஆகாயத்தில் ஓடிக்கொண்டிருக்கின்ற அவ்வரக்கியின் கைகளையும் அறுத்துத் தள்ளிவிட்டான். தாடகை கைகள் அறுப்புண்டு களைத்தும் ஓயாமல் கர்ஜ் ஜித்துப் பயத்தை விளைவித்துக்கொண் டிருக்கையில் ஸுமித்ராதேவியின் புத்திரனாகிய லக்ஷ்மணன் அளவற்ற கோபத்துடன் அவள் காதுகளையும் மூக்கு நுனியையும் அறுத்துத் தள்ளினான். யக்ஷஸ்திரீயான தாடகை நினைத் தபடி வடிவங்கொள்ள வல்லவளா யிருந்ததுபற்றிப் பல விதமான வடிவங்களைக் கொண்டு மாயையினால் அந்தர்த் தான மடைந்து மிகவும் பயங்கரமாயிருக்கும்படியான கல்மழையை மறுபடியும் பொழிந்து ஆகாயத்தில் திரிந்து கொண்டிருந்தாள். தாடகையினால் மழை பொழிவது போலப் பொழியப்பட்ட கற்களால் நான்கு புறத்திலும் சூழப்பட்டிருக்கின்ற ராம லக்ஷ்மணர்களை விஸ்வாமித்ர முனிவர் கண்டு ராமன் தாடகையை முடிக்க நேரிட்டதே யென்று களித்து, அவனை நோக்கி 'ராமா! இவ்வரக்கி யின்மீது நீ இது வரையில் காட்டின தயைபோதும்; நீ இவளை ஸ்த்ரீயென்று நினைக்காதே. இவள் பாபிஷ்டை யும் கொடுந் தொழி லுடையவளுமா யிருக்கிறாள். யாகங் களை யெல்லாம் அழித்து விடுகிறாள். இவளுக்குக் கொஞ்

சமாவது தயை காட்டலாகாது. நீ இப்பொழுது சற்று ஆலஸ்யம் செய்வாயேயானல் மாயாபலத்தினல் வளர்ந்து கொழுத்து விடுவாள். ராமா! ஸந்தியாகாலம் வரப் போகின்றது. இவளை இப்பொழுதே சம்ஹாரம் செய். ராக்ஷஸர்கள் ஸந்தி வேளையில் யாவராலும் எதிர்க்க வொண்ணுத வல்லமையைப் பெறுவார்கள். எப்படிப் பட்ட சூரர்களுக்கும் அவர்களை அப்பொழுது வெல்ல முடியாது' என்று சொன்னுர்.

உடனே ராமன் கண்ணுக்குத் தோன்ருதபடி நின்று கொண்டு ஓயாமல் நாற்புறத்திலும் கற்களைப் பொழிகின்ற கொடியவளான தாடகையின் சப்தத்தினுல் அவள் இருக்கும் திசையைத் தெரிந்தடிக்கும்படியான தன் வல்லமையைக் காட்டிக்கொண்டு கூர்மையுள்ள பாணங்களை ப்ரயோகித்து அவளை எங்கும் போகவொட்டாமல் தடுத்து விட்டான். தாடகை மாயாபலத்தினுல் கண்ணுக்குப் புலப்படாதபடி மறைந்து நின்றும் கூட ராம பாணங்களால் தடுக்கப்பட்டுச் செய்வ தறியாமல் கடுமையாய்க் கர்ஜ்ஜித்துக்கொண்டு வெளிப்பட்டு ராமனையும் லக்ஷ்மணனையும் எதிர்த்தோடி வந்தாள். இங்ஙனம் மிக்க பராக்ரமத்துடன் இடியிடிப்பதுபோல இரைந்துகொண்டு வருகின்ற அந்தத் தாடகையின் மார்பில் ராமன் ஒரு பாணத்தை நாட்ட, அவ்வளவில் அந்தக் கொடிய வரக்கி கீழே விழுந்து மாண்டாள். அப்பொழுது தேவேந்திரனும் தேவர்களும் 'நல்லது நல்லது' என்று ராமனைப் புகழ்ந்து கொண்டாடினுர்கள். பகைவருடைய நகரங்களைப் பாழடையச் செய்ய வல்லவனுகிய தேவேந்திரன் தாடகையின் வதத்தைத் தன் ஆயிரங்கண்களும் குளிரும்படி கண்டு மிகவும் களிப்படைந்தான். மற்றும் அவன் விஸ்வாமித்ரரைப் பார்த்து 'முனிவரே தங்களுக்கு சுபமுண்டா



158. தாடகை அடியுண்டு கீழே விழுதல்.

கட்டும். நாங்கள் அனைவரும் தங்கள் காரியத்தைக்கண்டு மிகவும் சந்தோஷமடைந்தோம். ராகவனிடத்தில் தாங்கள் கொண்டிருக்கின்ற விஸ்வாஸத்தை இப்பொழுது வெளியிடவேண்டும். இது தான் அதற்குத் தகுந்த சமயம். ப்ரஜாபதியாகிய ப்ருசாஸ்வரிடம் பிறந்து பராக்ரமம் பொருந்தித் தங்களிடத்தில் விளங்கி வருகின்ற திவ்யாஸ்த்ரங்களையும் அவற்றின் ஸவித்தாரங்களையும் தாங்கள் இப்பொழுது ராமனுக்குக் கற்பிக்கவேண்டும். ப்ராஹ்மணோத்தமரே! இந்த ராகவன் நியமத்துடன் தங்களைப் பின்றொடர்ந்து தங்களுக்குச் சுஸ்ருஷைசெய்வதில் ப்ரியமுள்ள வனாயிருக்கிறான். அஸ்த்ரங்களை உபதேசிப்பதற்குத் தக்க பாத்ரமாயிருக்கிறான். மேலும் இவன் தேவர்களின் பொருட்டு இனி ஒரு பெரிய காரியத்தைச் செய்யவேண்டியிருக்கிறது' என்று சொல்லிப் புகழ்ந்து, ஸந்தோஷத்துடன் வந்தவழியே திரும்பிச் சென்றார்கள். பின்பு, ஸூர்யன் அஸ்தமித்தான். ஸந்தியாகாலம் ப்ராப்தமாயிற்று. அப்பொழுது முனிவர் ராமன் தாடகையைக் கொன்றதனால் ஸந்தோஷமடைந்து ப்ரீதிமேவிட்டு அவனை உச்சி முகந்து பதினாயிரங் கண்கள் கொண்டு பார்க்கும்படி அழகாய் விளங்குகின்றவனே! நாம் இன்றிரவு இவ்விடத்திலேயே வஸித்திருப்போம். நாளைத் தினம் அதிகாலையில் ஆஸ்ரமத்துக்குப் போவோம்' என்று மொழிந்தார்.

தசரத குமாரனாகிய ராமன் அம்மொழியைக் கேட்டுக் களிப்புற்று அன்றிரவு முழுவதும் லக்ஷ்மணனோடு கூட அந்தத் தாடகையின் வனத்திலே ஸுகமாய் இளைப்பாறினான். அன்று முதல் அவ்வனம் தன் உபத்ரவங்கள் ஒழியப்பெற்றுச் சைத்ராதம் என்று பெயர்பெற்ற குபேரனது உத்யானவனம்போல மிகவும் அழகாய் விளங்கிற்று.

கொடிய யக்ஷஸ்திரீயாகிய தாடகையை வதஞ்செய்து அவ்வனத்தை உபத்ரவமில்லாமல் விளங்கச்செய்த ராமன் தேவர்களாலும், ஸித்தர்களாலும் புகழப்பட்டவனாகி, விஸ்வாமித்ர முனிவரோடுகூட அன்றிரவை ஸுகமாய்க் கழித்தான். பொழுது விடிந்தவுடன் விஸ்வாமித்ர முனிவர் ராமனை எழுப்பினார். இருபத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.

விஸ்வாமித்ர் ராமனுக்கு அஸ்திரங்களைக் கொடுப்பது.

பெரும்புகழ் பெற்ற விஸ்வாமித்ரமுனிவர் நன்றாய் விடிந்து உதயமான பின்பு புன்சிரிப்போடு ராகவனை நோக்கி "ராஜகுமாரனே! உன் பராக்ரமத்தைக் கண்டு நான் மிகவும் சந்தோஷமடைந்தேன். உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். எனக்குண்டான ப்ரீதியின் மேலீட்டினால் நான் கற்றிருக்கின்ற அஸ்த்ரங்களை உபதேசிக்க விரும்புகிறேன். யுத்தத்தில் தேவர்களாவது அஸுரர்களாவது கந்தர்வர்களாவது உரகர்களாவது அன்றி இன்னும் சூரர்களான எந்தக் குலத்தில் பிறந்தவர்களாவது எதிர்த்து வந்தாலும் அவர்களை நிமிஷத்தில் வென்று வசப்படுத்தி உனக்கு வெற்றியைக் கொடுக்கவல்ல திவ்யாஸ்த்ரங்களை நான் உனக்குக் கொடுக்கிறேன். உனக்கு மங்களமுண்டாகட்டும். வீரனே! அதிகமான மகிமை பொருந்திய தண்டசக்ரத்தைக் கொடுக்கிறேன். அப்படியே, தர்ம சக்ரம், கால சக்ரம், மிகவும் உக்ரமாகிய விஷ்ணு சக்ரம் என்னும் அஸ்த்ரங்களையும் உனக்குத் தருகிறேன். புருஷர்களிற் சிறந்தவனே! உனது பருத்து அழகான புஜங்களுக்குத் தக்க ஐந்த்ராஸ்த்ரம், வஜ்ராஸ்த்ரம், சூலங்களிற் சிறந்த சைவ சூலம், ப்ரஹ்ம சிர



161. ராமனுக்கு விச்வாமித்ரர் அஸ்த்ரங்களைக் கொடுத்தல்.

ஸென்னும் அஸ்த்ரம், ஐஷீகாஸ்த்ரம், சிகரின்றி விளங்குகின்ற ப்ரம்ஹாஸ்த்ரம் ஆகிய இவை அனைத்தையும் உனக்குக் கொடுக்கிறேன். ராஜபுத்ரனே! மோதகியென்றும், சிகரி யென்றும் ஒளி பொருந்திய இரண்டு கதைகள் என்னிடத்தில் இருக்கின்றன. அவ்விரண்டையும் கொடுக்கிறேன். இன்னமும் தர்மபாசம், காலபாசம், வருணபாசம் என்ற பாசாயுதங்கள் மூன்றையும் சிகரற்ற வருணாஸ்த்ரத்தையும் தருகிறேன். ரகுகுலத்தைக் களிக்கச் செய்கின்ற மஹாநுபாவனே! சுஷ்காசனி, ஆர்த்ராசனி, பைனாகாஸ்த்ரம், நாராயணாஸ்த்ரம், அக்னி தேவனுக்கு மிகவும் ப்ரியமான சிகரமென்று பெயர்பெற்ற ஆக்னேயாஸ்த்ரம், ப்ரதனமென்று ப்ரஸித்தமான வாயவ்யாஸ்த்ரம், ஹயசிரஸ்ஸென்னும் அஸ்த்ரம், க்ரௌஞ்சாஸ்த்ரம், விஷ்ணுசக்தி, ருத்ரசக்தி யென்கிற இரண்டு சக்தியாயுதங்கள், அஸுரர்கள் தரிக்கத்தக்க பயங்கரமான கங்காலம், காபாலம், கங்கணம் இன்னும் முஸலங்கள் ஆகிய இவற்றை உனக்குக் கொடுக்கிறேன். ராஜகுமாரனே! திரண்டுருண்டு நீண்ட உன் பாஹுதண்டங்களுக்கு ஏற்றதும் வித்யாதரர்களைத் தேவதைகளாகப் பெற்றதும் அஸ்த்ரங்களிற் சிறந்ததுமாகிய நந்தனம் கந்தர்வர்களுக்கு ப்ரியமாகி மானவமென்றும் ப்ரஸ்வாபனமென்றும் ப்ரசமனமென்றும் பெயர்பெற்ற கந்தர்வாஸ்த்ரங்கள், ஸௌராஸ்த்ரம் ஆகிய இவைகள் எல்லாவற்றையும் உனக்குத் தருகிறேன். பெரும் புகழ் பெற்ற புருஷோத்தமனே! தர்ப்பணம் சோஷணம், ஸந்தாபனம், விலாபனம் என்னும் அஸ்த்ரங்களையும், மன்மதனுக்கு ப்ரியமாகிப் பகைவர்களால் எதிரிடவொண்ணாத மதனாஸ்த்ரத்தையும், பிசாசங்களுக்கு ப்ரியமாகி அவைகளையே தேவதைகளாகவுள்ள மோஹநாஸ்த்ரத்தையும் உனக்

குக் கொடுக்கிறேன். தாமஸம், ஸௌமனம், ஸம்வர்த்தம், ஒரு விதத்திலும் பகைவரால் பரிஹரிக்கமுடியாத மௌஸலம், ஸத்யம், மாயாதரம், பகைவர்கள் பராக்ரமத்தைத் தொலைக்கவல்லதாகிப் பயங்கரமான தேஜப்ரபம், சிசிரம் என்கிற ஸௌம்யாஸ்த்ரம், சீதேஷுவென்ற பயங்கரமான பகாஸ்த்ரம், காமரூபம் கொண்டு மஹா பலம்பெற்ற மானவம் முதலான கம்பீரங்களாகிய அஸ்த்ரங்களை உனக்குக் கொடுக்கிறேன். ராஜகுமாரனாகிய உனக்கு இவை தகுந்தவைகள். நீ இவற்றையெல்லாம் சந்தோஷமாய்ப் பெற்றுக்கொள்' என்று சொல்லி அவர் பரிசுத்தராகிக் கிழக்குமுகமாக நின்று ப்ரீதியோடு அந்த அஸ்த்ரங்களையும் அவற்றுக்குரிய மகாமந்த்ரங்களையும் கொடுத்து ஸ்ரீராமனுக்கு உபதேசித்தார். அவ்வஸ்த்ரங்களை அறிவதற்குத் தேவர்களாலும் முடியாது. அப்படிப்பட்ட உயர்ந்த அவ்வஸ்த்ரங்களை அந்தணர்களில் சிறந்த விஶ்வாமித்ரர் ராமனுக்குக் கற்பித்தார். பின்பு விஶ்வாமித்ரர் அஸ்த்ரங்களுக்குரிய மந்த்ரதேவதைகளை ராமனுக்குச் சொந்தமாக்குவதற்கு உத்தேசித்து அவைகளை நினைத்து ஜபஞ்செய்தார். உடனே மந்த்ரதேவதைகள் அவர் கட்டளைப்படி பளபளவென்று விளங்குகின்ற காந்திமயமான சரீரங்களோடு விஶ்வாமித்ருக்கு எதிரில் வந்து நின்று தங்களுக்கு உயர்ந்த ஆஶ்ரயம் கிடைத்துவிட்டதற்குச் சந்தோஷித்து 'ரகுல திலகனே! மிகவும் மகிமை பொருந்திய நாங்கள் உனக்கு இன்றுமுதல் கிங்கரர்களாயினோம்' என்றுரைத்தன. காகுஸ்தனாகிய ராமன் அவற்றைத் தன் கையினால் தடவிக்கொடுத்து அங்கீகரித்து 'நான் நினைக்கும்பொழுது வந்து உதவுங்கள்' என்று அவைகளுக்குக் கட்டளையிட்டான். பின்பு மிகுந்த ஒளிபெற்று விளங்குகின்ற விஶ்

வாமித்ர மஹர்ஷிக்கு அளவற்ற ப்ரீதியோடு நமஸ்காரம் செய்தான்.

இருபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ விஶ்வாமித்ரர் ராமனுக்கு உபஸம்ஹார மந்த்ரங்களை யுபதேசித்தல். }

பின்பு ராமன் ஸந்தோஷத்தினால் முகமலர்ச்சி யடைந்து விஶ்வாமித்ரரை நோக்கி "முனிவரே! நான் தேவரீரிடத்திலிருந்து அஸ்த்ரங்களைப் பெற்றுத் தேவர்களாலும் வெல்லமுடியாதவனாயினேன். அஸ்த்ரங்களின் ப்ரயோகத்தை மாத்திரம் எனக்கு உபதேசித்திருக்கிறீர்கள். இப்பொழுது அவைகளின் உபஸம்ஹாரங்களையும் உபதேசிக்கும்படி விரும்புகிறேன்" என்று கேட்டான். நல்லொழுக்கமுள்ள அம்முனிவர் அவ்வளவில் ப்ரீதியடைந்து "ராமா! [1]ஸத்யவந்தமென்றும், ஸத்யகீர்த்தியென்றும், த்ருஷ்டமென்றும், ரபஸமென்றும், ப்ரீதிஹாரதரமென்றும், பராங்முகமென்றும், அவாங்முகமென்றும் லக்ஷாக்ஷமென்றும், விஷமமென்றும், த்ருடநாபமென்றும், ஸுநாபமென்றும், தசாக்ஷமென்றும், சதவக்த்ரமென்றும், தசசீர்ஷமென்றும் சதோதரமென்றும், பத்மநாபமென்றும், மஹாநாபமென்றும், துந்துநாபமென்றும், [2]ஸுநாபமென்றும், ஜ்யோதிஷமென்றும், க்ருசநமென்றும், நைராஶ்யமென்றும், விமலமென்றும், யோகந்தரமென்றும், ஹரித்ரமென்றும், தைத்யமென்றும், ப்ரசமனமென்றும் (சுசியென்றும், பாஹுவென்றும், மஹாபா

---

1. 'ஸத்யவத்' என்று சிலர் எழுதுகிறார்கள்.

2. 'ஜ்ஞாநஸுநாபகௌ' என்றும், 'தந்துநாபஸுநாபகௌ' என்றும் மூலத்தில் இரண்டிடத்தில் ஸுநாபகசப்தம் வந்தி

ஹுவென்றும், சிஷுவியென்றும், விருசியென்றும்,) ஸார்ச்சிர்மாலியென்றும், [1] த்ருதியென்றும், மாலியென் றும், விருத்தி மந்தமென்றும், ருசிரமென்றும், பித்ரு ஸௌமனஸமென்றும், விதூதமென்றும், மகரமென்றும், கரவீரகரமென்றும், தனமென்றும், தான்யமென்றும், காமரூபமென்றும், காமருசியென்றும், மோஹனமென் றும், மாரணமென்றும், ஜ்ரும்பகமென்றும், ஸர்வநாப மென்றும், ஸந்தானமென்றும், வரணமென்றும் பெயர் பெற்றுக் காமரூபிகளும், மிக்க ஒளிபெற்றவைகளும், பிரு சாஸ்வருடைய குமாரர்களுமாகிய உபஸம்ஹாரங்களை என்னிடமிருந்து பெற்றுக்கொள். உனக்கு மங்களமுண் டாகட்டும். நான் கற்றவைகளை உபதேசிப்பதற்கு நீ எனக்கு உத்தம பாத்ரமாயிருக்கிறாய்.' என்று எல்லா வற்றையும் உபதேசித்தார். ராமன் மனக் களிப்போடு அம்மந்த்ரங்களை யெல்லாம் பெற்றுக் கொண்டான். அந்த மந்த்ரதேவதைகள் யாவும் ராமன் எதிரில் வந்து நின்றன. அவைகள் பளபளவென்று விளங்குகின்ற திவ்யதேஹங்களைத் தரித்துக் களிப்பை விளைவிப்பவை களாயிருந்தன. அவைகளிற் சில நெருப்பை நிகர்த்தவை. சில புகையைப் போன்றவை. சில ஸூர்ய சந்த்ரர்களோ

ருக்கிறது. மொழிபெயர்க்க முயன்றவர் பலரும் ஸ்வார்த்தத்தில் கப்ரத்யயமெனக் கருதி ஸுநாபமென்றே எழுதியிருக்கிறார்கள். ஒரு வர் முதலில் ஸுநாபமென்றும் மற்றோரிடத்தில் ஸுநாபகமென் றும் எழுதுகிறார். 'ராமார்ஜுநௌ' 'ராமக்ருஷ்ணௌ' என்கிறபடி பெயர் ஒன்றாயிருப்பினும், காரியம் முதலியவைகளால் பேதம் கொ ள்ளவேண்டும் என்று தோன்றுகின்றது.

1. இங்கு, 'ஸார்ச்சிர்மாலீ த்ருதிர்மாலீ' என்பது மூலம். த்ருதி மாலி என்று இரண்டு பெயராகக் கருதி இவ்விடத்தில் த்ருதியென் றும், மாலியென்றும் சொல்லப்பட்டது. சிலர் த்ருதிர்மாலி யென்று ஒரே பெயராக அபிப்பிராயப் படுகிறார்கள்.

டொத்தவை. அந்தத் தேவதைகள் வணக்கத்துடன் கையைக் கூப்பிக்கொண்டு ராமனுக்கு எதிரில் தென்பட்டன. பின்பு அவ்வுபஸம்ஹார மந்த்ரதேவதைகள் யாவும் ராமனைப்பார்த்துப் 'புருஷோத்தமனே! இதோ நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம். உனக்கு நாங்கள் செய்து முடிக்கவேண்டியதைக் கட்டளையிடவேண்டும்' என்று மிகவும் வணக்கமாய் மொழிந்தன. ரகுநந்தனன் அதைக்கேட்டு 'மந்த்ரதேவதைகளே! காரியம்நேரிடுகிற ஸமயத்தில் நான் உங்களை மனத்தில் நினைக்கிறேன். அப்பொழுது வந்து எனக்கு உதவிசெய்யுங்கள்' என்றான். அந்தத் தேவதைகள் அப்படியே யாகட்டும் என்று ராமனைப் பிரதக்ஷிணஞ்செய்து விடைபெற்றுக் கொண்டு வந்தவழியே சென்றன. பின்பு காகுஸ்தன் ப்ரஹ்மவாதியான விஶ்வாமித்ர முனிவர் ஆஜ்ஞைப்படி லக்ஷ்மணனுக்கு அவ் வஸ்த்ரங்கள் அனைத்தையும் ப்ரயோகம் உபஸம்ஹாரம் ஆகிய இரண்டுடன் மிகுந்த ப்ரீதியோடு கற்பித்தான். ராகவன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு அவர்கள் இருவரோடும் செல்லும் பொழுது விஶ்வாமித்ர முனிவரைப் பார்த்து "பூஜ்யரே! இதோ அந்த மலையின் அருகில் இடைவெளியின்றி நெருங்கி, ஆகாயத்தை அளாவி மேகங்களை நிகர்த்துவிளங்குகின்ற சோலையைப் பாருங்கள்! அழகாய்க் கூவுகின்ற பலவிதமான பக்ஷிகளும் மிருகங்களும் நிறைந்து, வெறுப்பில்லாமற் பார்க்கும்படியான பேரழகுபெற்று மனத்துக்கு ஆநந்தத்தை விளைக்கின்றது. அது யாவர்க்குச் சொந்தமானது? நான் அதைக் கேட்க விரும்புகிறேன். நாம் இப்பொழுதுபயத்தைவிளைவித்துமயிர்க்கூச்சுண்டாகும்படி அதிக பயங்கரமாயிருந்த தாடகாவனத்தைக் கடந்து வந்துவிட்டோம். இந்தச் சோலை பயத்தை

உண்டாக்காமல் மிக்க செழித்து ஆநந்தமாயிருப்பதனுல் அது ஒரு ஆஸ்ரமமா யிருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். ஆகையால் அதன் வரலாற்றைத் தாங்கள் எனக்குத் தெரியச் சொல்லவேண்டும். முனிவரே! கொடிய செய்கைகொண்டு அந்தணர்களை வருந்தச் செய்கிற துராத்மாக்களாகிய ராக்ஷஸர்கள் தங்கள் யாகத்துக்கு விக்னம்செய்வதற்கு எங்கு வருகின்றூர்கள். தாங்கள் செய்கிற யஜ்ஞகாரியங்களைக் காக்கவேண்டிய இடம் எது? அந்த அரக்கர்களை எவ்விடத்திற் கொல்ல வேண்டும். அவ்வாஸ்ரமம் இன்னும் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? அதையும் எனக்குச் சொல்லுங்கள்" என்று கேட்டான்.

இருபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ வாமன மூர்த்தி வ்ருத்தாந்தமும், விஸ்வாமித்ரர் யாகதீக்ஷையும். }

ராமன் அளவற்ற மகிமை பொருந்தியவனுயினும், மனிதனுக அவதரித்திருப்பதுபற்றித் தனது பூர்விக வ்ருத்தாந்தங்களை அறியாதவன்போல அவ்வனத்தைக் குறித்து வினவியதற்கு மஹாதேஜஸ்வியாகிய அம்முனிவர் சொல்லத்தொடங்கினர். 'நீண்டதோள்களையுடையவனே! தேவதைகளிற் சிறந்த ஸ்ரீமஹாவிஷ்ணு உலகத்தில் தவத்தை நடத்துவதற்காகத் தான் தவஞ்செய்யும் பொருட்டும், யோகத்தை யநுஷ்டிக்கும் பொருட்டும், பல நூறுவருஷங்களும், பலநூறு யுகங்களுமாக இந்த வனத்தில் இருந்து தவஞ் செய்துகொண்டு வந்தார். இது முன்பு மஹாத்மாவாகிய வாமனதேவர் தவம்புரிந்த ஆஸ்ரமம். இங்குத் தவத்தில் மிகுந்த காஸ்யப

முனிவர் ஸித்தியடைந்தார். ஆனதுபற்றி இதற்கு ஸித்தாஶ்ரமம் என்று பெயர். ஸ்ரீமஹாவிஷ்ணு பலவருஷங்கள் நின்று இங்குத் தவம்புரிந்திருந்த காலத்தில் தான் விரோசனன் பிள்ளையாகிய பலியென்னும் அஸுரர்களுக் கரசன் வாயுகணங்களோடுகூடிய இந்த்ரன் முதலான தேவதைகள் அனைவரையும் ஜயித்து, அவர்கள் ராஜ்யத்தைத் தன் மந்த்ரிகளைக்கொண்டு பரிபாலிக்கச் செய்து வந்தான். அவன் பின்பு[1] கடவுள் ஆராதனமாகிய ஒருயாகத்தைத் தொடங்கி விமரிசையாய் நடத்திக்கொண்டிருந்தான். தேவதைகள் அதற்குப் பயந்து அக்னிதேவனை முன்னிட்டுக்கொண்டு கூட்டமாக வந்து இவ்வாஶ்ரமத்தில் வஸித்திருந்த விஷ்ணுவை நோக்கித் 'தேவனே! விரோசனன் பிள்ளையான பலியென்பவன் சிறந்த வேள்வி செய்கிறான். அது முடிவதற்கு முன்பு நம்காரியத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். எவராயினும் அவனிடம் வந்து எதைக் கேட்டபோதிலும் அவன் கௌரவத்துடன் கொடுத்து வருகிறான். அதனால், தாங்கள் தேவர்களின் நன்மையை விரும்பி மாயாசக்தியினால் வாமனவடிவத்தை அடைந்து எங்களுக்கு மேலான க்ஷேமத்தைச் செய்யவேண்

1. யாகம் என்பது தேவதையைக் குறித்து அக்நியில் ஹவிஸ்ஸைக்கொடுப்பதாகும். 'யஸ்யை தேவதாயை ஹவிர் க்ருஹீதம் ஸ்யாத் தாம் த்யாயேத் வஷட்கரிஷ்யந் ஸாக்ஷாத் தேவதாம் ப்ரீணாதி' என்று எந்தத் தேவதைக்கு ஹவிஸ்ஸைக் கொடுக்கவேண்டுமோ அந்தத் தேவதையை மனத்தில் நன்கு த்யானிக்கவேண்டும். இவன் தேவர்களுக்கு விரோதி ஆகையால் இவன் யாகஞ் செய்தானென்பது எப்படிப் பொருந்தும் என்றால், இந்தப் பலி செய்யும் யாகம் இந்த்ராதி தேவதைகளைக் குறித்துச் செய்யும் யாகம் அன்று. இது பகவானைக் குறித்துச் செய்யும் யாகம். ஆனதுபற்றித் தான் கடவுள் ஆராதனமாகிய என்று சொல்லப்பட்டது.

டும்' என்று வேண்டிக்கொண்டார்கள். ராமா! அதற்குள் [1] காஶ்யபமஹர்ஷி தன் பத்தினியாகிய அதிதியோடு கூடி, ஸ்வாஹாதேவியோடு கலந்து விளங்குகின்ற அக்னிதேவனை நிகர்த்துத் தேஜஸ்ஸினால் ஜ்வலித்துக் கொண்டு விளங்கித் தேவமானத்தினால் ஆயிரம் வருஷங்களாக விஷ்ணுவைக் குறித்துத் தான் நடத்திவந்த விரதத்தை முடிவுசெய்தார். அப்பொழுது அங்கு வரம் கொடுப்பதற்காக மஹாநுபாவனாகிய ஸ்ரீமந்நாராயணன் வெளிப்பட்டு வந்தார். அப்பொழுது காஶ்யபர் தன் பத்னியோடுகூடத் 'தேவனே! நீ தபோமயன்; தபோராசி; விஜ்ஞானஸ்வரூபன்; உனக்குத் தவமே இயற்கை. நீ புருஷோத்தமன். அப்படிப்பட்ட உன்னை என் தபோபலத்தினால் ப்ரத்யக்ஷமாகக் காண்கிறேன். 'ப்ரபுவே! நான் [2] ஜங்கமஸ்தாவர ரூபமான இவ்வுலகத்தையெல்லாம் தங்கள் சரீரத்திற் காண்கிறேன். நீ ஆதியந்த

1. 'ஸோऽகாமயத! பஹுஸ்யாம் ப்ரஜாயே யேதி! ஸதபோதப்யத' என்கிற ஶ்ருதியின்படி ஸ்ரீமகாவிஷ்ணு ஜகத்ரக்ஷண சிந்தையிலாழ்ந்து, இத்தேசத்தில் வெகுகாலம் வரையில் கண்ணுக்குப் புலப்படாமல் வஸித்திருந்தார். காஶ்யபமஹர்ஷி அதையறிந்து அவரைத் தனக்குப் புத்திரனாக விரும்பித் தேவமானத்தால் ஆயிரம் வருஷம் செய்து முடிக்கத் தக்கதும் விஷ்ணுவின் ஆராதன ரூபமுமாகிய ஒரு விரதத்தைத் தனது பத்னியுடன் அநுஷ்டித்து அதை முடிக்கும்பொழுது தனக்கு வரங்கொடுக்கும் பொருட்டு ப்ரத்யக்ஷமாகிய விஷ்ணுதேவனைத் துதிசெய்தனர். அச்சமயத்திற்றான் தேவதைகள் அவ்விடம் வந்து ஸ்ரீமகா விஷ்ணுவை வேண்டிக்கொண்டார்கள் என்பது பொருத்தம்.

2. 'பஶ்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே' என்று அர்ஜுனனுக்குத் தோன்றினாற்போலத் தோன்றினனென்றுணர்க. அல்லது 'ஜகத்ஸர்வம் ஶரீரந்தே' என்ற சொல்லுகிறபடி 'ஜகத்தையெல்லாம் உனக்குச் சரீரமாகக் காண்கின்றேன்' என்று கொள்ளவேண்டும்.

மில்லாமலும் இப்படி அப்படியென்று குறிக்க வொண்ணாமலும் விளங்குகிறாய். அப்படிப்பட்ட உன்னை நான் சரணமாக அடைந்தேன்.' என்று துதித்தார். ஸ்ரீமஹாவிஷ்ணு நிர்மலராய் விளங்குகின்ற அம்மஹர்ஷியை நோக்கி 'முனிவரே உமக்கு நன்மையுண்டாகட்டும். நான் வரங் கொடுப்பதற்கு ஸித்தனாயிருக்கிறேன்' வேண்டியதை விரும்பும்.' என்று மொழிந்தார். மரீசியின் குமாராகிய அக்காஸ்யப முனிவர் 'வரதனே! ஆஸ்ரிதர்களை ரக்ஷிப்பது உனக்குச் சிறந்த விரதம். ஆகையால் உன்னை வேண்டிக்கொள்கின்ற எனக்கும் அதிதிக்கும், தேவதைகளுக்கும், நீ மிகுந்த ஸந்தோஷத்துடன் வரங்கொடுக்கவேண்டும். அது எப்படிப்பட்டதென்றால், ராக்ஷஸர்களை அடக்கும்பொருட்டு நீ அதிதிக்கும் எனக்கும் புத்ரனாய் இந்திரனுக்குத் தம்பியாய்த் துக்க பீடிதர்களான தேவதைகளுக்கு இப்பொழுது ஸஹாயம் செய்யவேண்டும். உனது அனுக்கிரகத்தினால் என் விரதம் ஸபலமாக ஸித்தியடைந்தது பற்றி இந்தத் தேசமானது ஸித்தாஸ்ரமமென்று க்யாதி பெற வேண்டும். நீ அவதாரஞ் செய்யும்பொருட்டுச் சீக்கிரம் எழுந்திருக்கவேண்டும்' என்று சொன்னார்.

பின்பு மஹாதேஜஸ்வியாகிய ஸ்ரீமகாவிஷ்ணு அதிதியினிடத்தில் அவதாரஞ்செய்து வாமனரூபத்தைக் கைப்பற்றிப் பலியினிடஞ் சென்று, தான் ஸ்ரீமஹாவிஷ்ணுவென்றும், ஸ்ரீமந்நாராயணனென்றும் க்யாதி பெற்றவனாய் யாவர்க்கும் இஷ்டங்களைக் கொடுப்பவனாய்த் தனக்கென்று ஒன்றையும் வேண்டப் பெறாதவனாய் ஸர்வாபீஷ்டங்களும் நிறையப் பெற்றவனாய் இருந்தும் யாசிக்கின்றோமேயென்ற அபிமானத்தைக் கொஞ்சமும் கொள்ளாமல் உலகங்களுக்கு நன்மை செய்யும்பொருட்டுப்

பலியினிடஞ் சென்று மூன்றடிகளைக் கேட்டுப் பெற்றுக் கொண்டான். பிற்பாடு உலகங்களைச் சரீரமாகவுடைய அம்மஹாநுபாவன் அவ்வுலகங்களை யெல்லாம் பரந்து வளர்ந்ததான உயர்ந்த வடிவங் கொண்டு தன் இரண்டடிகளினால் உலகங்களை அளந்துகொண்டு மூன்றாவது அடிக்கு இடம் கொடுக்காமைக்காகத் தன் தேஜஸ்ஸினால் அந்தப் பலி சக்ரவர்த்தியைப் பந்தனம்செய்து, தான் பெற்ற உலகங்களை மறுபடியும் இந்திரன் வசம்செய்துவிட்டான். அங்ஙனம் வாமனனாய் அவதரித்துப் பலியை யாசித்து, த்ரிவிக்ரமரூபங் கொண்டு, தன் மெல்லிய அடிகளினால் உலகத்தை அளந்து, உயிர்ப்பன்மைகளுக்கு நன்மை செய்த மஹாநுபாவனாகிய ஸ்ரீமந்நாராயணன் ஸம்ஸார ஶ்ரமங்களை யெல்லாம் போக்கும்படியான இவ்வாஶ்ரமத்தில் முன்பு வஸித்திருந்தான். நானும் அந்தப் பகவானிடத்தில் பரமபக்தியைச் செய்து கொண்டு அவனுக்குச் சொந்தமான இவ்வாஶ்ரமத்தில் இருந்து வருகிறேன்.

மகாவீரனே! என் யாகத்துக்கு விக்னம் செய்யும் ராக்ஷஸர்கள் இவ்வாஶ்ரமத்துக்கே வருவார்கள். ராமா! கொடிய செய்கையுள்ள அவ்வரக்கர்களை நீ இவ்விடத்தில்தான் கொலைசெய்யவேண்டும். ஆகையால், நாம் இப்பொழுதே புறப்பட்டு அந்த ஸித்தாஶ்ரமத்துக்குப் போய்ச் சேருவோம். [1] அவ்வாஶ்ரமம் எனக்கு எப்படியோ அப்படியே உனக்கும் சொந்தமானது தான்"

---

1. இவ்வாஸ்ரமத்தைத் தவஞ்செய்கைக்காக நான் கைக்கொண்டேனாகையால் இது எனக்குச் சொந்தமாயிற்று. நீ விஷ்ணுவாகவும் வாமனனாகவும் அவதரித்த காலத்தில் இதைக் கைக்கொண்டிருந்தா யாகையால் இஃது உனக்கும் சொந்தமே யென்பது பொருள்.

என்று சொல்லி மிகுந்த ஸந்தோஷத்துடன் அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு அவ்வாஶ்ரமத்துக்குச் சென்றார். அவர்கள் செலவு புனர்வஸு நக்ஷத்ரங்களோடு சேர்ந்த சந்திரன் ப்ரகாசிப்பதுபோலக் காணப்பட்டது. அப்பொழுது ஸித்தாஶ்ரமத்தில் வாஸஞ்செய்து வந்த முனிவர்கள் விஶ்வாமித்ர முனிவர் ராமலக்ஷ்மணர்களை அழைத்து வந்ததற்குச் சந்தோஷம் மேலிட்டு, உடம்பு தெரியாமல் உயர எழும்பிக் குதித்துக் குதித்து ஓடிவந்து மிகுந்த மதியுள்ள அந்த முனிவருக்குத் தகுந்தபடி பூஜை செய்து, ராஜகுமாரர்களுக்கும் அதிதி ஸத்காரம் செய்தார்கள்.

பின்பு அந்த ரகுகுல குமாரர்கள் அங்கு ஒரு முகூர்த்தகாலம் இளைப்பாறிய பின்பு விஶ்வாமித்ரரை நோக்கிக் கையைக் கூப்பிக்கொண்டு 'முனிவர் தலைவரே! தாங்கள் இன்றைய தினமே தீக்ஷைபெற்றுக்கொள்ளுங்கள்; உமக்கு மங்களம் உண்டாகட்டும். தங்கள் யாகம் ஸித்திபெறுவதுபற்றி இந்த ஸித்தாஶ்ரமம் இன்னமும் உயர்ந்த மகிமையை அடையட்டும். 'கொடிய செய்கையுள்ள அரக்கர்களை நீ இவ்விடத்தில் கொல்லவேண்டும்' என்ற தங்கள் வார்த்தை உண்மையாகட்டும்' என்று சொன்னார்கள். மஹாதேஜஸ்வியான விஶ்வாமித்ரர் ஐம்புலன்களையும் அடக்கி அப்பொழுதே யாகம் செய்வதற்குத் தீக்ஷித்துக் கொண்டார். ராஜகுமாரர்களும் ஊக்கத்தோடு விடியற்காலத்தில் எழுந்திருந்து காலை ஸந்தியை வணங்கி அர்க்கியங் கொடுத்துப் பரிசுத்தர்களாக நியமத்துடன் காயத்ரீ ஜபஞ்செய்து அவ்வண்ணமே அக்நி கார்யங்களை நிறைவேற்றி உட்கார்ந்துகொண்டிருக்கிற விஶ்வாமித்ரமாமுனிவர்க்கு நமஸ்காரஞ் செய்தார்கள்.

இருபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் மாரீசனை ஸமுத்ரத்தில் தள்ளி ஸுபாஹுவைக் கொல்லுதல்.

காலதேசங்களை அறிந்து பேசுவதற்குரிய ஸாமர்த்தியமும் பகைவர்களை அடக்கும்படியான வல்லமையும் அமைந்து விளங்குகின்ற ராமலக்ஷ்மணர்கள் மஹர்ஷிகளுக்குத் துன்பம் செய்து வருகின்ற ராக்ஷர்களை அடியோடு நாசம் செய்யவேண்டும் என்கிற உத்தேசத்துடன் விஶ்வாமித்ரரை நோக்கி 'மகிமை பொருந்தியவரே! யாகத்துக்கு விக்னம் செய்கின்ற மாரீச ஸுபாஹுக்களை நாங்கள் எப்பொழுது தடுக்கவேண்டும். அதை எங்களுக்கு நன்றாய்ச் சொல்லுங்கள். அந்த ஸமயத்தில் ஒரு க்ஷணமாவது தப்பிப்போகலாகாதல்லவா?" என்றார்கள். போர்புரியவேண்டும் என்கிற விருப்பத்தினால் உத்ஸாஹத்துடன் சொல்லிய அந்த ராஜகுமாரர்களின் வசனத்தைக் கேட்டு விஶ்வாமித்ரரைச் சூழ்ந்துள்ள ரிஷிகள் 'ரகுகுலத்திற் பிறந்த வீரர்களே! இன்று முதல் ஆறுநாள் இரவும் பகலும் நீங்கள் யாகத்தைக் காத்துக்கொண்டிருக்கவேண்டும். அதுவரையில் மகிமை பொருந்திய விஶ்வாமித்ரமுனிவர் தீக்ஷித்துக்கொண்டு அதற்குரிய மௌனவ்ரதத்துடன் இருப்பார். ஆதலால், அவர்க்குப் பதிலாக நாங்கள் சொல்லலாயிற்று.' என்றார்கள். பெருங் கீர்த்தி பெற்ற ராஜகுமாரர்கள் இருவரும் அம்மொழியைக் கேட்டு அதிக ஊக்கத்துடன் நித்திரையின்றி ஆறுநாள் இரவும் பகலும் அந்தத் தபோவனத்துக்குக் காவலாகத் தங்கள் கையில் பெரிய வில்லை ஏந்திப் பகைவர்களை அடக்குவதற்குரிய ஊக்கத்துடன் விஶ்வாமித்ர மாமுனிவரைக் காத்துக்கொண்டிருந்தார்கள். ஆறுவது தினத்தில் ராமன் லக்ஷ



173. ஸுபாஹு மாரீசர்கள் யாகவேதிகையில் ரக்தவர்ஷங்களைப்-
பொழிதலும், ராமன் அவர்களை யடித்தலும்.

மணனை நோக்கி 'இந்த ஒரு தினமும் நாம் ஊக்கத்துடன் ஜாக்கிரதை கொண்டிருக்கவேண்டும்' என்று சொன்னான்.

அப்பொழுது உபாத்யாயராகிய விஸ்வாமித்ராரோடும் மற்றுமுள்ள புரோஹிதர்களோடும் கூடின அந்த யஜ்ஞ வேதிகையானது தர்ப்பம், சமஸம், ஸ்ருக், ஸமித், குஸுமம் ஆகிய யாகஸாமக்ரியுடன் திடீரென்று[1] எரிந்தது. அதைக்கண்டு முனிவர்கள் ராமலக்ஷ்மணர்களுக்கு எச்சரிக்கை செய்தார்கள். பின்பு அந்த யாகமானது மந்த்ரவத்தாக விதிப்படி நடக்கத் தொடங்கிற்று. அப்பொழுது ஆகாயத்தில் திடீரென்று மிகவும் பயங்கரமான ஒரு பெரிய ஒலி உண்டாயிற்று. மாரீசன் ஸுபாஹு என்ற அரக்கர்கள் இருவரும் பலவிதமான மாயைகளைச் செய்துகொண்டு ஆகாயத்திற் பரந்து, வர்ஷாகாலத்திற் கிளம்புகின்ற மேகம்போல எதிர் நோக்கி ஓடிவந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து அநேகம் ராக்ஷஸர்கள் இரைச்சலிட்டுக்கொண்டு நெருங்கினார்கள். அவர்கள் அனைவரும் பயங்கரமாக வந்து ரக்த ப்ரவாஹத்தை யாகவேதிகையில் பொழிந்தார்கள். புஷ்பம் முதலிய உயர்ந்த வஸ்துக்களால் விளங்குகின்ற அந்த யாகவேதிகை அவர்கள் பொழிந்த ரக்தவெள்ளத்தினால் நிறைந்து எரிந்துகொண்டிருந்தது.

அதைக் கண்டு ராமன் கொடிய கோபங்கொண்டு வேகமாக எதிரே ஓடிச்சென்று அவ்வரக்கர்களை ஆகாயத்திற் கண்டான். உடனே தாமரை இதழ்போன்ற கண்களையுடைய ராமன்மீது ஸுபாஹு மாரீசர்கள் இருவ

1. யாகவேதிகை பற்றிக்கொண்டு எரிவது உத்பாதமாகையால் ராக்ஷஸர்கள் வருவதைத் தெரிவிக்கின்றது. சமஸம் என்பது பானபாத்ரம் ஸ்ருக்கென்பது ஹோமபாத்ரம். ஸமித் என்பது விறகு. குஸுமம் என்பது புஷ்பம்.

ரும் எதிர்த்து ஓடி வந்தார்கள். அதை ராமன் கண்டு லக்ஷ்மணனைப் பார்த்து 'லக்ஷ்மணா! இதோபார்! பெருங் காற்றானது மேகங்களைப் பறக்கடிப்பதுபோல இம்மான வாஸ்த்ரமானது இவர்களை இருக்குமிடம் தெரியாமல் மாம்ஸ பக்ஷணஞ் செய்து நாசம்பண்ணப் போகின்றது' என்று சொல்லி மிகவும் சிறந்து நெருப்புப்பொறி பறக்கும்படி விளங்குகின்ற மானவாஸ்த்ரத்தை வில்லில் தொடுத்து மாரீசன் மார்பில் எய்தான். அந்தத் திவ்யாஸ்த்ரம் தன்னுடம்பில் பட்டமாத்ரத்தில் மாரீசன் ஸமுத்ர ஜலத்தில் ஸரியாக நூறுயோஜனை தூரத்துக் கப்பால் தள்ளுண்டு விழுந்தான்.

அப்பொழுது ராமன் தம்பியாகிய லக்ஷ்மணனை நோக்கி 'லக்ஷ்மணா! தர்மத்துடன்கூடிய சீதேஷுவென்னும் மானவாஸ்த்ரத்தின் மகிமையைப் பார்த்தாயல்லவா? அது அவனை மோஹிக்கச் செய்துகொண்டு போயிற்றேயன்றி அவன் ப்ராணனைப் போக்கவில்லை. கருணை என்பதுசிறிதுமின்றிக் கொடிய செய்கைகளைச் செய்து யாகங்களுக்கு இடையூறு உண்டாக்கி எப்பொழுதும் ரக்தத்தைக் குடித்துக்கொண்டு திரிகின்ற இவ்வரக்கர்களை நான் முடித்துவிடுகிறேன்' என்று சொல்லி மிகவும் ஆச்சரியமும் திவ்யமுமாய் விளங்குகின்ற ஆக்னேயாஸ்த்ரத்தை எடுத்துத் தொடுத்து ஸுபாஹுவின் மார்பில் விடுத்தான். அது பட்ட மாத்ரத்தில் அவன் அடியுண்டு நிலத்தில் விழுந்துவிட்டான். ராமன் மற்றும் அவர்களுக்குத் துணையாக வந்த அரக்கர்களையும் வாயவ்யாஸ்த்ரத்தால் ஸம்ஹாரம் செய்து அங்குள்ள முனிவர் அனைவர்க்கும் ஆநந்தத்தை உண்டுபண்ணினான். ரிஷிகள் யாவரும் முன்பு அஸுரர்களை ஜயித்தபோது இந்திரனைப் பூஜித்ததுபோலவே யாகத்துக்கு விக்னம் செய்பவர்களாகிய அவ்வரக்கர்கள்



175. ராமலக்ஷ்மணர்கள் விச்வாமித்ரரைப்பார்த்து
'நாங்கள் உமக்கு அடிமை' என்றுரைத்தல்.

அனைவரையும் ஒரு நிமிஷத்துக்குள் முடியச்செய்த ராமனைப் பூஜித்தார்கள். பின்பு யாகம் நிர்விக்னமாய் நடந்தேறிற்று. நான்கு திசைகளும் உபத்ரவமில்லாமல் ஸுகமாய் விளங்கின. பின்பு விஸ்வாமித்ர முனிவர் ராமனை நோக்கி 'ராமா! உன் பருத்த புஜங்களின் பலத்தினால் என் யாகம் நிறைவேறிப் பயன் பெற்றவனாயினேன். நீயும் உன் பிதாவின் வசனத்தைப் பரிபாலித்தனை. என் யாகத்தை ஸித்திபெறச் செய்து இவ்வாஸ்ரமத்தின் ஸித்தாஸ்ரமமென்னும் பெயரை உண்மையாக்கிப் பெருங்கீர்த்தி பெற்றனை' என்று புகழ்ந்தார்.

முப்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

விஸ்வாமித்ரர் ராம லக்ஷ்மணர்களோடு மிதிலைக்குச் சொல்லுதல்.

பின்பு வீரர்களாகிய ராமலக்ஷ்மணர்கள் இருவரும் விஸ்வாமித்ர முனிவருடைய யாகத்தை முடித்து ஸந்தோஷத்தினால் மனங்குளிர்ந்து, அன்றிரவெல்லாம் அங்கேயே வஸித்திருந்தார்கள். மறுநாள் பொழுது விடிந்தவுடன் தாங்கள் செய்யவேண்டிய ஸந்தயாவந்தனாதி வைதிகச் சடங்குகளைத் தீர்த்துக்கொண்டு இருவரும் விஸ்வாமித்ர முனிவருக்கு நமஸ்காரஞ்செய்து "பூஜ்யரே! தாங்கள் யாகத்தை நிறைவேற்றி விட்டீர்கள். நாங்கள் தங்களுக்கு இன்னும் என்ன காரியம் செய்ய வேண்டும் அதற்குக் கட்டளையிடுங்கள். செய்வதற்கு ஸித்தமாய்க் காத்துக்கொண்டிருக்கிறோம்' என்றார்கள். அவர்கள் இங்ஙனம் மதுரமாகவும் கம்பீரமாகவும் மொழிந்த வார்த்தையைக் கேட்டு அங்குள்ள மஹர்ஷிகள் யாவரும் விஸ்வாமித்ரர் அநுமதி பெற்றுக் கொண்டு

ராமனை நோக்கிப் 'புருஷோத்தமனே! மிதிலாநகரத்துக் கரசனாகிய ஜனகமகாராஜன் தர்மத்துடன் கூடின ஒரு உயர்ந்த யாகம் நடத்தப்போகிறான். அதற்கு நாங்கள் அனைவரும் போக விருக்கிறோம். நரோத்தமனே! நீயும் எங்களுடன் வந்து அவனிடத்தில் உள்ளதான உலகத்தில் ப்ரஸித்தி பெற்றிருக்கிற உயர்ந்த வில்லையும் ஸீதை என்னும் பெண்மணியையும் பார்க்க வேண்டும். அளவிடவொண்ணாத வலிமைபெற்றுப் பயங்கரமாக ப்ரகாசிக்கின்ற அந்த வில்லானது [1] ஒரு காலத்தில் தேவராதன் என்னும் ஜனகராஜனது வம்சத்திற் பிறந்த ஒரு அரசன் யாகஞ் செய்யும்பொழுது அந்த யாகத்தில் நடந்த ஸதஸ்ஸில் [2] அந்த வில்தேவதைகளால் கொடுக்கப்பட்டது. தேவதைகளாயினும், கந்தர்வர்களாயினும், அஸுரர்களாயினும், அரக்கர்களாயினும் அவ்வில்லை வளைக்கவல்லவர் ஆகமாட்டார்கள். என்றால், மனிதர்களால் அது கொஞ்சமும் நாணேற்ற முடியாதென்பதைச் சொல்லவும் வேண்டுமா! மஹாபலசாலிகளாகிய

---

1. முன்பு சிவன் இந்த வில்லைக்கொண்டு தக்ஷ ப்ரஜாபதியின் யாகத்தை அழித்தான். தேவர்கள் சிவனை மனந்தெளியச் செய்து அந்த வில்லைப் பெற்றார்கள். தேவராதன் என்னும் அரசன் யஜ்ஞத்தினால் தேவர்களைக் களிக்கச்செய்து அவர்களிடமிருந்து அந்த உயர்ந்த வில்லைப்பெற்றான். ஆகையால் சிவபிரானுடைய அவ்வில்லானது வம்ச க்ரமமாக ஜனக மஹாராஜனிடத்தில் இப்பொழுது இருந்து வருகிறது என்பது கருத்து.

2. தேவதைகளால் கொடுக்கப்பட்டது இங்கு 'தத்தஸ்ஸதஸி தைவதை:' என்பது மூலம். இதற்கு ஸகலதேவர்களோடுங்கூடிவந்து சிவபெருமான் தானே கொடுத்ததாக மஹேஶ்வர தீர்த்தவ்யாக்யானத்தில் உள்ளது. இங்கு 'ப்ரீதஶ்ச ஸ்மவாந்ஸ்த்ரிஶூலீ நீலலோஹித:। ப்ராதாத் ஶத்ருநாஶார்யம் ஜநகாயாதிஸந்தயந:' என்ற கூர்மபுராண வசனமும் அதற்கு ப்ரமாணமாக உள்ளது.

பல ராஜக்களும் ராஜபுத்ரர்களும் அவ்வில்லினுடைய ஸாரத்தை அறிய விரும்பி அங்கே வந்து கடைசியில் அதை நாணேற்றச் சக்தியில்லாமல் வந்தவழியே திரும்பிப்போய் விட்டார்கள். காகுஸ்த குலத்தில் அவதரித்தவனே! நீ வந்தால் மஹாநுபாவனுகிய ஜனகமஹாராஜனையும் மிகவும் அற்புதமாகிய அந்த வில்லையும், அவன் யாகத்தையும் பார்க்கலாகும். ஸீதை என்னும் அழகான ஒரு பெண் மணியையும் பெறக்கூடும். புலியை ஒத்த பராக்ரமம் பொருந்தியவனே! முன்பு தேவராதன் என்று பெயர் கொண்ட ஒரு ஜனகராஜன் தன் யாகத்தில் மிகவும் களிப்புற்ற தேவதைகளை நோக்கித் தான் செய்த யாகத்துக்குப் பலனுக அழகிய பிடியையுடைய அந்த மேலான வில்லைக் கொடுக்கும்படி வேண்டினன். அவர்களும் அப்படியே அந்த வில்லைக் கொடுத்துச் சென்றார்கள். அன்று முதல் அந்தவில் அம்மஹாராஜனது மாளிகையில் நடக்கும் தநுர் மஹோத்ஸவத்தில் விற்கள் அனைத்தினும் ப்ரதானமாக வைக்கப்பட்டு ஆயாகம் என்னும் பெயர்பூண்டு அகிற்புகை முதலிய தூபங்களாலும், சந்தனம் முதலிய கந்தங்களாலும் பூஜிக்கப்பட்டு வருகின்றது’ என்று சொன்னார்கள்.

அதன் பின்பு விஸ்வாமித்ர முனிவர் ரிஷி ஸமூஹங்களுடன் ராமலக்ஷ்மணர்களை அழைத்துக்கொண்டு அவ்வாஸ்ரமத்திலிருந்து ப்ரயாணமாய்ப்புறப்பட்டு அங்குள்ள வனதேவதைகளை நோக்கி ‘வனதேவதைகளே! உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும். நான் ஸித்திபெற்றேனுகையால் இந்த ஸித்தாஸ்ரமத்தினின்றும் புறப்பட்டுக் கங்காநதிக்கு வடகரையிலிருக்கிற ஹிமாலயமென்னும் மலையிலுள்ள என் ஆஸ்ரமத்துச்குப் போகிறேன்’ என்று

சொல்லி விடைபெற்றுக்கொண்டு, அந்த ஸித்தாஶ்ரமத்தை ப்ரதக்ஷிணஞ்செய்து, வடதிசை நோக்கி ப்ரயாணஞ் செய்யத்தொடங்கினர். அவரைத்தொடர்ந்து அங்குள்ள முனிவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் அக்நி ஹோத்ரம் முதலான வைதிகச் சடங்குகளுக்குவேண்டிய பொருள் முதலியவற்றை ஏறக்குறைய நூறுவண்டிகளில் ஏற்றிக்கொண்டு சென்றார்கள். அப்பொழுது அந்த ஸித்தாஶ்ரமத்திலுள்ள மிருகங்ககளும் பக்ஷிகளும் கூட்டங்கூட்டமாக மிகுந்த பக்தியுடன் மாஹாத்மாவாகிய அவ்விஶ்வாமித்ர மாமுனிவரைப் பின்றொடர்ந்து வர, அம்முனிவரும் அப்பக்ஷிகளையும் மிருகங்களையும் திரும்பச்செய்தனர். இங்ஙனம் விச்வாமித்ரர் முதலிய மஹர்ஷிகள் அனைவரும் ப்ரயாணமாய்ப் புறப்பட்டு வெகுதூரம் நடந்து சென்று ஸூர்யன் அஸ்தமிக்கும் வேளையில் அனைவரும் ஒன்றுகூடிச் சோணநதத்தின் கரையில் தங்கி ஸ்நானஞ் செய்து அக்நிஹோத்ரம் முதலியவைகளை நிறைவேற்றி மிக்க ஒளிபொருந்திய விஶ்வாமித் முனியை முன்னிட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது ராமன் லக்ஷ்மணனுந்தானுமாக அம்முனிவர்களுக்கு நமஸ்காரஞ்செய்து சிறந்த மதியுடைய விஶ்வாமித்ர மாமுனியினருகிற்சென்று உட்கார்ந்து அவரை நோக்கி 'மஹாநுபாவரே! இந்தச் சோணநதத்தின் கரையில் செழித்த வனங்களால் அழகாய் விளங்குகின்ற இந்தத் தேசம் யாருடையது? இதைக்கேட்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஆகையால் இதை உள்ளபடி எனக்குச் சொல்லவேண்டும். உங்களுக்கு மங்கள முண்டாகட்டும்' என்று வணங்கினான். மிகுந்த தவத்தையும் வ்ரதாநுஷ்டானங்களையும் அதிகமாய்ச் செய்து ப்ரஸித்திபெற்ற விஶ்வாமித்ரமுனிவர் ரிஷிகளினிடையில் அத்தேசத்

ளைக் குறித்த வ்ருத்தாந்தங்கள் அனைத்தையும் சொல்லத் தொடங்கினர்.

முப்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

குச குசநாபர்களின் சரித்திரம்.

ப்ரம்ஹாவினது மாநஸ புத்ரனும் ஞானம் சௌர்யம் முதலிய குணங்களால் ப்ரம்ஹபுத்ரர்கள் அனைவரினும் சிறந்தவனுமாகிய [1] குசனென்னும் பெயர்பெற்ற மஹாதபஸ்வி ஒருவன் இருந்தான். அவன் எல்லா நோன்புகளையும் குறைவறச் செய்து தர்மங்களை அறிந்து பெரியவர்களைப்பூசித்து அவர்களால் தானும் புகழப்பட்டுவிளங்கினன். அம்மஹாநுபாவன் நற்குலத்திற் பிறந்து நாணம் முதலிய ஸ்த்ரீ குணங்களைப் பொருந்தித் தனக்கு அநுரூபையான வைதர்ப்பி என்னும் பத்னியினிடத்தில் நற்குணங்கள் நிறைந்து தன்னோடொத்து விளங்கிய குசாம்பன், குசநாபன், ஆதூர்த்தரஜஸன், வஸு என்னும் நான்கு புதல்வர்களைப் பெற்றான். பின்பு குசன் க்ஷத்ரிய தர்மமாகிய ப்ரஜா பரிபாலனத்தைச் செய்ய விரும்பி ஒளிபொருந்தி உத்ஸாஹம் அமைந்து தர்மத்தில் நிலைத்து ஸத்யத்தைப் பேசுகின்றவர்களாகிய அப்புதல்வர்களை நோக்கிப் 'புத்ரர்களே! நீங்கள் ப்ரஜா பரிபாலனஞ் செய்யுங்கள். அதனால் தர்மத்தைப் பெறுவீர்கள்' என்று மொழிந்தான். அவர்கள் அதைக்கேட்டு உலகத்தில் எங்கும் புகழ்பெற்ற நான்கு நகரங்களை வாய்ப்பாக

---

1. (கௌ ஸேதே இதி குஶ:) பூமியில் இருப்பவனாகையால் குசனென்று பெயர். ப்ரஹ்மலோகத்தை விட்டு ப்ராஜாபாலனத்தில் மனஞ்சென்று பூலோகத்தில் இருப்பவனாகையால் குசனென்று பேர் பெற்றான் என்றும் சொல்லலாம்.

நிருமித்தார்கள். அவர்களில் மஹா தேஜஸ்வியாகிய குசாம்பன் என்பவன் கௌசாம்பி யென்னும் பட்டணத்தை உண்டாக்கினுன். தர்மாத்மாவாகிய குசநாபன் என்பவன் மஹோதயமென்னும் பட்டணத்தை ஏற்படுத்தினுன். ஆதூர்த்த ரஜஸ் என்பவன் தர்மாரண்யம் என்னும் பட்டணத்தை உண்டு பண்ணினுன். ஜனங்களை ஆநந்திக்கச் செய்ய வல்லவனுகிய வஸுவென்பவன் கிரிவ்ரஜமென்னும் பட்டணத்தைப் படைத்தான். ராமா! இச்சோண நதத்தின் கரையிலுள்ள பூமியானது மஹாத்மாவாகிய வஸுவென்னும் அரசனுடையது. இப்பூமியைச்சுற்றி நான்கு பக்கத்திலும் ஐந்து பெரும் பர்வதங்கள் இதோ விளங்குகின்றன பார்! ஆனது பற்றி இந்நகரம் கிரிவ்ரஜமென்று வழங்கி வருகின்றது. இச்சோண நதமானது மகத தேசத்தின் வழியாகப் பெருகிவருவது பற்றி மாகதீ நதியென்று புகழ்ப்பெற்று இவ்வைந்து மலைகளினிடையிலும் பூமாலைபோல் விளங்குகின்றது. ராமா! அங்ஙனம் மாகதியென்று பெயர்பெற்று விளங்குகின்ற இச்சோணமானது மஹாநுபாவனுகிய வஸுவென்னும் அரசனைச் சேர்ந்தது. இந்நதி கிழக்கிலிருந்து மேற்கு முகமாகப் பெருகி வருகின்றது. இந்நதியின் இரண்டு பக்கத்திலும் செழித்த பயிர்கள் நிறைந்த அழகிய கழனிகள் வெகுவாய் விளங்குகின்றன. ரகுநந்தனு! தார்மிகர்களிற் சிறந்து ராஜர்ஷியாகிய குசநாபன் என்பவன் கிருதாசியென்னும் அப்ஸர ஸ்த்ரீயினிடத்தில் எல்லாக் குணங்களிலும் ஒப்பின்றி விளங்கிய நூறுபெண்களைப் பெற்றுன்.

ராமா! யௌவனம் வளரப்பெற்று அழகு பொருந்தி விளங்கின அக்கன்னிகைகள் புஷ்பங்களைச் சூடியும் நல்ல சந்தனங்களைப் பூசியும் நெற்றியில் அழகாகத் திலகம

ணிந்தும் லீலா விலாஸங்கள் அமைந்து மேலான ஆடையாபரணங்களால் அலங்காரஞ் செய்து கொண்டு பார்க்கப் பதினுயிரங் கண்கள் வேண்டும்படி அழகு மிகுந்து மழைக்காலத்து மின்னற் கொடிகளைப்போல உத்யானத்துக்கு வந்து அங்குப் பலவிதமாக ஆடுவதும் பாடுவதும் வீணை முதலிய வாத்யங்களைவாசிப்பதுமாகிய விளையாடல்களைச் செய்துகொண்டு மஹாநந்த ஸாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். ஸகல அவயவங்களிலும் அழகுபொருந்திப் பூமியில் ஒப்பற்ற உருவம் பெற்று விளங்கும் அப்பெண்மணிகள் கும்பல் கும்பலாகக் கறுத்துச் செழித்த விருக்ஷங்கள் நிறைந்த அவ்வுத்யானத்தின் இடையிற்சென்று நீருண்ட கார்மேகங்களின் நடுவில் ப்ரகாசிக்கின்ற நக்ஷத்ரங்களைப்போல விளங்கினார்கள். இங்ஙனம் எல்லாக் குணங்களும் பொருந்தி யௌவனம் நிறைந்து சிறந்த உருவத்துடன் விளங்கும் அம்மாதர்களை எங்கும் பரந்து நிற்கும் வாயுதேவன் கண்டு மோஹங்கொண்டு 'மாதுசிரோமணிகளே! எனக்கு உங்கள் அனைவரிடத்திலும் அளவற்றமோகம் உண்டாயிருக்கின்றது. ஆகையால், நீங்கள் எனக்குப் பத்நிகளாகவேண்டும். மனிதர்களுக்குத் தேவதைகளோடு ஸம்பந்தம் எப்படி நேரும் என்று சங்கிக்க வேண்டியதில்லை. நீங்கள் மநுஷ்யத்தன்மையை விட்டு ஆயுள் நிரம்பப் பெறுவீர்கள். யௌவனம் என்றும் நிலையற்றது. மனிதர்களுக்கு அது மிகவும் நிலையற்றிருக்கும். என்னை மணம்புரிவீர்களானால் அழிவில்லாத யௌவனம் பெற்றுத் தேவஸ்த்ரீகளைப்போல விளங்கி வாழ்வீர்கள்' என்று மொழிந்தான். நினைத்த காரியங்களைத் தடையின்றி நடத்த வல்லவனாகிய அவ்வாயுதேவன் வசனங்களைக்கேட்டு அப்பெண்மணிகள் நூறு பெயரும் 'தேவோத்தமா! தாங்கள் ஸகல ப்ராணிகளிடத்திலும் ப்ராணரூபியாக

கின்று ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிறீர்கள். தங்களுக்குள்ள இந்த ப்ரபாவத்தை நாங்கள் உள்ளபடி அறிந்திருக்கிறோம். இப்படிப்பட்ட எங்களைத் தாங்கள் ஏன் அவமதிக்கவேண்டும்? தேவர்களிற் றலைவரே! நாங்கள் அனைவரும் குசநாபனுடைய பெண்கள்; நாங்கள் தங்களையும் தங்களுக்கு ப்ரபுவாகிய இந்திரனையும் தெய்வாதிகாரத்தினின்றும் தொலைக்க வல்லமை பெற்றிருக்கிறோம். ஆனாலும், சபித்தால் தவம் அழிந்தும்விடும். ஆனது பற்றி அத்தவத்தைக் காத்துக் கொண்டு வெறுமனேயிருக்கிறோம். தேவர்களில் தலைவராயிருந்தும் தங்களுக்கு இந்த மதிக்குறைவு எப்படி யுண்டாயிற்று? இதை எங்கள் தகப்பனாராகிய குசநாபர் அறிவாரானால் அதிக கோபம் கொள்ளுவார். ஒரு சமயம் அவர் தங்களுக்கு மிருத்யுவாகவும் கூடும். அவர் அப்படிக் கோபம் கொள்ளாதிருக்க வேண்டிக் கொள்கிறோம். பூஜ்யரே! ஸத்யத்தையே பேசுகின்ற அம்மஹாநுபாவனைத் தாங்கள் அவமதிக்க வேண்டாம். உலகத்தில் பெண்களைத் தகப்பன் உத்தேசித்துக் கொடுப்பதுதான் தர்மம். எங்கள் தகப்பனார் எங்களை யாவருக்குக் கொடுப்பரோ அவர்தான் எங்களுக்குக் கணவர். அப்படிப்பட்டவரை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஸத்யவாதியாகிய தகப்பனை அவமதித்து எங்கள் இஷ்டப்படி பர்த்தாவைத் தேடிக்கொள்ளுங்காலம் எங்களுக்கு உண்டாக வேண்டாம். ஏனென்றால், எங்களுக்கு இபொழுது தகப்பனார் ப்ரபு. அவர் தான் எங்களுக்கு மேலான தெய்வம். ஆனதுபற்றி அவர் கட்டளைக்கு நாங்கள் எவ்விதத்திலும் அடங்கியிருக்கவேண்டும்." என்று சொன்னார்கள். வாயுதேவன் அம்மொழிகளைக் கேட்டு மிகவும் கோபங்கொண்டு வல்லவனானதுபற்றி அந்த அழகிய

பெண்களின் சரீரத்திற் புகுந்து அவர்கள் எலும்புகளை
முரித்துக் கூனிகளாகச் செய்துவிட்டான். அவர்களும்
ஒரு முழவுயரமுள்ள உருவமடைந்து உத்ஸாஹம் குறை
ந்து பயந்து மனக்கலக்க முற்றார்கள். இங்ஙனம் வாயுதே
வனால் கூனிகளாகச் செய்யப்பட்ட அக்கன்னிகைகள் தங்
கள் தகப்பனாராகிய மஹீபதியின் மாளிகைக்குச் சென்று
சரீர விகாரத்தைப்பற்றி வெட்கமடைந்து கண்ணுங்
கண்ணீருமாகிப் பரபரப்புடன் கீழே விழுந்தார்கள். அப்
பொழுது குசநாபன் முன்பு மிகவும் காந்திகொண்டு விள
ங்கித் தனக்கு இஷ்டர்களாயிருந்த அப்பெண்கள் அவ்வி
தமாகச் சரீர பங்கமுற்று வருந்துவதைக் கண்டு மனக்
கொதிப்புடன் அவர்களை நோக்கிப் 'பெண்களே! இஃதெ
ன்ன? சொல்லுங்கள்! தர்மத்தைத் தவறி இப்படி நடந்
தவன் எவன்? உங்கள் அனைவரையும் இங்ஙனம் கூனிக
ளாகச் செய்தவன் எவன்? நீங்கள் ஏன் இப்படிக் கீழே
விழுந்து சுழன்றுகொண்டு பேச முடியாமல் இருக்கிறீர்
கள்?' என்று வினவித் துக்கத்தினால் பெருமூச்சுவிட
டான்.

முப்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

பிரமதத்தன் வ்ருத்தாந்தமும் அவன்
குசநாபன் பெண்களை மணம் புரிவதும்.

அறிஞனாகிய அந்தக் குசநாபன் புத்திரிகள் நூறு
பெயர்களும், அவன் கால்களில் தங்கள் சிரங்கள் பட
நமஸ்காரஞ் செய்து 'தந்தையே! எல்லா ப்ராணிகளுக்
கும் உள்ளே புகுந்து ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிற
வாயுதேவனனவர் எங்களை அவமதிக்க நினைத்தார்.
பலாத்காரஞ் செய்வது கெட்டவழி யென்று நினைக்கா

மல் பலாத்காரஞ் செய்ய ப்ரயத்தனித்துத் தர்மத்தைச் சிறிதும் ஆலோசிக்காமற் போனார். நாங்கள் அத்தேவனை நோக்கி 'எங்களுக்குத் தகப்பனார் இருக்கிறார். ஆகையால், பர்த்தாவை நாங்களே வரித்துக்கொள்ளும்படியான ஸ்வாதந்தரியத்தில் இருக்கவில்லை. நீங்கள் எங்கள் தகப்பனாரிடம் சென்று வேண்டிக்கொள்ளுங்கள். எங்களை அவர் கொடுப்பாரானால் நாங்கள் தங்களுக்குச் சொந்தமாகிறோம். தங்களுக்குச் சுபம் உண்டாகட்டும்' என்று சொன்னோம். அதை அவர் கொஞ்சமும் ஏற்றுக்கொள்ளாமல் கோபம் கொண்டு எங்களை இப்படி எலும்பை முரித்துக் குரூபிகளாக்கினார்'' என்று சொல்லி அழுதார்கள். அந்த அரசன் மஹா தேஜஸ்வியாயிருந்தாலும் பரமதார்மிகனானது பற்றி வாயுவின்மீது கோபம் கொள்ளவில்லை. அவன் தன்னைப்போலவே கோபமில்லாமல் திரும்பிவந்த பொறுமையில் மிகுந்த புதல்விகளைப் பார்த்துக் 'குழந்தைகளே! பொறுமையுள்ளவர்கள் தங்களுக்கு எவரேனும் கெடுதி செய்யும்பொழுது தாங்கள் அவர்களுக்குப் பதிலாகச் செய்யவேண்டிய காரியம் பொறுமையேயொழிய வேறில்லை. நீங்கள் பொறுமையைப் பாராட்டிப் பெருங் கீர்த்திபெற்றிருக்கிறீர்கள். தேவதையாயிருப்பவன் வேண்டிக்கொள்ளும் பொழுதும் மனமயக்கமற்றிருப்பதும், அவன்கோபித்துப் பங்கஞ் செய்தவிடத்திலும் கோபங்கொள்ளா திருப்பதுமாகிய இது மிகவும் பெருங்காரியம். நீங்கள் யாவரும் ஒரே எண்ணத்துடன் நம் குலத்தை ஆலோசித்து அதற்குத் தக்கபடி மேலான காரியஞ் செய்திருக்கிறீர்கள். பெண்களுக்காயினும் புருஷர்களுக்காயினும் பொறுமை தான் சிறந்த பூஷணமானது. ஆனால், அந்தப் பொறுமையைக் கொள்வது அரிதாயிருக்கும். ரூபைஸ்வர்யங்களிற் சிறந்தவர்

களான தேவதைகள் மீது விருப்பம்கொள்ளாமல் பொறுத்திருப்பது அரிது. அதைப்பார்க்கிலும் நீங்கள் எல்லோரும் ஒருமித்துப் பொறுத்திருந்தது மிகவும் அரிது. புத்திரிகளே! தானத்திலும், யஜ்ஞத்திலும், ஸத்யத்திலும், கீர்த்தியிலும், தர்மத்திலும், உண்டாகின்ற பயன்கள்யாவும் பொறுமையில் இரண்டு மடங்கு அதிகமாகின்றன. ஆகையினுல், பொறுமை ஒன்றுதான் தானமும், யஜ்ஞமும், ஸத்யமும், கீர்த்தியும், தர்மமும் என்று சொல்லப்படும். பூமியின் பொறுமையினுல் தான் ஸ்தாவர ஜங்கம ரூபமான ஜகத்துக்கள் அதில் நிலைபெற்றிருக்கின்றன' என்று மொழிந்தான்.

பராக்ரமத்தில் தேவர்களோடு ஒத்திருக்கும் அவ்வரசன் இங்ஙனம் மொழிந்து தன் புதல்விகளுக்கு விடைகொடுத்தனுப்பிக் காரியங்களை ஆலோசிப்பதில் வல்லவனுதுபற்றி அப்பெண்களை விவாஹஞ்செய்து கொடுப்பதற்குத் தக்க தேசகாலங்களையும் தகுந்த புருஷனையும் தேட வேண்டியதற்காக மந்திரிகளோடு கூடி ஆலோசனைசெய்யத் தொடங்கினுன். அப்பொழுது ப்ரஹ்மசாரியாராய் நல்ல ஆசாரமுடைய சூளி என்னும் முனிவர் வேதங்களிற் சொல்லியபடி தவஞ்செய்து கொண்டிருந்தார். ஊர்மிளையென்னும் அப்ஸரஸ்த்ரீயின் பெண்ணுகிய ஸோமதையென்னும் ஒரு கந்தருவப்பெண் அவ்விடம் வந்து தவஞ்செய்யும் அம் முனிவர்க்குச் சுஶ்ரூஷை செய்துகொண்டிருந்தாள். ராமா! உனக்குச் சுபமுண்டாகவேண்டும். தர்மிஷ்டையாகிய அந்த ஸோமதையென்பவள் வணக்கத்துடன் அம் முனிவர்க்கு ஸமயமறிந்து சுஶ்ரூஷை செய்துகொண்டு வஸித்திருந்தாள். பின்பு சிலகாலஞ் சென்றபிற்பாடு அம்முனிவர் ஸோமதையின் சுஶ்ரூஷையில் ஸந்தோஷமடைந்தார்.

ரகுநந்தன! அவளுடைய சுஶ்ரூஷை பரிபக்வ மாகும்படியானகாலம் வர, முனிவர் அவளை நோக்கி 'நான் உன் சுஶ்ரூஷையினால் ஸந்தோஷமடைந்தேன். உனக்கு மங்களமுண்டாகவேண்டும். உனக்கு நான் செய்யவேண்டிய ப்ரியம் யாது? சொல்' என்று கேட்டதற்கு அந்தக் கந்தருவப்பெண் அம்முனிவர் ஸந்தோஷமடைந் திருப்பதைக்கண்டு தானும் ஆநந்தமடைந்து அவரை நோக்கிப் பேசுவதில் தனக்குள்ள வல்லமை விளங்கும்படி மதுரமான ஸ்வரத்துடன் 'தார்மிகசிரோமணீ! தங்கள் ப்ரஹ்ம தேஜஸ்ஸினால் யாவரையும் அதிசயித்து நிற்கிறீர்கள். தங்கள் ப்ரஹ்மதேவனோடொத்தவர்; மிகத் தவம்பொருந்தி விளங்குகின்றவர். இப்படிப்பட்ட தாங்கள் ப்ரஹ்ம சக்தியுடன் கூடின தங்களுக்குச் சமானமான ஒரு புதல்வனை எனக்குத் தரவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன். நான் புத்தியில்லாதவள். தங்களுக்குச் சுபமுண்டாகட்டும். என்னை விதவை என்று நினைக்கவேண்டாம். ஏனென்றால், இதுவரையிலும் எனக்குப் புருஷன்கிடையாது. இப்பொழுதும் நான் ஒருவனுக்குப் பாரியையா யிருக்கவில்லை. ஆனால், நான் நிஷ்டையுடன் ப்ரஹ்மசர்யங் கொண்டிருக்கிறேன். இப்படிப்பட்ட நான் தங்களைச் சரணமடைகிறேன். ஆகையால் தங்கள் தபோமகிமையைக் கொண்டு எனக்கு ஒரு புதல்வனைத் தரவேண்டும்' என்று சொன்னாள்.

அந்த ப்ரஹ்மர்ஷியும் அவளிடத்தில் அநுக்கிரகஞ்செய்து தன் மனத்தினின்றும் பிறந்த ப்ரஹ்மதத்தன் என்னும் உயர்ந்த புதல்வனை அவளுக்குத்தந்தார். அந்தக் கந்தருவி க்ஷத்ரியஜாதி யானது பற்றி அவள் பிள்ளையாகிய அந்த ப்ரஹ்மதத்தனும் ராஜாவாயினான். குசநாபன் தன் பெண்களின் விவா

ஹத்தைக் குறித்து ஆலோசனை செய்யும் சமயத்தில் ஸோமதையின் புதல்வனான ப்ரஹ்மதத்தன் என்னும் அவ்வரசன் ஸ்வர்க்கத்தில் இந்திரன்போல் தான் காம்பில்யா நகரத்தில் வஸித்திருந்தான். காகுத்ஸ்த வம்சத்திற் பிறந்தவனே! அப்பொழுது தார்மிகனாகிய குசநாபன் ப்ரஹ்மதத்தனுக்குத் தனது புதல்விகள் நூறுபேரையும் கொடுக்க நிச்சயித்து மனக்கவலையற்று மிக்க ஒளி விளங்குகின்ற அந்த ப்ரஹ்மதத்தனை வரவழைத்து மனத்தில் அளவற்ற ஆநந்தம் பிறக்கப் பெண்கள் நூறுபேரையும் அவனுக்கு விவாஹஞ்செய்து கொடுத்தான். தேவேந்திரனைப்போல விளங்குகின்ற அந்த ப்ரஹ்மதத்த மஹீபாலன் அம்மாதர்கள் அனைவரையும் க்ரமத்துடன் பாணிக்ரஹணஞ் செய்துகொண்டான்.

அவ்வரசன் அவர்களைக் கையிற் பிடிக்கும்பொழுதிலேயே அப்பெண்களின் கூன்முற்றிலும் நீங்கி மனவருத்தம் தொலைந்து காந்திவெள்ளத்தினால் அதிகமாய் ப்ரகாசித்தார்கள். குசநாபன் வாயுவினால் விடுபட்டு விளங்குகின்ற தன் பெண்களைப் பார்த்து உயர்ந்தவரன் கிடைத்ததைப்பற்றி மேன்மேலும் ஆநந்தஸாகரத்தில் அமிழ்ந்தினான். இப்படி விவாஹஞ் செய்துகொண்ட ப்ரஹ்மதத்தனைக் குசநாபமஹீபதி அவனுடைய பத்நிகளோடும் புரோஹிதர்களோடும் காம்பில்யா நகரத்துக்கு அனுப்பினான். ஸோமதையும் ஸந்தோஷம் மேலெழ அம்மாதரசிகளைக் கைக்கொண்டு அடிக்கடி தடவிக்கொடுத்துக் குசநாபனைக் கொண்டாடித் தன்புதல்வனுடைய அநுரூபமாகிய விவாஹத்தையும் தனது நாட்டுப் பெண்களையும் தக்கபடி அபிநந்தனஞ் செய்தாள்.

முப்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

விஶ்வாமித்ரர் கௌசிகீ நதி ஆகிய இவர்களின் விருத்தாந்தம்.

ராகவனே! அந்த ப்ரஹ்மதத்தன் அங்ஙனம் மணம் புரிந்து தன் பட்டணத்துக்குச் சென்றபிற்பாடு குசநாபன் தனக்குப் பிள்ளையில்லாமையினால் பிள்ளையைப் பெறுவதற்காகப் புத்ரகாமேஷ்டி யென்னும் யாகத்தைச் செய்தான். அந்தக் குசநாபன் யாகம் செய்துகொண்டிருக்கும் ஸமயத்தில் ப்ரஹ்ம குமாரனும் மஹோதாரனும் அவன் பிதாவுமாகிய குசன் என்பவன் தன் புத்திரனை நோக்கிப் ‘புத்ரனே! மிகவும் தார்மிகனாகிக் குணங்களில் உன்னை ஒத்தவனுமாகிய புதல்வன் உனக்குப் பிறக்கப் போகிறான். அவன் காதி என்று பெயர் பெறுவான். அவனைப் பெற்று நீ உலகத்தில் நிறைந்த புகழைப் பெறுவாய்’ என்று மொழிந்து ஆகாச மார்க்கத்தினால் சாஶ்வதமாகிய ப்ரஹ்மலோகத்துக்குச் சென்றான்.

பின்பு சிலகாலம் சென்றபிற்பாடு மிகுந்த மதியுள்ள அக்குசநாபனுக்கு அவன் தகப்பன் குசன் சொல்லியபடி காதி யென்னும் பெயர் பெற்ற ஒரு குமாரன் பரமதார்மிகனாகி க்ருதாசி யென்னும் அப்ஸர ஸ்த்ரீயினிடத்தில் ஜனித்தான். காகுத்ஸ்த குலாலங்காரனே! ராமா! பரமதார்மினாகிய அந்தக் காதியே எனக்குத் தகப்பன். குசவம்சத்தில் பிறந்தேனாகையால் என்னைக் கௌசிகன் என்பர்கள். ராமா! எனக்கு ஸத்யவதி என்ற ஒரு சகோதரியுண்டு. அவள் எனக்கு முன்பிறந்தவள். மேலும் அவள் விரதங்களை அநுஷ்டித்துப் பெயர் பெற்றவள். அவள் ரிசீகரென்னும் முனிவரை மணம்புரிந்தனள். அந்த ஸத்யவதி தன் பர்த்தாவாகிய ரிசீக முனிவரை நன்றாய் அநுசரித்து மிக்க வைபவம்பொருந்தி அவ்வைபவத்தினால் சரீரத்துடன்

ஸ்வர்க்கத்துக்கு சென்ருள். யாவரையும் அதிசயித்த அம்மஹாநுபாவையான என்சகோதரி இப்பூமியில் கௌசிகி யென்னும் ஒரு மஹாநதியாகவும் உலாவி வருகிருள். ஏனென்ருல், அவள் உலகங்களுக் கெல்லாம் ஐஹிக ஆமுஷ்மிக பலன்களைப் படைக்க உத்தேசித்துப் பரிசுத்தமான ஜலப்ரவாஹத்துடன் திவ்யநதியாகி ஸ்வர்க்கத்திலிருந்து ஹிமாலயமென்னும் மலையின் அருகில் பெருகி வருகிருள்.

அக்கௌசிகி ஹிமாலயத்தின் அருகில் பெருகியோடுவதனுல் நானும் கூடப் பிறந்தமையா லுண்டாகும் ஸ்நேகத்தை அநுசரித்து அம்மலைச்சாரலில் எப்பொழுதும் வஸித்து வருகிறேன். அந்த ஸத்யவதி மிகவும் பரிசுத்தையா யிருப்பவள்; தன் பேருக்குரியபடி ஸத்தியத்திலும நிலைநின்றிருப்பவள்; கணவனைக் கைவிடாதிருப்பவள்; மஹாபாக்கியமுடையவள். அந்த ஸத்யவதியே இப்பொழுது கௌசிகியென்று பெயர் பெற்று நதிகளிற் சிறந்து விளங்குகிருள். நான் யாக நியமத்தில் ஊன்றி அக்கௌசிகி நதியை விட்டு ஸித்தாச்ரமத்துக்கு வந்து அதில் உன் தேஜஸ்ஸினுல் காரியஸித்தியையடைந்தவனுயினேன். நீண்டதோள்களை யுடையவனே! ப்ரஸக்தி நேரிட்டதுபற்றி இங்ஙனம் என் பிறப்பையும் என் வம்சோற்பத்தியையும் தெரிவித்தேன். நீ என்னைக் கேட்ட இத்தேசத்தின் வைபவத்தையும மொழிந்தேன்.

காகுஸ்தனே! அகாலமாய்விட்டது. கண்வளர வேண்டியபொழுது வந்தபடியினுல் இனிக் கண்வளருவாயாக. உனக்கு மங்களமுண்டாகட்டும். அதிகமாய் விழித்துக் கொண்டிருந்தால் வழிநடப்பதற்கு விரோதம் வரும். விருக்ஷங்கள் பக்ஷி ஸஞ்சாரம் இல்லாமைபற்றிச் சலனமில்லாமல் இருக்கின்றன. மிருகங்களும் பக்ஷிகளும்

தங்கள் தங்கள் இடங்களில் அடங்கி நித்திரை செய்கின்றன. திசைகளில் இரவினால் உண்டாகின்ற இருள் நிரம்பி யிருக்கின்றது. மாலைச்சந்தியும் மெல்லமெல்லக் கடந்து செல்கின்றது. ஆகாயம் அஶ்வினி முதலிய நக்ஷத்ரங்களாலும் மற்றுமுள்ள நக்ஷத்ரங்களாலும் நெருங்கப்பெற்றுத் தேஜோமயமான கண்களால் எங்கும் சூழப்பட்டதுபோல் ப்ரகாசிக்கின்றது. சந்திரன்குளிர்ந்த கிரணங்களை வீசி உலகத்தின் இருளை ஓடச்செய்து தனது நிலவினால் ஸமஸ்த ப்ராணிகளுடைய உள்ளத்தையும் உல்லாஸப்படுத்திக்கொண்டு உதிக்கிறான். இரவில் சஞ்சரிக்கும் தன்மையுள்ள கோட்டான் முதலான ஜந்துக்கள் இங்குமங்கும் நடமாடிக்கொண்டிருக்கின்றன. மாம்ஸத்தைப் புசிப்பவர்களும் பயமுறுத்துந் தன்மையர்களுமாகிய யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் ஆங்காங்கு ஸஞ்சரித்துக்கொண் டிருக்கிறார்கள்' என்று மஹா தேஜஸ்வியாகிய அம்முனிவர் மொழிந்தார்.

கூடவிருந்த முனிவர்கள் அனைவரும் 'நல்லது நல்லது' என்று கொண்டாடிக் 'குசிகர்களின் இவ்வம்சமானது மிகவும் பெருமை பொருந்தியது. அஃது எப்பொழுதும் தர்மத்தில் நிலைநின்று ப்ரகாசிப்பது. குச வம்சத்திற் பிறந்தவர் யாவரும் மிக்க மகிமை பொருந்தி மானிடர்களுக்குள் ஒப்பின்றி விளங்கி ப்ரஹ்மதேவனோடு ஒத்தவர்களா யிருப்பார்கள். அவர்களில் மஹா கீர்த்தி பொருந்திய இந்த விஶ்வாமித்ரர் விசேஷித்தவர். நதிகளிற் சிறந்த கௌசிகியும் இவர் குலத்தை விளங்கச் செய்கிறாள்' என்று புகழ்ந்தார்கள். கௌசிகர் ஸந்தோஷ வெள்ளத்தில் மூழ்கி அஸ்தமித்த ஸூர்யன்போல நித்திரை செய்யத் தொடங்கினார். ராகவனும் லக்ஷ்மணனும் மிகவும் அற்புதத்தை விளைவிப்பதாகிய அந்த வ்ருத்தாந்தத்

தைக்கேட்டு ஆச்சரியமடைந்து அம்முனிவரைக் கொண்டாடி வழி நடந்து வந்தஶ்ரமத்தினல் நித்திரை போனர்கள்.

முப்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

கங்காபார்வதிகளின் வ்ருத்தாந்தம்

விஶ்வாமித்ரமுனிவர் அன்றிரவெல்லாம் சோணநதிக்கரையில் மற்றுமுள்ள மஹர்ஷிகளோடுகூடப் படுத்திருந்து பொழுது விடிந்தவுடன் ராமனை நோக்கி 'ராமா! பொழுது நன்ருய் விடிந்து விட்டது. காலைச் சந்தி நடக்கின்றது; எழுந்திரு! உனக்கு மங்களமுண்டாகட்டும். நீ ப்ரயாணஞ்செய்ய முயல்வாயாக' என்ருர். ராமனும் அவ்வார்த்தையைக் கேட்டு எழுந்திருந்து விடியற்காலத்திற் செய்யவேண்டியவைகளை விதிப்படி நிறைவேற்றி ப்ரயாணஞ்செய்யும் விருப்பத்துடன் முனிவரை நோக்கி 'அந்தணர்களிற் சிறந்தவரே! பரிசுத்த ஜலமுடைய இச் சோணநதியானது இப்பொழுது ஜலப்ரவாஹம் குறைந்து ஆழமில்லாமல் மணற்குன்றுகளால் அழகு பொருந்தி விளங்குகின்றது. ஆனதுபற்றி இதை எளிதில் தாண்டக்கூடும். ஆயினும், எந்த வழியாக நாம் இதைத் தாண்டவேண்டும்' என்று கேட்டான்.

அதைக்கேட்டு விஶ்வாமித்ரரும் 'இவ்வழியில் இதைத்தாண்டலாமென்று நான் உத்தேசங் கொண்டிருக்கிறேன். இவ்வழியாகத்தான் மஹர்ஷிகளும் தாண்டுகின்ருர்கள்' என்று மொழிந்தார். உடனே மஹர்ஷிகள் அனைவரும் ப்ரயாணமாய்ப் புறப்பட்டு நடுவில் பலவிதமான வனங்களைப் பார்த்துக்கொண்ட வண்ணமே வழி நடந்து சென்ருர்கள். அவர்கள் வெகுதூரஞ் சென்று பகலில்

பாதி கடந்து மத்யாஹ்னமாகும்பொழுது ரிஷிகளால் அடையப்பெற்று நதிகளிற் சிறந்து விளங்குகின்ற கங்கையைக் கண்டார்கள். பவித்ரமான ஜலப்ரவாஹத்துடன் கூடி ஹம்ஸம் ஸாரஸம் முதலிய ஜலபக்ஷிகளால் சூழப்பட்டு அழகாய் விளங்குகின்ற அந்நதியைக்கண்டு முனிவர்கள் அனைவரும் ராம லக்ஷ்மணர்களும் ஸந்தோஷமடைந்தார்கள். பின்பு யாவரும் அந்தக் கங்கைக் கரையில் தங்குவதற்கு ஓர் இடத்தை ஏற்பாடு செய்துகொண்டு ஸ்நானம் செய்து க்ரமப்படி அகமர்ஷண ஸூக்தம் முதலிய மந்த்ரங்களை ஜபித்து தேவர்களுக்கும், பித்ரு தேவதைகளும், ரிஷிகளுக்கும் தர்ப்பணஞ் செய்து பஞ்ச மஹாயஜ்ஞங்களென்று சொல்லப்படுகின்ற வைதிகச் சடங்குகளையும் நிறைவேற்றி அந்த ஹோமத்தில் மிகுந்த அமிர்தம்போன்ற ஹவிஸ்ஸென்கிற அன்னத்தைப் புசித்து மனக்களிப்புற்று நிர்மலமாகிய அக்கங்கைக் கரையில் மஹாத்மாவாகிய விஸ்வாமித்ர முனிவரைச் சுற்றிலுஞ் சூழ்ந்து உட்கார்ந்தார்கள்.

அப்பொழுது ராமனும் அவ்விடஞ்சென்று உட்கார்ந்து விஸ்வாமித்ரரை நோக்கி 'மஹாநுபாவரே! கங்காநதி மூன்று மார்க்கங்கொண்டு ப்ரவஹித்த வ்ருத்தாந்தத்தைக் கேட்க விரும்புகிறேன். அது மூவுலகங்களையும் ஆக்ரமித்து நத நதீபதியாகிய ஸமுத்ரத்தை எப்படியடைந்தது? அதைச் சொல்லவேண்டும்?' என்று கேட்டான். விஸ்வாமித்ரர் ராமனது சொற்களால் ஏவுண்டு கங்காநதி பிறந்த விதத்தையும், அது மூன்று லோகங்களையும் ஆவரித்துக்கொண்டு வளர்ந்த ப்ரகாரத்தையும் இவ்வனம் சொல்லத் தொடங்கினர்.

பொன் வெள்ளி முதலான லோஹ தாதுக்களுக்கு நிதியாகி ஹிமாலயமென்று சொல்லப்படுகின்ற பர்வதரா

ஜன் ஒருவனுண்டு. அவனுக்கு உலகத்தில் ஒப்பற்ற அழகு பொருந்திய கன்னிகைகள் இருவர் இருந்தார்கள். மேரு பர்வதத்தின் பெண்ணும் ஹிமாலய மலைக்குப் பத்னியும் நுட்பமான இடையையுடையவளும் அழகு அமைந்தவளுமான மனோரமை யென்பவள் அவ்விரு பெண்களுக்குந் தாய். அம்மனோரமையென்பவளிடத்தில் ஹிமவானுக்குக் கங்கை மூத்த பெண்ணுகப் பிறந்தாள். இரண்டாவது பெண்ணுக உமை யென்பவள் உண்டாயினுள். தேவதைகள் அனைவரும் தங்களுக்குள்ள ஒரு காரியத்தை நிறைவேற்றும் பொருட்டு, ஹிமவானிடம் சென்று த்ரிபதகை யென்னும் பெயர் பெற்ற கங்கையைக் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். பர்வதராஜனுகிய ஹிமவானும் யாசகர்கள் கேட்டதை மறுக்கவொண்ணுதென்று தர்மத்தில் மனஞ்செலுத்தி மூவுலகங்களுக்கும் நன்மையைச் செய்ய விரும்பித் தன் புத்திரியாகிய கங்கையைத் தேவர்களுக்குத் தந்தான். அவள் உலகங்கள் அனைத்தையும் பரிசுத்தமாக்குந் தன்மையுடையவள். தான் நினைத்தபடி எவ்வழியிலும் ப்ரவாஹங்கொள்ளவல்லவள். தேவதைகள் உலகங்களுக்கு நன்மையைச் செய்யும் பொருட்டு அக்கங்கையை அழைத்துக்கொண்டு தங்கள் இஷ்டம் நிறைவேறினவர்களாய் மனக்களிப்புடன் சென்றுர்கள்.

ரகுநந்தனு! அந்த ஹிமானுடைய மற்றொரு பெண்ணுகிய உமையென்னும் கன்னிகை கடும் விரதத்தைக் கைக்கொண்டு தவமே தனமென்று நினைத்துப் பரமசிவனைக் குறித்துத் தவஞ்செய்துகொண்டிருந்தாள். அங்ஙனம் கடுந்தவம் புரிந்து உலகம் அனைத்தும் வணங்கும்படி விளங்கிய தன் பெண்ணுன உமாதேவியை அப்பர்வத ராஜனுன ஹிமவான் அநுரூபனுகி அருள்புரிந்து

வந்த சிவபெருமானுக்கு மனைவியாகக் கொடுத்தான். ராகவனே! நதிகளிற் சிறந்த கங்கையும் உமாதேவியும் உலகங்களில் மிகவும் பெருமைபெற்றவர்கள்; பர்வதராஜனாகிய ஹிமவானுடைய பெண்கள். அழகான நடையுள்ளவர்களிற் சிறந்தவனே! இங்ஙனம் இக்கங்காநதி பிறந்த விதத்தை மொழிந்ததேன். இனி இந்நதி மூன்றுமார்க்கங்களைப் பெற்ற விதத்தையும் சொல்லுகிறேன். இக்கங்கை முதலில் ஆகாசமார்க்கத்திற் சென்றாள். பாபமின்றியும் அழகாய் விளங்கியும் வற்றாத வெள்ளங்கொண்டும், பர்வதராஜன் மகளாகியும் விளங்குகின்ற இந்நதி தேவலோகத்திற்சென்று தேவநதி யென்னும் பெயர்பெற்றாள்.

மூப்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

பார்வதி விருத்தாந்தம்.

விஸ்வாமித்ரமுனிவர் உரைத்ததைக்கேட்டு வீரர்களாகிய ராமலக்ஷ்மணர்கள் அக்கதையைக்கொண்டாடித் திரும்பவும் "அந்தணரிற் சிறந்தவரே! பர்வதராஜனாகிய ஹிமவானுடைய மூத்த பெண்ணான கங்காதேவியின் வ்ருத்தாந்தம் மிகவுஞ் சிறப்புள்ளது. தாங்கள் அதில் கொஞ்சம் மாத்திரம் சொல்லியிருக்கிறீர்கள். எங்களுக்கு ஸ்வர்க்கத்திலும் பூமியிலும் நடந்த அந்தக் கங்கையின் எல்லா வ்ருத்தாந்தங்களையும் ஸவிஸ்தாரமாகச் சொல்லவேண்டும். உலகங்களைப் பாவனமாக்குந் தன்மையுள்ள கங்காநதி மூன்று மார்க்கங்களாய்ப் பெருகுவதற்குக் காரணம் என்ன? த்ரிபதகையென்ற இந்த நதி எந்த உயர்வான காரியஞ் செய்ததனால் நதிகளிற்சிறந்ததென்று கியாதியடைந்தது; அதை எங்களுக்குச் சொல்லுங்கள்"

என்றுகேட்டார்கள். அதற்கு அந்தத் தபோதனர் தெய்வலோகத்திலும் மனுஷ்யலோகத்திலும் நடந்த அக்கங்கையின் எல்லா வ்ருத்தாந்தங்களையும் ஸவிஸ்தாரமாக ரிஷிக்கூட்டங்களுக்கு நடுவில் சொல்லத் தொடங்கினர்.

''ககுஸ்த வம்சத்திற் பிறந்த ராமா! முன்பு பரமசிவன், பார்வதியை மணம்புரிந்து அப்பார்வதீ தேவியைப் பார்த்துத் தான் தபோ நிஷ்டனாயிருந்தும் மன்மத பாணங்களால் அடியுண்டு மனமயங்கி அவளோடு ரதிகேளிசெய்யத் தொடங்கினன். பகைவரைத் தபிக்கச்செய்கின்ற பராக்ரம சாலியே! மன்மத க்ரீடையில் தேவமானத்தினல் நூறுண்டுகள் நடந்தும் அச்சிவபிரானுக்குப் பார்வதியினிடத்தில் புத்திரன் உண்டாகவில்லை. பின்பு நான்முகன் முதலிய வானவர் அனைவரும் பார்வதியினிடத்தில் பிறக்கும் புதல்வனைப் பொறுக்க வல்லவன் எவனென்று ஆலோசித்து அதற்கு எப்படியாவது தடைசெய்யவேண்டுமென்று உத்தேசங்கொண்டு அனைவரும் சிவபிரானிடம் வந்து தலைவணங்கி நமஸ்காரஞ்செய்து 'வானவர்க்கரசரே! தாங்கள் உலகங்களுக்கு ஹிதத்தைச் செய்யும் தன்மையுடையவர். ஆகையால், தங்கள் பாதாரவிந்தத்தில் விழுந்து வேண்டிக்கொள்கிற எங்கள்மீது அருள்புரிந்து ரக்ஷிக்கவேண்டும். தேவாதி நாதனே! தங்கள் வீரியத்தினுற் பிறக்கும் புதல்வனை உலகங்கள் தரிக்கமாட்டா. ஆகையினல் தாங்கள் இச்செயலை விட்டு வேதங்களிற் சொல்லியபடி யோகத்தில் முயன்று பார்வதி தேவியுடன் கூடித் தவம்புரியவேண்டும். மூவுலகங்கட்கும் நன்மை உண்டாகும் பொருட்டுத் தங்கள் வீரியத்தைத் தேஜோமயமான தங்கள் சரீரத்திலேயே நிறுத்தி அடக்கிக் கொள்ளவேண்டும். வெளிவிடக்கூடாது. இவ்வுலகங்கள் அனைத்தையும்

காப்பாற்றுங்கள்! உலகங்களை ஒழிக்கமுயல்வது தங்களுக்குத் தருமமன்று' 'என்று சொன்னார்கள்.

தேவதைகளினுடைய அந்த மொழியைக் கேட்டு உலகங்களுக்குக் கடவுளாகிய சிவபெருமான் அந்தத்தேவதைகளைநோக்கி 'என் வீரியத்தை உங்கள் சொற்படி நான் என் சரீரத்திலேயே அடக்கிக்கொள்கிறேன். பார்வதியும் அப்படியே தனது சுக்ல சோணிதங்களைத் தனது சரீரத்திலேயே நிறுத்திக்கொள்ளுவாள். தேவதைகளே! உலககம் யாவும் ஸுகத்துடன் வாழ்ந்து வரட்டும். வானவர்களே! நான் என்னுடைய ரேதஸ்ஸை உள்ளேயே அடக்கிக்கொள்வேன். ஆனால், அதில் சிறிது பாகம் மாத்திரம் ஸ்தானத்திலிருந்து நழுவி வெளிநோக்கிவிட்டது. ஆகையால், அங்ஙனம் நழுவின பாகத்தை மாத்திரம் விட்டுவிடுகிறேன். என் ரேதஸ்ஸில் ஸ்தானத்தினின்றும் நழுவினபாகம் தேஜோமயமானது. யாவராலும் பரிக்கமுடியாதது. தேவர்களே! உங்களில் அப்படிப்பட்ட'எனது ரேதஸ்ஸைப் பரிக்கவல்லவன் யார்? அதை,எனக்குச்சொல்லுங்கள்'' என்று மொழிந்தார்.

தேவதைகள் அவ்வெருத்துக் கொடியோனை நோக்கித் ''தேவா! தங்கள் ரேதஸ்ஸை இந்தப் பூமி தரிக்க வல்லது'' என்று சொன்னார்கள். பின்பு உருத்திரனும் தேவர்கள் சம்மதத்தின்மீது தன் வீரியத்தைப் பூமியில் விட்டார். அவ்வீரியம் மலைகளும் காடுகளுமாகிய பூமியெங்கும் நிரம்பிவிட்டது. பிறகு தேவதைகள் அந்த ரேதஜஸ்ஸு பூமிமுழுவதும் பரந்துவருவதைக்கண்டு பயந்து அக்னிதேவனைப் பார்த்து அவன் முதலில் பயப்பட்டபோதிலுஞ்சமாதானம் செய்து 'நீ வாயுவுடன்கூடி இந்தச் சிவரேதஸ்ஸைத் தாங்கு! இல்லாவிட்டால் உல

கம் அழிந்துபோகும்;' என்று சொன்னார்கள். அவ்வண்ணமே அக்னியும் அந்த ரேதஸ்ஸைத் தாங்கி வியாபித்திருக்கையில் அது வெள்ளிமலையாயிற்று. பின்பு காலவசத்தினால் அது நாணற்காடாகவும் தோன்றி அக்னியையும் ஆதித்யனையும் நிகர்த்த ஒளியுடன் விளங்கிற்று. அந்த நாணற்காட்டில்தான் கிருத்திகா தேவிகளின் ஸ்தன்யபானஞ் செய்தமையால் கார்த்திகேயனென்றும், அக்னி தரித்திருந்ததுபற்றி அக்னிஸம்பவ னென்றுஞ் சொல்லப்பட்ட ஆறுமுகன் பிறந்தான்.

இப்படிக்கு உருத்திரன் ரதிகேளியினின்றும் வெளிவந்த வீரியத்தைப் பூமியில் விட, அதை அக்னியும் வாயுவுமாக உள் நுழைந்து வியாபித்து நிற்கக்கண்டு, தேவர்களும் ரிஷிகளும் கூட்டங் கூட்டமாக மிகவும் ஸந்தோஷங் கொண்டு பார்வதிக்கும் பரமேஶ்வரனுக்கும் ரதிகேளி ஸுகத்தைக் கெடுத்தமையால் கோபம் உண்டாகாமைக்காகவும் அவன் பண்ணின உபகாரத்துக்காகவும் அவ்விருவரையும் அதிகமாய்ப் பூஜித்தார்கள். பின்பு பார்வதி வானவர்களை நோக்கி 'எனக்குப் பர்த்தாவுடன் ஸம்போகத்தைத் தடுத்த இவ்வநிஷ்டத்திற்கு நீங்கள் ப்ரதிபலனை அநுபவியுங்கள்' என்று சொல்லிக் கோபாவேசத்தினால் ஸூர்யன்போல் எரியைவீசிக் கையில் ஜலத்தை எடுத்துக் கண்கள் இரண்டும் சிவக்கப், புதல்வனைப் பெற விரும்பி முயன்ற எனக்குப் பர்த்தாவுடன் நடந்த ஸம்போகத்தைத் தடுத்தபடியினால் உங்களுக்கும் உங்கள் பாரியைகளிடத்தில் ஸந்தானம் உண்டாகாமற்போகட்டும்; இன்றுமுதல் உங்கள் மனைவிகள் மலடிகளாகட்டும்.' என்று சாபம் கொடுத்தாள்.

பின்பு அவள் பூமியைப்பார்த்து 'அவநியே! நீ ஒருருவத்துடன் நிலைபெறுமல் களர்முதலிய பலவித ரூபங்

கொண்டு பல அரசர்களுக்குப் பத்தினியாயிருப்பாய். நீ மிகவும் கொடிய மதியுடையவள். ஆனதுபற்றியே எனக்குப் புத்திரன் உண்டாக ஸம்மதிக்காமற் போயினே. ஆகையால் என்னிடமிருந்து நீ சாபம்பெற்று இயற்கை மாறிப் புதல்வனுலுண்டாகும் ஆநந்தத்தை அடையாதிருப்பாயாக' என்ருள். சபிக்கப்பட்ட தேவர்கள் அனைவரும் வெட்கத்தினுல் தலையிராக்க முற்றிருப்பது கண்டு, வானவரேருகிய பரமசிவன் தனக்குள் 'பார்வதியிட்ட சாபத்தை மறுக்கலாகாது; நமது அநுசரர்களாகிய தேவர்கள் படுந்துயரத்தையுங் காணலாகாது' என்று நினைத்து அப்பொழுதே வருணன் பாதுகாக்கின்ற மேற்குத்திசையை நோக்கிச் செல்லத் தொடங்கினுன். அம்மஹாதேவன் ஹிமாலய பர்வதத்தினது வடக்குப் பக்கத்திலுள்ள ஒரு சிகரத்தில் தன் பத்னியாகிய பார்வதியுடன்கூடி எப்பொழுதும் தவஞ் செய்வதற்கு ஸங்கல்பித்துக்கொண்டான். ராமா! பர்வதராஜ புத்திரியாகிய பார்வதியின் வரலாற்றை ஸவிஸ்தரமாக உனக்குச் சொன்னேன். இனிக் கங்காநதியின் ப்ரபாவத்தையும் சொல்கிறேன். நீ லக்ஷ்மணனுடன் கேட்பாயாக.

முப்பத்தாருவது ஸர்க்கம் முற்றிற்று.

குமாரக்கடவுளின் வ்ருத்தாந்தம்.

பரமசிவன் தவம் புரிந்திருக்கையில் வானவர்கள் தங்களுக்கு ஒரு ஸேநாபதி வேண்டுமென்று ரிஷிகணங்களோடுகூடி ப்ரஹ்மதேவனிடம் வந்து சேர்ந்தார்கள். ராமா! அக்னி முதலிய தேவர்கள் அனைவரும் இந்திரனுடன்கூடி மஹாத்மாவாகிய நான்முகனை நமஸ்காரஞ் செய்து 'தேவனே! தாங்கள் முன்பு எங்களுக்கு ஸேநா

பதியாக ஏற்படுத்தின சிவபெருமான் பகைவரை அடக்க வல்லவராயிருந்தும் இப்பொழுது எங்களுக்கு ஸேநாபதியாக இருக்கவில்லை. எங்களுக்குத் தகப்பனைப்போல நன்மையைச் செய்யவல்ல அச்சிவபெருமான் இப்பொழுது ஹிமாலயத்தின் சிகரத்தில் பார்வதியுடன்கூடிப் பெருந்தவம்புரிந்து வருகிறார். இனி உலகத்துக்கு ஹிதமுண்டாகும்பொருட்டுச் செய்யவேண்டிய காரியமெதுவோ அதைத் தாங்கள் செய்யவேண்டும். தாங்கள் எல்லாவற்றையும் அறிந்தவர். தாங்கள்தான் எங்களுக்கு மேலான கதி' என்றுரைத்தார்கள்.

உலகங்களுக்கெல்லாம் பிதாமஹனாகிய நிசைமுகக் கடவுள் தேவர்கள் மொழியைக்கேட்டுச் சிவன் கடுந்தவம் புரிந்து வருகிறான். அவனைத் திருப்பத் தரமில்லை. ஆகையால், அதில் முயல்வது வீண். பார்வதீதேவி தேவதைகளுக்குத் தங்கள் மனைவிகளிடத்தில் ஸந்தானமுண்டாகாதென்று சாபங் கொடுத்ததுபற்றி நீங்கள் உங்களுடைய மனைவிகளிடத்தில் மக்களைப்பெற முடியாது. அத்தேவியின் சாபம் மாற்றக்கூடியதுமன்று. இதிற் சந்தேகமில்லை. ஆனால், இனிக் கதி யெப்படியென்றால், இதோ இவ்வாகாச கங்கையினிடத்தில் அக்னிதேவன் ஒரு புதல்வனை உண்டாகச்செய்வான். அவன் பகைவரை அடக்கவல்லவன். மஹா பராக்ரமம் பொருந்தியவன். அவன் உங்களுக்கு ஸேநாபதியாக விளங்குவான். 'கங்கை இதற்கெப்படிச் சம்மதிப்பாள். பார்வதியும் எப்படிக் கோபியாதிருப்பாள்' என்று ஸந்தேகிக்கவேண்டாம். கங்கை ஹிமவானுடைய மூத்தபெண். அக்கங்காதேவி அக்னிதேவனால் புத்திரனைப் பெறச் சம்மதிப்பாள். தன் தமக்கையினிடம் ப்ரீதிகொண்டு பார்வதியும் அப்புதல்

வனைக் கைக்கொண்டு ஸம்மதியடைவாள். இதற்குச் சந்தேகமில்லை' என்றுசொன்னார்.

ரகுநந்தன! தேவதைகள் அனைவரும் அவ்வயன் மொழியைக் கேட்டுத் தங்கள் கருத்து நிறைவேறிற் றென்று சந்தோஷித்து நான்முகக் கடவுளைப் பூசித்து நமஸ்காரஞ்செய்து பலவகைப்பட்ட லோஹதாதுக்க ளால் அலங்காரம்பெற்ற கைலாசபர்வதத்திற்குச் சென்று ஸேநாபதியாகவல்ல ஒரு புத்திரனை உண்டாக்கும் பொரு ட்டுச் சிவன் வீரியத்தினால் வேறொரு சரீரங்கொண்டு விளங்குகின்ற அக்னிதேவனைப்பார்த்து 'ஓ அக்னியே இது தேவர்களின் காரியம். நீ அதை நிறைவேற்றவேண் டும். அஃது என்னவென்றால், நீ மஹாதேஜஸ்வியாகை யால் பர்வதத்தின் மகளாகிய கங்காதேவியினிடத்தில் உன்னிடமிருக்கின்ற உருத்திரவீரியத்தை விடு' என்று கட்டளையிட்டார்கள். அவன் அப்படியே செய்வதாகத் தேவர்களுக்கு உறுதிமொழி சொல்லிக் கங்காதேவியிடம் வந்து 'தேவி! என்னிடமிருக்கின்ற சிவன் வீரியத்தை வாங்கிக்கொள். இது தேவர்களுக்கு மிகவும் ப்ரியமாயி ருக்கின்றது' என்று சொன்னான். உடனே கங்கை அழ கான திவ்யஸ்த்ரீ வேஷந்தரித்து எதிரேவந்து நின்றாள். அக்னிதேவன் அவளுடைய ஸௌந்தர்யாதிசயத்தைக் கண்டு மோகித்துத் தன்னிடமிருந்த சிவன் வீரியத்தைக் கொடுத்தான். ரகுநந்தன! பின்பு அவ்வீரியம் அக்கங்கா தேவியின் அவயவங்களில் நிறைந்துநின்றது. அங்ஙனம் தரிக்கப்பட்ட அக்னியின் தேஜஸ்ஸானது தன்னை யெரிக் கவே, கங்கை அதைப் பொறுக்கமாட்டாமல் மனம் தத் தளித்துத், தேவர்களுக்கெல்லாம் புரோஹிதனாகிய அவ் வக்னிதேவனை நோக்கித், 'தேவனே! என்னிடத்தில் நீ சொரிந்த சிவபிரானுடைய வீரியமானது எனது அவய

வங்களெங்கும் பரந்து என்னை யெரிக்கின்றது. ஆகையால் நான் அதைத் தரிக்கமுடியாது' என்று சொன்னாள்.

அதைக் கேட்டு, யாகங்களில் தேவதைகளைக் குறித்து ஹோமஞ்செய்யும் ஹவிஸ்ஸை அவர்களுக்கு முகமாய் நின்று உட்கொள்ளுந் தன்மையுடைய அக்னி தேவன் கங்காதேவியைப் பார்த்து, 'இதோ இந்த ஹிமவத் பர்வதத்தினுடைய அருகிலிருக்கின்ற இச்சிறிய மலையில் இந்தக் கர்ப்பத்தை விட்டுவிடு' என்றான். ராமா! அம்மொழியைக் கேட்ட கங்காதேவியும் சோதிவெள்ளங் கொண்டு விளங்குகின்ற அந்தக் கர்ப்பத்தைத் தன் ஸர்வாவயவங்களினின்றும் வாங்கி அப்படியே அம்மலையில் விட்டுவிட்டாள். இங்ஙனம் கங்கையினிடத்தினின்றும் வெளியாகிப் பூமியிற்சென்று உருக்கிக்கொட்டின உயர்ந்த பொற்குழம்புபோல நிர்மலமாகி விளங்குகின்ற அந்தச் சுக்ல சோணிதங்களே சிறந்த தங்கமாகவும், மேலான வெள்ளியாகவுந் தோன்றி விளங்கி நின்றன. அதிலுள்ள க்ஷாரபாகமானது தாம்ரமும் இரும்பும் ஆயின. அதின் அழுக்குப் பாகமானது தகரமும் ஈயமும் ஆயின. இவ்வாறு கங்கையினிடமிருந்து வெளியான சிவபிரானது வீரியம் பூமியில் விழுந்து பலவித லோகங்களாகத் தோன்றி வளர்ந்தது. கங்காதேவி அந்தக் கர்ப்பத்தை விட்டவுடன் வெள்ளிமலையில் முளைத்திருந்த நாணற்காடுகள் அனைத்தும் அவ்வீரியத்தினுடைய சோதிவெள்ளத்தில் ஆழ்ந்து ஸ்வர்ணமாய்விட்டது. புருஷர்களிற் சிறந்தவனே! ஸ்வர்ணம் அப்பொழுது உண்டானபடியினால் அக்னிபோல் நிகுநிகென்று விளங்குகின்ற அம்மேலான ஸுவர்ணமானது ஜாதரூப மென்னும் பெயர் கொண்டதாயிற்று. (ஜாதரூபம் உண்டான

ரூபத்தையுடையது.) அவ்வனத்திலுள்ள புல் மரம் கொடி புதர் முதலியவை அனைத்தும் ஸுவர்ணமயமாயின. கங்கை ரேதஸ்ஸை விட்டபின்பு வீரியத்தில் மிகுந்த குமாரக்கடவுள் உதயமாயினர். உடனே இந்திரன் முதலான தேவர்கள் யாவரும் கிருத்திகா தேவிகளைப் பார்த்து 'நீங்கள் பால் கொடுத்து இந்தக் குழந்தையை வளர்ப்பீர்களாக' என்று கட்டளையிட்டார்கள்.

அவர்கள் தேவர்களுக்கெதிரில் 'இக்குழந்தை நம் மனைவர்க்கும் புத்திரனாகட்டும்' என்று ஏற்பாடு செய்து கொண்டு அந்தச் சிறுவனுக்குப் பால் கொடுக்கத் தொடங்கினார்கள். பின்பு தேவர்கள் 'இக்குமரன் கார்த்திகேயனென்று மூவுலகங்களிலும் கியாதிபெறப்போகிறான். இதற்குச் சந்தேகமில்லை' என்றுரைக்க, அவ்வுரைகளைக் கேட்டுக் கிருத்திகாதேவிகள் அக்னியைப்போல மிகுந்த சோதி வீசும்படி விளங்கிக் கர்ப்பஜலத்தில் விழுந்து கிடக்கின்ற அக்குழந்தையை எடுத்துக்கொண்டு அழுக்கெல்லாம் போகும்படி ஸ்நானஞ் செய்வித்தார்கள். ககுஸ்த வம்சத்திற் பிறந்த வீரனே! அப்பொழுது மஹாபாக்யசாலியாய் அக்னியை நிகர்த்து விளங்கும் கார்த்திகேயனென்கிற குமரன் கங்காதேவியின் உதரத்தில் நிலைபெறாமல் கீழே நழுவி விழுந்ததுபற்றி 'ஸ்கந்தன்' என்று தேவதைகள் பெயரிட்டார்கள். அக்குழந்தையை ஸ்நானஞ் செய்வித்த பின்பு கிருத்திகாதேவிகளுக்கு ஸ்தன்யஞ் சுரந்து பால் அதிகமாய் உண்டாக, அப்பொழுது ஸ்கந்தனும் அவ்வறுவருடைய ஸ்தன்யங்களையும் ஆறு

1. ஸ்கந்தன் 'ஸ்கந்திர் கதிஶோஷணயோ:' என்கிற தாதுவின்மேல் இப்பதம் உண்டாயிருக்கின்றது. அந்தத் தாது கதியைச் சொல்லுமாகையால் இங்குக் கதியாவது கங்கையின் வயிற்றில் நிலைபெறாமல் கீழே விழுகையே யென்று கொண்டு ஸ்கந்தனென்று பேரிட்டன ரென்றுணர்க.

முகங்களைத் தரித்துக்கொண்டு பானஞ்செய்தான். அக் குழந்தை ஒரு பகல் மாத்திரம் முலைப்பால் குடித்துப் பின்பு க்ரமமாக வளர்ந்து வந்து மிக்க மிருதுவான சரீர முடையதாயிருந்தும் சிவன் வீரியத்திற் பிறந்தது பற்றி யாவராலும் தடுக்கவொண்ணுதிருக்கும் தனது பராக்ரமத்தினுல் அஸுரப் படைகளைக் கூட்டங்கூட்ட மாக வென்று விட்டது. பிறகு அக்னி முதலிய தேவர் களெல்லோரும் ஒன்றுகூடி ஆலோசித்து ஒப்பில்லாத ஒளியுடன் விளங்கும் அவ்வாறுமுகக் குமாரனைத் தாங் கள் படைகளுக்கு அதிபதியா யிருக்கும்படி அபிஷேகஞ் செய்தார்கள்.

ராமா! நீ என்னைத் தேவலோகத்தில் நடந்த கங்காதேவியின் வ்ருத்தாந்த மனைத்தும் ஸவிஸ்தர மாகச் சொல்லவேண்டுமென்று வினவினை. குமாரக் கடவுள் உற்பத்தியும் அதைச்சேர்ந்தது. இதை உனக்கு மொழிந்தேன். காகுஸ்தனே! இது பாவத்தைப் போக்க வல்லது. அப்படியே மிகுந்த செல்வத்தையும் தரக் கூடியது. பூமியில் கார்த்திகேயனிடத்தில் பக்தியைச் செய்கின்றவன் ஆயுள் நிரம்பப் பெற்றுப் பிள்ளை பெயரன் முதலிய பந்துவர்க்கங்களுடன் கூடிச் செல்வம் நிரம்பி ஸுகமாக வாழ்ந்திருந்து கடைசியில் அந்த ஸ்கந்தனு டைய லோகத்தை அடைவான்" என்று மொழிந்தார்.

முப்பத்தேழாவது-ஸர்க்கம் முற்றிற்று.

ஸகர சக்ரவர்த்தியின் வ்ருத்தாந்தம்.

விஸ்வாமித்ர முனிவர் 'ராமா! முன்பு அயோத் யா நகரத்தில் ஸகரனென்று ஒரு அரசனிருந்தான். அவன் தர்மத்தில் விருப்பங்கொண்டு பகைவரையடக்கும்

வல்லமை யமைந்து மஹாவீரனாகி விளங்கினான். அவன் பிள்ளையில்லாமலிருந்ததுபற்றிப் பிள்ளையைப்பெறவேண்டுமென்று விரும்பினான். அம்மன்னவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். அவர்களில் ஒருத்தி விதர்ப்பதேசத்தரசன் மகளாகிய கேசினியென்னும் பெயர்கொண்டவள். தர்மத்தில் நிலை நின்றவள்; ஸத்யம் தவறாதிருப்பவள்; ஸகரனென்ற அம்மஹா ராஜனது பாரியைகளிருவரிலும் மூத்தவள். மற்றொருத்தி அரிஷ்டநேமியென்று சொல்லப்பட்ட காஸ்யப மஹர்ஷியின் புதல்வி. ஸுமதி யென்று பெயர் கொண்டவள்; அழகினால் இப்பூமியிலெங்கும் ஒப்பற்றிருப்பவள். அவள் ஸகர மஹாராஜனுக்கு இளைய மனைவியாக வாழ்க்கைப் பட்டிருந்தாள்.

அவ்வரசன் அம்மடந்தைகள் இருவரோடுங்கூடிப் பிருகு மஹர்ஷி ஸ்நாநஞ்செய்து வருவதுபற்றிப் பிருகுப்ரஸ்ரவணமென்னும் பெயர்பெற்ற ஹிமாலயத்தின் அருகிலிருக்கிற ஒரு சிறிய பர்வதத்தையடைந்து அங்குத் தவஞ்செய்து கொண்டிருந்தான். இங்ஙனம் அம்மன்னவனுக்குத் தவத்தில் நூறு வருஷங்கள் நிரம்பின. பின்பு ஸத்யவான்களில் மேன்மை யடைந்திருக்கின்ற பிருகு மஹர்ஷியானவர் அவர்களால் நன்கு ஆராதிக்கப்பட்டு ஸந்தோஷமடைந்து அம்மன்னவன் எதிரில் வந்து பாபமற்றவனே! உனக்கு வேண்டியவரையில் அளவின்றிப் புத்ரர்கள் உண்டாவார்கள். ஆண்சிங்கமே! அவர்களால் உன் கீர்த்தி ஒப்பின்றி உலகமெங்கும் பரவப்போகின்றது. உன் மனைவிகளில் ஒருத்தி வம்சத்தை விருத்திசெய்ய வல்ல ஒரு புதல்வனைப் பெறுவாள். மற்றொருத்தி அறுபதினாயிரம் புதல்வர்களைப்பெறுவாள்' என்று வரமளித்தனர்.

மஹாத்மாவாகிய பிருகு மஹர்ஷியை அப்பொழுது ஸகரன் மனைவிகள் இருவரும் ஆராதித்து மிகுந்த ஸந்தோஷத்துடன் கைகளைக் கூப்பிக்கொண்டு 'ப்ராஹ்மணோத்தமா! எங்களில் எவள் ஒருவனைப் பெறுவாள். பல பிள்ளைகள் எவளுக்குப் பிறப்பார்கள். இதை கேட்க விரும்புகின்றோம். தாங்கள் யாருக்கு எதைச் சொல்லுகின்றீர்களோ, அது அப்படியே தப்பாமல் நடப்பது நிச்சயம்' என்று வேண்டிக்கொண்டார்கள். தார்மிகராகிய அம்மாமுனிவர் அம்மொழிகளைக் கேட்டு அவ்விருவரையும் நோக்கி 'உங்களில் ஒருத்தி ஒரு புதல்வனை விரும்பினால் வம்சத்தை விருத்திசெய்யவல்ல ஒரு புதல்வனே உண்டாவான். மற்றொருத்தி பலரைவிரும்பினால் மிகுந்த பலமுடையவர்களும், சிறந்த கீர்த்தியமைந்தவர்களும், பரந்த உத்ஸாஹம் படைத்தவர்களுமாகிய புதல்வர்கள் உண்டாவார்கள். யாருக்கு எந்த வரம் வேண்டும்? இது விஷயத்தில் உங்கள் அபிப்ராயத்தை நீங்களே தெரியச் சொல்லுங்கள்' என்று கேட்டார். ரகுகுல குமாரனே! அதைக் கேட்டுக் கேசினியென்னும் [1]மத்தகாசினி மஹாராஜன் முன்னிலையில் வம்சத்துக்கு மேன்மையை விளைவிக்கும் புதல்வன் ஒருவன் வேண்டுமென்று விரும்பினாள். அப்பொழுது கருடனுடன் பிறந்தவளாகிய ஸுமதியென்பவள் சிறந்தகீர்த்தியும் உயர்ந்த உத்ஸாஹமுமுடைய அறுபதினாயிரம் புதல்வர்களை அடைய ஆசைப்பட்டாள். ரகுகுலத்துக்கு மஹாநந்தத்தை விளைவிக்கின்றவனே! பின்பு அவ்வரசன் மனைவிகளோடுகூட அம்முனிவரை வலம்வந்து தலைவணங்கி நமஸ்காரஞ்செய்து தனது நகரத்துக்குச் சென்றான்.

---

1. மத்தகாசினி - உயர்ந்த பெண்மணி. 'மத்தகாஸிந்யுத்தமா வரவர்ணி நீ' என்று நிகண்டுவிற் சொல்லப்பட்டது.

சிலநாள் சென்றபிற்பாடு முதற் பத்தினியான கேசினி யென்பவள் ஸகரனிடத்து அஸமஞ்சனென்னும் பிள்ளையைப் பெற்ருள்: புருஷோத்தமனே! இரண்டாம் பத்தினியாகிய ஸுமதி யென்பவள் சுரைக்காயைப்போலத் குண்டாயிருக்கிற ஒரு கர்ப்பப் பிண்டத்தைப் பெற்ருள். பின்பு அப்பிண்டம் வெடித்து உடைந்து அதினின்றும் அறுபதினுயிரம் பிள்ளைகள் வெளியானுர்கள். செவிலித் தாய்மார்கள் அப்பிள்ளைகளை நெய்க்குடத்தில் இட்டு வளர்த்து வந்தார்கள். வெகுகாலத்துக்குப் பின்பு அப் புதல்வர் அனைவரும் யௌவனபருவம் அடைந்தார்கள். ஸகரமஹாராஜனது அறுபதினுயிரம் பிள்ளைகளும் யௌவனபருவம் அடைந்து அழகு பொருந்தி விளங்கினுர்கள். ராகவா! ஸகரன் மூத்த குமாரனுகிய அஸமஞ்சனென்பவன் தினந்தோறும் ஊரிலுள்ள பிள்ளைகளையெல்லாம் ஸரயூ நதியின் வெள்ளத்தில் போட்டு அப்பிள்ளைகள் நீரில் மூழ்கிப் பரிதபிப்பதைக் கண்டு சிரித்துக் கொண்டிருப்பான். இவ்வாறு கொடிய செயல்களைச் செய்துகொண்டு பெரியோர்களை வருத்தமுறச்செய்து நகரத்தில் உள்ளவர்களுக்கெல்லாம் தீங்கை விளைவித்ததுபற்றி அப் புதல்வனை ஸகரன் பட்டணத்தில் இருக்கவொட்டாமல் துரத்திவிட்டான். அவ்வஸமஞ்சனுடைய பிள்ளை அம்சுமான் என்பவன். மிகுந்த வீரியம்பொருந்தி உலகமனைத்தும் விரும்பும்படி நற்செய்கைகொண்டு யாவர்க்கும் இன்சொல் உரைப்பவனுயிருந்தான்; ஆண் சிங்கமே! பின்பு ஸகரமஹாராஜனுக்கு யாகஞ் செய்யவேண்டுமென்று எண்ணம் உண்டாயிற்று. அப்பொழுது வேதங்களை அறிந்த அம்மன்னவன் புரோஹிதர்களுடன்கூடி யாகஞ் செய்யத் தொடங்கினுன்.

முப்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸகர சக்ரவர்த்தி அஸ்வமேதஞ் செய்தல்.

ரகுகுல குமாரனாகிய ராமன் விஸ்வாமித்ரர் ஸகர சக்ரவர்த்தி யாகஞ்செய்யத் தொடங்கினானென்ற மாத்திரத்தில் அளவற்ற ஆநந்த மடைந்து அக்னியைப்போல் விளங்குகின்ற அம்முனிவரை நோக்கி 'ப்ராஹ்மணோத்தமரே! தங்களுக்குச் சுபமுண்டாகட்டும். இந்த யாக வ்ருத்தாந்தத்தை ஸவிஸ்தரமாகக் கேட்கவிரும்புகின்றேன். எங்கள் வம்சத்துக்குக் கூடஸ்தராகிய அச்சகர மஹாராஜர் எப்படி யாகஞ்செய்தார். இதைச் சொல்ல வேண்டும்' என்றான். விஸ்வாமித்ர முனிவர் அதைக் கேட்டுத் தன் மனத்தில் 'நாம் எதைச்சொல்ல நினைத்தோமோ அதையே கேட்கிறான். எல்லாவற்றையும் நன்றாக அறிந்தவனாயிருந்தும் ஒன்றும் அறியாதவன்போலக் கேட்கிறான். லோகத்தார்களுக்கு இருப்பதுபோலவே ராமனுக்கும் தன் வம்சத்திற் பிறந்த பூர்விகர்களிடத்தில் கௌரவபுத்தி அதிகமாயிருக்கின்றது. அதைக் கேட்பதில் கௌதூஹலம் உள்ளவனா யிருக்கிறான்' என்று நினைத்து முகமலர்ச்சிகொண்டு ராமனைநோக்கி, 'ராமா! மஹாத்மாவாகிய ஸகர சக்ரவர்த்தியின் வ்ருத்தாந்தத்தை விஸ்தரித்துச் சொல்கிறேன்; கேட்பாயாக.

''சிவபிரானுக்கு மாமனாரான ஹிமாலய பர்வதமும் பர்வதராஜனாகிய விந்திய பர்வதமும் ஒன்றுக்கொன்று நெருங்கி யிருப்பது பற்றியும், அவ்விரண்டுக்கு மிடையில் வேறொரு பர்வதம் மறைவாயிராதது பற்றியும், மிகவும் உயர்ந்திருப்பது பற்றியும், ஒன்றுக்கொன்று பார்த்துக்கொண்டிருப்பதுபோலவிளங்குகின்றன. அவ்விரண்டு பர்வதங்களுக்கும் இடையிலிருக்

கும் தேசமானது யாகஞ் செய்வதற்குப் புண்ய பூமியாய்ச் சிறந்து விளங்குகின்றது. ஆகையால், அம்மத்ய தேசத்தில் தான் ஸகரனது யாகம் நடந்தது. குழந்தாய்! காகுஸ்தனே! ராமா! மஹாரதனென்று பெயர்பெற்று விளங்கின அம்சுமான் ஸகரனது இஷ்டத்தில் நிலைநின்று அப்பொழுது வலிய வில்லைக் கையில் தரித்துக்கொண்டு அவன் யாகத்தில் பூப்ரதக்ஷிணஞ் செய்யத் தொடங்கின குதிரையைக் காத்துக்கொண்டு பின்சென்றான். ஸகர சக்ரவர்த்தி அந்த யாகத்தை நடத்திக் கொண்டிருக்கும் பொழுது இந்திரன் ராக்ஷஸர்களுக்குரிய மாயையைக் கைக்கொண்டு யாவருமறியாமல் வேறொரு சரீரம் பூண்டு உக்த்யம் நடத்தவேண்டிய தினத்தன்று அவன் யாகக் குதிரையை அபகரித்துக்கொண்டு போய்விட்டான்.

மஹாத்மாவாகிய ஸகரசக்ரவர்த்தியின் யாகக்குதிரை அபகரிக்கப்பட்டபொழுது, புரோஹிதர்கள் அனைவரும் யஜமானனாகிய அம்மஹாராஜனைப் பார்த்துக் 'ககுத்ஸ்த வம்சத்திற்பிறந்த ஸகர மன்னவனே! உக்த்யதினத்தினன்று உனது யாகத்தைக் கெடுக்கும்பொருட்டு யாகக் குதிரையை எவனோ வேகமாக அபஹரித்துக்கொண்டு போய்விட்டான். குதிரையைக் கொண்டுபோனவனைக் கொன்று குதிரையைத் திருப்பிக் கொண்டுவரச் செய்! யஜ்ஞத்துக்கு நேர்ந்த இந்த விக்னமானது யாவர்க்கும் அமங்களத்தை விளைவிக்கும். ஆகையால், ஸகர மஹாராஜனே! இந்தயாகம் எப்படிக் கெடுதி நீங்கிக் கிரமப்படி நிறைவேறுமோ, அதைச் சீக்கிரம் செய்வாயாக' என்றார்கள். அரசன் புரோஹிதர்கள் மொழிந்த மொழியைக் கேட்டு அந்த ஸபையில் தன் புதல்வர்கள் அறுப

1. 'ஆர்யாவர்த்தஃ புண்யபூமிர்மத்யம் விந்த்யஹிமாலயோஃ' என்று சொல்லப்பட்டது.

தினுயிரவரையும்பார்த்துப் 'புருஷர்களில் சிறந்தவர்களே! இம்மஹா யஜ்ஞமானது மந்த்ரங்களையெல்லாம் அறிந்து கவும் பரிசுத்தர்களும் மிகுந்த மகிமை அமைந்தவர்களு ாகிய இம்மஹாநுபாவர்களால் நடத்தப்படுகின்றதுபற்றி ராக்ஷஸர் வந்து குதிரையை அபகரித்துக் கொண்டு போகும் வழி ஒன்றும் தோன்றவில்லை. ஆகையால் நீங் கள் உடனே சென்று குதிரையைத் தேடுங்கள்! குழந்தை களே! உங்களுக்கு க்ஷேமம் உண்டாகட்டும். கடல்சூழ்ந்த இப்பூமி முழுவதும் திரிந்து தேடிப்பாருங்கள்! பூமி மிக வும் பரந்து கிடக்கின்றது. நீங்கள் ஒவ்வொருவனும் ஒவ்வொரு யோஜனை தூரம் விழுக்காடு விகிதம் ஏற்படுத் திக்கொண்டு பூமி முழுவதும் திரிந்து தேடிவாருங்கள். பிள்ளைகளே! என் கட்டளை தவருதபடி குதிரையைக் கொண்டு போனவனைத் தேடிச் செல்லுங்கள். அவன் பூமியில் எங்கும் அகப்படாது போவானுயின், அப்படியே திரும்பாமற் சென்று யாகக்குதிரை அகப்படும் வரையில் பூமியைக் கொத்திப் பாருங்கள்! நான் யாக தீக்ஷையில் முயன்றிருக்கிறேனுகையால் இங்கிருந்து வெளிக்கிளம்பு வது யுக்தமன்று. ஆனதுபற்றி நான் பெயரன்களோடும் ரித்விஜர்களோடுங் கூடி நீங்கள் குதிரையைப் பார்த்துக் கொண்டுவரும் வரையில் தீக்ஷைகொண்டு இவ்விடத்தி லேயே இருக்கிறேன். உங்களுக்கு நன்மையுண்டாகட் டும்' என்ருன்.

அதைக்கேட்டு மஹா பலங்கொண்ட ராஜபுத்ரர் கள் அனைவரும் மிகுந்த மனமகிழ்ச்சியோடு தகப் பன் கட்டளைக் குட்பட்டுப் பூமியெங்கும் தேடிச் சென்ருர்கள். ஆண்சிங்கமே! இங்ஙனந் தேடிச்சென்ற மன்னவன் புதல்வர்களில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு யோஜனைதூரம் அகலமும் நீளமுமாகப் பங்குபோட்டுக்

கொண்டு வஜ்ராயுதத்தை நிகர்த்திருந்த தங்கள் நகங்களால் பூமியைக் கொத்தியெறிந்தார்கள். ரகுநந்தனு இங்ஙனம் நகங்களாலும் வஜ்ராயுதம் போன்ற சூலாயுதங்களாலும் மிகவும் பயங்கரமான கலப்பைகளாலும் பூமியானது பிளக்கப்பட்டு மிகுந்த சப்தஞ்செய்தது. அப்பொழுது ஸர்ப்பங்களும் பாதாள வாஸிகளான அஸுரர்களும் ராக்ஷஸர்களும் மற்றுமுள்ள ஜந்துக்களும் ஹிம்ஸிக்கப்பட்டுக் கூச்சலிடத் தொடங்கினுர்கள். அதனுல், ஸஹிக்கமுடியாத ஒரு கோஷம் ஓவென்று உண்டாயிற்று. இங்ஙனம் அவ்வீரர்கள் அறுபதினுயிரம் யோஜனை தூரம் பூமியைப் பாதாளம் வெளித்தோன்றும்படி தோண்டிவிட்டார்கள்.

ஆண்சிங்கமே! அம்மன்னவன் புதல்வர் யாவரும் பர்வதங்கள் நெருங்கிய ஜம்பூத்வீபத்தை முழுவதுந் தோண்டி நான்கு பக்கங்களிலும் திரிந்தார்கள். பின்பு தேவர்களும் அஸுரர்களும் உரகர்களும் ஆகிய அனைவரும் மிகவும் பயந்து மனந் தத்தளித்து ப்ரஹ்மாவினிடஞ்சென்று அவரைப் பல விதங்களில் துதிசெய்து மனத்தில் பயம்மீறி முகத்தில் வருத்தம் தோன்ற வணங்கி நின்று 'மஹாநுபாவரே! ஸகர சக்ரவர்த்தியின் புதல்வர்கள் பூமி யனைத்தையும் கொத்திக்குளம் பறிக்கின்றுர்கள். பாதாளவாஸிகளான மஹாத்மாக்கள் பலரும் ஹிம்ஸிக்கப்படுகிறுர்கள். 'இவன் தான் எங்கள் யாகத்தைக் கெடுத்தான். இவன்தான் எங்கள் குதிரையைக் கொண்டுபோயினுன்' என்று சொல்லிக் கொண்டு ஸமஸ்த ப்ராணிகளையும் கொன்று விடுகிறுர்கள்' என்று சொன்னுர்கள்.

முப்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸகர குமாரர்கள் கபிலமுனிவரால் நீருகுதல்.

மகிமை யமைந்த ப்ரஹ்மதேவன் தேவதைகளின் மொழியைக் கேட்டு, ஜனங்களை வதித்துக்கொண்டு வருகிற ஸகரபுத்ரர்களின் பலத்தைக்கண்டு மோகித்து வானவர் அனைவரும் பயமடைந் திருப்பது கண்டு, அவர்களை நோக்கி 'இத்தாரணி முழுவதும் மஹாத்மாவாகி [1]ஸமஸ்த பதார்த்தங்களிலும் உள்ளும்புறமும் பரந்து வஸித்திருந்தும் தான் அவற்றுக் காதாரமாயிருந்தும் அவைகளில் பற்றற்று விளங்கி நின்றமையால் வாஸுதேவனென்னும் பெயர் கொண்டு விளங்குகின்ற ஸ்ரீமஹாவிஷ்ணுவுக்கு அதீனமாயிருக்கின்றது. அம்மஹாநுபாவன் கபிலா வதாரஞ்செய்து எப்பொழுதும் இப்பூமி சக்ரத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறான். ஆகையால் ஸகர மஹாராஜாவினுடைய குமாரர்கள் பூமியைக் கொத்திக்கொண்டு உள்ளே புகுவார்களாயின் அப்

1. ஸர்வத்ராஸௌ ஸமஸ்தஞ்ச வஸத்யத்ரேதிவை யதঃ, ததஸ் ஸவாஸுதேவேதி வித்வத்பிঃ பரிபட்யதே' என்று வாஸுதேவ சப்தத்துக்குப் பொருள் சொல்லியிருக்கிறது. அதில் (ஆதாரமாயிருந்தும்) என்றதுவரையில் வாஸுசப்தார்த்தம். அதற்குமேல் தேவ சப்தார்த்தம் (வஸதி ஸர்வத்ரேதிவாஸுঃ) (வஸதி ஸமஸ்தமஸ்மிந்நிதி வாஸுঃ) எல்லாவற்றிலுமிவன் நிரம்பி யிருப்பதனாலும் எல்லாமிவனிடத்தில் இருப்பதனாலும் வாஸு என்று சொல்லப்படுகிறான். முதலர்த்தத்தில் (கர்த்ரி உண் ப்ரத்யய ஔணாதிகঃ) இரண்டாமர்த்தத்தில் (அயிகரணே ஸஏவ ப்ரத்யயঃ) (திவ்யதீதி தேவঃ) கர்த்ரிப சாதீயச் திவு க்ரீடா விஜிகீஷா வ்யவஹாரஸ்துதிமோதமத ஸ்வப்ந காந்தி கதிஷு) ஒளிபெற்றிருப்பவனாகையால் தேவனென்று சொல்லப்படுகிறான். (வாஸுஶ்சா ஸௌதேவஶ்சேதி வாஸுதேவ இதி விக்ரஹঃ).

பூமிக்கு[1] நேரேயுடையவரும் பர்த்தாவுமாகிய அக்கபில மஹாதேவனுடைய கோபாக்னியினால் கொளுத்தப்பட்டு நீறாகப்போகிறார்கள். மேலும் இப்பூமியானது கல்பந்தோறும் இங்ஙனமே தோண்டப்பட்டு வருகின்றது. ‘இது அநாதியாய் நிர்ணயிக்கப்பட்ட விஷயம். இவ்வளவேயன்றி இச்சகர புத்ரர்கள் வெகுகாலம் பிழைத்திராமல் சீக்கிரத்திலேயே மாளப்போகிறார்கள் என்பதும் முன்னமேயே நிச்சயிக்கப்பட்டுள்ளது’ என்று சொன்னார்.

‘பகைவர்களைத் தபிக்கச் செய்கின்ற பராக்ரமசாலியே! இங்ஙனம் சொல்லிய ப்ரஹ்மதேன் வார்த்தையைக் கேட்டு முப்பத்து மூன்றுகோடி தேவர்களும் மற்றுமுள்ள கந்தருவர் முதலியவர்களும் மிகுந்த ஸந்தோஷமடைந்து தாங்கள் வந்தவழியே திரும்பிச் சென்றார்கள். அப்பொழுது அளவற்ற தைரியம் பொருந்திய அந்த ஸகர புத்ரர்கள் அனைவரும் முன்போலவே பூமியைப் பிளந்துகொண்டு போனார்கள். அவர்களுக்கு இனி நேரிடப் போகின்ற கெடுதியைத் தெரிவிக்கும் பொருட்டு இடியிடிப்பதுபோன்ற ஒரு பெரிய சப்தம் உண்டாயிற்று. அந்த ஸகரகுமாரர்கள் அவ்வொலியை பொருள் செய்யாமல் பூமியைப் பிளந்து முழுவதுஞ் சுற்றித் திரிந்தும் குதிரையைக் காணாமல் அனைவரும் ஒன்றாய்க் கூடிச் சகர மகாராஜாவினிடம் சென்று தந்தையே! ‘நாங்கள் பூமி முழுவதும் சுற்றித் திரிந்தோம். மிகுந்த பலமுள்ள தேவர்களையும் தானவர்க

1. (நேரே உடையவனும்) ‘தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம்’ இது முதலாகிய பல வேத ப்ராமாணங்களால் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே ஸர்வத்துக்கும் மேலான உடையவனாகையால் இப்பூமிக்கு அவன் நேரே உடையவனானது பற்றி இங்ஙனஞ் சொல்லப்படுகின்றது. ஆகையால் இதைப்பற்றி வருத்தப்பட வேண்டாமென்பது கருத்து.

ளையும் ராக்ஷஸர்களையும் பிசாசர்களையும் உரகர்களையும் கின்னரர்களையும் இன்னும் அவர்களையொழிந்த பலரையும் ஹிம்ஸித்தும் கேட்டோம். எத்தனை விதமாக வருந்தி ப்ரயத்தனப்பட்டாலும் குதிரையாவது குதிரையைத் திருடிக்கொண்டு போனவனாவது எங்களுக்குப் புலப்படவில்லை. நாங்கள் இன்னமும் என்னசெய்யவேண்டும். தங்களுக்குச் சுபமுண்டாகட்டும். இவ்விஷயத்தில் எங்களுக்குத் தக்க உபாயத்தை ஆலோசித்துச்சொல்லுங்கள்' என்றார்கள்.

அரசர்களிற் சிறந்த ரகுநந்தனா! ஸகர சக்ரவர்த்தியானவன் தன் குமாரர்கள் மொழிந்ததைக் கேட்டுக் குதிரை அகப்படாததற்குக் கோபித்துக்கொண்டு புத்ரர்களைப் பார்த்து 'உங்களுக்கு நன்மையுண்டாகட்டும். நீங்கள் முன்போலவே ஏகோபித்துச் சென்று பூமியைப் பிளந்து வெட்டுங்கள்! குதிரையைக் கொண்டுபோனவனைக் கண்டு பிடித்துக் காரியம் முடித்துக் கொண்டு சீக்கிரம் திரும்பி வாருங்கள்' என்று கட்டளையிட்டான். பின்பு கம்பீரமான மனத்தையுடைய தங்கள் பிதாவாகிய ஸகரமஹாராஜன் கட்டளைப்படிக்கு அறுபதினாயிரம் பெயர்களும் பாதாளலோகத்தை நோக்கி வேகமாகச் சென்று மீளவும் பூமியைத் தோண்டிக் கொண்டிருக்கும்பொழுது அங்குப் பர்வதம் போன்ற வடிவம் கொண்டு பூமியைத் தாங்கிக்கொண்டிருந்த விரூபாக்ஷம் என்னும் திக்கஜத்தைக் கண்டார்கள். ரகுகுலதிலகனே! யானைகளிற் சிறந்த அவ்விரூபாக்ஷ மென்னும் திக்கஜமானது பர்வதங்களுங் காடுகளும் நிரம்பின இப்பூமண்டலத்தைத் தன் தலையினால் தரித்துக்கொண்டிருந்தது. அம்மஹா கஜமானது மிகுந்த பூபாரத்தை ஓயாமல் தரித்துக்கொண்டிருப்பதனால் உண்டான ஶ்ரமத்

தைச் சிறிதுநேரம் ஆற்றும்பொருட்டு எந்த க்ஷணத்தில் தலையை அசைக்கின்றதோ, அப்பொழுது பூகம்பம் உண்டாகும். அவர்கள் அத்திசையைப் பரிபாலித்து வருகிற அம்மஹாகஜத்தை ப்ரதக்ஷிணஞ்செய்து மேன்மைப் படுத்தி, பாதாள லோகத்தைப் பிளந்துகொண்டு சென்றார்கள். அங்ஙனம் அவர்கள் கிழக்குத் திசையைப் பிளந்து பார்த்த பின்பு மறுபடியும் தெற்குத் திசையைப் பிளக்கச்சென்றார்கள். அத்திசையிலும் பெரிய மலையோடொத்து மிகுந்த மகிமைபெற்று விளங்குகின்ற மஹாபத்மம் என்று பெயர்கொண்ட திக்கஜத்தைக் கண்டு அது பூமண்டலத்தையெல்லாம் தரித்துக்கொண் டிருப்பதற்கு மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். மஹாத்மாவாகிய ஸகரன் புத்ரர்களான அவ்வறுபதினாயிரம் பெயர்களும் அக்கஜத்தை ப்ரதக்ஷிணஞ்செய்துவிட்டு அப்புறம் மேற்குத் திசையைப் பிளந்தார்கள். அம்மேற்குத் திசையிலும் மஹாபலிஷ்டர்களாகிய அந்த ஸகரபுத்ரர்கள் பெரிய மலையோடொத்து நின்ற ஸௌமநஸ மென்னும் பெரிய திக்கஜத்தைக் காணலாயிற்று. அவர்கள் அதை வலஞ்செய்து க்ஷேமம் விசாரித்து விடைபெற்றுக் கொண்டு, பூமியைத் தோண்டிக்கொண்டே ஹிமவத்பர்வதத்தினால் அலங்காரம் பெற்று விளங்குகின்ற வடதிசைக்குச் செல்லத் தொடங்கினார்கள்.

“ரகுகுலத்திற் பிறந்த மன்னவர்களிற் சிறந்த ராமனே! அந்த ஸகரகுமாரர்கள் வடதிசையிலும் பனிபோல வெளுத்துப், பருத்து அழகான தேஹத்தினால் இத்தரணிமுழுவதும் தரித்துக்கொண்டிருக்கிற பத்ரமென்னும் பெயர்கொண்ட திக்கஜத்தைப் பார்த்து, அறுபதினாயிரம் பெயர்களும் அத்திசை வேழத்தைத் தட்டிக்கொடுத்து ப்ரதக்ஷிணஞ் செய்து மேலும்



215. ஸகரபுத்ரர்கள் கபிலமஹர்ஷியினருகில் யாகக் குதிரையைக் காணுதல்.

மேலும் பூமியைப் பிளந்துகொண்டே சென்றார்கள். பின்பு ஸகர புத்ரர்கள் எல்லோரும் குதிரை அகப்படத் தக்க வடகிழக்குத் திக்கை நோக்கிச்சென்று சினம்மீறிப் பூமியைப் பயங்கரமான வேகத்துடன் பிளந்தெறிந்து கொண்டே போனார்கள். பெரிய சரீரம்பெற்று மிக்க வலிவுகொண்டு யாவரையும் பயமுறுத்தும்படி ஓடித் திரி கின்ற ஸகரகுமாரர்கள் அனைவரும் அங்கு அநாதியாகக் கபிலாவதாரஞ் செய்து விளங்கிநிற்கின்ற வாஸுதேவனை யும், அத்தேவனருகில் புற்களை மேய்ந்துகொண்டிருக் கிற தங்கள் குதிரையையும் கண்டார்கள்.

அவர்கள் அனைவரும் மிகுந்த ஸந்தோஷமடைந்து அவ்வாஸுதேவனையே குதிரையைத் திருடிக்கொண்டு போனவனாக நினைத்துக் கோபத்தினால் கண்கள் சிவந்து மண்வெட்டிகளையும் கலப்பைகளையும் மற்றும் பலவிதமான விருக்ஷங்களையுங் கற்களையும் எடுத்துக்கொண்டு அவரை அடிக்க எதிர்த்தோடிவந்து 'நில் நில்' என்று அதட்டி 'அடே! எங்கள் யாகக் குதிரையை நீயன்றோ அபகரித் துக்கொண்டு போனவன். அடா! அறிவு கெட்டவனே! இதோ ஸகர குமாரர்களாகிய நாங்கள் வந்துவிட்டோம் என்று தெரிந்துகொள்வாயாக' என்று உரைத்தார்கள். காகுஸ்தனே! இங்ஙனம் அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு அக்கபில தேவர் அளவற்ற கோபங் கொண்டு ஒருவிதமான ஹூங்காரஞ்செய்தார். அளவிடவொண் ணாத மகிமை யமைந்து ஆழ்ந்த மனமுடைய அம்மஹா நுபாவனுடைய ஹூங்கார த்வனியினால் அந்த ஸகர குமாரர்கள் அறுபதினாயிரவரும் பஸ்மராசியாக அப்பொ ழுதே குவிக்கப்பட்டுப் போனார்கள்.

நாற்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

அம்சுமந்தன் ஸகரன் வாகாரிவத்தைக் கொண்டு வந்தது.

ரகுகுல குமாரனே! பின்பு ஸகர மஹாராஜன் தன் குமாரர்கள் குதிரையைத் தேடிச்சென்று வெகுகாலமாகியும் திரும்பிவராதது பற்றித் தன் ஒளியினுல் ப்ரகாசிக்கின்ற தன் பெயரனைப் பார்த்துக் 'குழந்தாய்! நீ வல்லமை அமைந்திருக்கிருய். மேலும் சஸ்த்ர வித்யைகளிலும் அஸ்த்ர வித்யைகளிலும் மற்றுமுள்ள கல்விகளிலும் தேர்ச்சியடைந்திருக்கிருய். பராக்ரமத்தில் நீ முன்புள்ள அரசர்களோடொத்து விளங்குகிருய். ஆனதுபற்றி நீ உன் சிறியதந்தைகள் போனவழியையும் குதிரையைக் கொண்டு போனவனையும் தேடிப்பிடித்துவா! பூமிக்குள்ளிருக்கின்ற ஜந்துக்கள் மிக்க வலிமைகொண்டு பெருமை பெற்று விளங்கும். அப்படிப்பட்ட ஜந்துக்களைக் கொல்லுவதற்காக வாளையும் வில்லையும் தரித்துக்கொண்டு புறப்பட்டுப்போ! அங்குள்ள மகிமை பொருந்திய வணங்கத் தக்க மஹாநுபாவர்களை வணங்கி மேன்மைப் படுத்தி இடையூறு செய்கின்றவர்களை வதைத்துப் போன காரியத்தை முடி!' என்று சொன்னுன்.

இங்ஙனம் மஹாத்மாவாகிய ஸகர சக்ரவர்த்தியினுல் சொல்லப்பட்ட வார்த்தையைக் கேட்டு அம்சுமந்தனும் அப்படியே செய்ய முயன்று தநுஸ்ஸையும் கத்தியையும் தரித்துக்கொண்டு வெகு வேகமாகப் புறப்பட்டான். அந்த அம்சுமந்தன் மஹாதீரர்களாகிய தனது சிறியதந்தைகளால் தோண்டப்பட்ட வழியாகச்சென்று அவ்விடத்தில் திதிபுத்ரர்களான அஸுரர்களாலும் ராக்ஷஸர்களாலும் பிசாசர்களாலும் பதகர்களாலும் உரகர்களாலும் பூஜிக்கப்பட்டு மிகுந்த ஒளியுடன் விளங்குகின்ற ஒரு திக்கஜத்தைக் கண்

டான். அவன் அதை ப்ரதக்ஷிணஞ்செய்து க்ஷேமம் விசாரித்துத் தன் தந்தைகள் போன விதத்தையும், குதிரையைத் திருடிக்கொண்டு போனவன் எவனென்பதையும் விசாரித்தான். அத்திசை வேழம் அம்சுமந்தன் கேட்ட வார்த்தைகளைச் செவியுற்று அஸமஞ்ச குமாரனே! நீ குதிரையைக் குறித்து வந்த காரியம் நிறைவேறிச் சீக்கிரத்தில் திரும்பி வருவாய்' என்று சொல்லிற்று.

அம்சுமந்தன் திக்கஜங்கள் எல்லாவற்றையும் க்ரமமாகவே நியாயப்படி வணக்கத்துடன் பேசுவதில் தனக்குள்ள வல்லமையெல்லாம் விளங்கும்படி கேட்க, அத்திசை வேழங்கள், பிறர் மொழிந்தவார்த்தைகளின் அபிப்ராயங்களை அறிவது மாத்ரமேயன்றித் தாங்களும் அழகாய்ப் பேச வல்லமை யுள்ளவைகளாகையால் அவ்வம்சுமந்தனைப் பூஜித்துக் 'குதிரையுடன் கூடவே நீ திரும்பி வரப் போகின்றனை' என்று உத்ஸாஹப்படுத்தி யுரைத்தன. அரசகுமாரன் அதைக் கேட்டு வேகத்துடன் நடந்துசென்று தன் சிறிய தந்தைகளாகிய ஸகர குமாரர்கள் நீருகக் குவிந்திருக்கிற இடத்தை அடைந்தான். அவர்கள் அகப்படாமைக்கு வருத்தமுற்றிருந்த அவ்வஸமஞ்ச குமாரனுகிய அம்சுமந்தன் அவர்கள் அனைவரும் செத்துச் சாம்பலாய்க் கிடப்பதுகண்டு மனவருத்தம் மேலெழ மிகவும் துக்கத்துடன் அழுதுக்கொண்டே அங்கு அருகில் மேய்ந்துகொண்டிருக்கிற யாகக்குதிரையைக் கண்டு தான் ஆண்சிங்கம்போல மஹாதீரனுயிருந்தும் அப்பொழுதுண்டான துக்கத்தை யடக்கமுடியாமல் சோகிக்கத் தொடங்கினுன். பின்பு அம்மஹாதேஜஸ்வியாகிய அம்சுமந்தன் தன் சிறியதந்தைகளாகிய ராஜகுமாரர்களுக்குத் தர்ப்பணஞ்செய்யவிரும்பி ஜலம்வேண்டு

மென்று தேடிப்பார்க்கையில் ஜலமுள்ள இடம் ஒன்றும் அகப்படவில்லை.

ராமா! வெகுதூரம் சென்றறிய வல்லவைகளாகிய தன் கண்களில் உற்றுப்பார்த்தும் ஜலம் அகப்படும்படியான இடம் ஒன்றும் அகப்படவில்லை. பின்பு வாயுவோடொத்த வேகம் பொருந்தியவனும் பக்ஷிகளில் தலைவனும் தனது சிறிய தந்தைகளுக்கு மாமனுமாகிய கருடனைக் கண்டான். மஹாபலமுள்ள அவ்வைநதேயன் அம்சுமந்தனைப் பார்த்துப் புருஷஸிம்ஹமே! உன் சிறிய தந்தைகளுக்கு நேரிட்ட இவ்வதமானது உலகங்களுக்கெல்லாம் நன்மையை விளைவிக்கக்கூடியது. ஆகையால், நீ இதைப்பற்றிச் சோகிக்கவேண்டாம். அளவிடவொண்ணாத மகிமையுடைய கபிலமுனிவரால் இம்மஹாபலிஷ்டர்கள் கொளுத்தப்பட்டார்கள். அக்கபிலர்* ப்ராஹ்மணராகையால் அவரால் கொளுத்தப்பட்ட இவர்களுக்கு லோக வழக்கத்தின்படி ஜலம்கொண்டு தர்ப்பணஞ் செய்வது வீணாகையால் நீ அங்ஙனம் செய்ய முயலவேண்டாம். எல்லாவற்றையும் அறிந்த உனக்கு இது

---

* 'சண்டாலாதுதகாத் ஸர்ப்பாத்யாயுதாத் ப்ராஹ்மணாதபி,
தம்ஷ்ட்ரிப்யஶ்ச பஶுப்யஶ்ச மரணம் பாபகர்மணாம்.
உதகம் பிண்டதானஞ்ச ஏதேப்யோ யத் விஸ்ருஜதே,
நோபதிஷ்டதி தத்ஸர்வ மந்தரிக்ஷே விநஶ்யதி'

என்று பாபிஷ்டகளுக்குச் சண்டாளனிடத்திலிருந்தும், ஜலத்திலிருந்தும், ஸர்ப்பங்களினிடத்திலிருந்தும், இடியிலிருந்தும், ப்ராஹ்மணனிடத்திலிருந்தும், கோரைப் பற்களையுடைய ஜந்துக்களினிடத்தினின்றும், பசுக்களிடத்தினின்றும், மரணமுண்டாகின்றது. கீழ்ச்சொன்ன விதத்தில் மரணமடைந்தவர்களுக்குச் செய்யும் ஜலதர்ப்பணம் முதலிய பரலோக வ்யாபாரங்கள் அவர்களுக்குப் போய்ச்சேருகின்றவையல்ல. இடையில் நசித்துப்போகின்றன. ஆகையால் அவை வீண் என்று சொல்லப்பட்டது.

தெரியாத விஷயமன்று. புருஷர்களிற் சிறந்தவனே! ஹிமாலயத்துக்கு நதியின்வடிவமான கங்கை என்று ஒரு புத்திரியிருக்கிறுள். மஹா பாஹுவே! உன் தந்தைக ளான அவர்களுக்கு அந்நதியிலிருந்து ஜலங்கொண்டு தர்ப்பணஞ்செய்வாயாக. அந்நதி உலகங்களைப் பாவன மாக்க வல்லதாகையால் அதின் ஜலத்தைக்கொண்டு இந் தப் பஸ்மராசியை நனைக்கவேண்டும். மிகுந்தமகி மைகொண்டு புகழுடன் விளங்குகின்ற அக் கங்காநதி யைக் கொண்டு இந்த நீற்றை நனையச் செய்தாயானல் ஸகர குமாரர் அறுபதினுயிரம் பெயர்களும் ஸ்வர்க்கலோ கம் செல்வார்கள்.

புருஷர்களிற் சிறந்த அம்சுமந்தனே! நீ மிகுந்த பாக்யமுடையவனுகையால் குதிரையைப் பெற்றனே. அதைக் கொண்டு ஸகரனிடம் செல்வாயாக. நீ மஹாவீரனு யிருப்பதுபற்றி நீயே உன் பாட்டன் யாகத் தை நிறைவேற்றவல்லவன்' என்று மொழிந்தான். மிகு ந்த பராக்ரமமுடைய கருத்மந்தன் மொழியைக் கேட்டு அம்சுமந்தன் குதிரையைக் கைக்கொண்டு தனது கீர்த்தி நான்கு பக்கத்திலும் விளங்கும்படி திரும்பிவந்து யாகத் தில் தீக்ஷை பெற்றிருக்கின்ற ஸகர மஹாராஜனைக் கிட்டிக் கருடன் சொல்லியபடி தன் சிறிய தந்தைகளின் வ்ருத்தாந்தத்தைத் தெரியச் சொல்லினுன். ஸகர சக்ர வர்த்தி அம்சுமந்தன் மொழிந்த பயங்கரமான அந்த வார்த்தையைக் கேட்டுச் சாஸ்த்ரங்களிற் சொல்லியபடி க்ரமமாக யாகத்தை நிறைவேற்றித் தானங்களைச்செய்து தன் பட்டணத்தைச் சேர்ந்தான். அவ்வரசனுக்குக் கங்காநதியைக்கொண்டுவர யாதொரு உபாயமும் தோன் ருமற் போய்விட்டது. ஸகரமஹாராஜன் வெகுகாலம் வரையில் ஆலோசித்தும் அவ்விஷயத்தில் யாதொரு

உபாயமும் தோன்றாமல் முப்பதினாயிரம் வருஷங்கள் ராஜ்ய பரிபாலனஞ் செய்து ஸ்வர்க்கலோகஞ் சென்றான்.

நாற்பத்தொன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

பகீரதன் கங்கைக்காகத் தவஞ்செய்வது.

ராமா! ஸகர மஹாராஜன் இங்ஙனம் காலதர்மத்தை அடைந்தபின்பு மந்த்ரிகள் பரம தார்மிகனாகிய அம்சுமந்தனை ராஜாவாக விரும்பினார்கள். ரகுநந்தனா! அவ்வம்சுமந்தன் மஹாராஜாவாகி மிகப் பெருமையுடன் விளங்கினான். பின்பு அவ்வம்சுமந்தனுக்குத் திலீபனென்று எங்கும் கியாதிபெற்றச் சிறந்த குமாரன் பிறந்தான். மிகவும் கீர்த்தி பொருந்திய அவ்வம்சுமந்தன் புத்திரனான திலீபனிடத்தில் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டுக் கங்காநதியைக் கொண்டுவந்து சாம்பலாய்க் கிடக்கின்ற தனது சிறிய தகப்பன்மார்களை நற்கதி யடையச்செய்ய உத்தேசங் கொண்டு பரிசுத்தமாகிய ஹிமவத்பர்வதத்தின் சிகரத்திலுள்ள ஒரு தபோவனத்துக்குச் சென்று தவமே தனம் என்ற எண்ணத்துடன் முப்பத்திரண்டாயிரம் வருஷங்கள் மிகவும் கடினமாகத்தவம் புரிந்துங் கங்கையைப் பெறாமலேயே ஸ்வர்க்கத்தை அடைந்தான். பின்பு மஹாதேஜஸ்வியான திலீப மன்னவன் தன் பாட்டன்மார்கள் அபம்ருத்யுவாக மாண்டு போனதைக் கேட்டுத் தன் தகப்பனாகிய அம்சுமந்தன் யாவரும் செய்யமுடியாத கடுந்தவம் செய்தும் சாகரர்களுக்கு நற்கதியுண்டாகாமைக்கு மனவருத்தம்கொண்டு மதிமயங்கி யாதொரு உபாயத்தையும் நிச்சயிக்கமுடியாமல் கங்கையைக் கொண்டு வருவதெப்படி? அவர்களுக்கு அந்நதிஜலத்தைக் கொண்டு தர்ப்பணஞ்செய்வதெப்படி?

அவர்களைத் துர்க்கதியினின்றும் உத்தரிக்கச் செய்வதெப்படி? என்று ஓயாமல் மனக்கவலை யுற்றிருந்தான். ஆத்மவித்தாகிய அத்திலீப மஹாராஜன் அங்ஙனம் தர்மத்தில் மனம் ஊன்றிப் பாட்டன்மார்களை உத்தரிப்பிக்கும்வழி ஏதென்று எப்பொழுதுஞ் சிந்தித்துக் கொண்டிருக்கையில் அவனுக்கு மிகவும் தார்மிகனாகிய பகீரதன் என்னும் குமாரன் பிறந்தான். திலீபன் தன் பராக்ரமம் நான்கு பக்கத்திலும் அளவின்றி விளங்கும்படி நின்று பலயாகங்களைச் செய்து முப்பதினாயிரம் வருஷங்கள் ப்ரஜைகளுக்கு மிகுந்த ஸந்தோஷமுண்டாகும்படி ராஜ்ய பரிபாலனஞ் செய்தான். அவ்வளவுகாலம் சென்றும் அத்திலீப மஹீபாலனுக்கு ஸகர புத்ரர்களை உத்தரிப்பிக்கின்ற உபாயம் ஒன்றும் தோன்றாமற் போய்விட்டது. அம்மன்னவன் அந்த வருத்தத்தினாலேயே வியாதிக்ரஸ்தனாகித் தன் புத்ரனாகிய பகீரதனுக்கு ராஜ்யாபிஷேகஞ்செய்வித்து அவ்வியாதி மூலமாகவே காலதர்மத்தை அடைந்தான். திலீபகுமாரனாகிய பகீரதமன்னவன் ராஜர்ஷியென்று பெயர்பெற்றுத் தர்மங்களை நிறைவேற்றும் தன்மைகொண்டு மஹாதேஜஸ்வியாகி விளங்கிநின்றும் தனக்கு ஸந்தானமில்லாமையினால் அதைப் பெறவிரும்பினான். அம்மன்னவன் தன் ராஜ்யத்தை மந்த்ரிகளிடம் ஒப்புவித்துக் கங்கையைப் பூமிக்கு இழியச் செய்வதில் விருப்பங்கொண்டு ஹிமாலய மலைச்சாரல்களில் ஒன்றாகிய கோகர்ணமென்னும் சிறிய பர்வதத்துக்குச் சென்று கைகள் இரண்டையும் உயர எழுப்பிக்கொண்டு ஐம்புலன்களையும் வென்று மாஸத்துக்கு ஒரு தடவை போஜனஞ் செய்துகொண்டு பஞ்சாக்னி மத்யத்தில் நின்று ஓயாமல் தவம்புரிந்தான். பகீரதமன்னவன் பயங்கரமாகத் தவம் நடத்திவருகையில் பல ஆயிரம் வருஷங்கள் கடந்துசென்

றன. பின்பு எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு செல் லுந்திறமைபெற்று ப்ரஜைகளுக்கு அதிபதியாகி நின்று மகிமையமைந்த ப்ரஹ்மதேவன் மஹாநுபாவனாகிய பகீ ரதமன்னவனது கடுந்தவத்துக்கு அளவற்ற ஸந்தோஷ மடைந்து தேவகணங்கள் புடைசூழத் தவஞ்செய்து கொண்டிருக்கிற அம்மஹநீயனிடம் வந்து 'பகீரதமன்ன வனே! நீ மிகுந்த பாக்யமுள்ளவன். திடமான ஸங்கல் பத்துடன் அரிதாகத் தவஞ்செய்தாய். ஆகையால் எனக்கு உன்னிடத்தில் அளவற்ற ப்ரீதி உண்டாயிருக் கின்றது. இஷ்டமான வரத்தை விரும்புவாயாக'' என் றார். தவத்தின் மிகுதியால் ஒளிபெற்று விளங்குகின்ற பாக்யநிதியான அப்பகீரதமன்னவன் ப்ரஹ்ம தேவனுக் கெதிரில் கையைக் கூப்பிக்கொண்டு நின்று ஸர்வலோக பிதாமஹனாகிய அத்தேவனைப் பார்த்து 'மஹாநுபாவ ரே! தாங்கள் என் தவத்துக்கு ஸந்தோஷம் அடைந்தி ருப்பதும் நான் செய்த தவத்துக்குப் பலன் இருப்பதும் உண்மையாயிருந்தால் ஸகர குமாரர்கள் அனை வரும் என்னால் கங்காநதி ஜலப்ரவாஹத்தில் தர்ப்பணம் பெறவேண்டும். இன்னும் எனது மூப்பாட்டன்மார்களா கிய அம்மஹாத்மாக்களுடைய சாம்பற்குவியலானது கங் காஜலத்தினால் நனையப்பெற்று அவர்கள் அனைவரும் ஸ்வர்க்கஞ் செல்லவேண்டும். இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த எனக்கு ஸந்தானம் உண்டாகும்படி அனுக்கிரகம் செய்யவேண்டும். இவை தான் நான் விரும்பும் வரம். இவற்றைத் தாங்கள் அடியேன்மீது கருணைகொண்டு அருள்புரியப் பிரார்த்திக்கிறேன்' என்று சொன்னான். உலகங்களுக்குப் பிதாமகனாகிய நான் முகக்கடவுள் அவ் வரசனை நோக்கி மதுரமான பதங்கள் அடங்கி மனத் துக்கு இனியபொருள் நிறைந்து விளங்குகின்ற சுபமான

வாக்கியங்களை இங்ஙனம் சொல்லத் தொடங்கினார். பகீரதனே! நீ விரும்பின மனோரதம் மிகவும் பெரியது. ஆயினும், அப்படியே நடந்தேறும். மன்னவனே! உனக்குச் சுபமுண்டாகட்டும். இக்ஷ்வாகு வம்சம் விருத்தியாகும்படி உனக்கு ஸந்தானம் உண்டாகும். இதோ ஹிமவத் பர்வதத்தின் அருகில் தோன்றுகின்ற இக்கங்கையானது ஹிமவத் பர்வதத்தின் மூத்த புதல்வி. அது பூலோகத்துக்கு வந்தால் பரமசிவனைத் தவிர அதைத் தரிக்கவல்லவன் இல்லை. ஆதலால், அம்மகாநுபாவனை நீ வேண்டிக்கொள்வாயாக. ராஜனே! கங்கை ஆகாயத்தினின்றும் கீழே விழுந்தால் அவ்வேகத்தை இப்பூமி ஸஹிக்கமாட்டாது. மஹாவீரனே! அக்கங்கையைத் தரிக்கவல்லவன் சிவனையொழிய மற்றொருவனும் எனக்குத் தோன்றவில்லை' என்று சொன்னார். இங்ஙனம் ஸரஸ்வதீவல்லபன் அம்மன்னவனுக்குச் சொல்லிவிட்டுக் கங்கையைப் பார்த்து 'இம்மன்னவன் விருப்பியபடி நீ அநுக்ரஹஞ் செய்வாயாக' என்று மொழிந்து ஸமஸ்த தேவர்களும் கூட்டங் கூட்டமாகப் பின்றொடரத் தெய்வலோகம்சென்றார்.

நாற்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

பகீரதன் கங்கையைக் கொண்டுவந்தது.

ராமா! தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய அந்த ப்ரஹ்மதேவன் அங்ஙனம் புறப்பட்டுப் போனபின்பு பகீரதன் பூமியில் தன் காற்கட்டை விரலை ஊன்றிக்கொண்டு நின்று புஜங்கள் இரண்டையும் உயரத்தூக்கி நிறுத்தி வாயு பக்ஷணஞ் செய்துகொண்டு எவ்விதத்திலும் சலனமில்லாமல் இரவு பகலும் மொட்டை மரம்போல அசையாமல் நின்று ஒரு வருஷகாலம் சிவனை உபாஸித்துவந்

தான். பின்பு உலகங்களெல்லாம் வணங்குகின்ற பசுபதி உமையுடன்கூடி ப்ரத்யக்ஷமாக வந்து அரசனை நோக்கி 'நரேஸ்வரனே! கடுந்தவம் புரிந்த உன்னிடத்தில் நான் மிகவும் ஸந்தோஷமடைந்தேன். பர்வதராஜன் புத்திரியாகிய கங்காநதியை எனது சிரத்தில் தரித்து உன்மனோரதத்தை நிறைவேற்றுகிறேன்' என்று சொன்னார்.

பின்பு லோகங்களெல்லாம் வணங்கும்படி மகிமை பொருந்திய ஹிமாலயத்தின் மூத்தமகளாகிய கங்காநதி அப்பொழுது தனது உருவத்தைப் பெருகச் செய்து கொண்டு பயங்கரமானவேகத்துடன் ஆகாயத்தினின்றும் பரிசுத்தமாகிய சிவபிரானது சிரத்தில் விழுந்து 'யாவரும் தரிக்கமுடியாத என்னைச் சிவன் தரிக்கமுயன்றது ஆச்சரியம். என் ப்ரவாஹங்களால் இவனை எடுத்துக்கொண்டு பகிரதன் இஷ்டப்படி பாதாளஞ் செல்லுகிறேன்' என்று ஆலோசித்துக் கொண்டு அதற்குத் தக்கபடி உருவத்தையும் வேகத்தையும் தரித்துவந்தாள். கங்காதேவியின் அந்தக் கர்வத்தைக் கண்ட மகிமைபொருந்திய சிவபெருமான் மிகுந்த கோபங்கொண்டு அக்கங்கையை வெளியிற் புறப்படவொட்டாமல் தன்னிடத்திலேயே மறைந்திருக்கும்படி அடக்கவேண்டுமென்று எண்ணங் கொண்டார். ராமா! அப்புண்யநதி பெருத்த ஜடாமண்டலங்களால் சூழப்பட்டுப் பயங்கரமான குகைபோல இருண்டு ஹிமாலயத்தோடொத்து விளங்கி மிகவும் பரிசுத்தமாயிருக்கின்ற சிவபிரானது சிரத்தில் விழுந்து கஷ்டப்பட்டு எவ்வித ப்ரயத்னங்கள் செய்தும் அச்சிரத்தினின்றும் பூமியைச் சேருவதற்குச் சிறிதுஞ் சக்தியில்லாமற் கிடந்தது. கங்கா தேவியானவள் அச்சடா மண்டலத்தில் அகப்பட்டு மிகவும் கட்டுண்டு வெகு வருஷம் வரையில் அதிலேயே சுழலமிட்டுக் கொண்டிருந்தாள்.

[illegible]



225. சிவன் பகீரதனிடம் அருள்புரிந்து கங்கையை விடுதலும்
அக்கங்கை எழு ப்ரவாஹங்களாகப் போதலும்.

பின்பு பகீரதன் கங்கையைக் காணுமல் மீளவும் பெருந் தவம்புரியப் பரமசிவன் அளவற்ற ஸந்தோஷங் கொண்டு, பிரமதேவனுல் நிருமிக்கப்பட்ட பிந்து ஸரஸ் ஸென்னும் பெயர்பெற்ற ஸரஸ்ஸில் அக்கங்கையை விழ விட்டார்.

அங்ஙனம் கங்கையை விடும்பொழுது முதலில் ஏழு ப்ரவாஹங்கள் உண்டாயின. மங்களமான ஜலத்துடன் மிகவும் அழகாக விளங்குகின்ற ஹ்லாதினி, பாவனி, நலினி என்ற மூன்று கங்கா ப்ரவாஹங்கள் கிழக்கு முக மாகப் பெருகிச்சென்றன. பரிசுத்தமான தீர்த்தத்துடன் விளங்குகின்ற ஸுசக்ஷுஸ் ஸீதை, மஹாநதியாகிய ஸிந்து என்ற மூன்று நதிகள் மேற்குமுகமாகப் பெருகிச் சென்றன. அவைகளில் ஏழாவதாகிய கங்காநதீப்ர வாஹம் ஒன்றுமாத்திரம் பகீரத மன்னவனைப் பின்பற்றி யது.

ராஜரிஷியாகிய அந்த பகீரத மன்னவன் திவ்விய மான ரதத்தின் மீதில் ஏறிக்கொண்டு தன் பராக்ரமம் அளவின்றி விளங்கும்படி முன்னேசென்ருன். கங்கை அவனைப் பின்றொடர்ந்து போனுள். [1] ஆகாயத்தினின் றும் சிவன் சிரத்தில் விழுந்து, அவ்விடத்திலிருந்து பூமி யில் விழுந்து, பயங்கரமான சப்தம் நிறைந்து வருகின்ற அக்கங்கையின் ஜலப்ரவாஹமானது பூமி முழுவதும் பர விற்று. அப்பொழுது ஜலப்ரவாஹத்துடன் கூட்டங் கூட்டமாகப் பூமியில் விழுந்தும், விழுந்துகொண்டுமிருக்

1. இவ்விடத்தில் கங்கை ஸ்வர்க்கா காச பூமிகளாகிற மூன்று இடங்களிலும் ப்ரவஹித்தபடியால் 'த்ரிபதகை' என்று பெயர்பெற்ற தென்று சிலர் சொல்கின்றனர். இன்னும் சிலர் மூன்று திசைகளி லும் ப்ரவஹித்தபடியால் அந்தப் பெயர் வந்ததென்று அபிப்ராயப் படுகிருர்கள்.

இன்றன. மத்ஸ்யங்களாலும், ஆமைகளாலும், முதலைகளாலும், மற்றுமுள்ள ஜலஜந்துக்களாலும் பூமியானது நிறையப்பெற்று மிகவும் அழகாய் விளங்கிற்று. பிறகு தேவர்களும், ரிஷிகளும் கந்தர்வர்களும், ஸித்தர்களும் அங்ஙனம் ஆகாயத்தினின்றும் பூமிக்கு வந்து விழுகின்ற கங்கையைக் கண்டு கூட்டங் கூட்டமாக நடந்துவருகின்ற நகரங்கள்போல விளங்குகின்ற விசாலமான விமானங்களின் மீதும், குதிரைகளின் மீதும், யானைகளின் மீதும் ஏறிக்கொண்டு பரபரப்புடன் கங்கை விழுகின்ற இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். பூமியில் கங்கை விழுவது மிகவும் அற்புதமாக இருந்தபடியினால் அதைப் பார்க்க விருப்பங் கொண்டு, தங்கள் அபார தேஜஸ்ஸானது நான்கு பக்கத்திலும் நிரம்பி விளங்குகின்ற தேவர்கள் அனைவரும் கூட்டங் கூடிவந்து அவ்விடம் சேர்ந்தார்கள். அவர்கள் கும்பல் கூடிவரும்பொழுது அவர்களது சரீர தேஜஸ்ஸினாலும், ஆபரணங்களில் இழைக்கப்பட்டிருக்கின்ற பலவித உயர்ந்த ரத்ன காந்திகளாலும் ஆகாசமானது பரவப்பெற்று மேகங்களின்றி அநேக ஸூர்யர்கள்கூடி உதிக்கப்பெற்றதுபோலக் கிரணங்கள் பரந்து ப்ரகாசித்தது.

பின்னும், முதலைகளும் பாம்புகளும் மீன்களும் கூட்டம் கூட்டமாக இங்கு மங்கும் துள்ளித் திரிந்து ஜலத்தில் மறைந்துகொண்டிருப்பது ஆகாயம் மின்னற்கொடிகளால் நிரம்பியதுபோல விளங்கிற்று. ப்ரவாஹ வேகத்தினால் பலவாறாகத் தெளிந்து சென்று வெளுத்து விழுகின்ற நுரைகளால் நிரம்பின ஆகாயமானது, ஹம்ஸங்களோடுகூடிச் சரத்காலத்தில் உண்டான வெளுத்த மேகங்களால் சூழப்பட்டதுபோலத் தென்பட்டது. அக் கங்காநதி சிற்சில விடங்களில் வெகு வேகமாவும், மேடு

பள்ளங்கள் அடங்கிய சிற்சிலவிடங்களில் வளைந்து வக்ரமாகவும், சதுரஸ்ரமாகிய சிற்சில விடங்களில் நேராகவும், பள்ளங்களில் கீழே யிழிந்தும், கல் முத லியவைகளில் மேலெழும்பியும், மேடுகளில் மெதுவாக வும் பாய்ந்து ப்ரவஹித்தது. அது நீர்ச்சுழல்களில் அடிக்கடி மோதிக்கொள்வதனால் அதிகமான சப் தத்தை எழுப்பியும், உயர எழும்பியும், கீழே விழுந்துகொ ண்டும் போயிற்று. ஆகாயத்தினின்றும் சிவனது சிரத் தில் விழுந்து, அவ்விடத்திலிருந்து பூமியில் விழுந்து வரு கிற கங்கா ப்ரவாஹமானது நிர்மலமாகி ஸகல கல்மஷங் களையும் போக்க வல்லதாயிருந்தது.

ஆகாச ஸஞ்சாரிகளான தேவர்களும், ரிஷிகளும், கந்தர்வர்களும், பூமியில் வஸிக்கும் ஜனங்களும் ஸர்வஜ்ஞனாகிய பரமசிவன் சிரத்தினின்றும் வெளிவந்த அந்தக் கங்காஜலத்தைப் பரிசுத்தமென்று துதித்து அந்நதியின் ப்ரவாஹத்தில் ஸ்நானஞ் செய்தார்கள். சாப தோஷத்தினால் ஆகாயத்தினின்றும் பூமியில் விழுந்தவர் யாவரும் அதில் ஸ்நானஞ்செய்து சாபத் தினின்றும் விடுபட்டு, நிர்மலமாகி ஒளிபெற்று விளங்கு கின்ற அந்நதி ஜலத்தினால் பண்ணின பாவங்கள் எல்லாம் தொலைந்து மீளவும் ஆகாயமார்க்கத்தினால் தங்கள் உல கங்களுக்குப் போய்ச்சேர்ந்தார்கள். அழுக்கின்றி அழ காக விளங்குகின்ற அக்கங்கையின் ஜல ப்ரவாஹத்தைக் கண்டு ஜனங்கள் மிகவும் ஆநந்தமடைந்து அதில் ஸ்நாநஞ் செய்து ஸ்ரமம்தீர்ந்து ஸுகமடைந்தார்கள். ராஜர்ஷியா கிய பகீரதனும், திவ்யமான தேரின்மீதில் ஏறிக்கொண்டு தனது தேஜஸ்ஸெல்லாம் விளக்கும்படி. முன்னே நடக்க, அக்கங்கையும் அவனைப் பின்றொடர்ந்து சென்றாள்.

தேவர்களும், ரிஷிகளும், திதி குமாரர்களாகிய தானவர்களும், ராக்ஷஸர்களும், யக்ஷர்களும், கந்தர்வர்களும், கின்னரர்களும், உரகர்களும், அப்ஸர ஸுக்கள் என்கிற ஸமஸ்த தேவஸ்த்ரீகளும் பகீரத மன்னவனைப் பின்றொடர்ந்து செல்லும் கங்கா ப்ரவாஹத்தைப் பார்த்துக் கொண்டு மிகுந்த ஸந்தோஷத்துடன் பின்றொடர்ந்தார்கள். அப்படியே ஜலஜந்துக்கள் யாவும் அந்த ப்ரவாஹத்துடன் பின்சென்றன. ஸமஸ்த பாபங்களையும் போக்கவல்லதாகி நதிகளிற் சிறந்து புகழ்பெற்று விளங்குகின்ற அந்தக் கங்காநதியானது, பகீரத மன்னவன் எவ்வெவ்விடத்திற் செல்லுகின்றானோ, அவ்வவ்விடங்களில் எல்லாம் தானும் பெருகிச் சென்றது.

அக்கங்காதேவி அங்ஙனம் போய்க்கொண் டிருக்கையில், அவ்வழியில் மஹாத்மாவாகியும் அற்புதமான காரியங்களைச் செய்யவல்லவருமாகிய ஜன்னுவென்னும் மஹர்ஷி யாகஞ் செய்து கொண்டிருக்கிற யாகபூமி எதிராயிற்று. கங்கை அதைத் தனது ப்ரவாஹத்தினால் மூழ்கச் செய்து விட்டாள். யாகம் செய்கின்ற அம் மஹர்ஷி அதன் கர்வத்தை அறிந்து, கண்டவர் ஆச்சரியப்படும் வண்ணம் அற்புதமாக அக்கங்கையின் ப்ரவாஹத்தையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துக் குடித்து விட்டனர்.

பின்பு தேவர்களும், ரிஷிகளும், கந்தர்வர்களும் வியப்படைந்து மஹாப்ரபாவம் பொருந்திப் புருஷர்களிற் சிறந்தவராயுள்ள ஜன்னு மஹர்ஷியினிடம் வந்து பூஜித்துக் கங்கையை அம்மஹாநுபாவருக்குப் பெண்ணாக ஏற்படுத்தினார்கள். மஹாதேஜஸ்வியான அம் மஹர்ஷியும் அதற்கு ஸந்தோஷ மடைந்து அக்கங்கையைத் தன் காதின் வழியாக மீளவும் வெளிவிட்டனர்.

அன்றுமுதல் கங்கையானவள் ஜன்னுமஹர்ஷியின் பெண்ணாகி, 'ஜான்னவி' என்று சொல்லப்பட்டு வருகின்றாள். நதிகளிற் சிறந்த அக்கங்கை மீளவும் பகீரதனது ரதம் போகின்ற வழியைத் தொடர்ந்து அவனது காரியஸித்தியின்பொருட்டு ஸமுத்திரத்தில் விழுந்து பாதாளத்துக்குச் சென்றது. பகீரதன் என்ற ராஜர்ஷியும், மிகுந்த ப்ரயத்னங்கள் செய்து கங்கையைக் கொண்டுசென்று சாம்பலாய் கிடக்கின்ற தனது பாட்டன்மார்களைக் கண்டு மிகவும் மனவருத்த மடைந்தான். அப்பொழுது கங்கா நதி அவர்களின் பஸ்ம ராசியில் விழுந்து அவற்றை நனைத்துக்கொண்டு பெருகிச்சென்றது. கபிலமுனிவர் சாபத்தினால் நெடுங்காலமாக நற்கதி கிடைக்காமல் ப்ரேதரூபமாக வருந்திக்கொண்டிருந்த அறுபதினாயிரம் சகர குமாரர்களும் தங்கள் பாபங்கள் தொலைந்து ஸந்தோஷத்துடன் ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள்.

நாற்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ப்ரஹ்மதேவன் பகீரதனோடு ஸம்பாஷித்தது.

அப்பொழுது பகீரதமன்னவன் கங்காநதி தன்னைப் பின்றொடர்ந்துவர ஸமுத்திரத்திற்குச் சென்று அவ்விடமிருந்து ஸகர குமாரர்கள் நீறாயிருக்கிற பாதாளத்தில் பிரவேசித்தான். ராமா! பின்பு கங்காஜலமானது அந்தச் சாம்பலின்மீது ப்ரவஹித்துச் செல்லும்பொழுது ஸர்வலோக நாயகனாகிய ப்ரஹ்மதேவன் எதிரில் வந்து பகீரத மன்னவனை நோக்கி 'ஆண்சிங்கமே! மஹாத்மாவாகிய ஸகரமஹாராஜன் புத்திரர் அறுபதினாயிரவரும் உன்னால் ப்ரேதவடிவத்தினின்றும் விடுபட்டுத் தேவர்களைப்போல ஸ்வர்க்கம் அடைந்து விட்டார்கள். மன்னவனே! ஸமுத்ர

ஜலம் எவ்வளவுகாலம் இவ்வுலகத்தில் இருக்குமோ, அவ்வளவுகாலம் வரையில் ஸகரகுமாரர்கள் தேவதைகளைப் போல வானுலகத்தில் வாழ்ந்திருப்பார்கள். அதிக ப்ரமத்தோடு உன்னால் கொண்டுவரப்பட்ட இந்தக் கங்கை உனக்குமூத்தகுமாரியாகிக் கியாதி பெற்றுவிளங்கப் போகின்றாள்.' நீ தகப்பனாயிருப்பதுபற்றி உண்டாகிய பகீரதி என்னும் பெயரினால் இவ்வுலகத்தில் ப்ரஸித்தியடையப் போகின்றாள். மன்னவனே! ஸ்வர்க்கத்திலுண்டான இக்கங்காநதி த்ரிபதகையென்னும் நாமத்தைப் பெற்று விளங்கும். ஸ்வர்க்கம் பூமி பாதாளம். ஆகிய மூவுலகங்களிலும் ப்ரவஹித்து வந்தமையால் இதற்கு த்ரிபதகை என்று பெயர் உண்டாயிற்று.

''நராதிபதியே! உன் பாட்டன்மார்களாகிய ஸகரகுமாரர்கள் அனைவருக்கும் இக்கங்கா ஜலத்தில் தர்ப்பணம் செய்து 'கங்கா ஜலத்தைக்கொண்டு ஸகரர்களை உத்தரிக்கச் செய்கிறேன்' என்று நீ முன்பு செய்து கொண்ட ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றிக் கொள்வாயாக. உனக்குப் பூர்வீகனாகிய ஸகரன் மிகவும் கீர்த்தி பெற்றவன்; தார்மிக ஜனங்கள் அனைவரினும் மேலானவன். அந்த மஹாநுபாவனாகிய ஸகர மஹாராஜனும் இப்பொழுது நீ நிறைவேற்றின இக்காரியத்தை முன்பு தான் செய்ய முயன்றும் அவனுக்கு நிறைவேறாமற் போயிற்று. பகீரத மன்னவனே! அவனுக்குப் பின்பு தன் பராக்ரமத்தினால் உலகமெங்கணும் புகழ்பெற்ற அம்சுமந்தனும் அவ்விதமாகவே கங்கையைப் பெறுவதற்கு நெடுங்காலம் ப்ரார்த்தித்துக் கொண்டிருந்தான். அவனும் தன்ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றவில்லை. பிற்பாடு உன் தகப்பனாகிய திலீப மன்னவன் ராஜர்ஷி யென்று பெயர் பெற்றுத் தர்மகுணங்களுக்கு நிதியாகி மஹர்ஷிகளைப்

போலமிகுந்தப்ரபாவத்தினுல் விளங்கி அதிக பராக்ரமத்தைக் கொண்டிருந்தான். க்ஷத்ரிய தர்மங்களைப் பரிபாலித்து வருவதில் அதிக ஆஸக்தியுள்ளவன். முடிவாய்ச் சொல்லுமிடத்தில் அவன் தவத்தில் எனக்குச் சரியானவன். அப்படிப்பட்ட மஹா பாக்யசாலியும் கங்காநதியைக் கொண்டுவரவேண்டும் என்று அதிகமான ஆசை கொண்டான். ஆயிரக்கணக்கான வருஷங்கள் தவம்செய்து ப்ரயத்தனப்பட்டும் அவனுக்கு அநுக்கவில்லை. புருஷஸிம்ஹங்களான உனது மூன்று பாட்டன்மார்களும் தாங்கள் விரும்பிய காரியத்தை நிறைவேற்ற முடியாமலேயே விசாரத்துடன் கால தர்மத்தை அடைந்தார்கள். அப்படிப்பட்ட உயர்ந்தவிருப்பத்தோடுகூடிய ப்ரதிஜ்ஞையைப் புருஷர்களிற் சிறந்தவனுன நீ இப்பொழுது நிறைவேற்றிவிட்டனை. அதனுல் நீ உலகத்தில் உள்ள அனைவரும் ஒருமிக்கக் கொண்டாடும்படி அபாரமான கீர்த்தியை அடைந்தாய்.

சத்ருக்களை அடக்கவல்ல மஹா பராக்ரமசாலியே! நீ நிறைவேற்றின இந்தக் கங்காவதாரணத்தினுல் மிகுந்த ப்ரதிஷ்டை அடைந்தனை. ஆண் சிங்கமே! இதர நதிகளைப்போல் அல்லாமல் எப்பொழுதும் ஸ்நானயோக்யமாக விளங்குகின்ற இந்தக் கங்கா ஜலத்தில் நீ ஸ்நானம் செய்வாயாக. அதனுல் பரிசுத்தியையும் புண்ய பலன்களையும் அதிகமாகப் பெறுவாய். நீ உன் பாட்டனமார்களனைவர்க்கும் இதில் தர்ப்பணஞ்செய். உனக்குச் சுபமுண்டாகட்டும். இனி நான் எனது லோகத்துக்குப் போகிறேன். நீயும் தர்ப்பணத்தைச் செய்துவிட்டு உன் பட்டணம் சென்று சேர். என்று கூறினுர். ஸகல தேவர்களுக்கும் அதிபதியாகி ஸகல லோகங்களுக்கும் பாட்டனுகிய ப்ரஹ்மதேவன் இங்ஙனம் அவ்வரசனுக்குச்

சொல்லி நான்குபக்கத்திலும் கீர்த்தி ப்ரகாசிக்கும்படி தாம் வந்தவழியே புறப்பட்டு ப்ரஹ்மலோகம் சேர்ந்தார்.

பின்பு ராஜர்ஷியாகிய பகீரதன் ஸ்ம்ருதிகளிற் சொல்லியபடி ஜ்யேஷ்ட க்ரமமாகத் தனது பாட்டன்மார்களாகிய ஸகர குமாரர்களுக்கு உத்தமலோகத்தை யளிக்கும்படியான உதக க்ரியையைச் செய்துமுடித்து மிகவும் பரிசுத்தனாகித் தன் கீர்த்தி எங்கும் விளங்கும்படி பட்டணத்திற்குச் சென்று ஸமஸ்த ஸம்பத்துக்களும் நிறைந்து நிலைநிற்கும்படி ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தான். ரகுநந்தனா! உலகங்கள்யாவும் வெகுகாலம் வரையில் தோன்றாதிருந்த அம்மன்னவனை அடைந்து மனவருத்தம் தொலைந்து செல்வங்கள் நிறைந்து நல்ல ஆரோக்யத்தை யடைந்து ஸந்தோஷ ஸமுத்ரத்தில் மூழ்கிக் கிடந்தன.

ராமா! நீ ஸவிஸ்தரமாகக் கேட்கவிரும்பின கங்காவ்ருத்தாந்தத்தை சொல்லி முடித்தேன். நீ க்ஷேமம் பெறுவாயாக. உனக்குச் சுபம் உண்டாகட்டும். ஸந்த்யாகாலம் கடந்து போகின்றது. பொருளைத் தரக்கூடியதும், புகழை உண்டு பண்ணுகின்ற திறமுடையதும், ஆயுளையும் ஸந்ததியையும் ஸ்வர்க்கத்தையும் அளிக்கக்கூடியதுமாகிய இக்கங்காவதார வ்ருத்தாந்தத்தை ப்ராஹ்மணர்களிலாவது க்ஷத்ரியர்களிலாவது இதரவர்ணத்தவர்களிலாவது எவர் கேட்டாலும் அவரிடத்தில் பித்ரு தேவதைகளும் மற்றுமுள்ள தேவதைகளும் களிக்கின்றார்கள். கங்காவதாரண மகிமையென்னும் இந்த உபாக்யானத்தை இதர விஷயங்களில் மனம்செல்லாமல் ஊக்கத்துடன் கேட்கின்றவருக்கு ஸர்வாபீஷ்டங்களும் ஸித்திக்கும். அவர் பாபங்கள் தொலைந்து ஆயுஸ்ஸும் யசஸ்

ஸுகம் மேலும் மேலும் வளர்ந்துவரும்' என்று விஸ்வாமித்ரமுனிவர் மொழிந்தார்.

நாற்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

{ விசாலாபுர விருத்தாந்தமும், பாற்கடலைக் கடைந்ததும். }

ராமலக்ஷ்மணர்கள் இருவரும் கங்காநதியின் வ்ருத்தாந்தத்தைக் கேட்டு மிகவும் வியப்படைந்து அம்மாமுனிவரை நோக்கி 'மஹாநுபாவரே! தாங்கள் சொன்ன கங்காவதாண வ்ருத்தாந்தமும், ஸகர குமாரர்கள் ஸமுத்ரம் தோண்டிவைத்ததும், பகீரத மகாராஜன் அதைக் கங்கையின் ப்ரவாஹத்தினால் நிரம்பச் செய்ததும் ஆகிய இவையெல்லாம் மிகச் சிறந்ததும் பரிசுத்தி பெற்றதும் மிக்க அற்புதத்தை விளைப்பதுமாயிருக்கின்றன' என்று புகழ்ந்து அவ்வழகான கதையைச் சிந்தித்துக் கொண்ட வண்ணமே அன்றிரவைக் கழித்தார்கள். பின்பு புலபுலவென்று பொழுதுவிடிந்து ஸூர்யோதயமாயிற்று. அப்பொழுது சத்துருக்களை அடக்க வல்லவனாகிய ராகவன் நித்யகர்மங்களை முடித்து உட்கார்ந்துகொண்டிருக்கிறவிஸ்வாமித்ரமுனிவரை நோக்கித்'தபோநிதியே! கேட்கவேண்டிய விஷயங்களிற்சிறந்த கங்காவதாணத்தைக் கேட்டேன். அதனால் நடந்த ராத்ரியானது மிகவும் பூஜிக்கத் தக்கதா யிருக்கின்றது. தாங்கள் மொழிந்த அந்தக் கதை முழுவதும் அழகாயிருந்தமையால் அதை ஆதியோடந்தமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் எங்களுக்கு இரவு முழுவதும் ஒருக்ஷணப் பொழுதுபோலக் கடந்துபோயிற்று. ஸுகமாய் உட்காரும்படி விசாலமாகிப் புண்யகர்ம பராயணர்களாகிய ரிஷி

கள் ஏறிப் போவதற்கு யோக்யமான ஓடமானது யாவ ரும் மகிழ்ந்து பூஜிக்கும்படி மஹாநுபாவராகிய தாங்கள் இவ்விடம் வந்திருப்பதுகண்டு மிகுந்த வேகத்தோடு வந்து நிற்கின்றது. இதனால் புண்யநதிகளிற் சிறந்த இக் கங்காநதியைத் தாண்டிப் போவோம்' என்று உரைத் தான். மஹாத்மாவாகிய அந்த ராகவன் வார்த்தை யைக் கேட்டு விஸ்வாமித்ரமுனிவர் ரிஷிகள் அனைவரும் கூட்டங்கூட்டமாகப் பின் தொடர்ந்துவர ரகுகுலத்திற் பிறந்த ராமலக்ஷ்மணர்களுடன் கங்காநதியைத் தாண்டி அந்நதியின் வடகரையைச் சேர்ந்து ஓடத்தைக்கொண்டு நதியைத் தாண்டுவிக்கும் பொருட்டுத் தன்னுடன்வந்த மஹர்ஷிக் கூட்டத்தைப் பூஜித்து அவர்களை அனுப்பி விட்டு அந்நதிகரையில் க்ஷணகாலம் உட்கார்ந்திருந்து பின்பு விசாலையென்னும் பட்டணத்தைக் கண்டார்கள். விஸ்வாமித்ரர் ராமலக்ஷ்மணர்களோடு புறப்பட்டு ஸகல ஸம்பத்துக்களும் நிறைந்து பூமியில் ஒப்பில்லாதபடி சிறப் புற்றுத் தேவலோகத்தை நிகர்த்து அழகாக விளங்கிய விசாலை யென்னும் அந்நகரத்துக்கு வேகமாகப் போய்ச் சேர்ந்தார். அப்பொழுது ராமன் விஸ்வாமித்ர முனிவ ரைப் பார்த்துக் கைகளைக் கூப்பிட்டுக்கொண்டு 'மஹா நுபாவரே! நகரங்களிற் சிறந்த இவ்விசாலா நகரத்தில் இப்பொழுது வாஸஞ்செய்யும் மன்னவர் குலம் யாது? இதைத் தெரிந்துகொள்வதற்கு ஆசைப்படுகிறேன். தங் களுக்குச் சுபம் உண்டாகட்டும், என்றான். விஸ்வாமித்ர முனிவர் விசாலாநகரத்தைப் பற்றி முன்பு நடந்ததான வ்ருத்தாந்தத்தைச் சொல்லத்தொடங்கினர். 'ராமா! இந்திரனது வ்ருத்தாந்தமும் இதில் ஸம்பந்தித்திருக் கின்றது. மிகவும் அழகான அந்த வ்ருத்தாந்தத்தைக் கேள்! முன்பு கிருதயுகத்தில் திதிபுத்ரர்கள் மிகுந்த பல

முடையவர்களாக மாத்திரம் இருந்தார்கள். அதிதிபுத்ரர்கள் பராக்கிரமமுடையவர்களும், மிக்க தார்மிகர்களுமாயிருந்தார்கள். புருஷோத்தமா! பின்பு அந்த மஹாவீரர்களான இருவகைப் பட்டவர்களும் 'என்னகாரியம் செய்தால் சாவும் கிழத்தனமும் நமக்கு உண்டாகமாட்டாது' என்று எண்ணத் தொடங்கினார்கள். அங்ஙனம் ஆலோசித்துக் கொண்டிருக்கையில் அளவற்ற தைரியம் பொருந்தி விளங்குகின்ற அவ்வீரர்களுக்கு 'நாம் க்ஷீர ஸமுத்திரத்தைக் கடைந்து அதினின்றும் வெளியாகின்ற ஸாரமான அம்ருதத்தைப் பெறவேண்டும்' என்று புத்தி உண்டாயிற்று. அவர்கள் அங்ஙனம் நிச்சயித்து மிகுந்த பராக்ரம முடையவர்களாகையால் ஸர்ப்பராஜனாகிய வாஸுகியைக் கயிறாகவும், மந்தர பர்வதத்தை மத்தாகவும் செய்துகொண்டு திருப்பாற்கடலைக் கடையத் தொடங்கினார்கள். அவர்கள் அப்படிக் கடைந்துகொண்டிருக்கையில் ஆயிரம் வருஷங்கள் சென்றபிற்பாடு வாஸுகியின் சிரங்கள் பயங்கரமாக விஷத்தை வெளியில் கக்கிற்று. அப்பொழுது மத்தாகிய மந்தரபர்வதத்தின் கற்கள்யாவும் வெடித்துப்போகும் வண்ணம் நெருப்புப்போல எரிந்து கொண்டிருக்கிற ஹாலாஹலமென்னும் மஹாவிஷமானது மேலேகிளம்பிற்று. அதனால், தேவாஸுரமனுஷ்யர்கள் அனைவரும் அடங்கின உலகங்கள் யாவும் நன்றாய்க் கொளுத்தப்பட்டன. பின்பு தேவதைகள் தேவர்களில் பெருமைபெற்று யாவர்க்கும் ஆநந்தத்தை விளைவிப்பவரான பசுபதியைச் சரணமடைந்து 'காப்பாற்றவேண்டும்; காப்பாற்றவேண்டும்' என்று துதி செய்தார்கள்.

அப்பொழுது அவ்வுமாபதி இருக்குமிடத்துக்குச் சங்கு சக்ரம் முதலிய ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு,

தேவதேவன் என்று பெயரிட்டுக் கொண்டிருக்கின்ற ப்ரஹ்மா ருத்ரன் முதலியவர்களுக்கும் தேவனுகி ஸமஸ்த காரியங்களையும் அபாயமின்றி நிறைவேற்றவல்லவனுகிய ஸர்வேஶ்வரன் ஸ்ரீமஹாவிஷ்ணு எழுந்தருளிப் புன் சிரிப்பு விளங்கும்படி அச்சூலபாணியாகிய சிவனைக்கண்டு 'தேவாதிபதியே! நீ தேவர்களுக்கு முதலிற்பிறந்த வன். ஆனதுபற்றித் திருப்பாற்கடலைக் கடைகையில் முதலில் உண்டானது உனக்குச் சொந்தமானது. ஆகையினல் இவ்விஷத்தை அக்ரபூஜையாக நினைத்து அங்கீகரி' என்று மொழிந்து அவ்விடத்திலேயே அந்தர்த் தான மடைந்தார். பின்பு மகிமை பொருந்திய சிவபிரா னும் தேவதைகளுக் குண்டான பயத்தைக் கண்டும் ஸ்ரீமஹாவிஷ்ணு நியமனத்தைக் கேட்டும் பயங்கரமாகிய ஹாலாஹல விஷத்தை அம்ருதம்போல உட்கொண்டு தேவதைகளைக் காப்பாற்றினர். பின்பு தேவதைகளும் அஸுரர்களும் அக்கடலை மீளவும் கடையத் தொடங்கி ஞர்கள்.

அப்பொழுது மத்தாகிய மந்தரபர்வதம் பாதாளத் தில் மூழ்கிப்போயிற்று. அதைக்கண்டு தேவர்களும் கந்தர்வர்களும் மதுவென்னும் அஸுரனைக்கொன்று மஹோபகாரஞ்செய்த ஸ்ரீமஹாவிஷ்ணுவை அடைந்து 'திரண்டுருண்டு நீண்ட புஜ தண்டங்களை யுடைய மஹாநு பாவனே! நீ ஸகலபூதங்களுக்கும், அதனிலும் தேவர்க ளுக்கும் கதியாயிருக்கின்றனை. ஆகையால் நீயே எங்க ளைக் காப்பாற்றவேண்டும். நாங்கள் மத்தாகக்கொண்ட மந்தரபர்வதம் பாதாளத்தில் அமிழ்ந்து கிடக்கின்றது. அதை மேலெடுத்தருளவேண்டும். அதைச் செய்வதற்கு நீ ஒருவனே வல்லவனுயிருக்கின்றனை' என்று ஸ்தோத்

ரம் செய்தார்கள். உடனே [1]ஹ்ருஷிகேசனென்று சொல்லப்படுகிற அம்மஹாதேவன் கூர்மரூபங்கொண்டு தனது முதுகினால் அப்பர்வதத்தைத் தூக்கிக்கொண்டு அந்தத் திருபாற்கடலில் பள்ளிகொண்டிருந்தான். மேலும் அந்தப் புருஷோத்தமன் ஸமஸ்த வஸ்துக்களிலும் உட்புகுந்து உலகங்களெல்லாம் அவனே யென்னும்படி விளங்குவதனால் அப்பர்வதத்தின் நுனியைக் கையினால் அமுக்கிக்கொண்டு தேவதைகளின் நடுவில் தானும் ஒருவனாக நின்று கடைந்தான்.

இங்ஙனம் ஆயிரமாண்டுகள் சென்றபிற்பாடு தண்டத்தையும் கமண்டலுவையும் தரித்துக்கொண்டு தன்வந்தரியென்னும் பெயர்பெற்ற தேவலோகத்து வைத்தியன் முதலில் தோன்றினான். பின்பு அழகான ஒளியையுடைய அப்ஸர ஸ்திரீகள் வெளியானார்கள். அப்பாற்கடலைக் கடையும் பொழுது அதினின்றும் ஒரு ரஸமுண்டாக, அதினின்றும் இவர்கள் உண்டானதுபற்றி [2] அப்ஸர ஸுக்களென்று யதார்த்தமாகிய நாமத்தைப் பெற்றார்கள். அழகான ஒளியையுடைய அவ்வப்ஸர ஸ்த்ரீகள் அறுபதினாயிரக் கோடிக் கணக்கிற் பிறந்தார்கள். அவர்களுடன் உண்டான அவர்கள் வேலைக்காரிகள் இவ்வளவினரென்று கணக்கிடத் தரமன்று. அவ்வப்ஸரப் பெண்கள் தங்களுக்குப் பதியாரென்னும் விசாரம்

---

1. ஹ்ருஷீகங்களென்றால் இந்திரியங்கள். (ஈஶ) னென்றால் அவைகளை யடக்கித் தன்வசமாகச் செய்பவனென்று பொருள்.

2. அப்பு என்றால் ஜலம். இங்கு ஜலம்போல் த்ரவமாகிய பாலைச் சொல்லுகின்றது. அதினின்று முண்டான ரஸம் அப்ரஸம். அதினின்றும் பிறந்தவர் அப்ஸர ஸுக்கள். (அப்ரஸர்) என்று உரைக்க வேண்டியிருக்க, ரஸசப்தம் 'பஷோதராதீநி யதோபதிஷ்டம்' என்கிற வ்யாகரண ஸூத்ரத்தின்படி (ஸரஸ்) என்று மாறிக்கிடக்கிறது. ஆகையால் (அப்ஸரஸ்) என்று காரணப் பெயராயிற்று.

அற்றிருந்தமையால் தேவாஸுரர்களில் ஒருவரும் அவர்களை விதிப்படி மணம் புரியவில்லை. அனைவரும் பொதுவாக அநுபவித்துக் கொண்டிருந்தார்கள். ஆனது பற்றி அவர்கள் வேஶ்யாங்கனைகளென்று அழைக்கப் படுகிறார்கள்.

பின்பு ஸமுத்ராதி தேவதையாகிய வருணன் புத்ரியாகி மஹாபாக்யம் பொருந்திய [1] வாருணியென்னும் தேவதை கடலினின்றும் வெளிவந்து தன்னைக் காப்பாற்றுவார் யாரென்று தேடிக் கொண்டிருக்கையில் திதிகுமாரர்களாகிய அஸுரர்கள் அனைவரும் அவளைக் கைப்பற்றவில்லை. மஹாவீரனே! ராமா! அதிதி புத்ரர்களாகிய தேவதைகள் மாத்திரம் தோஷமில்லாமல் விளங்கின அவ்வாருணியைக் கைக்கொண்டார்கள். வாருணியைக் கைப்பற்றாதது பற்றியே திதி குமாரர்கள் [2] அஸுரரென்று பெயர்பெற்றார்கள். அதை அங்கீகரித்தது பற்றித் தேவர்கள் ஸுரர் என்று கியாதி யடைந்தார்கள்.

புருஷோத்தமா! பின்பு உச்சை ஶ்ரவஸ்ஸென்னும் உயர்ந்த குதிரையும் கௌஸ்துபமென்னும் சிறந்த ரத்னமும், அப்படியே மேலான அம்ருதமும் ஸமுத்திரத்தினின்றும் வெளியாயின. அவ்வம்ருதத்தைப் பற்றித் தேவதைகள் வாருணியைக் கைப்பற்றினபடியினால் உடம்பெங்கும் மயிர்க்கூச்செறியும்படி மிகுந்த ஸந்தோஷத்தை அடைந்தார்கள்.

---

1. வாருணி யென்றால் கள். அதற்கு அதிஷ்டான தேவதையை இங்கு வாருணி யென்னப்பட்டது.

2. ஸுரை யென்றால் கள். இதுவே வாருணியென்றுரைக்கப் படுகின்றது. 'ஸுரா ஏஷாமஸ்தீதி ஸுரா:' அந்த வாருணியை உடையவர்களாகையால் ஸுரர்கள். மத்வர்த்தத்தில் (அர்ச ஆதித்வாத் அச்ப்ரத்யய:) இங்ஙனமே (ஸுரா நாஸ்தி ஏஷாமிதி அஸுரா:) அந்த வாருணியில்லாதவர்களாகையால் அஸுரர்கள்.

தேவாஸுரர்கள் பெருத்த சண்டைசெய்து கூட்டங் கூட்டமாக மாண்டுபோனார்கள். அப்பொழுது தேவதைகள் அஸுரர்களை அதிகமாய்க் கொன்றனர். அஸுரர்கள் அனைவரும் தங்களுக்குப் பலம் அதிகமாகும்பொருட்டு ராக்ஷஸர்களோடு ஸ்நேகஞ் செய்துகொண்டார்கள். பின்பு மூவுலகங்களையும் நடுங்கச் செய்கின்ற மிகவும் பயங்கரமான யுத்தம் ஒன்று நடந்தது. அப்பொழுது தேவாஸுரர்கள் அனைவரும் ஒருமிக்க அழிந்து போவதைக் கண்டு ஸ்ரீமகா விஷ்ணு ஜகத்தெல்லாம் மோஹிக்கும்படியான தனது மாயையினால் யாவரும் காமவேட்கை கொண்டு மனமயங்கும்படி அற்புதமான மோஹினிரூபம் தரித்து அவர்களை வஞ்சித்து அவர்களிடமிருந்து அம்ருதத்தை அபகரித்துக் கொண்டார். எக்காலத்திலும் [1] அழிவின்றிப் புருஷோத்தமனென்று அஸாதாரணமாக நாமம் பெற்று ஸமஸ்தத்தையும் நிறைவேற்ற வல்லமை பொருந்தி விளங்குகின்ற மாஹாநுபாவனாகிய அம்மஹா விஷ்ணு தன்னை எதிர்த்து வந்தவர் அனைவரையும் வென்று பலமற்றவர்களாகச் செய்துவிட்டார். அவர் பின்பு தன்னைச் சரணம்புகுந்த வானவர்களை ஆவேசித்து அவர்களுக்கு மிகுந்த பலமுண்டாகச் செய்தார். பயங்கரமாகிய அந்தத் தேவாஸுரயுத்தத்தில் அம்மஹாவிஷ்ணுவின் ஆவேசத்தால் பலம் அதிசயித்து விளங்கும் அதிதிகுமாரர்களாகிய தேவதைகள் திதிபுத்ரர்களான அஸுரர்களை அடித்துக் கொன்றுவிட்டார்கள். இப்படி இந்தி

1. அழிவின்றி அதாவது — (அஸ்தி, ஜாயதே, பரிணமதே விவர்யதே, அபக்ஷீயதே, நஶ்யதி) என்று வழங்கிவருகிற ஸத்தை, ஜந்மம், பரிணமம், வ்ருத்தி, அபக்ஷயம், நாசம் ஆகிய பாவவிகாரங்களாறுமற்றிருக்கை. இவற்றில் - ஸத்தை - இருத்தல். ஜந்மம் - பிறப்பு. வ்ருத்தி - வளர்தல். அபக்ஷயம் - குறைதல். நாசம் தோன்றாதிருத்தல்.

ரன் திதி புத்ரர்களைக்கொன்று த்ரிலோகராஜ்யம் பெற்று அம்ருதத்தை அடைந்து ஸந்தோஷத்துடன் மஹர்ஷிகளோடும் சாரணர்களோடும் மற்றுமுள்ள தேவர்களோடுங் கூடி ஸமஸ்த லோகங்களையும் பரிபாலித்து வந்தான்.

நாற்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

திதி தவஞ்செய்தல்

திதி தேவி தன்புத்ரர்களாகிய அஸுரர் அனைவரும் தேவர்களால் அடியுண்டு மாண்டுபோனதைக் கண்டு துயரமடைந்து மரீசிமாமுனிவர் குமாரராகிய காஸ்யபரென்னும் தன்பர்த்தாவை நோக்கி' நாதா! பலம் பொருந்திய தங்கள் புத்ரர்களால் என் பிள்ளைகள் அடியோடு மாண்டுவிட்டார்கள். ஆதலால் நான் தவத்தின் மகிமையினால் மிகுந்த வீரியமுள்ளவனும் இந்திரனைக் கொல்ல வல்லவனும் மூவுலகங்களையும் ஆளத்தக்கவனுமான ஒரு புத்திரனைப் பெற விரும்புகிறேன். ஆனதுபற்றிப் பிள்ளையில்லாத நான் இப்பொழுது தவஞ்செய்யப்போகிறேன். எனக்குப் பலம்பொருந்தி மேலான வில்லைத் தாங்கத்தக்க வல்லமை பெற்றவனும், எனது நிலையை அறிந்தவனும் யாவரையும் ஒருமிக்கப் பார்க்கும் தன்மையுடையவனும், உலகங்களுக்கெல்லாம் அதிபதியாகுந் திறமுடையவனும், இந்திரனை ஸம்ஹரிக்க வல்லவனுமாகிய புதல்வனைத் தரவேண்டும். அதற்காக நான் தவஞ்செய்யும்படி எனக்கு [1] அநுமதியும் அளிக்கவேண்டும்' என்று வேண்டிக் கொண்டாள்.

---

1. ஸ்திரீகளுக்குப் பர்த்தாவின் அநுமதி யில்லாமல் ஸ்வதந்த்ரமாகத் தவம் முதலியவற்றில் அதிகாரமில்லாமையால் திதி காஸ்யபரை அநுமதி கொடுக்கும்படி ப்ரார்த்தித்தாள்.

மஹாநு பாவராகிய காஸ்யபரும் திதி கூறிய மொழிகளைக்கேட்டுத் துயரங்கொண்டு நிற்கின்ற அவளை பார்த்து, 'நீ வேண்டினபடி ஆகட்டும். உனக்குச் சுபமுண்டாகக்கடவது. நீ பிள்ளை பிறக்குமளவும் தவம் புரிந்து ஆச[illegible]த்துடன் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அப்படி யிருந்தால் யுத்தத்தில் இந்திரனைக் கொல்ல வல்லவனுகிய புத்திரனைப் பெறுவாய். ஆயிரம் வருஷங்கள் வரையில் சுசியாயிருந்தால் மூவுலகங்களையும் ஆளவல்லவனுகிய குமாரனை என் அநுக்கிரகத்தினுல் பெறுவாய்' என்றுரைத்து அம்மடைந்தையைத் தன்கையினுல் தடவிக்கொடுத்துத் தேறுதல்சொல்லி வயிற்றை ஸ்பர்சித்து 'உனக்கு க்ஷேமம்உண்டாக்குக' என்று மொழிந்து தவஞ் செய்யச் சென்றூர். புருஷோத்தமா! ராமா! இவ்வாறு காஸ்யபர் சென்றபிற்பாடு திதி சந்தோஷத்துடன் விசால புரத்துக்குப் பூர்வஸ்தானமாகிய குசப்லவமென்னும் இவ்விடத்துக்கு வந்து அதிக தாருணமாகத் தவம்புரிந்தாள். அம்மடந்தை தவம் நடத்திக் கொண்டிருக்கையில் ஆயிரங்கண்ணனுகிய தேவேந்திரன் விநயம் முதலிய ஸகல நற்குணங்களும் அளவின்றி விளங்கும்படி நடித்து அவளுக்குப் பணிவிடை புரிந்து வந்தான். வானவர்க்கரசன் அவளுக்குவேண்டிய அக்னி, தர்ப்பம், ஸமிதை, தீர்த்தம், பழம், கிழங்கு முதலியவற்றையும் மற்றும் அவள் விரும்புகின்ற எல்லாவற்றையும் கொண்டுவந்து கொடுத்தும், அவளுக்கு ஶ்ரமமா யிருக்கும்பொழுது உடம்பைப் பிடித்தும், விசிறியும் இன்சொல்லுரைத்தும் தவறுமல் பரிசரணை செய்துகொண்டு வந்தான்.

அப்பொழுது ஆயிரமாண்டுகள் நிரம்புவதற்குப் பத்து வருஷங்கள் குறைந்திருந்தது. ஒருநாள் திதி இந்திரன்செய்த சுஶ்ரூஷையில் ப்ரீதியடைந்து அவனைப்

பார்த்துக் 'குழந்தாய் மஹாநுபாவராகிய உன் தந்தை யைக்கேட்டு ஆயிரமாண்டுகள் நிறைந்த பின்பு பிள்ளை யைப்பெறும்படி யான் ஒருவரம் பெற்றிருக்கிறேன். அதற் காகவே நான் இப்பொழுது தவஞ்செய்து கொண்டிருக் கிறேன். வீரர்களில் தலைவனே! ஆயிரமாண்டுகள் நிரம்பு வதற்கு இன்னும் பத்து வருஷங்கள் குறைவாயிருக் கின்றன. உனக்குச் சுபமுண்டாகட்டும். அந்தப் பத்து வருஷங்கள் நிறைந்த பிற்பாடு நீ உனது உடன்பிறந்த வனைக் காண்பாய். அவன் உன்னை வெல்லுவதற்கு உத்ஸாஹங்கொண்டிருப்பான். ஆயினும் உனக்காக நான் ஸமாதானப்படுத்தி உன்னிடத்தில் விஸ்வாசத்துடன் இருக்கச் செய்கிறேன். நீ அவனுடன் கூடிப் பூவுலகங்க ளையும் வென்று மனக்கவலை தீர்ந்து ஸுகமாக வாழ்ந்தி ருப்பாய்' என்று சுஶ்ரூஷையாலுண்டான ஸந்தோஷத் தினால் மதி மறந்து மொழிந்தாள்.

இப்படிச் சொல்லிய அந்தத் திதியானவள் ஸூர்யன் மற்றொருநாள் ஆகாயமத்தியிற் சென்று நடுப்பகலாயி ருக்கையில் நித்திரையினால் தேகம் பரவசமாகத் தலை மாட்டில் காலைவைத்துப் படுத்தாள். இந்திரன் அவள் சுசி யில்லாமல் கால்மாட்டில் தலையையும் தலைமாட்டிற் காலையுமாக வைத்துக்கொண்டு நித்திரை செய்வது

---

1. பகலில் நித்ரை கூடாதென்கிற சாஸ்த்ர நிஷேதத்தினால் ஆஸனத்திலிருந்து கொண்டே உறங்கும்போது தலை சாய்ந்து காலில் படுவதால் அசுசி வந்ததென்பார் சிலர். தலை வைக்குமிடத்தில் காலை யும் கால் வைக்குமிடத்தில் தலையையும் வைத்துப் படுத்தாளாகை யால், அசுசி வந்ததென்பார் சிலர். கிழக்குத் தெற்குக்களில் தலை வைக்கவேண்டு மென்கிற ஸ்ம்ருதிக்கு விரோதமாய்ப் படுத்தாளாகை யால் அசுசி என்பார்சிலர். மற்றுஞ் சிலர் க்ருஷ்ணாஜினத்தின் தலைப் பக்கம் காலையும் கால்பக்கம் தலையையும் வைத்துப் படுத்தாளாகை யால் அசுசி வந்ததென்று கூறுவார்கள்.

கண்டு அவள் வீண்கர்வப் பட்டாளென்று தனக்குள் சிரித்துக்கொண்டு அவள் கர்ப்பத்தைக் கெடுப்பதற்குத் தனக்கு அவகாசம் நேரிட்டதுபற்றி ஸந்தோஷித்து அவள் சரீரத்தின் உள்ளே புகுந்து மிகவும் தீரனுகையால் வஜ்ராயுதத்தினுல் அக்கருவை ஏழுதுண்டங்களாகப் பிளந்துவிட்டான். இங்ஙனம் இந்திரன் அநேகம் கணுக்களையுடைய தனது வஜ்ராயுதத்தினுல் கருவைப் பிளந்துகொண்டிருக்கையில் அச்சிசு சிறிய குரலுடன் அழத்தொடங்கிற்று. பின்பு திதியும் அவ்வழுகுரலைக் கேட்டு எழுந்திருந்தாள். தேவேந்திரன் அந்தச் சிசுவைப் பார்த்து 'அழவேண்டாம், அழவேண்டாம்' என்று உரைத்த வண்ணமே மிகக்களிப்புடன் அதைத் துண்டு துண்டாகச் செய்தான். திதி அதையறிந்து 'கொல்லவேண்டாம், கொல்லவேண்டாம்' என்று மொழியத் தேவாதிபதி தாய்வார்த்தையில் கௌரவம் வைத்து வயிற்றிலிருந்து வஜ்ராயுதமும் கையுமாக வெளியே வந்து நின்று கையைக் கூப்பிக்கொண்டு திதியைப் பார்த்துத் 'தாயே! நீ சுசியில்லாமல் கால்மாட்டில் தலையை வைத்துக்கொண்டு நித்திரை செய்தாயாகையால் எனக்குச் சமயம் கிடைத்தது. நான் என்னை யுத்தத்தில் கொல்ல வல்ல இச்சுவை ஏழு துண்டங்களாகக் கண்டித்துவிட்டேன். தாயே! இதை நீ பொறுத்துக்கொள்ளவேண்டும்! என்று மொழிந்தான். நாற்பத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸப்த மருத்துக்களின் வ்ருத்தாந்தம்.

இவ்வாறு தன் கருவை இந்திரன் ஏழு துண்டங்களாகச் செய்ததற்குத் திதி மிகவும் துயரமடைந்து வல்லவனுகிய தேவேந்திரனை நோக்கி 'ஓ வானவர்க்கரசனே! எனது அபராதத்தினுல் இந்தக் கரு ஏழுதுண்டங்

ளாகி வீணய்விட்டது. இதில் உன் பிழை யாதொன்றும் இல்லை. வீணய்ப்போன இந்தக் கருவுக்கு ஒரு மேன்மை கொடுக்க விரும்புகின்றேன். இந்தத் துண்டங்கள் ஏழும் [1] வாயுலோகங்கள் ஏழையும் பாதுகாப்பவர்களாயிருக்கட்டும்; குழந்தாய்! இந்த ஏழு புத்ரர்களும் வாத ஸ்கந்தாபிமான தேவதைகளாகித் தேவரூபம் தரித்து [2] மாருதர்கள் என்னும் பெயர் பெற்று வானுலகில் வாழ்ந்திருக்கட்டும். ஒருவன் ப்ரஹ்மலோகத்திலும் மற்றொருவன் இந்த்ரலோகத்திலும் திரிந்துகொண்டிருக்கட்டும். மூன்றாவன் பெரும்புகழ்பெற்று வாயுவென்னும் பெயர் கொண்டு விஷ்ணுபதம் என்று வழங்குகின்ற விஷ்ணுலோகத்தில் வஸித்திருக்கட்டும். எனது மற்றைய நான்கு புத்ரர்களும் உனது ஆணைக்குட்பட்டுத் தேவத்வம்பெற்று மாருதர்களென்னும் பெயருடன் திசைகள் நான்கிலும் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கட்டும்.' என்று இனியசொற்களைச் சொன்னாள்.

பகைவரைவெல்லும் திறமுடையவனாகிய தேவேந்திரன் கையைக்கூப்பிக்கொண்டு 'தாயே! எல்லாம் நீ சொன்

---

1. உஉநஃ ஸ்பர்ஸனோ வாயு ரநிலஸ்ச தயாபரஃ। ப்ராணஃ ப்ராணேஸ்வரோ ஜீவ இத்யேதே ஸப்தமாருதாஃ' என்று வாயுக்கள் எழுவர். அப்படியே அவர்கள் லோகங்களும் ஏழாயிருக்கும். ஆவஹர் ப்ரவஹர், ஸம்வஹர், உத்வஹர், விவஹர் பரிவஹர் பராவஹர் என்று ஸப்த மருத்துக்கள் ஸ்ரீவிஷ்ணு புராணத்திற் சொல்லப்பட்டுள்ளது.

2. மருத்துக்களென்றால் வாயுக்கள். அவைகளுக்கு அபிமானி தேவதைகளாகையால் (மருதாமிமே மாருதாஃ) மாருதர்களென்றும் பெயர் பெற்றார்கள். அன்றி இந்திரன் அச்சிவைப் பார்த்து 'மாருதஃ, மாருதஃ' 'அழவேண்டாம், அழவேண்டாம்' என்று மொழிந்தானாகையால் மாருதர்களென்னும் பெயர் பெற்றார்கள் என்க. தகாரம் 'ப்ருஷோதராதீநி' என்கிற ஸூத்ரத்தின்படித் தகாரமாக மாறிற்று.

னபடியே நடக்கட்டும். உன் புத்ரர்கள் யாவரும் தேவத்வம்பெற்று ஸஞ்சரிப்பார்களாக. உனக்கு நன்மையுண்டாகுக' என்று உரைத்தான். ராமனே! தாயும் பிள்ளையுமாகிய திதியும் தேவேந்திரனும் இப்படி அந்தத் தபோவனத்தில் நிச்சயம்பண்ணிக்கொண்டு தங்கள் கருத்து நிறைவேறப்பெற்று ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்துபோனார்கள் என்று எனக்குக் கேள்வி. முன்பு இந்திரன் தவத்திலிருந்த திதிக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்த இடம் இதுதான். அஃது இப்பொழுது விசாலையென்று பெயர் பெற்றிருக்கின்றது. இனி இதில் வஸிக்கின்ற அரசனைச் சொல்லுகிறேன்.

இக்ஷ்வாகு மஹாராஜாக்கு அலம்புஸை என்பவளிடத்தில் பரமதார்மிகனாகிய விசாலனென்று ஒரு புத்திரன் பிறந்தான். அவ்விசாலன் தான் இங்கு விசாலையென்னும் இப்பட்டணத்தை நிருமித்தான். பின்பு விசாலமஹாராஜனுக்கு மிகுந்தபலமுள்ள ஹேமசந்திரனென்னும் புத்திரன் உண்டாயினான். ஹேமசந்திரனுக்கு ஸுசந்திரனென்பவன் தோன்றினான். ஸுசந்திரனுக்குத் தூம்ராஸ்வனென்னும் பிள்ளை பிறந்தான். தூம்ராஸ்வனுக்கு ஸ்ருஞ்ஜய னென்பவன் உதித்தான். ஸ்ருஞ்ஜயனுக்கு மிகுந்த பராக்ரமமும் சிறந்தஸம்பத்தும் அமைந்த ஸஹதேவனென்பவன் பிறந்தான். ஸஹதேவனுக்குப் பரமதார்மிகனாகிய குசாஸ்வனென்னும் புத்திரன் தோன்றினான். குசாஸ்வனுக்கு மிகுந்த தேஜஸ்ஸும் அளவற்ற பராக்ரமமும் பொருந்திய ஸோமதத்தனென்பவன் பிறந்தான். ஸோமதத்தனுக்குக் காகுஸ்தனென்னும் குமாரன் தோன்றினான். அந்தக் காகுஸ்தனுடைய பிள்ளை மிகுந்த பராக்ரமசாலியும் தேவர்களோடொத்தவனும் பகைவரால் வெல்லமுடியாதவனுமாகிய

ஸுமதியென்பவன். அவன் தான் இப்பொழுது இவ் விசாலாநகரத்தில் வசித்துவருகிறான்.

இக்ஷ்வாகுவின் அநுக்கிரகத்தினால் விசாலாபுராதிபதிகளாகிய அரசர்கள் யாவரும் தீர்க்கமான வாழ்நாளையும் மிகுந்த தைரியத்தையும் சிறந்த வீரியத்தையும் பெற்ற பரமதார்மிகர்கள். ராமனே! நாம் இன்றிரவு இங்கு வஸித்திருப்போம். நாளை விடியற்காலத்தில் ஜனக மஹாராஜனைப் பார்க்கப் போகலாம்' என்றார். தேஜஸ்வியும் யஶஸ்வியுமாகிய ஸுமதியும் விச்வாமித்ர முனிவரின் வரவைக் கேட்டுப் புரோஹிதர்களோடும் பந்துக்களோடுங்கூடி எதிர்கொண்டுவந்து அம்மாமுனிவரைப் பூஜித்துக் கைகைக்கூப்பிக்கொண்டு க்ஷேமம் விசாரித்து 'விஶ்வாமித்ரமுனிவரே! தாங்கள் என் தேசத்துக்கு எழுந்தருளித் தர்சனங் கொடுத்ததனால் நான் மிகவுந் தன்யனாயினேன். மஹாநுபாவராகிய தங்கள் அநுக்கிரகத்தையும் நான் பெற்றேன். இனி எனக்கு நிகரான பாக்கியசாலி எவருமில்லை' என்று மொழிந்தான்.

நாற்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

அஹல்யா வ்ருத்தாந்தம்.

இங்ஙனம் ஸுமதி மஹாராஜனும் விஶ்வாமித்ர முனியும் ஒருவருக்கொருவர் க்ஷேமம் விசாரித்த பின்பு ஸுமதி மன்னவன் அம்முனிவரை நோக்கி 'விஶ்வாமித்ர முனிவரே! இக்குமாரர்கள் இருவரும் யார்? ஸ்ரீமஹாவிஷ்ணுவைப்போன்ற பராக்ரமம் உடையவர்களாகத் தோற்றுகின்றார்கள். யானையைப்போலக் கம்பீரமாகவும் சிங்கத்தைப்போல அழகாகவும் பெரும்புலியைப் போலப் பயங்கரமாகவும் மதித்த விருஷபத்தைப் போ

லக் கர்வம் நிரம்பியதாகவும் இம்மஹாவீரர்களின் நடை புலப்படுகின்றது. இவர்கள் கண்கள் தாமரையிதழ் போல அகன்று செவ்வரியோடி யாவருங்கண்டு மதிமயங் கும்படி லாவண்ய வெள்ளம் குடிகொண்டு விளங்குகின் றன. இவ்விருவரும் கத்தி அம்பறாத்தூணி வில்லென் னும் இவைகளைத் தரித்துப் பல ஆபரணங்களை அணிந் தாற் போல ப்ரகாசிக்கிறார்கள். அஸ்வினிதேவதை களைப் போல உருவத்தில் ஒப்பற்று அதற்கேற்ற யௌவ னமும் பெற்றுப் பூமியில் ஸஞ்சரிக்கவேண்டு மென்று எண்ணங்கொண்டு வந்த அழகிய தேவகுமாரர்களோ என்னும்படி தோற்றுகின்றார்கள். இக்குமாரர்கள் இக் கடுங்கானகத்தை எப்படிக் கடந்து வந்தார்கள். இவர் கள் உருவத்தைப் பார்த்தமாத்திரத்தில் கருத்தெல்லாம் நிறைந்திருப்பவர்களென்று தோற்றுகின்றது. இவர்கள் யாதுபயனை விரும்பி யாருக்காக இங்கு வந்தார்கள். முனி வரே! தாங்கள் எனக்குத் தெரியச் சொல்லவேண்டும். சந்த்ர ஸூர்யர்கள் ஆகாயத்தை விளங்கச் செய்வது போல இவர்கள் என் அரண்மனையை விளங்கச் செய்கி றார்கள் உயரம் முதலான தேகப்ரமாணத்தாலும் மனத்திலுள்ள கருத்தை வெளிப்படுத்துகின்ற சிரிப்பு முதலிய குறிப்புக்களாலும் பேச்சு நடைமுதலிய சேஷ் டைகளாலும் ஒருவர்க்கொருவர் ஒத்திருக்கிறார்கள். மே லான ஆயுதங்களைத் தரித்து மிகுந்த வல்லமை அமைந்து விளங்குகின்ற இம்மஹாநுபாவர்கள் இருவரும் நடக்க முடியாத இந்தக் கொடியவழியைக் கடந்து வருவதற் குப் பயன் யாது? இதன் உண்மையை அறியவிரும்புகி றேன்' என்றான்.

அதற்கு விஸ்வாமித்ரர் ஸித்தாஸ்ரமத்துக்கு வந்த தும், அங்கு யாகத்தை அழிக்க வந்த அரக்கர்களைக்

கொன்றதும், இப்பொழுது ஜனகமஹாராஜாவின் யாகத்தைப்பார்க்கும் பொருட்டு மிதிலாபுரத்துக்குப் போவதும் ஆகிய ராம லக்ஷ்மணர்களுடைய வ்ருத்தாந்தங்களைச் சொன்னார். ஸுமதிமன்னவன் தனக்கு மேலான அதிதிகள் நேரிட்டதற்கு மிகுந்த சந்தோஷமடைந்து யாவரும் பூஜிக்கத்தக்க மகிமைபொருந்திய தசரத சக்ரவர்த்தியின் குமாரர்களிருவரையும் பரிவுடன் விதிப்படி உபசரித்துக் கொண்டாடினான். பின்பு ராமலக்ஷ்மணர்களிருவரும் ஸுமதிமன்னவன் அரண்மனையில் ஓரிரவு வஸித்திருந்து மற்றை நாள் விடியற்காலத்தில் எழுந்திருந்து புறப்பட்டு மிதிலா நகரத்தை நோக்கிச்சென்றார்கள். அப்பொழுது முனிவர்கள் யாவரும் ஜனகராஜன் பட்டணமாகிய அழகான மிதிலை நகரத்தைக் கண்ணுற்று 'நன்று நன்று' என்று மகிழ்ந்து கொண்டாடினார்கள். அவர்கள் இங்ஙனம் நடந்து செல்கையில் ராமன் அம்மிதிலைக்கருகில் உள்ள ஒரு வனத்தில் ஜனங்கள் ஒருவருமில்லாமல் அழகாய் விளங்குகின்ற மிகவும் பழமையான ஒரு ஆஶ்ரமத்தைக் கண்டு விஶ்வாமித்ர முனிவரை நோக்கி'மஹாநுபாவரே! இவ்விடம் மிகவும் அழகு பொருந்தியிருக்கிறது. ஆனால், இங்கு ரிஷிகள் ஒருவரும் புலப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன? முன்பு இது யாருடைய ஆஶ்ரமம்? இதைக்கேட்க விரும்புகின்றேன்' என்றான்.

அவ்வார்த்தைக்குப் பேசவல்லவராகிய விஶ்வாமித்ர முனிவர் அஹல்யையின் சாபத்துக்கு விமோசனம் நேரிட்டதே யென்று ஸந்தோஷமடைந்து 'ராமா! முன்பு இது மஹாநுபாவராகிய கௌதம மஹர்ஷியின் ஆஶ்ரமம். இது மிகவும் பெருமை பொருந்தி யிருந்ததுபற்றித், தேவர்களுங்கூட இதை அதிகமாய்ப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். பெருங் கீர்த்திபெற்ற அந்தக்

கௌதம முனிவர் தன் பத்னியான அஹல்யையுடன்கூடி முன்பு பல வருஷங்கள் இதில் தவஞ் செய்துகொண்டிருந்தார். ஒருகாலத்தில் இந்திரன் அம்முனிவர் இல்லாத ஸமயம் தெரிந்து கௌதமமுனிவரைப்போல வேஷம் பூண்டுவந்து அஹல்யையைப் பார்த்து 'ஓ மடந்தையர்மணியே! காமம் மீறிப் போகத்தை விரும்புகின்றவர்கள் இஷ்டப்படி க்ரீடிப்பர்களே யன்றி ருதுகாலத்தை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். மேலும் பிரமனால் தன் வல்லமையெல்லாம் தோன்றும்படி ஒரு குறையுமில்லாமல் நிருமிக்கப்பட்டு 'மிகவும் அழகு பொருந்தி விளங்குகின்ற உன்னைக் கண்டால் எவனுக்குத்தான் மனம் தளராதிருக்கும்? உனது அழகான இடையைப் பார்த்து நான் இப்பொழுதே உன்னைப் புணர விரும்புகிறேன்' என்று வேண்டிக்கொண்டான்.

அஹல்யை அதைக் கேட்டுத் தனக்குள் கௌதம முனிவர் எப்பொழுதும் இவ்வண்ணம் வேண்டிக்கொள்ள மாட்டார். சாதாரணமான மனிதர்கள் இங்கு நெருங்கவும் பயப்படுவார்கள். இந்திரனொருவன் தான் என்னை நெடுநாளாக விரும்பி யிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆகையால், இவன் பெரும்பாலும் தேவேந்திரனாகவே யிருக்கவேண்டும். முனிவேஷம் பூண்டு வந்திருக்கிறான்.' என்று நிச்சயித்து வானவர்க்கரசனாகிய அவ்விந்திரனோடு புணரவேண்டுமென்னும் குதூஹலங்கொண்டு சம்மதித்து அவனோடு கலந்து தன் கருத்து ஈடேறினதற்கு மனமகிழ்ச்சி யடைந்து இந்திரனைப்பார்த்து 'வானவர்கோனே! நான் உன்னுடன் புணர்ந்து பயன்பெற்று மகிழ்ந்தேன். இனி நீ இவ்விடம் விட்டு வேகமாய்ச் செல்வாயாக. நீ தேவர்களுக்கதிபதி. யாவர்க்கும் பெருமையைக் கொடுக்கவல்லவன். ஆகையால், ஒருவர்க்கும்

தெரியாதபடி இவ்வண்ணஞ் செய்த உன்னையும் என்னையும் எப்பொழுதும் பாதுகாத்துக் கொள்' என்றாள். இந்திரனும் அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்ட வண்ணமே அஹல்யையைப் பார்த்து "மங்கையர்க்கரசியே! நான் மிகவும் ஸந்தோஷ மடைந்தேன். இனி இங்கு நிற்கமாட்டேன். வந்தவழியே செல்கிறேன்" என்று சொல்லிக் கௌதம முனிவர் எங்குவந்து விடுவாரோ வென்று மனத்தில் அச்சங்கொண்டு அவ்வாஶ்ரமத்தினின்றும் விரைந்து வெளியே வந்தான்.

அப்பொழுது பரிசுத்தமான தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸமித்தையும் தர்ப்பத்தையும் எடுத்துக்கொண்டு அக்கியைப்போலப் பளபளவென்று மிகுந்த ஒளியுடன் விளங்குகின்ற கௌதம மஹர்ஷி உள்ளே புகுந்தார். அவர் தனது தவமகிமையினால் தேவாஸுரர்களாலும் எதிரிடமுடியாதவர். அப்படிப்பட்ட தபோநிதியாகிய கௌதமமுனி ஆஶ்ரமத்துக்குள் நுழைந்து வருவதைக் கண்டு தேவந்திரன் அச்சமுற்று நடுநடுங்கி கலங்குலைந்து முகவொளிமாறி நின்றான். நல்லொழுக்கம் பொருந்திய கௌதம மஹர்ஷி முனிவேடம் பூண்டு கொடுஞ்செயலுக்காக வந்த இந்திரனைக் கண்டு கோபாவேசங்கொண்டு 'அடா! மதிகெட்டவனே! நீ என் வேஷங்கொண்டு செய்யத்தகாத இச்செயலைச் செய்தனை. ஆகையால் உனது அண்டங்கள் இரண்டும் அற்றுவிழுந்து போகட்டும். நீ இன்று முதல் நபும்ஸகனைப்போல் இருப்பாயாக' என்று சபித்தார். இங்ஙனம் மஹாநுபாவராகிய அம்முனிவர் கோபாவேசங்கொண்டு சபித்த க்ஷணத்திலேயே வானவர்க்கரசனது அண்டங்கள் இரண்டும் அறுந்து கீழே விழுந்து விட்டன.

உடனே முனிவர் அஹல்யையைப் பார்த்து 'நீ இவ்வாஶ்ரமத்தில் அநேகமாயிரம் வருஷங்கள் வரையில் வாயுபக்ஷணஞ் செய்து கொண்டு அன்னம் இல்லாமல் அதனால் வருத்தமடைந்து [1] புழுதியில் புரண்டு எவ்வகை ப்ராணிகளுக்கும் புலப்படாதவளாகி வஸித்திருப்பாயாக. யாவராலும் எதிரிடப்போகாத பராக்ரமம் பொருந்தியவனும் தசரத சக்ரவர்த்தியின் புதல்வனுமாகிய ராமன் பாழடைந்து பயங்கரமாயிருக்கின்ற இவ்வாஶ்ரமத்துக்கு வரும்பொழுது அவனுடைய பாதாரவிந்தத்தின் [1] பராகம் பட்டுப் பரிசுத்தையாகி லோப மோஹங்களை விட்டு அவனுக்கு அதிதி பூஜை செய்து மறுபடியும் உன் உருவத்தைப் பெறுவாய்' என்று சாபமிட்டுச் சாபத்திற்கு முடிவையுங் கூறினர். மிகத் தேஜஸ்ஸுடையவரான கௌதமமுனிவர் கொடுந்தொழில் புரிந்த அஹல்யையைக் குறித்து இவ்வண்ணமுரைத்து இவ்வாச்ரமத்தைவிட்டு ஸித்தர்களாலும் சாரணர்களாலும் எப்பொழுதுஞ் சூழப்பட்டு விளங்குகின்ற இமயமலையின் சிகரத்திற்சென்று சாபங்கொடுத்த பாபத்துக்கு ப்ராயச்சித்தத்தின் பொருட்டுத் தவஞ் செய்து வந்தார்.

நாற்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

அஹல்யை சாபந்தீர்ந்து ராமனைப் பூசித்தல்.

பின்பு தேவேந்திரன் அண்டங்கள் அறுந்து விழுந்துவிட்டதனால் மிகுந்த மனக்கலக்கமுற்று ரிஷிக்கூட்டங்கள் நிறைந்து சாரணர்களோடுகூடிய அக்னி முதலான

---

1. அஹல்யை புத்திபூர்வகமாக வியபிசாரம் செய்ததற்காகக் கௌதமமுனிவர் சாபரூபமாக ப்ராயச்சித்தம் விதித்தனர். ஆகையால் அஹல்யையைக் கல்லாகச் சபித்தாரென்று சொல்லலாகாது.

தேவர்களை நோக்கி 'மஹாநுபாவராகிய கௌதம முனிவர் ஸமஸ்த தேவர்களையும் அவரவர்கள் பதங்களிலிருந்து நழுவச்செய்யும்படி மிகவும் கோரமாகத் தவம்புரிந்து வந்தார். எந்தக் காரணத்தினுலாவது அவருக்குக் கோபத்தை உண்டு பண்ணித் தவத்தைக் கெடுக்கும் பொருட்டு நான் தகாச்செயலைச் செய்தேன். அக்காரியம் தேவர்களுக்காகவே யன்றி வேறன்று. அதன்பொருட்டு அம்முனிவர் பெருத்த கோபாவேசங் கொண்டு எனது அண்டங்களைப் போக்கினுர். தன் அன்புக்குரிய மனைவியான அழகில் மிகுந்த அஹல்யையையும் சபித்து விட்டார். எனக்கும் அஹல்யைக்கும் பெருஞ் சாபம் கொடுத்தது பற்றி அவருடைய தவம் குன்றிவிட்டது. இனித்தேவர்களை அவரால் கெடுக்க முடியாது. ஆனுல், நான் அதன் பொருட்டு அதிகமாய்க் கஷ்டப்படுகிறேன். தேவர்களே! நீங்கள் அனைவரும் ரிஷிகளும்கூடி உங்களுக்கு ஸஹாயஞ் செய்த எனக்கு அண்டங்கள் மீளவும் உண்டாகும்படி செய்யவேண்டும்' என்று வேண்டிக்கொண்டான்.

இந்திரன் மொழிகளைக் கேட்டு அக்னி முதலான தேவர்கள் ஸகல மருத்துக்களோடுங்கூடிப் பித்ரு தேவ

முன்போல எல்லோருக்கும் புலப்படும்படியான உன்னுடைய தேஹத்தைப் பெறுவாயென்று பொருள் கொள்ளவேண்டும். ஆனுலும் 'ஸாதஸ் தஸ்ய ராமஸ்ய பாதஸ்பர்ஶாந் மஹாத்மந:। அஹல்யா ஸுரூபா வநிதா ஸமாக்ராந்தா மஹாஶிலா' என்று பாத்மபுராணத்தில் அஹல்யைக்குச் சிலாரூபஞ் சொல்லப்பட்டது. இது கல்பாந்தரவ்ருத்தாந்தத்தை அநுஸரித்துச் சொல்லபபட்டதென்று சொல்லுவார்கள். மற்றுஞ் சிலர் பாத்ம புராணத்தை அநுஸரித்து அஹல்யை சிலையாகச் சபிக்கப்பட்டாளென்று கொண்டு, அதற்கநுகுணமாகச் சிலாரூபத்தை விட்டு உனக்கு அஸாதாரணமாயுள்ள தேகத்தைப்பெறுவாயென்றும் சொல்வார்கள்.

1. பாரகம்-தூசி. 2. தேசு-தேஜஸ்ஸு.

தைகளிடஞ்சென்று இப்பொழுது யாகத்தில் உங்களுக்குப் பாகமாக ஏற்படுத்தியிருக்கிற இம்மேஷங்களுக்கு அண்டங்கள் இருக்கின்றன. கௌதம சாபத்தினால் இந்திரனுக்கு அண்டங்கள் அறுந்து விழுந்துவிட்டன. ஆகையால் இந்த ஆட்டுக்கிடாக்களின் அண்டங்களைக் கொய்து இந்திரனுக்குக் கொடுக்கவேண்டும். அண்டங்கள் இல்லாவிட்டால் ஸந்தோஷம் குறையுமேயென்று நினைக்கவேண்டாம். இவைகளை அண்டமற்றவையாகச் செய்தபோதிலும் உங்களுக்கு மிகுந்த ஸந்தோஷத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும். இதுவுமன்றி இன்றுமுதல் உங்களுக்கு ஸந்தோஷமுண்டாகும் பொருட்டு யாகஞ் செய்கின்றமானிடர்கள் அண்டமில்லாத மேஷத்தின் மாம்ஸத்தையே கொடுப்பார்கள். அஃது உங்களுக்கு மிகுந்த ஸந்தோஷத்தை விளைக்கும்' என்று சொன்னார்கள். பித்ரு தேவதைகள் அக்னி முதலிய தேவர்களின் வசனத்தைக் கேட்டு அப்பொழுதே யூபஸ்தம்பத்திற் கட்டப் பட்டிருந்தமேஷத்தின் அண்டங்களைக் கொய்து இந்திரனுக்கு உபயோகப்படுத்தினார்கள்.

க்ாகுஸ்தனே! அது முதலாகப் பித்ருதேவதைகள் யாகங்களில் வந்து தங்களுக்குக் கொடுக்கிற மேஷங்களுள் அண்டங்களைப் போக்கியே புசித்து வருகிறார்கள். மேஷங்களை ,அண்டங்களின்றித் தங்களுக்குக் கொடுக்கின்றமானிடர்களுக்கும் அந்தப் பித்ருதேவதைகள் முன்போலவே பலன்களைக் கொடுத்து வருகிறார்கள். இந்திரன் மிகுந்த ப்ரபாவமுடைய கௌதம மஹர்ஷியின் தவமகிமையினால் அற்று விழுந்த அண்டங்களுக்குப் பதிலாக அன்றுமுதல் மேஷத்தின் அண்டங்களைப் பெற்றவனாயினான். ராமா! நீ மிகுந்த மகிமை அமைந்தவன். நீ அங்குப் புகும்வரையில் தான் அஹல்யைக்குச் சாபமிருக்கும்,

ஆதலால் நீ நல்லொழுக்க முடையவராகிய அம்முனிவ ரின் ஆஶ்ரமத்துக்கு வந்து தேவகன்னிகையைப்போல் ஒப்பில்லாத ரூபம்பொருந்தியவளான அஹல்யையைச் சாபத்தினின்றும் விடுபடச்செய்வாய்' என்று சொன்னார். அவ்வசனத்தைக் கேட்டு ராமன் லக்ஷ்மணனோடுங்கூடி விஶ்வாமித்ர முனிவரை முன்னிட்டுக் கொண்டு அவ்வாஶ் ரமத்துக்குச் சென்று அஹல்யைக் கண்டான்.

மிகுந்த பாக்கியம் பொருந்திய அவ்வஹல்யையும் தன் பர்த்தாவின் சாபப்படி வாயுபக்ஷணம் செய்துகொ ண்டு தவப்பெருக்கினால் மேலும் மேலும் பெருகிவரு கின்ற ஒளியுடன் பளபளவென்று விளங்கி மனிதர்களும் தேவர்களும் அஸுரர்களுமாகிய யாவராலும் அருகில் வந்து கண்கொண்டு காணக்கூடாதபடி பிரமதேவன் தன க்குள் வல்லமை யனைத்தும் விளங்கும் வண்ணம் மிக்க ஊக்கத்துடன் நெடுநாள் முயன்று படைத்தானென் னும்படி திவ்ய ரூப லாவண்யங்கள் அமைந்து விளங்கி னாள். இன்னும் அவள் தேவர்கள் அனைவருங்கூடித் தங் கள் அற்புத சக்தியைக்கொண்டு நிருமிக்கப்பட்டவள் போலவும், விருக்ஷங்களும் கொடிகளும் பூக்களுமாகிய இவைகளின் இடையிலிருப்பது பற்றிப் பனியும் மேகமும் மூடிய பூர்ணசந்திரன் போலவும், புகையுடன்கூடி யெரிகிற அக்னிபோலவும், ஜலத்தின் மத்தியில் பளபள வென்று ப்ரகாசிக்கின்ற சூரிய மண்டலம் போலவும் தோன்றினாள்.

அவள் கௌதம மஹர்ஷியினுடைய சாபவசனத் தின்படி ராமதர்சனம் வரையில் யாவர்க்கும் புலப்படாதி ருந்து அப்பொழுது சாபத்தின்முடிவு நேரிட்டதுபற்றி விஶ்வாமித்ரர் முதலியவர்களது கண்ணுக்குப் புலப்பட் டாள். ராமலக்ஷ்மணர்கள் இருவரும் மிக ப்ரபாவம் பொ

ருந்திய கௌதமமுனியின் பத்னியாகிய அஹல்யையின் பாதங்களில்விழுந்து நமஸ்காரஞ் செய்தார்கள். அகல்யை தன் பர்த்தாவாகிய கௌதம மஹர்ஷியின் மொழியை நினைத்து அவர்களைப் பூஜிக்க முயன்று மிக்க ஊக்கத்துடன் சாஸ்த்ரங்களிற் சொல்லியபடி அர்க்கிய பாத்தியங் கொடுத்து அதிதி ஸத்காரம் செய்தாள். காகுஸ்தனும் அதை அங்கீகரித்தான். அப்பொழுது தேவர்கள் புஷ்ப வர்ஷங்களைப் பொழிந்தார்கள். துந்துபி வாத்தியங்களை முழக்கினார்கள். கந்தர்வர்களும் அப்ஸரஸ்த்ரீகளும் கூட்டங்கூட்டமாக வந்து ந்ருத்ய கீத'வாத்யங்களை நடத்தினார்கள். அஹல்யையும் தன் தவமகிமையினால் சரீர தோஷம் தீர்ந்து பரிசுத்தி பெற்று, ராமன் வந்தது முதலிய வ்ருத்தாந்தங்களைக் கண்டறிந்து யோக ப்ரபாவத்தினால் அவ்விடம் வந்த கௌதம மஹர்ஷியின் பக்கத்தில் வந்திருக்கக் கண்டு தேவர்கள் அனைவரும் நன்று நன்றென்று கொண்டாடினார்கள். மஹாநுபாவராகிய கௌதம மஹர்ஷியும் வெகுகாலமாகப் பிரிந்திருந்த அவ்வஹல்யையுடன் கலந்து ராமனை விதிப்படி பூஜித்து அவ்வாச்ரமத்தில் தவஞ்செய்யத் தொடங்கினார். ராமனும் முனிவர் வழி காட்டிக்கொண்டு முன்னே நடக்கச் சகோதரன் தொடர்ந்துவர அங்கிருந்து புறப்பட்டு மிதிலா நகரத்தை நோக்கிச் சென்றான்.

நாற்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் மிதிலைக்குப் போதலும்,
ஜனகன் விச்வாமித்ரரோடு
ஸம்பாஷித்தலும்.

பின்பு ராமன் லக்ஷ்மணனுடன்கூட விச்வாமித்ரமுனியை முன்னிட்டுக்கொண்டு அவ்வாச்ரமத்துக்கு வடகிழக்

காகச் சென்று ஜனகமஹாராஜாவினது யாகசாலைக்குப் போய்ச் சேர்ந்தான். அப்பொழுது யாகசாலையைக் கண்ட ராம லக்ஷ்மணர்கள் இருவரும் விஸ்வாமித்ரமுனிவரைப் பார்த்துப், 'பாக்யசாலியே! மஹாநுபாவனாகிய ஜநகமஹாராஜாவின் யாக ஸம்பார ஸாமக்ரீ மிகவும் அழகாய்ப் புலப்படுகின்றது. வேதங்களை ஓதி யுணர்ந்தவர்களும் பல தேசாந்தரங்களில் வாஸஞ்செய்பவர்களுமாகிய ப்ராஹ்மணோத்தமர்கள் அநேகமாயிரம் பெயர் இந்த யாகசாலையில் வந்திருக்கிறார்கள். அக்னிஹோத்ரத்துக்குரிய ஸம்பாரங்களை யேற்றிக்கொண்டு வந்த வண்டிகள் நூறுநூறாக நிறைந்து விளங்குகின்றன. நாம் தங்கியிருப்பதற்குரியதான ஒரு நல்லவிடத்தைத் தாங்கள் ஏற்படுத்துங்கள்.' என்றார்கள். முனிவர் ராமன் வசனத்தைக் கேட்டு ஜனக்கூட்டமின்றி ஜல ஸௌகர்யம் பொருந்தி விளங்குகின்ற பரிசுத்தமாகிய ஓரிடத்தில் விடுதி ஏற்படுத்தினார். அப்பொழுது ஜனகமகாராஜன் விஸ்வாமித்ரமுனிவர் வந்திருப்பதைக் கேட்டுத் தனது புரோஹிதராகிய சதாநந்தரை முன்னிட்டுக்கொண்டு மிக்க வணக்கத்துடன் வேகமாக எதிர்கொள்ள வந்தான். மஹாநுபாவர்களாகிய ஜனகனது ரித்விக்குகளும் வெகு வேகத்துடன் அர்க்கியம் முதலியவற்றை யெடுத்துக்கொண்டுவந்து விதிப்படி மந்த்ரங்களைச் சொல்லி அம்முனிவருக்குக் கொடுத்து அதிதி ஸத்காரம் நடத்தினார்கள். விஸ்வாமித்ரர் ஜனகமஹாராஜன் செய்த அதிதிபூஜையை அங்கீகரித்து அவனைப் பார்த்து அவன் க்ஷேமத்தையும் யாதொரு தீங்குமின்றி யாகம் நடக்கும் விதத்தையும் விசாரித்துப் பின்பு அங்கு வந்திருக்கிற ரித்விக்குகளையும் புரோஹிதராகிய சதாநந்தரையும் க்ரமப்படி [1]குசலம் விசாரித்தார்.

---

1. குசலம்-க்ஷேமம்.

பின்பு ஜனகமன்னவன் கையைக் கூப்பிக்கொண்டு அம்முனிவரை நோக்கி 'மஹாநுபாவரே! இம்முனிவர்களோடு கூடி ஆஸனத்தில் இருங்கள்!' என்று வேண்டிக்கொண்டான். விஸ்வாமித்ர முனிவரும் அரசன் கருத்துக்கிசைந்து ஆஸனத்தில் உட்கார்ந்தார். சதாநந்தரும் மற்றுமுள்ள ரித்விக்குகளும் உட்கார்ந்த பின்பு ஜனகமன்னவன் தானும் தன் மந்திரிகளுடன் உட்கார்ந்தான். நான்குபக்கத்திலும் உள்ள ஆஸனங்களில் யாவரும் க்ரமப்படி உட்கார்ந்துகொண்ட பின்பு ஜனகமஹாராஜன் விஸ்வாமித்ரரைப் பார்த்து 'முனிவரே! இப்பொழுதுதான் என் யாகம் நிரம்பப்பெற்றது. தேவர்களும் எனது யாகத்தை ஸபலமாக்கி விட்டார்கள். தங்கள் வரவுதான் யாகத்துக்குப் பலன். தாங்கள் முனிவர்களுடன் கூடி எனது யாகசாலைக்கு வந்ததுபற்றி நான் மிகவும் தன்யனுயினேன். ப்ரஹ்மரிஷியே! கற்றுணர்ந்தவர்களான ரித்விக்குகள் பலரும் என் யாகம் முடிவதற்கு இன்னும் பன்னிரண்டு தினங்கள் இருக்கின்றனவாகச் சொல்கிருர்கள். அவை கடந்தபிற்பாடு ஹவிர்ப்பாகங்களை வாங்கிக்கொள்ள வருகின்ற தேவர்களைப் பார்க்கத் தகும்' என்றுரைத்து முகத்திற் சந்தோஷம் நிரம்ப மறுபடியும் அவரை நோக்கிப் 'பூஜ்யரே! தங்களுக்குச் சுபமுண்டாகட்டும். இந்தக் குமாரர்கள் யார்? உருவத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணுவைப் போன்ற பராக்ரமமுடையவர்களாகத் தோற்றுகின்றுர்கள். யானையைப்போன்ற கம்பீரமும், சிங்கத்தைப்போன்ற அழகும், பெரும்புலியைப் போன்ற பயங்கரமும், மதித்த விருஷபத்தைப் போன்ற தருக்கும் பொருந்தி விளங்குகிருர்கள். இந்த வீரர்களின் கண்கள் தாமரையிதழ்போல அகன்று செவ்வரியோடி யாவருங் கண்டு மதிமயங்கும்படி லாவண்ய வெள்

17

ளம் குடிகொண்டு விளங்குகின்றன. இவ்விருவரும்கத்தி அம்பறுத்தூணி வில் என்னும் இவ்வாயுதங்களைத் தரித்திருந்தாலும் பல ஆபரணங்களை அணிந்திருப்பதுபோல் ப்ரகாசிக்கிறார்கள். அச்வினி தேவதைகளைப்போல ஒப்புயர்வற்ற உருவம் பொருந்தியவர்களாக யௌவனபருவம் அடைந்து பூமியில் ஸஞ்சரிக்கவந்த அழகிய தேவகுமாரர்களோ என்னும்படி அழகாய்த் தோற்றுகின்றார்கள். இவர்கள் தளிர்போன்ற மெதுவான அடிகளைக்கொண்டு கடுங்கானகத்தைக் எப்படிக் கடந்து வந்தார்கள்? இவர்கள் உருவத்தைப் பார்த்தமாத்திரத்தில் தானே கருத்தெல்லாம் நிரம்பப்பெற்வர்களென்று தோற்றுகின்றது. யாது பயனைவிரும்பி இவ்விடம்வந்தார்கள்' முனிவரே! மேலான ஆயுதங்களைத் தரித்து மிகுந்த வல்லமையமைந்து விளங்குகின்ற இவ்விருவரும் எந்த மஹாநுபாவனுடைய புத்திரர்கள். சந்த்ர ஸூர்யர்கள் ஆகாயத்தை விளங்கச் செய்வதுபோல இவ்விருவரும் எனது யாகசபையை விளங்கச் செய்கிறார்கள். உயரம் முதலான தேக ப்ரமாணத்தாலும், மனத்திலுள்ள கருத்தை வெளிப்படுத்துகின்ற சிரிப்புமுதலிய குறிப்புக்களாலும், பேச்சு நடை முதலான சேஷ்டைகளாலும், இருவரும் ஒருவரையொருவர் ஒத்துவிளங்குகின்றார்கள். [1] காகபக்ஷங்களைத் தரித்து இளமைப்பருவத்தில் இருப்பவர்களாயிருந்தாலும் அதிகமான வீரத்தன்மை பொருந்தியிருக்கிறார்கள். நான் இவ்வரசகுமாரர்களது விருத்தாந்தத்தை உள்ளபடி கேட்க விரும்புகிறேன்' என்று வினவினான். விஸ்வாமித்திரர் மகிமைபொருந்திய அவ்

1. ராஜபுத்ரர்கள் வைத்துக்கொள்ளும் முக்குடுமி. இதைப் பக்கக் குடுமியென்றும் சிறு குடுமியென்றும் கன்றுக்குடுமி யென்றும் ஜில்பா வென்றுஞ் சொல்லுவார்கள்.

விருவரையும் தசரத சக்ரவர்த்தியின் குமாரர்களென்று தெரிவித்து, அவர்கள் ஸித்தாஶ்ரமத்துக்கு வந்ததும், அங்குத்தன் யாகத்துக்கு விக்னஞ் செய்யவந்த ராக்ஷஸர்களைக் கொன்றதும், ராக்ஷஸர்கள் குடி புகுந்து வஸித்திருந்த அக்கடுங்கானகத்தைப் பயமில்லாமல் அவர்கள் கடந்துவந்ததும், விசாலாபுரியைக் கண்டதும்; அஹல்யையைப் பார்த்ததும், கௌதமரோடு கலந்து ஸம்பாஷித்ததும், ஜனக னிடத்திலிருக்கின்ற பெரிய வில்லின் ஸாரத்தை அறியவிரும்பி வந்ததும் ஆகிய எல்லாவற்றையும் மஹாநுபாவனாகிய ஜனகமஹாராஜாவுக்குச் சொன்னார்.

ஐம்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

சதாநந்தர் விஶ்வாமித்ர முனிவர் சரித்திரத்தைக் கூறுதல்.

[1] மிகுந்த மதியுடைய விஶ்வாமித்ரமுனிவர் உரைத்த மொழிகளைக் கேட்டு மஹா தேஜஸ்வியாகிய சதாநந்தர் சரீரமெங்கும் மயிர்க்கூச்சடைந்தனர். [2] தவப்பெருக்கினால் அளவின்றி வளர்ந்து பளபளவென்று ஜ்வலிக்கின்ற தேககாந்தியையுடைய மஹாநுபாவராகிய அச்சதாநந்தர் கௌதம மஹர்ஷியின் மூத்த குமாரர். அவர் ராமனைப் பார்த்த மாத்திரத்திலேயே என் தாயைச் சாபத்தினின்றும் நீக்குவித்த ராமன் மகிமையே மகிமை' என்று வியப்படைந்தார். அவர் ராஜகுமாரர்களாகிய

---

1 ஆசார்ய வைபவம் அவஶ்யம் அறியத்தக்கதென்னும் அபிப்ராயங்கொண்டு இது முதலாகப் பதினைந்து ஸர்க்கங்களால் விஶ்வாமித்ரர் சரித்திரத்தைச் சொல்லுகிறார்.

2 'பிதுஶ்ஶததகுணம் புத்ரஃ' என்கிற சொற்படி தகப்பனுக்கு மேலான தவப்பெருக்குடையவரென்பது பொருள்.

அவ்விருவரும் ஆஸனத்தில் வீற்றிருக்கக் கண்டு முனிவரை நோக்கிப் 'பூஜ்யரே! நெடுநாளாகப் புழுதியிற் புரண்டு காற்று மழை வெயில் பசி யென்னும் இவைகளைப் பொறுத்திருப்பதாகிய தவத்தைப் புரிந்து பெரும் புகழ் பெற்ற என் தாயைத் தசரத சக்ரவர்த்தியின் குமாரனாகிய ராமனுக்குக் காண்பித்தீரா? மஹா ப்ரபாவமுடையவளும் பெருங்கீர்த்தி பெற்றவளுமாகிய என் தாய் ஸமஸ்த ப்ராணிகளும் ஒருமித்துப் புகழுவதற்குரிய மஹாநுபாவனாகிய இந்த ராமனுக்கு வனத்திலுண்டாகின்ற காய் கனி கிழங்கு முதலியவற்றைக் கொண்டு அதிதிஸத்காரம் நடத்தினளா? முன்பு தெய்வச்செயலால் என் தாய்க்கு இந்திரனைப்பற்றி நேரிட்ட கொடிய விருத்தாந்தத்தை ராமனுக்குத் தெரிவித்தீரா! குசிக வம்சத்திற் பிறந்த மஹாநுபாவரே! தங்களுக்கு நன்மையுண்டாகட்டும். என் அன்னை ராமனைப் பூஜித்தபின்பு அம்மகிமையினால் எனது தந்தையைச் சேர்ந்தாளா? என் தந்தை ராமனைப் பூஜித்தாரா? ஹிமாலயத்தினின்றும் நெடுகாளாகப் பிரிந்து சென்றிருந்த தன் சொந்த ஆஶ்ரமத்துக்கு வந்த ப்ரபாவம் பொருந்திய எனது தந்தை மஹாநுபாவனாகிய ராமனிடத்திலிருந்து அஹல்யாதானமென்னும் பூஜையைப் பெற்றாரா? எனது தந்தை சந்தோஷத்தோடு ஆஶ்ரமத்துக்கு வரும்பொழுது ராமன் நமஸ்கரித்தானா?' என்று ஆனந்தத்தினால் வினவினர். அதைக் கேட்டு விஶ்வாமித்ரமுனிவர் சதாநந்தரைப் பார்த்து மகிமையுள்ளவனே! ஒன்றையும் மறந்துபோகவில்லை. எந்த சமயத்தில் எதை அவஶ்யம் செய்யவேண்டுமோ அதை முழுவதும் செய்து முடித்தேன். ரேணுகை ஜமதக்னியைப்போல அஹல்யையும் கௌதமரோடு கூடினாள்' என்று சொன்னர்.

சதாநந்தர் முகத்தில் ஒளிபரவும்படி களித்து ராமனைப் பார்த்து 'மானிடர்களிற் சிறந்தவனே! உன் வரவு நல்வரவாகட்டும். ராமா! எவ்வண்ணத்திலும் யாவராலும் எதிரிட வொண்ணாத வைபவமுடைய இவ் விஸ்வாமித்ர மஹர்ஷியை முன்னிட்டுக்கொண்டு நீ இவ்விடம் வந்தது என் பாக்கியவசத்தினாலேயன்றி வேறில்லை. இவர் மனத்தினால் பிறருக்குச் சிந்திக்கவும் முடியாத மேலான காரியங்களை நடத்தின மஹாநுபாவர். தவமகிமையினால் இவர் ப்ரஹ்மர்ஷியாகி ஒப்பில்லாத ஒளியுடன் விளங்குகிறார். மிகுந்த ப்ரபாவத்தை உடையவர். இவர் உனக்கு மேன்மேலும் ஹிதங்களை நடத்துவார். கடுமையான தவங்களை நடத்தின குசிக புத்திரராகிய விஸ்வாமித்ரரை ரக்ஷகனாகக் கொண்டது பற்றி இப்புவனியில் உனக்குச்சரியான பாக்கியசாலி ஒருவனும் இல்லை. மஹாநுபாவராகிய இக்கௌசிகர் தவத்தையும் இவர் சரித்திரத்தையும் சொல்கிறேன், அவதானத்துடன் கேள்.

"தர்மத்தைச் சரீரமாகவுடைய இவ்விஸ்வாமித்ரர் பகைவரைப் பயந்தோடச் செய்தும், தர்மங்களையறிந்து நடத்தியும், கல்விகளனைத்தையும் கற்றும், ப்ரஜைகளுக்கு நன்மைசெய்வதில் ஊக்கம்கொண்டும், நெடுங்காலம் வரையில் அரசனாயிருந்து வந்தார். இவர் வம்சபரம்பரையைக் கேள். ப்ரஹ்மதேவனுக்குக் குசனென்று ஒரு அரசகுமாரன் இருந்தான். அந்தக் குசனுக்கு மிகுந்த பலமுடையவனும் பரமதார்மிகனுமாகிய குசநாபனென்று ஒரு புதல்வன் தோன்றினான். அந்தக் குசநாபனுக்குக் காதியென்றவன் பிறந்தான். மஹா தேஜஸ்வியாகிய இவ்விஸ்வாமித்ரர் அந்தக் காதியின் குமாரர். இவர் தன் பராக்ரமம் மிகுந்து விளங்கும்படி பல ஆயிரம்

வருஷங்கள் அரசனயிருந்து பூமியைப் பரிபாலித்து வந்தார். சூரர்சிகாமணியாகிய இவ்விஸ்வாமித்ரர் ஒரு காலத்தில் சதுரங்க பலத்தையும் கூட்டிக்கொண்டு அக்ஷௌஹிணிக்கணகாகக் நான்கு பக்கத்திலும் ஸைன்யங்கள் சூழ்ந்துவர எல்லாத் தேசங்களையும் அவற்றிலுள்ள பலவகை நகரங்களையும் [1]நதீநதங்களையும் பர்வதங்களையும் புண்யாஸ்ரமங்களையும் க்ரமமாகச் சுற்றிக்கொண்டு வஸிஷ்டாஸ்ரமத்துக்கு வந்து சேர்ந்தார்.

அது தழைத்தோங்கிய பலவகை விருக்ஷங்களினல் எங்கும் நிறைந்து நெருங்கி அழகாயிருந்தது. அதில் சிங்கம் புலி யானை கரடி முதலிய பலவகை மிருகங்களும் கூட்டங் கூட்டமாக நிறைந்து திரிந்து கொண்டிருந்தன. பின்னும் அவ்வாஸ்ரமம் ஸித்த சாரண தேவ தானவ கந்தர்வ கின்னர பன்னகர் முதலிய மஹாநுபாவர்களால் எப்பொழுதும் எங்கும் நிரம்பப்பெற்று விளங்கிற்று. அங்கு மனிதர்களைக் கண்டு மான்கள் பயந்தோடமாட்டா. எவ்வகை மிருகங்களும் ஒன்றோடொன்று வைரமின்றி நேசம் பொருந்தி யிருக்கும். அங்குப் பறவைகள் பலவும் உலாவிக்கொண்டிருந்தன. அது ப்ரஹ்மர்ஷிகளாலும் தேவர்ஷிகளாலும் கூட்டங்கூட்டமாக நிறையப்பெற்று மிகவுமழகாயிருந்து. தவஞ் செய்து ஸித்தி பெற்றவர்களும் அக்னியை நிகர்த்தவர்களும், மஹாதேஜஸ்விகளும், ஜலத்தையே ஆகாரமாகக் கொண்டவர்களும், வாயுபக்ஷணத்தினலேயே ப்ராணதாரணஞ் செய்பவர்களும், உலர்ந்த சருகு காய் கனி கிழங்குகளைப் புசித்துத் தவம் செய்பவர்களும், மனத்தையடக்கி வசஞ் செய்துகொண்டவர்களும், கோபமற்றவர்களும், ஐம்புலன்களை அடக்கி ஜயித்த

---

1 நதிகள்-கிழக்குமுகமாகப் பெருகும் ஆறுகள். நதங்கள் மேற்றுமுகமாகப் பெருகும் ஆறுகள்.

வர்களுமாகிய ரிஷிகளும், ஜப ஹோமங்களை ஒழிவறச் செய்து விளங்கிய [1] வாலகில்ய மஹர்ஷிகளும், மற்றுமுள்ள வைகானஸர் முதலான முனிவர்களும் நிரம்பியிருப்பதனுல் அவ்வாஶ்ரமம் மிகவும் பரிசுத்தமாயிருக்கும். இங்ஙனம் வேறொரு ப்ரஹ்மலோகம்போல ப்ரகாசித்து விளங்கின அந்த வஸிஷ்டமுனிவர் ஆஶ்ரமத்தை அளவற்ற ஸைன்யத்தோடு கூடின விஶ்வாமித்ர மன்னவர் கண்டு சந்தோஷம் கொண்டார்.

ஐம்பத்தொன்ருவது ஸர்க்கம் முற்றிற்று.

வஸிஷ்ட முனிவர் விஶ்வாமித்ரருக்கு ஆதித்யஞ்செய்தல்.

மிகுந்த பராக்ரமசாலியாகிய விச்வாமித்ர மன்னவர் முனிவர்களில் தலைவராகிய வஸிஷ்டரைப் பார்த்து ஸந்தோஷம் மேலெழ வணக்கத்துடன் நமஸ்காரஞ்செய்து நின்ருர். அம்மஹாநுபாவரும் 'உனக்கும் உனது பரிவாரங்களுக்கும் நல்வரவாருக' என்று சொல்லி க்ஷேமம் விசாரித்து ஆஸனம் கொடுத்தார். சிறந்த மதியுடைய விச்வாமித்ர மன்னவர் ஆஸனத்தில் உட்கார்ந்த பிற்பாடு அம்முனிவரும் விதிப்படி இவருக்குக் காய் கிழங்கு முத

1. ப்ரஹ்மாவினது வாலத்திலிருந்து உண்டான ரிஷிகள் வாலகில்யர்களென்றும், ப்ரஹ்மாவினது நகத்திலிருந்து உண்டான ரிஷிகள் வைகானஸர்களென்றும் சொல்லப்படுகிருர்கள். இங்கு 'யே நகாஃ, தே வைகானஸாஃ யே வாலாஃ, தே வாலகில்யாஃ' என்று கோஷிக்கின்ற ஶ்ருதி ப்ரமாணம்.

2. வஸிஷ்டருடைய ஆஶ்ரமத்தின் வைபவத்தை இங்ஙனம் பரக்கச் சொன்னதற்குக் காரணம் இப்படிப்பட்ட மஹாநுபாவராகிய வஸிஷ்ட முனிவராலும் விஶ்வாமித்ரர் பூஜிக்கும்படியான பெருமையுடையவரென்று தோற்றுகைக்காக.

லியவைகளைக் கொடுத்து அதிதி ஸத்காரஞ் செய்தார். இவர் முனிமன்னவர் செய்த அப்பூஜையைப் பெற்றுக் கொண்டு அவரைப்பார்த்துத் தவம் நடக்கின்றதா? அக்னிஹோத்ரகாரியங்கள் யாவும் இடையூறில்லாமல் நடந்து வருகின்றனவா? தங்கள் சிஷ்யர்கள் அனைவரும் க்ஷேமமா? இங்குள்ள விருக்ஷவர்க்கங்கள் நன்றாக வளர்ந்து தங்களுக்குப் பலன் தருகின்றனவா' என்று க்ஷேமாதிசயங்களை விசாரித்தார். வஸிஷ்டர் 'மன்னவர் தலைவனே! நீ கேட்டவை யெல்லாம் க்ஷேமமே' என்று மறுமொழி சொன்னார். பிரமன் புதல்வரான அம்மெய்த்தவ முனிவர் 'மன்னவனே! உனக்கு க்ஷேமமா? நீ பாக்ரமசாலியும் மிக்க தார்மிகனுமாயிருப்பவன். ப்ரஜைகளைத் தர்மத்தின் வழியாகவே ஸந்தோஷிக்கச்செய்துகொண்டு [1]ராஜமார்க்கத்தை அநுஸரித்து அவர்களைப் பரிபாலித்து வருகின்றாயல்லவா? வேலைக்காரர்களை ஸந்தோஷிக்கச் செய்கின்றாயல்லவா! அவர்களும் உன் கட்டளை தவறாமல் நடந்து வருகின்றார்களல்லவா? நீ பகைவர்களைப் பயந்தோடச்செய்ய வல்ல பராக்ரமம் பொருந்தி விளங்குகின்றாய். சத்ருக்கள் அனைவரும் உன்னால் தோல்வியடையப் படுகிறார்களா? மஹாவீரனே! சதுரங்கபலங்களும் பொக்கிஷங்களும் நண்பர்களும் புத்திர பௌத்திரர்களும் க்ஷேமமா?' என்று விசாரித்தார். விஶ்வாமித்ரர் அம்மெய்த்தவரை நோக்கி வணக்கத்துடன் 'பூஜ்யரே எல்லாம் க்ஷேமமாயிருக்கின்றன. என்று பதிலுரைத்தார்.

---

1. 'ந்யாயேநார்ஜநமர்யஸ்ய வர்த்தநம்பாலநந்தயா, ஸத்பாத்ரே ப்ரதிபத்திஶ்ச ராஜவ்ருத்தஞ் சதுர்விதம்' 'ந்யாயமாகப் பணத்தைச் சம்பாதிப்பது, அதை விருத்திசெய்வது, அதைக் காப்பது, நல்லொழுக்க முடையவர்களிடத்தில் அதை உபயோகப்படுத்துவது' என்று ராஜமார்க்கம் நான்கு வகைப்பட்டிருக்கும்.

இங்ஙனம் பரமதார்மிகர்களாகிய அவ்விருவரும் நெடும்பொழுது ஒருவருக்கொருவர் க்ஷேமம் விசாரிப்பதாகிய ஸல்லாபங்களைச் செய்துகொண்டு ஸந்தோஷித்திருந்தார்கள். ரகுகுல மனத்தையுங் களிக்கச் செய்ய வல்ல மஹாநுபாவனே! அவ்விருவரும் இவ்வாறு ஒருவருக்கொருவர் பேசிமுடிந்த பின்பு, வஸிஷ்டமுனிவர் விஸ்வாமித்ரரைப் பார்த்து 'மன்னவனே நீ மிகுந்த சைன்யங்களுடன் இவ்விடம் வந்திருக்கிறாய். நான் இந்தச் சதுரங்கப்பலத்துக்கும், அளவிடவொண்ணாத மகிமை பொருந்திய உனக்கும் தகுந்தபடி விருந்து செய்ய விருப்பமுற்றிருக்கிறேன். என் வேண்டுகோளின்படி நான் செய்ய முயன்ற இவ்வதிதிஸத்காரத்தை அங்கீகரிக்கவேண்டும். நீ எனக்கு அரசனும், சிறந்த அதிதியுமா யிருக்கின்றனை. ஆனதுபற்றி நான் உன்னைப் பூஜிக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். விஸ்வாமித்ரர் வஸிஷ்டர் மொழியைக் கேட்டு அவருக்கு ஸ்ரமங்கொடுப்பது தகாதென்று நினைத்து 'மஹாநுபாவரே! அதிதி ஸத்காரஞ் செய்ய வேண்டுமென்று மொழிந்த மாத்திரத்திலேயே எனக்குத் தங்களிடத்திலிருந்து அந்தப் பூஜை யாவும் சேர்ந்து விட்டன. இனி வேறென்று செய்யவேண்டுமோ? தங்கள் ஆஸ்ரமத்திலுள்ள காய் கிழங்குகள், பாத்தியம், ஆசமனியம், மகிமை கொண்ட தங்கள் தர்சனம் ஆகிய இவைகளைக் கொடுத்து ஸமஸ்த ப்ரகாரங்களாலும் என்னை நன்றாய்ப் பூஜித்திருக்கிறீர்கள். இப்பொழுது நான் தங்களைப் பூஜிக்கவேண்டியிருக்கத் தாங்கள் எனக்கு விருந்தளிப்பது நல்லதன்று. எல்லாவற்றையும் கற்றறிந்த தங்களுக்கு நான் என்ன சொல்லப்போகிறேன். எனக்கு விடை கொடுத்து அநுக்கிரகம் செய்யுங்கள்' என்று நமஸ்காரம் செய்தார்.

விஸ்வாமித்ரர் வேண்டா மென்று எவ்வளவு வேண்டிக்கொண்ட போதிலும் வஸிஷ்ட முனிவர் மேன் மேலும் விருந்துண்ணும்படி வேண்டிக்கொள்ளத்தொடங்கினர். அதனல், விஸ்வாமித்ரர் விதியில்லாமல் 'முனிவரே! தங்கள் மனச்சந்தோஷத்தின்படி நடக்கட்டும். தங்கள் கட்டளைப்படி நடந்து கொள்கிறேன்' என்று ஒப்புக்கொண்டார். பின்பு வஸிஷ்ட முனிவர் அளவற்ற ஸந்தோஷமடைந்து முகத்தில் ஒளி மீறி மேலெழப் பலவகை வர்ணங்கள் அமைந்து விளங்குகின்ற அழகான காமதேநுவை அழைத்துச் 'சபளையே! இங்குவா! இன்று உனக்கு நான் ஒரு கட்டளையிடுகிறேன். அதை நீ கேட்க வேண்டும், நான் இந்த ராஜர்ஷிக்கும் இவன் ஸைன்யங்களுக்கும் மிகச்சிறப்புடன் விருந்துசெய்ய உத்தேசித்திருக்கிறேன். நீ அதற்குவேண்டிய ஸம்பாரங்களைச் சித்தப்படுத்தவேண்டும். நீ வேண்டின வற்றை யெல்லாம் கொடுக்கவல்லவள். ஆனதுபற்றி ஆறுவகை ரஸங்களிலும் யார் என்ன விரும்புகின்றார்களோ அவர்களுக்கு அதைக் கொடுத்து என்னைக் கௌரவி. ரஸாயனங்களும் பக்ஷ்யங்களும் பானகங்களும் தேன்முதலிய லேஹ்யங்களும் தயிர்முதலிய சோஷ்யங்களும் அன்னங்களும் இன்னும் அவற்றிற்குத் தகுதியான எல்லாவற்றையும் சீக்கிரம் உண்டுபண்ணிக்கொள்' என்று கட்டளையிட்டார்.

ஐம்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

விஸ்வாமித்திரர் காமதேநுவைத் தனக்குக் கொடுக்கும்படி வஸிஷ்டரை வேண்டிக்கொள்ளுதல்.

மஹாவீரனே! ராமா! வஸிஷ்டர் இங்ஙனம் மொழிந்தபின்பு சபளையென்னும் காமதேநுவானது வேண்

டினவற்றைக் கொடுக்க வல்லமையுடையதுபற்றி யாருக்கு எப்படிவேண்டுமோ, அப்படியே வேண்டியவற்றையெல்லாம் நிர்மித்துச் சித்தப்படுத்திவிட்டது. கரும்பு, தேன், பொரி, புஷ்பங்களில் இறக்கின மேலான கள், உயர்ந்தபானகம், பலவகைப் பக்ஷணங்கள் ஆகிய எல்லாவற்றையும் சித்தஞ்செய்துகொடுத்தது. பின்னும் அவ்வாஶ்ரமத்தில் அப்பொழுதுதான் சமைத்ததுபோலச் சுடுகை யாறுமல் மலைகள் போலக் குவியல்குவியலாகக் குவிந்த அன்னராசிகளும், பாயஸம் முதலியவைகளும், பருப்புக்களும், அப்படியே ஆற்றுக்கால்போற் பெருகிவருகின்ற தயிர்ப்பெருக்குக்களும், பலவகை ருசிகளுண்டாகும்படி ஆறு ரஸங்களு மமைத்துச் செய்யப்பட்ட அளவற்ற பக்ஷய விசேஷங்களும், பலவகை ஆஹாரங்கள் நிறைந்த போஜனபாத்ரங்களும் கணக்கின்றிச் சித்தச்செய்யப்பட்டிருந்தன. ராமா! விஶ்வாமித்ரர் ஸைனியத்திலுள்ள ஜனங்கள் அனைவரும் வஸிஷ்டமுனிவர் விருந்தை வேண்டியவரையிலும் உண்டு களிப்புற்றுச் சரீரம் பூரித்து வலிவு பெற்றுப் பேரானந்தம் அடைந்தார்கள். ராஜர்ஷியாகிய விஶ்வாமித்ரரும் அவர் புத்திரர்களும் அவரது அந்தப்புரத்திலுள்ள மங்கைமார்களும் அவருடன் வந்த அந்தணர்களும் புரோஹிதர்களும் அப்படியே அவ்விருந்தையுண்டு மிக்க ஸந்தோஷத்தை அடைந்தார்கள்.

விஶ்வாமித்ரர் தன்னையும் தன் காரியங்களை நிறைவேற்றும்பொருட்டும் தனக்கு ஆலோசனை சொல்லும்பொருட்டும் வந்திருந்த மந்திரிகள் வேலைக்காரர்களாகிய தனது பரிவாரங்களையும் அளவுக்கு அதிகமாக ஸத்கரித்ததைப்பற்றி மிகுந்த ஸந்தோஷமடைந்து அம்முனிவரைநோக்கி 'அந்தணர்களிற் சிறந்தவரே! தாங்கள் என்னைப் போன்றவர்களால் மிக

வும் பூஜிக்கத் தக்கவர். அப்படிப்பட்ட தாங்கள் எனக்கும் கணக்கில்லாமல்வந்திருந்த என் சைன்யங்களுக்கும் அதிதிஸத்காரமாகிய விருந்தை அபாரமாகச் செய்து பூஜித்தீர்கள். அதனால் நான் அளவுகடந்த சந்தோஷத்தை அடைந்திருக்கிறேன். அவையெல்லாம் ஒருபுறமிருக்கட்டும். தாங்கள் பேசுவதில் வல்லமை அமைந்தவர்கள். ஆனதுபற்றித் தங்களிடத்தில் ஒரு வார்த்தை சொல்லுகிறேன், தங்களுக்கு லக்ஷம் பசுக்களைக் கொடுக்கிறேன். அவற்றை வாங்கிக்கொண்டு எனக்கு இந்த ஒரு காமதேநுவை மாத்திரம் கொடுக்கவேண்டும். இது பசுஜாதிகள் எல்லாவற்றிலும் சிறப்புற்றது. இதைக் கோரத்னம் என்று சொல்லலாம். உயர்ந்தரத்னங்கள் அரசனைச் சேரவேண்டுமென்பது தங்களுக்குத்தெரியாத விஷயமன்று. ஆனதுபற்றி இதை எனக்குத் தாருங்கள்! தர்மத்தை ஆலோசித்துப் பார்த்தால், இது ராஜாவாகிய என்னுடைய தன்றி அந்தணராகிய தங்களுடையதன்று' என்று மொழிந்தார்.

மஹாத்மாவாகிய வஸிஷ்டமுனிவர் அதைக் கேட்டுத் தர்ம ஸ்வபாவராயிருப்பது பற்றித் தனது தர்மாநுஷ்டானங்களுக்குச் சாதனமாகிய அந்தக் காமதேநுவைக் கொடுக்கமுடியாமல் அரசனை நோக்கி 'மஹாராஜனே! நீ என் சபளை ஒன்றுக்காக நூறுயிரம் பசுக்களைக் கொடுத்தாலும் அதை நான் கொடுக்கமுடியாது. ஒரு சமயம் இன்னும் அதிகமாக நூறுகோடிப் பசுக்களையும் ராசிராசியாக வெள்ளியையும் தங்கத்தையும் கொடுத்தாலும் கூட இந்தக் காமதேநுவைக் கொடுக்க என் மனஞ் சம்மதிக்காது. நீ சத்ருக்கள் அனைவரையும் அடக்கத்தக்க வல்லமை யுடையவனென்பதை நான் அறிவேன். ஆனாலும் இப்படிப்பட்டவன் நமக்கு

என்னக் கெடுதியைச் செய்வானே என்று பயந்து நான் பசுவைக் கொடுக்கமாட்டேன். ஏனென்றால், இந்தப் பசு என்னிடத்திலேயே இருக்கவேண்டும். மானியாயிருப்பவனுக்குக் கீர்த்தி சாஸ்வதமா யிருப்பது போலவே எனக்கும் இந்தப் பசு மிகவும் சாஸ்வதமானது. இதற்குக் காரணம் சொல்லுகிறேன் கேள். இந்த ஆஸ்ரமத்தில் தேவர்களுக்குக் கொடுக்கிற ஹவ்யங்களும், பித்ருக்களுக்குக் கொடுக்கிற கவ்யங்களும், காலையிலும் மாலையிலும் நடந்தேறிவருகின்ற அக்கிஹோத்ரங்களும், பூதங்களுக்குக் கொடுக்கிற பலிகளும், அமாவாஸ்யை பர்வம் முதலியவற்றிற் செய்யப்படுகின்ற ஹோமங்களும், இச்சபலையினாலேயே நடக்கவேண்டியிருக்கின்றன. முடிவாய்ச் சொல்லும்பக்ஷத்தில் எனது சரீர யாத்திரையும் இந்தக் காமதேநுவின் அதீனமாகவே நடந்துவருகின்றது. ராஜர்ஷியே! உனக்குத் தெரியாதவை யில்லை. ஸ்வாஹாகார வஷட்கார மந்த்ரங்களும் வேதம் முதலிய பலவகைப்பட்ட வித்யாப்யாஸங்களும் இந்த ஆஸ்ரமத்தில் நடந்துவருவதற்கு இந்தப் பசுவே முதற்காரணம். மன்னவனே! நான் எக்காலத்திலும் ஒரு அக்ஷரமாவது பொய் சொல்லமாட்டேன். உண்மையாகச் சொல்கிறேன். எனக்குள்ள பொருள் அனைத்தும் இந்தக் காமதேநுவே தவிர வேறில்லை. எனக்கு இந்தப் பசு எப்பொழுதும் ஆநந்தத்தைக் கொடுத்துக்கொண் டிருக்கின்றது. இப்பொழுது நான் உனக்கு மொழிந்த காரணங்களை யல்லாமல் உனக்குச் சொல்லமுடியாத இன்னும் சில காரணங்களும் ரஹஸ்யமாயிருக்கின்றன. ஆதலால், பசுவைப் பாற்றிக்கொண்டிருக்கின்ற வீணாசையை ஒழித்துவிடு!' என்று சொன்னார்.

வஸிஷ்டமுனிவர் இங்ஙனம் சொல்லியும் விஸ்வா

மித்ரர் மிகுந்த பிடிவாதத்துடன் அம்முனிவரை நோக்கிக் 'கழுத்துக்குப் பொற்சங்கிலிகள் பூட்டிக் காதுக்குப் பொன்னாற்செய்த மாவட்டிகள் மாட்டி அலங்காரஞ் செய்து அழகாக விளங்குகின்ற பதினாயிரம் யானைகளை நான் தங்களுக்குக் கொடுக்கிறேன். ஒவ்வொன்றிலும் நான்கு வெள்ளைக் குதிரைகள் பூட்டி அழகிய சிறுமணிகள் கட்டி விளங்குகின்ற எண்ணூறு பொற்றேர்களைத் தங்களுக்குத் தருகிறேன். விரதங்களைத் தவறாமல் நடத்திவருகின்றவரே! இன்னமும் கம்போஜம் பாஹ்லிகம் முதலான நல்ல தேசங்களிற் பிறந்து வலிமைபொருந்திச் சிறிய ,மணிகள்கட்டி அலங்காரஞ் செய்யப்பட்ட அழகிய குதிரைகள் பதினோராயிரத்தைத் தங்களுக்குக் கொடுக்கிறேன். பலவகை வர்ணங்கள் பொருந்தி விளங்குகின்ற ஒருகோடி இளம் பசுக்களைத் தங்களுக்குக் கொடுக்கிறேன். இந்தச் சபளையை எனக்குக் கொடுத்துவிடுங்கள். அந்தணர்களிற் சிறந்தவரே! தங்களுக்கு ரத்னங்களிலும் ஸுவர்ணங்களிலும் எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவுங் கொடுக்கிறேன். இந்தக் காமதேநு ஒன்றைமாத்திரம் எனக்குக் கொடுங்கள்! என்று கூறினர்.

இங்ஙனம் மிகுந்த மதியுடைய விஶ்வாமித்ர மன்னவர் காமதேநுவைத் தனக்குத் தரும்படி பலவிதமாக நயந்து கேட்டார். அதற்கு மஹாநுபாவராகிய வஸிஷ்டமுனிவர் 'மஹாராஜனே! நான் இப்பசுவை எவ்விதத்திலும் கொடுக்கமுடியாது. நீ கொடுப்பதாகச் சொல்லும் பொன் வெள்ளி ரத்னம் முதலியவைகளால் எனக்குக் கொஞ்சமும் பயன்கிடையாது. சபளையே எனக்கு ரத்னம், எனக்குத் தனம், எனக்கு ஸகல ஸொத்துக்களும் இதுவே, இதுவே எனக்கு ப்ராணன்,

அமாவாஸ்யைகளிலும் பௌர்ணமாஸிகளிலும் செய்ய வேண்டிய வைதிகச்செயல்கள் யாவும் எனக்கு அதன் மூலமாகவே நடந்துவருகின்றன. அதுவுமல்லாமல் அதிக மான தக்ஷிணைகளுடன் நடத்தப்படுகின்ற யாகங்களும் காமதேநுவின் மகிமையாலேயே எனக்கு நடந்தேறுகின் றன. நான் செய்யும் கர்மங்களுக்குச் சபளையே மூலமா யிருக்கிறது. நான் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக் கக்கூடியதாகிய காமதேநுவை எவ்விதத்திலும் நான் உனக்குக் கொடுக்கமுடியாது.' என்று மொழிந்தார்.

ஐம்பத்துமூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

{ சபளை பலங்களை நிருமித்து விஸ்வாமித் ரர் சேனைகளை அழித்தல். }

வஸிஷ்டமுனிவர் தம் காமதேநுவைக் கொடுக்க முடியாதென்று ஒரே மொழியாக மறுத்துவிட்டதற்கு விஸ்வாமித்ர மன்னவர் கோபம்கொண்டு காமதேனு வைப் பலாத்காரமாக இழுத்துக்கொண்டுபோகத் தொ டங்கினர். ராமா! மிகவும் தைரியசாலி யாகிய விஸ்வா மித்ர மன்னவரால் அங்ஙனம் இழுக்கப்பட்ட சபளையா னது வஸிஷ்டரைப் பிரிந்து போகின்றோமே யென்கிற சோகத்தினால் துயரமடைந்து அழுதுகொண்டு தனக் குள் 'இவ்வரசன் ஸேவகர்கள் என்னை மிகவும் வருத்தத் துடன் பிடித்துக்கட்டி யிழுத்துக்கொண்டு போகிறார் கள். இதற்குக்காரணம் என்ன? ஒருகால் மஹாநுபாவ ராகிய வஸிஷ்டர் என்னைத் துறந்திருக்கக்கூடுமோ? அம் மஹர்ஷிக்கு நாம் ஒருவிதமான அபகாரமும் செய்ய வில்லை. எல்லாவற்றையும் அறிந்த அம்முனிவர் யாதொரு அபராதமு செய்யாமல் தன்னிடத்தில் மிகுந்த பக்தி

யுடன் நடந்துவருகின்ற நம்மை இங்ஙனம் போகவிடுவ தற்குக் காரணம் தெரியவில்லை. என்று சிந்தித்துப் பெரு மூச்சுவிட்டுக்கொண்டு, தன்னை இழுத்துக்கொண்டு போ கிற ராஜபடர்களை உதறிவிட்டு மஹாநுபாவராகிய வஸிஷ் டரிடத்திற்கு வேகமாகச் சென்று அவர் எதிரில் அழுது கொண்டு நின்று மேகத்தின் கர்ஜனைபோலவும் துந்துபி வாத்தியத்தின் முழக்கம்போலவும் கம்பீரமாகச் சத்த மிட்டுக்கொண்டு 'தார்மிகரே! தாங்கள் என்னைப் போக விட்டீர்களா? என்னை ஏன் இந்த ராஜபடர்கள் இழுத் துக்கொண்டு போகிறார்கள்? ப்ரஹ்ம புத்ரரே! தாங்கள் என்னை விடத் தகுமா?' என்று வினவிற்று.

அதற்கு அந்த ப்ரஹ்மர்ஷி மிகுந்த சோகத்தினால் மனக்கலக்க முற்றுத் துக்கித்துத் தங்கையைப்போல அழுதுகொண்டுநிற்கிறஅந்தச்சபலையை நோக்கி 'உன்னை நான் விடமாட்டேன். நீ எனக்கு ஒருவிதமான அபகார மும் செய்யவில்லை. இனிச்செய்யவும் மாட்டாய். இம்மன்ன வன் தன் பலத்தின் மிகுதியினால் வழிதப்பி உன்னைஇழுத் துக்கொண்டு போகிறான். அவனை அடக்கி என்னை விடு வித்துக்கொள்வதற்கு எனக்குப் பலமில்லை. தவமகிமை யினால் நிக்கிரகஞ் செய்யலாமென்றால், அவன் நமக்கு அர சனாயிருக்கிறான். தபோபலத்தினால் அரசனைத் தண்டிப் பது யுக்தமன்று. அதனிலும்விசேஷித்து அதிதி ஸத்கா ரஞ்செய்த இச்சமயத்தில் யாதுஞ் செய்யத்தகாது. இவ் வரசன் மிகுந்த பலம்பொருந்திய க்ஷத்ரியனாகிப் பூமியை யெல்லாம் பரிபாலித்து வருகின்றவன். பூமியைப் பாது காத்து வருகின்றவனை நிக்கிரகித்தால், அது மிகுந்த பாபத்துக்கிடமாகும். இவன் சேனை ஸாதாரணமாகப் புலப்படவில்லை. அக்ஷௌஹிணிக் கணக்கில் இருக்கின் றன. குதிரைகளும்தேர்களும்நெருங்கி யானைகளும்கொடி

மரங்களும் சூழ்ந்து மிகப் பயங்கரமாக விளங்குகின்றது. இப்படிப்பட்ட ஸைந்யத்தை யுடைய இம் மன்னவன் மிகப்பலிஷ்டன். ஆனதுபற்றி, நாமென்ன செய்யக்கூடும்' என்று சொன்னார்.

மொழிகளின் கருத்தை அறியுந்திறமுடைய அச் சபளை மிக்க வணக்கத்துடன் அளவற்ற ஒளிபொருந் திய அந்த ப்ரஹ்மர்ஷியை நோக்கி, அந்தணர்களிற் சிறந்தவரே! க்ஷத்ரியன் பலத்தை ஒருபலமாகச் சொல்ல மாட்டார்கள். ப்ராஹ்மணன் மேலான பல முடை யவன். அந்தணரே! ப்ராஹ்மணன் பலம் மேலான மகிமையமைந்து விளங்கும். ஆகையால், க்ஷத்ரிய பலத் தைக்காட்டிலும் ப்ராஹ்மணன் பலம் மிகச் சிறந்தது. ஆனதுபற்றி அந்தணர்களிற் சிறந்த தங்கள் பலம் அள விடமுடியாதிருக்கும். விஸ்வாமித்ரர் மிகுந்தவீரத்தன்மை அமைந்தவராயினும் தங்களைக்காட்டிலும் பலிஷ்டரன்று; தங்கள் பராக்ரமம் யாவராலும் வெல்ல முடியாதது. தாங்கள் மிகுந்த மகிமை யுடையவராகையால் தங்கள் ப்ரஹ்ம பலத்தைக்கொண்டு எனக்கு ப்ரபாவத்தைக் கற் பித்துக் கட்டளையிடுங்கள்! கொடிய எண்ணங்கொண்ட இவ்வரசன் செருக்கையும் ஸைந்யத்தையும் இப்பொழு தே நாசஞ்செய்து விடுகிறேன்' என்று சொல்லிற்று. ராமா! பெரும் புகழுடைய வஸிஷ்டமுனிவர் அதைக் கேட்டுச் சபளையைநோக்கி 'இச்சத்ருபலத்தை அழிக்கும் படியான ஸைந்யத்தைப் படைப்பாயாக' என்று கட்டளை யிட்டார். உடனே சபளையானது படையைப் படைக்க முயன்று 'ஹூம்பா' என்று சப்தஞ்செய்தது. அங்ஙனம் சப்தித்தவுடன் பப்லவரென்னும் ம்லேச்சர்கள் கணக் கின்றி உண்டாகி விஸ்வாமித்ரரது கண்முன்பாக அவர் ஸைந்யத்தை யெல்லாம் நிர்மூலம் செய்துவிட்டார்கள்.

கௌசிகர் தம் ஸைந்யம் நிர்மூலமாகி விட்டதைக்கண்டு ரதத்தின் மேலேறிக்கொண்டு சத்ருக்களின் மீது மூழ்ன்று மிகக் கோபாவேசத்துடன் கண்களை மருட்டிவிழித்துப் பலவகை அஸ்த்ரங்களை எய்து அந்தப் பப்லவர்களை அடித்து முடித்துவிட்டார். விஶ்வாமித்ரரால் பப்லவர்கள் அனைவரும் முடிந்து போகக்கண்டு, மிகக்கோபங்கொண்ட காமதேநுவானது மேலும் மேலும், சகர்களையும் யவனர்களையும் நிருமித்துவிட, அவர்கள் சண்பக மலரின் ஒளியை நிகர்த்த தேககாந்தி யமைந்து பொன் மயமான ஆடைகளை உடுத்து, மிகுந்த வீரத்தன்மை பொருந்தி நீண்ட கத்திகளையும் பட்டயங்களையும் கைகளில் ஊன்றிக்கொண்டு பார்முழுவதும்தாமேயாகி நிறைந்து பளபளவென்றும் ஜொலிக்கின்ற அக்னிபோல விளங்கி அவ்விஶ்வாமித்ரரது ஸைந்யங்களை எரித்துவிட்டார்கள். பிறகு விஶ்வாமித்ரர் தம் பராக்ரமம் விளங்கும்படி ஸிங்கநாதம் செய்து அந்த ம்லேச்சர்கள்மீது பாணங்களை ப்ரயோகிக்க, யவனர் காம்போஜர் பப்லவர் என்னும் அம்மிலேச்சர்கள் யாவரும் சிதறுண்டு புறங்காட்டியோடிக் குழப்ப மடைந்தார்கள்.

ஐம்பத்துநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

{ விஶ்வாமித்ரர் தோல்வியடைந்து சிவனிடமிருந்து அஸ்த்ரங்களைப் பெற்று வந்து வஸிஷ்டருடன் போர்புரிதல். }

பின்பு வஸிஷ்டமுனிவர் விஶ்வாமித்ரருடைய பாண வர்ஷங்களால் மனமயங்கிச் சிதறிப்போகின்ற ம்லேச்ச பலங்களைக்கண்டு காமதேநுவைப் பார்த்து 'யோகமகிமையால் இன்னும் சில படைகளைப்படைப்பாயாக' என்று கட்டளையிட்டார். பின்பு அந்தக் காமதேநுவும் 'ஹூம்

பா' என்று சப்தித்தமாத்திரல் அப்பொழுது ஸூர்யனை நிகர்த்த ஒளிபொருந்திய காம்போஜர்கள் கணக்கில்லாமல் உண்டானார்கள். இன்னும் அப்பசுவின் மடியிலிருந்து கையும் கத்தியுமாகப் பப்லவர் என்னும் ம்லேச்சர்கள் பிறந்தார்கள். பின்னும் அதன் மூத்ர த்வாரத்திலிருந்து யவனர்களும், மலத்வாரத்திலிருந்து சகர்களும், மயிர்க்கால்களிலிருந்து ம்லேச்சர்களும் ஹாரீதர்களும் கிராதர்களும் தோன்றினார்கள். ரகுகுலத்திற் பிறந்த மஹாவீரனே! அவர்களனைவரும் வேறுவேறாக ரத கஜ துரக பதாதிகளுடன் கூடிய விஶ்வாமித்ரர் ஸைன்யங்களைப் பறந்தோடச்செய்தார்கள். அப்பொழுது விஶ்வாமித்ருடைய புத்திரர் நூறு பெயர்களும் தங்கள் ஸைன்யங்களை வஸிஷ்ட மஹர்ஷி தம் யோகமகிமையினால் நாசஞ்செய்வது கண்டு, நாநாவிதங்களான ஆயுதங்களைத் தரித்துச், சினங்கொண்டு நிற்கின்ற வஸிஷ்டமுனிவர்மீது எதிர்த்தோடிவர, முனிவர் அளவற்ற மகிமை அமைந்திருப்பது பற்றித் தமது ஹூங்காரத்தினாலேயே அவர்கள் அனைவரையும் தகித்துவிட்டார்.

விஶ்வாமித்ரர் குமாரர்களும் அவர் குதிரைகளும் தேர்களும் அவர்களைப் பின்றொடர்ந்த காலாட்களும் அந்த க்ஷணத்திலேயே நீறாகி விட்டார்கள். பெரும்புகழுடைய விஶ்வாமித்ர மன்னவர் தம் புதல்வர்களும் படைகளும் மிகுதியில்லாமல் மாண்டுவிட்டதைக் கண்டு தமது பெருங்கீர்த்திக்குக் குறைவு நேரிட்டதேயென்று மிகுந்த வெட்கங்கொண்டு அலையற்ற கடல்போலப் புத்ரோத்ஸாஹமின்றி மழுங்கியும், பல்லைப் பிடுங்கின பாம்புபோல யாகஞ்செய்யச் சத்தியில்லாமல் மயங்கியும், இராகுவினால் பீடிக்கப்பட்ட ஸூர்யன்போல அப்பொழுதே ஒளியெல்லாங் குன்றியும் இருந்தார். இன்னமும் அம்மன்னவர் பிள்ளை

களும் படைகளும் ஒழிந்துபோனதுபற்றி மிகவும் வருந்தி இறகொடிந்த பக்ஷியைப்போல மிடுக்கும் உத்ஸாஹமும் குலைந்து சதுரங்கபலத்தினுற் சிறிதும் பயனில்லையென் றெண்ணி மனவெறுப்படைந்தார். அவர் பின்பு யுத்தத் தில் தப்பிப்பிழைத்து நின்ற தம் புத்திரன் ஒருவனுக் குப் பட்டங் கட்டிவைத்து, 'அப்பா! நீ க்ஷத்ரிய தர்மத் துக்கிணங்க இப்பூமியைப் பாதுகாத்து வருவாயாக' என்று கட்டளையிட்டுக் கின்னரர் உரகர் முதலான தவ கணங்கள் வஸிக்கக்கூடிய ஹிமாலயத்தின் அருகிற்போய்ச் சேர்ந்து அங்குத் தேவர்களுக்குத் தேவனுகிய சிவபெரு மானைக்குறித்துக் கடுமையாகத் தவம்புரிந்துவந்தார்.

சிலகாலம் சென்றபிற்பாடு எருத்துக் கொடியோனு கிய தேவாதிதேவன் சிவபெருமான் தன்னைப் பற்றினவர் களுக்கு வரங்கொடுக்குந் தன்மையராகையால் மிகுந்த பலமுடைய விஶ்வாமித்ர மன்னவருக்குத் தர்ச னங் கொடுத்து 'மன்னவனே! நீ எதன்பொருட்டுத் தவம் செய்கிறுய்? உன் மனத்திற் கருதியவற்றைச் சொல். நான் என்னைப் பற்றிவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுப் பவன்' என்றுர். மிகத் தவம்பொருந்திய விஶ்வாமித்ரமன் னவர் அவ்வுரைகளைக் கேட்டு அந்த மஹாதேவனுக்கு நமஸ்காரம் செய்து 'மஹாதேவனே! பாவங்களொன்று மின்றி யிருப்பவனே! தங்களுக்கு என்மீது மிகுந்த ப்ரீதி யிருக்குமானுல், தநுர்வேதங்களும் அதன் அங்கங்களும் அவைகளுக்குள்ள ரஹஸ்ய மந்த்ரங்களும் குருபதேசத் தினு லறியவேண்டிய ரஹஸ்யார்த்தங்களும் எனக்குத் தானே தோன்றும்படி அருள்புரிந் தருளவேண்டும். பாபமற்றவனே! தேவர் தானவர் மஹர்ஷிகள் யக்ஷர் கின் னரர் ராக்ஷஸர் கந்தர்வர் முதலிய மஹாநுபாவர்களிடத் தில் இருக்கின்ற அஸ்த்ர விசேஷங்களெல்லாம் எனக்குத்

தோற்றும்படி அருளவேண்டும். நீ தேவர்களுக்குத் தேவன். உனது அனுக்கிரகத்தினால் மற்றுமுள்ள எனது மனோரதங்களும்நிறைவேறும்படிஅருளவேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். அந்தக்கடவுள் 'அப்படியேஆகட்டும்' என்று மொழிந்து அப்பொழுதே தன்னிடத்துக்குப் போய்ச் சேர்ந்தார். விஸ்வாமித்ரர் மிகுந்த பலம், க்ஷத்ரிய தர்மம் முதலியவற்றால் வந்த மேலானகர்வத்தைக் கொண்டிருந்தார். அப்பொழுது மஹாதேவரது அனுக்கிரகத்தினாற் சிறந்த அஸ்த்ரங்கள் பலவும் பெற்றபின்பு அவருடைய செருக்கு அளவிடமுடியாதிருந்தது. அவர் பர்வ காலத்தில் கடல் பொங்கி வருவதுபோல மிகுந்த பராக்ரமத்துடன் மேலும் மேலும் பெருகி வளர்ந்துகொண்டு வருகின்ற கோபத்துடன் ரிஷிகளில் தலைவராகிய வஸிஷ்டரை அப்பொழுதே நாசஞ்செய்துவிட்டதாக நினைத்தார்.

பின்பு அவர் வஸிஷ்டர் ஆஶ்ரம ப்ரதேசத்துக்குச் சென்று பலவகை அஸ்த்ரங்களையும் ப்ரயோகிக்க, அவ்வஸ்த்ரங்கள் தங்கள் தேஜஸ்ஸினால் வஸிஷ்டர் ஆஶ்ரமத்தை முழுவதும் எரித்துவிட்டன. இங்ஙனம் விஶ்வாமித்ரர் தமது மேலான மதியைக் கொண்டு ப்ரயோகஞ்செய்கிற அந்த அஸ்த்ரங்களைக் கண்டு அங்குள்ள முனிவர்கள் அனைவரும் கூட்டங்கூட்டமாகப் பத்துத் திசைகளிலும்பறந்தோடிவிட்டார்கள். அவ்வாஶ்ரமத்திலுள்ள வஸிஷ்டரது சிஷ்யர்களும் மிருகங்களும் பக்ஷிகளும் மிகவும் பயமுற்று ஆயிரமாயிரமாக இருப்பிடங்களை விட்டு ஓடலாயின. இங்ஙனம் மஹாநுபாவராகிய வஸிஷ்டரது புண்யாஶ்ரமம் கெட்டுப்பாழடைந்து மனிதர் மிருகங்கள் பக்ஷிகள் மரங்கள் ஆகிய இவையெல்லாமற்று நிஶ்ஶப்தமாகிக் களர்பூமியைப்போல மாறிவிட்டது. அவ்வளவை

யுங் கண்ட வஸிஷ்டர் ஸூர்யன் பனியைத் தொலைப்பது போல இவ்விஸ்வாமித்ரனை இப்பொழுதே நாசஞ்செய்து விடுகிறேன். ஒருவரும் பயப்படவேண்டாம்' என்று அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருந்தார். ஆயினும் அம்மொழியைக் காது கொடுத்துக் கேளாமலேயே அனைவரும் பயந்தோடிவிட்டார்கள். உடனே வஸிஷ்டமுனிவர் கடுஞ்சினங்கொண்டு விஸ்வாமித்ரரை நோக்கி, 'மூடவரசனே! இவ்வாஸ்ரமம் வெகுகாலமாக வளர்ந்து மிகவும் தவம் பொருந்தி விளங்கி வருவதைச் சிறிதும் பாராட்டாமல் பாழ்செய்தனை. ஆனதுபற்றி நீ மிகவும் கொடுஞ்செயலுடையவன். இனி நீ உயிருடன்பிழைத்திருக்கத்தகாது' என்று மொழிந்துகொண்டு கோபாக்னி மேலெழுந்தெரியப் புகையின்றி விளங்குகின்ற காலாக்னிபோலவும் மற்றொரு யமதண்டம்போலவும் ப்ரகாசிக்கின்ற தமது ப்ரஹ்மதண்டத்தை எடுத்துக்கொண்டு எதிரில் வந்து நின்றார்.

ஐம்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

வஸிஸ்டர் விஸ்வாமித்ரரை வென்றது.

அங்ஙனம் வஸிஷ்டமுனிவர் மொழிந்தவார்த்தையைக் கேட்டு விஸ்வாமித்ரர் மஹாபலசாலியானது பற்றி வெறுமனேயிராமல் ஆக்னேயாஸ்த்ரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு 'வஸிஷ்டா! நில் நில்; உன்னை உயிருடன் விடுகிறதில்லை' என்று அதட்டினார். வஸிஷ்டரும் மிகக் கோபாவேசங்கொண்டு இரண்டாவது யமதண்டமோவென்னும்படி பயங்கரமாயிருக்கின்ற தனது ப்ரஹ்மதண்டத்தை எடுத்து 'அடா க்ஷத்ரியாதமனே! இதோ நீ சொன்னபடி நின்றேன். உனக்குண்டான க்ஷத்திரியபலத்

தைக் காட்டுவாய்! காதி குமாரனே! உன் கொழுப்பையும் நீ ஸம்பாதித்துக் கொண்டுவந்த அஸ்த்ரங்களின் செருக்கையும் இப்பொழுதே நாசஞ் செய்கிறேன். பார்! ஜனங்களுக்கு அடிமை வேலைசெய்து வருகின்ற க்ஷத்ரியனுன உன் பலம் எங்கே? யாவரும் புகழும்படி மேன்மை கொண்டு விளங்குகின்ற என் ப்ராஹ்மண பலம்எங்கே? க்ஷத்திரிய குலத்தின் பெருமையைக் கெடுக்கவந்தவனே! யாவராலும் கொண்டாடத்தக்க எனது ப்ரஹ்மபலத்தை இதோ காட்டுகிறேன்; பார்' என்று சொல்லும்பொழுது விஸ்வாமித்திரர் ப்ரயோகித்த பயங்கரமாகிய அவ்வாக்னேயாஸ்த்ரமானது ஜலம் பட்டு அணைந்த நெருப்புப் போல ப்ரஹ்மதண்டத்தின் மகிமையால் விழுந்தவிடம் தெரியாமல் அடங்கிவிட்டது.

இவ் விஸ்வாமித்ரர் அவ்வளவோடு விடாமல் கோபம் மேலெழுந்து பெருக வாருணாஸ்த்ரம், ரௌத்ராஸ்த்ரம், ஐந்த்ராஸ்த்ரம், பாசுபதாஸ்த்ரம், ஐஷீகாஸ்த்ரம் முதலான திவ்யாஸ்த்ரங்களை யெல்லாம் ஒரேதடவையிற் பிரயோகஞ் செய்தார். இன்னும் அவர் மானவாஸ்த்ரம், மோஹனாஸ்த்ரம், காந்தர்வாஸ்த்ரம், ஸ்வாபனாஸ்த்ரம், ஜ்ரும்பணாஸ்த்ரம், மாதனாஸ்த்ரம், ஸந்தாபனாஸ்த்ரம், விலாபனாஸ்த்ரம், சோஷணாஸ்த்ரம், தாருணாஸ்த்ரம், யாவராலும் வெல்லமுடியாத வஜ்ராஸ்த்ரம், ப்ரஹ்மபாசம், காலபாசம், வருணபாசம், பைனாகாஸ்த்ரம், தயிதாஸ்த்ரம், [1] சுஷ்காசனி [2] ஆர்த்ராசனி, தண்டாஸ்த்ரம், பைசாசாஸ்த்ரம், க்ரௌஞ்சாஸ்த்ரம், தர்மசக்ரம், காலசக்ரம், விஷ்ணுசக்ரம், வாயவ்யாஸ்த்ரம், மதனாஸ்த்ரம், ஹயக்ரீவாஸ்த்ரம் இரண்டு சக்

1. சுஷ்காசனி-நெருப்பிடி.
2. ஆர்த்ராசனி-நீரிடி.

திகள் ஆகிய இவற்றை அவ்வஸிஷ்ட முனிவர்மீது ப்ர யோகித்தார். இன்னும் இவர் கோபம் அடங்காமல் கங்காளாஸ்த்ரம், முஸலாஸ்த்ரம், மகிமை பொருந்திய வித்யாதராஸ்த்ரம், காலாஸ்த்ரம், தாருணாஸ்த்ரம், கோராஸ்த்ரம், காபாலாஸ்த்ரம், கங்கணாஸ்த்ரம் என்கிற அஸ்த்ரங்களையும் பிரயோகஞ் செய்தார். இவர் எவ்வளவு அஸ்த்ர ப்ரயோகங்களைச் செய்தபோதிலும் மேலான தபஸ்வியாகிய வசிஷ்டரிடத்தில் சிறிதும் பயன்படாமற் போய்விட்டன. அஃது அவருக்கும் அதிக ஆச்சரியமாயிருந்தது.

ப்ரஹ்மபுத்ரராகிய வஸிஷ்டமுனிவர் விஸ்வாமித்ரர் பிரயோகித்த அந்தத் திவ்யாஸ்த்ரங்களை யெல்லாம் தமது ப்ரஹ்மதண்டத்தினால் அடக்கிவிட்டார். விஸ்வாமித்ரர் தம் அஸ்த்ரங்கள் அனைத்தும் அங்ஙனம் அடங்கி விட்டதைக் கண்டு வெகுண்டு ப்ரஹ்மாஸ்த்ரத்தை பிர யோகித்தார். அதைக் கண்டு அக்னி முதலிய தேவதைகளும் தேவர்களும் ரிஷிகளும் கந்தர்வர்களும் உரகர்களும் பெரியகுழப்பத்தை அடைந்தார்கள். மூவுலகங்களும் கிடுகிடுவென்று நடுங்கிவிட்டன. ராகவனே! மிகவும் பயங்கரமாகிய அந்த ப்ரஹ்மாஸ்த்ரத்தையும் வஸிஷ்ட முனிவர் ப்ரஹ்ம வித்யாப்யாஸத்தினாலுண்டாகிய தமது ப்ரஹ்மதேஜஸ்ஸினால் மேன்மை பெற்று விளங்கிய ப்ரஹ்ம தண்டத்தைக் கொண்டு அடக்கிவிட்டார். அம்மஹாநுபாவர் ப்ரஹ்மாஸ்த்ரத்தை அங்ஙனம் அடக்கி நிற்கையில் அவர் உருவமானது மூவுலகங்களும் பயங்கொண்டு மதிமயங்கும்படி நெஞ்சிலும் நினைக்க முடியாதபடி அதிக தாருணமாய்த் தென்பட்டது. அப்பொழுது அவருடைய மயிர்க்கால்கள் எல்லாவற்றினின்றும் புகை சூழ்ந்த பொறிகளைக் கக்குகின்ற அக்னி ஜ்வாலைகள் புறப்பட்டன

போலத் தோன்றிற்று. அவர் கையிற் பிடித்திருந்த ப்ரஹ்ம தண்டமும் புகையின்றி விளங்கிய காலாக்னி போலவும் இரண்டாவது யமதண்டம் போலவும் ஜ்வலித்துக் கொண்டிருந்தது.

பின்பு முனிவர்கள் அனைவரும் அம்மஹர்ஷியைப் பார்த்து 'அந்தணர்களில் சிறந்தவரே! தங்கள் ப்ரஹ்ம பலம் அமோகமா யிருக்கின்றது. தங்கள் மகிமையைக் கொண்டு அந்த ப்ரஹ்மாஸ்த்ரத்தின் தேஜஸ்ஸை அடங்கச் செய்யவேண்டும். விஸ்வாமித்ரர் மிகத்தவம் புரிந்தவராயிருந்தாலும் தங்கள் முன்பு தோற்றுப் போய்விட்டார். இனித் தாங்கள் கோபம்கொள்ள வேண்டாம். அருள் புரியவேண்டும். முனிவர்களிற் சிறந்தவராகிய தங்கள் அநுக்கிரகத்தினால் உலகங்கள் துயரம் நீங்கியிருக்கட்டும்' என்று சொல்லிப் புகழ்ந்து கொண்டாடினார்கள். அதனைக்கேட்டு மஹா தபஸ்வியும் மஹாதேஜஸ்வியுமாகிய வஸிஷ்டமுனிவர் கோபந் தணிந்தார். பின்பு விஸ்வாமித்ரரும் தோல்வியடைந்து பெருமூச்சு விட்டுக் கொண்டு 'சீ! க்ஷத்ரிய பலம் பயனற்றது. ப்ரஹ்ம தேஜஸ்ஸினாலுண்டாகிய பலம் ஒன்றுதான் உயர்ந்த பலமாகும். இதற்கு வேறு சாக்ஷி வேண்டியதில்லை. இந்த வஸிஷ்டருடைய ஒருப்ரஹ்மதண்டத்தினால் எனது அஸ்த்ரங்கள் யாவும் சென்றவிடம் தெரியாமல் பயனற்றுப் போயின. இந்த உயர்வை ஆராய்ந்து மனத்தையும் புலன்களையும் அடக்கித் தெளிவுறச் செய்து க்ஷத்ரியத்தனத்தால் வரும் அஹங்காரத்தை ஒழித்துவிட்டுப் பெருந் தவஞ் செய்து யான் ப்ராஹ்மண்யத்தைப் பெறவேண்டும்' என்று இவ்வாறு தனக்குள் சொல்லிக்கொண்டார்.

ஐம்பத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.

விஶ்வாமித்ரர் தவஞ்செய்து ராஜர்ஷியாதல்.

ராகவனே! இங்ஙனம் வஸிஷ்டமுனிவருடன் வீணுக வைரத்தை உண்டுபண்ணிக்கொண்ட விஶ்வாமித்ர மன்னவர் தனக்கு நேரிட்ட மானக்கேட்டைப் பலமுறை சிந்தித்து மனங்கொதித்து அடிக்கடி பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தார். வஸிஷ்டருக்கு இவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. மஹாநுபாவராகிய வஸிஷ்ட முனிவருடன் வீணுக வைரத்தை உண்டுபண்ணிக்கொண்டதுபற்றித் தான் முன்பு செய்திருந்த தவமும் நசித்துப்போயின. ஆகையினுல், மறுபடியும் தவத்தினுல் அவரை வெல்லும் பொருட்டு முயன்று பட்டமஹிஷியுடன் தென்திசைக்குச் சென்று அங்குக் காய் கனி கிழங்குகளை ஆகாரஞ் செய்துகொண்டு ஐம்புலன்களையு மடக்கிப் பெருந்தவஞ் செய்தார். அவ்விடத்தில் அம்மன்னவருக்கு ஸத்யத்தில் நிலைநின்றவர்களும் தர்மத்தில் மனஞ்சென்றவர்களும் மிகுந்த பராக்ரம முடையவர்களுமான ஹவிஷ்யந்தன் மதுஷ்யந்தன் த்ருடநேத்ரன் என்ற மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். அவருக்குத் தவத்தில் ஆயிரம் வருஷங்கள் சென்றபிற்பாடு, உலகங்களுக்குப் பாட்டனுகிய ப்ரஹ்மதேவன் வந்து 'கௌசிகனே! நீ ராஜர்ஷிகளுக்குரிய உலகங்களையெல்லாம் சொந்தமாக்கிக்கொண்டாய். தவத்தினுல் உன்னை ராஜர்ஷியாக அங்கீகரிக்கிறேன்' என்று அதிமதுரமான மொழிகளை உரைத்துவிட்டு அந்த நான்முகக் கடவுள் தமது ஒளி விளங்கும்படி ப்ரஹ்மலோகத்துக்குச் சென்ருர். காமக்ரோதங்களை விடாமல் அவற்றின் பின்சென்றவர்களுக்குப் பயன் இவ்வளவேயன்றி ப்ரஹ்மத்வம் வந்து விடமாட்டாதல்லவா?

காகுஸ்தனே! விஶ்வாமித்ரர் பிரமன் மொழிந்தவற்றைக்கேட்டு வெட்கமடைந்து தலைவணக்கமுற்றுத் துக்

கித்து 'நான் மிகவும் பெரிய தவஞ் செய்தேன். அதற்கு ரிஷிகணங்களோடு கூடிய தேவர்கள் அனைவரும் என்னை ராஜர்ஷியாகக் கொண்டார்கள். ஆனால், நான்செய்த பெரிய தவத்துக்குப் பயன் இதுவன்று; அதற்கு ப்ராஹ்மத்வம் தக்க பலன்' என்று தீர்மானித்து மன உறுதிகொண்டு மிகுந்த கோபாவேசத்துடன் மூவுலகங்களையும் வருந்தச் செய்ய முயன்றவர் போல முன்செய்த தவத்தைக் காட்டிலும் ஆயிரம் பங்கு அதிகமென்னும்படி மீளவும் கடுமையான தவஞ்செய்தார். இப்படி அவர் தவஞ் செய்து கொண்டிருக்குங் காலத்தில் இக்ஷ்வாகு வம்சத்தை வளரச் செய்பவனாகிய த்ரிசங்குவென்று பிரஸித்திபெற்ற ஒரு அரசன் இருந்தான். அவன் உண்மையை உரைப்பவன். ஐம்புலன்களையும் அடக்கி நடப்பவன். இப்படிப்பட்ட அவ்வரசனுக்கு 'யாகஞ் செய்து சரீரத்துடனே தேவதைகளின் உயர்ந்தஸ்தானமாகிய ஸ்வர்க்கலோகத்தைப் பெற வேண்டும்' என்று புத்தி பிறந்தது. அவன் தனது குல புரோஹிதராகிய வஸிஷ்டரை வரவழைத்துத் தான் மனத்தில் நினைத்த காரியத்தை விண்ணப்பஞ்செய்தான். அவர் 'சரீரத்தோடு ஸ்வர்க்கம்போவது முடியாத காரியம்' என்று மொழிந்து அவன் முயற்சியைத் தடுத்துவிட்டார்.

அம்மன்னவன் வஸிஷ்டர் தடுத்தபிற்பாடு அவரிடம் அன்பில்லாமல் அக்காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டுத் தென்திசையில் வஸிஷ்டபுத்திரர்கள் நூறு பெயர்களும் மிக்க தேஜஸ்ஸுடன் பெருந்தவம் புரிந்து கொண்டிருந்த இடத்தைச் சேர்ந்தான். அங்குப் பெருங் கீர்த்தியைக்கொண்ட வஸிஷ்ட புத்திரர்களைக் கண்டு, மஹானுபாவர்களாகிய அக்குருபுத்திரர்கள் அனைவர்க்கும் கிரமம் தவறுபடி நமஸ்காரஞ் செய்து வெட்கத்தி

ஞல் தலைவணக்கத்துடன் அவர்களை நோக்கிக் கைகூப்பிக்கொண்டு 'குருபுத்திரர்களே! யான் தங்களைச் சரணம் அடைகிறேன். நீங்கள் சரணம் புகுந்தவர்களைக் காக்க வல்லவர்கள். குலகுருவாகிய வஸிஷ்டரை முன்பே சரணமடைந்தேனாயினும் அம்மஹாநுபாவர் எனது அபிப்ராயத்தைத் தடுத்துவிட்டார். நான் ஒரு பெரிய யாகத்தைச் செய்ய வேண்டிக்கொண்டேன். நீங்கள் அதற்கு அநுமதி செய்யவேண்டும். குருகுமார்களாகிய உங்கள் அனைவர்க்கும் நமஸ்காரஞ் செய்கிறேன். நீங்கள் என்மீது அருள்புரியவேண்டும். ப்ராஹ்மணர்களிற் சிறந்த உங்களைவேண்டிக்கொள்ளுகிறேன். நான் வேண்டிக்கொண்ட காரிய ஸித்தியை நிறைவேற்றுங்கள். நான் இந்தச் சரீரத்துடனே தேவலோகஞ் செல்லும்படி யாகம் நடத்திவைப்பீர்களாக. வஸிஷ்டர் என்னை நிராகரித்து விட்டார். நீங்கள் தவத்தையே தனமாய்க் கொண்டிருப்பவர்கள். மேலும் குருபுத்திரர்கள். ஆதலால், உங்களைத் தவிர யாகஞ்செய்விக்க மற்றொருவரும் எனக்குக் கிடையாது. இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த மன்னவர் அனைவர்க்கும் புரோஹிதராகிய வஸிஷ்டரே மேலான கதி. கற்றுணர்ந்த புரோஹிதர்கள் எப்பொழுதும் அரசர்களைக் கரையேற்றுவிக்கிறார்கள். அப்படிப்பட்ட புரோஹிதர் ரக்ஷகராகாமல் கைவிட்டாரென்றால், அவருக்குப் பின்பு நீங்கள்தான் என்னைத் தெய்வம்போற் காக்க வேண்டும்' என்று சொன்னான்.

ஐம்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ வஸிஷ்ட புத்திரர்கள் நிராகரித்ததனுல் த்ரிசங்கு விஸ்வாமித்ரரை அடைதல். }

ராமா! பிறகு வஸிஷ்ட புத்திரர்கள் நூறு பெயர்களும் த்ரிசங்குவின் மொழிகளைக் கேட்டுக் கோபங்கொண்டு 'நீ மதிகெட்ட காரியஞ்செய்ய முயன்றமை பற்றி ஸத்யவாதியாகிய உன் குரு அதற்குச் சம்மதிக்கவில்லை. உன்னை நிராகரித்துவிட்டார். அப்படிப்பட்ட குருவை உல்லங்கனஞ் செய்து மற்றொருவரை அடுப்பது எப்படி? இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்தவர் அனைவருக்கும் அவரே புரோஹிதரும் பரமாசார்யருமாகி யிருக்கிறார். அவர் எப்பொழுதும் ஸத்யத்தையே உரைப்பவர். அப்படிப்பட்டவர் வார்த்தை சிறிதும் தாண்டத்தக்கதன்று. மஹாநுபாவராகிய வஸிஷ்ட மஹர்ஷி அவ்வித யாகஞ் செய்விக்க முடியாதென்று சொன்னபிற்பாடு அப்படிப்பட்ட யாகத்தை நாங்கள் எப்படி உனக்குச் செய்விக்கமுடியும்? நீ மன்னவர் அனைவரிலும் சிறந்தவனு யிருந்தும் இப்படிப்பட்ட பிரயத்னஞ் செய்வது நன்ருயிருக்கவில்லை. நீ ஸுகமாக உனது நகரத்துக்குப் போய்ச்சேர். அரசனே! அம் மஹாநுபாவர் உனக்கு மாத்திரமேயன்றி, மூவுலகங்களிலுள்ளவர்களுக்கும் யாகஞ்செய்விக்க வல்லவர். அவருக்கு அவமதிப்பான காரியத்தை நாங்கள் எப்படிச் செய்யக் கூடும்?' என்று சொன்னுர்கள்.

இங்ஙனம் அந்த வஸிஷ்ட புத்திரர்கள் உரைத்த வார்த்தைகளைக் கேட்டு மீளவும் த்ரிசங்குமன்னவன் அவர்களை நோக்கிக் 'குருவாகிய வஸிஷ்டர் முதலில் என்னை நிராகரித்தனுப்பினர். அப்படியே குருபுத்திரர்களாகிய நீங்களும் நடத்திவிட்டீர்கள். இனி நான் மற்றொரு கதியைத் தேடிக் கொள்ளுகிறேன். தபோதனர்களே! உங்களுக்கு நன்மை யுண்டாகட்டும். என்று சொன்னன்.

வஸிஷ்ட புத்திரர்கள் அந்த வாக்கியத்தைக் கேட்டுத் துர்ப்புத்தி யுள்ளவனே! குலகுருவும் ப்ரஹ்ம புத்திரரு மான வஸிஷ்டரை உல்லங்கனஞ் செய்து நீ மற்றொரு புரோஹிதரை அடுக்க நினைத்தாய். இது மிகவும் கெட்டது. அதனால், நீ சண்டாளனாகக்கடவை' என்று சாபமிட்டார்கள். அன்றிரவு கடந்து பொழுது விடிந்தவுடன் அவ்வரசனுக்குச் சண்டாளத்தன்மை வந்துவிட்டது. அவன் இடையில் இருந்த பீதாம்பரமானது சண்டாளர் உடுக்கும் கரித்துணியாயிற்று. முன்பு அவனிடத்திற் பிரகாசித்துக் கொண்டிருந்த ராஜதேஜஸ்ஸு மறைந்து கண்கொண்டு காணமுடியாத கரியவண்ணம் அவனைக் கவர்ந்து கொண்டது. மஹா ராஜ லக்ஷணங்கள் அமைந்து ஸௌபாக்கியத்தை வெளியிட்டுக்கொண்டிருந்த அம்மன்னவனது சரீர ஸௌந்தர்யம் அவ்வளவும் குலைந்துபோயிற்று. அவன் உருவம் பார்க்கப் பயங்கரமாயிற்று. நீண்டு நிகுநிகென்று கறுத்துக் க்டைகுழன்ற கேசங்களும் குறுகிப்பருத்த செம்பட்டை மயிர்களான குமுகுமுவென்று மணங் கமழ்ந்து விளங்கின அழகான பூமாலையும் சவமாலை யாயிற்று. புனுகு ஜவ்வாது முதலிய வாஸனைகள் கலந்தணிந்த கலவைச்சாந்து சுடலைச் சாம்பலாகிவிட்டது. அழகிய ரத்னங்களிழைத்த ஸுவர்ணாபரணங்கள் முழுவதும் இரும்பாபரணங்களாயின. அம்மன்னவன் அங்ஙனம் சண்டாளத்தன்மை அடைந்திருப்பது கண்டு அவனுடன் வந்திருந்த மந்திரிகளும் பட்டணத்து ஜனங்களும் அவனை விட்டுப் பிரிந்துபோனார்கள். அரசன் ஒருவன்மாத்திரம் தனித்திருந்தான். அவன் அந்தத் துயரத்தினால் பகலும் இரவும் பரிதபித்து வருந்தினான். அவன் அந்தவனத்தில் அலைந்து திரிந்து முடிவில் வஸிஷ்டருக்கு வைரியாகிக்கடுந்தவம்புரிந்துகொண்டிருக்

கிற விஸ்வாமித்ரரிடம் சென்றான். குருவினாலும் குருபுத்திரர்களாலும் தன் மனோரதம் விபலமாகச் செய்யப்பட்டதோடு சண்டாள வடிவமும் பெற்று இக பர ஸுகங்களில் ஒன்றுமின்றி வருத்தமுற்றிருக்கிற அம்மன்னவனிடத்தில் விஸ்வாமித்ரருக்குக் கருணை உண்டாயிற்று.

அவர் தார்மிகரும் மிகுந்த ப்ரபாவம்பொருந்தியவருமானதுபற்றிக் கோரமான உருவங்கொண்ட அம்மன்னவனை நோக்கி 'உனக்கு நன்மை உண்டாகுக' என்று அநுக்கிரகஞ்செய்து நீ இங்கு வந்த காரியமென்ன? மேலான உனதுபலத்தை அடக்குவது சாதாரணமானதன்று; மேலும், நீ சூரியவம்சத்திற் பிறந்தவன். அயோத்திமாநகருக்கு அதிபதி. இப்படிப்பட்ட வீரனாகிய உனக்குச் சாபத்தினால் சண்டாளத்தன்மை உண்டாவதற்குக் காரணமென்ன?" என்று வினவினார். த்ரிசங்கு மன்னவன் அந்த மொழியைக்கேட்டு கையைக் கூப்பிக்கொண்டு ஐயா! நான் ஒரு மனோரதத்தை உத்தேசித்து எனது குலகுருவையும் குருபுத்திரர்களையும் வேண்டிக்கொண்டேன். அவர்கள்என்னை நிராகரித்து விட்டார்கள். என் எண்ணம் அநுகூலிக்காமற் போனதோடு அதற்கு விபரீதமான பலனும் எனக்கு நேரிட்டது. நற்கருத்துடையவரே! இந்தச் சரீரத்தோடு ஸ்வர்க்கம் செல்லவேண்டுமென்று எனக்கு ஒரு எண்ணம் உண்டாயிற்று. நான் வீணாக அங்ஙனம் ஆசைப்படவில்லை. அதற்காக நூறு யாகங்களைச் செய்தேன். அவைகளுக்கு நான் ஒன்றும் பயன் பெறவில்லை. [1] பொய்யுரைப்பதினால் அந்த யாகத்தின் பயன் கெட்டுப் போயிற்றோவென்று நினைக்கவும் வழியில்லை. எப்படிப்

---

1. 'யஜ்ஞோநௌதேந க்ஷயதி' என்று 'யாகம் பொய்சொல்லுவதால் க்ஷயித்துப்போகும்.'

ப்பட்ட ஆபத்காலத்திலும் நான் பொய் சொன்னது கிடையாது. இவ்விஷயத்தில் தங்கள் எதிரில் என் க்ஷத்ரிய தர்மத்தின் மீது ஆணையிட்டுப் பிரமாணஞ் செய்கிறேன்.

பூஜ்யரே! பலவகை யாகங்களைச் செய்தேன். தர்மம் தவறாமல் பிரஜைகளைப் பரிபாலித்து வந்தேன். மஹாநுபாவர்களாகிய குரு ஜனங்களை விநயத்தோடு எனது நற்குணங்களைக்கொண்டு சந்தோஷிக்கச் செய்தேன். இன்னும் என்ன செய்யக்கூடும்? தர்மத்தைச் சம்பாதிக்கும் பொருட்டு யத்னஞ் செய்துகொண்டு அதற்காக யாகஞ் செய்ய முயன்று குருக்களை வேண்டினேன். என் குருக்கள் அவ்விஷயத்திற் சந்தோஷமடையவில்லை. இவை எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தால் ஒருவரிடத்திலும் குற்றஞ் சொல்ல வழியில்லை. தெய்வச் செயலென்று தோற்றுகின்றது. அதுதான் மனிதனுக்கு நன்மை தீமைகளை விளைவிக்கின்றது. பௌருஷத்தினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அதனால் தெய்வத்தை மீறிப் போக முடியாது. ஆனதுபற்றி எனது தர்மாநுஷ்டானங்களெல்லாம் வீணாகிவிட்டன. தெய்வம் எல்லாவற்றையும் அடக்கி மேல் நிற்கின்றது. அதுவே யாவற்றையும் உண்டாக்க வல்ல முக்கியகாரணம். ஆகையால், என்னைப்போன்றவன் என்ன செய்தால்தான் என்ன? தெய்வம் நான் செய்கிற புருஷப்ரயத்னங்கள் எல்லாவற்றையும் பறக்கடிக்கின்றது. ஆனதுபற்றி, மிகத்துயரங்கொண்டு நிற்கின்ற யான் தங்கள் அநுக்கிரகத்தை வேண்டுகிறேன். தங்களுக்கு நன்மையுண்டாகட்டும். என்மீது அருள்புரியவேண்டும். நான் மற்றெவரிடத்திலும் செல்லமாட்டேன். தங்களைத் தவிர ஒருவரும் எனக்குத் திக்கில்லை. வஸிஷ்டரே நேராக வந்து இனி என்னை அழைத்தபோதிலும் நான்

அவரைச் சரணம் புகுவதற்குத் தயாராயிருக்கவில்லை. ஆகையால் தங்கள் அநுக்கிரகமாகிய புருஷகாரத்தினல் ப்ரதிகூலமாயிருக்கின்ற எனது தெய்வத்தைத் திருப்பி அநுகூலமாகச் செய்யவேண்டும்' என்று வேண்டிக் கொண்டான். ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

விஶ்வாமித்ரர் த்ரிசங்குவுக்கு யாகஞ் செய்ய முயன்றது.

சண்டாளனைப்போலவே உருவக் தரித்து விளங்குகின்ற அம்மன்னவன் வேண்டிக்கொண்டதனல் விஶ்வாமித்ரர் அருள்புரிந்து இங்ஙனம் இனிதாக மொழியத் தொடங்கினர். 'இஷ்வாகு வம்சத்திற் பிறந்த மஹாராஜனே! உனக்கு நல்வரவு உண்டாகவேண்டும். நீ தர்மிஷ்டனென்பது எனக்குத் தெரியும். உன்னை நான் காப்பாற்றுகின்றேன். நீ இனிப் பயப்படவேண்டாம் அரசர்களின் தலைவனுகிய உனக்கு மேன்மை யுண்டாகும். நீ நடத்தும் யாகத்திற்குச் சகாயமாகும்பொருட்டு நற்செய்கையுடைய மஹர்ஷிகள் யாவரையும் வரவழைக்கிறேன். அதனல், நீ ஸுகமாக யாகஞ் செய்யலாம். உனக்கு நேரிட்டிருக்கிற இந்தச் சண்டாளரூபம் சாபத்தினுலுண்டானது பற்றிப் பிரமனுலும் தடுக்கமுடியாது. ஆகையால் இவ்வுருவம் உன்னிடத்திலேயே இருக்கட்டும். ஆனுலென்ன ? இவ்வுருவத்தோடு கூடிய இச்சரீரத்துடனேயே நீ ஸ்வர்க்கலோகம்போவாய். விஶ்வாமித்ரன் சரணமடைந்தவர்களை எவ்விதத்திலும் கைவிடாது காப்பாற்றவல்லவன். அப்படிப்பட்டவனை நீ சரணம் புகுந்திருக்கிறுய். ஆகையால் ஸ்வர்க்கம் உன் கையிலிருப்பதாகவே நான் எண்ணுகிறேன்' என்று சொல்லிச் சந்தோஷப்படுத்தினர்.

பின்பு மஹாதேஜஸ்வியாகிய விஶ்வாமித்ரர் தர்மிஷ்டர்களும் மிகக் கற்றவர்களுமாகிய தனது புத்ரர்களைப் பார்த்து யாக ஸம்பாரங்களைச் சித்தப்படுத்தும்படி ஆஜ்ஞாபித்துப் பிறகு சிஷ்யர்கள் அனைவரையு மழைத்துக் 'குழந்தைகளே ! நீங்கள் எனது ஆணையைக் கொண்டு சென்று ரிஷிகளையும் அவர்கள் சிஷ்யர்களையும் ஸ்நேஹிதர்களையும் ரித்விக்குகளையும் வித்துவான்களையும் மற்ற அனைவரையும் அழைத்துவாருங்கள் ! நீங்கள் சென்று கூப்பிடும்பொழுது எவனாவது அநாதரவு செய்து மறு மொழி உரைப்பானாயின், அவ்வுரைகள் அனைத்தையும் எனக்குச் சொல்லவேண்டும்' என்று ஆஜ்ஞாபித்து அனுப்பினர். அவர் சிஷ்யர்கள் குருவின் ஆணையைக் கொண்டு நான்கு திசைகளுக்குஞ் சென்று எல்லா ப்ராஹ்மணர்களையும் அழைத்துவிட்டு வந்தார்கள். எல்லாத் தேசங்களிலிருந்தும் வேதங்களை ஓதியுணர்ந்த முனிவர்கள் யாவரும் வந்து சேர்ந்தார்கள். சிஷ்யர்கள் குருவினிடம் வந்து பூஜ்யரே! தங்கள் வார்த்தையைக் கேட்டு ப்ராஹ்மணர்கள் அனைவரும் வந்துகொண்டிருக்கிறார்கள். மஹோதயனென்ற முனிவனும் வஸிஷ்டபுத்ரர் நூற்றுவரும் தவிர, மற்றை யாவரும் வந்துவிட்டார்கள். வஸிஷ்ட புத்திரர்களும் மஹோதயனும்கோபங்கொண்டு 'யாகஞ் செய்விப்பதற்கு ப்ராஹ்மணன் ஒருவனுக்குத் தான் தகும். இப்படியிருக்க யாகஞ்செய்விப்பவன் க்ஷத்ரியனும். யாகஞ் செய்பவன் சண்டாளனும். இது விசேஷமாயிருக்கிறது. நல்லது சண்டாளன் ஸபையில் வந்து தேவதைகள் எப்படி ஹவிர்ப்பாகம் பெறுவார்கள்? ரிஷிகள் ரித்விக்குகளாகிய யாகத்தின் மிச்சமாகிய ஹவிஸ்ஸை எப்படி புசிப்பார்கள் ? மஹாநுபாவர்களாகிய ப்ராஹ்மணர்கள் விஶ்வாமித்ரர் தங்களைக் காத்துவந்தாலும்

சண்டாளன் அன்னத்தைப்புசித்து எங்ஙனம் ஸ்வர்க்கம் செல்லப் போகிறார்கள்? என்று சொன்னார்கள்' என்று கூறினார்கள்.

இப்படி விஸ்வாமித்ரர் அவர்கள் சொன்ன சொற்களைக் கேட்டுப் பெருஞ்சினங்கொண்டு கண்கள் சிவந்து அந்தக் கோபாவேசம் உள்ளடங்காமல் 'மஹாநுபாவர்களின் தேஜோ விசேஷத்தினால் எவ்வித கெடுதியும் உண்டாகாதென்கிற நியாயம் ஒன்றில்லையா? அதைப் பற்றியல்லவா சண்டாளனாயிருந்தாலும் அவனைக்கொண்டு யாகஞ் செய்விக்க முயல்கிறேன். ஆகையால் நான் துஷ்டனாகக்கூடுமா? மேலும் நான் மிகக் கடுமையாகத் தவம் புரிந்திருக்கிறேன். ஸாமான்ய மனிதனாயிருக்கவில்லை. இவற்றை அறியாமலும் எனது பெருந்தவத்தை யோசியாமலும் என்னைத் தூஷிக்கிற துராத்மாக்கள் சாம்பலாகப் போகிறார்கள். இதற்குச் சந்தேகமில்லை. இப்பொழுது அவர்கள் காலபாசத்தினால் கட்டுண் டிழுக்கப்பட்டு யமன் வீட்டுக்குச் செல்வார்கள். இவ்வளவேயன்றி அவர்கள் எழுநூறு ஜன்மங்கள் வரையிலும் எங்குமுள்ள பிணங்களைப் பிடுங்கித் தின்றுகொண்டு முஷ்டிகரென்னும் ஹீனஜாதியிற் பிறந்து மன இரக்கமின்றி நாய் மாம்ஸத்தைத் தவறாது புசித்துச் செயல் பேச்சுமுதலிய ஸகல வியாபாரங்களும் விகாரமாகி விகாரரூபங்கொண்டு இவ்வுலகமெங்குந் திரிவார்கள். மஹோதயன் துர்ப்புத்தியாகித் தூஷிக்கத்தகாத என்னைத் தூஷித்தானல்லவா? அவனே ஸகல லோகங்களிலும் தூஷிக்கப்பட்டு வேடத்தனம் பெற்றுத் தயையற்றுப் பலாத்காரமாகப் பிராணிகளைப் பீடிப்பதில் விருப்பங்கொண்டு வெகுகாலம் எனது கோபத்தினால் துர்க்கதியைப் பெறவேண்டும்' என்று சொன்னார். பெருந்தவம் புரிந்து மஹாப்ரபாவம் பெற்ற

விஶ்வாமித்திரர் ரிஷிகளின் இடையில் இவ்வளவுமட்டுஞ் சொல்லி நிறுத்திவிட்டார்.

ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ விஶ்வாமித்ரர் த்ரிசங்குவுக்காக மற்றொரு ஸ்வர்க்கம் உண்டுபண்ணுதல். }

பிரபாவம் பொருந்திய விஶ்வாமித்ரர் தம் தவமகிமையினால் மஹோதயனுடன் வஸிஷ்டகுமாரர்கள் அனைவரையும் பாழாகச் செய்து ரிஷிகளின் இடையில் மீளவும் 'இவன் இக்ஷ்வாகுவம்சத்திற் பிறந்தவன்; த்ரிசங்குவென்று எங்கும் கியாதி பெற்றவன்; தர்மம் பொருந்தியவன். தானஞ் செய்வதில் இவனுக்கொத்தவன் எவனுமில்லை. முன்பு க்ஷத்ரியனாயிருந்த இவன் இப்பொழுது சாபத்தினால் சண்டாளரூபம் பெற்றுச் சரீரத்தோடுகூடவே ஸ்வர்க்கம் போகவேண்டுமென்று என்னைச் சரணமடைந்தான். இவன் தன் சரீரத்துடன்கூட ஸ்வர்க்கத்துக்குப் போகும்படி நீங்களும் நானுங்கூடி யாகத்தை நடப்பிக்கவேண்டும்' என்று சொன்னார்.

விஶ்வாமித்ரர் வார்த்தையைக் கேட்டு, மஹர்ஷிகள் அனைவரும் தர்மத்தின் பெருமையை அறிந்தவர்களாகையால் தர்மம் விளங்கிப் புகழுண்டாகும் வண்ணம் தங்களுக்குள்ளாக 'இவ்விஶ்வாமித்ரமுனிவர் குசிக வம்சத்திற் பிறந்தவர். மிகவும் கோபஸ்வபாவ முடையவர். ஆகையால், இவர் சொல்லியதை நன்றாகச் செய்து முடித்தே யாகவேண்டும். இதற்குச் சந்தேகமில்லை. ஏனென்றால், இவர் அக்கியைப்போன்றவர்; அபார மகிமை யுள்ளவர். இவருக்குக் கோபத்தை உண்டாக்கினோமானால், நம்மைச் சபித்துவிடுவார். ஆகையால், நாம் இந்த யாகத்

தை நடப்பிக்கவேண்டும், சாதாரணமாக நடத்துவது மாத்திரமன்றி இக்ஷ்வாகுவம்சத்திற்பிறந்த இந்த மன்னவன் விஸ்வாமித்ரரது பிரபாவத்தினால் சரீரத்துடன் ஸ்வர்க்கத்துக்கு போகும்படியும் நடத்தவேண்டும். ஆனதுபற்றி அனைவரும் ரித்விக்குகள் முதலான கர்த்தாக்களாகத் தங்கள் தங்கள் காரியத்தை நிறைவேற்றவேண்டும்' என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு, யாக காரியங்களை நடத்தத் தொடங்கினார்கள்.

அவ்வேள்வியில் மஹா தேஜஸ்வியாகிய விஸ்வாமித்திரர் அத்வர்யுவாயிருந்தார். மந்திரங்களைச் சந்தேகமற நன்குணர்ந்த ரித்விக்குகள் யாவரும் சாஸ்த்ரங்களிற் கூறிய பிரகாரம் அநுஸரித்துக் கல்ப ஸூத்ரங்களிற் சொல்லியபடி க்ரமம் தவறாமல் ஸகல கர்மங்களையும் நடத்தினார்கள். பின்பு விஸ்வாமித்ரர் தமது தவத்தின் மகிமையினால் ஹவிர்ப்பாகம் கொடுப்பதற்காகத் தேவதைகள் அனைவரையும் மந்த்ரங்களைச் சொல்லி அழைத்தார். எத்தனை தடவை மந்த்ரங்களைச் சொல்லி அழைத்தாலும் ஹவிர்ப்பாகத்தைப் பெற்றுச் செல்வதற்குத் தேவர்களில் ஒருவரும் வரவில்லை. பின்பு அம்முனிவர் கோபாவேசங்கொண்டு ஹோமஞ்செய்கிற அகப்பையை உயர எடுத்து த்ரிசங்குவைப் பார்த்து 'த்ரிசங்கு மன்னவனே! உன் யாகம் இருக்கட்டும். என் தவத்தின் பிரபாவத்தைப்பார்! இதோ என் தவமகிமையினால் உன்னை ஸ்வர்க்கலோகத்துக்குச் சரீரத்துடன் அனுப்புகிறேன்' மற்றொருவன் எப்பாடு பட்டபோதிலும் சரீரத்தோடு போகமுடியாத ஸ்வர்க்கலோகத்துக்கு நீ சரீரத்துடன் போ! மன்னவனே! நான் இத்தனை காலமாகச் செய்து ஸம்பாதித்து வைத்த தவத்தின் பயன் இருக்கின்றது. அதற்குள்ள

அஸாதாரண ப்ரபாவத்தினுல் நீ சரீரத்தோடு கூடி ஸ்வர்க்கத்துச் செல்வாயாக' என்று சொன்னுர்.

அம்முனிவர் அங்ஙனம் சொன்னபிறகு ரிஷிகளனை வரும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அம்மன்ன வன் அப்பொழுதே ஸ்வர்க்கலோகம் போய்ச்சேர்ந்தான். தேகத்தோடுகூட ஸ்வர்க்கத்துக்கு வந்த த்ரிசங்கு மன்ன வனைப் பார்த்துத் தேவேந்திரன் ஸமஸ்த தேவர்களோ டுங்கூடி 'த்ரிசங்குவே! நீ மீளவும் பூலோகம் போய்ச் சேர். நீ ஸ்வர்க்கத்தில் வாஸம்செய்யத் தக்கவனன்று. மதிகெட்டவனே! குரு சாபம் பெற்றுக் கெட்டுப் போயி ருக்கிற நீ எங்கே? ஸ்வர்க்கம் எங்கே? போதும் போ தும்! தலை கீழாகப் பூமியில் விழு' என்றுன். உடனே த்ரிசங்கு மன்னவன் தபோதனராகிய விஶ்வாமித்ரரைப் பார்த்து 'ஸ்வாமீ! என்னைக் காப்பாற்ற வேண்டும். ஸ்வாமீ! என்னைக் காப்பாற்றவேண்டும்' என்று கதறிக் கொண்டவண்ணமே மீளவும் பூமியில் வந்து விழுந்தான். விஶ்வாமித்ரர் அங்ஙனம் கதறிக்கொண்டு விழுகிற அம் மன்னவன் மொழியைக்கேட்டு மிகுந்த கோபாவேசங் கொண்டு 'த்ரிசங்கு மன்னவனே! விழாதே! விழாதே! நான் கட்டளை யிடுகிறேன். அவ்விடத்திலேயே நில்; நில்' என்று மொழிந்து ரிஷிகளின் நடுவில் தாம் வே ருெரு ப்ரஹ்மதேவன் என்னும்படி நின்று, த்ரிசங்கு மன்னவன் இருக்குமிடத்தில் மற்ருெரு ஸ்வர்க்கத்தை உண்டுபண்ண முயன்று, தெற்குத் திசையின் வழியில் வேருகவே ஸப்தரிஷிகளைப் படைத்தார். பெரியவர்களுக் குக் கோபம் தலையெடுக்குமானுல், அது எதைத் தான் செய்விக்காது? அம்முனி மன்னவர் ரிஷிகளின் நடுவில் நின்றுகொண்டு தன் கீர்த்தி எங்கும் விளங்கும் வண்ணம் தென் திசையில் புதிதாக் வேறு நக்ஷத்ரங்களை வரிசை

யாகப் படைத்து, அவ்வளவோடு நிற்காமல், 'மற்றொரு இந்திரனையாவது படைத்து விடுகிறேன். இல்லையாயின், நான் படைத்த லோகத்துக்கு த்ரிசங்குவே அரசனாயிருக்கட்டும். இந்திரனென்று மற்றொருவன் ஏதுக்காக வேண்டும். என்று இந்திரனாகிய த்ரிசங்குவுக்குப் பரிவாரமாகத்தக்க வேறு தேவர்களையும் படைக்கத் தொடங்கினார்.

அதைக் கண்டு தேவாஸுரர்களும் மகா ரிஷிகளும் ஒன்று சேர்ந்து 'நமக்கெதிராக வேறு தேவர்களைப் படைத்தால், நாம் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? என்று மிகவும் பரபரப்புடன் அம்முனிவரிடம் வந்து பலவகையாக நல்வார்த்தைகளைச் சொல்லிக் கோபத்தைத் தணித்து 'மிகுந்த பாக்கியம்பொருந்தினவரே! உமக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. இவன் குருசாபத்தினால் கெட்டுப்போனவன். ஆனதுபற்றிச் சரீரத்தோடு கூட ஸ்வர்க்கம்போக முடியாதல்லவா?' என்று சொன்னார்கள். முனியன்னவர் 'தேவர்களே! உங்களுக்குச் சுபமுண்டாகவேண்டும். இந்த த்ரிசங்குமன்னவனைச் சரீரத்தோடுகூட ஸ்வர்க்கத்துக்கு அனுப்புகிறேன் என்று நான் பிரதிஜ்ஞை செய்திருக்கிறேன். இப்பொழுது எந்தக் காரணத்தை முன்னிட்டாவது நான் அதைப் பொய்யாகச் செய்யமாட்டேன். இந்த த்ரிசங்கு இப்பொழுது தன் சரீரத்தோடு நிலைபெற்றிருக்கின்ற அந்தரமே சாஶ்வதமான ஸ்வர்க்கலோக மாகட்டும். மற்ற லோகங்கள் எத்தனை காலம் இருக்குமோ, அத்தனை காலமும் நான் படைத்த நக்ஷத்திரங்களும் சாஶ்வதமாயிருக்கட்டும். இதை நீங்கள் அனைவரும் ஒத்துக்கொள்ளுங்கள்!' என்றார். தேவர்கள் அனைவரும் 'முனிவரே! அப்படியே ஆகட்டும். தங்களுக்குச் சுபமுண்டாகக்கடவது; தாங்கள் நிருமித்த

பலவகை நக்ஷத்திரங்களும் ஆகாயத்தில் அநாதியான சோதிமண்டல வழிக்கு வெளியில் சாஸ்வதமாக நிலை பெற்று விளங்கும். தாங்கள் படைத்த அந்தச் சோதிகளின் இடையில் த்ரிசங்கு மன்னவன் குருவினிடம் அபசாரப்பட்டதன் காரணமாக இப்பொழுது விளங்குவது போலவே தலை கீழாக இருந்து மிக்க ஒளிபொருந்தித் தேவர்களைப்போலவே விளங்கிவரட்டும். இந்த மன்னவர் தலைவன் ஸ்வர்க்கலோகம் அடைந்தவர்களுக்குக் கிடைக்கின்ற எல்லாப்பயனையும் பெற்றவனாகிப் பெருங்கீர்த்தியுடனிருப்பான். தாம் படைத்த ஜோதிகள் யாவும் ஸ்வர்க்க நக்ஷத்திரங்கள் த்ருவனைத் தொடர்ந்து செல்வதுபோல, இவனையும் தொடர்ந்து செல்லட்டும்' என்று சொன்னார்கள். தர்ம சிந்தையுடையவரும் ப்ரபாவம் பொருந்தினவருமான விஸ்வாமித்ரர் ஸகலதேவர்களாலும் ரிஷிகளாலும் துதிக்கப்பெற்று 'அப்படியே ஆகட்டும்' என்று மொழிந்தார். புருஷோத்தமா! ராமா! பிறகு அந்த யாகம் முடிந்தது. தவத்தையே பொருளாகப்பெற்ற மஹாநுபாவர்களான எல்லா முனிவர்களும் தேவர்களும் தாங்கள் வந்தவழியே திரும்பிச் சென்றார்கள்.

அறுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

அம்பரீஷன் யாகத்துக்குச் சுநச்சேபனை நரபசுவாகக் கொள்ளுதல்.

பிறகு ஆண் சிங்கமென்று விளங்குகின்ற மஹாவீரரும் மஹாநுபாவருமாகிய விஸ்வாமித்ரமுனிவர் தன்கட்டளையின்படி யாகத்திற்கு வந்திருந்த ரிஷிகள் யாவரும் புறப்பட்டுப் போனபிற்பாடு தம் தபோவனத்தில் வாஸஞ்செய்கிற முனிவர்களை நோக்கி 'மஹாநுபாவர்களே!

நாம் செய்ய முயன்ற தவத்திற்கு இந்தத் தெற்குத் திக்கில் பெரிய இடையூறு உண்டாய்விட்டது. இனி நாம் வேறொரு திசைக்குச் சென்று தவம் புரிவோம். மேற்குத் திக்கில் மிக விசாலமாகிய தபோவனங்கள் இருக்கின்றன. அதில் புஷ்கரதீர்த்தத்தின் கரைகளிற்சென்று ஸுகமாகத் தவஞ்செய்வோம். அதுதான் தபோவனங்கள் எல்லாவற்றிலும் மேன்மை பெற்றது' என்று சொன்னார். பின்பு மஹா தேஜஸ்வியாகிய அம்முனிமன்னவர் மேற்குத் திசைக்குச் சென்று அங்குக் காய் கிழங்குகளை ஆஹாரஞ் செய்துகொண்டு புஷ்கர தீர்த்தத்தின் கரைகளில் ஒருவராலும் இடையூறு செய்யமுடியாதபடி மிகப் பயங்கரமாகத் தவஞ்செய்து கொண்டிருந்தார்.

அப்பொழுது அயோத்யைக்கு மன்னவனாகிய அம்பரீஷனென்னும் அரசன் தான் ஒரு யாகஞ்செய்ய முயன்று அதனை வெகு விமரிசையாய் நடத்திக்கொண்டுவருகையில் அவன் வேள்விக் குதிரையை இந்திரன் திருடிக்கொண்டு போய்விட்டான். யாகபசு கண்ணுக்குப் புலப்படாமற் போனதனால் புரோஹிதர் அரசனைப் பார்த்து 'மன்னவனே! நீ ஊக்கமற்றிருந்ததுபற்றி உன் யாகக் குதிரையை யாவரோ கொண்டுபோய் விட்டார்கள். இங்ஙனம் ஊக்கமின்றி வேள்விப்பசுவைப் பத்திரமாகக் காப்பாற்றுவிட்டால் அந்தப் பசு கெட்டுப்போவது முதலிய தோஷங்கள் உண்டாகி அரசனுக்குக் கெடுதியை உண்டுபண்ணும். இப்பொழுது பசுகெட்டுப் போனதற்குச் செய்யவேண்டிய ப்ராயச்சித்தம் நிறைவேற்றுவதற்கு அரிதாயிருக்கின்றது. யாக்காரியம் தொடங்குவதற்கு முன்பு கெட்டுப்போன பசுவைத் தேடிக்கொண்டு வரவேண்டும். இல்லையானால், எவனையாவது ஒரு மனிதனை

இந்த யாகத்திற்குப் பிரதி பசுவாக விரைவிற் கொண்டு வரவேண்டும்' என்று உரைத்தார்.

இங்ஙனம் உபாத்தியாயர் மொழிந்தவார்த்தைகளைக் கேட்டுப் புருஷர்களிற் சிறந்த அம்பரீஷ மன்னவன் அழகிற் சிறந்து விளங்குகின்ற அநேகமாயிரம் பசுக்களை விலையாகக் கொடுத்து நரபசுவைத்தேடிக் கொண்டுவரப் புறப்பட்டு நாடுகளும் நகரங்களும் காடுகளும் ரிஷிகள் வஸிக்கின்ற புண்யாஶ்ரமங்களுமாகியஒவ்வோரிடத்திலும் தேடிக்கொண்டு சென்று எங்கும் நரபசுவைப் பெருமல் கடைசியில் ப்ருகுதுங்கமென்னும் பர்வதத்துக்குச் சென்ருன். அங்கு ரிசீகரென்னும் முனிவர் தமது பிள்ளைகளோடும் மனைவியோடும் ஸுகமாக வாஸஞ்செய்து கொண்டிருந்தார். மஹாதேஜஸ்வியாகிய அம்பரீஷனென்னும் ராஜர்ஷி தவப்பெருக்கினுல் ஒளியுடன் விளங்குகின்ற அந்த ப்ரஹ்ம ரிஷியைக் கண்டு ஸந்தோஷம் அடைந்து அம்முனிவர்க்கு நமஸ்காரஞ்செய்து அவரை அருள்புரியச் செய்து க்ஷேமம் விசாரித்து "மஹா நுபாவரே! நான் ஒரு யாகம்செய்து வருகையில் அந்த யாகத்தின் பசு கெட்டுப்போயிற்று. அதற்குப் பதிலாக இப்பொழுது ந்ரபசுவை வேண்டுகிறேன். நான் தங்களுக்கு நூருயிரம் பசுக்களை விலையாகக் கொடுக்கிறேன். அதைப் பெற்றுக்கொண்டு தங்கள் புத்திரர்களில் ஒருவனை என் யாகத்துக்குப் பசுவாக கொடுக்கவேண்டும். ப்ருகுவம்சத்திற் பிறந்த பாக்யசாலியாகிய ரிசீக முனிவரே! தேசங்கள் முழுவதும் சென்று சுற்றிப்பார்த்தேன். எங்கும் நரபசு அகப்படவில்லை. தங்கள் புதல்வர்களில் ஒருவனை எனக்கு விலையாகக் கொடுங்கள்' என்று கேட்டுக்கொண்டான்.

தேஜஸுபொருந்திய ரிசிகமுனிவர் அதைக்கேட்டு 'மன்னவனே! நீ எவ்வளவு அதிகமான விலை கொடுத்தாலும் எனது மூத்த குமாரனைக் கொடுக்கமாட்டேன்' என்று தீர்மானமாய்ச் சொன்னார். அவர் மனைவி தவம் புரிந்த ரிசிக முனிவர் இங்ஙனம் மொழிந்தது கேட்டு அம்பரீஷ மன்னவனைப் பார்த்து 'வேந்தரே! ப்ருகுவம்சத்திற் பிறந்த இம்மஹாநுபாவர் தம் மூத்த குமாரனை விற்கமாட்டேனென்று சொன்னாரல்லவா! எனக்குக் கடைசிபுத்திரனாகிய சுனகன் அன்புக்கிடமானவன். மன்னவரே! நான் அந்தக் கடைசி குமாமரனைத் தங்களுக்குக் கொடுக்கமாட்டேன். நான் விபரீதமாகச் சொல்லவில்லை. மஹாராஜாவே! பெரும்பாலும் தந்தைகளுக்கு மூத்த பிள்ளைகளிடத்திற் பிரீதி அதிகம் என்பதும் அப்படியே தாய்மார்களுக்குக் கடைசி குமாரர்களிடத்திற் பிரீதி அதிக மென்பதும் உலகத்தில் பிரசித்தியானது. ஆகையால் கடைசி புத்திரனை நான் காத்துக்கொள்ளுகிறேன்' என்றாள்.

ராமா! இங்ஙனம் ரிசீக முனிவரும் அவர் மனைவியும் மொழிந்த பிற்பாடு நடுப்பிள்ளையாகிய சுநச்சேபன் என்பவன் தானாகவே அரசனைப் பார்த்து 'மஹாராஜனே! என் தகப்பனார் மூத்த குமாரனை விற்கமாட்டேன் என்றார். என் தாய் கடைசி குமாரனைக் கொடுக்கமாட்டேனென்றாள். இருவர்வார்த்தையினாலும் நடுப்பிள்ளையாகிய என்னைத் தமக்கு[1] விட்டுவிட்டார்கள் என்று நினைக்கி

1. பிள்ளையைத் தானம் செய்கையும் விக்ரயம் செய்கையும்கூடாதென்று சாஸ்த்ரம்நிஷேதித்திருந்தாலும், ஒரு வம்சம்,நசித்துப்போகவிருக்கும் சமயத்தில் பிள்ளையைத்தானம் செய்வது அதாவது ஸ்வீகரித்துக் கொள்ளக்கொடுப்பது எப்படித் தர்மமோ,அப்படியே யாகத்திற்காக விக்ரயம் செய்வதும் தோஷமாகாமாட்டாது என்று தெரிகின்றது.

றேன். ஆனதுபற்றி என்னை நீர் கொண்டுபோகலாம்' என்றான். பின்பு அம்பரீஷன் ஆநந்தம் அடைந்து நூறுயிரம் பசுக்களைக் கொடுத்துச் சுநச்சேபனை விலைக்கு வாங்கி அவனைத் தேரில் ஏற்றிக்கொண்டு மிகவும் ஒளி பெற்று விளங்குகின்ற தன் கீர்த்தி எல்லாத் திக்கிலும் பரவும்படி பட்டணத்துக்குச் சென்றான்.

அறுபத்தொன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

விஶ்வாமித்ரர் சுநச்சேபனைக் காத்தல்.

புருஷோத்தமா! பெருங் கீர்த்தி பெற்ற அம்மன்னவன் சுநச்சேபனை அழைத்துக்கொண்டு செல்கையில் நடுவில் புஷ்கர க்ஷேத்திரத்தில் இளைப்பாறுவதற்குத் தங்கினான். அப்பொழுது நடுப்பகல். சுநச்சேபன் தன் குணங்களால் எங்கும் புகழ் பெற்றவன். ஒருவனுக்குத் தகப்பன்கட்டளை மேலாயிருந்தாலும் பிராணன் அதைக் காட்டிலும் மேலானதல்லவா? ஆகையால், தன்னை யாகத்துக்குப் பசுவாக வேண்டிக் கொண்டுபோவதற்கு மிகவும் பரிதபித்து அம்மன்னவன் இளைப்பாறுகின்ற தருணத்தில் புஷ்கர க்ஷேத்திரத்திற்குச் சென்று அங்கு ரிஷிகளுடன் தவஞ் செய்துகொண்டிருந்த தன் மாமனாகிய விஶ்வாமித்ரரை மனத்துயரத்துடன் கண்டு நீர் வேட்கையாலும் வழிநடந்து வந்த இளைப்பினாலும் முகம் வாடிப் பேதைத்தனம் வழிய அம்முனிவர் மடியில் வெகு வேகத்துடன் வந்து விழுந்து 'நற்கருத்துடையவரே! எனக்குத் [1] தாயும் இல்லை. தந்தையும் இல்லை. இவர்க

---

1. தாயுமில்லை, தந்தையுமில்லை என்பது இருந்தும் தன்னைக் காப்பாற்றாமற் கைவிட்டபடியினாற் சொல்கிறான்.

ளே இல்லாதபொழுது க்ஞ்யாதிகளும் பந்துக்களும் இருக்கிறார்களென்பது எதன்பொருட்டு? தாங்கள் முனிவர்களில் மேன்மைபெற்று மஹாநுபாவரா யிருக்கிறீர்கள். ஆகையால், தர்மத்தை நினைந்து என்னைக் காப்பாற்ற வேண்டும். தாங்கள் கேவலமான ரிஷிகளைப் போலல்லாமல் மிகுந்த மகிமை அமைந்து விளங்குகின்றீர்கள். மேலும் தாங்கள் யாவரையுங் காக்கவல்லவர். இயற்கையாகவே யாவர்க்கும் நன்மை செய்பவர். ஆகையால், என்னொருவனைக் காப்பது தங்களுக்கு ஒரு விஷயமாகமாட்டாது. ஆனால், என்னைக் காக்கும்பொழுது அம்பரீஷ மன்னவன் செய்ய முயன்றிருக்கிற யாகத்துக்கு யாதொரு கெடுதியும் நேரிடாமலிருக்கவேண்டும். மன்னவன் காரியம் கைகூடும்படிக்கும், நானும் வாழ்நாள் வளரப் பெற்று யாதொரு கெடுதியும் நேரிடப்பெறுமல் மேலான தவங்களைச் செய்து ஸ்வர்க்கம் செல்லும்படிக்கும் தாங்கள் என்னைக் காப்பாற்றவேண்டும். தர்மத்தில் மனஞ்சென்றவரே! நாதனற்ற எனக்குத் தாங்கள் மனமிரங்கி நன்மனத்தோடு நாதனுகவேண்டும். மகனைத் தந்தை காப்பதுபோல, என் பாபத்தினுலுண்டாகிய இவ்வருத்தத்தினின்றும் விடுவித்துக் காப்பாற்றவேண்டும்' என்று சொன்னுன்.

விஸ்வாமித்ரர் அதைக் கேட்டுத் தமது பெருந்தவத்தின் மகிமையினுல் அவனைக் காப்பாற்றுவதற்கு வல்லமையுடையவரானது பற்றி அவனுக்குப் பலவாறுகத் தேறுதல் சொல்லித் தன் புத்திரர்களை நோக்கி 'நன்மையை விரும்புகின்ற தந்தைமார் எந்த ப்ரயோஜனத்திற்காகப் புத்திரர்களைப் படைக்கின்றுர்களோ அப்படிப்பட்ட ப்ரயோஜனத்திற்கு இப்பொழுது ஸமயம் வந்திருக்கின்றது. அந்த ப்ரயோஜனம் தந்தை மொழிந்த

வற்றைத் தவருமல் நடத்துவதுதான். அங்ஙனஞ் செய்வதனுல் உங்களுக்கு மாத்திரமேயன்றி எனக்கும் பரலோகத்தை விளைவிக்கவல்ல தர்மம் ஸித்திக்கும். ஒரு முனிகுமாரனுகிய இப்பாலகன் தன்னைக் காப்பாற்றும்படி என்னை வேண்டிக்கொள்ளுகிருன். புத்திரர்களே! நீங்கள் இவனுக்கு ப்ராணனைக் கொடுத்து ப்ரியஞ் செய்யவேண்டும். நீங்கள் எல்லாரும் புண்யத்தையே செய்பவர்கள், தர்மத்தில் ஊக்கமுள்ளவர்கள். ஆகையால், அம்பரீஷன் யாகத்திற்கு உங்களில் ஒருவன் பசுவாகச்சென்று அக்நியைத் திருப்தி செய்யவேண்டும். நீங்கள் இப்படிச் செய்தீர்களாயின், சுநச்சேபன் நாதனுள்ளவனுகிப் பிழைத்துப் போவான். அம்பரீஷன் யாகமும் இடையூறின்றி நிறைவேறும். தேவர்களும் திருப்தியடைவார்கள். தந்தையாகிய எனது வசனத்தையும் தவருமற் செய்ததாகும்' என்று மொழிந்தார்.

மதுஷ்யந்தன் முதலான குமாரர்கள் அவர்சொன்னவற்றைக்கேட்டு அஹங்காரங்கொண்டு பரிஹாஸத்துடன் 'தந்தையே தாங்கள் எங்களுக்கு பிரபு. எல்லாம் தெரிந்த ஒருவன் தன் வயிற்றிற்பிறந்த பிள்ளைகளைப் பாதுகாப்பானல்லவா? தாங்கள் அதைத்தவிர்த்து மற்றொருவன் பிள்ளையைக் காக்கமுயல்வது எப்படி? இஃது எவ்விடத்து வழக்கம்? நற்சுவையுள்ள உணவைத் தள்ளிவிட்டு நாயின் மாம்ஸத்தைத் தின்பதுபோல, இதைச் செய்யத்தகாத காரியமென்று நாங்கள் எண்ணுகிருேம்' என்ருர்கள். பிள்ளைகள் அங்ஙனம் மொழிந்ததைக் கேட்டு விஶ்வாமித்ரமுனிவர் மிகக்கோபங்கொண்டு கண்கள் சிவந்து 'அடா துஷ்டர்களே! 'தகப்பன் வார்த்தையைத் தள்ளலாகாது' என்று சிறிதும் அச்சமில்லாமல் தந்தைசொற்படி நடக்கவேண்டும் என்னும் தர்மத்தை

யும் தள்ளிவிட்டு என் வார்த்தையை உல்லங்கனஞ் செய்து எனக்கு மயிர்க் கூச்சலுண்டாகும்படி இங்ஙனம் கடினமாகிய மொழிகளை உரைத்தீர்களல்லவா? ஆகையால் நீங்கள்யாவரும் வஸிஷ்ட புத்திரர்களைப்போல முஷ்டிக ஜாதியர்களாகிய நாயின் மாம்ஸத்தைத் தின்றுகொண்டு ஆயிரமாண்டுகள் நிரம்பும் வரையில் பூமியில் திரியுங்கள்' என்று சபித்தார்.

அவர் இங்ஙனம் புத்திரர்களைச் சபித்துவிட்டுத் தம் எதிரில் பயந்து வருந்திநிற்கின்ற சுநச்சேபனுக்குப் பயம் நீங்க விபூதி முதலியவற்றை மந்திரித்து ரக்ஷை செய்து, அவனைநோக்கி 'முனிபுத்திரனே! நீ பாவனமாகிய தர்ப்பக்கயிற்றினாற் கட்டுண்டு சிவந்த பூமாலையுஞ் சந்தனமும் தரித்து விஷ்ணுவைத் தேவதையாகவுடைய யூபஸ்தம்பத்தினருகிற் சென்று அக்னிக்கு எதிராக நின்றுகொண்டு நான் சொல்லுகிற இவ்விரண்டு மந்திரங்களையும் சொல்லவேண்டும். அந்த இரண்டு மந்திரங்களையும் உனக்குச் சொல்லித்தருகிறேன். இவைகளில் ஒன்று இந்திரனையும் மற்றொன்று உபேந்திரனையும் குறித்தது. அற்புதமான அந்த இரண்டு மந்திரங்களை நீ தவறாமல் அம்பரீஷன் யாகத்தில் கானஞ்செய்ய வேண்டும். அதனால் உன் [1] எண்ணம் நிறைவேறப் பெறும்' என்றார். சுநச்சேபன் மனவூக்கத்துடன் அவ்விரண்டு மந்திரங்களையும் பெற்றுக்கொண்டு மனக்கவலை தீர்ந்து வேகமாகச் சென்று சிங்கம்போன்ற அவ்வம்பரீஷ மஹாராஜனைப் பார்த்துப் 'பலம்பொருந்திய மன்னவர் தலைவனே! யாகத்திற்குக் கெடுதி நேராதபடி எங்கெங்கும் திரிந்து என்னைப் பசுவாகப் பெற்றீர். இனி என் காலக்கழிவு செய்ய வேண்டும்? சீக்கிரமாக யாகசாலைக்குப் போவோம்.

1. எண்ணம்-சாவாமற் பிழைக்கவேண்டுமென்னுங் கருத்து.

தீக்ஷை பெற்றுக்கொண்டு யாகத்தை நிறைவேற்றும்' என்று மொழிந்தான். இவ்வாறு சுநச்சேபன் மொழிந்தவற்றைக் கேட்டு அம்பரீஷ மன்னவன் ஸந்தோஷமடைந்து யாகம்நடத்துவதில் அதிக மனவிருப்பங்கொண்டு சிறிதும் சோம்பலின்றி வேகமாக யாகசாலைக்குப் போய்ச் சேர்ந்தான்.

பின்பு அந்த மன்னவன் யாகத்துக்குரிய ஸபிகர்களின் அநுமதிபெற்று யாகத்துக்குப் பசுவென்று தெரியும்படி சுனச்சேபனைச் சிவப்புவஸ்திரம் தரிக்கச்செய்து பசுவாகக்கொண்டு தர்ப்பக்கயிற்றால் யூபஸ்தம்பத்திற் கட்டினான். அம்முனிகுமாரனும் மிக்க மேன்மைபொருந்திய அவ்விரண்டு மந்திரங்களையும் சொல்லிப் பலியைப் புசிப்பவனாகிய இந்திரனையும் யூபஸ்தம்பத்திற்குத் தேவதையாகிய உபேந்திரனையும் விதிப்படி துதிக்கத்தொடங்கினான். ராகவா! பின்பு ஆயிரங்கண்ணனாகிய தேவேந்திரன் தனக்கு ப்ரபுவாகிய விஷ்ணுவையும் தன்னையும் ரஹஸ்யமாய்த் துதிசெய்ததற்கு மிகவும் திருப்தியடைந்து அவனுக்குத் தீர்க்காயுஸ்ஸைக் கொடுத்தான். புருஷர்களிற் சிறந்த ராமனே! அம்பரீஷ மன்னவனும் தேவேந்திரன் அனுக்கிரகத்தினால் யாகத்தின் பலனைப் பலமடங்கு அதிகமாகப் பெற்றான். தர்மத்தில் நிலைநின்ற தவமுடைய விஸ்வாமித்ரரும் புஷ்கரக்ஷேத்திரத்திலேயே மீளவும் ஆயிரமாண்டுகள் தவஞ்செய்துவந்தார்.

அறுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

விஸ்வாமித்ரர் மஹர்ஷித்வம் பெறுதல்.

இங்ஙனம் ஆயிரம் வருஷங்கள் நிரம்பின பிற்பாடு தேவர்கள் அனைவரும் அம்முனிவர் செய்த பெருந்தவத்

திற்குப் பலன்கொடுக்க விரும்பி விரதத்தை முடித்து ஸ்நானம்செய்து எழுந்தருளியிருக்கிற அம்முனிவரிடம் வந்தார்கள். அப்பொழுது மிக ப்ரபாவமுடைய ப்ரஹ்ம தேவன் விஸ்வாமித்ர முனிவரைப் பார்த்து 'உனக்குச் சுபமுண்டாகவேண்டும். நீ இதுவரையில் ராஜர்ஷியாயிருந்தாய். உன் நற்றவங்களினால் இப்பொழுது [1] ரிஷியாகவே ஆய்விட்டனை' என்று சொன்னார். வானவர் வேந்தனாகிய ப்ரஹ்மதேவன் விஸ்வாமித்ரருக்கு இவ்வாறு சொல்லி விட்டுத் தேவர்களுடன் தேவலோகம்போய்ச் சேர்ந்தார். தேஜஸுபொருந்திய விஸ்வாமித்ரர் அவ்வளவில் திருப்தி யடையாமல் மீளவும் பெருந்தவம் புரியத் தொடங்கினர். புருஷர்களிற்சிறந்தவனே! பிறகு வெகுகாலஞ் சென்றபின்பு ஒரு சமயம் அப்ஸரசுக்களில் தலைமைபெற்ற மேனகை என்பவள் அந்தப் புஷ்கர தீர்த்தத்துக்கு வந்து ஸ்நானஞ்செய்யத் தொடங்கினள். குசிகவம்சத்திற் பிறந்த விஸ்வாமித்ரர் ப்ரபாவமுள்ளவராயினும் மேகத்து நடுவில் விளங்கும் மின்னற்கொடிபோல அந்தப் புஷ்கர தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்துகொண்டிருக்கிற அழகில் ஒப்பில்லாத மேனகையைக் கண்டார்.

அவர் அவளை கண்டவுடன் காமனுக்காளாகி அவளை நோக்கி 'அப்ஸரப்பெண்ணே! உனக்கு நல்வரவுண்டாக வேண்டும். நீ இங்கு எனது ஆஸ்ரமத்திலேயே வஸித்திருக்கவேண்டும். உன்னைப் பார்த்தவுடன் மன்மதன் கையில் அகப்பட்டு மோகித்துக்கிடக்கிற என்மீது நீ மனமிரங்கவேண்டும். உனக்கு நன்மை உண்டாகுக' என்று வேண்டிக்கொண்டார். விஸ்வாமித்ரர் வேண்டிக்கொள்வ

1. இதுவரையில் ராஜரிஷியாயிருந்தா யென்றும், இப்பொழுது கேவலம் ரிஷியாய் விட்டாயென்றும் கருத்து.

தனால், அழகில் ஒப்பில்லாதவளான அம்மேனகையும் அதற்கு ஒத்துக்கொண்டு அவ்வாஸ்ரமத்திலேயே வசித்திருந்தாள். ரகுகுலத்திற் பிறந்தவனே! ராமா! அங்ஙனம் அவ்வாஸ்ரமத்தில் விஸ்வாமித்ரரும் மேனகையுமாகக்கூடி வஸித்திருக்கையில் ஸுகமாகப் பத்துவருஷங்கள் சென்றுவிட்டன. முனிவர் பத்துவருஷங்கள் வரையில் அம்மடந்தையுடன் கலந்திருந்ததனால் உண்டான தவக்கெடுதியை நினைந்து வெட்கமடைந்து சிந்தையும் சோகமுமாகிற பெருங்கடலில் மூழ்கினார். ரகுநந்தனா! அம்முனிவர் 'தேவர்கள் அனைவருங் கலந்து என் தவத்தைக் கெடுக்கச்செய்த கொடுஞ்செயல் இது; ஐயோ! பத்து வருஷங்களும் ஒரே இராப்பகல்போலச் சென்றுவிட்டன. நான் காமாவேசங்கொண்டு அறிவுகெட்டுப் போனேன். ஆனதுபற்றியே என் தவத்துக்கு இங்ஙனம் இடையூறு நேரிட்டது' என்று கோபத்துடன் தனக்குள்தானே சொல்லிக்கொண்டார். இங்ஙனம் அவர் தான் செய்தவற்றைத் தானே நினைத்துப் பெருமூச்சுவிட்டுத் துயரமடைந்தார்.

குசிக வம்ச குமாரராகிய அம்முனிவர் நம்மை என்ன சபிப்பாரோ வென்று பயந்து கிடுகிடுவென்று நடுக்கமுற்றுக் கையைக் கூப்பிக்கொண்டு எதிரில் நிற்கிற மேனகையைப் பார்த்து 'இஃது என் அபராதமே யன்றி உன் தப்பிதம் அன்று. நீ வருந்தவேண்டாம்; நானாகவே உன்னை விரும்பினேன். இனி நீ உன் இருப்பிடத்திற்குச் செல். இங்கிருக்கவேண்டாம்' என்று சொல்லி விடைகொடுத்தனுப்பிவிட்டு, உடனே வடக்குத் திசையில் விளங்குகின்ற ஹிமாலயத்திற்குச் சென்றார். அங்கு ஐம்புலன்களையும் வென்று 'விரதத்தைத் தொடங்கி மனவூக்கத்தோடு முடிக்கவேண்டும்' என்று முயன்று தம்கீர்த்தி

எங்கும் விளங்கும்படி கௌசிகீநதிக் கரையில் கடுந்தவஞ் செய்தார். ஆயிரம் வருஷங்கள் வரையில் அதிபயங்கரமாகத் தவம்புரிந்து வந்தார். அப்பொழுது அவர் செய்த தவத்தினல் தேவர்களுக்குப் பயம் உண்டாயிற்று. உடனே எல்லாத் தேவர்களும் ரிஷிகளும் ஒன்றுகூடி ப்ரஹ்மாவினிடஞ் சென்று 'தேவா! விஸ்வாமித்ரர் மஹர்ஷியென்கிற பட்டத்தைப் பெற்றுக்கொள்ளட்டும். தாங்கள் சீக்கிரம் அவருக்கு வரம் கொடுப்பதற்கு வாருங்கள். நாங்கள் அந்தத் தவத்துக்கு அதிகமாகப் பயப்படுகிறோம்' என்று சொன்னர்கள். ஸகல லோக பிதாமஹனுகிய ப்ரஹ்மதேவன் அவர்கள் வசனத்தைக் கேட்டு விஸ்வாமித்ரரிடம் வந்து 'ஓ மஹர்ஷீ! உனக்கு க்ஷேமம் உண்டாகட்டும். நீ செய்த கடுந்தவத்திற்கு நான் மிகுந்த ஸந்தோஷம் அடைந்தேன். உனக்கு மேன்மையைக் கொடுக்கிறேன். நீ இன்றுமுதல் ரிஷிகள் அனைவரிலும் தலைவனுயிரு' என்று சொன்னர். ஸகல லோகங்களுக்கும் ப்ரபுவாகிய ப்ரஹ்மதேவன் மொழிந்த அந்த வார்த்தைக்கு விஸ்வாமித்ரமுனிவர் வருந்தவும் இல்லை; களிக்கவும் இல்லை. அவர் ப்ரஹ்மாவை நமஸ்கரித்துக் கையைக் கூப்பி நின்றுகொண்டு 'மஹாநுபாவனே! நான் செய்த நற்றவங்களால் ஒப்பில்லாத மஹர்ஷியென்னும் பட்டம் எனக்குக் கிடைத்தது. நான் இப்பொழுது ஜிதேந்த்ரியனும் ஆய்விட்டேனல்லவா' என்று கேட்டார். அதற்கு நான்முகக் கடவுள் நீ முனிவர்கள் அனைவரிலும் தலைவனுய்விட்டாய். ஆனுலும், ஜிதேந்த்ரியனுகவில்லை. மனத்துக்கு விகாரத்தை விளைவிக்கும் காரணங்கள் இருப்பினும் விகாரமின்றியிருப்பவன்தான் ஜிதேந்த்ரியன். அஃது உனக்கில்லை. அதற்காக நீ இன்னும் ப்ரயத்னஞ் செய்யவேண்டும்' என்று மொழிந்து, தேவலோகத்துக்குச் சென்றார்.

பிரமனுடன்தேவர்கள் யாவரும் புறப்பட்டுப்போகையில்,விஸ்வாமித்ரர் முனிவர்களில் தலைமைபெற்றுத் தன் முயற்சி வீணனதற்குப் பின்வாங்காமல் கைகளைஉயரவெடுத்து யாதொரு பிடிப்பும்இல்லாமல் நின்று வாயு பக்ஷணஞ் செய்துகொண்டு தவஞ் செய்தார். பின்னும் அவர் இரவும் பகலும் தவத்தையே பொருளாகக் கொண்டு வெயிற்காலத்தில் நாற்புறமும் அக்னியை வளர்த்தி நடுவிலிருந்து ஸூர்யனிடத்திற் கண்களைச் செலுத்திப் பஞ்சாக்னி மத்தியத்தில் நின்றுகொண்டும், மழை காலத்தில் வெளிப்புறத்தில் நின்று கொண்டும், குளிர்காலத்தில் ஜலத்தில் மூழ்கிக் கொண்டும், இவ்வாறாக ஆயிரம் வருஷங்கள் மிகப் பயங்கரமாகத் தவம் நடத்தினர். அம்முனிவர் இவ்வண்ணம் கடுந்தவஞ் செய்துகொண்டிருக்கையில் தேவர்களும் இந்திரனும் மிகவும் பயந்து பெருங்கலக்க முற்றார்கள். இந்திரன் தேவர்கள் அனைவருடன் கலந்து ஆலோசித்து ரம்பையென்னும் அப்ஸர மடந்தையைப் பார்த்துத் தமக்கு நன்மையையும் விஸ்வாமித்ரருக்குத் தீங்கையும் விளைவிக்க உத்தேசித்துப் பின்வருமாறு மொழிந்தான்.

அறுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

இந்திரன் ரம்பையை அனுப்புதலும், விஸ்வாமித்ரர் அவளைச் சபித்தலும்.

'ரம்பையே! நீ விஸ்வாமித்ரரைக் காமமோஹங் கொள்ளச்செய்து அவர் மனத்தைக் கலைத்து உன்னிடத்தில் ஆசைப்படச் செய்யவேண்டும். இது ஸாதாரணமான காரியமன்று. இது பெரிய தேவகாரியம். ஆனதுபற்றி நீ

இதைத் தப்பாமற் செய்' என்று சொன்னான். ராமா! அப்ஸர மடந்தை அவ்வார்த்தையைக் கேட்டு 'இஃதென்ன? அறிவுள்ள இந்திரனும் இவ்வண்ணம் என்னாற் செய்ய முடியாத வார்த்தையைச் சொல்லுகிறான்' என்று வெட்கமுற்றுக் கைகையைக் கூப்பிக்கொண்டு தேவேந்திரனை நோக்கி 'வானவர் தலைவனே! விஶ்வாமித்ரர் ஸாமான்யரன்று. அவர் முனிவர்களில் மேலானவர். இவ்வளவேயன்றி அவர் யாவரையும் பயமுறச் செய்பவர். நான் அங்குச் சென்று ஶ்ருங்கார விளையாடல்களைக் காட்டினேனானால், அவர் தாருணமாகக் கோபங்கொண்டு என்னைச் சபித்துவிடுவார். இதற்குச் சந்தேகமில்லை. தேவா! ஆனதுபற்றி நான் போகப் பயப்படுகிறேன். என்னைப் போகவிடாமல் அருள் புரியவேண்டும்' என்று பயந்து நடுங்கிக் கையைக் கூப்பிக்கொண்டு கூறினாள். தேவேந்திரன் 'ரம்பையே! பயப்படவேண்டாம். எனது கட்டளையைத் தவறாமற் செய்வாயாக. உனக்கு நன்மை உண்டாகும். நான் வஸந்தருது வருகையில் தளிர்த்துப் பூத்து அழகாய் விளங்குகின்ற மாமரத்தின்மீது மனோஹரமான குயிலுருவந்தரித்து மன்மதனுடன்கூடி உன் பக்கத்தில் ஸஹாயமாக வந்திருக்கிறேன். நீயும் உன் அழகைப் பன்மடங்கு அதிகமாக விளங்கும்படி செய்துகொண்டு விஶ்வாமித்ரரிடஞ் சென்று அவர் செய்கிற கடுந்தவத்தைக் கெடுத்துக் காதலுறச் செய்' என்றான்.

அழகுபொருந்திய அம் மங்கையர்க்கரசி இந்திரன் மொழிந்தவைகளைக் கேட்டு ஒப்புக்கொண்டு ஶ்ருங்காரம் பொழியும்படி ஒப்பில்லாத அழகிய உருவம்தரித்து, முகத்திற் புன்னகை தோன்றப் புறப்பட்டு விஶ்வாமித்ரரிடம் வந்து, அம்முனிவரைத் தன்மீது காதலுறச்செய்

யத் தொடங்கினுள். அப்பொழுது விஸ்வாமித்ரர் அழகாகக் கூவுகின்ற குயிலின் ஓசையைக் கேட்டு மனங் களித்து எதிரில் நிற்கிற ரம்பையைக் கண்ணுற்ருர். அங்ஙனம் அவர் கோகிலத்தின் ஒலியைக்கேட்டும் ரம்பையைப்பார்த்தும் ஒப்பில்லாத அவள் கானத்தைச் செவியுற்றும் மனம் கலங்கவில்லை. அவர் இவள் தானு கவந்தவளா? அல்லது இந்திரன் அனுப்பவந்தவளா? என்று ஸந்தேகம் அடைந்தார். பின்பு அம்முனிவர் அவ்வரம்பையின் ஸங்கீதம் முதலியவற்றைக் கண்டு 'இவள் இந்திரன் அனுப்பவந்தவள் தான் என்று நிச்சயித்துக், கோபாவேசங்கொண்டு, ரம்பையைப் பார்த்து, 'ரம்பையே! காமக்ரோதங்களை வெல்லக்கருதித் தவஞ் செய்கிற என் மனத்தை நீ தீய முயற்சி கொண்டு கலக்கமுறச்செய்கிருய். நீ இங்ஙனஞ் செய்ததற்குப் பலனுகப் பதினுயிரம் வருஷங்கள் கல்லாய்க் கிடக்கவேண்டும். ரம்பையே! என் கோபத்தினுற் கல்லாய்க் கிடக்கிற உன்னை' மிகுந்த ப்ரபாவம் பொருந்தியவனும் தவப்பெருக் கமைந்தவனுமாகிய ஓரந்தணன் தன் தவ மகிமையால் சாபத்தினின்றும் விடுவிப்பான்' என்று இவ்வாறு சாபங் கொடுத்தார். இங்ஙனம் மஹாதேஜஸ்வியாகிய அம்முனிவர் கோபத்தை அடக்கமுடியாமல் அம்மடந்தையைச் சபித்துவிட்டுப் பின்பு 'ஐயோ! கோபத்திற்காளாய்விட்டேனே. இவள் செய்த குற்றம்யாது? இவளை ஏன் தயையின்றி சபித்தேன்' என்று பச்சாத்தாபம் அடைந்தார். அப்பொழுது ரம்பையும் கல்லாய்விட்டனள். இங்ஙனம் அம்மஹர்ஷி ரம்பையை பார்த்துச் சொன்ன வார்த்தையைக் கேட்டு மன்மதனும் இந்திரனும் அவ்விடம் நில்லாமல் பயந்து போய்விட்டார்கள்.

மஹாதேஜஸ்வியான விஸ்வாமித்ரரும் தம் தவப்பெருக்கைத் தானே கோபத்தினல் பாழாக்கிக்கொண்டதைச் கண்டு வருந்திப் புலன்களை வெல்லாததனுல் தம் தவம் பாழாய்விட்டதற்குத் துக்கித்தார். அவருக்கு அந்த வருத்தம் தீரவேயில்லை. அவர் இந்திரியங்களை வெல்லாததனுல் தம் தவமெல்லாம் கெட்டுப் போனதைக் கண்டு 'இனிக் கோபங்கொள்ளா திருக்கவேண்டும். யார் எதைக் செய்தபோதிலும் வாயைத் திறவாமல் மௌனமாகவே இருக்கவேண்டும். அல்லது மூச்சுவிடுவதில்கூடக்கோபம் முதலியவை உண்டாகின்றன. ஆகையால் ஆயிரமாண்டுகள் நிரம்பும்வரையிலும் மூச்சுவிடாமலேயே இருக்கவேண்டும். நாம் தவமகிமையால் ப்ரஹ்மர்ஷியென்கிற பட்டம் பெறுகிறவரையிலும் ஐம்புலன்களையும் வெளியிற் செல்லவொட்டாமல் அடக்கித் தவத்தினல் சரீரத்தை ஒடுக்கி உலர்த்தி விடவேண்டும். அதுவரையில் எத்தனை வருஷங்கள் கடந்தபோதிலும் மூச்சுவிடக்கூடாது. ஆகாரமும் கொள்ளக்கூடாது. தவம் புரிந்தால் தவத்தின் மகிமையினல் நமது அவயவங்கள் ஆகாரம் இல்லாவிட்டாலும் நசிக்கமாட்டா' என்று ஸங்கல்பஞ் செய்துகொண்டார். இப்படி அம்முனிவர் மறுபடி ஆயிரம் வருஷங்கள் வரையில் மூச்சுவிடாமலும் ஆகாரம் புசியாமலும் இருந்து விரதத்தில் முயற்சிகொண்டு எவ்விதத்திலாயினும் நினைத்ததை முடித்தே தீரவேண்டுமென்று ஒப்பில்லாத பிரதிஜ்ஞை செய்தார். அறுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

விஶ்வாமித்ரர் ப்ராஹ்மர்ஷியாதல்.

ராமா! பின்பு முனிவர்களில் தலைவராகிய விஶ்வாமித்ரர் ஹிமாலயத்தினல் கியாதிபெற்ற வடக்குத்திசையை விட்டுக் கீழ்த்திசைக்குச் சென்று, அங்கு ஆயிரமாண்டுகள் ஒப்பில்லாத மௌன விரதந் தரித்திருப்பதாக ஸங்கல்பித்துக்கொண்டு மிகப் பயங்கரமாகி யாவராலுஞ் செய்யமுடியாத கடுந்தவத்தை நடத்திக்கொண்டிருந்தார். அவர் பூர்ணமாய் ஆயிரவருஷங்கள் முடிகின்ற வரையிலும் கட்டைபோல நின்று தவஞ் செய்துகொண்டிருக்கையில், எவ்வளவு விக்னங்கள் நேரிட்டாலும் அவர் மனத்தில் கோபமென்பது சிறிதும் உண்டாகவில்லை. ராமா! அந்த விஶ்வாமித்ரமாமுனிவர் 'நான் இனிக் கோபமே கொள்ளக்கூடாது' என்று பெருத்த நிச்சயங்கொண்டு விரதத்தில் நன்கு முயன்று எவ்வகை விக்னங்களும் நேரிடாதபடி தவஞ்செய்தார். ஆனதுபற்றியே அவருக்குக் கோபத்திற்கு அவகாசம் நேரிடவில்லை.

ரகுவம்சத்திற் பிறந்த மஹாநுபாவனே! விரதத்தில் மிகுந்த ஊக்கம்கொண்ட அந்த விஶ்வாமித்ர மாமுனிவர் தாம் ஸங்கல்பித்துக் கொண்டபடி சிறிதும் குறைவில்லாமல் ஆயிரமாண்டுகள் நிரம்ப விரதத்தைச் செய்துமுடித்துவிட்டு, அன்னத்தைப் புசிக்கத் தொடங்குகையில், தேவேந்திரன் அந்தண வேஷம் பூண்டு அவரிடம் வந்து, அவர் புசிப்பதற்கு ஸித்தஞ்செய்து வைத்திருந்த அன்னத்தைத்தனக்குக்கொடுக்கும்படி யாசித்தான். மேன்மை பெற்றவரும் பெருந்தவம் புரிந்தவருமாகிய விஶ்வாமித்ர முனிவர் ஆயிரம் வருஷங்கள் கடந்தபின்பு, பாரணை செய்வதற்காக ஸித்தப்படுத்தி வைத்திருந்த அன்னத்தையெல்லாம் அவ்வந்தணனுக்குச் சிறிதும் ஸந்தேகப்

படாமல் தவத்தின் ஸித்தியை விரும்பி, வேண்டினவர்களுக்கு அன்னத்தைக் கொடுக்கவேண்டியதுதான் என்று நிச்சயித்துக்கொண்டு பக்வமாயிருக்கிற அவ்வன்னத்தையெல்லாம் அவனுக்குக் கொடுத்துவிட்டுத் தனக்கு ஓர விழுங்கூட மிச்சமாகாமற் போனது பற்றிப் புசிக்காமலேயேயிருந்து மௌனவிரதத்தைக் கைப்பற்றிக்கொண்டு அவ்வந்தணனை ஒன்றுஞ் சொல்லாமல் அப்புறமும் ஆயிரம் வருஷகாலம் மூச்சு விடாமல் தவஞ்செய்து கொண்டிருந்தார்.

இப்படி அம்முனிமன்னவர் மூச்சுவிடாமல் தவஞ்செய்து கொண்டிருக்கையில், அவரது சிரஸ்ஸினின்றும் ஒரு புகை கிளம்பிற்று. அதனால் மூவுலகங்களும் நடுநடுங்கிப் பரிதபித்தன. பின்பு தேவர்களும், கந்தர்வர்களும், உரகர்களும், அஸுரர்களும், ராக்ஷஸர்களும் ஆகிய எல்லோரும் அவ்விஸ்வாமித்ரர் தவமாகிற அக்னியால் தங்கள் ஒளி குன்றி மதிமயங்கி வருத்தமுற்று ப்ரஹ்மாவினிடஞ் சென்று இங்ஙனம் முறையிட்டுக்கொண்டார்கள். தேவா! ரம்பை முதலிய தேவலோக ஸ்த்ரீகளை அனுப்பி விஸ்வாமித்ரரை மனக்கலக்கமுறச் செய்யப் பார்த்தோம். ஆயிரம் வருஷங்கள் நிரம்பினபின்பு, தாம் விரதத்தை முடித்துப் பாரணை செய்வதற்காகச் சித்தஞ்செய்து வைத்திருந்த அன்னத்தை வாங்கிக்கொள்வது முதலியவற்றால் அம்முனிவருக்குக் கோபத்தை உண்டுபண்ணப் பார்த்தோம். எதைச் செய்தபோதிலும் அவருடைய தவம் குறையாமற் பெருகிவருகின்றது. அவரிடத்தில் குற்றம் சிறிதும் புலப்படவில்லை. ஆகையால், அவர் மனத்தில் விரும்பியதைக் கொடுக்காவிட்டால் ஜங்கமஸ்தாவரங்களடங்கிய மூவுலகங்களையும் அவர் தம் தவத் தீயி

ளுல் நாசஞ்செய்துவிடுவார். ஸ்வாமீ! திசைகள் யாவும் இருள்மூடிச் சிறிதும் ஒளியற்றவைகளாகிவிட்டன. கடல்கள் க்லக்கமுற்றன. பர்வதங்கள் யாவும் படபடவென்று வெடித்துப்போகின்றன.

பூமி கிடுகிடுவென்று நடுங்குகின்றது. வாயுவும் கலக்கத்துடன் வீசுகின்றது. இதற்குச் செய்யவேண்டிய பரிகாரம் யாது? அஃது எங்களுக்குத் தெரியவில்லை. இந்த உபத்ரவத்தினுல் ஜனங்கள் அனைவரும் நித்யாநுஷ்டானங்களை ஒழித்து நாஸ்திகர்களைப் போல் ஆய்விடுவார்களென்று எங்களுக்குத் தோற்றுகின்றது. இதைக்காட்டிலும் வேறு விபரீதம் என்ன உண்டாகவேண்டும்? மூவுலகங்களும் மனக் கலக்கமுற்று மதி மயங்கிக் கிடக்கின்றன. அம்மஹர்ஷியின் தேஜஸ்ஸினுல் ஸூர்யன் ஒளியும் குன்றிவிட்டது. இனி மற்றவைகளைப் பற்றி என்ன சொல்லவேண்டும்? அவர் அக்னியைப்போன்றவர்; அவர் மிகுந்த மகிமையோடு கூடிய ஒளியுடன் விளங்குகின்ருர். அப்படிப்பட்ட அம்முனிவர் மூவுலகங்களையும் அழிக்க நினைப்பதற்குமுன்பே தாங்கள் அவரை அநுக்ரஹம் செய்யவேண்டும். ப்ரளய காலாக்னியைப் போலவே அம்முனிவர் மூவுலகங்களையும் தகித்துவிடுவாரென்று தோற்றுகின்றது. ஒருகால் அவர் தேவராஜ்யத்தையும் வேண்டக்கூடும். அப்படிப்பட்ட விபரீதம் உண்டாவதற்கு முன்னமே அவர் வேண்டிக்கொள்வதைக் கொடுப்பது நலம்' என்று உரைத்தார்கள்.

பின்பு உடனே பிரமதேவன் தேவர்கள் அனைவரையும் முன்னிட்டுக்கொண்டு மஹாநுபாவராகிய விஸ்வாமித்ரரிடம் வந்து 'ப்ரஹ்மரிஷியே! உமக்கு க்ஷேமம் உண்டாகுக. நீர் செய்த கடுந்தவத்தினுல் நாங்கள்

எல்லாரும் மிக மகிழ்ச்சியடைந்தோம்' என்று இனிமையாகச் சொன்னார். இன்னும் அவர் 'கௌசிகரே! ஸகல தேவர்களும் யானுமாக உமக்கு நெடுங்காலம் ஆயுளை வளரச் செய்கிறோம். நீர் நன்மையைக் கைக்கொள்ளும். உமக்கு க்ஷேமம் உண்டாகும். இனி இந்தத் தவத்தை நிறுத்திவிட்டு நீர் சுகமாய்ப் போகலாம்' என்று மொழிந்தார். இங்ஙனம் பிரமனும் மற்றுமுள்ள தேவர்களும் மொழிந்ததைக் கேட்டு விஸ்வாமித்ரர் ஆனந்தமடைந்து அனைவர்க்கும் நமஸ்காரஞ் செய்து 'தேவஸ்ரேஷ்டர்களே! நீங்கள் அனைவரும் எனக்கு நீண்ட வாழ்நாளையும் அந்தணர் தன்மையையும் கொடுத்தது உண்மையாயின் ஓங்காரமும் வஷட்காரமும் வேதங்களும் தாமே வந்து எனக்குத் தோன்றவேண்டும். நான் அவற்றை ஒருவர்க்கு உபதேசிக்கவும் யாகஞ் செய்விக்கும்பொழுது அவைகளை உபயோகிக்கவும் உரியவனாகவேண்டும். இன்னமும் ஒன்று சொல்லுகிறேன்; வஸிஷ்டர் ஸூர்ய வம்சத்தரசர்களுக்கு அநாதியாய்ப் புரோஹிதராயிருப்பதுபற்றி க்ஷத்ரியர்களுக்கு வேண்டிய அதர்வண வேதத்தை நன்றாக அறிந்திருக்கிறார். ப்ராஹ்மணர்களுக்கு வேண்டிய வேதங்கள் எல்லாவற்றையும் ஓதியுணர்ந்து ஒளியுடன் விளங்குகிறார். மேலும் பிரமாவுக்கு அவர் மானஸ புத்திரர். இப்படிப்பட்ட மகிமையுடைய வஸிஷ்டர் என் எதிரில் வந்து என்னை ப்ரஹ்மரிஷியென்று சொல்லவேண்டும். எனக்கு இதுதான் முக்கியமான மனோரதம். இவற்றை நீங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து அநுக்கிரகம் செய்யவேண்டும்' என்று சொன்னார். பின்பு தேவர்கள் ப்ரஹ்மரிஷியாகிய வஸிஷ்டரை ப்ரார்த்தித்தார்கள். அம்முனிவரும் மனந்தெளிந்து விஸ்வாமித்ரரோடு ஸ்நேகஞ்செய்துகொண்டு, தே

வர்கள் சொன்னபடியே நீர் ப்ரஹ்மரிஷியாய் விட்டீர்' என்று சந்தோஷமாய்க் கூறினர். பின்பு தேவர்கள் விஸ்வாமித்ரரை நோக்கி 'முனிவரே! நீர் ப்ரஹ்மரிஷியானதற்குச் சந்தேகமில்லை. அஃது ஒன்றுமாத்திரமன்று. யாகஞ் செய்விப்பது வேதங்களை யோதுவிப்பது முதலிய அந்தணர்களுக்குச் சொந்தமாகிய அதிகாரங்கள் எல்லாவற்றையும் அடைந்துவிட்டீர்.' என்று சொல்லி அனைவரும் மறைந்துபோனார்கள்.

விஸ்வாமித்ரரும் அங்ஙனம் ஒப்பில்லாத ப்ராஹ்மணத் தன்மையைப் பெற்று எல்லா தர்மங்களையும்தெளிவாக அறிந்தவராகையால் ப்ரஹ்மரிஷியாகிய வஷிஷ்டரைப் பூசித்துத் தவஞ்செய்துகொண்டவண்ணமே பூமண்டலம் முழுவதும் திரிந்தார். ராமா! இம்மஹாநுபாவர் தம் முயற்சியினால் ப்ராஹ்மண்யம் பெற்றனர். இவர் முனிவர்கள் அனைவரினுஞ் சிறந்தவர்; தவமே வடிவு கொண்டது போலிருப்பவர்; எப்பொழுதும் தர்மத்திலேயே ஊக்கமுடையவர். பராக்ரமத்திற் சிறந்தவர்'' என்று இவ்வாறு மஹாதேஜஸ்வியாகிய சதாநந்தமாமுனிவர் விஸ்வாமித்ரர் மகிமைகளைச் சொல்லி முடித்தார்.

அப்பொழுது ஜனகமஹாராஜனும் ராமலக்ஷ்மணர்களுக்குச் சதானந்தர் சொல்லிய வாக்கியங்களைக் கேட்டு விஸ்வாமித்ரரைப் பார்த்துக் கையைக் கூப்பிக்கொண்டு 'முனிவரே! ககுத்ஸ்த வம்சத்திற் பிறந்த மஹாநுபாவர்களாகிய ராமலக்ஷ்மணர்களோடுகூடித் தாங்கள் எனது யாகத்திற்கு வந்தமையினால் நான் தன்யனாய்விட்டேன். தங்கள் அநுக்கிரகத்தையும் பெற்றேன். தங்களைக் கண்டதனால் பவித்ரனானேன். தாங்கள் மஹாநுபாவர். ப்ரஹ்மர்ஷிகள் அனைவரினுஞ் சிறப்புற்றவர். தங்கள் தர்சனத்தினால் எனக்குப் பல நற்குணங்களும் உண்டாயின.

மிக ப்ரபாவம் பொருந்திய தாங்கள் நடத்தின பெருந் தவத்தைச் சதாநந்தர் பரக்கச் சொல்லிக்கொண்டுவர, நானும் மஹாநுபாவனுகிய ராமனும் நன்ருய்க் கேட்டோம். ஸபிகர்களும் தங்கள் குணங்கள் பலவற்றையுங் கேட்டார்கள். முனிவரே! தங்கள் தவம் என்றும் அளவிடமுடியாதது. அப்படியே தங்கள் பலத்திற்கும் அளவில்லை. தங்கள் தவபலங்கள் இரண்டும் ப்ரஹ்மதேவனுக்கும் சிவனுக்கும் எப்படியோ, அப்படியே விளங்குகின்றன. மிகவும் ஆச்சரியமான தங்கள் கதைகளை எவ்வளவு கேட்டாலும் எனக்குத் திருப்தி உண்டாகவில்லை. பொழுது போகின்றது. மாலைக் கடனைச் செய்யவேண்டிய தருணம் நெருங்கிவிட்டது. ஸூர்யாஸ்தமய மாகின்றது. ஆகையால், அடியேனுக்கு இப்பொழுது விடைகொடுக்க வேண்டும். நாளைத்தினம் காலையில் அடியேனை மீளவுங் கடாக்ஷித்தருளவேண்டும். முனிவரே! தங்கள் வரவு நல்வரவாயிற்று. நான் போய்வருகிறேன்' என்ருன்.

அப்பொழுது விஶ்வாமித்ரர் புருஷர்களிற் சிறந்த ஜனகமஹாராஜன் இவ்வாறு சொல்லக்கேட்டு மனமகிழ்ந்து அம்மன்னவனைப்புகழ்ந்து போய்வருவாயென்றுவிடை கொடுத்தனுப்பினர். மிதிலைக்கதிபதியாகிய வைதேஹ மன்னவனும் விஶ்வாமித்ர மஹர்ஷியை கொண்டாடித் தனது புரோஹிதர்களோடும் பந்துக்களோடுங்கூட ப்ரதக்ஷிணஞ்செய்து சென்ருர். பின்பு தார்மிகராகிய அம்முனிவர் மஹர்ஷிகளாற் பூசிக்கப்பெற்று ராமலக்ஷ்மணர்களுடன் தமது இருப்பிடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

அறுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஜனக மஹாராஜன் சிவதநுஸ்ஸின் வ்ருத்தாந்தஞ் சொல்லுதல்.

[1] பிறகு ஜனக மஹாராஜன் மறுநாள் உதயமானதும் எழுந்திருந்து காலைக் கடன்களைச் செய்து முடித்து மஹாநுபாவராகிய விஶ்வாமித்ரரை ராமலக்ஷமணர்களோடுகூட அழைப்பித்தான். அவர்களும் வந்து சேர்ந்தார்கள். ஜனகமஹாராஜன் தர்மஸ்வபாவனுகையால் சாஸ்த்ரங்களிற் சொல்லிய கட்டளைப்படி விஶ்வாமித்ர

---

1. இங்ஙனம் தனது தாயாகிய அஹல்யையின் சாபத்தை விடுவிக்கிறதற்குத் தான் துணையாயிருந்த உபகாரத்தை நினைத்து ப்ரஸங்காயத்தமாகச் சதானந்தர் சொல்லிய விஶ்வாமித்ரமுனிவரது சரித்திரத்தினுல் உபகாரகனுகிய குருவின் வைபவம் அறியவேண்டியதென்றும், காமக்ரோதங்கள் எவ்விதத்திலும் தடுக்கமுடியாவென்றும். காமக்ரோதங்களை வென்றவன் ப்ராஹ்மணேத்தமனுவானென்றும், ப்ரஹ்மண்யம் ஸாதாரணமாய்க் கிடைக்கத்தக்கதல்லவென்றும், ப்ரஹ்மவித்தா யிருப்பவனிடத்தில் அபசாரப்பட்டால், அது எல்லாவற்றுக்கும் கெடுதியை விளைவிக்குமென்றும் இவை முதலிய அர்த்தங்கள் தோன்றுகின்றன.

இனித்தானே ஸமஸ்த ஜனங்களையும் ரக்ஷிக்கயெதிர்பார்த்துக் கொண்டிருந்த ஸர்வேசுவரன் தேவர்கள்செய்த சரணுகதியை வ்யாஜமாகக் கொண்டு ராவண வதத்தின் பொருட்டு அவதாரஞ்செய்து, அதற்கு அவாந்தரோபாயமா யிருப்பவளும் வேதவதி என்கிற பூர்வாவதாரத்தில் தானே ராவணனை வதிப்பதாக ஸங்கல்பஞ் செய்திருப்பவளும் ஸ்ரீ மஹாலக்ஷ்மியுமாகிய சீலம் வயஸ்ஸு வ்ருத்தம் அபிஜநம் ஆகிய இவைகளா லொத்திருக்கிற கன்னிகையை மணம்புரிய வேண்டுமென்கிற இவ்வர்த்தவிசேஷத்தை வெளியிட உத்தேசித்து ஜனகவம்சத்தில் அவதரித்த அவளை மணம்புரிய முயன்று அவளது மனக் களிப்பின் பொருட்டுத் தாடகை. ஸுபாஹு மாரீசன் ஆகிய துஷ்டர்களை நிக்கிரகஞ்செய்தும், விஶ்வாமித்ரரது யாகத்தைக் காப்பது அஹல்யையைச் சாபத்தினின்றும் விடுவிப்பது முதலிய சிஷ்டபரிபாலனஞ் செய்தும் ஸீதையைப் பெறச் செய்த முயற்சியைச் சொல்லுகிறுர்.

முனிவரையும் மஹாநுபாவர்களாகிய ராமலக்ஷ்மணர்களை யும் பூசித்துப் பின்பு அம்முனிவரை நோக்கி 'ஸ்வாமீ! மஹாநுபாவரே! தங்களுக்கு நல்வரவாகவேண்டும். பாப மற்றவரே! நான் தங்களுக்கு செய்யவேண்டியதைக் கட்டளையிட்டருளுங்கள். நான் தங்கள் கட்டளையைப் பெறவேண்டியவனல்லவா?' என்று மொழிந்தான்.

பேசுவதிற் சமர்த்தரும் தர்ம ஸ்வபாவருமாகிய விஸ் வாமித்ரமுனிவர், மிகுந்த மகிமைபொருந்திய ஜனகமஹா ராஜன் இவ்வாறு சொல்லக் கேட்டு, வல்லமையுள்ள அம் மன்னவனைப் பார்த்து மேல்வருமாறு மொழிந்தார். 'மஹாராஜனே! இவ்விருவரும் தசரதமன்னவன் புத்தி ரர்கள். உயர்ந்த க்ஷத்ரிய வம்சத்திற் பிறந்தவர்கள். உல கத்தில் ப்ரஸித்தி பெற்றவர்கள். அப்படிப்பட்ட இவ் விருவரும் உன்னிடத்திலிருக்கிற சிறந்த வில்லைப் பார்க்க விரும்புகிறார்கள். அந்த வில்லை இவர்களுக்குக் காட்டு வாயாக. உனக்கு நன்மை உண்டாகும். இந்த ராஜபுத் ரர்கள் இருவரும் அவ்வில்லைப்பார்த்து அவ்வளவிலேயே தங்கள் உத்தேசம் ஈடேறப்பெற்று இஷ்டப்படி திரும் பிப்போய்விடுவார்கள்' என்றார். ஜனகமஹாராஜனும் அதைக் கேட்டு அம்முனிவரை நோக்கி 'மஹாநுபாவ ரே! அவ்வில்லானது இவ்விடத்தில் எதற்காக இருக்கின் றதோ அதைச் சொல்லுகிறேன், எங்கள் குலத்துக்கு நிமி யென்பவர் கூடஸ்தர். அவருக்கு ஆறுவது புருஷர் தேவராதன் என்பவர். மஹாத்மாவாகிய சிவன் இவ் வில்லை வைத்திருக்கும்படி அந்தத் தேவராதர் கையிற் கொடுத்தார்.

முன்னொருகாலத்திற் சிவபெருமான் தக்ஷன் செய்த யாகத்தை அழிக்கும்பொழுது இவ்வலியவில்லைத் தனது மிகுந்த வலிவுகொண்டு விளையாட்டாகவே நாணேறச்

செய்து தேவர்களை நோக்கித் 'தேவர்களே! இந்த யாகத்தில் நான் ஹவிர்ப்பாகத்தை விரும்பவும் எனக்குப் பாகத்தை ஏற்பாடு செய்யாமற் போனீர்கள். ஆகையால், இவ்வில்லைக் கொண்டு அழகிய உங்கள் தலைகளை அறுத்துத் தள்ளிவிடுகிறேன் பாருங்கள்!' என்று அலக்ஷ்யமாகச் சொன்னார். விஸ்வாமித்ரரே! பின்பு அதைக் கேட்டுத் தேவர்கள் அனைவரும் மனக்கலக்கமடைந்து தேவர்களுக்குத் தலைவனாகிய அந்தச்சிவபெருமானையே சரணம் புகுந்து அருள்புரியச் செய்தார்கள். அந்தத் தேவன் அவர்களிடம் மனம்தெளிந்து ப்ரீதிபண்ணி மஹாநுபாவர்களாகிய அந்தத் தேவர்களனைவர்க்கும் இவ்வில்லைக்கொடுத்துவிட்டான். இங்ஙனந் தேவர்கள் இவ்வில்லைச் சிவபெருமானிடம் பெற்று எங்கள் குலத்தில் பெரியோராகிய தேவராதரிடம் இதனை வைத்துவைக்கும்படி கொடுத்தார்கள்.

பின்பு நான் யாகஞ் செய்வதற்காகப் பூமியைச் சோதிக்கவேண்டிக் கலப்பையினால் நிலத்தை உழும் பொழுது, கலப்பையினின்றும் ஒரு பெண்குழந்தை வெளிக்கிளம்பிற்று. அப்பெண்மணி கலப்பையைக்கொண்டு உழுத பூமியினின்றும் உண்டானதுபற்றி ஸீதையென்றே பெயர் பெற்று எங்கும் ப்ரஸித்தியடைந்திருக்கிறாள். பூமியிற் பிறந்த அப்பெண்மணியை நான் வளர்த்துவருகிறேன். நான் வளர்த்ததுபற்றி அவள் எனக்குப் புதல்வியாயினாள். அந்தப் பெண் அயோநிஜையாகையால் ஸாமானியராகிய ஒருவர்க்கும் கொடுக்கத்தக்கவளல்லவென்று ஆலோசித்து என்னிடம் இருக்கிற சிவதநுஸ்ஸை நாணேற்றுகின்றவனுக்கே கொடுக்கவேண்டுமென்று நிச்சயித்து இதுவரையில் ஒருவர்க்கும் விவாஹஞ் செய்து கொடுக்காமல் நிறுத்திவைத்திருக்கிறேன். முனிவரே!

இவ்வாறு பூமியிற்பிறந்து காளொருமேனியும் பொழு தொரு வர்ணமுமாக வளர்ந்து வருகிற எனது புதல்வி யைப் பற்பல மன்னவர்களும் வந்து தங்களுக்கு விவா ஹஞ்செய்து கொடுக்கும்படி கேட்டார்கள். மஹாநுபா வரே! அப்படி வந்து கேட்ட அரசர்கள் அனைவர்க்கும் 'என்னிடமிருக்கிற சிவதநுஸ்ஸை வளைக்கின்றவனுக்குத் தான் என் புதல்வியைக் கொடுப்பேன்' என்று சொல்லி இன்னமும் என் குழந்தையை விவாஹஞ் செய்துகொடா மலிருக்கிறேன்.

"முனிவர்களிற் றலைவரே! பின்பு நான்கு பக்கத் தினின்றும் மன்னவர் பலரும் ஒன்றுகூடி நான் வளைக்க வேண்டுமென்ற பெரிய வில்லின் வலிமையை அறிய விரும்பி மிதிலா நகரத்திற்கு வந்தார்கள். அவர்கள் வில்லின் ஸாரத்தை அறிய விரும்புவதைக் கண்டு நான் அதனை வரவழைத்து அவர்களுக்குக் காண்பித்தேன். அவர்கள் அந்த வில்லைக் கையில் வாங்கிப் பிடிக்கவா வது அல்லது அதனைத் தூக்கிப் பார்க்கவாவது வல்லவர் களாகவில்லை. தவத்தைப் பொருளாகப் பெற்றவரே! அவ்வரசர்கள் பராக்ரமசாலிகளா யிருந்தபோதிலும், வில்லை வளைக்க முடியாததுபற்றி அவர்கள் வல்லமையை அற்பமென்று அறிந்துகொண்டேன். ஆகையால், நான் எனது புதல்வியை அவர்களுக்குக் கொடுக்க உடன்பட வில்லை. நிராகரித்து விட்டேன். முனிவரே! மேல் நடந்த சங்கதியைச் சொல்லுகிறேன். கேளுங்கள்.

பின்பு அவ்வேந்தர் தங்கள் பராக்ரமத்தில் தங்களுக் குச்சேதமுண்டாகி, அதனால், ஸீதையைப்பெற முடியா தென்று தெரிந்துகொண்டு மிகுந்த கோபாவேசத்தோடு அனைவரும் ஒன்றுசேர்ந்து பலாத்காரஞ்செய்யத் தொ டங்கி மிதிலா நகரத்தைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டார்

கள். அவர்கள் அங்ஙனம் எனது நகரத்தைச் சூழ்வ தற்கு மற்றொரு காரணமுமுண்டு. நான் வீர்யத்தைப் பந்தயமாக ஏற்படுத்தினதுபற்றித் தங்களை நான் திரஸ் காரஞ் செய்ததாக அவர்கள் எண்ணிக்கொண்டார்கள். முனிஶ்ரேஷ்டரே! அவர்களிவ்விதம் ஒரு வருஷம்வரை யில் ஓயாமல் யுத்தஞ் செய்துகொண் டிருந்தார்கள். அத ஞல், எனது கோட்டையைப் பத்திரமாக ரக்ஷிக்கைக்கு வேண்டிய சேனைமுதலிய ஸாதனங்கள்யாவும் நாச மடைந்து விட்டன. யான் மிகவும் துயரமடைந்தேன். பிற்பாடு நான் கடுந் தவஞ்செய்து தேவதைகள் அனைவ ரையும் களிப்பித்தேன். அவர்கள் மிகுந்த ஸந்தோஷம் அடைந்து எனக்குச் சதுரங்கபலங்களைக் கொடுத்தார் கள். அந்தப் பலங்களால் கொடிய செய்கைகளையுடைய அந்த வேந்தர்கள் யாவரும் பங்கப்பட்டு வல்லமை யிழந்து இனித் தங்கள் பராக்ரமத்துக்கும் உயிருக்கும் அழிவு நேரிடுமென்று பயந்து மந்திரிகளோடுகூட நான்கு திசைகளிலும் ஓடிப்போய் விட்டார்கள். முனிவர்களிற் றலைவரே! இதுதான் வில்லின்வரலாறு. மிக்க ஒளியுடை யதாகி விளங்குகின்ற வில்லை இந்த ராமலக்ஷ்மணர்களுக் கும் காட்டுகிறேன். விஶ்வாமித்ரமுனிவரே! ராமன் அவ்வில்லை எடுத்து நாணேற்றி விடுவானாயின், அயோநி ஜையும் எனது புதல்வியுமாகிய ஸீதையைத் தசரத மஹாராஜனது குமாரனாகிய இந்த ராமனுக்குக் கொடுத் துவிடுகிறேன்' என்று சொன்னான்.

அறுபத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.


ராமன் சிவ தநுர்ப்பங்கஞ் செய்தல்.

விஸ்வாமித்ரமுனிவர் ஜனகமஹாராஜன் மொழிந்தவற்றைக் கேட்டு 'மன்னவனே! ஸ்ரீராமனுக்கு அவ்வில்லைக் கொண்டுவந்து காட்டு' என்று சொன்னார். பிறகு ஜனகமஹாராஜன் தன் மந்திரிகளை அழைத்து 'மந்திரிகளே! நமது திவ்ய தநுஸ்ஸை நல்ல வாஸனைகளாலும் மாலைகளாலும் அலங்கரித்து இவ்விடம் கொண்டுவாருங்கள்' என்று கட்டளையிட்டான். மந்திரிகளும் ஜனகனது கட்டளைப்படி யாகசாலையை விட்டுப் பட்டணஞ் சென்று அந்த வில்லை எடுப்பித்துக்கொண்டு வெளியே புறப்பட்டார்கள். நீண்ட சரீரமும் மிகுந்த பலமும் பொருந்திய ஐயாயிரம் புருஷர்கள், அந்த வில்லை உள்ளே வைத்து அடக்கஞ் செய்ததும், எட்டுச் சக்கரங்கள் அமைந்ததுமாகிய ஒரு பெட்டியை இழுத்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் ஐயாயிரம் பெயர்களாயிருந்தும் அந்த ஒரு பெட்டியை மிகவும் ப்ரயத்னப்பட்டு இழுத்தார்கள்.

இங்ஙனம் ஜனகமஹாராஜனுடைய மந்திரிகள் சிவ தநுஸ்ஸை உள்ளே வைத்திருக்கிற அந்த இரும்புப் பெட்டியை யெடுப்பித்துக் கொண்டுவந்து, தேவதைபோலு விளங்கிநிற்கின்ற ஜனக மன்னவனைப் பார்த்து 'மஹாராஜனே! ஸீதையைப் பெற விரும்பி வந்த ஸகல அரசர்களும் 'அப்பா! இவ்வில்லின் வலிமையிருந்தபடி யென்ன! என்று கொண்டாடின சிறந்த வில் இதோ வந்து விட்டது.' என்று சொன்னார்கள். பின்பு ஜனகன் கையைக் கூப்பிக்கொண்டு மஹாநுபாவராகிய விஸ்வாமித்ரரையும் ராமலக்ஷ்மணர்களையும் பார்த்து 'அந்தணர்களிற்சிறந்தவரே! இந்த வில் மிகவுஞ் சிறப்புற்றது. ஜனகவம்சத்திற் பிறந்த மஹாராஜாக்களால் வெகுகாலமாகப் பூசிக்கப்

பட்டு வருகின்றது. முன்பு ஸீதையைப் பெற விரும்பி வந்த பற்பல அரசர்களும் பராக்ரமசாலிகளாகவே யிருந்தாலும் இந்த வில்லை நாணேற்ற முடியாமற்போனது பற்றி 'அப்பா!' என்று இதன் வலிவைக் கொண்டாடிப் போய் விட்டார்கள். அரசர்களைச் சொல்வதிற் பயனில்லை. தேவர்கள் அனைவரும் கும்புகூடி வந்தாலும், அஸுரர்களும் ராக்ஷஸர்களும் சிறப்புற்ற கந்தர்வர்களும் யக்ஷர்களும் கின்னரர்களும் உரகர்களும் கும்புகூடி வந்தாலும் இதனை நாணேற்றுவதற்குச் சக்தியுள்ளவர் ஆக மாட்டார்கள் என்றால், மனிதர்கள் பெருமையுடைய இவ் வில்லை வளைக்கவும் நாணேற்றவும் பாணத்தைத் தொடுக்கவும் காதுவரையில் நாணை இழுத்துப் பார்க்கவும் பளுவை அறியும்பொருட்டு அதனை அசைத்துப் பார்க்கவும் சக்தியற்றவர்கள் என்பதைச் சொல்லவேண்டுமோ! முனிவரே! அந்தச் சிறந்த வில்லை இதோ கொண்டு வந்திருக்கிறேன். அதனை இந்த ராஜகுமாரர்கள் இருவருக்கும் நன்றாய் காட்டுங்கள்!' என்று சொன்னான்.

தர்மஸ்வபாவராகிய விஸ்வாமித்ரர் ஜனகன் வார்த்தையைக் கேட்டு, ராமனைநோக்கி 'அப்பா! ராமா! இந்த வில்லைப்பார்' என்றுரைத்தார். அந்த ப்ரஹ்மரிஷியின் கட்டளைப்படி ஸ்ரீராமபிரானும் அவ்வில் வைத்திருக்கும் பெட்டியைத்திறந்து அதிலிருக்கும் தநுஸ்ஸைப் பார்த்து 'ப்ராஹ்மணோத்தமரே! இந்தச்சிறந்த வில்லை என் கையினால் தொட்டுப் பார்க்கிறேன். இவ்வளவேயன்றி இதனைத் தூக்கி அசைக்கவும் வளைத்து நாணேற்றவும் ப்ரயத்னஞ் செய்கிறேன்' என்று கூறினான். அதைக்கேட்டு ஜனகமஹாராஜனும் விஸ்வாமித்ரமுனிவரும் 'அப்படியேயாகட்டும்' என்று சொன்னார்கள். ரகுகுல குமாரனாகிய ராமன் அந்த மொழியைக்கேட்டு அநேகமாயிரம் புருஷர்



325. ஜநகனது யாகஸபையில் ராமன் சிவதநுர்ப்பங்கஞ் செய்தல்.

கள் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே விளையாடுவது போல அவ்வில்லை நடுவில் பிடித்து எடுத்து நிறுத்தினன். தர்மஸ்வபாவனாகிய அந்த ராஜகுமாரன் வில்லை அலக்ஷ்யமாக எடுத்து வளைத்து நாணேற்றினன். தர்மத்தைச் சரீரமாகக்கொண்டவனும் புருஷர்களிற் சிறந்தவனுமாகிய ராமன்[1] அந்த வில்லை எடுத்து நாணேற்றிக் கணை தொடுத்துக் காதுவரையில் இழுத்தான். அப்படி இழுத்த மாத்திரத்தில் அவ்வில்லானது மளமளவென்று நடுவில் முரிந்து ஒடிந்துபோயிற்று. அதனால் ராமன் கீர்த்தி நான்கு திசைகளிலும் பரவி நின்றது.

அங்ஙனம் முரிந்தவில்லினின்றும் இடியிடிப்பதுபோல பயங்கரமான பெரிய சப்தம் உண்டாயிற்று. அதனால் பூமியானது, பர்வதம் பிளந்து வெடிக்கும்பொழுது நடுங்குவதுபோலக் கிடுகிடுவென்று நடுங்கத் தலைப்பட்டது. அப்பொழுது முனிஸ்ரேஷ்டராகிய விஸ்வாமித்ரரும் ஜனக மஹாராஜனும் ராமலக்ஷ்மணர்களுந்தவிர அங்குள்ள ஜனங்கள் யாவரும் அவ்வொலியைக்கேட்டு மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்துவிட்டார்கள். பின்பு அந்த ஜனங்கள் எல்லாரும் தேறி எழுந்திருக்கையில், ஜனகமஹீபாலன் கையைக் கூப்பிக்கொண்டு பேசுவதில் தனக்குள்ள வல்லமை விளங்கும் வண்ணம் அம்முனிவரைப் பார்த்து 'மஹாநுபாவரே! தசரத குமாரனாகிய இந்த ராமன் பராக்ரமத்தை நான் உண்மையில் கண்டு கொண்டேன். இந்தப் பாலகன் எங்கே? மிகுந்த வலிமையுடைய வில்லை

---

1. மிகவும் உயர்ந்திருக்கிற அவ்வில்லின் நுனி பாலனாகிய ராமனுக்கு எட்டமுடியாதாகையால் அவன் அதனை எப்படி வளைத்து நாணேற்றக்கூடுமென்றால் அவன் ஆஶ்சர்யகாமான சக்தியுடையவனாகையால் அவன் கைப் பட்டமாத்திரத்திலேயே அந்த வில் வளைந்து விட்டதென்று தெரிகிறது.

நாணேற்றுவது எங்கே? இது மிகவும் அற்புதமாயிருக்கின்றது. மேலும் இஃது எங்கும் காணமுடியாதது. இவ்விஷயம் இப்படி அப்படி என்று மனத்தில் எண்ணவுங்கூட எட்டாதிருக்கின்றது. இவ்வளவேயன்றி, இது மனிதர்களுக்குக் கொஞ்சமும் ஸாத்யமன்று. இப்படி ஸம்பவிக்குமென்று நான் ஊஹிக்கவேயில்லை என் புதல்வியாகிய ஸீதை தசரதகுமாரனான ராமனைப் பர்த்தாவாகப்

1 இங்கு.
'ஜநகாநாங் குலே கீர்த்தி மாஹரிஷ்யதி மேஸுதா,
ஸீதா ஹர்த்தார மாஸாத்ய ராமம் தசரதாத்மஜம்'
என்பது மூலம். இதற்கு விசேஷார்த்தம் :— (மேஸுதா) எனது புதல்வியாகிய, இதனால் தன்னோடுள்ள ஸம்பந்தத்தால் வந்த அதிசயமும், (ஸீதா) ஸீதையானவள், இதன் அயோநிஜையாக யஜ்ஞபூமியிற்பிறந்த அதிசயமும் தோற்றுகின்றன. (தசரதாத்மஜம்) தசரதகுமாரனை, இதனால் 'பாந்தவாঃ குலமிச்சந்தி' என்று சொல்லுகிறபடி பந்துக்கள் விரும்புகிற நற்குலத்திற் பிறந்தமையும் (ராமம்) ராமனை இதனால் (ரமயதீதிராமঃ) என்று தனது ஸௌந்தர்யம் முதலிய குணங்களால் யாவரையும் ஸந்தோஷிக்கச் செய்பவனாகையால் (ரூபமிச்சந்தி கந்யகா) என்கிறபடி கன்னிகை ஆசைப்படுகிற ரூபாதிசயமும் (ஹர்த்தாரம்) பர்த்தாவாக, இதனால் த்ரவ்யம் முதலியவற்றால் பரிப்பவன் என்று தோற்றுவதனால் (வித்தமிச்சந்தி மாதரঃ) என்று சொல்கிறபடி தாய்மார் ஆசைப்படுகின்ற தனிகத்வமும் இம்மணவாளனுக்கு உண்டென்று தெரிவிக்கப்பட்டது. பெண், தாய், தந்தை, பந்துக்கள் ஆகிய எல்லார்க்கும் இந்த மணவாளன் இஷ்டனென்பது கருத்து. (ஆஸாத்ய) அப்படிப்பட்ட அதிசயத்தையுடைய ஸீதை இப்படி ஸகலகுணங்களும் நிறைந்த மணவாளனைப் பெற்று, (ஜநகாநாம்)'அநந்தம் பதமே வித்தம் யஸ்யமே நாஸ்தி கிஞ்சந, மிதிலாயாம் ப்ரதீப்தாயாம் நமே கிஞ்சித் ப்ரதஹ்யதே' என்று பரமாத்மஜ்ஞாநவைபவத்தினால் ப்ரஸித்தி பெற்ற என் பூர்வர்களாகிய ஜனகவம்சத்தரசர்களுடைய, (குலே) குலத்தில் (கீர்த்திம்)என்று ஒருமையாயிருப்பதனால் என்றும் ஒருவிதமாகப் பெருகிவருகின்ற கீர்த்தியையென்று கருத்து.

பெற்று ஜனகவம்சத் தரசர்களின் குலத்திற்குப் பெரும் புகழை விளைப்பவளாவாள். குசிகவம்சத்திற் பிறந்த விஸ்வாமித்ரரே! சிவதனுஸ்ஸை நாணேற்றும்படியான வலிமையுடையவனுக்கு என் அருமைப் புதல்வியைக் கொடுப்பேனென்று நான் செய்த ப்ரதிஜ்ஞையும் இன்று நிறைவேறிற்று. எனக்கு ப்ராணனைக் காட்டிலும் மேலாகிய அருமைப் புதல்வியாகிய ஸீதையை ராமனுக்கு விவாஹஞ் செய்து கொடுக்கவேண்டும். அந்தணரே! தங்களுக்கு நன்மை யுண்டாகுக. எனது மந்திரிகள் தங்களிடம் அநுமதி பெற்று ரதத்தில் ஏறிக்கொண்டு விரைவில் அயோத்யைக்குப் போகவேண்டும். அவ்விடம் சென்று மிக்க வணக்கத்துடன் இனிய சொற்களைச் சொல்லி அத்தாணியாளனை எனது பட்டணத்துக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டும். அயோத்திக்குச் சென்று அம்மன்னவனைக் காணும்பொழுது காகுஸ்த குல திலகர்களாகிய இந்த ராமலக்ஷ்மணர்கள் இருவரும் விஸ்வாமித்ர முனிவரால் காக்கப்பட்டு க்ஷேமமாயிருக்கின்றார்களென்றும் வீர்யத்தைப் பந்தயமாகவுடைய ஸீதையை விவாஹஞ்செய்யப் போகிறார்களென்றும் இவ் வ்ருத்தாந்தங்களை விரிவாகச் சொல்லி அவனுக்குச் சந்தோஷத்தை விளைவித்து அம்மன்னவனைச் சீக்கிரமாக அழைத்துக்கொண்டு வரவேண்டும்' என்று சொன்னான். தர்மஸ்வபாவராகிய விஸ்வாமித்ரமுனிவர் அப்படியே நடக்கட்டும்' என்றுரைத்து அவ்வரசன் மந்திரிகளை அழைத்துத் திருமணப் பத்திரிகையைக் கொடுத்து 'அம்மன்னவனுக்கு இங்கு நடந்த வ்ருத்தாந்தங்களை யெல்லாம் எடுத்துரைத்துக் கூடவே அழைத்துக்கொண்டு வாருங்கள்!' என்று கட்டளையிட்டு அயோத்யைக்கு அனுப்பினார்.

அறுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஜனகமஹாராஜன் தசரதனை அழைத்துக் கொண்டுவரத் தூதர்களை அனுப்புதல்.

ஜனக மஹாராஜன் கட்டளை பெற்ற தூதர்கள் வாகனங்களில் ஏறிக்கொண்டு மிகுந்த வேகத்துடன் போகும்பொழுது நடுவழியில் வாகனங்கள் களைத்துப்போனதுபற்றி மத்தியில் மூன்றிரவு தங்கியிருந்து அயோத்யாபுரிக்குப் போய்ச்சேர்ந்தார்கள். அவர்கள் அந்தப் பட்டணஞ் சேர்ந்து அங்கு அரசன் மாளிகைக்குச் சென்று அவ்விடமிருக்கும் வாசற்காப்பவர்களை நோக்கி 'நாங்கள் ஜனகமஹாராஜனது தூதர்கள். உங்கள் அரசனைக்காணவந்திருக்கிறோம். இதை உங்களரசனுக்கு விரைவாகத் தெரியப்படுத்துங்கள்' என்று சொல்ல, அந்த த்வாரபாலகர்களும் தசரதமன்னவனுக்கு அவர்கள்வந்திருப்பதைத் தெரிவித்தார்கள். தூதர்கள் தங்களை ஜனகமஹாராஜன் அனுப்பினதாகச் சொல்லக்கேட்டுத் தசரத சக்ரவர்த்தி அவர்களை உடனே அழைத்துக்கொண்டு வரக் கட்டளையிட்டான்.

அந்தத் தூதர்களும் வாயிற் காப்பவர்களைப் பின்பற்றிச் சென்று அரசன் மாளிகையை அடைந்து அங்குத் தேவதையைப்போல விளங்கி நிற்பவனும் வயது சென்றவனுமாகிய தசரதவேந்தனைக் கண்டார்கள். அவ்வரசனது [1] ஸௌஜந்யத்தைக் கண்டு சிறிதும் பயமின்றி அனைவரும் அஞ்சலிஹஸ்தர்களாகி வணக்கத்துடன் மேல் வரும் இனிய உரைகளைக் கூறினார்கள். 'மஹாராஜாவே! மிதிலாதிபதியாகிய ஜனக மஹீபாலன் அடிக்கடி ஸந்தோஷத்தைப் பொழிகிற இனிய வுரைகளால் 'தங்களுக்கு க்ஷேமமா என்றும், தங்கள் அக்னிஹோத்ரங்கள் இடையூறின்றி நடந்து வருகின்றனவா? என்றும், தாங்

1. ஸௌஜந்யம் நல்ல ஸ்வபாவமுடையவனா யிருக்கை.

கள் மேன்மையுடன் ஆதரித்து வருகிற தங்கள் உபாத்யாயர்களும் புரோஹிதர்களும் க்ஷேமமா யிருக்கின்றார்களா ?'' என்றும் வினவுகிறார். இங்ஙனம் எங்கள் அரசர் தங்களை க்ஷேமம் விசாரித்து விஸ்வாமித்ரமுனிவருடைய அநுமதிப்படி தங்களுக்கு இவ்வாறு தெரிவிக்கக் கட்டளை யிட்டிருக்கிறார். சிவதநுஸ்ஸை வளைக்கின்ற வல்லவனுக்கு என் பெண்ணைக் கொடுப்பேன் என்று பூர்வத்தில் நான் ப்ரதிஜ்ஞை செய்திருக்கின்றதும், அரசர்கள் பலரும் வந்து பார்த்து அந்த வில்லை வளைக்கமுடியாமல் என்மீது கோபாவேசங் கொண்டதும், அவர்களை நான் அடித்துத் துரத்த அவர்கள் வல்லமையற்று விமுகர்களாகி ஓடிப்போனதும் தங்களுக்குத் தெரிந்த விஷயம். ஸமஸ்த அரசர்களாலும் விரும்பப்பட்ட என் புத்திரியாகிய ஸீதையைத் தங்கள் குமாரன், விஸ்வாமித்ரமுனிவரை முன்னிட்டுக்கொண்டு எனது பாக்யவசத்தினால் மிதிலைக்குவந்து தன் ஒப்பற்ற வீர்யமஹிமையினால் தனக்கு வசமாக்கிக் கொண்டான். எப்படியென்றால், மஹாராஜாவே! ராமன் தனது மஹாபலத்தினால் என் யாகாவஸானத்திற்கூடிய பல ஜனங்களும் நிறைந்த பெரிய ஸபையில் மிகுந்த மஹிமை பொருந்திய சிவதநுஸ்ஸை நடுவிற் பிடித்து முரித்துவிட்டான். என் புதல்வியைச் சிவ தநுர்ப்பங்கஞ் செய்தவனுக்குக் கொடுக்க வேண்டுமாகையால் வில்லைமுரித்த ராமனுக்கு என்பெண்ணைக் கொடுக்கவேண்டியதாயிருக்கின்றது. ஆகையால், நான் செய்த ப்ரதிஜ்ஞையைத் தாங்கள் வந்து நிறைவேற்ற விரும்புகிறேன். அதற்குத் தாங்கள் அநுமதி செய்ய வேண்டும்.

"மஹாராஜாவே! தாங்கள் உபாத்யாயர்களையும் புரோஹிதர்களையும் முன்னிட்டுக்கொண்டு சீக்கிரமாக

வந்து சேரவேண்டும். தங்களுக்கு நன்மையுண்டாகட்டும். தங்கள் ப்ரிய குமாரர்களாகிய ராமலக்ஷ்மணர்களை இப்பொழுது தாங்களும் பார்க்கவேண்டுமல்லவா?' ராஜாதி ர்ாஜனே! நான் தங்கள் தர்சனம்பெற்றும் தங்கள் புத்திரனுக்கு என்புதல்வியாகிய ஸீதையை விவாஹஞ் செய்வித்தும் ஸந்தோஷம்பெற விரும்புகிறேன். அந்தச் சந்தோஷத்தை எனக்குத் தாங்கள் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும். குழந்தைகளையும் அவர்களுக்கு நடக்கவிருக்கின்ற விவாகோத்ஸவத்தையும் கண்டு தாங்களும் சந்தோஷம் கொள்ளுங்கள்!' என்று விதேஹதேசாதிபதியாகிய எங்கள் ஜனக மஹாராஜர் விஸ்வாமித்ரரிடம் அநுமதி பெற்றுச் சதானந்தருடைய ஸம்மதியைக்கொண்டு இவ்வினிய மொழிகளைத் தங்களிடம் சொல்லும்படி எங்களுக்குச் சொல்லியனுப்பினர்' என்று சொல்லி நின்றார்கள்.

தசரதவேந்தன் தூதர்களினுடைய வாக்கியங்களைக் கேட்டு மிகவும் ஆநந்த பரவசமடைந்தவராய் வஸிஷ்டரையும் வாமதேவரையும் மற்றுமுள்ள மந்திரிகளையும் பார்த்துக் 'கௌஸல்யைக்குக் களிப்பை விளைவிப்பவனாகிய ராமன் விஸ்வாமித்ரரால் காக்கப்பட்டுத் தம்பியாகிய லக்ஷ்மணனுடன்கூடி விதேஹதேசத்தில் க்ஷேமமாயிருக்கிறான். மஹா பராக்ரமசாலியாகிய ஜனக மஹாராஜனும் ராமன் வல்லமையைத் தெரிந்து கொண்டான். ஆகையினால்தான் அவன் தனது புத்திரியை ராமனுக்குக்கொடுத்து விவாஹஞ் செய்ய விரும்புகிறான். மஹாநுபாவனாகிய ஜனகமன்னவன் சொல்லியனுப்பின இந்த வ்ருத்தாந்தம் உங்களுக்கு அபிமமமா யிருக்குமானல், நாம் அனைவரும் மிதிலாநகரத்திற்குச் சீக்கிரமாகப் போகலாம்' என்று சொன்னான். மந்திரிகளும் மஹர்ஷிகளும்

அவற்றைக்கேட்டு 'நல்லது, அப்படியே நடக்கட்டும்.' என்று ஒப்புக்கொண்டார்கள். அரசன் அதற்குச் சந்தோஷித்து 'நாளைக்குப் புறப்படலாம்' என்று மந்திரிகளுக்குக் கட்டளையிட்டான். ஜனக ராஜன் மந்திரிகள் எல்லாக் குணங்களும் அமைந்து விளங்குபவர்களாகையால் தசரதமன்னவனிடத்தில் மிகுந்த ஸத்காரம் பெற்று ஸந்தோஷித்து அன்றிரவு முழுவதும் அங்கேயே வஸித்திருந்தார்கள்.

அறுபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

தசாதசக்ரவர்த்தி மிதிலைக்குச்செல்லுதல்.

அன்றிரவுகடந்த பிற்பாடு ரித்விக்குகளோடும் பந்துகளோடுங்கூடிய தசரத சக்ரவர்த்தி ஸந்தோஷத்துடன் ஸுமந்திரனைப் பார்த்து 'இன்று நமது கருவூலம் காப்பவர்கள் ஏராளமான தனங்களையும் அநேகவிதமான ரத்னங்களையும் எடுத்துக்கொண்டு திருமணத்துக்கு வேண்டிய கார்யங்களையும் ஏற்பாடு செய்துகொண்டு தகுந்த ஜாக்ரதையுடன் முன்னதாகவே புறப்படும்போகச் செய்! நான் கட்டளை யிட்டவுடன் நான்கு பக்கங்களிலுமுள்ள சதுரங்க ஸைன்யங்களும் தங்கள் பல்லக்குக்கள் முதலிய வாகனங்களும் சீக்கிரமாய்ப் புறப்படவேண்டும். வஸிஷ்டரும் வாமதேவரும் ஜாபாலியும் காஸ்யபரும் தீர்க்காயுளையுடைய மார்க்கண்டேயரும் காத்யான ரிஷியும் ஆகிய அந்தணர்கள் யாவரும் முன்னே புறப்பட்டுச்செல்லட்டும். காலதாமதஞ் செய்யாமல் எனது ரதத்தையும் ஸித்தப்படுத்தி இங்கு அனுப்பு. ஜனகராஜனது தூதர்கள்என்னை அவஸரப் படுத்துகின்றார்கள்' என்று சொன்னான். இவ்வாறு தசரத மன்னவன் மொழிந்து ரிஷிகளோடுகூடப்

புறப்பட்டுப் போகையில், அவன் கட்டளைப்படி சதுரங்க ஸேனையும் அவனைப் பின்றொடர்ந்து சென்றன. அம் மன்னவன் நான்கு நாள் வழிநடந்து சென்று ஐந்தாவது நாள் விதேஹதேசம் போய்ச்சேர்ந்தான். ஐஸ்வர்யங்கள் அமைந்த ஜனக மஹாராஜன் தசரத சக்ரவர்த்தி வந்த சங்கதியைக் கேட்டு உபஹாரங்களைச் சித்தப்படுத்திக்கொண்டு வ்ருத்தனுகிய தசரத சக்ரவர்த்தியினிடம் வந்து ஸந்தோஷம் அடைந்து 'இனி ஸீதைக்குச் சீக்கிரத்தில் விவாகம் நடக்கலாம்' என்று பேரானந்தம் கொண்டான்.

புருஷர்களிற் சிறந்த அந்த ஜனக மஹீபதி தசரத மன்னவனைப் பார்த்துச் சந்தோஷம் பெருக 'மஹாராஜனே தங்களுக்கு நல்வரவா? ரகுலத்திற் பிறந்த மஹாநுபாவனே! தாங்கள் என் பாக்யவசத்தினுல் இவ்விடம் வந்து சேர்ந்தீர்கள். தங்கள் புத்திரர்கள் வில்லை முரித்தது முதலிய பராக்ரம வியாபாரங்கள் தங்களுக்கு ஏற்கெனவே ஸந்தோஷத்தை விளைவித்திருக்கலாம். இனி அவர்களைக் கண்டு ஆநந்தத்தை அநுபவியுங்கள். மஹா தேஜஸ்வியும் மஹிமை யமைந்த வருமான வஸிஷ்டமஹரிஷியும் ப்ராஹ்மணோத்தமர்களோடு என் பாக்ய வசத்தினுல் தேவதைகளோடுகூடிய தேவேந்திரன்போல வந்து சேர்ந்துவிட்டார். இப்படிப்பட்ட மஹாநுபாவர்களை வரவழைத்துக் கொடுக்கிற என் அத்ருஷ்டத்தினுல் என் விக்னங்கள் யாவும் அற்றுப்போய்விட்டன. பராக்ரமத்தினுல் மேன்மை பெற்றவர்களும் மஹாநுபாவர்களுமாகிய ரகுவம்சத்திற் பிறந்தவர்களோடு ஸம்பந்தம் பெறும்படியாக நேரிட்ட இந்தப் பாக்யத்தினுல் எனது குலம் மேன்மை பெற்றது.

'மன்னவரே! தாங்கள் இப்புவியிலுள்ள அரசர்களுக்குள் இந்திரன்போலவிளங்குகின்றவர். இப்படிப்பட்ட தாங்கள் நாளை விடியற்காலத்தில் விவாஹத்தைப்பற்றிய ப்ரஸங்கத்தை நடத்தவேண்டும். மானவர் தலைவரே! எனது யாகம் இன்னும் மூன்று நான்கு தினங்களில் முடிந்துவிடும். அது முடிந்தவுடன் ரிஷிகளுக்கு ஸம்மதமாகிய ப்ராஹ்ம விவாஹத்தைத் தாங்கள் நிறைவேற்றவேண்டும்' என்று மொழிந்தான்.

தசரதசக்ரவர்த்தி வாக்யங்களின் உட்கருத்தறிவதில் மிகுந்த வல்லமையுள்ளவனாகையால் ஜனகன் மொழிந்தவற்றைக் கேட்டு அம்மஹாராஜனை நோக்கிக் 'கொடுக்கிறவன் எப்பொழுது கொடுப்பானோ, அப்பொழுதே வாங்கிக்கொள்கிறவன் வாங்கிக் கொள்ளவேண்டும். ஆகையால், ப்ரதிக்ரஹமென்பது தாதாவின் அதீனத்தில் இருக்கின்றது. நீ வீர்ய சுல்கமாக ஏற்படுத்தின இந்தக் கன்யா ப்ரதானத்தை முன்னமே கேட்டிருக்கிறேன். மஹாராஜனே! [1]தாதாவாகிய நீ எப்படிச் சொல்லுகின்றாயோ, அப்படியே வாங்கிக்கொள்ளுகிற நாங்கள் நடக்கச் சித்தமாயிருக்கிறோம். நீ தர்மங்களை அறிந்தவன். உனக்குத் தெரியாத தர்மம் ஒன்றுமில்லை' என்றான். ஸத்ய ஸந்தனாகிய தசரதனது தர்மம்பொருந்தியும் கீர்த்தியை விளைக்கத் தக்கதுமாகச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு விதேஹ தேசாதிபதியாகிய ஜனகராஜன் மிகவும் ஆச்சரியமடைந்தான். பின்பு முனிவர்கள் அனைவரும் ஒருவர்க்கொருவர் கலந்திருக்கப்பெற்று மிகவும் ஆநந்தம் அடைந்தவர்களாகி அன்றிரவு முழுவதும் ஸுகமாகக் கழித்தார்கள். தசரதன் ரகுகுலத்திற்கு அலங்காரமாயிருக்கின்ற தனது குமாரர்களைக் கண்டு மிகுந்த ஸந்தோ

1 தாதா = கொடுப்பவன்.

ஷம்கொண்டு ஜனகன் செய்த ஸத்காரங்களைப் பெற்று மேலான மகிழ்வடைந்து மனம் பூரித்திருந்தான். தத்வங்களை உணர்ந்தவனும் ப்ரபாவம் பெற்றவனுமாகிய ஜனக மஹாராஜன் யாககார்யங்களையெல்லாஞ் சாஸ்த்ரப்படி செய்துமுடித்துப் பெண்களுக்கு முன்பு செய்யவேண்டிய அங்குரார்ப்பணம் முதலியவற்றையும் நிறைவேற்றி அவ்விரவைக் கடத்தினன்.

அறுபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

வஸிஷ்டர் ஜனகனுக்கு இக்ஷ்வாகு வம்ச க்ரமத்தைச் சொல்லுதல்.

மறுநாள் பொழுது விடிந்தவுடனே ஜனகமஹாராஜன் மஹர்ஷிகளைக் கொண்டு யஜ்ஞாதி கார்யங்களை முடித்துவிட்டுத் தனது புரோஹிதராகிய சதானந்தரைப் பார்த்துச் 'சதானந்தரே! [1] ஸாங்காஶ்யையென்று ஒரு பட்டணம்உண்டல்லவா? அதுமிகவும் அழகியது. அதனைச் சுற்றிலும் அகழிபோலச் சூழ்ந்திருக்கிற இக்ஷுமதியென்னும் ஆற்றின் ப்ரவாஹத்தில் பகைவர்கள் அண்டவொண்ணாதபடி காக்கும்பொருட்டுச் சூலங்கள் நாட்டப்பட்டிருக்கின்றன. அந்நதியைச் சுற்றி நீர்நெல்லி மரங்கள் நெருங்கி விளங்குகின்றன. [2]ஸுக்ருதம்போல அப்பட்டணம் தன்னிடம் வஸிப்பவர்களுக்கு ஸகலஅபீஷ்டங்களையும் கொடுத்துக்கொண்டு புஷ்பக விமானம்போல

---

1 இதிலுள்ள விசேஷங்கள் சதானந்தருக்குத் தெரிந்திருந்தாலும் தெரியச் சொல்லுவதற்குக் காரணம்-அவை பரம்பரையாகத் தசரதன் செவியிற் படவேண்டுமென்னும் கருத்துத்தான்.

2 (ஸுக்ருதம்போல) புண்யம்போல. அதாவது—எப்படி ஜன்மாந்தரத்திற் செய்த புண்யம் பரிபாக தசைக்கு வந்து, ஸகலஅபீஷ்

ப்ரகாசிக்கின்றது. மஹா பராக்ரமசாலியும் மிகவும் தர்மஸ்வபாவனும் எனக்குப் பின் பிறந்தவனும் எங்கும் ப்ரஸித்தி பெற்றவனுமாகிய குசத்வஜனென்பவன் அப்பட்டணத்தில் இக்ஷுமதி யென்னும் அந்நதியின் ஜலத்தைப் பானஞ்செய்துகொண்டு வஸித்திருக்கிறான். அவன் அப்பட்டணத்திலிருந்துகொண்டு எனது யாகத்திற்குவேண்டிய ஸம்பாரங்களை அப்போதைக் கப்போது ஸித்தஞ் செய்து கொடுத்துக்கொண்டிருப்பதுபற்றி எனது யாகத்தைக் காப்பவன் அவனேயென்று நான் நினைத்திருக்கிறேன். ஆகையால் அவனை இப்பொழுது நான் பார்க்க விரும்புகிறேன். அந்த மஹாதேஜஸ்வியும் இந்த விவாகத்தைப்பற்றிய ஸந்தோஷப் பெருக்கை என்னோடு கலந்து அநுபவிக்கவேண்டியவன்' என்று சொன்னான்.

சதானந்தருக்கு எதிரில் ஜனக மன்னவன் இங்ஙனம் சொல்லிக்கொண்டிருக்கையில் மிகவும் சுறுசுறுப்புள்ள சில தூதர்கள் அவ்விடம் வந்தார்கள். அவ்வரசன் அவர்களைக்கண்டு குசத்வஜனை அழைத்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டான். இங்ஙனம் ஜனகமஹாராஜன் ஆலோசித்துத் தூதர்களுக்குக் கட்டளையிட அவர்களும் விரைவிற் செல்லவல்ல குதிரைகளின்மீது ஏறிக்கொண்டு, இங்

டங்களையுங் கொடுக்குமோ, அப்படியே அப்பட்டணமும் ஸகல அபீஷ்டங்களையும் கொடுக்கின்றதென்பது கருத்து. ஜன்மாந்தரத்திற் புண்யஞ் செய்தவன் மறு ஜன்மத்தில் சுகங்களைப் பெறுவானென்று சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. அப்படியே அப்பட்டணத்தில் வஸிப்பவர் அனைவரும் ஸகல ஸுகங்களையும் பெற்று வாழ்ந்திருப்பார்கள். ஸுகத்தைப் புண்யத்தின் பலனென்று சொன்னது. அந்நகரத்தில் வஸிப்பவர்கள் ஜன்மாந்தரத்தில் மிகுந்த ஸுக்ருதஞ் செய்தவர்களென்று தோன்றுகின்றது. அவர்கள் செய்த புண்யம் அவர்களுக்குப் பலன் கொடுப்பதற்கு நகர வடிவங்கொண்டு வந்ததோ என்னும்படி விளங்குகின்றது என்பது கருத்து.

திரனிடம் கட்டளை பெற்று ஸ்ரீமஹாவிஷ்ணுவை அழைத்துக்கொண்டு வருபவர்போல, அம்மன்னவனிடம் கட்டளை பெற்றுப் புருஷர்களிற் றலைவனாகிய குசத்வஜனை அழைத்துக்கொண்டு வரப் புறப்பட்டார்கள். அங்ஙனம் புறப்பட்டுச் சென்று ஸாங்காஸ்யா நகரியைச் சேர்ந்து குஶத்வஜனைக்கண்டு, ராமன் சிவதனுர்ப்பங்கஞ்செய்தது முதலிய வ்ருத்தாந்தங்களையும் அதனைக் கண்டு ஜனக மஹாராஜனுக்குள்ள அபிப்ராயத்தையுந்தெரியப்படுத்தினார்கள்.

குஶத்வஜனும் பலிஷ்டர்களாகிய அந்தத் தூத ஶ்ரேஷ்டர்களின் வார்த்தையைக் கேட்டு அவ்வரசன் கட்டளையைச் சிரஸில் வகித்து அங்கிருந்து புறப்பட்டு வந்து, மஹாநுபாவனும் தர்மஸ்வபாவனுமாகிய ஜனகமஹாராஜனைக் கண்டான். முதலிற் சதானந்தருக்கும் பிறகு ஜனக மன்னவனுக்தும் நமஸ்காரஞ் செய்து அவர்களிடம் அநுமதி பெற்று அரசர்களுக்குத் தக்கதும் அழகுள்ளதும் விலைபெற்றதுமாகிய ஒரு ஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்தான். தேஜஸ்விகளாகிய அண்ணன் தம்பிகளிருவரும் ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டு ஸுதாமன் என்னும் மந்திரிசிகாமணியைப் பார்த்து 'மந்திரிகளிற் றலைவனே! நீ விரைவாகச் சென்று, அளவில்லாத காந்தியுடையவனும் யாவராலும் எதிரிடவொண்ணாத பாராக்ரமமுடையவனும் இக்ஷ்வாகு வம்சத்திற்கு அலங்கார பூதனுமாகிய தசரதமஹீபாலனையும் அவன் குமாரர்களையும் மந்திரிகளையும் அழைத்துக்கொண்டுவருவாய்' என்றனுப்பினார்கள். அந்த மந்திரி ரகுகுல சிகாமணியாகிய தசரதன் இறங்கியிருக்கிற விடுதிக்குச் சென்று மன்னவனைக் கண்டு தலை வணங்கி நமஸ்காரஞ் செய்து 'அயோத்யாபதியே! வீரர்களிற் றலைவனே! மிதிலாதி

பதியாகிய வைதேகமன்னவர் தங்களைத் தங்கள் உபாத்யாயர்களோடும், புரோஹிதர்களோடும் பார்க்க விரும்புகிறார்' என்று கூறினான்.

உடனே தசரத சக்ரவர்த்தி ரிஷிக்கூட்டங்களோடும் பந்துக்களோடும் புறப்பட்டு ஜனகன் சபைக்குப் போனான். பேசுவதில் ஸமர்த்தனாகிய அந்தத் தசரத மன்னவன் நண்பர்களும் பந்துக்களும் உபாத்தியாயர்களுஞ் சூழ விருக்கின்ற ஜனகமஹீபாலனைக் கண்டு 'மஹாராஜனே! பகவானாகிய வஸிஷ்டமஹர்ஷி இக்ஷ்வாகுவம்சத்திற்குப் பரமகுருவென்பதும், அவர் வேண்டிய கார்யங்கள் எல்லாவற்றையும் தானே முன்னின்று பேசி நிறைவேற்ற வல்லவரென்பதும் உனக்குத் தெரிந்தேயிருக்கின்றது. தர்மஸ்வபாவராகிய இம்முனிவர் விஸ்வாமித்ரர் அநுஜ்ஞை பெற்று என் வம்சத்தை க்ரமமாகச் சொல்லுவார்' என்று மொழிந்தான். ஸமஸ்த மகிமைகளும் பொருந்திப் பேசுவதிலும் வல்லமை அமைந்த வஸிஷ்டமுனிவர் ஜனகமன்னவனையும் அவன் புரோஹிதராகிய சதானந்த முனிவரையும் பார்த்து இங்ஙனம் சொல்லத் தொடங்கினார்.

எவ்விதத்திலும் அறிவதற்கரிய வஸ்துவாகையால் விஷ்ணுவை அவ்யக்தமென்று சொல்வார்கள். அவ்விஷ்ணுவுக்குப் பிரமன் பிறந்தான். அந்தப் பிரமன் [1] சாஸ்வதனும் நித்யனும் அவ்யயனுமாயிருப்பவன். அந்த

---

1 வெகுகாலமிருப்பவனாகையால் சாஸ்வதனென்றும், இரண்டு பரார்த்தகாலம் நாசமின்றி இருப்பவனாகையால் நித்யனென்றும் ப்ரவாஹரூபமாக இடையின்றிக் கல்பந்தோறும் இருப்பவனாகையால் அவ்யயனென்றும் அறிக. சாஸ்வதன் நித்யன், அவ்யயன் என்கிற இம்மூன்று சப்தங்களும் நாசமின்றியிருக்கும் வஸ்துவைச் சொல்லுவதானாலும் அர்த்தபேதம் இருப்பதை அறிக.

ப்ரஹ்மாவுக்கு மரீசி உண்டாயினர். மரீசிக்குக் காஶ்யபர் பிறந்தார். காஶ்யபருக்கு ஸூர்யன் பிறந்தான். ஸூர்ய னுக்கு மநு என்னும் புதல்வன் பிறந்தான். அம்மனுதான் முன்பு ராஜாவாயிருந்தனன். மனுவின் புதல்வன் இக்ஷ்வாகு. அந்த இக்ஷ்வாகு மன்னவன் அயோத்யையை ஆண்டுவந்த அரசர்களிற் றலைவன். இக்ஷ்வாகுவுக்கு மிகுந்த செல்வமுடைய குக்ஷியென்பவன் தோன்றினன். குக்ஷிக்கு மிக்க அழகுடைய விகுக்ஷியென்பவன் பிறந்தான். விகுக்ஷிக்கு மஹாதேஜஸ்வியும் பராக்ரமசாலியு மாகிய பாணனென்னும் புதல்வன் பிறந்தான். பாணன் புத்திரன் ப்ரதாபசாலியாகிய அனரண்ய னென்பவன். அனரண்யனுக்கு ப்ருதுவென்னும் புத்திரன் பிறந்தான். ப்ருதுவுக்கு த்ரிசங்கு தோன்றினன். த்ரிசங்குவின் பிள்ளை துந்துமாரன். அவன் மிகவுங் கீர்த்தி பெற்றவன். அவனுக்கு யுவநாஶ்வனென்று வேறொரு பெயரும்உண்டு. அந்த யுவநாஶ்வன் புதல்வன் மாந்தாதா. மாந்தாதாவின் பிள்ளை ஸுஸந்தியென்பவன். அவன் மிகுந்த செல்வம் பெற்றவன். ஸுஸந்திக்கு த்ருவஸந்தியென்றும் ப்ரஸேன ஜித்தென்றும் இரண்டு பிள்ளைகள் உண்டானர்கள். த்ருவ ஸந்திக்குப் பெருங் கீர்த்திபெற்ற பரதனென்பவன் பிறந்தான். பரதனுக்கு மஹா தேஜஸ்வியாகிய அஸிதனென் பவன் தோன்றினன்.

அஸிதனுக்கு ஹைஹயரென்றும் தாலஜங்கர்க ளென்றும் ஶூரர்களாகிய சசிபிந்துக்களென்றும் சொல் லப்பட்ட அரசர்கள் சத்ருக்களா யிருந்தார்கள். அஸிதன் அந்தப் பகைவேந்தர்களுடன் யுத்தத்தில் எதிர்த்துச் சண்டை செய்து அந்த யுத்தத்திலேயே பராஜயம்பெற்று ராஜ்யத்தினின்றும் துறத்தப்பட்டான். அப்பொழுது அஸிதன் சிறிது மிச்சமாயிருந்த தன் ஸே

னையுடனும் மந்திரிகளுடனும் ஹிமாலயத்திற்குச்சென்று அங்கு ப்ருதுப்ராஸ்ரவணமென்னும் சிகரத்தில் வஸித்துக் கொண்டிருந்தான். அவன் பத்னிகள் இருவரும் அப்பொழுது கர்ப்பவதிகளாயிருந்தார்க ளென்று கேள்வியுண்டு. அவர்கள் இருவரில் ஒருத்தி தன் சக்களத்தியாகிய மற்றொருத்தியின் கருவைக் கெடுக்கவேண்டுமென்று கருதி விஷத்துடன் கலந்த பக்ஷயத்தைக் கொடுத்தாள்; பிறகு ப்ருகு வம்சத்திற் பிறந்த ச்யவனரென்னும் முனிவர் அவ்வரசன் தமது தேசத்தில் வஸிப்பவனென்ற அபிமானம் கொண்டு அவனிடம் அருள்புரிந்தவராகி வரங்கொடுப்பதற்காக மலைகளிற் சிறந்து மிகவும் அழகாகி விளங்குகின்ற அந்த ஹிமவத் பர்வதத்திற்கு வந்தார்.

'அப்பொழுது விஷத்தைச் சாப்பிட்ட மூத்த மனைவி மிகுந்த பாக்யமுடையவளும் தாமரையிதழ் போன்ற கண்களையுடையவளுமானவள். அவள் க்ஷேமமாகப் புதல்வன் பிறக்கவேண்டுமென்று விருப்பமுள்ளவளாகித்தேவர்களுக்கொப்பான காந்தியையுடைய அந்த ச்யவனமுனிவர்க்கு நமஸ்காரஞ் செய்தாள். அவள் காளிந்தியென்னும் பெயர்பூண்டவள். அவள் சிலநாள் அம்முனிவர்க்குச் சுஶ்ரூஷை செய்துகொண்டிருந்தாள். தனக்கு யாதொரு தடையுமில்லாமல் புதல்வன் உண்டாகவேண்டுமென்று தனக்குச் சுஶ்ரூஷை செய்துகொண்டிருக்கிற காளிந்தியைப் பார்த்து அந்தணர் தலைவராகிய ச்வயன முனிவர் 'தாமரையிதழ்போன்ற கண்களையுடைய பாக்யவதியே! உன் வயிற்றில் மிகுந்த பலமுடையவனும் சிறந்த பராக்ரமம் பொருந்தியவனும் மஹாதேஜஸ்வியும் ஐஸ்வர்யங்கள் அமைந்தவனுமாகிய புதல்வன் விஷத்தோடுகூடவே விரைவில் பிறக்கப் போகிறான். விஷத்து

டன் பிறப்பானென்று பயப்படவேண்டியதில்லை. அவனுக்கு யாதொரு கெடுதியும் நேராது' என்றார். பதிவ்ரதையும் பட்டமஹிஷியுமாகிய அந்த ராஜபுத்ரி இங்ஙனம் அருள்பெற்று ச்யவனமுனிவர்க்கு நமஸ்காரஞ் செய்தாள். பிறகு அவளுக்குப் பதிவியோகம் நேரிட்டதனால், மிகவும் வருத்தமுற்ற அம்மடந்தை ச்வயனமஹர்ஷியின் அனுக்கிரகத்தினாலேயே புதல்வனைப் பெற்றாள். கர்ப்பத்தைக் கலைக்கவேண்டுமென்று காளிந்திக்கு இளையமனைவி விஷத்தைக் கொடுக்க அவ்விஷத்துடன் கூடவே குழந்தை பிறந்தபடியினால் அந்தப் புதல்வன் [1] ஸகரனென்று பெயர் பெற்றான்.

அந்த ஸகரனுக்கு அஸமஞ்ஜன் பிறந்தான். அஸமஞ்ஜனுக்கு அம்சுமந்தன் உண்டானான். அம்சுமந்தனுக்குத் திலீபன் தோன்றினான். திலீபனுக்குப் பகீரதன் ஜனித்தான். பகீரதனுக்குக் ககுத்ஸ்தன் பிறந்தான். ககுத்ஸ்தனுக்கு ரகு பிறந்தான். ரகுவுக்கு அளவற்ற ஒளியுடைய ப்ரவ்ருத்தனென்பவன் பிறந்தான். அவன் என்னுடைய சாபத்தினால் ராக்ஷஸனாய்விட்டான். அவனைக் கல்மாஷ பாதனென்று சொல்வார்கள். அவன் என்னைச் சபிக்கத் தொடங்கி ஜலத்தைக் கையிலெடுக்க, அப்பொழுது அவன் பாரியை வேண்டாமென்று நல் வார்த்தை சொல்லித் தடுத்தபடியினால் அந்த ஜலத்தைத்தன் பாதத்தில் கொட்டிக்கொண்டு கல்மாஷபாதனென்பெயர்பெற்றான். அவனுக்குச் சங்கணனென்பவன்

1. கரமென்றால் விஷம். அதனோடுகூடப் பிறந்தவனாகையால் ஸகரன்.

2 கல்மஷமென்றால் நாநாவர்ணத்தையுடையது. சாபஜலம் பட்டபடியால் நாநாவர்ணங்களையுடைய பாதத்தை யுடையவனாயினான்.

பிறந்தான். சங்கணனுக்கு ஸுதர்சனன் பிறந்தான். ஸுதர்சனனுக்கு அக்னிவர்ணன் பிறந்தான். அக்னிவர்ணனுக்குச் சீக்ரகன் பிறந்தனன். சீக்ரகனுக்கு மரு பிறந்தனன். மருவுக்கு ப்ரசுஶ்ருகனென்பவன் பிறந்தான். ப்ரசுஶ்ருகனுக்கு அம்பரீஷன் பிறந்தான்.

அம்பரீஷனுக்கு நஹுஷன் பிறந்தான். நஹுஷனுக்கு யயாதி பிறந்தான். யயாதிக்கு நாபாகன் பிறந்தான். நாபாகனுக்கு அஜமஹாராஜன் பிறந்தான். அவனுக்குத் தசரத சக்ரவர்த்தி பிறந்தான். இந்தத் தசரதமஹாராஜாவுக்கு, அண்ணன் தம்பிகளாகிய இந்தராமலக்ஷ்மணர்கள் பிறந்தார்கள். ஜனகமஹாராஜனே! இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த மன்னர்கள் பரிசுத்தமான வம்ஶமுடையவர்களும் பரம தார்மிகர்களும் மிகுந்த பராக்ரமமுடையவர்களும் உண்மையை உரைப்பவர்களுமா யிருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் வம்சத்திற் பிறந்த இந்த ராமலக்ஷ்மணர்களுக்காக உன்புதல்விகளை வரிக்கிறேன். உன் புதல்விகளுக்கு இந்தக் குமாரர்கள் தகுந்தவர்கள். இந்தக் குமாரர்களுக்கும் உனது புதல்விகள் தகுந்தவர்கள். இப்படித் தகுந்திருப்பவர்களுக்கு உன் பெண்களை விவாஹஞ் செய்து கொடுப்பது தகுதியானது.

எழுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஜனகமஹாராஜன் தன் வம்ச
க்ரமத்தைச் சொல்லுதல்.

வஸிஷ்ட முனிவர் இங்ஙனஞ் சொல்லி முடித்த பிற்பாடு ஜனகமஹாராஜன் கைகூப்பிக்கொண்டு அம்முனிவ

1. இந்த நஹுஷ யயாதிகள் சந்த்ரவம்சத்து நஹுஷ யயாதிகளைக் காட்டிலும் வேறுபட்டவர்கள்.

ரைப்பார்த்து 'மஹாநுபாவரே! தங்களுக்குச் சுபம் உண்டாகட்டும். என் வம்சத்தைச் சொல்கிறேன்; கேட்கவேண்டும். நற்குலத்திற் பிறந்தவன் தான் கன்யாதானம் செய்யும்பொழுது தன் வம்சத்தைக் குறையற எடுத்துக் கூற வேண்டுமல்லவா? முனிவரே! யாவருங் கண்டு புகழும்படியான மிகுந்த செயல்களால் மூவுலகங்களிலும் ப்ரஸித்தி பெற்றநிமியென்னும் அரசர் இருந்தார். அவர் தர்மஸ்வபாவர். பலசாலிகள் அனைவரிலுந் தலைவர். அவருக்கு மிதியென்னும் புதல்வர் தோன்றினர். அந்த மிதியென்னும் மன்னவராற்றான் இம்மிதிலாபுரம் நிருமிக்கப்பட்டது. அவரே ஜனகவம்சத்திற்கு முதல்வர். அவருக்கு உதாவஸுவென்னும் புதல்வர் பிறந்தார். உதாவஸுவுக்குத் தர்மஸ்பாவராகிய நந்திவர்த்தனர் பிறந்தார். நந்திவர்த்தனருக்கு ஸுகேது வென்று ப்ரஸித்திபெற்றவர் பிறந்தார். ஸுகேதுவுக்குத் தர்ம ஸ்வபாவரும் மிக்க பலிஷ்டருமாகிய தேவராதர் பிறந்தார். ராஜர்ஷியாகிய அந்தத் தேவராதருக்கு ப்ருஹத்ரதர் பிறந்தார் ப்ருஹத்ரதருக்குத் மஹா ப்ரதாபமுடையவரும் சூரருமாகிய மஹாவீரர் பிறந்தார். அம்மஹாவீரருக்கு மிகுந்த தைர்யசாலியும் உண்மையான பராக்ரம முடையவருமாகிய ஸுத்ருதி யென்பவர் பிறந்தார்.

"அந்தஸுத்ருதிக்குத் தர்மத்தில் மனஞ் சென்றவரும் தர்மத்தை எக்காலத்திலும் அநுஷ்டிப்பவருமாகிய த்ருஷ்டகேது பிறந்தார். ராஜர்ஷியாகிய அந்த த்ருஷ்டகேதுவுக்கு ஹர்யஸ்வர் பிறந்தார். ஹர்யஸ்வருக்கு மருவென்பவர் பிறந்தார். அந்த மருவுக்கு ப்ரதிந்தகரென்பவர் பிறந்தார். அந்த ப்ரதிந்தகருக்குத் தர்மஸ்பாவராகிய கீர்த்திரத ரென்பவர் பிறந்தார். கீர்த்திரதருக்குத் தேவமீடரென்பவர் பிறந்தார். தேவமீட

ருக்கு விபுதரென்பவர்பிறந்தார். விபுதருக்கு மஹீத்ரகர் பிறந்தார். மஹீத்ரகருக்கு மஹாபலிஷ்டராகிய கீர்த்தி ராதர் பிறந்தார். ராஜர்ஷியாகிய கீர்த்திராதருக்கு மஹா ரோமர் பிறந்தார். மஹாரோமருக்குத் தர்மஸ்வபாவரா கிய ஸ்வர்ணரோமர் பிறந்தார். ராஜர்ஷியாகிய ஸ்வர்ண ரோமருக்கு ஹ்ரஸ்வரோமர் பிறந்தார். தர்மத்தையுணர்ந் தவரும் மஹாநுபாவருமாகிய அந்த ஹ்ரஸ்வரோமருக்கு இரண்டு புத்திரர் பிறந்தார்கள், அவர்களில் நான் மூத்த வன். வீரனாகிய குஶத்வஜன் என்னுடைய தம்பி. என் தகப்பனார் மூத்தவனாகிய என்னை ராஜ்யத்தில் அபிஷே கஞ்செய்து குஶத்வஜனைப் போஷிக்கவேண்டிய பாரத் தையும் என்மேலிட்டுக் தபோவனத்திற்குச் சென்றார்.

வ்ருத்தராகிய என் தகப்பனார்தேகத்தைவிட்டுஸ்வர்க் கத்திற்குச் செல்லுகையில், நான்தேவர்களுக்கொப்பான என்தம்பி குஶத்வஜனை ப்ரீதியுடன் பார்த்துக்கொண்டு தர்மம் தவறாமல் ராஜ்யபரிபாலனஞ் செய்து வந்தேன். சில காலம் சென்ற பிற்பாடு, வீர்யம் பொருந்திய ஸுதன் வாவென்னும் மன்னவன் ஸாங்காஶ்யா நகரத்தினின்றும் முற்றுகையிடுவதற்காக மிதிலாபுரத்தின் மேல் வந்து ஒப் பில்லாத சிவதநுஸ்ஸையும் தாமரையிதழ்போன்ற கண்க ளையுடைய ஸீதையையும் தனக்குக் கட்டாயமாய்க் கொ டுக்கவேண்டுமென்று எனக்குச் சொல்லியனுப்பினான். ப்ரஹ்மர்ஷியாகிய வஸிஷ்டமுனிவரே! வில்லையாவது ஸீதையாவது நான் கொடுக்கவில்லை. அதனால், அவன் என்னோடு யுத்தஞ்செய்வதற்குத் தலைப்பட்டு வருகை யில், என்னையெதிரிட்டு வந்த அந்த ஸுதன்வராஜனை அந்த யுத்தத்தில் நான் கொன்று வெற்றியடைந்தேன். பிற்பாடு அவனுடைய ஸாங்காஶ்யா நகரத்திற்கு வீர்யம் பொருந்திய என் தம்பியாகிய குஶத்வஜனை அரசனாகப்பட்

டங்கட்டி வைத்தேன். என்னுடன் பிறந்தவனாகிய இந்தக் குஶத்வஜன் எனக்கு இளையவன். நான் மூத்தவன்.

"முனிவர்களில் தலைவரே! தாம் வரித்தபடி மிகுந்த ப்ரீதியுடன் என் புதல்விகளிருவரையும் ராமலக்ஷ்மணர்களுக்கு விவாஹஞ்செய்து கொடுக்கிறேன். தங்களுக்குச் சுபமுண்டாக வேண்டும். ராமனுக்கு ஸீதையும் லக்ஷ்மணனுக்கு ஊர்மிளையையும் கொடுக்கிறேன். வல்லமையை விலையாகப் பெற்றவளும் தேவகன்யகை போன்றவளும் எனது மூத்த புதல்வியுமாகிய ஸீதையையும் இரண்டாவது புதல்வியாகிய ஊர்மிளையையும் த்ரிகரணங்களிலும் வேறுபாடின்றி மிகுந்த ப்ரீதியுடன் இவர்களுக்குக் கொடுக்கிறேன். தசரதமஹீபாலனே! ரகுகுலதிலகனாகிய தங்களுக்கு மிகுந்த ஸந்தோஷத்தோடு என் பெண்களை நாட்டுப்பெண்களாக்குகிறேன். ராம லக்ஷ்மணர்களுக்கு விவாஹத்திற் செய்யவேண்டிய கோதானமென்கிற ஸமாவர்த்தனம் முதலிய விவாஹாங்கமான வைதிக கர்மங்களைச் செய்யுங்கள். தங்களுக்கு நன்மை உண்டாகட்டும். விவாஹகாலத்திற் செய்யவேண்டிய பித்ருகார்யமாகிய நாந்தீஶ்ராத்தத்தையும் நடத்துங்கள். நீண்ட புஜங்களையுடைய மஹாநுபாவனே! இன்றைய தினம் மகாநக்ஷத்திரம். இன்றைக்கு மூன்றாவது நாள் மங்களகரமாகிய உத்தரபல்குனி நக்ஷத்ரம் வருகின்றது. அதில் விவாஹகார்யத்தை நடத்துங்கள். ராம லக்ஷ்மணர்களுக்கு மேன்மேலும் மிகுந்த க்ஷேமங்களை விளைவிக்கும்படியான கோதானம் பூதானம் திலதானம் ஹிரண்யதானம் முதலான தானங்களையும் கிரமமாக நடத்திவையுங்கள்.

எழுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதன் பிள்ளைகளின் விவாஹத்திற்காகக் கோதானம் முதலியவற்றைச் செய்தல்.

பின்பு விஸ்வாமித்ர முனிவர் வஸிஷ்டருடன் வீரனாகிய ஜனகமஹாராஜனைப் பார்த்து 'மன்னவர் தலைவனே! இக்ஷ்வாகுவம்சமும் விதேஹவம்சமும் ஆச்சரியமதை விளைவிக்கின்றவை. இவ்விரண்டு வம்சங்களின் மஹிமையும் இவ்வளவு அவ்வளவென்று அளவிடக் கூடாதிருக்கும். ஆனதுபற்றி, இக்ஷ்வாகு வம்சத்தரசர்களுக்கும் விதேஹவம்சத் தரசர்களுக்கும் சரியானவர்கள் உலகத்தில் ஒருவருமில்லை. ஸீதையையும் ஊர்மிளையையும் ராமலக்ஷ்மணர்களுக்குத் தர்மம் தவறாது கொடுக்கிற இந்த விவாஹ ஸம்பந்தமானது ஒன்றோடொன்று ஒத்திருக்கிற குலங்களுக்கு நேரிடுவதனால் மிகவும் ஸ்ரேஷ்டமாயிருக்கிறது. பெண்கள் இருவரும் ஸௌந்தர்யத்தில் ஒருவரையொருவர் ஒத்திருப்பதனாலும் இந்த ஸம்பந்தம் இன்னும் அதிகமாக அமைந்து விளங்குகின்றது. உனக்கு மற்றொரு விஷயம் சொல்லவேண்டியதா யிருக்கின்றது. அதை ஊக்கத்துடன் கேள். இந்தக் குஶத்வஜன் உனக்கு இளையவன்; தர்மங்களை யறிந்தவன். ஆகையால், உன்னைப்போலவே இவனும் ஸம்பந்தத்திற்கு உரியவனாயிருக்கிறான். தர்மாத்மாவாகிய இந்தக் குஶத்வஜனுக்கு ஒப்பில்லாத அழகுபொருந்திய இரண்டு பெண்கள் இருக்கிறார்களல்லவா? அப்பெண்களையும் நாங்கள் பரதசத்ருக்னர்களுக்கு விவாஹம்செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அவர்களுக்குக் குஶத்வஜனுடைய பெண்கள் இருவரையும் விவாஹஞ்செய்துகொடு! தசரதனுடைய புதல்வர் அனைவரும் நல்ல ஸௌந்தர்யமும் யௌவனமும் உடையவர்கள். அனைவரும் திக்பாலகர்களை நிகர்த்தவர்கள். எல்லோரும் தேவதைகளைப்போன்ற பராக்ரம

முடையவர்கள். நீங்கள் இருவரும் இவ்வாறு ஒருவருக் கொருவர் ஸம்பந்தஞ் செய்யப் பெற்றுத் தோஷமில்லா மல் விளங்குகின் இக்ஷ்வாகு வம்சமும் நற்செய்கையை யுடைய உன் வம்சமும் ஒன்றுக்கொன்று தோல்வியில்லா மல் மேன்மையைப் பெருந்துக' என்று சொன்னூர்.

விஸ்வாமித்ரர் வார்த்தைகளைக் கேட்டு ஜனகமஹா ராஜன் கைகளை கூப்பிக்கொண்டு அவ்விருவரையும்நோக்கி 'முனிமன்னவர்களே! இக்ஷ்வாகு வம்சத்தோடு ஸம்பந்தஞ் செய்வது மிகவுந் தகுதியானது. அப்படித் தகுந்திருக் கிற இந்த ஸம்பந்தத்தைச் செய்யும்படி நீங்கள் ஆஜ்ஞா பித்தபடியே யாகட்டும். உங்களுக்குச் சுபமுண்டாக வேண்டும். எப்பொழுதும் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியாதிருக்கும் இந்தப் பரத சத்ருக்னர் இருவரும் குஶ த்வஜனுடைய பெண்களாகிய இருவரையும் விவாஹஞ் செய்து கொள்ளட்டும். மஹாபலசாலிகளாகிய ராஜகுமா ரர்கள் நால்வரும் ஒரு தினத்திலேயே ராஜபுத்திரிகள் நால்வரையும் மணம் புரிவார்களாக. அந்தணர் தலைவர்க ளே! பகன் என்பவனைத் தேவதையாக உடைய உத்தர பல்குனி நக்ஷத்திரத்தில் பகலில் விவாஹஞ்செய்வது உத் தமமென்று பண்டிதர்கள் புகழ்ந்து சொல்லுகிறார்கள். அந்தத் தினத்தில் விவாஹத்தை முடித்து விடவேண்டும்' என்றுசொல்லி மீளவும் அம்முனிவர்கள் இருவருக்கும் எதிரில் நின்று கையைக் கூப்பிக்கொண்டு 'நீங்கள், நான் கந்யாப்ரதானஞ் செய்யும்படி என்மீது அருள்புரிந்து எனக்குச் சிறந்த தர்மத்தை உண்டாக்கினீர்கள். உங்கள் இருவர்க்கும் நான் எப்பொழுதும் சிஷ்யனாகி விட்டேன். நீங்கள் என் தம்பி குஶத்வஜனுடையவும் என்னுடைய வும் தசரதமஹாராஜனுடையவும் ஆகிய இம்மூவருடைய வும் ஸிம்ஹாஸனங்களில் ஏறி வீற்றிருந்து எங்கள் மூவ

ருடைய ராஜ்யத்தையுங் கைப்பற்றிப் பரிபாலித்து வருவீர்களாக. தசரதருடைய ராஜ்யத்தைக் கொடுக்க நீ யார்? என்று கேட்கவேண்டாம். இந்த மிதிலாநகரம் எப்படித் தசாத மஹாராஜாவுக்கு ஸ்வாதீனமோ, அப்படியே அயோத்தியாபுரி எனக்கு ஸ்வாதீனம். ஆகையால், நான் தசரதரது ராஜ்யத்தையும் உங்களுக்குக் கொடுக்கத் தகும். ஆனது பற்றி இம்மூன்று ராஜ்யத்திலும் உங்களுக்கு ப்ரபுத்வம் உண்டென்பதற்கு ஸந்தேஹமில்லை. நாங்கள் அனைவரும் உங்களுக்கு ஸ்வாதீனர்களா யிருப்பவர்கள். நீங்கள் எல்லோரும் எங்களுக்கு ஹிதத்தை உபதேசித்து எங்களுக்குத் தகுந்தபடி எந்தக் கார்யத்தையும் செய்து கொள்ளத் தகும்'' என்றான்.

ஜனகமஹாராஜன் இங்ஙனஞ் சொல்லிக்கொண்டிருக்கையில் ரகுகுலதிலகனாகிய தசரதசக்ரவர்த்தி மிகுந்த ஸந்தோஷமடைந்து அந்த மன்னவனைப் பார்த்து 'மிதிலா நகரத்திற்கு அதிபதிகளும் அண்ணன் தம்பிகளுமாகிய உங்கள் இருவருடைய நற்குணங்கள் கணக்கிடக் கூடாதிருக்கின்றன. அரசர்களும் ரிஷிகளும் உங்களால் நன்கு பூஜிக்கப்படுகிறார்கள். நீங்கள் அளவற்ற நன்மையைப்பெறுக. உங்களுக்கு மங்கள முண்டாகட்டும். நான் எனது இருப்பிடத்திற்குச் சென்று ஶ்ராத்த கர்மங்கள் யாவற்றையும் நடத்திக் கொள்கிறேன்' என்று மொழிந்து முனிவர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு மஹாயசஸ்வியாகிய தசரதமன்னவன் தன் விடுதிக்குச் சென்றான்.

அன்று அங்கு நாந்தீஶ்ராத்தத்தை விதிப்படி நடப்பித்து மறுநாள் விடியற்காலத்தி லெழுந்திருந்து செய்யவேண்டிய உத்தம கார்யமாகிய கோதானமென்கிற ஸமாவர்த்தன கர்மத்தைச் செய்வித்தான். பின்பு பெ

ரும்புகழ் பெற்ற அந்தத் தசரத சக்ரவர்த்தி தன் புத்தி ரர் ஒவ்வொருவரையும் உத்தேசித்து லக்ஷம் பசுக்கள் விதமாக ப்ராஹ்மணர்களுக்குத் தர்மம் தவறாது தானஞ் செய்தான். ரகுகுலத்திற் பிறந்து புருஷர்களிற் சிறந்த தசரதமஹாராஜன் புத்திரர்களிடத்தில் மிகவும் வாத்ஸல் யமுடையவனாகையால் அவ்வளவோடு நிற்காமல் அவர் கள் ஸமாவர்த்தனோத்ஸவத்தைப் பற்றிப் பொன்கொம்பி கள் பூட்டப்பட்டவைகளும் பால்நிரம்பிய மடிகளை யுடைய வைகளும் கன்றுகளோடு கூடியவைகளுமான நாலுலக்ஷம் பசுக்களையும் பால் கறப்பதற்காக அத்தனை வெண்கலப் பாத்திரங்களையும் ப்ராஹ்மணர்களுக்குத் தானஞ்செய்து சிறந்த பலவகைப்பட்ட தானங்களையும் அப்படியே அந்த ணர்களுக்குத் தந்தான். அப்பொழுது ஸமாவர்த்தனஞ் செய்துகொண்ட புத்திரர்கள் தன்னைச் சூழ்ந்திருக்க அந்தத் தசரதமஹீபாலன் திக்பாலகர்களால் சூழப் பெற்று முகம் மலர்ந்து விளங்குகின்ற ப்ரஹ்மதேவன் போல விளங்கினான்.

எழுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸீதாகல்யாணம்

தசரத மஹாராஜன் தனது குமாரர்களுக்கு ஸமா வர்த்தன கர்மத்தைச் சிறப்புடன் நடத்தின அன்றைத்தி னமே சூரனாகிய யுதாஜித்தென்பவன் அவ்விடம் வந்து சேர்ந்தான். அந்த யுதாஜித்தென்பவன் கேகய ராஜா வின் குமாரன்; பரதனுக்குத் தாயுடன் பிறந்த மாமன். அவன் அவ்விடம் வந்து தசரதனைப் பார்த்து க்ஷேமம் விசாரித்து 'ராஜேந்திரா! கேகயராஜர் ஸ்நேஹத்துடன்

தங்கள் க்ஷேமத்தை விசாரிக்கச் சொன்னார். தாங்கள் எவர்களுடைய க்ஷேமத்தை எப்பொழுதும் விரும்பிக் கொண்டிருக்கிறீர்களோ அப்படிப்பட்ட நாங்கள் அனைவரும் க்ஷேமமாயிருக்கிறோம். என் தகப்பனாராகிய கேகய ராஜர் என் தங்கையின் பிள்ளையாகிய பரதனைப் பார்க்க விரும்புகிறார். ஆகையால், அவனை அழைத்துக்கொண்டு போவதற்காக நான் அயோத்தியைக்குப் போயிருந்தேன். தாங்களும் தங்கள் குமாரர்களும் விவாஹத்திற்காக அயோத்தியையிலிருந்து மிதிலாபுரத்திற்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டு என் தங்கையின் குழந்தையான பரதனைப் பார்ப்பதற்காக அவ்விடமிருந்து சீக்கிரமாக இங்கு வந்து சேர்ந்தேன்' என்றுரைத்தான்.

பின்பு, தசரத சக்ரவர்த்தி தனக்கு ப்ரியாதிதியாக யுதாஜித்து வந்ததைக் கண்டு, பூஜிக்கத்தக்க அந்த யுதாஜித்தை நன்றாய்ப் பூஜித்தான். இங்ஙனம் யுதாஜித்தைப் பூஜித்த பின்பு தசரத மஹாராஜன் மஹாநுபாவர்களாகிய தன் குமாரர்களோடு அன்றிரவைக் கழித்து மறுநாள் எழுந்திருந்து அந்த அந்தக் காலங்களில் செய்யவேண்டிய கருமங்களை யெல்லாம் நன்றாக உணர்ந்தவனாகையால் அப்பொழுது செய்ய வேண்டிய கருமங்களைச் செய்து முடித்து ரிஷிகளை அழைத்துக்கொண்டு யாகசாலையின் ஸமீபத்திற்கு வந்து சேர்ந்தான். ராமனும் ஸமஸ்த ஆபரணங்களையும் பூண்டு விளங்குகின்ற தம்பிமார்களுடன் கூடிக் கல்யாண கங்கணங் கட்டிக்கொள்கின்ற மங்களாசாரத்தை நிறைவேற்றி விவாஹத்திற்குரியதும் ஜயத்தைக் கொடுக்கத் தக்கதுமாகிய சுபமுஹூர்த்தத்தில் வஸிஷ்டரையும் மற்றுமுள்ள மஹர்ஷிகளையும் முன்னிட்டுக்கொண்டு யாக

சாலையை அடைந்து தம்பிகள் தன்னைச் சூழ்ந்திருக்கத் தகப்பனாருடைய அருகில் உட்கார்ந்தான்.

பகவானாகிய வஸிஷ்டமுனிவர் ஜனகனிடஞ் சென்று 'அரசர்களிற் றலைவனே! தசரதமஹீபாலன் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிற பிள்ளைகளோடுகூடக் கன்யாப்ர தானஞ்செய்கிற உன்னை எதிர்பார்த்திருக்கிறான். கன்யை யைக் கொடுப்பவனுக்கும் பெற்றுக் கொள்பவனுக்கும் ஸமஸ்த புருஷார்த்தங்களும் உண்டாகின்றன. கொடுப்ப வனும் கொள்கின்றவனும் மனம் அமைந்திருந்தால் ஸகல புருஷார்த்தங்களும் நிறைவேறும். அவ்விருவர்களாலும் தான் கன்னிகையைக் கொடுப்பது வாங்கிக்கொள்வது முதலிய விவாஹ காரியங்கள் நடக்கவேண்டியுள்ளன. ஆகையால், கன்யாப்ரதானஞ் செய்யவேண்டிய நீ இனி வெறுமனே இருக்கலாகாது. கன்யாதானம் பண்ணி நீ செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றிக் கொள்வாயாக' என்று மொழிந்தார்.

யாவரும் மதிக்கத்தகுந்த பராக்ரமசாலியாகியஜனக மஹாராஜன் தானசீலர்களில் தன்னைப்போல ஒருவருங் கிடையாரென்னும்படி பெரும் புகழ் பெற்றவன்; மே லான தர்மங்களை அறிந்தவன். ஆகையால், அவன் விவா ஹத்திற்குத் தான் செய்யவேண்டிய விதிகளையெல்லாம் முடித்துக்கொண்டிருந்தான். ஆனதுபற்றி, மஹாநுபா வராகிய வஸிஷ்டமுனிவர் சொல்லைக் கேட்டுத் தபோ தனரே! தாங்கள் ஏன் சீக்கிரமாகவராமலிருக்கிறீர்கள்? தாங்கள் வந்தால் தங்களைத் தடுக்கும்படியான வாசற் காப்பவன் எவனிருக்கிறான்? தாங்கள் இங்கே வருவ தற்கு யாவருடைய ஆஜ்ஞையை எதிர்பார்க்கவேண்டும்? தங்களுக்குக் கோஸல ராஜ்யம் எப்படியோ-அப்படியே

இந்த ராஜ்யமும் ஸ்வாதீனமா யிருக்கின்றது. என் ராஜ்யமே தங்களுக்கு ஸொந்தமாயிருக்கும்போது என்னுடைய கிருகம் தங்கள் அதீனமென்பதைச் சொல்லவேண்டுமோ? ஸொந்த கிருகத்தில் விசாரம் யாதிருக்கின்றது? எனக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதாகச் சொன்னீர்கள். என் கன்னிகைகள் விவாஹத்திற்கு வேண்டிய மங்களாசாரங்கள் யாவுஞ் செய்துகொண்டு ஜ்வலித்துக் கொண்டிருக்கிற அக்நிஜ்வாலைகள் போல விவாஹவேதிகையின் அருகில் வந்திருக்கிறார்கள். நானும் ஸித்தனாகவே இவ்வேதிகையி லிருந்துகொண்டு தங்களை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆகையால், தசரத மஹீபதி சுபகாரியத்தை நிர்விக்னமாக நடத்தட்டும்'' என்று சொன்னான்.

ஜனக மஹாராஜன் இவ்வாறு மொழிந்தவற்றை வஸிஷ்ட முனிவர் சொல்லியனுப்பிய புருஷன் மூலமாகத் தசரத சக்ரவர்த்தி கேட்டுத் தன் குமாரர்களையும் ரிஷிகளையும் மற்றுமுள்ள யாவரையும் அழைத்துக்கொண்டு யாகசாலைக்குள் ப்ரவேசித்தார். பின்பு விதேஹராஜனாகிய ஜனக மன்னவன் வஸிஷ்ட முனிவரை நோக்கி 'முனிவர்களில் தலைவரே! தாங்கள் தர்மங்களை அறிந்து அறிந்தபடியே நடத்துந் தன்மையுள்ளவர். மேலும் எனக்கு ப்ரபுவா யிருக்கிறீர்கள். ஆகையால், உலகங்களைக் களிக்கச்செய்யுந் தன்மையுள்ள ராமனுக்குச் செய்யவேண்டிய விவாஹகாரியங்கள் அனைத்தையும் தாங்கள் ரிஷிகளுடன்கூடி நடத்தத்தொடங்குங்கள்' என்றான்.


பகவானாகிய வஸிஷ்ட முனிவரும் சரிதானென்றுரைத்துவிட்டு விஸ்வாமித்ர முனிவரையும் தார்மிகராகிய சதானந்தரையும் முன்னிட்டுக் கொண்டு விவாஹத்தின் பொருட்டுப் பச்சையிலைகளாற் புதிதாகக் கட்டப்பட்ட

கல்யாணப் பந்தலின் நடுவில் சாஸ்த்ர விதிப்படி விவாஹ வேதியைக் கட்டுவித்து அதற்கு நான்கு பக்கத்திலும் கந்த புஷ்பங்களையும் முளைகளுடன் கூடிய பொற்பாலிகைகளையும், முளைகளோடு கூடிய அடியில்லாத பாத்ரங்களையும், முளைகளோடுகூடிய மடக்குக்களையும், தூபங்களோடு கூடிய பாத்ரங்களையும், சங்குமயமான பாத்ரங்களையும், நெய் ஹோமஞ்செய்வதற்கு வேண்டிய ஸ்ருக் ஸ்ருவம் என்கிற பாத்ரங்களையும், அர்க்யத்தின் பொருட்டு ஜலம் நிரம்பிய பாத்ரங்களையும், பொரிகளால் நிறைக்கப் பெற்ற பாத்ரங்களையும், மஞ்சளைப் பூசி ஸம்ஸ்காரஞ் செய்யப் பெற்ற அக்ஷதைகளையும் வைத்துக்கொண்டு விவாகவேதிகையை அலங்கரித்தார்.

எல்லாமறிந்தவரும் மிகுந்த ப்ரபாவமுடைவருமாகிய வஸிஷ்டபகவான் சாஸ்திர சம்மதமாக மந்த்ரங்களைச் சொல்லிக்கொண்டு அந்த வேதிகையில் ஒன்றோடொன்று சரியாயிருக்கின்ற தர்ப்பங்களைப் பரப்பி, அக்னிகுண்டத்தில் அக்னியைச் சேர்த்து அவ்வக்னியில் கல்யாணப் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் நன்மை உண்டாகும் பொருட்டு ஹோமஞ் செய்தார். பின்பு ஜனகமஹாராஜன் ஸமஸ்த ஆபரணங்களாலும் அலங்காரம் செய்யப் பெற்ற ஸீதையை அக்னிக்கு முன்பாக அழைத்துவந்து ராமனுக்கு எதிரில் நிறுத்திக்கொண்டு கௌஸல்யைக்கு மஹாநந்தத்தைக் கொடுப்பவனாகிய அந்த ஸ்ரீராமனைப் பார்த்து [1] இந்த ஸீதையானவள் என்னுடைய புதல்வி; உனக்குத் தர்மபத்னியாயிருப்பவள். நீ இவளை அங்கீகரிப்

---

1. இதற்கு—
இயம் ஸீதா மம ஸுதா ஸஹ யர்மசரீ தவ,
ப்ரதீச்ச சைநாம் பத்ரந்தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா'
என்பது மூலம். இதற்கு விசேஷார்த்தமாவது—ஸௌந்தர்யம் நற்



352. ஸீதா கல்யாணம்.

பாயாக. உனக்குச் சுபமுண்டாக வேண்டும். உனது கை யால் இவளது கையைப் பிடித்துக் கொள்வாயாக.

குலப் பிறப்பு முதலிய குண விசேஷங்களைப்பற்றி ஸீதையை அங்கீ கரிக்கத் தகும் என்று சொல்லிக்கொண்டு ஜனகமஹாராஜன் தாரை வார்த்துக்கொடுக்கிறான்—(இயம்) இவள் 'இதோ தென்படுகிற அள வற்ற ஸௌந்தர்யம் ஸௌகுமார்யம் லாவண்யம் முதலிய குணங் களையுடைய இப்பெண்பிள்ளை' என்று ஸீதையின் ஸௌந்தர்யாதி குணங்களை நேராகச் சுட்டிக் காட்டுகின்றான். ஸீதையென்கிற பெயரினாற் றான்றும் அயோனி ஜத்வத்தைக் காட்டுகிறான் (ஸீதா) ஸீதாவென்று கலப்பை உழும் வழிக்குப் பெயர். அதிற் பிறந்தவளா கையால் ஸீதையென்னப்படும் இவள். இதனால், அயோனி ஜத்வம் தோற்றுகின்றது. இவள் அளவற்ற ஸௌந்தர்யாதி குணங்களை யுடையவளென்பது மாத்திரமேயன்று; யாகபூமியிற் கலப்பையினடி யிற் பிறந்தவள் என்க. (இயம் சீதா) இந்த சீதை. விசுவாமித்திரமத் திற் கேட்டது முதலாகச் சிவதநுஸ்ஸை முரிப்பது முதலிய வியா பாரங்களைச்செய்து எப்பொழுது பார்ப்போமென்று உனக்கு மிகவும் குதூஹலத்தை விளைக்கின்ற இந்தஸீதை. அல்லது—மின்னல் மின் னும் பொழுது எப்பொழுதும் மின்னலின் அவயவமாகிய காந்தி தோற்றுமேயன்றி அயவியாகிய அம்மின்னல் புலப்படாது. அப்படியே சீதையின் ரூபம் மின்னல் மின்னினாற்போலக் காந்தி ஜ்வலித்துக் கொண்டிருப்பது பற்றி அந்த ரூபத்தின் காந்தி மாத்ரத்தினால் கண் கள் மழுங்கி அவயவியான அவள் ரூபம் கண்ணுக்குப் புலப்படாதிருக் கும். அப்படியே கண்ட மாத்திரத்தில் கண்கள் மழுங்கித் தட்டித் தடு மாறுகின்ற ராமனுக்கு (இயம் சீதா) இதோ இந்த சீதை யென்று புலப்படக்காட்டுகின்றான். அல்லது—ராமன் சீதையைக்கேட்டதுமுதற் கொண்டு எப்பொழுதும் இடையீடின்றி அவளையேபாவித்துக்கொண் டிருக்கையால் அந்தப் பாவனா ப்ரகர்ஷத்தினால் உப்பரிக்கையின் மேலும் வழிகள் தோறும் பின்னிலும் முன்னிலும் அவளே புலப்படு கின்றாள் என்கிறபடி எல்லாம் சீதாமயமாகி, எல்லா விடங்களிலும் சீதையே கண்ணுக்குப் புலப்படுகையினால் ஜனகன் தான் கொடுக் கப்போகிற சீதை இதோ இருக்கின்றாளென்று ராமனுக்கு விசே ஷித்துக் காட்டுகைக்காக (இயம் சீதா) இதோ சீதை யென்கிறான்.

இவள் பதிவ்ரதையாயிருப்பவள்; மிகுந்த பாக்யமுடையவள்; உன்னை எப்பொழுதும் நிழல்போல் அநுஸரித்

'நாம் விரும்பின ஸௌந்தர்யம் மாத்ரமேயன்று; ஆபிஜாத்யமு முண்டாயிருக்கவேண்டும். என்று ராமனுக்கு அபிப்ராயமாகக் கொண்டு சொல்கிறான். (மமஸுதா) என்னுடைய பெண். ஆசாரத்தைப் பிரதானமாகவுடைய ஜனக வம்சத்திற் பிறந்தவளுக்கு ஆபிஜாத்யம் சொல்லவேண்டியதில்லை. அல்லது(மமஸுதா) 'மஹதா தபஸா ராமஃ' என்கிறபடி நீ எப்படித் தசாதனுக்குப் பெருந்தவத்தினாற் பிறந்தாயோ, அப்படியே உனக்குக் கொடுக்கைக்காக அனேக விரதங்களையும் உபவாஸம் முதலியவற்றையும் செய்த எனக்குப் பிறந்தபெண் இவள் என்க. இவ்வழகிய பெண்மணி எனக்குப் போகத்தின்பொருட்டு ஆகட்டும், தர்மங்களை யநுஷ்டிக்கும்பொழுது மற்றொருத்தியைக்கூட வைத்துக்கொள்கிறேன்' என்று ராமனுக்கு அபிப்ராயமாகக்கொண்டு (ஸஹ தர்ம சரீ தவ) இவள் உனக்குப் போகத்திற்கு மாத்ரமேயன்றி உன்னுடன்கூடத் தர்மங்களை அநுஷ்டிப்பவளாகவும் அதாவது தர்ம பத்நியாகவும் ஆவாளென்க. அல்லது— (ஸமானோ யர்மஃ ஸஹயர்மஃ தம் சரதீதி ஸஹ யர்மசரீ)என்கிற வ்யுத்பத்தியைக்கொண்டு நீ எந்தத் தர்மத்தை எப்படி அநுஷ்டிப்பாயோ, அதை அப்படியே இவள் அநுஷ்டிப்பவளென்க. உலகத்தில் ஒருவரைப்போல மற்றொருவரிருப்பது அரிது. இவள் அப்படியன்றி உன்னைப்போலவே யிருப்பதுபற்றி உனக்கு இவளே தக்கவள். இவள் தவிர மற்ற எப்பெண்பிள்ளையும் பத்நியாகத்தகாளென்க. இப்படி ஸௌந்தர்யம் ஆபிஜாத்யம் தர்மாசரணம்முதலியவற்றையுடையவளாயிருப்பினும்,உனது அநுமதியின்றி இவளை நா னங்கீகரிக்கமாட்டேனென்று ராமனுக்கு அபிப்ராயமாக நினைத்து (ப்ரதீச்சசைநாம்) இவளை அங்கீகரிப்பாயாக வென்கிறான். சீதை ராமனை விட்டு க்ஷணமும் பிரியாதிருப்பவளாகையால், அவளை ராமனுக்குத் தானம் செய்வதென்பது யுக்தமன்று. ஆகையால் ஜனகன் (ப்ரதீச்ச) அங்கீகரிப்பாயாக என்று உரைத்தானேயன்றி (ததாமி) கொடுக்கிறேன் என்று சொல்லவில்லை. 'சீதை எனக்குத் தானாகவே சொந்தமாயிருக்க, அவளை எனக்குப் புதிதாகக் கொடுப்பதற்கு நீ யார்' என்று ராமன் கோபித்துக் கொள்வானோ என்று நினைத்து (ஹஸ்தே) உனக்குச் சுபமுண்டாகுக வென்று நல்வார்த்

தை சொல்லுகிறுன். அல்லது ஒப்பில்லாத கன்யா லக்ஷணங்களுடன் விளங்குகின்ற என் பெண்ணை அங்கீகரிப்பதனுல் (ஹஜ்ரந்தே) உனக்கு ஸர்வமங்களங்களும் உண்டாகுமென்க. அல்லது—அநுரூபர்களான வதூவரர்களாகிய அவர்களிருவருடையவும்சேர்க்கைக்கு த்ருஷ்டி தோஷம் உண்டாகுமேயென்று பயந்து (ஹஜ்ரந்தே என்று) மங்களாஸாஸனம் பண்ணுகிறுன். என்னிடம் அநுஜ்ஞை பெருமலே ராக்ஷஸ விவாஹத்தாலாவது காந்தர்வ விவாஹத்தாலாவது மணம் புரிவானேவென்று பயந்து (பாணிம் ம்ருஹ்ணீஷ்வ பாணிநா) பாணிக்ரஹணம் செய்வாயாக வென்கிறுன். நீ ப்ரணய கலஹ காலத்தில் இவள் காலைப் பிடிப்பதைச் செய். இப்பொழுது கையைப் பிடிப்பாயென்று அவ்விருவர்களுக்கும் லஜ்ஜையினுலுண்டான சோபாதிசயத்தைக் காண விரும்பி இங்ஙனஞ் சொல்கிறுன் என்றுணர்க. அல்லது விச்வாமித்ராமத்தில் கேட்டது முதலாக ராமனுக்குச் சீதையினிடத்தில் மிகுந்த அநுராகம் பெருகி வருகின்றதுபற்றிப் பாவனுவசத்தினுல் சீதைக்கு ப்ரணய கோபமுண்டானதாக நினைத்து ராமன் அவள் காலை எங்கு ஒருகால் பிடிப்பானேவென்று சங்கித்து(பாணிம் ம்ருஹ்ணீஷ்வ பாணிநா) உன் கையினுல் இவள் கையைப் பிடிப்பாயாக வென்றுரைத்தானென் றுணர்க.

அர்த்தாந்தரம்—ராமனுடைய அளவிடவொண்ணுத ரூபத்தையும் யாவராலும்அசைக்கமுடியாத சிவபிரானது வில்லை முரித்த பலப்பெருக்கையும், மற்றுமுள்ள லக்ஷணங்களையுங் கண்டு, ஜனகன் ப்ரஹ்ம நிஷ்டனுகையால் ராமனை ஸ்ரீமஹாவிஷ்ணுவாகவும் சீதையை ஸ்ரீமஹா லக்ஷ்மியாகவும் தெரிந்துகொண்டு தேவாஹஸ்யத்தை வெளியிட எண்ணமில்லாதவனுகையால் ஸ்பஷ்டமாகச் சொல்லாமற்போனபோதிலும் த்வநி வ்ருத்தியால் சீதா ராமர்களின் அநாதி ஸம்பந்தத்தைத் தோற்றுவிக்கிறுன். (இபம்) ஜகத்தைப் படைப்பது முதலியவற்றுக்குக் காரணபூதனும் ஸாக்ஷாத் விஷ்ணுவுமாகிய நீ ராமனுக அவதரித்தாற் போலவே லக்ஷ்மியும் சீதையாக இதோ அவதரித்திருக்கிறுள் என்க. உங்களுக்குத் தாம்பத்யம் நித்யஸித்தமே யாயினும் நீங்கள் மநுஷ்யர்களாகப் பிறந்தீர்களாகையால் மநுஷ்ய தர்மத்தை அநுஸரித்து ஸீதையை மணம்புரிவாயாக. (ஸீதா) கலப்பையின் வழியில் பிறந்த அயோநிஜை; நீ தேவகாரியத்தின் பொருட்டுக் கௌஸல்யைக்குப் பிறந்தவன். இப்படி உன்னைப்போலப்

பிறக்கையும் அல்லது மற்றொரு ப்ரயோஜனத்தைக் குறித்துப் பிறக்கையும் இல்லாமற்போனபோதிலும் உன்னை அநுஸரிக்கிறதற்காகவே கலப்பையின் வழியில் தோன்றி மனுஷ்யத்வத்தைக் கைக்கொண்டு உன்னையே வரித்து உன்னோடுள்ள நித்ய தாபத்யத்தைத் தோற்றுவிக்கின்றனள். (மமஸுதா) எனது புதல்வி. மனுஷ்யத்வத்திற்குப் தக்கபடி,'கன்னிகை ஒருவன் வீட்டிற் பிறந்து ஒரு புருஷன் கையைத் பிடித்துக் கொள்ளவேண்டும்' என்கிறபடி இவள் என் வீட்டிற் பிறந்து வளர்ந்தவளாகையால் தான் என்பெண்ணாகப் பாவித்து உனக்குத் தானஞ்செய்கிறேன். (ஸஹயர்மசரீதவ) நீ நடத்தும் ஜகத் ஸ்ருஷ்டி முதலிய தர்மங்களில் ஸஹாயமாயிருந்து தானும் நடத்தவல்லவள். (ப்ரதீச்சசைநாம்) உனக்கிவள் நித்ய ஸித்தையாயினும் மனுஷ்ய தனத்தை அபிநயிக்கைக்காக இவளை யங்கீகரிக்கவேண்டும். (ஹஸ்ரந்தே) உனக்கு நித்ய ஸித்தையானவளை நான் புதிதாகக் கொடுக்கின்றேனென்று கோபிக்கவேண்டாம். (பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா) இவளை நீ எப்பொழுதும் மார்பிலேயே தரித்திருப்பவன். இப்பொழுது மனுஷ்யாவதாரத்திற்குத் தக்கபடி விவாஹ ஸமயத்தைப் பற்றிக் கையினால், கையைப் பிடிப்பாயாக வென்று பொருள்.

இன்னும் ஜனகன் தனது உத்கர்ஷத்தைத் தோற்றுவித்துக் கொண்டு தாரைவார்த்துக்கொடுக்கிறான். (இயம்)இவள், வீர்யத்தைப் பந்தயமாக வுடையவள். வீர்யமென்னும் விலையைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளத் தக்கவள். சிவ தநுஸ்ஸை முரித்து இவளை ஜயித்துவிட்டோமென்று அலக்ஷ்யமாக நினைக்கவேண்டாமென்க. (இயம்) உனக்குக் கௌரவிக்கத் தக்கவள். (ஸீதா) கலப்பை வழியில் பிறந்தவளாகையால் உன்னையும் மற்றுமுள்ள ஜந்துஜாலங்களையும் பரித்துக்கொண்டிருக்கிற பூமிதேவிக்குப் பெண்ணாகப் பிறந்தவள் என்றறிக. நீ இவளைப் பஹுமானிக்கவேண்டும். பார்யையாகப் பரிக்ரஹித்தாயானால் விசேஷித்து வெகுமானிக்கத் தக்கவளென்பது சொல்லவேண்டுமோ? (ஸீதா) இவள் அயோநிஜை. நீ கௌஸல்யைக்குப் பிறந்தவனாகையால் பிறப்பில் உனக்கும் இவளுக்கும் ஏற்றத் தாழ்வுகள் அதிகமாயிருக்கின்றன. இதைப்பற்றும் நீ இவளிடத்தில் மிகுந்த கௌரவத்துடன் இருக்கவேண்டும். (மமஸுதா) என் புதல்வி. ராஜராஜாவாகிய என்னால் வளர்க்கப்பெற்றவள் ஆகையால் என்னிடத்தில் உனக்கு உண்டான கௌரவத்தை நீ இவ

ளிடத்திலும் நடத்தவேண்டும். (மமஸுதா) இவள் ப்ரஹ்மநிஷ்டனும் தபஸ்வியுமாகிய என் பெண். இவளிடத்தில் கௌரவத்துடன் நடவாமற் போனுயானுல், எனக்குக் கோபம் உண்டாகும். அதனுல், உனக்குக் கெடுதி நேரிடும். (ஸஹ யர்மசரீ தவ) இவள் உனக்குக் கேவலம் பார்யையன்று; தர்மபத்னி. இவளை ப்ரதானபத்நியாகக் கொள்ளவேண்டும். (ஒஜீரங்தே) நான் சொன்னபடி நடத்துவாயானுல் உனக்குச் சுபமுண்டாகும்.

இன்னும் ஜனகன் வினயாநுஸந்தானத்துடன் தனது புதல்வியைத் தானம் செய்கிருன்—(இயம்) இவள். நீ சிவதநுஸ்ஸை அவலீலையாக முரித்த மஹாபராக்ரமநிதி. இவள் உனது பராக்ரமத்திற்கு ஈடாகாதவளும் தயைசெய்து கைப்பற்ற வேண்டியவளுமாயிருப்பவள். (ஸீதா) கலப்பையின் வழியிற்பிறந்தவள். தாயில்லாத பிள்ளையை உலகத்தில் மேன்மையாக ப்ரீதியுடன் பாராட்டுவார்களல்லவா? ஆகையால், நீயும் இவளிடத்தில் மிகுந்த ப்ரேமையுடன் நடக்க வேண்டும். (மமஸுதா) என்பெண். நான் ப்ரஹ்ம நிஷ்டனுகையால் என்னுல் வளர்த்தலாலுண்டான ஸௌக்யம் இவளுக்கு அவ்வளவாக நேரிட்டதில்லை. நான் ப்ரஹ்மநிஷ்டையிலேயே யிருப்பதனுல், நீ உபேக்ஷித்தாயானுலும் எனக்கு விசாரிக்க நேராது. ஆனது பற்றி இவளிடத்தில் மிகவும் ப்ரீதியோடிருப்பாயென்று இப்பொழுதே சொல்லுகிறேன். (ஸஹயர்மசரீ தவ) உனக்குத் தர்மபத்னி. இவளைத் தர்மபத்னியாகப் பரிக்ஹிக்தாற் போதும் கர்மாநுஷ்டானத்திலேயே மனஞ்சென்ற எங்களுக்கு அவ்வளவுதான் வேண்டியது. (ப்ரதீச்ச சை நாம்)மணப்பிள்ளைகள் கௌரவமுள்ள கன்னிகைகளை அவர்கள் தாய்தந்தைகளை ப்ரார்த்தித்துத் தாமே அங்கீகரிக்க த்வரைப் படுவார்கள். இப்படிப்பட்ட கன்னிகையைத் தாய்தந்தைகளே ப்ரார்த்தித்து மணப்பிள்ளைக்குக் கொடுக்கவேண்டி யிருக்கின்றது. ஆகையால் நான் கொடுக்கிறேன்; பரிக்ரஹிப்பாயாக. (ஒஜீரங்தே) என்னிடத்தில் ப்ரீதி வைப்பதனுல் உனக்கு இவ்வகைச் சுபங்களெல்லா முண்டாகும்.

இன்னும் இதற்குத் தனி ஶ்லோகிவருமாறு :— இயம்) ஸௌந்தர்யாதிகுணங்களில் நானே மேம்பட்டவனென்று இறுமாந்திராமல் உன்னைப்போன்ற ஸௌந்தர்யாதி குணங்களையுடைய இந்த சீதையைப் பார்! (சீதா) யாகபூமியில் கலப்பையினடியிற் பிறந்தவள்.

பொன் விளைவது பூமியிலல்லவா? பொற்கொடி போன்றவளாகை யால் பூமியிற் பிறந்தனள். இதனால், அயோநிஜை என்பது தோற்று கின்றது. (மமஸுதா) ஜனக வம்சத்திற் பிறந்தமையால் ஆபிஜாத் யத்தைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. (ஸஹ தர்மசரீ தவ) நீ அநுஷ்டிக்கும் தர்மங்களைத் தானும் செய்பவள். (ப்ரதீச்ச) அத்யாத ரத்துடன் அங்கீகரிப்பாயாக. (பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா) ப்ரணயாபராதத்தில் கையினாற் காலைப் பிடிக்கலாகும்; இப்பொழுது பாணிக்ரஹணம் செய்வாயாக. அல்லது—நீ சிவதநுர்ப்பங்கம் செய் வதற்குரிய முரட்டுக்கையன். சீதையின் ஹஸ்தங்கள் மிகவும் மிரு துவானவை. ஆகையால் மெதுவாய்ப் பிடிக்கவேண்டுமென்க. (ஹஸ் தேந) ஒருவர்க்கொருவர் கையைப் பிடித்துக்கொண்டிருக்கிற வதூ வரர்களைப் பார்த்து அச்சேர்த்தியின் அழகுக்கு மங்களாசாஸனம் பண்ணுகிறான்.

இன்னும் இதற்கு (இயம்) இவள். உன்னை விடாமலிருக்கும் பொழுது மாத்ரம் தான் நிலைபெற்றிக்கும்படியான தன்மையுடைய வள்; உன்னை விட்டபொழுதோ தான் இருந்தும் இல்லாதவள் போல வே யிருப்பாள். ('ஆர்த்தார்த்தே முதிதே ஹ்ருஷ்டா ப்ரோஷிதே மலிநா க்ருசா,ம்ருதே ம்ரியே தயா நாரீ ஸாஸ்த்ரீ ஜ்ஞேயா பதிவ்ர தா') பர்த்தா துக்கிக்கும்பொழுது துக்கிப்பவளும், ஸந்தோஷிக்கும் பொழுது ஸந்தோஷிப்பவளும், தேசாந்த்ரம் போயிருக்கும்பொழுது சரீர ஸம்ஸ்கார மொன்று மின்றி இளைத்திருப்பவளும், மரணத்தை அடையும் பொழுது அநு மரணம் செய்பவளுமாகிய ஸ்த்ரீயே பதி வ்ரதையாவாள் என்கிறபடி, ஸாதாரணமாகப் பதிவ்ரதையான ஸ்த்ரீ, தான் பர்த்தாவை விட்டுப் பிரியும்பொழுது கொஞ்சமும் களை யில்லாமலிருப்பாள். பதிவ்ரதைகளிற் சிறந்தவளும் அத்யந்த வில க்ஷணையுமாகிய என் பெண் உன்னைவிட்டுப் பிரியும்பொழுது அங்ஙனம் இருப்பாள் என்பதைச் சொல்லவேண்டுமோ? (இயம்) இவள் உனக்கு ஆத்மாவும் சரீரமும் சாயையுமாயிருப்பவள். ஆகையால், இவள் தோ ஷமற்றவள். ஒருகால் தோஷம் உண்டாயிருப்பினும், அஃது உன்னு டையதுதான். ஒருவனுக்குத் தன் ஆத்மாவின் தோஷமும் தன் சரீர தோஷமும் தன் சாயையின் தோஷமும் தன்னுடையதேயல்லவா? ஆகையால், நீ எப்படியோ, அப்படியே இவளும் தோஷமற்றிருப்பவள். (ஸீதா) கலப்பையினடியிற் பிறந்தவள். 'மாதரமங்கநா:' ஸ்த்ரீகள்

திருப்பாள்' என்று உரைத்து ராமன் ஹஸ்தத்தில் மந்தி ரத்தினல் பரிசுத்தமாகிய ஜலத்தைச் சேர்த்தான். அப்பொழுது 'மேல்மேல்' என்று தேவதைகளும் ரிஷிகளும் கொண்டாடினர்கள். அந்தச் சமயத்தில் தேவதுந்துபி வாத்யங்கள் முழங்கின. ஆகாயத்தினின்று புஷ்பவர்ஷம் உண்டாயிற்று. இவ்வாறு ஜனகமஹாராஜன் மந்த்ர பூர்வகமாக ஸீதையைத் தாரைவார்த்துக் கொடுத்து, மிகுந்த ஸந்தோஷம் அடைந்து லக்ஷ்மணனைப் பார்த்து [1] 'லக்ஷ்மணு! இப்படி வருவாயாக. உனக்கு மங்களம் உண்டாகவேண்டும். நான் ஊர்மிளையை உனக்கு விவாஹஞ் செய்து கொடுப்பதாக நிச்சயித்துவிட்டேன். நீ இவளைக் கொள்ளவேண்டும். காலவிளம்பமின்றி நீ இவளைப் பாணிக்ரஹணஞ் செய்வாயாக' என்றுன்.

இங்ஙனம் அம்மன்னவன் லக்ஷ்மணனுக்குச் சொல்லிப் பரதனைப்பார்த்து 'ரகுகுலத்தைக் களிக்கச்செய்பவ

குணங்களில் தாயைப் போன்றிருப்பார்கள். என்கிறபடி, பூமிதேவி பெண்ணுகையால் பூமியைப்போலவே பொறுமை முதலிய குணங்கள் நிறைந்திருப்பவள். (ஏநாம்)அநேக வ்ரதநியமங்களால் எனக்குப் பிறந்தவள். (ஹஜீரந்தே) நான் பல விரதநியமங்களைச் செய்து இப்பெண் பிள்ளையைப் பெற்றேன். பலன் அநுபவிப்பவன்நீ. போக்யவஸ்துவின் குண ஸம்ருத்தியானது போக்தாவின் அநுபவத்தின் பொருட்டாகின்றது. (பாணிம் ஞ்ருஹணீஷ்வ பாணிநா) ஸீதை அறியாதவள்; தன் கையை நீட்டி உன் கையைப் பிடிக்க அறியாள்; ஆகையால், நீயே பிடித்துக்கொள்வாய் என்று பொருள்.

1. பரதன் பெரியவனுயிருக்கச் சிறியவனுகிய லக்ஷ்மணனுக்கு முன்பு விவாஹஞ் செய்வது தோஷமென்று நினைக்கலாகாது. 'பிதரவ்யபுத்ரே ஸாபத்நே பாநாரீ ஸுதேஷுவா, விவாஹதாநயஜ்ஞாதௌ பரிவேஷோ நவிதீயதே' என்று பெரியவனுக்கு முன்பு விவாஹஞ் செய்ய வேண்டுமென்கிற விதி ஸஹோதரர்களுக்கேயன்றி ஸகளத்ரங்களின் வயிற்றிற் பிறந்தவர்களுக்கு இல்லை.

னே! பரதா! உன் கையினல் மாண்டவியினது கையைப் பிடிப்பாயாக' என்று தர்மாத்மனுகிய ஜனகமஹாராஜன் பின்பு சத்ருக்நனைப் பார்த்துப் 'பருத்த புஜங்களையுடைய சத்ருக்நனே! உனது கையினல் ஶ்ருதகீர்த்தியின் கையைப் பிடித்துக் கொள். நீங்கள் யாவரும் அழகுபொருந்தியவர்கள். நல்ல நடவடிக்கையுள்ளவர்கள். இப்படிப்பட்ட உங்களுக்கே எங்கள் புத்ரிகள் பத்னிகளாகத்தக்கவர்கள். ஆகையால், காகுத்ஸ்தவம்சத்திற் பிறந்த மஹாநுபாவர்களே! நீங்கள் எல்லோரும் [1] பத்னிகளுடன்கூடி எங்கள் கண்ணுக்கு ஸந்தோஷத்தை விளைக்கவேண்டும். காலவிளம்பஞ் செய்யவேண்டாம்' என்று சந்தோஷத்துடன் சொன்னுன். ராஜகுமாரர்கள் நால்வரும் ஜனகமஹாராஜன் மொழிந்த வார்த்தையைக் கேட்டு, வஸிஷ்டரிடம் அநுமதி பெற்றுக்கொண்டு ராஜபுத்ரிகள் நால்வருடைய ஹஸ்தங்களையும் பிடித்துக் கொண்டார்கள். பின்பு சிறப்புற்ற ராம லக்ஷ்மண பரத சத்ருக்னர்கள் தங்கள் பாரியைகளுடன்கூட [2] அக்னிக்கும் விவாஹ வேதிகைக்கும் ஜனக மஹாராஜாவுக்கும் மற்றும் அங்குள்ள

---

1. பத்னிகளுடன்கூடி என்பதனல் தாரை வார்த்தாயிற்றென்பது தோற்றுகின்றது. ஜனகன் மூத்தவளுகையால் மாண்டவி ஶ்ருதிகீர்த்திகளைப்பற்றி அநுஜ்ஞையை மாத்திரம் செய்தான். அவர்களைத் தாரைவார்த்துக் கொடுத்தவன் குஶத்வஜன் என்பது பொருள்.

2. முதலாக வஸிஷ்ட முனிவர் ஹோமஞ்செய்தது ராமாதிகளின் நன்மைக்காகவென்று தெரிகின்றது. பின்பு அக்னியை ப்ரதிஷ்டை செய்து விவாஹஹோமம் ராமாதிகள்செய்தார்கள். பாணிக்ரஹணமானபின்பு அவ்வக்னிக்கும் ப்ராஹ்மணர்களுக்கும் கன்யாதானஞ் செய்த ஜனகனுக்கும் ராமாதிகள் பிரதக்ஷிணஞ்செய்து பின்பு ஸ்வகல்பாநுஸாரமாக ஒவ்வொவரும் வேறு வேறாக அக்னியை ப்ரதிஷ்டை செய்து விவாஹ ஹோமஞ் செய்தார்கள். பின்பு லாஜஹோமம் நடத்தித் தங்கள் அக்னிகளுக்கு முறை ப்ரதக்ஷிணஞ் செய்தார்கள் என்று கண்டுகொள்ள வேண்டும்.

ரிஷிகளுக்கும் ப்ரதக்ஷிணஞ் செய்து சாஸ்த்ரங்களையும் கல்ப ஸூத்ரங்களையும் அநுஸரித்து விவாஹத்தை நடத்திக் கொண்டார்கள். காகுஸ்தகுல திலர்களாகிய ராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்கள் தங்கள் பத்னிகளாகிய அந்தப் பெண்மணிகளின் அழகிய ஹஸ்தங்களைப் பிடித்துக்கொள்ளும்பொழுது ஸுவாசனையோடுகூடிய புஷ்ப வர்ஷமானது ஆகாயத்தினின்றும் உண்டாயிற்று. தேவதைகள் துந்துபி வாத்யங்களைக் கணகணவென்று முழக்கினார்கள். அப்ஸரமடந்தையர்கள் கூட்டம்கூட்டமாக வாத்யங்களை வாசித்து வாயினாற் பாடி யாடினார்கள். கந்தர்வர்கள் மதுரமாகக் கானஞ் செய்தார்கள். ரகுகுல திலகர்களாகிய ராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்களின் விவாஹ மஹோத்ஸவத்தில் அதுமிகவும்அற்புதமாயிருந்தது. மங்களவாத்ய கோஷங்கள் நாற்புறமும் முழங்கிக் கொண்டிருக்க, மிகுந்த தேஜஸ்ஸுடன் விளங்குகின்ற ராம லக்ஷ்மண பரத சத்ருக்னர்கள் நால்வரும்அக்னியை மூன்று ப்ரதக்ஷிணஞ் செய்து ஜநகன் பெண்கள் நால்வரையும் விவாஹஞ் செய்து கொண்டு தங்கள் பத்னிகளோடு விடுதி கிருகத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். தசரத சக்ரவர்த்தி பாரியைகளுடன் விளங்குகின்ற புதல்வர்களைக் கண்ணாரக் கண்டு ரிஷிக்கூட்டங்களும் பந்துக்களும் பின்பற்றிவர விடுதிக்குச் சென்றான்.

எழுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரசுராமதர்சனம்.

அன்றிரவு கழிந்து மறுநாள் உதயகாலத்தில் விஸ்வாமித்ரமுனிவர், தசரத மஹாராஜனையும் ஜனக மஹீபாலனையுங் கண்டு விடைபெற்றுக்கொண்டு, ராமலக்ஷ

மண பரத-சத்ருக்னர்களையும், ஸீதை ஊர்மிளை மாண்டவி ஶ்ருத கீர்த்திகளையும் ஆசீர்வதித்துத் தான் வஸித்திருந்த ஹிமவத் பர்வதத்திற்குப் போய்ச் சேர்ந்தார். விஶ்வாமித்ரர் போன பின்பு, தசரதமன்னவன் மிதிலாதிபதியாகிய ஜனகமன்னவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன் பட்டணத்திற்குப் போகப் புறப்பட்டான். தசரதமன்னவன் புறப்பட்டுப் போகையில் ஜனகமஹீபாலன் வழிவிடுவதற்காகக் கொஞ்சம் தூரம்வரையில் பின்றொடர்ந்து சென்றான். பின்பு அவ்விதேஹராஜன் தன் பெண்களுக்கு ஸ்ரீதனமாக அநேக லக்ஷம் பசுக்களையும், லக்ஷக்கணக்குள்ள மேலான கம்பளங்களையும், மிகவும் உயர்ந்த பட்டு வஸ்த்ரங்களையும், நன்றாக அலங்காரஞ் செய்யப்பெற்றுத் திவ்யமான உருவங்களையுடைய யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும், காலாட்களையும், உயர்ந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகியவான தாதிகளையும், அத்தன்மையான வேலைக்காரர்களையும் அவர்களுக்குத் தந்தான். பின்னும் அம்மஹீபதி உள்ளம்குளிர்ந்து எல்லையில்லாத வெள்ளி பொன் முத்து பவளம் முதலிய ரத்னங்களையும் தன் பெண்களுக்கு ஸ்ரீதனமாகக் கொடுத்தான். இப்படித் தன் பெண்களுக்கு அபாரமான தனங்களைக்கொடுத்துத் தசரத மஹாராஜாவினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அம்மிதிலாதிபதியாகிய ஜனக மஹாராஜன் தன் இருப்பிடம் வந்துசேர்ந்தான்.

தசரத மன்னவன் சதுரங்க பலங்களும் மற்றுமுள்ள பரிஜனங்களும் சூழப் பிள்ளைகளுடன் கூடி ரிஷிகளை முன்னிட்டுக்கொண்டு தன் பட்டணத்திற்குப் போனான். போய்க்கொண்டிருக்கையில், நடுவழியில் அவனுக்கு எதிரில் பறவைகள் அசுபத்தைத் தோற்றுவித்துக்கொண்டு ஆங்காங்குப் பயங்கரமாகப் பறந்துகூச்சலிட்டன. ஆனல்

மிருகங்கள் மாத்திரம் அவனுக்கு ப்ரதக்ஷிணமாகச் சென்று சுபத்தைத் தோற்றுவித்தன. அபசகுனங்களைக் கண்ட தசரதன் வஸிஷ்டமுனிவரைப் பார்த்து 'ஸ்வாமீ! க்ரூரமான பக்ஷிகள் பலவும் பயங்கரமாய்க் கூவுகின்றன. மிருகங்கள் மட்டும் ப்ரதக்ஷிணமாய்ச் செல்கின்றன. அசுபசகுனங்களும் சுப சகுனங்களும் காணப்படுகின்றன. இதன் காரணம் இன்னதென்று தெரியாமல் என் மனம் நடுங்குகின்றது. இது சுபமோ, அசுபமோ என்று நிச்சயிக்கப் போகாமல் என்மனம் தத்தளிக்கின்றது. இதை எனக்குத் தெரியச்சொல்லவேண்டும்' என்று கேட்டான். வஸிஷ்டர் தசரதன் சொன்னவற்றைக்கேட்டு 'மன்னவனே! இதன் பலத்தைச் சொல்லுகிறேன் கேள்! ஆகாயத்திற் பறவைகள் கூவுகின்றபடியினால், ஸமீபத்தில் நமக்கு ஒரு பயம் உண்டாகுமென்று ஏற்படுகின்றது. பூமியில் ம்ருகங்கள் நம்மை வலம் வந்து செல்வதனால், அந்தப் பயம் தானே நீங்கிவிடுமென்று தோற்றுகின்றது. ஆகையால், மனஸ்தாபத்தை விடுவாயாக' என்று சொல்லித் தோற்றினர்.

அவர்கள் இங்ஙனம் சொல்லிக்கொண்டிருக்கையில், பூமி முழுவதும் கிடுகிடுவென்று நடுங்கும்படியும் அழகிய மரங்கள்யாவும் அப்படியே பெயர்ந்து விழும்படியும் ஒரு பெருங்காற்று வீசிற்று. சூரியனை இருள் மூடிக்கொண்டது. திக்குகள் ஒளியற்றவைகளாயின. தசரதனுடைய படைகள் புழுதியால் மூடப்பட்டு ஒன்றுந் தோன்றாமல் நின்றுவிட்டன. அப்பொழுது அவ்விடத்தில் வஸிஷ்டரும் மற்றுமுள்ள மஹர்ஷிகளும் தசரத மஹாராஜனும் அவன் புத்திரர்களாகிய ராம லக்ஷ்மண பரத சத்ருக்னர்களும் மாத்திரம்தான் ப்ரஜ்ஞையுடன இருந்தார்கள். இவர்களையொழிந்த அனை

வரும் ப்ரஜ்ஞை யற்றிருந்தார்கள். பயங்கரமாகிய அவ் விருட்டில் தசரதன் ஸைன்யமானது புழுதியால் மூடப் பட்டது போலாய்விட்டது. அப்பொழுது அந்தச் சைன் யம் அதிபயங்கரனாகி ஜடைகளைத் தரித்து வருகின்ற பர சுராமனைக் கண்டது.

அவன் ப்ருகு வம்சத்திற் பிறந்தவன். ஜமதக்னியின் குமாரன். மஹாராஜர்களை யெல்லாம் கொன்று தொலைத் தவன். கைலாஸ பர்வதம்போல அசைக்கக் கூடாதவன். பிரளய காலாக்னிபோல யாவராலும் பொறுக்க முடியா தவன்; மிகுந்த காந்தியுடன் அக்னி ஜ்வாலைபோல விளங்குகின்றபடியால் ஸாதாரண ஜனங்களுக்குக் கண் கொண்டு பார்க்க முடியாதிருப்பவன். அம்மஹாதீரன் தன் தோளின்மீது கோடரியைத் தாங்கி மின்னற் கூட் டம் போன்ற தனது தேஜஸ்ஸினால் விளங்குகின்ற வில்லை யும் மிகவும் சிறந்த பாணத்தையும் கைகளிற் பிடித்து த்ரிபுர தஹனஞ்செய்த சிவபெருமான் என்னும்படி புலப் பட்டான்.

ஜபத்தையும் ஹோமங்களையும் இடைவிடாமற் செய்துகொண்டிருக்கின்ற மஹாநுப்வராகிய வஸிஷ்டர் முதலிய அந்தணர்கள் அனைவரும் அதிபயங்கரனாய் அக்நிபோல ஜ்வலிக்கின்ற அந்தப் பரசுராமனைக் கண்டு 'இப்பரசுராமன், தன் தகப்பனை ஒரு க்ஷத்ரியன் கொன்று னென்று க்ஷத்ரிய ஜாதியின்மேல் கோபம் கொண்டு எல்லா அரசர்களையும் ஒருமிக்கக் கொன்முன். இவன் இப்பொழுதாவது க்ஷத்ரியர்களை வதஞ் செய்யாமல் இருக்கவேண்டும். க்ஷத்ரியர்களை வதஞ்செய்து கோபமும் மனக்கவலையும் தீரப் பெற்றவனாகையால், மறுபடியும் க்ஷத்ரியவதஞ்செய்யவேண்டுமென்கிறகருத்து இவனுக்கு இப்பொழுது இராது' என்று தங்களுக்குள் சொல்

லிக்கொண்டார்கள். ரிஷிகள் இவ்வாறு சொல்லி அர்க்கியத்தையெடுத்துக்கொண்டு அதிபயங்கரமான ரூபத்தையுடைய அந்தப் பரசுராமனை நோக்கி 'ராமா! ராமா!' என்று இனிய மொழிகளால் அழைத்துப் பூஜை செய்தார்கள். மஹா பராக்ரமமுடையவனாகிய ஜமதக்னி குமாரனான அந்தப் பரசுராமன் ரிஷிகள் செய்த அந்தப் பூஜையைப் பெற்றுக்கொண்டு தசரத சக்ரவர்த்தியின் புதல்வனான ராமனைப் பார்த்து இங்ஙனம் சொல்லத் தொடங்கினான்.

எழுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

பரசுராமன் ராமனைத் திக்காரஞ் செய்தல்

'ராமா! தசரத குமாரனே! உன் பராக்ரமம் அற்புதமாயிருக்கின்றதென்று உலகத்தில் எங்கும் கேள்விப் படுகிறேன். சிவபெருமான் வில்லை முரித்தது, தாடகாஸம்ஹாரஞ்செய்து முதலிய உன் வியாபாரங்கள் எல்லாவற்றையுங் கேட்டேன். சிவபெருமான் வில் எங்கே? நீ யெங்கே? அப்படிப்பட்ட வில்லை நீ முரித்தது மிகவும் அற்புதமா யிருக்கின்றது. மேலும், அஃது இப்படி அப்படியென்று நினைக்கவுங்கூட முடியாத பெரியவில். அதைக் கேட்டு, நான் மேலான மற்றொரு வில்லைக் கொண்டுவந்திருக்கிறேன். அதிபயங்கரமாகிய அந்தப் பெரியவில் இது தான். இதை என் தகப்பனாகிய ஜமதக்னி முனிவர் எனக்குத் தந்தார். இதில் பாணத்தைத் தொடுத்து உன் பலத்தைக் காட்டுவாயாக. இவ்வில்லை எடுத்து வளைத்து நாணேற்றுவாயானால், உனது வீரியத்தை நான் பிரத்யக்ஷமாக அறிந்து கொள்வேன். ராகவா! அப்பொழுது உனது பராக்ரமம் புகழத்தக்கதாகும். அப்

படிப்பட்ட பராக்ரமத்தையுடைய உனக்கு நான் த்வந்த்வ
யுத்தமும் கொடுக்கிறேன்' என்று சொன்னான்.

இங்ஙனம் அந்தப் பரசுராமன் மொழிந்த மொழிக
ளைக் கேட்டுத் தசரதமன்னவன் துயரமுற்று முகம் வாடி
மனக்களிப்பின்றிக் கைகளைக் கூப்பிக்கொண்டு பரசு
ராமனைப் பார்த்துத்தாங்கள் க்ஷத்ரியர்களின்மீது முன்பு
உண்டாயிருந்த கோபத்தைவிட்டு மிகவும் மனத்தெளிவு
பெற்றிருக்கிறீர்கள். மேலும் ப்ராஹ்மணன். பிராமணர்
களுக்குச் சாந்தி ஸ்வரூபமல்லவா! அதனிலும் தாங்
கள் பெருங்கீர்த்தி பெற்றவர். ஆகையால் ஸஹஜமா
கிய சாந்தியைக் கைவிட்டுக் கீர்த்தியைக் கெடுத்துக்
கொள்வது நல்லதன்று. தாங்கள் எல்லாவற்றிலும்
நன்றாகத் தேர்ந்திருப்பவர். என் பிள்ளைகள் பாலர்
கள். ஆகையால், வீரர்களிடத்தில் ரோஷத்தைப்
பாராட்டிப் பாலர்களாகிய என் புதல்வர்களுக்கு அப
யங் கொடுக்கவேண்டும். தாங்கள் வேதாத்யயனம்
முதலான விரதங்களை எப்பொழுதும் அநுஷ்டித்துக்
கொண்டிருக்கின்ற பார்க்கவ வம்சத்திற் பிறந்தவர்.
இந்திரனிடம் பிரதிஜ்ஞை செய்து ஆயுதத்தைத் தொ
டாமல் இருக்கிறீர்கள். மேலும், தாங்கள் தர்மத்தில்
மனஞ் சென்று காஸ்யபருக்கு இந்தப் பூமியைத் தானஞ்
செய்து, வனத்திற்குச் சென்று மஹேந்த்ரபர்வதத்தில்
வாஸஞ் செய்து வருகிறீர்கள். அப்படிப்பட்ட தாங்
கள்மறுபடியும் இங்குத் திரும்பி வந்ததற்குக் காரண
மென்ன? தங்கள் வருகை எங்கள் அனைவரையும் நாசஞ்
செய்வதற்காகவே ஏற்பட்டுள்ள தென்று தெரிகின்றது.
'நான் உங்களை நாசஞ்செய்யப் போவதில்லை; ஆனால்,
ராமன் ஒருவனை மாத்திரம் நாசஞ் செய்கிறேன்' என்று
உரைக்க வேண்டாம். ராமன் ஒருவனைக் கொன்றுவிட்

டால் நாங்கள் அனைவரும் பிழைத்திருக்கமாட்டோம்' என்று சொன்னான்.

இவ்வாறு தசரதமன்னவன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே ஜமதக்னி குமாரனாகிய பரசுராமன் மஹா பராக்ரமசாலியாகையால் அந்த வார்த்தையைக் கொஞ்சமும் லக்ஷயஞ் செய்யாமல் ராமனிருக்கும் திசையில் முகத்தை மாற்றிக்கொண்டு "ராமா! உலகத்தில் மிகவும் சிறப்புற்ற விற்கள் இரண்டு. அவ்விரண்டும் தேவலோகத்தில் உண்டானவை; உலகத்தில் ப்ரஸித்திபெற்றவை; மிகவும் உறுதியானவை; சிறந்த ஸாரமுள்ளவை; அனைத்திலும் முக்கியமாயிருப்பவை. அவைகள் விஶ்வகர்மாவினால் மிகுந்த ப்ரயத்தனத்துடன் நிருமிக்கப்பட்டன. அவ்விரண்டு விற்களில் ஒன்றை த்ரிபுராஸுரர்களுடன் யுத்தஞ்செய்யவிரும்பின சிவனுக்குத் தேவர்கள் கொடுத்தார்கள். அஃது அப்பொழுது த்ரிபுராஸுரர்களைக் கொன்றது. அழகுள்ளவனே! அந்த வில்லைத்தான் நீ முரித்தனை; என் கையில் இருக்கின்ற இவ்வில் இரண்டாவது. இதைத் தேவர்கள் ஸ்ரீ மகாவிஷ்ணுவுக்குக் கொடுத்தார்கள். ராமா! மிகவும் ப்ரகாசிக்கின்ற இவ்வில் ஸ்ரீமகா விஷ்ணுவுக்குச் சொந்தமானது. இதுவும் சிவன் வில்லோடொத்த வலிமையைக் கொண்டது. சிவன்வில் சிதிலமாயிருந்ததுபற்றி அதை நீ எளிதில் முரித்துவிட்டாய். இல்லையானால், நீ அதை முரித்திருக்க முடியாது. அது சிதிலமானதற்குக் காரணஞ் சொல்லுகிறேன் கேள்."

சிவன் த்ரிபுரங்களைத் தஹித்தபின்பு, தேவர்கள் [1] சிவனுடையவும் விஷ்ணுவினுடையவும் பலாபலங்களை

---

1. தேவதைகள் ப்ரஹ்மாவைப் பார்த்து 'முன்பு வராஹாதி ரூபங்களால் பூமியை யெடுக்கை முதலியகாரியங்களை ஸ்ரீ மகாவிஷ்ணு

அறிய விரும்பி, அனைவரும் ப்ரஹ்மதேவனைப் பார்த்துச் 'சிவ கேசவர்களில் மிகுந்த பலமுடையவன் யாவன்?' என்று வினவினார்கள். ப்ரஹ்மதேவன் ஸத்யவான்களில் தலைவனாகையால், சிவகேசவர்களின் ஏற்றக் குறைவுகளைக் குறித்து அவன் சொன்ன வார்த்தைகளைத் தேவர்கள் ஸத்யமாகவே நம்புவார்களானாலும் கண் குளிரக் கண்டாலல்லாமல் அவர்கள் மனத்திற்கு ஸமாதானமாக மாட்டாதென்று நினைத்து அத்தேவன் சிவகேசவர்களுக்கு [1]விரோதத்தை உண்டாக்கினான். அதனால், சிவனும் விஷ்ணுவும் ஒருவர்க்கொருவர் ஜயிக்க முயன்று லோகங்களெல்லாம் மயிர்க்கூச்சலடையும்படி அதிபயங்கரமாக யுத்தஞ்செய்தார்கள். அப்பொழுது யுத்தத்தின் நடுவில் விஷ்ணு ஹூங்காரஞ்செய்ததனால் பயங்கரமான சக்தியுடையதாயினும் சிவனுடைய வில்லானது அடிபட்டுச் சிதிலமாய்ப்போயிற்று. அந்த ஹூங்காரத்தில் சிவபெரு

செய்ததுபற்றி அவ்விஷ்ணுவை அதிகனென்று நீ புகழ்ந்துரைத்ததை நாங்கள் கேட்டிருக்கிறோம். இப்பொழுது சிவன் விஷ்ணுவைக் கேவலம் ஒரு ஸாதனமாகச் செய்துகொண்டு தானே முக்கியனாகித் த்ரிபுரங்களையுங் கொளுத்தினதைக் கண்டால், சிவனே அதிகனென்று எங்களுக்குத்தோற்றுகின்றது. ஆகையால், இவ்விருவரிலும் மேலானவன் யாவன் என்று வினவினார்கள் என்பது பொருள்.

1. ப்ரஹ்மதேவன் விஷ்ணுவைப் பார்த்து 'த்ரிபுர ஜயத்தில் சிவன் தானே வில்லாளியாயிருந்தபடியால் அந்த ஜயத்தில் தானே முக்கியனென்றும், தாங்கள் ஸாதனமாக மாத்திர மிருந்தபடியினால் அமுக்கியனென்றும் எனக்குச் சொன்னார்' என்றுரைத்து அவருக்குச் சிவனிடத்தில் விரோதத்தையும், சிவனைப் பார்த்து 'விஷ்ணு, தங்கள் பாணத்தின் நுனியில் தானிருந்தது பற்றித் தானே த்ரிபுரங்களை ஜயித்தேனென்று என்னுடன் சொன்னார்' என்று மொழிந்து அச்சிவனுக்கு விஷ்ணுவினிடத்தில் விரோதத்தையும் விளைத்தானென்றுணர்க.

மான் கைகாலாடாமல் நின்றுவிட்டார். அப்பொழுது தேவர்களும் ரிஷிகளும் சாரணர்களும் வந்து 'இனி யுத்தம் வேண்டாம்' என்று ப்ரார்த்தித்துக் கொண்டார்கள். தேவர்களிற்சிறந்த அவ்விருவரும் அதனால் ஓய்ந்து போனார்கள். அப்பொழுது தேவர்கள் விஷ்ணுவின் பராக்ரமத்தினால் சிவன் வில் சிதிலமானது கண்டு 'விஷ்ணுவே பலத்தில் உயர்ந்தவன்.' என்று நினைத்தார்கள்."

மஹா யஶஸ்வியாகிய சிவபெருமான் இங்ஙனம் தன் வில் முரிந்து தனக்குக் குறைவு நேரிட்டதுபற்றிக் கோபாவேசங்கொண்டு அவ்வில்லைப் பாணத்துடன்கூட விதேஹதேசத்தையாளும் [1]தேவராதனென்னும் ராஜர்ஷிக்குக் கொடுத்தார். ராமா! சத்ருக்களின் பட்டணங்களை வெல்ல வல்லதும் விஷ்ணுவினுடையதுமாகிய என் கையிலிருக்கின்ற இந்த உத்தம தநுஸ்ஸை அவ்விஷ்ணுதேவன் பார்க்கவராகிய ரிசீகருக்கு 'நீ இதை வைத்துக் கொண்டிரு' என்று கொடுத்தார். மஹா தேஜஸ்வியாகிய அந்த ரிசீகர் நினைத்த காரியங்கள் எல்லாவற்றையும் தடையின்றி நிறைவேற்ற வல்லவரும் தனது குமாரரும் எனக்குத் தந்தையுமாகிய ஜமதக்னிக்கு அந்தத் திவ்ய தநுஸ்ஸைத் தந்தார். என் தகப்பனாராகிய ஜமதக்னி ஆயுதமெடுப்பதை விட்டுத் தொலைத்துத் தவம் செய்துகொண்டிருந்தார். பின்பு கார்த்தவீர்யார்ஜுனன் தாமஸ புத்தியினால் அவரைக் கொன்றுவிட்டான்.

---

1. தக்ஷயஜ்ஞத்தின் முடிவில் சிவன் தநுஸ்ஸைத் தேவர்களுக்குக் கொடுத்தானென்று முன்பு சொல்லப்பட்டது. சிவன் வில்லைத் தேவராதனிடம் கொடுத்தானென்று இவ்விடத்திற் சொல்லப்பட்டது. விஶ்வாமித்ராஶ்ரமத்தில் ரிஷிகள் 'தேவதைகள் ஜனகனுக்கு யாகத்திற் கொடுத்தார்கள் என்று மொழிந்தார்கள். சீதை அநஸூயையுடன் வருணன் அந்த வில்லை ஜனகனுக்குக் கொடுத்தானென்று சொல்லியிருக்கிறாள். இவையெல்லாம் ஒன்றோடொன்று விருத்தமா

நான் அதைக்கேட்டு கடுங்கோபங்கொண்டு க்ஷத்ரிய ஜாதியைக் கொல்லத் தொடங்கிஅநேகம் தடவை உலகத்திற் பிறக்கும் க்ஷத்ரியர்களையெல்லாம் அப்பொழுதைக் கப்பொழுதே வதஞ்செய்து, அவர்கள் பூமியைக் கைப்பற்றிக்கொண்டு, யாகஞ் செய்து யாகத்தின் முடிவில் நற்செய்கையுள்ளவரும், மஹாநுபாவருமாகிய காஸ்யபருக்குத் தக்ஷிணையாக அப்பூமியைக் கொடுத்துவிட்டு, மஹேந்த்ரபர்வதத்தில் இப்பொழுது வாஸஞ் செய்துவருகிறேன். மிகுந்த பலமுடைய நீ உன் மேலான பராக்ரமத்தினால் சிவதநுஸ்ஸை முரித்த ஸங்கதியைக் கேள்விப்பட்டேன். ஆனது பற்றியே இப்பொழுது வேகமாக

யிருக்கின்றன. இவற்றிற்கு ஒற்றுமை எப்படி யென்றால், தக்ஷயாகத்தின் முடிவில் சிவன் கோபத்தோடு அவ்வில்லைத் தேவர்களுக்குக் கொடுக்க முயலுகையில், அக்கோபத்தைக் கண்டு தேவதைகள் அவனருகிற் சென்று அவ்வில்லை வாங்கிக்கொள்ளப் பயந்து அதைத் தங்களுக்குப் பதிலாகத் தேவராதனிடம் கொடுக்கும்படி ப்ரார்த்தித்தார்கள். சிவன் அதைத் தேவராதனிடம் வைத்தான். ஆனது பற்றியே சிவன் அதைத் தேவர்களுக்குக் கொடுத்தானென்றும், தேவராதனுக்குக் கொடுத்தானென்றும் சொல்கின்ற இரண்டும் பொருந்துகின்றன. சிவன் தேவராதனிடம் வைத்தானென்பதனால் அவனுக்குத் தேவதைகள் சொந்தமாகக் கொடாமல் வைத்திருக்கச் சொல்லிக் கொடுத்தார்களென்று தெரிகிறது. பின்பு ஜனகன் யாகத்தினால் தேவதைகளைக் களிக்கச் செய்து தன்னிடம் வைத்திருக்கச் சொல்லிக் கொடுத்த வில்லைத் தனக்குச் சொந்தமாய் கொடுக்கும்படி ப்ரார்த்திக்கத் தேவர்களும் அதை அவனுக்குச் சொந்தமாய்க் கொடுத்துவிட்டார்கள். ஆகையால், தேவதைகள் அதை ஜனகனுக்குக் கொடுத்தார்களென்பது உப்பன்னமாகின்றது. மேலும் தேவர்கள் தேவராதனுக்குக் கொடுக்கும்பொழுது வருணனைக்கொண்டு கொடுத்தார்களாகையால் ஸீதை அநஸூயையுடன் 'வருணன் அதை ஜனகனுக்குக் கொடுத்தான்' என்று சொன்னதுஞ் சேருகின்றது. ஆகையால் ஒன்றுக்கும் விரோதமில்லை.

இங்கு வந்து சேர்ந்தேன். ராமா! தகப்பன் பாட்டன் வரிசையிலிருந்து க்ரமமாக எனக்கு வந்ததும், விஷ்ணு தேவன் வைத்துக்கொண்டிருந்ததும், பெருமை பொருந்தியதுமாகிய அவ்வில் இதோ இருக்கின்றது. நீ க்ஷத்ரியன். ப்ராஹ்மணனைப்போல என்னால் முடியாதென்று சொல்லாமல், க்ஷத்ரிய தர்மத்தை முன்னிட்டுச் சிவனது வில்லைப்போலச் சிதிலமாகா திருக்கின்றதும் வலிமையுடையதுமான இந்த மேலான வில்லை வாங்கிக்கொள். நீ வல்லவனாயிருந்தால் விற்கள் அனைத்திலும் உயர்ந்த இவ் வில்லைவளைத்துச் சத்ருக்களின் பட்டணங்களைத் தொலைக்கவல்லதான ஒரு பாணத்தைத் தொடு! காகுஸ்தனே! பிறகு உன் சக்தியை அறிந்துகொண்டு நான் உன்னுடன் த்வந்த்வ யுத்தஞ் செய்கிறேன்'' என்றான்.

எழுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரசுராம கர்வபங்கம்.

அப்பொழுது தசரதகுமாரனாகிய ராமன் ஜமதக்னியின் புத்திரனான அந்தப் பரசுராமன் மொழிந்தவற்றைக் கேட்டுத், தான் தந்தையின் அருகில் இருப்பதுபற்றி அவரிடத்தில் கௌரவம் வைத்து அவனை நோக்கிப் 'பார்க்கவரே! தந்தையின் கடனைத் தீர்க்க முயன்று தாங்கள் செய்த கொடுஞ் செயல்களையெல்லாம் நான் கேட்டிருக்கிறேன். சூரனாயிருப்பவன் வைரத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டியதுதான். அதற்கு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆனால், தாங்கள் என்னை வீர்யமற்றவனாகவும், க்ஷத்ரிய தர்மப்படி ஆயுதத்தைக் கையிலேந்தி யுத்தஞ் செய்யத் திறமையில்லாதவனாகவும் நினைத்து அவமதிக்கவேண்டாம். அப்படிச் செய்வதை வீரபுருஷர்

கள் அங்கீகரிக்கமாட்டார்கள். பகைவர்களை அடங்கச் செய்கின்ற எனது ஒப்பற்ற தேஜஸ்ஸையும், என் பராக்ர மத்தையும் இதோ காட்டுகிறேன். தாங்கள் பிரத்யக்ஷ மாய்ப் பாருங்கள்!' என்று மொழிந்து அந்தப் பரசுரா மன் கரத்திலிருந்த தநுஸ்ஸையும் பாணத்தையும் மிகுந்த பராக்ரமசாலியானபடியினால்[1] அலக்ஷ்யமாகவே வாங்கிக் கொண்டான்.

பின்பு ராமன் அவ்வில்லை எளிதில் வளைத்து நா ணேற்றி அதில் பாணத்தைத் தொடுத்து ஜமதக்னி குமாரனாகிய ராமனைப் பார்த்துப் 'பரசுராமரே! தாங் கள் ப்ராஹ்மணனாயிருப்பதுபற்றியும்[2] விஸ்வாமித்ர முனி வருக்குச் சகோதரியின் பெயரன் என்ற பந்துத் வத்தைப் பற்றியும் நான் கவுரவிக்க வேண்டியிருக்கிறது. ஜமதக்னிகுமாரரே! அதனால்தான் தங்கள் ப்ராணனை நிமிஷத்தில் போக்கவல்லதான இந்தப் பாணத்தைத் தங் கள் மீது பிரயோகிக்காமல் நிறுத்தி யிருக்கிறேன். இதற்கு ஏதாவது சீக்கிரம் ஆகாரம் கொடுக்கவேண்டும். இதற்குத் தாங்கள் நடப்பதற்குரிய பாதங்களின் சக்தி யையாவது, அல்லது தாங்கள் தபோபலத்தினால் ஸம்பா

---

1. 'இத்யுக்த்வா தேவி வைஷ்ணவ்யா ஶக்த்யா தத்ஸஹ யாஸஹ ஜஹீ ராஹ வைஷ்ணவம் சாபம் விநயேந ச லீலயா' என்று பாத்ம புராணத்திற் சொல்லப்பட்டது. இதற்குப் பொருள்—தேவி! அந்த ராமன் இங்ஙனம்உரைத்துஅந்தப் பரசுராமனிடத்திலிருந்த விஷ்ணு சக்தியுடன் அவ்வைஷ்ணவ தநுஸ்ஸை வணக்கத்தோடு அவலீலையா கவே வாங்கிக்கொண்டான் என்று பொருள்.

2. விஶ்வாமித்ரமுனிவர் உடன் பிறந்தவளாகிய ஸத்யவதி யென்பவள் ரிசீகருடைய பாரியை. ரிசீகர் அவளிடத்தில் ஜமதக்னி முனிவரைப்படைத்தார். ஜமதக்னி பரசுராமனைப்பெற்றார். பரசுரா மன் விஶ்வாமித்ரமுனிவரைப்பந்துத்வமுடையவனாயிருத்தலால்விஶ் வாமித்ரரைப் பற்றிப் பரசுராமனை ராமன் கொல்லமுடியாதிருந்தான் என்பது பொருள்.



372. பரசுராம கர்வபங்கம்.

தித்திருக்கிற ஒப்பற்ற [1] உலகங்களையாவது கொடுங்கள். இந்தப் பாணம் திவ்யமானது; மேலும் ஸ்ரீமகா விஷ்ணுவைத் தேவதையாக உடையது; சத்ருக்களை ஒழிக்கவல்லது. இப்படிப்பட்ட பாணத்துக்கு ஆகாரம் கொடாமல் இருக்கலாகாது. இது ஒரு காலும் வீண் போகக் கூடியதன்று' என்று சொன்னான்.

அப்பொழுது ரிஷிகளும் தேவர்களும் கந்தர்வர்களும் அப்ஸர மடந்தையர்களும் ஸித்த சாரண கின்னரர்களும் யக்ஷ ராக்ஷஸர்களும் உரகர்களும் ப்ரஹ்மதேவனை முன்னிட்டுக் கொண்டு வந்து ஸ்ரீமஹா விஷ்ணுவின் மேலான ஆயுதமாகிய அவ்வில்லைக் கையிலேந்தி விளங்குகின்ற ராமனையும், மிகவும் அற்புதமாகிய அவன் செயலையும் பார்க்கும் பொருட்டு ஆகாய வீதியில் நிறைந்திருந்தார்கள். ராமன் அவ்வில்லைக் கையிலேந்தினபொழுது உலகத்திலுள்ள உயிர்கள் யாவும் திகைத்தன. ஜமதக்னி குமாரனாகிய பரசுராமனும் தன்னிடமிருந்த விஷ்ணு தேஜஸ்ஸு போய்விட்டபடியினால் வீரியமற்று ராமனைக் கண்ணுற்றான். இப்படி ராமன் பராக்ரமத்தினால் தன் து வீரியம் தொலைந்து போகையில், ஜமதக்னி குமாரன் திகைத்து நின்றவனாகித் தாமரையிதழ்போன்ற கண்களையுடைய ராமனைக் கண்டு மெதுவாகக் 'காகுஸ்த குலதிலகனே! ராமா! முன்பு இப்பூமியனைத்தையும் நான் காஶ்யபருக்குக் கொடுக்கும்பொழுது, அவர் என்னைப் பார்த்துப் 'பரசுராமா! என் தேசமாகியஇப்பூமியில் நீ வஸிக்கலாகாது' என்று சொன்னார். நான் அவருக்கு எல்லாப் பூமியையும் ஸ்வாதீனஞ்

---

1. உலகங்களை யென்றால் உலகங்களின் ப்ராப்தியை யென்க அல்லது—அதற்கு மூலமாகிய புண்யகர்மங்களை யென்றுணர்க.

செய்து விட்டு நான் தங்கள் தேசத்தில் வஸிப்பதில்லை; என்று பிரதிஜ்ஞையுஞ் செய்து கொடுத்தேன். ஆகையால் நான் காஸ்யபருக்குச் சொல்லியபடி ராத்திரி காலத்தில் இப்பூமியில் வஸிக்கிறதில்லை. வீரர்களிற்றலைவனே! நீ என் பாதங்களின்கமனசக்தியைப் போக்க வேண்டாம். ஏனென்றால், நான் இப்பொழுதேபுறப்பட்டு மனோவேகத்தினால் மஹேந்த்ரபர்வதத்திற்குப் போகவேண்டியிருக்கிறது. நான் என் தவத்தினால் ஒப்பில்லாத[1] உலகங்களை ஸம்பாதித்திருக்கிறேன். உனது மேலானபாணத்துக்கு அவற்றை ஆகாரமாய்க்கொள்! காலவிளம்பஞ் செய்யவேண்டாம். நான் வேகமாய்ப் போகவேண்டும். நீ இவ்வில்லை அலக்ஷ்யமாக வாங்கிக்கொண்டபடியினால் நீ தேவர்களுக்குத் தேவனும் ஆதியந்தமில்லாத பரஞ்சுடருமாகிய மதுசூதனன் என்று அறிந்துகொண்டேன். பகைவர்களைத் தபிக்கச் செய்ய வல்ல பராக்ரமசாலியே! உனக்கு மங்களமுண்டாகுக. இதோ தேவர்கள் அனைவரும் வந்து யுத்தத்தில் யாவராலும் எதிரிட வொண்ணாத உன்னையும் ஒப்பில்லாத உனது வீரச்செயல்களையும் காண்கிறார்கள். மூவுலகங்களுக்கும் நாதனாகிய உன்னிடத்தில் நான் தோல்வியடைந்தது எனக்கு அவமானமாகமாட்டாது. ஸ்வாமியினிடத்தில் தாஸனுக்கு நேரிட்ட தோல்வி அவமதிப்பை விளைவிக்கமாட்டாதல்லவா?

சத்ருக்களை யடக்குவது உனக்கு மேலான விரதம். ஆகையால், ஒப்பின்றி மேன்மைபெற்றிருக்கின்ற உன் பாணத்தை விடு. நீ பாணம் விடுவதைக் கண்டு பர்வதங்

1. உலகங்களாவது - உலகங்களைப் பெறுதற்கு ஹேதுவாகிய தர்மங்களை. ஒரு காரியம் மூர்த்தமாயினும் அமூர்த்தமாயினும் அதைத் தடுப்பதுதான் ராமபாணத்துக்கு அபேக்ஷிதம். மூர்த்தமென்றால் சரீரமுடையது. அமூர்த்தமென்றால்-அஃதில்லாதது.

களிற் சிறந்த மஹேந்த்ர பர்வதத்திற்கு நான் போய்ச் சேருகிறேன்' என்றுசொன்னான். ஜமதக்னி குமாரனாகிய பாசுராமன் வார்த்தையைக் கேட்டுத் தசரத சக்ரவர்த்தி யின் புத்திரனாகிய ஸ்ரீராமன் உத்தமமாகிய அந்தப் பாணத்தைப் பிரயோகித்தான். பாசுராமன் தான் நெடுங்காலம் தவஞ்செய்து ஸம்பாதித்த லோகங்கள்யாவும் ராமனால் அழிந்துபோனதைக் கண்டு வேகமாக மஹேந்த்ர பர்வதத்திற்குப் போய்ச் சேர்ந்தான். இங்ஙனம் பாசுராமன் புறப்பட்டுப் போன பின்பு திக்கு விதிக்குகள் யாவும் இருள் நீங்கினவைகளாயின. தேவர்களும் ரிஷி ஸமூஹங்களும் அந்தப் பெரிய வில்லை ஊன்றிக்கொண்டிருக்கிற தசரத ராமனை மிகவும் புகழ்ந்தார்கள். ஜமதக்னி புத்ரனாகிய பாசுராமன் தாசரதி ராமனைக் கொண்டாடி, அவனைப் பின்பு பிரதக்ஷிணமுஞ் செய்து தனது இருப்பிடத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

எழுபத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதசக்ரவர்த்தி புத்ரர்களுடன் அயோத்யைக்குப் போதலும், சீதாராமர்களின் பாஸ்பரப்ரீதியும்.

இங்ஙனம் பாசுராமன் புறப்பட்டுப் போனபின்பு தசரத குமாரனாகிய ராமன் மனம் தெளிந்து தன்னிடமிருந்த அந்தத் தநுஸ்ஸை மஹாப்ரபாவமுடைய வருணன் கையில் பாணத்தோடுகூடக் கொடுத்தான். பின்பு அவன் வஸிஷ்டர் முதலிய ரிஷிகளுக்கு நமஸ்காரஞ் செய்து, பாசுராமனிடமிருந்து பயந்து [1] திகைத்து நிற்கின்ற தசரதனைப் பார்த்துத் 'தந்தையே! ஜமதக்னி

1. தசரதன் திகைத்து நின்றுகொண்டிருந்ததனால் பாசுராமன் ராமனைப் பரதெய்வமாக ஸ்தோத்ரஞ் செய்ததும், விஷ்ணு தனுஸ்

குமாரராகிய பரசுராமர் போய்விட்டார்; ஆகையால் ரத கஜதுரக பதாதிகளாகிற சேனைகளோடு கூடிய நமது ஸைன்யமானது நாதனாகிய தங்களால் பாதுகாக்கப் பட்டு அயோத்யைக்குப் புறப்பட்டுப் போகலாம். இந்த ஸைன்யம் தங்கள் ஆஜ்ஞையிலிருக்கின்றது. அதற்குப் பிரயாணமாகும்படி கட்டளையிடுங்கள். சாதகப் பறவை கள் மேகத்தினின்றும் ஜலத்தை விரும்புவதுபோல இந் தப் பெரிய சேனை தங்கள் ஆஜ்ஞையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது' என்று சொன்னான்.

தசரத சக்ரவர்த்தி இங்ஙனம் ராமன் மொழிந்த வார்த்தைகளைக் கேட்டு, அப்புதல்வனை இரண்டு கைக ளாலும் கட்டி யணைத்து உச்சி மூகந்து கொண்டான். முதலில் பரசுராமன் போனானென்று ராமன் சொல்லியும் அப்பொழுது பயத்தினால் அவ்வார்த்தையை ஸ்பஷ்டமா கத் தசரதமன்னவன் அறியாதிருந்து கொஞ்சந் தெளிந்த பின்பு மீளவும் ராமன் உரைத்ததனால் பரசுராமன் போனா னென்று தெரிந்து உடம்பெல்லாம் மயிர்க் கூச்சலடையப் பேரானந்தம் அடைந்து, தானும் தன் புத்ரர்களும் தப்பிப் பிழைத்தது புநர்ஜன்ம மென்று எண்ணினான். பிறகு அம்மன்னவன் தன் ஸைன்யம் வேகமாக அயோத்தியா புரிக்குப் பிரயாணமாய்ப் போகும்படி கட்டளையிட்டான். அப்பொழுது அயோத்யாநகரம், த்வஜ படங்களோடு கூடிப் பெரியதுஞ் சிறியதுமாக நாட்டப்பட்டிருக்கிற கொடி மரங்களால் அலங்காரஞ் செய்யப்பட்டு அழ குள்ளதாகி, மங்களவாத்ய கோஷங்களால் முழங்கப் பெற்று விளங்கிற்று. ராஜ மார்க்கங்கள் ஜலந்தெளித்து

ஸை ராமன் வருணன் கையிற் கொடுத்ததும் அறியானென்று தோற் றுகின்றது. மற்றவர்களுக்கு மாயாத் திரோதானத்தினால் அவை தெரியவில்லை யென்றுணர்க.

நாற்புறத்திலும் மலர் தூவப்பெற்று மிகவும் அழகாயிருந்தன. அரசன் வருகிறுனென்கிற ஸந்தோஷத்தினுல் முகம் மலரப்பெற்று ஆடையாபரணங்களால் நன்கு அலங்காரஞ் செய்துகொண்டு மங்களமொழிகூறும் பட்டணத்து ஜனங்கள் கூட்டங்கூட்டமாக ஆங்காங்கு நிறைந்திருந்தார்கள். இப்படி மிகவும் அழகாயிருக்கின்ற அந்தப்பட்டணத்தில் தசரதமன்னவன் ப்ரவேசித்தான். அப்பொழுது அப்பட்டணத்தில் வஸிக்கும் ப்ராஹ்மணர்களும் மற்றுமுள்ள நகரத்து மனிதர்களும் வெகுதூரம் அவ்வரசனை எதிர்கொண்டு சென்றுர்கள். பெரும்புகழ் பெற்ற தசரத மஹாராஜன் தான் வெகுதூரத்தில் வந்து கொண்டிருக்கும்பொழுதே அங்ஙனம் தனக்கு மேன்மை செய்யக் கருதி எதிர்கொண்டுவந்த அந்தணர்களாலும் மற்றுமுள்ள ஸாதாரண ஜனங்களாலும் மிகுந்த ஸௌந்தர்யமுடைய தன் புத்திரர்களாலும் பின்றொடரப்பட்டவனுகி ஹிமவத்பர்வதம்போல மிகவும் உயர்ந்து அகன்று வெளுத்துப் பளபளவென்று நிர்மலமாக விளங்குகின்ற தனது அரண்மனைக்குள் ப்ரவேசித்தான்.

அப்பொழுது ராஜகிருகத்திலுள்ள ஜனங்கள் யாவரும் ஸந்தோஷம் அடைந்தார்கள். அரசனும் விஷயபோக ஸாதனங்களாகிய ஸகல பதார்த்தங்களாலும் பூஜிக்கப்பட்டுப் பந்துஜனங்களோடு கூடிப் பேராநந்தத்தை அடைந்தான். அப்பொழுது கௌஸல்யையும் ஸுமித்திரையும் அழகிய இடையுடைய கைகேயியும் மற்றுமுள்ள ராஜஸ்திரீகளும் மருகியர் நால்வர்க்கும் உபசாரங்களைச் செய்து அந்தப்புரத்திற்கு அழைத்துக்கொண்டுபோக வந்தார்கள். அவர்கள் மஹா பாக்யவதியாகிய ஸீதையையும் மிகப்புகழ் பெற்ற ஊர்மிளையையும் குஶத்வஜன் புதல்விகளாகிய மாண்டவி ஶ்ருதகீர்த்திகளையும் முறைப்

படி உள்ளே அழைத்துக்கொண்டு போனார்கள். மருகியர் நால்வரும் மங்களாசீர்வசனங்களைப் பெற்று மங்களாலங்காரங்களை அணிந்து வெண்பட்டு வஸ்த்ரங்களைத் தரித்துக் கிருகதேவதாலயங்களுக்குச் சென்று சந்தனம் புஷ்பம் தீபம் தூபம் முதலிய பூஜாஸாதனங்களைக் கொண்டு பூஜை செய்தார்கள். அப்பொழுது அந்த ராஜபுத்ரிகள் யாவரும் வணங்க வேண்டியவர்கள் அனைவரையும் வணங்கிக் குபேரன் கிருகம்போல மிகவும் அழகா யிருக்கின்ற தங்கள் கிருகங்களுக்குச்சென்று, பசுக்களையும் தனதான்யங்களையும் கொடுத்து ப்ராஹ்மணர்களுக்குத் திருப்தி செய்வித்துக் கணவர்களோடு க்ரீடித்துக் கொண்டிருந்தார்கள். மஹானுபாவர்களாகிய அந்த நான்கு ராஜகுமாரர்களும் பராக்ரமத்தில் ஒப்பற்றவர்களாகித் தங்களுக்கு அநுரூபைகளாகிய பத்தினிகளை இங்ஙனம் மணம் புரிந்துகொண்டு அஸ்த்ரங்கள் அனைத்திலும் தேர்ச்சியடைந்து அளவற்ற செல்வங்களைப் பெற்றுப் பல நண்பர்கள் புடைசூழத் தங்கள் தந்தையாகிய தசரத சக்ரவர்த்திக்கு இடைவிடாமல் சுஶ்ரூஷை செய்து கொண்டு ஸுகமாக வாழ்ந்துவந்தார்கள். மேலும் அவர்கள் அந்தந்தக் காலங்களுக்குரிய நீதிகளை அறிந்து தங்கள் குணங்களால் தந்தைக்கு மனக்களிப்பை விளைத்துக் கொண்டிருந்தார்கள்.

இங்ஙனம் சிலநாள் சென்ற பிற்பாடு ரகுகுலத்திற் பிறந்த மஹானுபாவனாகிய தசரத சக்ரவர்த்தி கைகேயியின் அருமைப் புதல்வனும் தன் புத்திரனுமாகிய பரதனைப் பார்த்துக் 'குழந்தாய்! வீரனே! பரதா! கேகயராஜன் குமாரனும் உனக்கு மாமனுமாகிய யுதாஜித்து உன்னை அழைத்துக்கொண்டு போவதற்காக இங்கு வந்திருக்கிறானல்லவா? அவன் மிதிலாபட்டணத்திலேயே

ரிஷிகளின் நடுவில் என்னைப் பார்த்து உன்னை அனுப்பும்படி வேண்டிக்கொண்டான். நீ தர்மங்களை அறிந்தவன்; ஆகையால் அவனுக்கு ப்ரீதியைச் செய்வாயாக' என்று சொன்னான். தசரதன் வார்த்தையைக் கேட்டுக் கைகேயியின் அருமைப் புதல்வனாகிய பரதன் தசரத சக்ரவர்த்தியையும் ராமனையும் நமஸ்கரித்து லக்ஷ்மணனைக் கட்டியணைத்துச் சத்ருக்னனோடுகூட ப்ரயாணமாய்ப் புறப்பட்டுக் கேகயராஜ்யத்துக்குப் போகத் தொடங்கினான்.

புருஷர்களிற் சிறந்த அந்தப் பரதன் தான் போகும்பொழுது தந்தையாகிய தசரத சக்ரவர்த்தியினிடத்திலும் யாவர்க்கும் வருத்தமின்றி எக்காரியத்தையும் செய்யுந் தன்மையனாகிய ராமபிரானிடத்திலும் அன்னையர்களிடத்திலும் மற்றுமுள்ள பெரியோர்களிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு சத்ருக்னனோடுகூடிக் கேகயநாட்டுக்குப் புறப்பட்டுப் போனான். பரதன் புறப்பட்டுப் போகையில் மஹாபலமுடைய ராமனும் லக்ஷ்மணனும் தேவதையைப்போன்ற தங்கள் தந்

1. இதற்கு மூலம்—

'ராமஸ்து ஸீதயா ஸார்த்தம் விஜஹார வஹூந்ருதூந்,
மநஸ்வீ தத்கதஸ்தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பிதஃ'

இதற்கு விசேஷார்த்தம்—(ராமஸ்து] துசப்தம் பேதத்தைக் காட்டுகின்றது. முன்பு கேவலம் பித்ருசுஸ்ரூஷாதிகளைச் செய்துகொண்டிருந்த ராமன் இப்பொழுது காமபாதந்த்ரனாகவும் ஆனானென்று முன்னிருப்பைக் காட்டிலும் இவ்விருப்பு வேறுபட்டிருந்ததென்பது. (மநஸ்வீ) மிகுந்த மனமுடையவன். போக ரஸாஸ்வாதத்தில் மேற்பட்ட மனமுடையவனென்க. (தத்கதா) (தஸ்யாஃ கதஃ) என்று விக்ரஹம். ஸீதையைப் பற்றி இருப்பவன். ஜாதி குணங்களைப் போல் அவளை விட்டுப் பிரிக்க வொண்ணாதவன். அதாவது அவ்வளவு ப்ரேமையுடையவனென்க. (தஸ்யா நித்யம் ஹ்ருதி

தைக்குச் சுஶ்ரூஷை செய்துகொண்டிருந்தார்கள். தர்ம ஸ்வபாவனாகிய ராமன் தந்தையின் ஆஜ்ஞையை முன்னிட்டுக்கொண்டு பட்டணத்தில் வஸிக்கும் ஜனங்களுக்கு நன்மையை விளைத்தல் தீமையைப் போக்குதல் ஆகிய ஸகல காரியங்களையும் நடத்திக்கொண்டு வந்தான். அவன் அவர்களுக்கு மாத்திரமே ஶ்ருதி ஸம்ருதிகளிற் சொல்லிய நியமங்களுக்கு உட்பட்டு நடப்பவனாகையால் தாய்மார்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களையும் பெரியோர்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களையும் குறிப்பினால் அறிந்து விருப்பத்தோடுசெய்து கொண்டுவந்தான்.

ராமனுக்குள்ள அவ்வித ஸ்வபாவத்தையும் நல்ல நடவடிக்கைகளையும் தசரதன் கண்டு மிகவும் மனக்களிப்புற்றவனானான். அரசன் ஒருவன் களிப்பது ஆச்சரியம் அன்று. ப்ராஹ்மணர்களும் வர்த்தகர்களும் அவன் தேசத்திலுள்ள மற்ற ஸகல ஜனங்களும் ராமன் குணத்தைக் கண்டு களிப்படைந்தார்கள். உலகத்திலுள்ள ஸமஸ்த

ஸமர்ப்பிதஃ) சீதையும் ராமன் செய்கிற செயல்களினால் அவனிடம் வசப்பட்டு அவனையே எப்பொழுதும் மனத்தில் நினைத்துக் கொண்டு அவனுக்குட் பட்டிருந்தாளென்க. (நித்யம்) வெகுகாலமாகக் கூடியிருந்தபோதிலும் அப்பொழுதே புதிதாகச் சேர்ந்தவர்கள்போல அளவிறந்த ப்ரேமையோடிருந்தார்களென்க. (ஸஹ ருந்தருந்) இங்கு அத்யந்தஸம்யோகத்தில் த்விதீயை. இதனால் இடைவிடாத போகமென்று தோற்றுகின்றது. ஸம்வத்ஸரங்களென்று சொல்லாமல் ருதுக்களென்பதனால் அந்தந்த ருதுக்களுக்குத் தகுந்த போகோபகரணங்களுடன் போகத்தை யனுபவித்தானென்று தெரிகின்றது. (விஜஹார) என்று பரஸ்மைபதம். இதில் க்ரியாபலம் கர்த்தாவைச் சேராது. ஆகையால் எவ்வளவு காலம் க்ரீடித்தபோதிலும் திருப்தி பெறவில்லை யென்பது கருத்து. ஒருவர் மேல் ஒருவர் வைத்திருந்த ப்ரீதி அளவற்றிருந்த தென்று இதனால் தோற்றுகின்றது.

ஜனங்களுக்குள்ளும் யஶஸ்வியும் உண்மையான பராக்ரம சாலியுமாகிய ராமன் தன் நல்ல ஸ்வபாவத்தினுலும் நல்லொழுக்கத்தினுலுமே யன்றி மற்றைக் குணங்களாலும் ப்ரஹ்மதேவன்போல ஸகல பூதங்களுக்கும் ப்ரியனுகி, அவர்கள் அனைவரிலும் குணங்களால் மேன்மைபெற்று விளங்கினுன். இன்னும் அவன் தர்மத்திற்கு விரோதமில்லாமல் காமோபபோகத்தில் மனஞ்செலுத்தி அதில் மிகுந்த ஆவலுடையவனுகி ஸீதையினிடத்தில் அளவற்ற அன்புகொண்டு அவள் மனத்தில் தான் நிலைபெற்றுப் பல ருதுக்களாக அவளுடன் க்ரீடித்துக் கொண்டிருந்தான். தன் தந்தை பார்த்து ஏற்படுத்தின பத்னியென்று ராமனுக்குச் சீதை அன்புக்கிடமாயிருந்தாள். இன்னும், பதி சுஶ்ருஷை செய்வது முதலிய குணங்களைப்பற்றியும், ஸௌந்தர்ய குணத்தைப் பற்றியும், நற்குலத்தில் பிறந்தமை முதலியவற்றைப்பற்றியும், ராமனுக்கு ஸீதையினிடத்திற் ப்ரீதி மேன்மேலும் பெருகிக்கொண்டு வந்தது. ஸீதையின் மனத்திலும் அவள் பர்த்தாவாகியராமன்இருமடங்காக வஸித்துக் கொண்டிருந்தான். அதாவது ஸீதைக்குப் பர்த்தாவினிடத்தில் உள்ள ப்ரேமை இருமடங்காகப் பெருகிக்கொண்டிருந்தது. ஸீதையின் மனத்திலுள்ள பதிப்ரேமையானது யாவரும் அறியவொண்ணுதபடி மறைந்திருந்தாலும் அதை ராமன் அடையாளங்களால் ஊஹித்துத் தெரிந்துகொண்டிருந்தான். எப்பொழுதும் தான் அவள் மனத்திலேயே லயித்திருப்பவனுகையால் அவள் ப்ரேமை எவ்வளவு மறைந்திருந்தாலும் அதை அறியாதிருக்க முடியாதல்லவா? ஸீதையும் தன் அந்தரங்கத்தை ராமன் அறிந்திருப்பதைக் காட்டிலும் மிகவும் மேலாகவே அவன் மனத்தைத் தான் அறிந்து கொண்டிருந்தாள். எப்படியென்ருல், அவள் மிதிலா

புரத்தில் பிறந்தவள்; ஜனகராஜன் புதல்வி. தேச ஸ்வபாவத்தினுலும வம்ச ஸ்வபாவத்தினுலும் ஸூக்ஷமங்களை அறியும் திறமுடையவள். தேவதைகளைப் போன்றவளாகையால் மிகுந்த ப்ராகல்ப்ய முள்ளவள். அழகில் அனைவர்க்கும் புலப்படும்படி வடிவுகொண்டு வந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மி போன்றிருப்பவள். ஆகையால் இத்தன்மையளான அந்தப் பெண்மணிக்குப் புத்தி விசேஷம் ஸஹஜமானது. இப்படிப்பட்ட குணங்களால்தான் ராமன் மனத்தைஅவனையும் விஞ்சித் தான்அறிந்தவளாயினுள். ராஜர்ஷியாகிய தசரதசக்ரவர்த்தியின் புத்திரனும் குணங்களையுடையவனுமாகிய ராமன் அரசர்களிற் சிறந்த ஜனக மஹாராஜன் புதல்வியும் அழகான ரூபமுடையவளும் மிகுந்த காமத்தை யுடையவளுமாகிய ஸீதையுடன் கூடி, மஹாலக்ஷ்மியோடு கூடின தேவாதிதேவனுகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவைப்போல ப்ரகாசித்தான்.

எழுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

பாலகாண்டம் முற்றுப்பெற்றது

ஸ்ரீ ராமசந்த்ர பரப்ரஹ்மணே நம:

---

1. (ராஜர்ஷியாகிய தசரத சக்ரவர்த்தியின் புத்திரன்) என்பதனுல் அளவிற்ற போகோபகரண ஸம்பத்துக்களுண்டென்று தெரிகின்றது. அரசர்களிற் சிறந்த ஜனகமஹாராஜன் புதல்வி என்பதனுல் அவனைக் காட்டிலும் அதிகமான போகோபகரண ஸம்ருத்தி ஸீதைக்கும் உள்ளதென்று வெளிப்படுகின்றது. மிகுந்த காமத்தையுடையவள் என்பதனுல் ராமனுக்குத் தன் மீதுள்ள காமத்தைக் காட்டிலும் ராமனிடத்தில் தனக்கு அதிகமான காமம் உண்டென்பது பொருள்.